
தமிழ்க் காதல்

மூதறிஞர் வ.சுப.மாணிக்கம்



தமிழ்க் காதல்

மூதறிஞர் செம்மல்
வ.சுப. மாணிக்கம், பி.எச்.டி., டி.லிட்டு.

மெய்யப்பன்
பதிப்பகம்
53,புதுத்தெரு,சிதம்பரம்-608001.

முதல் பதிப்பு : மே, 2002

இரண்டாம் பதிப்பு : அக்டோபர், 2005

திருவள்ளுவர் ஆண்டு : 2036

உரிமை : வ.சுப.மா. ஏகம்மை ஆச்சி

விலை : ரூ. 120.00

மெய்யப்பன் பதிப்பக வெளியீட்டு எண் : 54



நினைவில் வாழும் நிறுவனர்

முனைவர் ச. மெய்யப்பன்

டாக்டர் ச. மெய்யப்பன், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.

பல்கலைக்கழகங்கள் பலவற்றில் இவர் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்.

'வள்ளுவம்' இதழின் நிறுவன ஆசிரியர்.

குன்றக்குடி அடிகளார் 'தமிழவேள்' என்றும், தருமபுரம் ஆதீனத் தலைவர் 'செந்தமிழ்க் காவலர்' என்றும் விருதுகள் வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.

'பதிப்புச்செம்மல்' என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

கிடைக்குமிடம் :

மணிவாசகர் நூலகம்

12-B, மேல சன்னதி, சிதம்பரம்- 608001. ✆:230069

31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை-600108. ✆:25361039

5, சிங்காரவேலு தெரு, தி. நகர், சென்னை-600017. ✆:24357832

110, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை-625001. ✆:2622853

15, ராஜ வீதி, கோயமுத்தூர்-641001. ✆:2397155

28, நந்தி கோயில் தெரு, திருச்சி-620002. ✆:2706450

அச்சிட்டோர் : மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை - 600 021,
தொலைபேசி : 25954528



மூதறிஞர் செம்மல்

வ.சுப. மாணிக்கனார்

1917-1989

மூதறிஞர் செம்மல் **வ.சுப. மாணிக்கனார்**

வாழ்க்கைக் குறிப்பு

பிறப்பு : 17.4.1917 (புதுக்கோட்டை மாவட்டம் மேலைச் சிவபுரி)

பெற்றோர் : வ. சுப்பையா - தெய்வானைஆச்சி

கல்வி : அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 'வித்வான்' படிப்பு, முதல் வகுப்பு தேர்ச்சி (1940) பி.ஓ.எல் - 1945; எம்.ஓ.எல் - 1948; எம்.ஏ - 1951; பி.எச்.டி - 1957

பணி : அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 'விரிவுரையாளர்' ஏழு ஆண்டுகள் (1941 - 1948), காரைக்குடி அழகப்பா கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியர் (1948 - 1964)

முதல்வர் : அழகப்பா கல்லூரியில் ஆறு ஆண்டுகள் முதல்வர் (1964-70 அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறைத் தலைவர் (1970-1977).
அங்கு ஏழு ஆண்டுகள் புல முதன்மையர்.

துணை வேந்தர் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 17-8-1979 – : 30-6-1982 பண்டிதமணி கதிரேசனார் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடியமை.

பல்கலைக்கழகத்தில் உருவாக்கிய துறைகள்:
1979: எரியந்துறை; 1980:மேலாண்மைக் கல்வி;
1981: பதிப்புத்துறை - மொழியியல்துறை;
1982: தமிழியற்புலம்

எழுத்துப் பணி மனைவியின் உரிமை - முதல்நூல் - 1947
: வள்ளுவம் - 1953; தமிழ்க்காதல் - 1957;
கம்பர் 1965 - தமிழக அரசு முதற்பரிசு பெற்றது
மாணிக்கக் குறள் - 1989

மிழ்ப் பல்கலைக்கழக வடிவமைப்புக்குழுத் தலைவர் - 1981

புலவர் குழுத் தலைவர்: (1974 - 1989)

பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத் தலைவர்

தமிழ்வழிக் கல்விஇயக்கம்: 1988

தில்லையில் திருமுறை அம்பலம் ஏறச்செய்தல்

தமிழ்ப் பல்கலைக்கழக 'தொல்காப்பிய தகைஞர்' - 1985-86

குடும்பம்:

உடன் பிறந்தோர்: வ.சுப. திருப்பதி செட்டியார்
வ.சுப. சொக்கலிங்கம்

மனைவி: ஏகம்மை ஆச்சி

மகன்கள்: தொல்காப்பியன், பூங்குன்றன், பாரி

மகள்கள்: தென்றல், மாதரி, பொற்றொடி

வெளிநாடு பயணம்: இலங்கை, மலேசியா, ஐரோப்பா

பெற்ற பட்டங்கள்:

மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை: **'செம்மல்'**

குன்றக்குடி ஆதீனம்: **'முதுபெரும் புலவர்'**

ஈப்போ பாவாணர் தமிழ்ச்சங்கம்:
'பெருந்தமிழ்க்காவலர்'

திருவனந்தபுரம் திராவிட மொழியியற்கழகம்:
'முதுபேராய்வாளர்'

அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பொன்விழாவில்
'டி..லிட்' பட்டம் - 1979

தமிழக அரசு: திருவள்ளுவர் விருது - 1989

மறைவு: 24-4-1989

என் அன்புறை

மகா மகோபாத்தியாய டாக்டர்
உ.வே. சாமிநாதையர் அவர்களுக்கு

பார்காத்தார் ஆயிரம்பேர்; பசித்தார்க் காகப்
பயிர்காத்தார் ஆயிரம்பேர்; பாலர்க் காக
மார்காத்தார் ஆயிரம்பேர் வாழ்ந்த நாட்டில்
மனங்காத்த தமிழ்த்தாய் "என் உடைமை யெல்லாம்
யார்காத்தார்" எனக்கேட்க, ஒருவன் அம்மா
யான்காப்பேன் எனவெழுந்தான் சாமி நாதன்
நீர்காத்த தமிழகத்தார் நெஞ்சின் உள்ளான்
நிலைகாத்த மலையிமய நெற்றி மேலான்.

பொய்யாத தமிழ்க்குமரி ஈன்ற சாமி!
போகாத புகழ்க்கன்னி மணந்த நாத!
செய்யாத மொழித்தொண்டு செய்த ஐய!
சிறுகாத நெஞ்சத்தேம் வணங்கு செம்மல்!
எய்யாத திருவடியால் எண்பத் தாண்டும்
இளையாத உள்ளத்தால் எங்குஞ் சென்று
நெய்யாத தொன்னூல்கள் நிலைக்க வைத்த
நீங்காத தமிழ்க்குயிரே! நின்தாள் வாழ்க.

வ.சுப. மாணிக்கம்

வ.சுப. மாணிக்கனாரின் தமிழ்க் கொடை

பதிப்புச்செம்மல் **ச. மெய்ய்ப்பன்**
நிறுவனர் : **மெய்யப்பன் தமிழாய்வகம்**

மூதறிஞர், பேராசிரியர் முனைவர் வ.சுப. மாணிக்கனார் தமிழ்செய்த தவப்பயன்; தமிழ் தம் உயிருக்கு நேர் என்று வாழ்ந்த பேராசன்! தொல்காப்பியத்தை - சங்கத்தமிழை - வள்ளுவத்தை - சிலம்பை - கம்பனை நெஞ்சுக்கு நீதியாய்க் கொண்டவர். தமிழியம் அவர்தம் உயிர்நதி! தமிழ்வழிக் கல்விக்கு அவர்ஒரு பாசறை! குறளின் சுடர்; அகத்தினை ஆய்விற்கு விடிவெள்ளி! அவர் நடையில் பாட்டும் தொகையும் பவனிவரும். தமிழில் மாத்திரை முதல் அடிநிலைவரை நோக்கிப் பார்க்கும் அவரது இலக்கியப்பார்வை விசாலமானது. தொல்காப்பியம் முதல் கவிஞர் வைரமுத்துவின் திரைஇசைக் கவிதைகள் வரை பார்த்தவர். படித்தவர். இலக்கிய - இலக்கண சமுத்திரங்களின் ஆழங்கண்டவர். ஒருபுறம் தொல்காப்பியத் புதுமை காண்பார்; மறுபுறம் பாரதியிடம் பழமை காண்பார்.

இலக்கியங்களின் வித்து - விழுதுகள் - கிளைகள் - விருட்சங்கள் எல்லாம் கண்டவர். சங்கஇலக்கியங்களின் பன்முகப் பெருமைகளைக் கண்டுணர்த்திய கலங்கரைவிளக்கு. வள்ளுவ நெஞ்சத்தின் உயிர்ப்பறிந்து எழுதியவர்; மணிவாசகரின் மாணிக்க உள்ளம் கண்டவர். இராமபிரானின் தோள்கண்டான் கம்பன் என்றால்... கம்பனின் தோள் கண்டார் வ.சுப. மாணிக்கனார். அவர் கூறினால்... எழுதிக் காட்டினால் இளங்கோ தரிசனம்; சாத்தனார் தரிசனம்; கம்பதரிசனம்.. என்று தமிழின் தரிசனமே தெரியும்! அம்சொல் நுண்தேர்ச்சி; நுண்மாண் நுழைபுலம்; இரவிவர்மனின் தூரிகைச் சித்திரங்களாய் மாணிக்க எழுத்துகள்; ஆழ அகலங்களை அதிகரித்துக் கொண்டே செல்லும் ஆய்வுநடை; தமிழியமூச்சு- இவை எல்லாம்தாம் வ.சுப. மாணிக்கனார்!

அவருடைய ஒவ்வொரு நூலும் தமிழ்க்கொடை; சிந்தனைக் களங்களின் மேடை; அவற்றில் ஒவ்வொன்றிலும் அவரது வீறுநடை! தமிழ்க்காதல், வள்ளுவம், கம்பர், எந்தச் சிலம்பு.. என்று ஒவ்வொன்றிலும் அவர்க்கே உரிய அவரது 'வ.சுப.' ஆய்வு முத்திரைகள். 'இரட்டைக் காப்பியங்கள்' என்றால் அவரது பதிப்புநூல். அது ஒரு ஆய்வு முன்மாதிரிப் பதிப்பு; :மூல இலக்கியத்தை ஆய்வுப்பதிப்பாகப் பதிப்பிக்கும் போது அதற்கான 'அங்கலட்சணம்' காட்டும் பதிப்பு. 'தமிழ்க்காதல்' என்றால் அவர்தம் முன்னைவர் பட்ட ஆய்வோட்டகம். அக இலக்கியங்கள் குறித்த தமிழ்ஆய்வுக்கனி; சங்க இலக்கியத்தின் காதற் சாறுகளைத் தேக்கி வைத்திருக்கும் உயிர்நுகர் கனி!

இது காரைக்குடித் தென்னிந்திய அச்சகத்தின் முதற்பதிப்பாக 1962லும், பிறகு 1975லும் பதிப்பிக்கப் பெற்ற சிறப்புடைய நூல். கால்நூறு ஆண்டுகளுக்குப் பின் 'மெய்யப்பன் ஆய்வக வெளியீடாக' இதனை - இப்போது பதிப்பிப்பதில் பெருமைகொள்கிறேன். ஓர் ஆசான் நூலுக்கு ஒரு மாணவனின் வாழ்த்துப் பதிப்பாய் - வணக்கப் பதிப்பாய்த் தவம் செய்து பதிப்பிக்கிறேன். செம்பதிப்பு வேண்டும், செம்பதிப்பு வேண்டும் என்றவரின் மிகச்சிறந்த ஆய்வுநூலைச் செம்பதிப்பாகப் பதிப்பிக்கும் இதனால் பெறுகிறேன். உள்ளூறி... உயிர்ஊறித் தித்திக்கப் பேசும் தமிழ்க்காதலை வ.சுபாவே மயங்கி எழுதுவார்.

'காதல் உடலுக்கு நல்லது; உள்ளத்துக்கு நல்லது; ஊருக்கு நல்லது; உலகத்துக்கே நல்லது' என்பார். உயிர்பாடும் இந்தக் காதற் பல்லவியின் தொடர்ச்சியாகக் 'காதல் என்பது உடற்பசி; உள்ளப்பசி; உயிர்ப்பசி; பிறவிப்பசி என்பார். மேலும் அ்ஃறிணை உயிர்களின் காதல் 'கல்லாக்காமம். இயற்கைவீறு; மொழிபேசும் மக்களினத்தின் காதலோ நினைவில் இனித்து, அறிவில் விளங்கிக் - கல்வியில் வளர்வது' என்பார். இக்கல்வித் தெளிவிற்குத் தமிழ்ப் பேரினம் கண்ட அகத்திணை நாடுக; தொல்காப்பியம் - சங்க இலக்கியம் - திருக்குறள் என்ற முத்தமிழ் நூல்களைக் கற்க முந்துக; காதல் சான்ற தமிழியங்களைத் தெளிக! நெறியாக - அளவாக - உரமாக - நாணமாகக் - கற்பாகக் காமக் கூறுகளைச் செவ்வனம் காட்டும் **ஓர் உலக இலக்கியம் தமிழில்தான் உண்டு.** அதுவே அகத்திணை!' என்று கூறித் தமிழின் அகப்பாடல்களை ஆய்வு செய்தவர் மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார் ஆவார்.

மலரினும் மெல்லிது காதல்... ஆம். அகத்திணை! சிலர் அதன் செவ்வி தலைப்படுவர். மாணிக்கனார் அத்தகு செவ்வி தலைப்பட்டவர்; இந்த நூல் விழுமியது. வள்ளுவர்க்குப் பின், காதல் தமிழியத்தின் செவ்வி கண்ட பேராசான் வ.சுப. என்றால் மிகை இல்லை. ஏன் எனில் அவரது தமிழ்க்காதல் நிலத்தினும் பெரியது; வானினும் உயர்ந்தது, நீரினும் ஆரளவின்று!

"சங்க இலக்கியமும் அகத்திணையும் (காதலும்)" எனும் பொருள்மீது ஆய்வுசெய்தார். சங்க இலக்கியங்களை எழுத்தெண்ணி ஆய்ந்து - இந்தத்

தமிழ்க்காதலை ஏழு இயல்களில் ஆய்ந்துள்ளார். 2381- சங்கப் பாடல்களில் 1862. பாடல்கள் அகத்திணை சார்ந்தவை; 378 அகக் கவிஞர்களால் பாடப்பெற்றவை, என்று கூறி முதன்முதல் ஒருசேர இவை குறித்து ஆய்ந்தவர். எட்டுத்தொகையுள் ஆறுதொகைகளில் 1858. அகப்பாடல்கள்; பத்துப்பாட்டுகள் 4 என அகப்பாடல்கள் 1862-ஐ அசைவு செய்து - வகைப்படுத்தி ஆய்ந்தவர்.

குறுந்தொகைப்பாக்கள் 4 முதல் 8 அடிகள் வரை உடையவை; நற்றிணைப்பாக்கள் 9 முதல் 12 அடிகளும் உடையவை; நெடுந்தொகை என்னும் அகநானூறு 13 முதல் 31 அடிகள் வரை அடிநீட்சி கொண்டவை. **அடிக்கணக்கு நோக்கில் அகக்கவிஞர்கள் இத்தொகைப் பாடல்களைப் பாடவில்லை.** தொகுத்தோரின் தொகுப்பு நெறிக்கணக்கு இது என்று கூறி முதல்- கரு - உரிபொருள்கள் எனும் **மூன்றின் பொருளாட்சி,** பாட்டுக்குள் இடம்பெற்றுள்ள விதம் குறித்தே குறுந்தொகை என்றும் நன்றிணை என்றும், நெடுந்தொகை என்றும் தொகுக்கப் பெற்றன என்று தம் நுழைபுலத்தால் **முதன்முதல்** தெளிவுபடுத்துவார் மாணிக்கனார். வடலூராரின் சன்மார்க்கத்தில் ஜோதிதரிசனர் போல, அகஇலக்கியங்களில் இங்ஙனம் அவர் முதல்முதல் காட்டிய ஆய்வு வெளிச்சங்கள் பலப்பல. தமிழ்க்காதல் முழுதும் இத்தகைய அகத்திணை வெளிச்சங்கள்! மிகச்சிறந்த அகத்திணைப் **புலப்பாட்டுத்திற ஆய்வாக** இந்நூல் திகழ்கிறது. ஒவ்வொரு தொகையின் அகப்பாட்டு நோக்கு, மற்றும் அதனதன் திறன்களைத் தனித்தனியாக ஆய்ந்துள்ளார். ஐங்குறுநூற்றுக்கே உரிய நோக்கு. கலித்தொகைக்கே உரியநோக்கு (ஏழு அகத்திணைப் பாடல்களுக்கும் இலக்கியம்) குறுந்தொகைக்கு... நெடுந்தொகைக்கு என்று ஒவ்வொரு 'தொகை வண்ணமும்!ங! கண்டுள்ளார்!

தமிழ்க் காதல் நூலின் சிறப்புகள்:

✧ சங்க இலக்கியத்தின் 1862 அகப்பாடல்களையும் ஒருசேர ஆய்ந்த முழுநோக்குடையது.

✧ சங்க அகப்பாடல்களில் களவுப்பாடல்கள் 882; கற்புப்பாடல்கள் 966. களவு மட்டும் பாடியோர் 145 புலவர்; கற்பினைப் பாடியோர் 233 பேர். ஒருதுறைக்கு இத்துணைப் பாடல்கள்; ஒவ்வொரு புலவரும் பாடியவை இவ்வளவின என்று எண்ணியும், பகுத்தும் ஆய்ந்து, கருத்துரைப்பது.

✧ அகத்திணை ஆராய்ச்சி, அகத்திணைப் பாகுபாடு, அகத்திணைத் தோற்றம், அகத்திணைக் குறிக்கோள், அகத்திணைப் பாட்டு, அகத்திணைப் புலவர்கள், அகத்திணைக் கல்வி என்று ஏழு இயல்களில் காமஞ்சான்ற இலக்கியங்களை ஆராய்வது.

✧ இலக்கியம் - இலக்கணம் என்று இருநெறிகளாலும் ஆயும் சிறப்புடையது.

✧ அகத்திணையின் பாடுபொருள் காதல்; இது உள்ளத்தொடு இயைந்தது. எனவே **உளவியல் நோக்கில் ஆயும் பெற்றியது.**

✧ அகத்திணை ஏழுவகைப்படும். கைக்கிளை. அன்பின் ஐந்திணை, பெருந்திணை எனும் இவற்றுக்கு நால்வகை நிலப்பிரிவுகள் காரணங்கள் இல்லை; முத்திறக் காமத்தன்மைகளும் காரணங்கள் இல்லை; காதல் மாந்தரின் **உரிப்பொருள் ஒழுக்கங்களே** (பால் ஒழுக்கங்கள்) காரணங்கள் என்று தெளிவுபடுத்துகிறது.

✧ அகத்திணையின் உயிர்நாடி உள்ளப்புணர்ச்சி! களவு, கற்புநெறிகள், அன்பின் - ஐந்திணைக்குரியன; காதற்களங்களின் விரிவுகளைக் கொண்டது; துறைவிரிவுகளை உடையது. ஐந்திணை; கைக்கிளை, பெருந்திணைகள் துறைவிரிவுகள் அற்றவை என்று புலப்படுத்துவது.

✧ **ஐந்திணைக் காதல் அறம்சான்றது;** உலகம் ஒப்புவது; மக்கட்கு இயல்வது; இலக்கியத்துக்கு இசைந்தது. **அன்பின் ஐந்திணையைப் போல, கைக்கிளையும், பெருந்திணையும் விரித்துப்பாடும் இயல்பின அல்ல.**

✧ சங்க இலக்கியம் முழுதும் தேடினாலும், கைக்கிளைக்குக் கலித்தொகையில் மட்டும் 4 பாடல்கள் கிடைத்துள்ளன. இந்தக் கலித்தொகையில்தான் பெருந்திணைக்கும் 10 பாடல்கள் கிடைத்துள்ளன. இவற்றில் ஆண்பாற்கு 4; பெண்பாற்கு 6. இந்த அளவிற்குத் துறைச் சின்மைகளைக் கொண்டவை இவை என்று தெளிவுறுத்துகிறது.

✧ **'ஓர்' இனத்துக்குரிய பண்புதான், அந்த இனத்துக்கே உரிய இலக்கியப் பண்பாகவும் அமையும்.** காதற் கண்ணுடன் உலகியலை அணுகிய ஓர் இனம் தமிழினம் மட்டுமே; எனவேதான் அது அகத்திணை இலக்கியத்தைப் படைத்தது; உலகிற்களித்தது; என்று விளக்குவது. அகத்திணை உலகக் கண் கொண்டது. **இது கூறும் காதல் உலக மனித இனத்திற்கே பொது; என்று பறை சாற்றுவது.**

✧ 'அன்பின் ஐந்திணை காதலின் இயல்பான வளர்கரு; கைக்கிளை என்பது குறுங்கரு. சிறிய உறவு என்பது இதன் பொருள்; இது "ஒருதலைக் காமம்" என்னும் இழிந்த பொருள் உடையது அன்று. கைக்கிளை என்பது சொல் எதிர்பெறாமல் இளைஞன் எழுதும் ஒரு காதல் முன்னுரை. காதலின் தொடக்கம். ஒரு சிறிய பொழுதுக்குக் காதலைச் சுட்டும் ஒருமன நிலை.

✧ 'பெருந்திணை என்பது பொருந்தாக் காமம்; வலிந்த புணர்ச்சி; இழிநிலை உடையது', என்று இதுநாள் வரை கருதியும் எழுதியும் வந்தனர். இழிகாமம் பற்றியதாக இவை இருந்தால், இவற்றை **ஒப்பற்ற அகத்திணை கண்ட தமிழ்இனம் அகத்திணை ஏழிற்குள் அடக்கியிருக்காது என்று** மறுத்துத் தமிழ் அகத்திணை மரபில் - இது பற்றிய ஆய்வு மரபில் புதியவிளக்கம் தருவது.

✧ 'பெருந்திணை என்பது பெருகிய காமம் உடையது; நாணம் கடந்தது; கூனிக்கும் - குறளனுக்கும் - குற்றேவலர்க்கும் உரிய இழிந்தது என்றெல்லாம் எழுதிவந்த' பாவத்தைப் போக்குகிறது இந்நூல்.

✧ கைக்கிளை, பெருந்திணை குறித்து நெடிது நாள் தொடர்ந்த கருத்துப் பிழைகளை வ.சுப. மறுத்து, **முதன்முதல் புதுவிளக்கம் தந்துள்ளார்.** ஐந்திணைக் காதலரின் ஆராக் காம உணர்வுதான் பெருந்திணை என்பர்.

அகத்திணை தோற்றம் பல்லாயிரமாண்டு தொன்மை உடையது. வாழையடி வாழையாய் வந்த அக மரபுகளைப் பெற்றது; கீழ்மைக் குறிப்புகளைப் புறக்கணித்தது.

பழம்போலும் சங்கப் பனுவலைக் கற்றால்
கிழம்போகும் கீழ்மையும் போம்

மா. குறள்-461

✧ அகத்திணையின் செவ்வியறிந்து அகத்திணை ஏழிற்கும் பொருள் காணவேண்டும் என்றும், **அகத்திணையின் அறம்காப்பார்** வ.சுப. ஒருதலைக்காமம், பொருந்தாக்காமம் என்றெல்லாம் வழங்கிய பாழுங் கருத்துகளை மாற்றி, இவற்றுக்குரிய செம்பொருளையும், மெய்ப் பொருளையும் கண்ட **அகத்துறை ஞானிதான் வ.சுப!** தமிழ்க்காதல் முழுதும் அகத்திணை செவ்வி காக்கும் வேள்ளியினை வ.சுப. நடத்தியுள்ளார்! அகத்திணை பற்றிய தவறான புரிதல் கருத்துகளைத் கடிந்த பேராசான் வ.சுப. என்பதை இந்நூலின் ஒவ்வொரு பக்கமும் பறைசாற்றுகிறது.

✧ அகத்திணையின் செவ்வியறிந்து, தம் நுண்ணிய ஆய்வுக் கருத்துகள்ால், சிலம்புகழி நோன்பு, மலரணியும் செயல், 'பொய்-வழு தோன்றிய பிறகு, 'ஐயர் '(சான்றோர்) நடத்திய திருமணச்சடங்கு (கரணம்), அகப்பாட்டில் சுட்டி ஒருவர் பெயர்சொல்லக் கூடாத கடும்விதி, - இன்னும் இவை போன்று பலவற்றுக்குச் செவ்விய விளக்கம் தந்துள்ளார் வ.சுப; அகம்பாடிய 378 கவிஞர்களின் சால்புகள், அகத்திணைக் கல்வியின் முக்கியத்துவம் குறித்தெல்லாம் தெளிவுற மொழிந்துள்ளார். **இது அகத்திணை ஆய்வின் பேழை!**

✧ சங்க இலக்கியத்தின் காதற்கவிதைகளுக்கு இந்நூல் ஆய்வுத் திலகம் வைத்துள்ளது. காதல் தமிழியத்துக்கு இந்நூல் நிகரற்ற ஒரு கொடை! தமிழ்க்காதலால், அகத்திணை இலக்கியத்திற்குச் வ.சுப.; புகழ் கூட்டுகிறார்.

✧ மூதறிஞர் முனைவர் வ.சுப. மாணிக்கனாரின் 'தமிழ்க்காதல்' அக இலக்கியங்களின் முல்லைசான்ற கற்பினைப் புலப்படுத்துகிறது. அகத்திணை அறம்காக்கும் இந்தச் செவ்விய திறனாய்வு நூலை மெய்யப்பன் ஆய்வக வெளியீடாகப் பதிப்பிப்பதில் இந்த ஆய்வகம் தனிப்பெருமை கொள்கிறது. தமிழ்க்காதலின் உயர்வுள்ளுகிறது!

✧ காதல் தமிழியத்தின் பரிசான இந்நூலைத் தமிழ்மக்கள் உயிரும் உள்ளமும் தளிர்க்கப் பயிலட்டும்! செவ்விது! செவ்விது! தமிழ்க்காதல்.

இவ்வரிய ஆய்வுநூலுக்கு என் ஆசிரியப்பிரான் பேராசிரியர் இரா. சாரங்கபாணி அவர்கள் ஆய்வுரை நல்கியுள்ளார்கள். இன்று மாணிக்கனார் வழியில் தமிழ்வழிக் கல்விக்குத் தலைமை தாங்கும் பேராசிரியர் முனைவர் தமிழண்ணல் அவர்களும் ஆய்வுரை நல்கியுள்ளார்கள். தமிழ்நலம் ஒன்றையே கருதி வாழும் இப்பெருமக்கள் இருவருக்கும் எம் நெஞ்சம் நிறைந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆய்வறிஞர்கள் போற்றும் இவ்வாய்வு நூலை தமிழ் ஆராய்ச்சி உலகம் வரவேற்றுப் பயன்பெறும் என்பது என் நம்பிக்கை.

புத்தொளி தந்த
புலப்பாட்டுத் திறன்

தமிழ் எண்ணல்

சங்க அகப்பாடலை விளங்கிக் கொள்ள, அப்படைப்புப் பற்றிய முன்னறிவு வேண்டும். உலகக் காதற் பாடல்களில் அது தனித்துநிற்பது. அதன் தனித்தன்மைகள் ஒன்று இரண்டல்ல; மிகப் பல.

மூவாயிரமாண்டுப் பழைமையுடைய அதனை இடைக்கால எழுச்சியில், மறுவாசிப்புத் தொடங்கியவர்கள் தம் காலச் சமயத் தாக்குரவுகளுக் காட்பட்டுப் பிறழ்வுணர்ந்தன பல. தமிழ்ப் பண்பாட்டின் வரைபடமான அகப்பாட்டு மாசுபட உணரப்பட்டது. மூதறிஞர் வ.சுப.மா.வின் இத் 'தமிழ்க் காதல்', அம் மாசுதனை அகற்றித் தூசு துடைத்துப் புத்தொளி பாய்ச்சி மீண்டும் அச்சங்க கால மெய்ம்மையுணர்வோடு சொல்லித் தருகிறது.

ஓர் அக இலக்கிய மாணவன் இந்நூலைப் படிக்குமுன், தான் கொண்டிருந்த பல்வேறு கருத்துக்கள், இதைப் படித்தபின் முற்றிலும் வேற்றுபட மாறியதை அறிந்து வியப்பிலாழ்வான். இந்நூலுள் ஒவ்வொரு சொல்லும் தன் பணியைச் செய்யுமாறு, அத்துணைச் செறிவோடும் வலுவோடும் பொலிவோடும் இந்நூல் யாக்கப்பட்டுள்ளது. சுருங்கக் கூறின் சங்கப்பாடல் அனைய தூய செவ்விய தரமுடையது இந்நூல். சங்கஇலக்கிய ஆய்வாளர்கள் இந்நூலை மேற்கோள் காட்டுவதில் பேரார்வம் கொண்டிருந்ததை, இந்நூலுக்குப் பின்வந்த ஆய்வுரைகள் அனைத்திலும் காணலாம்.

புலப்பாட்டுத்திறன் என்பது, ஒரு கருத்தை எழுத்தில் வடித்துப் படிப்பவர் மனத்தில் கொண்டுபோய்ச் செலுத்தும் திறம் பற்றியது. வெறும் மொழிநடையை மட்டும் சார்ந்ததன்று அது. மொழி வழி, கருத்தைச் செலுத்தவல்ல அனைத்துத் திறன்களும் பற்றியது அது.

மொழி ஆளுமையில் சங்கநூல்கள் இமயத்தின் உச்சத்தைத் தொட்டுநின்றதை, இன்றும் முற்றவுணர்ந்தாரும் இலர்; கண்டு உரைத்தாருமிலர். அக்கல்வியில், 'அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்' எனும் எல்லையை எட்டி இருந்தார் வ.சுப.மா. அதனால் இந்நூலை, 'முந்துநூல் கண்டு, முறைப்பட எண்ணிப் புலந்தொகுத்துப் போக்கறு பனுவலாகத்' தந்துள்ளார் அச் செம்மலார்.

தொல்காப்பியரின் '**நோக்கு**'க் கோட்பாட்டிற்கு, 'மறித்து நோக்கி இலக்கியப் பயன்கோடல்' என உரை வகுத்தார், பேராசிரியர். அந் நெறியில் எதிர் வினாக்களை எழுப்பி விடை காண முயலும் ஒரு தனிப் போக்கிலமைந்த இந்நூல், ஒரு 'துப்பறியும் புதினம்' போல் விறுவிறுப்புடன் மேன்மேலும் தொடர்ந்து படிக்கத் தூண்டுவதாயுளது. இதனைப் படிப்பார் தம் விளங்காமை ஒழிந்து நன்கு விளங்கிக் கொள்ள வேண்டுமென்றே விரும்புவர். எளிமை என்பது அருமையிலும் உளது என்பதற்கு மாணிக்க எழுத்துக்கள் சான்றாக அமைகின்றன.

கைக்கிளையை ஒருதலைக் காமமெனவும் பெருந்திணையைப் பொருந்தாக் காமமெனவும் இடைக்காலத்தே வரையறுத்து எழுதிவிட்டதை இந்நூல் முற்றிலுமாக மறுக்கின்றது. அகத்திணைக்குள் வரும் இவை ஐந்திணை போலச் சிறப்புடையனவே என நிறுவும் பாங்கு. தமிழிலக்கியப் பண்பாட்டு விளக்கமாகவும் அமைகிறது. அகத்திணை அன்றைய மக்கள் வாழ்விலிருந்து முகிழ்த்தது. "இலக்கியம் வாழ்விலிருந்து நேரடியாகத் தோன்றுவது என்றால், ஒரு தனிமனிதன் வாழ்விலிருந்து தோன்றுவது என்றா பொருள்? மக்கள் பலர் கூடிவாழும் சமுதாயக் கூட்டுறவிலிருந்து இலக்கியம் முகிழ்க்கும் என்று கொள்க, அடுத்து நிலமும் காலமும் பற்றிய அடிப்படை அகப்பாடல்களின் தோற்றத்திற்குக் காரணமானதும் அன்றைய மக்களின் உளவியல் துணையானதும் தெளிவுபெற எடுத்துரைக்கப்படுகின்றன.

எழுத்தெண்ணிக் கற்றவர்கள் என்று கூறுவதுண்டு. சங்க இலக்கிய அகப்பாக்கள் 1862. சங்க இலக்கியத்து இவ் அகப்பாக்களுள் கைக்கிளைக்கு நான்கும் பெருந்திணைக்குப் பத்துமே உரியவாகக் காண்கின்றோம். இடந்தலைப்பாடு பற்றி மூன்று பாடல்களே சங்க இலக்கியத்து உள. பாங்கற் கூட்டம் பற்றி 27 அகப்பாடல்கள் உள. இவற்றுள் பாங்கன் கூற்றாய் வருவன இரண்டே. இத்தகைய புள்ளிகள் இந்நூல் முழுதும் தரப்பெற்றிருப்பது, ஆசிரியரின் ஆழ்ந்து நுணுகிக் கற்ற புலமை வேரைக் காட்டுகின்றது; மேலே ஆய்பவர்கட்கு உற்ற துணையும் ஆகின்றது.

மறுப்புக்கள்

இந்நூலுள் பழைய உரையாசிரியர்கள் முதல் இன்றைய திறனாய்வாளர்கள் வரை மென்மையாகவும் வன்மையாகவும் மறுக்கப்படும் இடங்கள் கூர்ந்து படிக்கப்பட வேண்டியவை.

> **கரணத்தின் அமைந்து முடிந்த காலை**
> **நெஞ்சுதளை அவிழ்ந்த புணர்ச்சி**

எனும் தொல்காப்பிய நூற்பாப் பகுதிக்கு, நச்சினார்க்கினியர் எழுதியுள்ள உரையை இவர் மறுக்குமிடம் அவற்றுள் ஒன்று. அவ்வுரையாசிரியரைப் போற்றத்தக்க இடத்தில் போற்றத் தவறாத இவர். பிழை கண்டவிடத்து வன்மையாக இடித்துரைக்கிறார். இத்தகைய மறுப்புக்கள் இந்நூலுள் பலவுளவாதலின், சான்றுக்கு ஒன்று காட்டுதல் தகும்.

> "இவ்வெளிய இனிய கற்பியல் நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர் ஒழுக்கமில்லுரை எழுதியிருக்கின்றார் என்று வரைய என்கோல் நடுங்கினும், எடுத்துக் காட்டினாற்றானே தெரியும் என்ற முறையில், எழுத என் மனம் ஒப்புகிறது".

திருமணத்தின்போது ஒருபெண்ணை முதல்நாள் சந்திரனுக்கும் இரண்டாம்நாள் கந்தருவருக்கும் மூன்றாம்நாள் அங்கிக்(அக்கினி)கும் அளிப்பார்களாம். இம்மூன்று தெய்வங்களுடனும் அப்பெண் உடலுறவு கொள்வாளாம். நான்காம் நாள்தான், அங்கியங் கடவுள் மணமகனுக்கு

அவளைத் தர, அவன் அவளுடன் இன்பம் நுகர்வானாம். இங்ஙனம் திருமணம் முடிந்து மூன்று நாளும் மூன்று பேரிடம் இன்பமனுபவிக்கத் தன் மனைவியைத் தந்ததால் மனக்குறை ஏற்படுமல்லவா? அது நான்காம்நாள் தீர்வதுதான் 'நெஞ்சுதளை' அவிழ்ந்த புணர்ச்சியாம். இது வேத வழக்காம்.

> "தமிழர் கண்ட கற்பியல் இதுவா? தமிழினத்தின் நாகரிக ஏடான தொல்காப்பியத்துக்கு உரையா இது? இக்கருத்தெல்லாம் அல்தமிழ்நெறி என்று அகற்றுக".

இன்று மணவரையில் ஐயர் மந்திரம் சொல்லி மணம் செய்துவைக்கும்போது இவற்றையே, சமற்கிருத மொழியில் சொல்வதால் பிழைத்துப்போகிறார். அவரே இவற்றைத் தமிழில் சொல்வாரானால் அவர்நிலை என்ன ஆகும்? தமிழ்ப் பண்பாடு சீரழிவதையும் நினைத்துப் பார்க்கவேண்டும்.

இங்ஙனம் தமிழ்நெறிக்குப் புறம்பானவற்றையும், பிழைபட உணர்ந்தவற்றையும் அடியொன்ற மறுத்துத் தமிழர் பண்பாட்டை நிலைநிறுத்தும் இத் தமிழ்க் காதல்நூல் சங்க இலக்கிய மாணவர்கட்கு ஒரு சிறந்த - இன்றியமையாத **பாடநூலாகும்.**

சங்ககாலத் தமிழர்களின் பரத்தமை ஒழுக்கம் பற்றியும் பெண்ணுரிமை பற்றியும் இந்நூலுள் வரும் செய்திகள் நடுநிலையோடும் பொறுப்புணர்ச்சியோடும் எழுதப்பட்டுள்ளன. இக்காலப் பெண்ணிய எழுத்தாளர்களும் எதிர்ப்புணர்ச்சியோடாயினும், கட்டாயம் படிக்க வேண்டிய பகுதிகள் அவை.

> "பண்டைச் சமுதாயத்தில் கணிகை மடந்தையர் இயல்பாகப் பெற்றிருந்த நிலையான செல்வாக்கை நாம் மறைப்பதற்கில்லை".

பழங்காலச் சமுதாயத்தில் ஒருவகைக் குடும்பவொழுக்கம் போலவும் சமுதாயத் தேவைபோலவும் ஒழுக்கக்கேடன்று என்பது போலவும் அது பரவிக்கிடந்ததையும் அதனை ஒளிவுமறைவின்றி இலக்கியப்படுத்திய புலவர்தம் கடப்பாடு பற்றியும் நன்கு விவாதிக்கப்படுகின்றது. அன்றே அறநூல்கள் இதைக் கண்டித்தன. அன்று 'ஒருமைக் கணவன்மார்களும்' இருந்தமையைப் புறப்பாடல்களால் அறிகிறோம். மூதறிஞர் மாணிக்கனார் கருத்துப்படி அளவுநெறி கடந்த பரத்தை நாடிகளை வெளிப்படுத்தும் பாடல்களை இதுகாறும் ஐந்திணைப்பாற்படுத்து வந்திருப்பது தவறு. "ஒரு நிலைக்காமம் துய்க்காது, கழிக்காமம் மிக்க ஆடவனது பரத்தைச்செயல் பெருந்திணையாதலே பொருந்தும் என்பது என் துணிவு", எனத் தீர்ப்புரைக்கின்றார் அவர்.

தமிழ்ப் பண்பாடு வீட்டில் பெண்ணுக்குத் தலைமை தந்தது; நாட்டில் ஆணுக்குத் தலைமை தந்தது. நாட்டிலும் பெண் தலைமை ஏற்கும் காலம் இது. மகப்பெற்று, குடும்ப மரபைக் காக்கும் பெண்ணின் வீட்டுத்தலைமை இதனால் மாறிவிடுமெனத் தோன்றவில்லை. மனைவி, இல்லாள் எனும் வீட்டுத் தொடர்புடைய சொற்களே இப்பண்பாட்டின் வேரினைக் காட்டிவிடும். பெண்ணினத்தைக் கொண்டு, சமுதாயத்தைக் கட்டுப்

படுத்தலாம்; ஒரு வரம்பிற்குள் கொண்டுவரலாம்;, தடுமாற்றங்களைத் தடுக்கலாம் எனத் தமிழ் முன்னோர் கருதியதாகத் தோன்றுகிறது.

பழந்தமிழர்கள் பெண்ணுக்குத் தந்த தலைமையும் உரிமையும் அகப்பாடல்களில் காணப்படுகின்றன. பரத்தைமைக் கேடிருந்த இடத்தில் மனைவியின் உரிமை மதிக்கப்பட்டமை இப்பாடல்களில் எதிரொலிக்கின்றது. இதனை மூதறிஞர் எடுத்துக்காட்டும் திறம் சிந்தனைக்கு விருந்தாகிறது.

அகத்தலைமை பெண்ணுக்கே உரியது. மகவைப் பொறுக்கும் பெண்ணினத்துக்கே குடும்பத்தைச் சுமக்கும் பொறுப்பு உரியதும் எளியதும் நல்லதும் ஆம்.

அக மாந்தர்கள் பலராயினும் தலைவனுட்பட எல்லோரும் தலைவியை நோக்கியே இயங்குபவர்களாக அகப்பாடல்களில் படைக்கப்படுகின்றனர்.

'அகத்திணை ஓர் பெண்ணிலக்கியம்'.

'அகத்திணை ஓர் கற்பிலக்கியம்'

என அறுதியிட்டுக் கூறுமாறு சான்றுகள் தந்து விளக்கப்படுகிறது.

இந்நூலின் பிறிதொரு தனிச்சிறப்பு 'கரணம்' பற்றிய விளக்கங்கள். 'பொய்யும் வழுவும்' எனத் தொடங்கும் தொல்காப்பியக் கூற்றுக்கு, இதுகாறும் கூறப்பட்டுவந்த வழிவழி விளக்கங்கள் மறுக்கப்படுகின்றன. திருமணமான அண்மையில், ஒருத்தி மணமாகாதவள்போல் தோன்றக் கூடுமல்லவா? அப்பொய்த்தோற்றம், ஓர் ஆடவன் அவள்மீது பார்வை செலுத்த இடந்தருமாதலின், அப் 'பொய்'யால் விளையும் வழுவாகிறது அது. இவை இரண்டும், தவிர்க்கப்பட்டு, ஒரு பெண் 'மணமானவள்' என அடையாளம் காட்டவே கரணம் தேவைப்பட்டது. இவ்வடையாளம் காலந்தோறும் வேறுபட்டு வருவது. சங்ககாலத்தில் ஒருபெண் திருமணமாகும்போது, முதலில் சிறுபிள்ளைப்பருவம் முதலாக அணிந்திருந்த ஒருவகைச் சிலம்பு நீக்கப்பட்டது. கூந்தலில் மலர்சூடுவது ஓர் அடையாளம் ஆனது. ஆடவர்க்கு மணமானவர் எனக்காட்டும் அடையாளம் வேண்டாவா எனக்கேட்டு, அதனையும் அலசுகிறது இவ்வாய்வு.

ஒளிச்சிதறல்கள்

இந்நூலைப் படித்துப்போகும்போது பலஅரிய கருத்துக்கள், ஒளிச்சிதறல்கள் போலவும் ஒளிவீசும் முத்துக்கள் போலவும் ஆங்காங்கு ஓரிரு வரிகளில் சுட்டிக் கூறப்படுகின்றன. சான்றுக்குச் சில பார்க்கலாம்.

> அகநானூறு நற்றிணை குறுந்தொகை ஐங்குறுநூறு கலித்தொகை என்ற அகத்தொகை ஐந்தனுள்ளும் ஐங்குறுநூற்றுக்குத்தான் தக்கார் ஒருவரால் துறைகளும் நுண்மைகளும் நயம்படக் காட்டப்பட்டுள.
>
> ஏழுதிணைக்குரிய பாடல்களையும் கொண்டிலங்குவது கலித்தொகையே.

ஏறுதழுவி வரைந்துகொள்ளுதல் என்னும் முல்லைத் துறைப்பாக்கள் கலித்தொகையிலன்றிப் பிறதொகை நூல்களில் காணுமாறில்லை. வெறியாட்டு, மகட்போக்கிய தாயிரங்கல் என்ற துறைப்பாக்களோ கலித்தொகையில் இல்லை.

அவற்றைத் தமிழினர் அஃறிணை உயிர்களின் இன்பச் செய்கைகளை உயர்திணைக் காதற் கண்ணோடு பார்த்தனர்.

(சங்க காலத்தில்) அரசியல் வாழ்க்கை வாழ்ந்த(வர்) பரணர் நக்கீரர் கல்லாடர் மாமூலர்.

காதல் என்பது உள்ளப்பற்றையும் காமம் உடற்பற்றையும் குறிக்கும்.

யாண்டு தனித்திருந்தாலும் பிரிந்திருந்தாலும் இளந் தலைமக்களை இயற்கையுயிர்ச் சோடிகள் (பறவை, விலங்கு இணைகள்) வாளாவிடா. அஃறிணைப் பிணையல்களைக் காணும்போது, அவற்றின் புணரொலிகளைக் கேட்கும்போது, இளம் உள்ளங்கள் பாலுணர்வை எண்ணும், எண்ணும்.

புறநடை புகாக் காதற்பண்பு கொண்டது தமிழ் ஐந்திணை. விதிக்கு மயிரிழை அன்ன ஊறுபாடு ஏற்படினும் ஒருசெய்யுள் ஐந்திணையாகாதெனத் தள்ளப்படும்.

இத்தகைய அரிய கருத்தோட்டங்களால் பின்னிப் பிணைந்து கிடக்கிறது 'தமிழ்க்காதல்'. மேன்மேலும் எண்ணிப் பார்க்க, ஆராய வழித்தடங்கள் இதிற் பலவுள

அகப் பாடல்களில் எவையெவை பாடப்படும், எவை தவிர்க்கப்படுமென எடுத்துக்காட்டுமிடம் ஆழ்ந்த சிந்தனைக்குரியது. 'ஐந்திணைத் துறைகளுக்குள் விரிந்த புதினமும் ஆழ்ந்த சிறுகதையும் துடிக்கும் நாடகமும் எழுதத்தக்க மூலக் கூறுகள் உள'. ஆனால் ஐந்திணைப் புலவன் அவற்றை விரிப்பதில்லை; வரம்புக்குள் கட்டுப்பட்டே பாடுவான். அதன் வன்மை மென்மைகளை, நன்மைதீமைகளை ஆசிரியர் ஆராயுமிடங்கள் அகத்திணையின் மரபுணர்ந்து ஆழங்காற்பட்டவை.

தனித்தன்மைகள்

மூதறிஞர் **வ.சுப.மாவின் உவமைகள்** பழுத்த பட்டறிவின் வெளிப்பாடுகள், புதுமையானவை, அவை சில 'மூக்கின் உச்சிச் சுட்டுவிரல் சேர்த்து' வியக்கவைப்பவை. இவ்வுலகியல் சார்ந்தவை.

பழஞ்சொல் புதுக்குதல், வட்டார வழக்குச் சொல் ஆளுதல், புதுச்சொல் படைத்தல் அவரின் தனிஇயல்புகளாகும். அவரது நூல்களனைத்திலும் இப் புதுமைகள் ஊடாடி, 'மாணிக்கப் படைப்புக்கு' அடையாளம் காட்டும். இவை சொல்லப் புகுந்த கருத்தோட்டத்திற்குப் புறம்பாகாமல், அதனை வளப்படுத்தும் துணையாகும் சிறப்புடையன. (பிறவீட்டுச் செய்திகளை) **'அடுக்களைப் புகைபோல** நுழைந்து காணும் ஆசை': (ஐந்திணைக் களவிலக்கியத்தில் தடைகள், எதிர்ப்புகள் பல

வரும். அவை வராவிடின் பாடுவார்க்கும் படிப்பார்க்கும் சுட்டித்தனம் இல்லாக் குழந்தை போலவும், கட்சியற்ற அரசியல் போலவும் உணர்ச்சி வறண்டு தோன்றும்.

இத்தகைய உவமைகள் மிகப் பலவுள. அவை தனிச்சுவையுடையன.

'இரவுக்குறி முதலான எத்துணையோ துறைகள் சிறந்த பயனிலவாய் ஒழியுங்காண். இருபாற்கும் உள்ளப்புணர்ப்பு இல்லைகாண்... மொழிந்து செல்வர்மன்... தொடர்பு காட்டியிருப்பர்மன்...

'காண்' என்னும் முன்னிலை யசையையும் 'மன்' என்னும் ஒழியிசை இடைச் சொல்லையும் மீட்கும் முயற்சிஇது.

ஓவியம், ஆளான, இட்டபெயர், கூப்பிடுபெயர், கும்மாளம், விடாப்பிடி, குளிர்ப்பாட்டு, எட்டாக்கை, வைத்துப் பாராமல் போல்வன வட்டார வழக்குச் சொற்கள். உலக வழக்கில் காணப்பட்டு எழுத்தில் ஏறாத இத்தகைய சொற்களை ஆள்வதில் இவர் ஆர்வமிக்கவர். 'அவன் வளர்ந்த ஓவியம்' என்பர். பருவமடைந்தவளை 'ஆளானாள்' என்பர். இட்டபெயர். இயற்பெயர். எட்டாக்கை - சேய்மையில், தூரத்தில்.

இளைஞியர், அன்பி, கயத்தி எனப் படைப்பார். தந்தைமை, கணவன்மை, கன்னிமை, மனைவிமை, குமரமை எனப் பெயர்களைப் பண்பு வடிவாக்குவார். உலகியம், உயிரியம், ஒழுக்கியம் என இயம் ஒட்டுச் சேர்த்துப் புதுச்சொற் படைப்புக்கு வழிகாட்டுவார். சுவடு, சோடு, சோடி என வரும். சோடி - இணை. சூடு ஜூடு ஆவதுபோல இதை 'ஜோடி' ஆக்கிவிட்டனர். இரண்டு இடங்களில் காதலர்களைச் சோடிகள் என ஆளக் காண்கின்றோம்.

மூதறிஞர் வ.சுப.மாவின் கட்டுரைகளாயினும் நூல்களாயினும் அவை நின்று படித்து கவனித்து உள்வாங்கி, பிறகு அசைபோடவைக்கும் திறனுடையன. பழந்தமிழ் நூல்கள் போல், ஒவ்வொரு சொல்லும் காரணங்கருதி அமைக்கப்பட்டன. பத்திகளிடையே இயைபுடையன. படைத்தவனின் முழுதறிந்த பழுதிலாப் புலமைப் பெருமிதத்தை வெளிப்படுத்துவன. அதனால் அவ் எழுத்தை யாரும் கடினம் எனப் புறக்கணிப்பதில்லை; தமக்குச் சில அரிய கருத்துவளம் கிடைக்குமென ஆர்வத்துடிப்புடன் அழுந்திப் படிக்கவே காண்கின்றோம்.

அகத்திணைப் பாடல்கள் உலக இலக்கிய வரிசையில் தனித்தன்மைகள் பலவுள்ள தனிச்சிறப்பிடம் பெறுவன. அப் பேரிலக்கிய நுழைவாயிலாக, இத் 'தமிழ்க் காதல்' என்றென்றும் பயன்படும். திருக்குறள் பயில்வார் 'வள்ளுவத்தை'யும் அகத்திணை கற்பார் 'தமிழ்க்காதலை'யும் தவிர்த்தல் இயலாது. தவிர்த்தால் அவை பற்றிய கல்வியும் நிரம்புவதரிது.

தமிழண்ணல்

அணிந்துரை

முனைவர் இரா. சாரங்கபாணி

மூதறிஞர் செம்மல் வ.சுப. மாணிக்கனார் படைத்த அரும்பெரும் நூல்களான வள்ளுவமும் தமிழ்க் காதலும் தமிழருக்கு இருகண்கள் போன்ற சிறப்பின. அவ்விரண்டும் அவர் தமிழ்க் கடலில் மூழ்கித் திளைத்து முயன்றெடுத்த நன்முத்துக்கள். அவற்றுள் தமிழ்க்காதல் பண்டைத் தமிழ்மக்களின் உயரிய காதல் வாழ்வை உலகிற்கு உணர்த்துவது. சங்க இலக்கியத்தின் அகத்திணை குறித்த 1862 பாக்களையும் பல நோக்கில் வகைப்படுத்து நுனித்தாய்ந்து பல புதுச் செய்திகளை வழங்குவது. அகத்திணைக்கு அடித்தளமாம் காதற் கூறுகளை இன்றைய பாலியல் அறிஞர்களும் ஏற்கும் வண்ணம் தக்க பல ஆங்கில மேற்கோள் தந்து தெளிவு செய்வது. உள்ளத்தோடு இயைந்த உடற்புணர்ச்சி உயிரை வளர்க்கும் ஆற்றலுடையது என்பதைப் புலப்படுத்துவது. இதனை வள்ளுவப் பேராசான் 'உறுதோறு உயிர் தளிர்ப்பத் தீண்டல்' என்பர்.

அகத்திணை

கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை ஆக ஏழு என அகத் திணையை வகைப்படுத்தினும், ஐந்திணை பற்றியே சங்க அகப் பாடல்கள் சிறப்பித்துப் பாடலாயின. 'அகத்திணையும் ஐந்திணையும் ஒரு பொருள் குறிப்பன அல்ல; அகத்திணையுள் கைக்கிளையும் பெருந்திணையும் அடங்கும்; இவ்விரண்டும் அகத்திணைக்கு வேறுபட்டன ஆகா' என்ற கருத்துக்களைத் தக்க சான்றுகளால் நிலைநாட்டியுள்ளது, இந்நூல்.

உள்ளப் புணர்ச்சி

இந்நூலாசிரியர் தொல்காப்பியத்தையும் சங்கப் பாடல்களையும் கசடறக் கற்று, மதிநுட்பத்தோடு அகத்திணையை ஆய்ந்தமையால் பல புதிய செய்திகள் புலப்படுத்தப்பட்டுள்ளன. காதலர் தம் மன ஒற்றுமையே அகத்திணையின் உயிர்ப்பண்பு; இதனை உள்ளப் புணர்ச்சி என்ப. எழுவகை அகப்பாடல்களுக்கும் உள்ளப் புணர்ச்சி இன்றியமையாதது. கற்பு எனப்படுவது காதலர் தம் மெய்த் தொடர்புக்குப் பின்னர் வரும் ஒழுக்கம் அன்று. ஒருவரை ஒருவர் உள்ளத்தால் நினைந்த அப்பொழுதே கற்பெனும் திண்மை வேண்டப்படும். களவில் மெய்யுறு புணர்ச்சி இல்லை என்பது பொருந்தாக் கூற்றாகும்.

ஐந்திணையில் மடலேறுதலுக்கும் பெருந்திணையில் மடலேறுதலுக்கும் வேறுபாடுண்டு. மடலேறுவேன் என வாயளவிற் சொல்லுதல் ஐந்திணையாம்; அவ்வாறன்றி, மடல்மேல் ஏறியே காட்டும் செய்கை பெருந்திணையாம் எனத் தொல்காப்பிய நூற்பாக்கொண்டு விளக்குவர் (ப. 61). இரவுக் குறிப்பாடல்கள், தலைவிக்கு முன்பில்லாத ஆற்றலும் துணிவும் ஒட்பமும் காமத்தால் உண்டாகும் என்பதைக் காட்டும் அடிப்படையில் எழுந்துள்ளன.

காதலின் முடிவு

காதல், திருமணத்தில் முடியாவிட்டால் சிறப்பில்லை. ஆதலால், தமிழ்ச் சான்றோர் திருமணத்தை வலியுறுத்தினர். தோழி களவொழுக்கத்தில் பேரிடம் பெற்றிருப்பதற்கும் 882 களவுப் பாக்களில் பாதிக்குமேல் வரைவுத் துறைகளாய் இருப்பதற்கும் திருமணக் கொள்கையே ஏதுவாகும் (65). அறத்தொடு நிற்றல் என்பதில் 'அறம்' என்பது கற்பைக் குறிக்கும். கற்பென்னும் கடைப்பிடியில் நின்று களவொழுக்கத்தையும் பெற்றோர்க்கு வெளிப்படுத்தல் என்பது இத்துறையின் பொருள். தலைவி முன்னரே கற்பு நெறிப்பட்டு விட்டாள் என்பதனை முதன்மையாக வலியுறுத்துவதே தோழியின் நோக்கம். இற் செறிப்பு, ஊர் அலர், வெறியாட்டு, நொதுமலர் வரைவு என்ற இன்னாச் சூழ்நிலைகளைக் கடத்தற்கு இரண்டு வழிகள் உள. ஒன்று, அறத்தொடு நிற்றல்; ஏனையது உடன்போக்கு. இவற்றுள் ஒன்று நிகழின் மற்றொன்று நிகழாது. இவ்விரண்டில் ஒன்றே களவு நாடகத்தின் இறுதிக் காட்சியாகும் என்று களவு நிகழ்ச்சிகளைக் கூறி முடித்துக்காட்டுவர் (83). இங்ஙனம் பல அரிய செய்திகளை இந்நூல் அறிவிக்கும்.

கரணம்

'கரணத்தில் அமைந்து முடிந்த காலை, நெஞ்சு தளை அவிழ்ந்த புணர்ச்சி' (1091) என்னும் தொல்காப்பிய நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர் ஒழுக்க நெறிக்குப் புறம்பாக வரைந்த உரையை வன்மையாக மறுத்துள்ளார் (92). இதற்குப் பலர் அறிய மணச்சடங்கு முடிந்த பின்னர், அன்பு நெஞ்சங்களைப் பிணித்திருந்த தளைகள் தாமே அவிழ்ந்தன. காதலர்கள் கட்டற்ற கலவியின்பம் கற்பில் துய்க்கின்றனர் என்பது பொருள் என்பர். இதுபோலவே, இந்நூலில் சில தொல்காப்பிய நூற்பாக்களுக்கு நல்லுரை காட்டியுள்ளார். பொருள் வயிற் பிரிவு சங்கப் புலவர்களின் நெஞ்சையள்ளிய துறைகளுள் ஒன்று எனவும் அதற்குக் காரணம் இன்பமும் கடமையும் போராடும் இடமாக, நல்ல உணர்ச்சிகள் மோதிக் கொள்ளும் இடமாக அமைதலே எனவும் குறிப்பர்.

மணந்த குமரியரை மணவாக் குமரியரினின்றும் வேறுபடுத்திக் காட்டும் நோக்கமே, கரணத்திற்குக் காரணம் என்பர். காற்சிலம்பைக் கழற்றுவது ஒரு கரணம்; கூந்தலில் மலரணிவது ஒரு கரணம். இவ்விரண்டும் பண்டைத் திருமணக் காலத்துப் பரவலாக வழக்கிலிருந்த கரணங்கள் என்பதைச் சங்கப் பாக்களின் துணையால் சான்றுடன் நிறுவுவர்.

அரிய செய்தி

அகத்திணை நிகழ்ச்சிகள் கோவையாக நிரல்படத் தொகுக்கப் பெறும் தன்மையன அல்ல. எனினும், அப்போக்குக்கு மாறாக ஐங்குறுநூற்றில் தொண்டிப் பத்து அமைந்துள்ளது. அதனைப் பாடிய அம்மூவனார் களவின் ஒழுகலாறுகளைத் தொடர்ச்சியாகப்

பாடியிருப்பதைச் சுட்டிக்காட்டி அம்முறை பிற்காலத்தே கோவையிலக்கியம் எழக் காரணமாயிற்று என்பர் (339).

நினைத்த அன்புக் காதலியை அடைய முடியாதபோது, இளைஞன் மடன்மா ஏறி மன்றத்திற்குச் சென்று சான்றோர் முன் தன் வழக்கை எடுத்துரைப்பான் (கலித்தொகை 139, 141). இதனால் தமிழ்ச் சமுதாயத்தில் காதல்காக்கும் நிலையங்கள் ஊர்தோறும் நிலவின என்பது வெளிப்படை எனக் கூறுவர் (370).

பரத்தையர்

இல்லறத்திற்கு இடையூறாகாத பரத்தையரையே ஐந்திணை பொருட்படுத்துகின்றது. இப்பரத்தையர் பொருட் பெண்டிரினும் வேறானவர். இவரைக் 'காமக் கிழத்தியர்' எனத் தொல்காப்பியம் குறிக்கும். தலைவியைப் பிரிந்து வாழும் தலைவனை அவளோடு சேர்ந்து வாழுமாறு ஒரு பரத்தை கூறி இல்லற நெறிப்படுத்து கின்றாள் (நற்றிணை 315). அதனால் தான் பரத்தையரை 'மனையோள் ஒத்தலின்' எனத் தொல்காப்பியம் (1096) தலைவியோடு நிகரான நிலையில் கூறுகிறது. பரத்தையர் தலைவன் பொருள்களை எல்லாம் கவர்ந்தார் என்றோ, அது காரணமாகத் தலைவன் வறுமையுற்றான் என்றோ, அதுபற்றித் தலைவி பிணங்கினாள் என்றோ, மருதப் பாடல் அமையவில்லை. தலைவனின் மகனைத் தெருவில் கண்ட போது, பரத்தையர் அவனுக்குத் தொடியும் மோதிரமும் அணிந்து அனுப்பினர் எனக் கலிப்பாடல்கள் (82, 84) உரைக்கின்றன. இதனால் பரத்தையர் பொருட் பெண்டிர் அல்லர் எனத் துணியலாம் என்பர் (290). இச்செய்திகள் பரத்தையர் எத்தன்மையர் என அறியத் துணை செய்கின்றன.

உள்ளுறை

உள்ளுறையின் சிறப்பையும் இயல்பையும் சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ளார். உள்ளுறை உடைய பாட்டு மலரணிந்த கூந்தல் போன்றது. இலக்கிய அழகை மிகுப்பது. இயற்கை வனப்பும் உவமைத் தன்மையும் உள்ளப் பதிவும் நாகரிகப் பண்பும் புலமைக் கூர்மையும் உள்ளுறையால் விளங்கும். (363)

புலவரின் தனித் தன்மை

அகம் பாடிய சங்கப் புலவர்களின் பாடலியல்பு கூறுங்காலை, அவர்தம் தனித்தன்மை ஆங்காங்கே புலப்படுத்தப் பெறுகின்றது. நல்லந்துவனாரின் கலிப்பாடல்கள் முதல், உரி, கரு என்ற மூன்றானும் நெய்தல்கள். சங்கப் புலவர் எவரிடமும் காணப் பெறாத ஒரு தனியருமை அந்துவனாருக்கு உண்டு. அவர் ஒருவரே அகத்திணையுள் ஒரு பிரிவான பெருந்திணைக்கு இலக்கியம் செய்தவர் என்னும் புதுச் செய்தியைப் புலப்படுத்தியுள்ளார் (405). அன்பும் நாணமும் ஐந்திணையாம் என்றும் அன்பும் நாணமின்மையும்

பெருந்திணையாம் என்றும் அவற்றுக்கிடையே உள்ள வேறுபாட்டைக் காட்டுவர். ஐந்திணைக் காதலர் போலவே பெருந்திணைக் காதலரும் அன்புடையர், கற்புடையர். ஐந்திணைக்கு இல்லாத பெருந்திணைக்கே உரிய இலக்கணம் நாணமின்மை. எனினும், நீங்கிய நாணத்தை மீளப் பெற்று பெருந்திணையர் ஐந்திணையராக நல்வாழ்வு வாழலாம்; சமுதாயப் பழி யாதுமில்லை என விளக்கித் தம் கருத்துக்கு அந்துவனாரின் நெய்தற் கலிப்பாக்களைச் சான்றாக்குவர். (410)

அகப்பாட்டுக்கும் அதனைப் படைத்த அகப் புலவர் வாழ்க்கை முறைக்கும் எவ்வகையானும் இயைபு படுத்துதல், இயைபு படுத்தி விளக்குதல், ஆராய்தல், அறவே கூடாது. அங்ஙனம் செய்தல் அகத்திணை இலக்கண முரண் என்பர். புலவரின் படைப்பாற்றலை ஆராயலாம். அகத்திணை மாந்தர் தம் பண்பியலை ஆராயலாம். ஆனால், பாடலை அதனைப் படைத்த ஆசிரியரோடு தொடர்புபடுத்தி ஆராய்தல் ஆகாது என்பர்.

உளவியல்

களவொழுக்கத்தில் தலைவன் தன் காமவெம்மையை ஆற்றிக் கொள்ளப் பாங்கன் பற்றுக் கோடாகின்றான். சிறு பாம்புக் குட்டி காட்டானையை வருத்தியது போல, அவள் மெல்லுறுப்புக்கள் என்னைத் தாக்கின (குறுந்தொகை 119) என்று சொல்லுந்தோறும் தலைவனுக்கு மனவேகம் தணியவும் அறிவு ஒருநிலைக்கு வரவும் காண்கிறோம். இந்நிலையில் தலைவன் கூற்றாக 25பாக்கள் அமைய இவ்வுளவியலே காரணம் என்பர். (54)

துறைவிளக்கம்

'யாயும் ஞாயும் யாராகியரோ' (குறுந்தொகை, 40) எனனும பாடலுககு இயற்கைப் புணர்ச்சி எய்திய தலைவன் நமக்குள் பிரிவு ஏது என்று சொல்லித் தலைவியை ஆறுதல் செய்தான் எனத் துறை கொள்வர். குரவர் கூட்டிய கற்பின் முதற்புணர்ச்சியாகவும் கொள்ளலாம் என்று கூறிக் குறிஞ்சித் திணைக் களவுத் துறைப் பாடலில் முதல் கருப்பொருள்கள் பெரிதும் இடம் பெறுதல் உண்டு. புணர்ச்சி கூறும் இப்பாடலில் முதலும் கருவும் இடம் பெற்றில. மலையோ பிறவோ கூறப்பெற்றில. ஆதலின் இல்லத்து நிகழ்ந்த கற்புப் புணர்ச்சியாகவே கொள்க என விளக்கந் தருவர். (135)

'நல்ல வேப்பங் காயைத் தலைவி தந்தாலும் அதனை வெல்லக் கட்டி போன்றது எனக் கூறிச் சுவைத்தகாலம் ஒன்றுண்டு; இப்பொழுது பாரி பறம்பின் சுனையிலுள்ள தண்ணிய நீரைத் தரினும், சூடாய் உப்புக் கரிக்கும் என்று கூறுகின்றீர்' எனத் தோழி தலைவனின் இருவேறு நிலையைக் குறிக்கின்றாள். இந்நிலைக்கு விளக்கமாக ஆசிரியர், 'காதல் தொடக்கத்தின் கவர்ச்சியையும் பொலிவையும் காலப்போக்கில் அதன் தணிவையும் ஏமாற்றத்தையும் நேர்மாறுபடப் புலப்படுத்தும் உள இயல்பு அறிவியலுக்கும் நடையியலுக்கும் பொருந்துவதாகும்' எனக் கூறியிருப்பது நினைந்து போற்றத்தகும். (143)

காதற் காமம்

காதல் என்பது உள்ளப்பற்றையும் காமம் என்பது உடற்பற்றையும் குறிப்பது. இவ்விரு சொல்லும் குறித்த பொருளை ஒருங்கே காட்டுதற்குச் சொல் இன்மையின் காதற்காமம் என்னும் புதுத்தொடரைக் குன்றம்பூதனார் படைத்திருப்பதைப் பரிபாடல் அடி கொண்டு விளக்குவர். 'காதற் காமம் காமத்துச் சிறந்தது, விருப்போரொத்த மெய்யுறுபுணர்ச்சி' என்பது அப் பரிபாடற் பகுதி (9:14,15). இக்கருத்தைக் 'காதலங்காமம்' (பரிபாடல் 6 : 71) எனவும் வழங்குவர். சங்க இலக்கியத்தில் காதல் வருமிடத்துக் காமப் பொருளும் காமம் வருமிடத்துக் காதற் பொருளும் பெறுதலையும் சுட்டிக் காட்டுவர்.

காமச் சிறப்பு

அகத்திணையின் சிறப்பையும் அதனால் எய்தக் கூடிய நன்மைகளையும் இந்நூல் அறிவிக்கின்றது. காமம் பிறப்பின் இயல்பினது; நல்லது; இனியது; இன்றியமையாதது. காமத்துறையில் எண்ணங்களை எண்ணுவது எப்படி? சொல்லுவது எப்படி? புறச் சூழ்நிலைகளைப் பயன்கொள்வது எப்படி? புணர்வைத் துய்த்தும் பிரிவைப் பொறுத்தும் வாழ்வது எப்படி? என்ற அறிவுகளை அகப்பாடல்கள் கற்பிக்கும் என்பர். ஆண்பாலின் பெரு மிதத்தையும் உரிமையையும் மனைவி மதிப்பதும் பெண்பாலின் அருமையையும் நிறையையும் நாணத்தையும் கணவன் மதிப்பதும் இன்றியமையாதன என்பதை ஆசிரியர் வலியுறுத்துவர். ஊடலில் ஆடவனது பணிவையும் வேண்டுதலையும் கண்டு அவனைக் காமுகன் என்றோ, சிறியவன் என்றோ, கருதித் தருக்காது கற்பின் வணக்கம் என்று அறிந்து இன்ப அருள் செய்பவள் மனைவி என்பர். (468)

தமிழ்க்காதல்

. சங்க இலக்கியங்கள் 1862 அகப் பாடல்களை உடையன. ஒவ்வொரு பாடலிலும் ஆண்பெண் உள்ளங்கள் உள்ளன. அப்பாடல்களைக் கற்பவர் 3724 காதல் உள்ளங்கள் பற்றிய அறிவு பெறுவர்; மேலும் தலைவன் தலைவியர் பற்றிப் பாங்கன் நினைத்தனவும், ஊரார், கண்டார் நினைத்தனவும் ஆகிய பல்வேறு உள்ளங்களின் அறிவினையும் பெறுவர் என்பது ஆசிரியரின் துணிபு. இந்நூல் தொல்காப்பிய அடிப்படையில் சங்க அகத்திணைப் பாக்களை ஆய்ந்து பல நன்முடிபுகளை ஆங்காங்கே நுவல்கின்றது. அகத்திணைச் செய்திகளைப் புலப்படுத்தும் பாங்கும் சில சங்கப் பாடல்களுக்கு விளக்கத்துடன் தரும் நயமும் உளவியலை இயைத்துக் காட்டும் சீர்மையும் தனித்தமிழ் நடையின் இனிமையும் இந்நூல் கற்கும் தமிழார்வலர்கட்கு நல்விருந்தாகும். அகத்திணையின் இயல்புகளைப் பாரித்துரைக்கும் 'தமிழ்க்காதல்', தமிழின் சிறப்பையும் மாண்பையும் இனிமையையும் புலப்படுத்தி நிற்றலின் தமிழிடத்தும் காதலை உண்டாக்கும் என்பது ஒருதலை. தமிழ்கூறும் நல்லுலகம் 'தமிழ்க் காதல்' வழங்கும் காதலின்பத்தையும் தமிழின்பத்தையும் துய்த்துத் திளைப்பதாகுக!

முகவுரை

காதல் உடலுக்கு நல்லது, உள்ளத்துக்கு நல்லது, ஊருக்கு நல்லது, உலகத்துக்கே நல்லது. அந் நல்ல காதல் எது?

காதல் என்பது உடற்பசி, உள்ளப்பசி, உயிர்ப்பசி, பிறவிப்பசி, அப்பசி தீர்க்கும் உணவு நெறி எது?

அஃறிணையுயிர்களின் காதலாவது கல்லாக் காமம், இயற்கை வீறு. மொழி பேசும் மக்களினத்தின் காதல் நினைவில் இனித்து, அறிவில் விளங்கிக் கல்வியில் வளர்வது. அவ் வளர்ச்சிக் கல்வி எது?

காதலையும் அதன் உணர்வையும் அதன் கல்வியையும் தெளிய வேண்டின். தெளிவுக்கு வேறிடம் இல்லை. தமிழ்ப் பேரினம் கண்ட அகத்திணையை நாடுக. தொல்காப்பியம் சங்கவிலக்கியம் திருக்குறள் என்ற முத்தமிழக நூல்களைக் கற்க முந்துக. காதல் சான்ற தமிழியங்களையெல்லாம் தெளிந்து நுகர்ந்து குடிதழைத்து வாழ்க.

நெறியாகவும் அளவாகவும் உரமாகவும் நாணமாகவும் கற்பாகவும் காமக்கூறுகளைச் செவ்வனம் காட்டும் ஓர் உலக இலக்கியம் தமிழிற்றான் உண்டு. அதுவே அகத்திணை. இத் திணைக்கல்வி பருவம் வந்துற்ற நம்பியர் நங்கையர்க் கெல்லாம் வேண்டும், வேண்டும். அன்னவர் திருமணம் நறுமணம் பெறும். அக் காதலர்தம் வாழ்வில் உள்ளப்பூசல் இராது. ஊடற்பூசலே இருக்கும்; வெங்கட்சினம் இராது, செங்கட் சினமே இருக்கும்.

அகத்திணை கற்ற கணவனும் மனைவியும் பிறந்த உலகை மதிப்பர், எடுத்த உடம்பை மதிப்பர், கொண்ட மணத்தை மதிப்பர், ஒருவர் ஒருவர்தம் காம நாடிகளைப் புரிவர், காமக்குறைவு கடமைக் குறைவாம் என்று உணர்வர், வித்தில்லாக் காமப் பழத்தை உண்பர், மெய்யின்பத்தை உயிரின்பமாகப் போற்றி ஒழுகுவர், அகத்திணை வாழ்க்கையை அன்புத்திணை வாழ்க்கையர்க் காண்பர்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் டாக்டர் பட்டத்துக்கு யான் எழுதிய ஆங்கில நூலின் முடிபுகள் இத்தமிழ் நூற்கண் விரிவாகவும், விளக்கமாகவும் அமைந்துள.

இந்நூலின் செம்மைக்கு உதவிய திருக்குறள் உரைவேற்றுமை ஆசிரியர் இரா. சாரங்கபாணி எம்.ஏ. அவர்கட்கு நன்றியன்.

இந்நூலைக் கற்கத் தொடங்குவோர் இறுதியில் உள்ள அகத்திணைக்கல்வி என்னும் பகுதியை முதற்கண் கற்க வேண்டுவன்.

வ.சுப. மாணிக்கம்

உள்ளுறை

		பக்கம்
1.	அகத்திணை ஆராய்ச்சி	13
2.	அகத்திணைப் பாகுபாடு	31
3.	அகத்திணைத் தோற்றம்	91
4.	அகத்திணைக் குறிக்கோள்	174
5.	அகத்திணைப் பாட்டு	246
6.	அகத்திணைப் புலவர்கள்	269
7.	அகத்திணைக் கல்வி	368
	பொருட் குறிப்பு	383

1. அகத்திணை ஆராய்ச்சி

சங்க இலக்கியமும் அகத்திணையும் (காதலும்) என்பது யான் ஆராயக்கொண்ட ஆய்பொருள். சங்க இலக்கியமாவது எட்டுத் தொகையும் பத்துப்பாட்டுமேயாம். இது பலர் ஒப்பிய முடிபு.[1] இப்பதினெட்டுந்தாம் காலக்கூற்றுவனின் தமிழ்ப் பசிக்கு இரையாகாது, தப்பி வந்த பழந்தமிழ் இலக்கியப் படைப்புக்கள். சங்கத் தனிப்பாடல்களின் தொகை 2381 என்ப; அதனுள் அகத்திணை நுதலியவை 1862 என்க. சங்கப் புலவர் தொகை 473 என்ப; அதனுள் அகம் பாடினோர் 373 சான்றோர் என்க.

அகம் புறம் என்னும் இருதிணை வடிவமைந்த பொருளிலக்கியம் இன்றும் அறிவுலகிற்குப் புதியது, தமிழ்மொழி ஒன்றின் கண்ணேதான் காணப்படுவது என்று பன்மொழியறிஞர்கள் செவ்வனம் மொழிகுவர். தமிழர் இலக்கண வடிவு கொடுத்த இருதிணையுள்ளும், ஆராயுங்காலைச் சிறந்து நிற்பது எது? புறத்திணைப் பொருளான வீரம் மக்களுள்ளும் சிலர்க்கே தகுவது; "நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே (புறம்.312)" என்றபடி, படைப்பயிற்சியால் வருவது. அகத்திணைக்குப் பொருளான காமமோ ஆண் பெண் என்னும் பால்வாய்ந்த உயர்திணை அஃறிணை உயிர்க்கெல்லாம் பொதுவாயது;

---

1. சங்க இலக்கியம்; முன்னுரை. ப XVI; சமாசப் பதிப்பு

எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தானமர்ந்து வருஉம் மேவற் றாகும் (தொல் 1168)

என்று பாலியலறிஞன் சுட்டியாங்கு, உடம்போடு ஒட்டிய இயற்கைத்து. ஆதலின், அகப்பாடல் உயிரிகள் பிறந்ததற்கும் பிறப்பிப்பதற்கும் அடிப்படையான இன்பவுணர்வை - உலகின் மருங்கு அறாது வழிமுறை காக்கும் காமத்துடிப்பைப் பொருளாகக் கொண்ட தலைமையுடையது என அறியத்தகும். "புலவனுக்கு மதம் எனப்படுவது ஆண் பெண் காதலே. அக்காதல் இலக்கியத்தின் வற்றா ஊற்றிடங்களுள் ஒன்று. கவிதை யெண்ணத்தை உருவாக்கும் சார்புகளுள் ஒன்று" எனக் கவிஞனுக்கும் காதலுக்கும் அமைந்த நட்பினை எடுத்து மொழிவர் ஆங்கிலப் பேராசிரியர் ஆர்போர்டு[1]. சங்கப் புலவோர் தாம் மெய்யாகக் கண்ட இவ்வுலக மனப்பட்டவர். ஆதலின், உலகம் நீடுவாழ உயிர்க்கொடை செய்யும் காமம், அன்னவர் நெஞ்சினைக் கொள்ளை கொண்டதும், தமிழ்ப் பாடலுக்குத் தலைப்பொருளாயதும் வியப்பாமோ!

தமிழ்த் தொல்லிலக்கணன் தொல்காப்பியன் அகத் திணையின் இயல்பு தெரிவிக்க, அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் என இயல் நான்கு வகுத்துள்ளனன்' புறத்திணையின் இயல்பு தெரிவிக்கவோ, அவனால் எழுதப்பட்ட இயல் ஒன்றே. சங்கப் பெருஞ்சான்றோர் கபிலர், ஆரியவரசன் பிரகத்தனுக்குத் தமிழின் மேன்மையை அறிவுறுத்த விரும்பினார்; விரும்பியவர் அவனுக்கெனத் தாமே குறிஞ்சிப்பாட்டு ஒன்று இயற்றினார். இஃது ஓர் அகத்திணைப்பா. கபிலர் புறம் பாடாது அகம் பாடிய நோக்கம் என்ன? தமிழினத்தின் அறிவுச் சின்னம் அகத்திணைப் படைப்பு; தமிழ்மொழியின் தனி வீற்றினை அயல் மொழியான் உணரவேண்டுமேல், அவனுக்கு முதலில் கற்பிக்கவேண்டும் பொருள் அகப்பாட்டே என்று அவர் உள்ளியிருப்பர். புலவர் பாராட்டிய புலவர் கபிலராதலின், வேற்று மொழியிற் பெறலரும் தமிழ்க் கூறுகளை, அறியவும் அறிவுறுத்தவும் வல்லார் அவரன்றி யார்?

"ஆரியவரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவித்தற்குப் பாடியது" எனக் குறிஞ்சிப் பாட்டுக்குத் துறைக்குறிப்பு எழுதப்பட்டுள்ளது. "இந்நூல் என் நுதலிற்றோ எனின், தமிழ் நுதலியது" என்று இறையனார் அகப்பொருள் உரையாளர் குறிக்கின்றார். "ஒண் தீந்தமிழின் துறை வாய் நுழைந்தனையோ" என்று திருக்கோவை பாடும்.[2] ஈண்டெல்லாம் தமிழ் என்னும் சொல் அகத்திணைக்கு

1. Professor C.H. Herford: Shakespeare's Treatment of Love and Marriage and ofter ressays. p. 152.

2. ஒண்தீந் தமிழின் துறை - அகத்திணையின் துறை என்பது பொருள். அகமும் புறமும் தமிழின் துறைகளாவன என்று கோவையுரையாசிரியர் சொல்வது பொருத்தமில்லை. அகத்தையும் புறத்தையும் திணையெனச் சுட்டுவதே மரபும் முறையுமாம்.

மறுபெயராய் நிற்றல் காண்க. ஒரு மொழியின் பெயர் அம்மொழி பெற்றிருக்கும் இலக்கியப் பல்வகையுள் ஒருவகை இலக்கியத்திற்கு மட்டும் பெயராய்ச் சிறப்பித்து ஆட்சி செய்யப்படுமானால், அவ் விலக்கியவகை அம்மொழியிலல்லது பிற எம்மொழியிலும் காண்பதற்கில்லை என்பதுதானே கருத்துரை. இதனால் உலக மொழிகளுள் தமிழ்மொழியின் ஒரு தனிச்சிறப்பும், தமிழிலக்கிய வளத்துள் அகத்திணையின் முதற்சிறப்பும் விளங்கித் தோன்றும்.

தள்ளாப் பொருளியல்பிற் றண்டமிழாய் வந்திலார்
கொள்ளாரிக் குன்று பயன் (பரிபா: 9)

'தள்ள வாராக் காதற் பொருளின் இலக்கணம் கூறும் தமிழை ஆராயாதவரே, மலையிடத்து நிகழும் களவொழுக்கத்தை ஓர் ஒழுக்கமென ஏற்றுக்கொள்ளார்' என்று குன்றம் பூதனார் காரணம் கூறிக் கழறுவர். பிற மொழிகள் எழுத்திலக்கணமும் சொல்லிலக் கணமும் உடையனவே யன்றி, மக்களின் வாழ்வை ஆராய்ந்த பொருளிலக்கணம் கண்டவையல்ல. தமிழ் மொழியோ எனின், முவ்விலக்கணமும் நிறைந்தது. தமிழின் பொருளிலக்கணத்தைக் கல்லாத அறிவுக் குறையுடையார் காதற் களவைக் குறைகூறுவர் எனவும், தமிழை ஆய்ந்தவர் களவு நெறியை உடன்படுவர் காண் எனவும் மேலைப் பரிபாட்டால் தெளிகின்றோம். தமிழின் தன்னேரின்மைக்கு அகப்பொருள் இலக்கணம் கண்டது காரணமாம் என்பது மேலும் வலியுறும்.

பாண்டிநாடு பன்னீராண்டுப் பஞ்சம் நீங்கிச் செழித்த பின், பாண்டியன் தமிழ்ப்புலவர்களைத் தேடிக் கூட்டிவரச் செய்தனன் என்றும், எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் வல்ல புலவர்களே நாட்டிற் காணப்பட்டனர்; பொருளதிகாரம் வல்ல புலவர் யாரும் காணப்பட்டிலர் என்றும், அது கேட்ட பாண்டியன், "என்னை! எழுத்தும் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேம் எனின், இவை பெற்றும் பெற்றிலேம்" எனக் கவன்றான் என்றும், இறையனார் அகப்பொருளுரையில் ஒரு வரலாற்றுக் கதை வருகின்றது. பின் நடந்தது என்ன? ஆலவாய்ப் பெருமான் அருளால், அறுபது சூத்திரம் கொண்ட அகப்பொருள் நூலைப் பெற்றான் பாண்டியன் எனவும், "இது பொருளதிகாரம்" என்று மகிழ்ந்து உரை வகுப்பித்தான் எனவும் அறிகின்றோம். பொருளதிகாரம் கிடைக்கவில்லையே என்று வருந்திய வேந்தனுக்குத் தொல்காப்பியம் போல முழுப் பொருளதிகாரத்தை இறையனார் அருளிச் செய்யாததையும், அகப்பொருள் நூல் பெற்ற வேந்தன் தானும், "புறப்பொருள் நூலும் கிடைத்திருப்பின் என் மகிழ்ச்சி பெரிதாயிருக்கும்; இறைவன் இவ்வருளுக்குப் போற்றி" என்று ஓர் அமைதிக் குறிப்பேனும் சொல்லியிருக்கலாம்; அங்ஙனம்

சொல்லாததையும், இது பொருளதிகாரம் என்று முழு நிறைவு கொண்டதையும் எல்லாம் எண்ணுங்கால், பொருள் என்பது பண்டு அகத்திணையையே நினைப்பித்த சிறப்புநிலை புலப்படும்.

அகப் பாடல் இயற்றுதற்கு, நிலத்தின் காலத்தின் இயற்கையறிவு வேண்டும். மரஞ் செடி கொடி பறவை விலங்குகளின் தன்மைக் கல்வி வேண்டும். அஃறிணை யுயிர்களின் இன்பப் புணர்வை, மக்களின் இன்பப் புணர்வோடு தரஞ்செய்து பார்க்கும் சீர்மை வேண்டும். காதல்வாய்ப் பழகும் இளநெஞ்சங்களின் தூய எண்ண நாடிகளைக் கற்பனையால் அளந்து கவின்செய்யும் மனப்பதம் வேண்டும். சங்கஇலக்கியத்து அகத்திணைப் பாடற்றொகையும், அகம் பாடினோர் தொகையும், புறத்திணையினும் மும்மடங்கு மிக்கிருத்தலை மதிக்குங்கால், சங்கச் சான்றோர் அகம் பாடுவதையே புலமைக்கிடனாகப் போற்றினர் என்று கருத்து வெளிப்படுமன்றோ? டாக்டர் வரதராசனாரும் டாக்டர் தனிநாயக அடிகளும் சங்க இலக்கியத்தின் இயற்கைப் பகுதிகளைத் திறம்பட ஆராய்ந்துள்ளனர். இயற்கையை இயற்கைக்காகவே பாடும்நிலை - அதனைத் தனிப் பொருளாகக் கொண்டு கருத்துரைக்கும் துறை - சங்க காலத்தில் இருந்ததில்லை என்றும், மக்களின் ஒழுகலாற்றிற்கும் சிறப்பாகக் காதலொழுக்கத்திற்கும் பக்கப் பொருளாகப் பாடும் சார்பு நிலையே இயற்கைக்கு அன்றே இலக்கியத்தில் இடமாய் இருந்தது என்றும், அவ்விருவரும் தத்தம் நெறியால் அறுதியிட்டுரைப்பர். இவ்வகைக் காரணங்களைக் கூட்டிப் பார்க்கும்போது, சங்க இலக்கியத்தில் அகத்திணைப் பொருள் பெற்றிருக்கும் மேம்பாட்டினை மட்டுமோ அறிகின்றோம்? சங்க காலப் பண்பை ஆராய்குநர் முதற்கண் ஆராய வேண்டுவது அகத்திணை என்பதும், அகத்திணையைக் கற்று ஓர்ந்து நுணுகி ஒரு தெளிவு பெற்றாலல்லது, பண்டைப் பெருந்தமிழினத்தின் நாகரிகச் சால்பினை நாம் கண்டவர்கள் ஆகோம் என்பதும் புலனாகவில்லையா?

II

எண் அகத்திணை ஆராய்ச்சிக்குச் சங்கத்தொகைப் பனுவல்களே கருவியாம். 2381 சங்கப் பாடல்களுள் 1862 அகத்திணை நுதலுமவை. இத்தொகை பின் வருமாறு:

அகநானூறு	(முழுதும்)	400 பாடல்கள்
நற்றிணை	....	400 பாடல்கள்
குறுந்தொகை	....	401 பாடல்கள்
ஐங்குறுநூறு	...	500 (129, 130ஆம் பாடல்கள் தொலைந்தன)

கலித்தொகை	....	149
பரிபாடல்	....	8 (22 பாடல்களுள்)
பத்துப்பாட்டு	...	4 (10 பாடல்களுள்)
கூடிய அகப்பா		1862

அகநானூறு நற்றிணை குறுந்தொகை என்ற முதன்மூன்று தொகைகளுள், தொகை முறையில் ஒன்றுபோல்வனவே. இவற்றுள் அடங்கிய பாட்டுக்களைப் பாடினோரும் பலர். அவர் பாடிய அகத்துறைகளும் பல. இங்ஙன் ஒத்த அமைப்புடையவை ஒரு தொகையாகாது. மூன்று தொகைகள் ஆயதற்குக் காரணம் அடிக்கணக்கே என்பது அறிந்த செய்தி. 4 முதல் 8 அடியுள்ள பாக்கள் குறுந்தொகைப் பட்டன. 9 முதல் 12 அடிப் பாக்கள் நற்றிணையாயின. 13 முதல் 31 அடிப் பாடல்கள் நெடுந்தொகை என்னும் அகநானூறாக அமைந்தன. பாடினோர் அடிக்கணக்கை மனத்தில் வைத்துப் பாடவில்லை என்பதும், அடியெல்லை வகுத்துக் கொண்ட திறம் தொகுத்தோர்க்கு உரியது என்பதும் நம் நினைவிற்கு வேண்டும். கடலால் கறையானால் அயல் நாகரிகத்தால் தமிழ் மக்களின் பேணாப் பெரும் பேதைமையால், ஐயகோ! அழிந்து போய நூல்கள் அளவிலவே; எஞ்சிய சில நூற்பாடல்களையேனும் தேடித் தொகுக்க வேண்டும், தொகுத்துக் காக்கவேண்டும் என்னும் துடிப்பு அன்றொருநாள் எழுந்தபோது இத் தொகை நூல்கள் உருவாகின. சிதறிக்கிடந்த தனிப்பாக்களுக்கு நூல் வடிவருளிய நன்மக்கள் அனைத்துப் பாடல்களையும் ஒரு தொகையாக்கின், பெரிதாய் விரிந்து பரவலற்று மீண்டும் அழியினும் அழியும் என்று அஞ்சிய நல்லச்சமே, தொகை பலவாயதற்குக் காரணம் என்று கருதலாம்.

பாடினோர் அடியளவை நினைந்திலர் எனினும், அடியின் சின்மையானும் பன்மையானும், ஓராற்றால் பொருளாட்சி வேறுபடக் காண்கின்றோம். அடி பலவாய அகநானூற்றில் உரிப்பொருளைக் காட்டிலும் முதற்பொருள் கருப்பொருள்களான இயற்கை பலபடப் புனையப்பட்டுள்ளது. இப்புனைவுகள் நிறந்தீட்டவல்ல ஓவிய வனப்பின. கருத்தை உளங்கொளச் சொல்லுமளவில் அமையாது, கண் கொளவும் சொல்லவிரும்பும் புலவன் தக்க புறத்தோற்றம் அமைப்பான். அப்போது அடிகள் பலவாய்விடும். பன்மலர் பூத்தாலன்ன காதலியைப் பிரிந்த காதலன் பொருளீட்டச் செல்லும் வழி, கொலைஞரும் கள்வரும் விலங்கும் வெப்பமும் நீங்காத நீரில் வெஞ்சுரம் என்று சுட்டச் சில்லடிகள் போதுமா? நினைத்த வினையை இடையூறு கடந்து இனிது முடித்த தலைவன் தலைவியின் நினைவோடு வரும் வழி, நீர் நிரம்பி நிலமறையப் பூப்பொதுளிப் பக்கமெல்லாம் பசுமை இலங்கக் கலைமான் பிணைமானோடு துள்ளித் திரியும் முல்லைக்காடு என்று சொல்ல, அடிகள் பல வேண்டுமன்றோ! தலைவனுடன் போகிய

மகளுக்கு இரங்கும் தாய், சிறுமியின் மேனிமென்மை, மனத்திண்மை, தான் அவளை வளர்த்த ஓவியம், தன்னிடம் ஒரு சொற் சொல்லாது சென்ற அன்பின்மை, சுரநெறியின் அச்சமும் எல்லாம் ஒருங்குதோன்றப் புலம்புங்கால், பாட்டு நெடும் பாட்டாகிவிடும். ஓர் ஊரை ஒரு நாட்டை ஓர் அரசனைப் பாட்டுப்படுத்த முனைந்த புலவனுக்குத் தொடர்பான சில வரலாற்றுக் கூறுகள் கண்முன் நிற்கின்றன. அவற்றைச் சுருங்கச் சொல்லுதற்கும் அடிகள் பலவேண்டும். அரசியல் வாழ்க்கை வாழ்ந்த பரணர் நக்கீரர் கல்லாடர் மாமூலர்தம் அகநானூற்றுச் செய்யுட்களின் நெடுமைக்கு இதுவே காரணமாம். மகட்போக்கிய தாயிரங்கல், வினைமுற்றி மீளுந் தலைமகன் தேர்ப்பாகற்குக் கூறல், இடைசுரத்துத் தலைமகன் தன் நெஞ்சினைக் கழறல் என்பனபோன்ற சில துறைகளும், முதல் கரு உரி என்ற முப்பொருளின் முழுக்காட்சியும், போர்க்களச் செய்தியும், பிற அகத்தொகைகளினும் அகநானூற்றிற்றான் பொலிந்து தோன்றுவ. இப் பொருள் மாட்சி அடி நீட்சியால் ஏற்பட்டது. அகநானூற்றுக்கு நெடுந்தொகை என்ற மறுபெயர் இக் குறிப்பை உட்கொண்டதாகும்.

9-12 அடி யெல்லைப்பட்ட நற்றிணைத் தொகையில், முதல் கரு உரி என்ற மூன்றும் பெரும்பாலும் தன்னொத்து விளங்குதலைக் காண்கிறோம். வரலாற்றுச் செய்திகள் நீண்டு போகாமல் அடக்கமாகக் குறிக்கப்பட்டுள. நெடுந்தொகைபோல விரிவும் குறுந்தொகைபோலச் சுருக்கமும் இன்றி, இடைநிகர்த்தாய் அளவுபட அமைதலின், 'நல்' என்ற அடை இத்தொகைக்கு வழங்கப்பட்டது. 4-8 வரையான குறுந்தொகைச் சிற்றடிகள் முதலும் கருவும் நன்கு புனையப் பெரிதும் இடந்தரா. உரியோ அகப்பாட்டில் கட்டாயம் இடம் பெறவேண்டும் பொருள் ஆதலின் இத் தொகைக்கண் உரிப்பொருள்கள் முதலாட்சி பெறலாயின. இயற்கைப் பொருள் அழகு காட்டுவது. அவ்வழகினை இலக்கியத்திற்காண இயற்கைபற்றிய அறிவு வேண்டும். காதல் என்னும் உரிப்பொருளோ இயல்பிலே இன்பம் ஊட்டும் மெலிய உணர்ச்சியாதலின், அத் தொகைகளுள் உரிப்பொருள் சிறந்த குறுந்தொகையை முதற்கண் பலர் கற்பாராயினர். பலர் கற்கும் நூலாகத் திகழ்ந்தமையின், உரையாசிரியர்களும் இத்தொகை யிலிருந்தே பெரிதும் மேற்கோள் காட்டுவாராயினர். சுருக்கம் எளிமை இனிமையோடு இருந்தமையால், அகப்பாடல்களைத் தொகுக்க முயன்ற சங்கச் சான்றோர், முதன்முதல் குறுந்தொகை யைத் தொகுத்துத் தொகைப் பயிற்சி பெற்றனர்.

அகம் என்னும் ஒரு பொருள் நுதலிய, ஆசிரியம் என்னும் ஒரு பாவால் ஆகிய 1200 பாடல்களையும் ஒரு தொகையாக்க வேண்டும்; அங்ஙனம் ஆக்காது, அடிக்கணக்கை அளவாகக் கொண்ட காரணம் என்ன? எட்டடி வரையுள்ள பாடல்களில் உரிப்பொருள் சிறந்தும்,

பன்னிரண்டடி வரையுள்ள பாடல்களில் முதல் கரு உரி ஒத்தும், முப்பத்தொன்றடி வரையுள்ள பாடல்களில் முதல் கரு உரி விரிந்தும் நிற்றலை மேலே விளக்கினோம். ஆதலின் முவ்வகைப் பொருளாட்சியே முவ்வகை அடிக்கணக்கிற்கு ஏதுவாயிற்று என்பது என் துணிபு. இத்துணிபிற்கு எடுத்துக் காட்டாக மூன்று தொகையிலிருந்தும் கபிலர் பாடல்களையே தருதும்:-

குறுந்தொகை – 153

குன்றக் கூகை குழறினும் முன்றிற்
பலவின் இருஞ்சினைக் கீலைபாய்ந் துகளினும்
அஞ்சுமன் அளித்தென் னெஞ்சம் இனியே
ஆரிருட் கங்குல் அவர்வரிற்
சாரல் நீளிடைச் செலவா னாதே.

நற்றிணை – 353

ஆளில் பெண்டிர் தாளிற் செய்த
நுணங்குநுண் பனுவல் போலக் கணங்கொள
ஆடுமழை தவழுங் கோடுயர் நெடுவரை
முடமுதிர் பலவின் குடமருள் பெரும்பழம்
கல்லுழு குறவர் காதல் மடமகள்
கருவிரல் மந்திக்கு வருவிருந் தயரும்
வான்றோய் வெற்ப சான்றோ யல்லையெங்
காமங் கனிவ தாயினும் யாமத்து
இரும்புலி தொலைத்த பெருங்கை யானை
வெஞ்சின வுருமின் உரறும்
அஞ்சுவரு சிறுநெறி வருத லானே.

அகநானூறு – 80

ஆடமைக் குயின்ற அவிர்துளை மருங்கிற்
கோடை யவ்வளி குழலிசை யாகப்
பாடின் னருவிப் பனிநீ ரின்னிசை
தோடமை முழவின் துதைகுர லாகக்
கணக்கலை யிகுக்குங் கடுங்குரற் றூம்பொடு
மலைப்பூஞ் சாரல் வண்டு யாழாக
இன்பல் லிமிழிசை கேட்டுக் கலிசிறந்து
மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழைவள ரடுக்கத் தியலி யாடுமயில்
விழவுக்கள விறலியிற் றோன்று நாடன்

உருவ வல்விற் பற்றி யம்புதெரிந்து
செருச்செய் யானை சென்னெறி வினாஅய்ப்
புலர்குர லேனற் புழையுடை யொருசிறை
மலர்தார் மார்பன் நின்றோர் கண்டோர்
பலர்தில் வாழி தோழி யவருள்
ஆரிருட் கங்கு லணையொடு பொருந்தி
ஓர்யா னாகுவ தெவன்கொல்
18. *நீர்வார் கண்ணொடு நெகிழ்தோ ளேனே.*

திருக்குறட் காமத்துப்பால் அகப் பொருளைச் சங்கத் தொகை நூல்களினும், நனி சுருங்கிய இரண்டடிகளால் கூறும். இச் சிறு வெள் ளடிகள் முதற்பொருள் கருப்பொருள்களைச் சிறிது புனையவும் இடந்தாரா என்பது வெளிப்படை. ஆகலின் திருவள்ளுவர் உரிப்பொருளே பொருளாகக் காமத்துப்பாலை யாத்துள்ளார்.

திருக்குறள் – காமத்துப்பால்

கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல. *(1100)*
கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள. *(1101)*

அகப்பாட்டின் அடி நீள நீள இயற்கைப் புனைவுக்கு இடமுண்டு என்றும், அடி சுருங்கின் அப்புனைவு சுருங்கிப் போம் என்றும் அடியாராய்ச்சியால் நாம் தெளிகின்றோம்.

ஐங்குறு நூற்றுக்கும் கலித்தொகைக்கும் தனித்தனி ஐந்து புலவோர் ஆசிரியர் ஆவர். இவ்விரு நூலும் குறிஞ்சித் திணை முல்லைத்திணை ம ருதத்திணை நெய்தற்றிணை பாலைத்திணை என ஐவகை உட்பிரிவுகள் திணையடிப்படையில் கொண்டவை. உருத்திரசன்மனார் தம் நுண்மதியால் அகநானூற்றுக்கும் ஐவகைத் திணைப்பாங்கு வகுத்துத் தந்துள்ளார். ஐங்குறு நூற்றுப் பாக்கள் 3-6அடி யெல்லையன. இவ்வடிச் சிறுமையால், இந்நூலும் குறுந்தொகை போல உரிப்பொருளையே சிறக்கப் பாடுகின்றதெனினும், குறுந்தொகைச் சுவைக்கு ஐங்குறுநூறு ஈடாகாது. குறுந்தொகை பலர் யாத்த பாடலின் தொகுதி. வேறு வேறு காதற்றுறைகளின் மேல், இருநூற்றுக்கு மேற்பட்ட புலவர்களின் அறிவுக்கூறு ஆங்குச் சுவைசெய்யக் காண்கின்றோம். அகநானூறு நற்றிணை குறுந்தொகை ஐங்குறுநூறு கலித்தொகை என்ற அகத்தொகை ஐந்தினுள்ளும், ஐங்குறு நூற்றுக்குத்தான் தக்கார் ஒருவரால் துறைகளும் நுண்மைகளும் நயம்படக் காட்டப்பட்டுள. அகவிலக்கியத்தை நாட வேண்டும் நெறி யாது?

எந்நெறி நாடினால் பாடியோன் கருத்துச் சிறக்கும்? என்பதுபற்றிய அறிவை, இத் துறை நயங்கள் நமக்குக் கற்பிக்க வல்லன. "இந்நூல் போலவே நடையாலும் பொருள் நுணுக்கத்தாலும் இவ்வுரையும் மிகப் பாராட்டற் பாலது. இவ்வுரை இல்லையாயின், இந்நூற்பாக்களிலுள்ள உள்ளுறையுவமம் முதலியனவும் மற்ற அருமை பெருமைகளும் நன்கு புலப்படா... பழைய உரையில்லாத செய்யுட்களுக்கு உள்ளுறையுவமம் முதலியவற்றைப் புலப்படுத்தி ஏதோ ஒரு வகையாக உரையெழுதி இதனுடன் பதிப்பிக்கலாம் என்ற விருப்பம் சில சமயம் எனக்கு நிகழ்ந்ததுண்டு; நிகழ்ந்தும் இந்நூலையும் இவ்வுரையையும் உற்றுநோக்க அவ்விருப்பம் அடியோடே மாறிவிட்டது" என்று பதிப்பாசிரியர் டாக்டர் உ.வே.சா. மொழிகுவது இவ்வுரைக் குறிப்பின் தனித்தன்மைக்கு ஒரு பாராட்டு.

பிற நான்கு அகத்தொகையிலும் காணப்பெறாத் தனிக் கூறு கலித்தொகையில் காணத் தகும். அகத்திணையாவது கைக்கிளை ஐந்திணை பெருந்திணை என எழுபாற் படுவது. ஐந்திணைக்குரிய பாடல்களே ஏனைத்தொகையில் உள. ஏழு திணைக்குரிய பாடல்களையும் கொண்டிலங்குவது கலித்தொகையே. கைக்கிளை பெருந்திணைச் செய்யுட்கள் சங்க விலக்கியத்து மிகச்சில. அச்சில தாமும், கலித்தொகை ஒன்றிற்றான் காணப்படுவ. அகத்திணை மாந்தர்களின் இனிய இன்னா உணர்ச்சிகளையும் உரையாடல் களையும் உள்ளங்கிளருமாறு இலக்கியப்படுத்தற்குக் கலிப்பாவின் துள்ளொலி மிக இசைவதாகும். ஏறு தழுவி வரைந்து கொள்ளுதல் என்னும் முல்லைத் துறைப் பாக்கள் கலித்தொகையிலன்றிப் பிற தொகை நூல்களில் காணுமாறில்லை. வெறியாட்டு, மகட்போக்கிய தாயிரங்கல் என்ற துறைப்பாக்களோ கலித்தொகையில் இல்லை.

பரிபாடல் இருபத்திரண்டு பாடல் கொண்ட தொகை நூல். இவை தெய்வம், காதல், நீர்விளையாட்டு என்றின்ன சில பொருள் பற்றியவை. இவற்றுள் 6, 7, 10, 11, 12, 14, 16, 20 என்ற எண்ணுடைய எட்டுமே அகப் பரிபாடல்கள். இவை 32-140 அடியெல்லை கொண்டவை. அகநானூற்றுப் பாடல் 31 அடியோடு முடிவது என்பது ஈண்டு நினையத்தகும். வைகைப் புதுப்பெருக்கையும், நீரோட்டத்தையும், வகை வகையான காதலர்தம் ஊடல் விளையாட்டையும், நீளத் தொடுத்தற்குப் பரிபாடலின் அடி நீட்சி வேண்டற்பாலது. மருதத்திணை பெரும்பாலான அகப் பரிபாடல்களின் உரிப்பொருளாம்.

பத்துப்பாட்டு நூலில், அகஞ் சார்ந்தவை நான்கே. முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை என்ற இந்நான்கும் 101-301 அடிக்கு உட்பட்டவை. குறிஞ்சிப்பாட்டு நிரல்பட இனிதாகக் களவொழுக்கத்தை விரித்துச்

சொல்லும். வேற்றுப்பொருள் இதனகத்துச் சிறிதும் விரவவில்லை. பிற மூன்று பாட்டுக்களிலும் உரிப்பொருட் பகுதி குறைவாக வருதலின், அவ்வாசிரியர்கள் அகப்பொருளைத் தலைக்கீடாக வைத்துப் புறப்பொருளைச் சிறப்பித்தனர் என்று கொள்ளலாம். நெடுநல்வாடை அகப்பாட்டன்று என்பது நச்சினார்க்கினியர் முடிபு. இம்முடிபே இன்றுவரை புலவர்தம் வழக்காறாயிற்று. இது தவறுடைத்து என்றும், நெடுநல்வாடை மாசில் அகப்பாட்டே என்றும் ஆசிரியர் நக்கீரரை ஆராய்வுழி நிறுவியுள்ளேன்.

III

பேராசிரியர் சீனிவாச அய்யங்கார் 'தமிழ் வரலாறு, என்னும் ஆங்கிலப் பெருநூலில் அகப்பாடல்களை வரலாற்று நோக்கம்பட ஆராய்ந்தார். பதிப்பின் வேந்து டாக்டர் உ.வே. சாமிநாதையர் தம் குறுந்தொகைப் பதிப்பில், அகப்பொருள் குறித்து ஓர் இருபது பக்கம் கொண்ட நூலாராய்ச்சி காணப்படும். இவ்வாராய்ச்சி அகவிலக்கிய மெல்லாம் தழுவிய நிறையுடையதன்று; குறுந்தொகையளவில் அமைந்த செறிவுடையது; எனினும், உ.வே.சா.வின் சங்கநூற்பதிப்பும் பிற நூற்பதிப்பும் எம்போலும் ஆய்வியல் மாணாக்கர்க்கு இத்துணைதான் பயன் சுரப்பன என்று அளவிட்டுரைக்க முடியுமா? பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளையின் 'பழந்தமிழர் நாகரிகம்', புலவர் இளவழகனாரின் 'பண்டைத் தமிழர் இன்பியல் வாழ்க்கை' என்ற நூல்கள் அகத்திணை பற்றியன எனினும், இடைக்காலத்திய திருக்கோவைப் பாடல்களை விளக்கிப்போம் அளவில் அமைந்தன. டாக்டர் மு. வரதராசனார் நெடுந்தொகை விருந்து குறுந்தொகை விருந்து என்பது போன்ற தலைப்பு நிலையில் ஒழுங்குற எழுதிய நூல்கள் பல. இவையும் ஒவ்வொரு தொகைநூல் அளவில் நின்ற ஆராய்ச்சி என்பது பெயர் தன்னானே விளங்கும். கலித்தொகைச் சொற்பொழிவுகள், அகநானூற்றுச் சொற்பொழிவுகள், ஐங்குறு நூற்றுச் சொற்பொழிவுகள் என்ற வகையில் பல்லோர் ஆற்றிய பல பொழிவுகள் தொகுப்பாய் நூல்வடிவம் பெற்றுள. இவ்வெல்லாம் சங்கப் பனுவல்களை எளிமை செய்து மக்களிடைப் பரப்பும் தமிழ் வளர்ச்சி நோக்கத்தில் தோன்றிய பொது வெளியீடுகள் ஆராய்ச்சியொளி ஆங்காங்கு மின்னும். எல்லா அகத் தொகைகளுக்கும் இப்பொழிவுகள் உளவேனும், திணை துறை புலவர் என்ற எவ்வகையான் நோக்கினும், அவை சால்புடையன அல்ல. ஒவ்வொரு தொகையையும் பிரிவு பலவாக்கிக் கொண்டு பேசினோர் மிகப் பலராவர் என்பது நினைவுகூரத் தகும். அகத்திணை மேலவாய் இதுகாறும் முன்னையோர் எழுதியவை ஆராய்ச்சி முற்றா எனினும், அவற்றிடைக்கண்ட ஒளிச் சிதறல்கள் சில; என் அறிவினைக் கிளறிய கருத்துக் கருவிகள் சில; வழுவற்க

என்று துணிவோட்டம் தந்த வழுக்கிடங்கள் சில. இவற்றை அடிக்குறிப்பிற் காணலாம். ஆராய்ச்சி முன்னோடிகளுக்குப் பின்னோடிகள் எவ்வகைப் புதுமைக்கும் கடப்பாடுடையர். எனைத்தானும் அகத்திணையை ஆராய்ந்தார்க்கெல்லாம் நன்றியன்.

உயர்ந்த பதிப்புக்களால் தமிழ்த் தொண்டு ஆற்றிவரும் சைவ சித்தாந்த மகா சமாசம் எட்டுத்தொகை பத்துப் பாட்டுக்களைத் 'சங்க இலக்கியம்' என்னும் பெயரால், ஒரு பெருந்தொகையாக்கி 1940இல் வெளியிட்ட அடக்க மூலப் பதிப்பு ஆராய்ச்சிப் பெருஞ்சாலைக்கு ஒரு கைகாட்டி. இப்பதிப்பகத்துச் சங்கப் புலவர்கள் அகரவரிசையாக அமர்ந்துள்ளனர்; பலதொகையினும் புக்குக்கிடந்த ஒருவர்தம் பாடல்கள் அவர் பெயரின்கீழ் ஒருங்கு சேர்ந்துள்ளன. பழம் புலவரைப் பற்றிய திறனாய்வுக்கு இப்பதிப்பு இணையற்ற வழித் துணை. அகத்திணையின் முழுத் திறங்காண இதுபோன்ற பல்வகைப் பதிப்புக்கள் வேண்டும் என ஆய்வுக்கிடையே எனக்குப்பட்டது. குறிஞ்சித்திணை முல்லைத்திணை என்றாங்கு, திணைத் தலைப்புக்கொண்டு பாடல் தொகுத்த திணைப்பதிப்புக்கள் என்ன, துறை நோக்கம்பட ஒரு திணைக்கு அமைந்த பாக்களையெல்லாம் ஓரிடப்படுத்திய துறைப் பதிப்புக்கள் என்ன, தலைவன் தலைவி தோழி எனக் கூற்றுக்கள் அடிப்படையில் ஒருவர்க்கு உரிய செய்யுளெல்லாம் ஒருங்கு தொக்க கிளவிப் பதிப்புக்கள் என்ன ஆக்கப் பதிப்பீடுகள் வரின், பதிப்பேருழவர்கள் பல்குவர்; ஆராய்ச்சிவளம் பெருகும்.

IV

ஒரு நூலின் செல்நெறியறிந்து கற்குங்காலை கற்பார்க்கு ஆசிரியன் கண்ட புதிய உண்மைகளின் வன்மையும் வரம்பிகவாத் திண்மையும் விளங்கித் தோன்றும். சிலவற்றை விரித்துச் சொல்லுவானேன், சிலவற்றைச் சுருக்கிச் சொல்லுவானேன், சிலவற்றைச் சொல்லாதே விடுப்பானேன் என்ற கூறுகள் தெளிவாகும். நாட்பட்ட கருத்தாயிற்றே, பலர் கட்டிய கருத்துக் கெல்லாம் அடித்தளமாயிற்றே என்று மலையாது அடிதொட்டு ஆராய்ந்த ஆழம் புலப்படும். பின் வரும் ஆய்நெறிகள் என் நூலைக் கற்கும் அன்பர்களின் நினைவுக்குரியவை.

1. சங்க இலக்கியத்து அகத்திணை பற்றிய 1862 பாடல்கள் அனைத்தையும் ஒரு சேர வைத்து ஆராய்ச்சிக்கு மேற்கொண்டதூஉம் இதுவே முதன்முறை. அவ்வனைத்தும் ஒருவரால் ஆராயப்படுவதூஉம் இதுவே முதன்முறை. ஆதலின் எனது ஆராய்ச்சி பரப்பால் முழு நோக்கும் பார்வையால் ஒருநோக்கும் செலுத்தப்பெற்றது.

2. சங்க இலக்கியத்தில் களவுப் பாடல் இவ்வளவு, கற்புப் பாடல் இவ்வளவு, ஒருதுறைக்கு அமைந்த பாடல் இவ்வளவு என்றும், ஒரு புலவன் இயற்றிய பாடல்களுள் இவையிவை இவ்வளவு என்றும் எண்ணிச் செய்த ஆராய்ச்சி இது. இவ்வகைக் கணக்கு செவ்விய சில முடிபிற்கு வேண்டப்படும்.

3. தமிழ்மொழிக்கண் தோன்றிய அகப்பாடல்களில் இன்று தொன்மையானவை சங்க அகப் பாடல்களே. இவை முதன்முதல் எழுந்தவையல்ல. எனினும், அகத்திணையின் பொருட்பாங்கினைக் காட்டுக்களால் விளங்க அறிந்து கொள்வதற்கு இவையல்லது வேறு இலக்கியச் சார்பில்லை. அகவிலக்கணத்தில் ஒரு தெளிவு பிறக்க, அகவிலக்கியத்தை ஆராயவேண்டும். அகவிலக்கியத்தில் ஒரு தெளிவு தோன்ற அகவிலக்கணத்தை நாட வேண்டும். இங்ஙன் வித்தும் மரமும், மரமும் வித்தும் போல, இலக்கண இலக்கியங்களின் உறவிருத்தலின், இரண்டும் ஒரு நிலையில் வைத்து ஆராயப்பட்டாலல்லது அகத் திணைத் தெளிவு முற்றத் தோன்றாதாகும். ஆதலின், அகத்திணையின் பாகுபாடு, அகத்திணையின் தோற்றம், அகத்திணையின் குறிக்கோள் என முகற்கண் மூன்றியல் வகுத்துக் கொண்டேன். வகுத்து, ஐயங் களைந்து திரிபு அகற்றி, வழிவந்த பிழைத்தடங்களைப் புரட்டி, என் அறிவிற் பட்டாங்கு, அக்த்திணை நுண்மைகளைப் பன்மாணும் புலப்படுத்த முயன்றுள்ளேன். சங்க அகப்பாக்கள் பின்னெழுந்தவையேனும், போதிய சான்றளிப்பன என்பது ஆராய்ச்சிக்கிடை விளங்கலாயிற்று.

4. அகத்திணையாராய்ச்சி இலக்கியம் இலக்கணம் என்ற இரு நெறிப்படும். மேற்கூட்டியாங்கு இலக்கிய நெறிப்பட்ட ஆராய்ச்சிக்குச் சங்கப்பாடல்களே தொன்மை சான்றவை. இலக்கண நெறிப்பட்ட ஆய்வுக்குப் பழம் பெருந் தொல்காப்பியம் உண்டு. இந்நூல்தானும் தமிழ் மொழியில் தோன்றிய முதல் இலக்கண நூலன்று என்பதும், இதுவரை கிடைத்துள்ள தமிழ் நூற்கெல்லாம் காலத்தால் மூத்த முதன்மையுடையது என்பதும் நினைவு கொள்ளவேண்டும். தொல்காப்பியம் என் ஆய்வுக்குத் தனிப்பொருளன்றேனும் இன்றியமையாத பற்றுக் கோடாதலின், வேண்டுழி வேண்டும் நூற்பாக்கள் ஆளப்பட்டுள.

5. தொல்காப்பியத்தின் உரையாளர்கள் தன் உரைக்கிடையே சுட்டிப் போந்த அகத்திணைக் குறிப்புக்கள் சிலபல. அவற்றின் திறம் நாடிப் பொருந்துவன கொண்டுள்ளேன்.

6. அகத்திணைக்குப் பாடுபொருள் காதலாதலின், காதல் உள்ளத்தோடு இயைந்ததாதலின், இந்நூலாராய்ச்சி பெரும்பான்மை உளவியல் பிடித்துச் செல்வதாகும் என்று குறிக்கொள்க. நெஞ்சக்களத்து விளையாடுங் காதலை ஆய் பொருளாகக் கொண்டவர்க்குப் பாலுளக் கல்வி - ஆண் பெண் காமம் பற்றிய பாலறிவு - தெரியவேண்டும். மேலைநாட்டுப் பால்நூற்களிலிருந்து சிற்சில மேற்கோள்களை இந்நூலிடைக் காணலாம். பிறநாட்டு அறிஞர்கள் ஆராய்ச்சி மதுகையாற் கண்ட பாவியல் மாண்பெல்லாம் தமிழ் அகவிலக்கியத்துப் பண்டும் உண்டு எனக் காட்ட முனைதல் (ஒருவர்க்குக் குற்றமின்றேனும்) என் உட்கிடையன்று. அகத்திணைக்கு அடித்தளமாம் காதற்கூறுகள் இற்றைய பாவியலறிஞர்க்கும் உடன் பாடாவனவே என்று விளக்குமுகத்தால் அம் மேற்கோள்கள் வேண்டப்பட்டன.

7. என் ஆராய்ச்சிக்குத்தலையாய நெறி உளவியல் மேற்றாகலின், அகப்பாட்டின் இலக்கிய வனப்பை ஈண்டுப் பெரிதும் கூறிற்றிலன். அகப்புலவர்களை ஆராயுங்காலும் காதல் மாந்தரின் பாலுணர்ச்சிகளைப் புலப்படுத்தும் ஆற்றல் அன்னோர் எவ்வளவு உடையவர் என்பது குறித்தே விளக்கம் செய்தேன்.

8. அகத்திணையின் அடிக்கூறுகளையும் அகச்சான்றோரின் பால்பாடுந் திறத்தையும் தெளிவித்தற்கு வேண்டுந் துணையே இயற்கை யாராய்ச்சி இந்நூலகத்து வருவதாகும்.

V

இனி நூலினுட் புகுந்து, அகத்திணையின் தொகைவகை முறை தோற்றங்களையும், பிறர் கருத்தின் தகவு தகாமைகளையும், புலமையின் ஆழ அகலங்களையும் சீர்பெற ஓர்ந்து காண்பதற்கு முன்னர், வரும் இயல்கள்தோறும் அமைந்துகிடக்கும் பொருட் பொதிவைக் குறிப்பாக இவண் எழுதுவன்.

2. அகத்திணைப் பாகுபாடு என்னும் இயலில், அகத்திணையின் முழு வனப்புத் தோன்றக் காணலாம். இத்திணை எழுவகைப்படும். இவ்வகைகளுக்கு நிலப்பிரிவு காரணமன்று; காதல் மாந்தரின் மனப்பாங்கு - பாலொழுக்கமே - காரணமாம். அகத்திணையும் ஐந்திணையும் ஒன்றல்ல, ஒரு பொருட்கிளவிகள் அல்ல; ஒன்றெனக் கருதிய முதற்பிழை பல பிழைகட்குத் தாயாயிற்று. அகத்திணையின் உயிர்நாடி காதலோரின் உள்ளப் புணர்ச்சியல்லது பிறிதில்லை. ஐந்திணைக்குரிய களவு கற்பு நெறிகளின் பொதுவியல்பு, பல்வேறு துறைகளுக்குக் காணப்படும் பாடற்றொகை, ஒவ்வோர் துறையைச் சிறந்து பாடிய புலவோர்கள், கைக்கிளை பெருந்

திணைக்கு வகுத்த துறைச் சின்மை பற்றிய கருத்தோட்டங்களை அறிவீர். தலைவனுக்கு ஒரு தோழனும் தலைவிக்கு ஒரு தோழியும் ஐந்திணையில் வரும் காரணமும், வெறியாட்டு, அலர், அறத்தொடு நிற்றல் துறைகளின் செந்நலமும் விளங்கும். தலைவியின் உடன் போக்குக்கு அவள் தன் தாய்முன் நிற்க அஞ்சும் அச்சமே காரணமாம். உணர்ச்சியுடையகளவுக் கைக்கோள் ஒப்ப உணர்வுடைய கற்புக் கைக்கோளும் இலக்கியத்துக்கு ஏற்ற பொருளாகப் புலவரால் போற்றப்பட்டது. தலைவனது வண்டுத்தன்மையை சான்றோர் உடன்பட்டிலர் என்பது வாயில் மறுத்தல் வாயில் நேர்தல் என்ற துறைகள் காட்டும். இன்ன பொதுப்பட்ட ஆய்வுகளை இவ்விரண்டாவது இயலிற் கண்டுகொள்க.

3. அகத்திணைத் தோற்றம் என்னும் இயற்கண், அகத்திணை தோன்றிக் கூர்ந்த வரலாற்றைச் சமூக, நில, உளவியல்கள் பற்றிய அடிப்படையில் காட்டுவன. சங்க இலக்கியம் அகத்திணைக்குத் தொடக்க இலக்கியம் அன்றேனும், தோற்றப் பழமையை நோக்கத் தொன்மை பிந்தியதேனும், யான் மேற் கொண்ட அகவொழுக்க ஆராய்ச்சிக்கு வேண்டிய சான்றாட்டம் நல்கவல்லது. பழந் தமிழினத்தின் எண்ணம் செயலெல்லாம் வாழும் உலகியல் நோக்கின. அகத்திணைக்கு பாடுபொருளான பால்வேட்கை தமிழ் மன்பதையின் வாழ்வுக் கோளொடு முற்றும் இயைந்தது. அகவிலக்கிய மாளிகைக்கு வேண்டும் கட்டுமானப் பொருள்கள் தமிழ்ச் சமுதாயத்திலிருந்தே கொள்ளப்பட்டவை. களவுமுறை நாடெங்கும் காணக்கிடந்த ஓரொழுக்கமாகும். அதற்குத் தமிழ்ச் சமுதாயம் ஊட்டமொழி ஒப்புதல் அளித்தது. ஒவ்வொரு கற்பும் களவின் வழிப்பட்டதுவே என்றும், களவின் வழிவந்த கற்பேதான் சிறப்பினது என்றும் பலர் கொண்டிருக்கும் கருத்து தமிழல் நெறி என்க. களவின்வழி வராது பெற்றோர் தாமே முடித்த மரபுத் திருமணங்கள் சமுதாயத்தாலும் சான்றோராலும் மேலாகவே மதிக்கப்பெற்றன. பெண்ணொருத்தி குமரிமை கழிந்து மனைவிமை எய்தினாள் என்பதனைக் காட்டும் செய்குறியே காரணமாம். சிலம்பு கழித்தலும் மலரணிதலும் பண்டு நடைமுறையில் இருந்த காரணங்களாவன.

பழந்தமிழோர் நிலத்திணைக் காட்சியும் அறிவும் மிக்கவர். அன்னவர் நிலனோக்கும் உலக வாழ்வையே கண்ணியது. அகத்திணைத் தோற்றத்தில் சமய சாதிகளுக்கு என்னானும் இடமில்லை என்பது தெளியத்தகும். அகத்திணை யிலக்கியத்துத் தலைவன் தலைவியாகப் பாலைத்திணை மக்கள் பாடப் பெறவில்லை. சங்க காலத் தமிழகத்துக்குப் பிறநாடுகளோடு கடல் வாணிகம் நன்கு இருந்தும், இவ்வாணிகங் கருதி ஆண்மக்கள் தலைவியரைப் பிரிந்திருந்தும், கடற்பிரிவை ஒரு சிறந்த பிரிவு

வகையாகக் கொண்டு பாலைத்திணையில் புலவர்கள் பாடத் தவறியது ஏனோ? அற்றைத் தமிழினர் அஃறிணை உயிர்களின் இன்பச் செய்கைகளை உயர்திணைக் காதற் கண்ணோடு பார்த்தனர். அன்னோர் காதலெண்ணத்தின் ஓர் இழையாகவே இயற்கை ஓடிக்கிடந்தது. தமிழினத்தின் நெஞ்சியல் அல்லது உள்ளியல் அகத்திணைக்குக் கருவை வழங்கிற்று எனவும், அக்கரு பருத்துப் பெருகிப் பரந்து வளர்வதற்கு வேண்டும் ஊட்டங்களைத் தமிழ்ச் சமுதாயமும் தமிழ்நிலமும் தமிழ்நிலத்துப் பருவ காலமும் உதவின எனவும் நாம் அறிவோமாக. அகத்திணையை ஈன்று புறந்தந்த தமிழ்த் தன்மையை இம் மூன்றாவது இயல்காட்டும்.

4. அகத்திணைக் குறிக்கோள் என்னும் இயலகத்து, கைக்கிளை பெருந்திணை ஐந்திணைப் பகுப்புக்களின் அழகிய நோக்கங்களை உணர்வீர். கைக்கிளையும் பெருந்திணையும் அகத்திணையாக எண்ணப்படுதலின், இவை ஐந்திணையோடு ஒத்த தரத்தனவே. ஏழு பாலொழுக்கங்களையும் அகம் என்ற பொதுப் பெயரால் எண்ணித் தொகுத்ததற்கு ஒரு பொதுத் தன்மை உண்டு. தடுமாறு காட்சியால் ஆணிடை எழுந்த பாலுணர்ச்சியின் நிலையா மனப்பதத்தைப் புலப்படுத்துவது கைக்கிளையின் உட்கிடை. இதனால் கண்டானுக்கும் காணப்பட்டாளுக்கும் யாதொரு மாசும் பழியும் இல. கைக்கிளையாவது அகத்திணையின் முதிராக் குறுங்கரு என்றும், ஓரேருழவன் போல ஒரே துறைகொண்டு ஒரு திணையாயிற்று என்றும் அறிய வேண்டும். வலிந்து பற்றிய புணர்ச்சியே பெருந்திணை என்று இதுவரை கூறிவரும் கருத்து அடிப்பிழை. தூய காதலர்களிடை அளவுகடந்து போய சில பால்வினைகளைப் புலப்படுத்துவதே பெருந்திணையின் உட்கோள். உள்ளம் புணர்ந்த காதலர்களும் உடல்புணரும் காமக்கூட்டங்களை நீட்டியாது மதித்தொழுக வேண்டும். பெருந்திணையாவது அகத்திணையின் முதிர்ந்து வீழ்கரு என்றும், இத்திணைக்கு உரிய துறை நான்கும் தனிநிலை யுடையனவல்ல, சில ஐந்திணைத் துறைகளின் சார்புடையனவே என்றும் நினையல் தகும்.

ஐந்திணையே அகத்திணையின் இயல்பான வளர்கரு. இத்திணையில் வரும் பலவகைத் துறைகள் எளிய மெல்லிய இனிய சால்பின. மக்களது இயல்பும் திரிபுமாகிய பலப்பல பாலோட்டங்களையும் பாலுறவுகளையும் முழுக்கச் சொல்லுவதாக ஐந்திணை தன்மேலிட்டுக் கொள்ளவில்லை; மேலிட்டுக் கொண்ட காதற் செய்திகள் கூட ஒரு நிலையைக் கடந்து செல்லுவதற்கு இடங் கொடுக்கவில்லை. காமக்கிளர்ச்சியை உள்ளத்தோடு உடம்பிடை உணரவல்ல பருவ மக்களின் தூய மனக்கூறு மெய்க்கூறுகளைப் புலனாக்குவதே இத் திணையின் நெறி. ஐந்திணை ஒரு தொடர்கதை அன்று; நெஞ்சம் ஒன்றிய காதலர் பற்பலர் வாழ்க்கைக்கண் வேறு

வேறு காலத்து வெவ்வேறு சூழ்நிலையில் ஆங்காங்கு நிகழ்ந்து வரும் தனி நிகழ்ச்சிகளின் ஒரு கோவை; அவ்வளவே. ஐந்திணைக்கண் தலைவனது பரத்தமை கூறல் பொருந்துமா? எனின், அது சமுதாயத்தின் பொதுமனப்பாங்கினைப் பொறுத்தது. காம வாழ்க்கையில் காதலன் காதலி தம் உள்ளப் புணர்வே அகத்திணையின் உயிர் நாடி. இந் நாடி கொண்டு காமக் காதலைப் புனைவதே அதன் குறிக்கோள்.

5. அகத்திணைப்பாட்டு என்னும் இயலுள் அகத்திணையில் பொருளுக்கு மட்டும் வரம்பன்று; பொருளைச் சொல்லும் முறைக்கும் வரம்பு உண்டு என்பது கற்கத்தகும். வரம்பிட்ட பாற்பொருளும் வடித்திட்ட இலக்கியமுறையும் இரண்டறக் கலந்த ஒருமைப்பண்பே அகம் எனப்படும். பொருட்கூற்றிலும் அதனைப் புலப்படுத்தும் நெறியிலோ சிறிது வழுவினும் போதும், ஒருபாட்டு யாப்பு வழுவாத போதும் அகப்பாட்டன்று என்று தள்ளப்படும். சுட்டிப் பெயர்கூறா இலக்கணமும் அதன் உட்கருத்தும், அகம் என்ற சொல்லின் வழக்குப் பொருளும், அச் சொல் இலக்கியப் பெயராய் ஆளுதற்கு உரிய தகையும், தமிழ்ச்சங்கம் இருந்த உண்மையும், அகத்திணைப் படைப்புக்கு அச்சங்கம் உதவிய அறிவுத் திறமும் இவ்வைந்தாம் இயலால் விளங்குவன.

6. அகத்திணைப் புலவர்கள் என்னும் இயலின்கண் முன்னை இயல்களிற் காட்டிய ஆராய்ச்சிக் கூறுகளின் விளக்கமாக, அகப் புலவோர்தம் செய்யுட்களை நுணுக்கங் காண முயல்வேன். பாடல் எண்ணளவுப்படி அகப்புலவர்களின் எண்ணளவுப்பட்டியலை முதற்கண் காணலாம். பொருளிலும் எவ்வளவோ அடக்குமுறை, அதனை ஆளவேண்டும் முறையிலும் எவ்வளவோ அடக்குமுறை கொண்ட அகத்திணையிலக்கியம் கவிஞர்களின் கற்பனைச்சிறகை ஒடிக்காதா? கவிதை ஆர்வத்தை ஒடுக்காதா? எண்ணப் புதுமையைக் கொல்லாதா? என்று ஐயப்படலாம். அகவிலக்கண விதிகளை மரபெனக் கொண்டு அறிவறிந்து அடங்கிப் பாடிய காரணத்தினாற்றான், சங்கப் புலவர் எல்லார்தம் பாடல்களும் காலங்கடந்த ஞாலமதிப்பைப் பெற்று வழிவழி வாழ்கின்றன. "காதற்பாட்டு மரபுக்கும் உரிமைக்கும் இடைநிலைப்பட்ட மெல்லிய ஒரு சம நிலையை வேண்டிநிற்கும். இச்சமநிலை ஒரு பாற் கோடினாலும் அப்பாட்டிற்கு நல்லுருத் தோன்றாது" என 'மணமும் அறங்களும்' என்ற நூலாசிரியர் பெத்தரண் ரசல் மொழிகுவர்[1]. இம்மொழிவு தமிழ் அகச் செய்யுட்களுக்கு நல்விளக்கமாம்.

1. Love poetry depends upon a certain delicate balance between convention and freedom and is not likely to exist in its best form where this balance is upset in either direction.

- Bertrand Russel: Marriage and Morals, p. 62

முந்நூற்றெழுபத்தெட்டு அகப்புலவோருள் முப்பதின்மர் தாம் இவ்வியலில் ஆராய்ச்சிப் பட்டனர். பலர் விலக்குண்டதற்கு என்ன முறையும் குறையும் கூறமுடியும்? முப்பதினோர் ஆராய்ச்சிக்கே இவ்வியல் பிற இயல்களினும் நீண்டுவிட்டது. இனியும் நீட்டிப்பது நூலுக்கு வனப்பளிக்காதன்றோ? அற்றைக் கல்விமுறை கற்றார்க் கெல்லாம் அறிவுச் சமநிலையும் புலமைச் செம்மையும் கொடுத்த பெற்றியதாக விளங்கிற்று. ஆதலின் சங்கப் புலவர்களை அவர் பாடிய பாடல் எண்ணிக்கையைக் கொண்டு அளத்தல் பொருந்தாது. அதனால் பத்தினும் குறையப் பாடியோர் சிலரும் என் ஆய்வுக்கு உரியோராயினர். பாடல் பல பாடினோர். ஆய்வுக்குப் பொருள் பெரிதும் உதவுவோர் ஆதலின், அப் பலரைக் கூறாது விடுகை சாலாது. இப் பலருள்ளும் சிலர் விடுபட்டனர். மாமூலனார் முப்பது அகம் பாடிய புலவர். வரலாற்றுச் செய்திகளைத் தொடுத்துச் சொல்லும் இயல்பால், இவர் தம் அகப்பாக்களும் தடைப்பட்டு இயலுவன. நக்கீரர், பரணர் பாடல்களை ஆயுங்காலை, இவ்வகைப்பட்ட போக்கு விரிவாகக் காட்டப்பட்டிருத்தலின், மாமூலனார் விட வேண்டியவராயினார். முப்பதின்மரே இவ் வாறாவது இயற்கண் ஆராயப்பட்டவர் எனினும், முன்னியல்களில் வேறு சில புலவர்களும் ஆராயப்பட்டமை நினைவுக்குரியது.

அகத்திணைக் கல்வி என்னும் முடிபியலில், பாலன்பு, பெண்ணுரிமை, பாற்கல்வி என்ற முப்பெருங் கருத்துக்கள் மீண்டும் வலியுறுத்தப்பெறும். அகந்தோய்ந்த மெய்யின்பத்தை மெய்யின் பமாகப் போற்றியது சங்ககாலம். காமம் என்னும் சொல் இழி காமத்தைக் குறித்தது பிற்கால வழக்கு, பொதுவான மெய்வேட் கையைக் குறிக்கவே இச்சொல் பண்டு வழங்கிற்று. அகவிலக்கியம் உள்ளக் காதலோரின் பல்வேறு தூய பால்நிலைகளைப் பாட்டுப் படுத்தும். பழந்தமிழ்ச் சமுதாயம் பெண்ணினத்தை நல்வினமாகக் கொண்டாயிற்று. காதற் செய்கையிலும் இல்லறத்திலும் உரிமையளித்த பெற்றி இதற்கு ஒரு சான்று. அகமாந்தர்களுள் தலைமை தலைவிக்கே என்றும், பிற மாந்தர்கள் தலைவி வழிபட்டவர்களே என்றும், தலைவியின் பண்புகள் கற்பினைச் சார்ந்து பொலிவனவே என்றும் நாம் தெளிய வேண்டும். தமிழ்ச்சான்றோர் காதற்காமத்தை ஒரு தனிப் பொருளாகப் போற்றி ஒரு தனியிலக்கிய வகையே படைத்த நோக்கம் காதற்பருவம் புகும் இருபாலார்க்கும் ஒழுக்கமுடைய காமக்கலையைக் கற்பிப்பதுவே என்பது என் துணிபு. கணவன் மனைவியின் இளமைப்பருவ உடற் புணர்ச்சி காதலொழுக்கத்தின் செவ்விய பாகம் என்பது அக நூலோர் துணிபு. உள்ளத்தோடு இயைந்த உடற் கலவியைச் சிறப்பிக்கும் அகத்திணைப் பாற்கல்வி உயிரை வளர்க்கும் ஆற்றலுடையது. 'உறுதோறு உயிர்தளிர்ப்பத் தீண்டல்' என்பர் திருவள்ளுவர்.

VI

அகத்திணை பற்றிய என் ஆய்வுரை புதுக்கூறுகள் கொண்டது என்று சொல்லிக் கொள்ள என் உள்ளம் விழைந்து நாணுகின்றது. அகத்துறைகள் முறையாகவும் முழுமையாகவும் இந்நூலில் ஆயப்பட்டுள. பொருளை வகுத்துக்கொண்ட பகுப்பும், நோக்கிய நோக்கும், காட்டிய சான்றுகளும், செய்த விளக்கங்களும், கொண்ட முடிபுமெல்லாம் தமிழின மேல்வளர்ச்சிக்குப் புதிய ஊக்கந்தரும் முயற்சிகள் என்று கற்பவர் கருத்திற் படுமாயின், என் உள்ளம் உள்ளுள் உவக்கும். ஆன்லிச்சு என்னும் அறிஞன் 'பண்டைக் கிரேக்க நாட்டின் பால்வாழ்க்கை' எனப்பெயரிய நூலின் முன்னுரையில் எழுதிய கருத்து பழந் தமிழகம் கண்ட அகத்திணையை ஆராயும் என் கருத்துக்குப் படியெடுத்தது போல இருப்பக் கண்டு வியந்தேன். முன்னுரையனைய இம் முதலாவது இயலைப் படித்து முடிக்கும் நீவிர், தம் முன்னுரை முடிவில் ஆன்லிச்சு வரைந்த நோக்கைப் படிமின்:-

> "இம் முன்னுரையைப் படித்த நீங்கள் புலனின்பம் பற்றிய கிரேக்கக் கோட்பாட்டை வேண்டுமளவு அறிந்தீர்கள். இக் கண் கொண்டு இனிவரும் இயல்களில் கிரேக்க நாகரிகப் பண்பின் சிறந்த கூறுகளை அறிந்து கொள்வீர்கள். இந்நூலைக் கற்றபின், ஓரினத்தின் உறவைப் பெறுவீர்கள். அவ்வினம் பிற மக்களினம் போலாது, இன்பத்தை வாழ்க்கையின் அடிப்படையாகக் கொண்டது; அவ் வின்பத்தை உயர்ந்த அறங்களோடு தழுவிக்கொண்ட அறிவுடையது; அதனால் பண்பட்ட வாழ்க்கையை ஞாலத்துக்குப் பரப்பியது; அவ்வினம் மனிதவினம் உள்ள எல்லாக் காலத்தும் பாராட்டத்தக்கது என்று கண்டு கொள்வீர்கள்" [1]

---

1. The reader will now have learnt enough of the Greek gospel of hedone (sensual pleasure) to be able to consider in following chapters the most important manifestations of Greek culture form this point of view. He will then make the acquaintance of a people which certainly like no other, make sensuality the basis of life, but which knew also how to combine this sensuality with higher ethics and thereby created a culture of life which mankind will admire until the end of all time.

-Hans Licht: **Sexual Life in ancient Greece**

2. அகத்திணை பாகுபாடு

அகப்பொருள் புறப்பொருள் என்னும் தமிழ் நூல்வகை இரண்டனுள் சிறந்த அகத்திணையாய்வு இனிப் பன்முறையான் மேற் கொள்ளப்படும். ஆய்வுக்கிடை எத்தனையோ கருத்து மாறாட்டங்கள் வல்லவன் இட்ட முடிச்சுப்போலத் தோன்றி நம்மை மலைவிக்கின்றன; குழந்தைக்குப் போடும் புதிர்கள் போல நம்மறிவைச் சோதிக்கின்றன. கயிறு செய்வோன் முடிச்சோடு செய்வதில்லை. அதனைப் பயன்கொள்வார் தம் அறியாமையாலும் துணிச்சலாலும் முடிச்சுக்கள் பட்டுவிடுகின்றன. "புதிர்கள் போடுவார்க்கேனும் விளங்கவேண்டுமல்லவா?" சிலர்க்குப் புதிர்கள் இடத் தெரியுமேயன்றி அவற்றை விடத்தெரியா. இங்ஙனமாக அகத்திணைக்குக் காலந்தோறும் ஏறிய முடிச்சுக்களும் பலவாயின. இப்படி முடிச்சுக்களை - கடும் புதிர்களைக் கண்டு மலையாதும், இடையில் தோன்றிய முடிச்சு எடுத்துப் புதிர்விடுத்துப் போவதுதான் ஆய்முறை என்று மயங்காதும், ஆய்வாளன் அகத்திணை மூல இலக்கியத்தோடு நேரடி அறிவுத் தொடர்பு கொள்ளும் அடியவன் போலச் செம்பொருள் காண்பான். மரபியல், நூலியல், அறிவியல் உளவியல் பற்றிச் சொல்லுங்காலைத் தம் முயற்சிக்கு ஏற்ப அகத்திணை ஐயங்கள் அகன்றொழியக் காண்பான். தொல்பழம் படைப்பான அகவிலக்கியத்தின் உள்ளங்காண முயலும் நமக்கு,

இற்றைத் தமிழ் மொழியின், நாகரிகத்தின் வேறுபாட்டால் ஐயப்பாடு பல தோன்றுதல் இயல்பினும் இயல்பே. ஐயத்தோற்றம் உண்மைத் தோற்றத்துக்கு வழி காட்டும் ஆதலின், அகத்திணைக் கல்வியாளர்க்கு உண்டாம் ஐயக்கூறுகளை முதற்கண் மொழிகுவல்.

(அ) அகத்தின் இலக்கணம் யாது? அகப்பாட்டு என்பது காதற் பாட்டாயின், காதற்றிணை என்று பெயர் வைத்திருக்கலாமே? அகத்திணை எனப் பெயரியதேன்? அகம் காதல் என்பன ஒருபொருட் பன்மொழியா? இடைக்கால உரையாசிரியர்களும் இக்காலப் புலவர் பெருமக்களும் அகத்திற்குக் கூறிவரும் இலக்கணம் தகவுடையதா? (ஆ) அகத்திணை எழுவகைப்படும் என்ற பாகுபாடு இசையுமா? இவ்வெண்ணிக்கைதானும் பிழையெனத் தோற்றவில்லையா? சங்கவிலக்கியத்து 1862 அகப்பாக்களுள் கைக்கிளைக்கு நான்கே, பெருந்திணைக்குப் பத்தே உரியவாகக் கற்கின்றோமே! கைக்கிளை பெருந் திணைகள் அகமாயிருப்பவும், சங்கச் சான்றோர் இவற்றைப் போற்றிப் பாடல் பல செய்யாமைக்கு ஏதுவென்னையோ? தமிழ் இலக்கியமெல்லாம் அகம் புறம் என்னும் வகையிரண்டாய் அடங்கும் என்ற கருத்துரை ஏற்புடைத்தா? (இ) தமிழ் மொழிக்கண் அகத்திணை நூல் பிறத்தற்கு உதவிய சூழ்நிலைகள் யாவை? அகத்திணைக்கு விதிகள் வகுத்தார் யாவர்? ஒப்பற்ற அறிவு முனைவன் ஒருவன் இது விதி, இது மரபு என்று கற்பித்தருளினனோ? அன்றிப் பலர் கூடி ஆய்ந்த அறிவுக் காட்சியின் விளைவோ? அகவிலக்கியம் இலக்கிய வுலகிற்கு ஒரு தனித்தமிழ் ஞாயிறு எனவும், எண்ணம் நுண்ணிய தமிழறிவினோர் அகலக்கருதி ஆழநினைந்து படைத்தளித்த இலக்கியப் புதுக்கோள் எனவும் சொல்லி மகிழ்வோமேல், அன்ன புதுப்படைப்பினைச் செய்தற்கு உரிய நோக்கம் என்ன? அந்நோக்கம் அறவழிப்பட்டதா? தலைவன் தன் கற்புடை நல்லாளை அழவைத்துப் பரத்தை வேட்டம் நாடுகின்றான்; இந்த இல்லற வழுக்கலை ஒரு திணைப்பொருளாகக் கொண்டு அகத்திணை பாடுகின்றதே! இதுவா நோக்கம்? இதுவா அறம்? (ஈ) பாடுவார்க்கு ஏராளமான விதிகளை இம்மியும் வழுவலாகா மரபென விதிக்கும் அகவிலக்கணம் கற்பனை யூற்றுக்குக் கல்லாகாதோ? அறிவுக் கூர்மையை மழுக்கும் அரம் ஆகாதோ? அவை யக்கால அகப்புலவர்கள் தொல்காப்பியம் கூறும் அகவிதிகளை முழுதும் பின்பற்றினர்கொல்? முரணியனவும் பெருக்கியனவும் உளவோ?

இவ்வாறு அகத்திணை குறித்து ஐயினாக்களை அடுக்கிச் சொல்லுதலோ எளிது; அறிவொக்கும் விடைத் தெளிவு காண்பது அத்துணை எளிதன்றேனும், காண முயல்வதும் முயல்விப்பதும் இவ்வாராய்ச்சியின் பாடாகும். சங்க விலக்கியமே நாம் பெற்றிருக்கும்

தமிழ் நூல்களுள் தொன்மையான அகவிலக்கியம். இலக்கிய இலக்கண ஆராய்ச்சி, காதலர்கள் போல தம்முள் பிரிந்து நில்லாதவை; பிரிக்க முடியாதவை; வலிந்து பிரித்தால் வளப்படாதவை. ஆதலின், அகவிலக்கியமும் அகவிலக்கணமும் சங்கநூற் செல்வங்களின் பெருந்துணை கொண்டு ஒருங்கு ஆராய்தற்குரியன. ஆயுந்தோறும் மேலெண்ணிய ஐயச் சிக்கல்கள் ஒருவாறு அறுபடக் காண்பீர்.

அகத்திணைப் பிரிவுகளின் அடிப்படை

1. கைக்கிளை 2. குறிஞ்சி 3. முல்லை 4. மருதம் 5. நெய்தல் 6. பாலை 7. பெருந்திணை எனப்பட்ட ஏழும் அகத்திணைப் பாகுபாடாம். இவற்றுள் குறிஞ்சி முதல் பாலை இறுதியாகிய இடைநின்ற ஐந்தும் ஐந்திணையென ஒரு கூட்டாக வழங்கப்படும். இப்பிரிவுகளுக்கு அடிநிலைக் காரணம் யாது? கைக்கிளையாவது ஒருதலைக்காமம் என்றும், ஐந்திணையாவது ஒத்த காமம் என்றும், பெருந்திணையாவது ஒவ்வாக்காமம் என்றும் அறிந்தோர் சொல்லுவர். இங்ஙனம் காமத் தன்மைகள் அடிப்படை ஆகுமாயின், ஐந்திணையை ஒரே பிரிவாகக் கொண்டு, அகத்திணைப் பிரிவுகள் மூன்றெனல் பொருந்து மேயன்றி ஏழெனல் பொருந்தாதுகாண். மேலும், கைக்கிளை பெருந்திணை என்னும் பெயர்க்குறிகள் தம் காமத்தன்மை சுட்டும் கை, பெரு, அடைகள் பெற்றுள. அது வொப்ப அன்புத்திணை என்ற பெயரன்றோ ஐந்திணைக்கு வருதல் வேண்டும்? ஐந்திணை என எண்ணையிருத்தல் ஒக்குமா? ஆதலின் அகப்பிரிவுகட்குக் காமத்தன்மை அடிப்படையாகாது.

தமிழ் அகத்திணை கூறும் பல்வேறு காதற் கூறுகள் தமிழகத்தின் பல்வேறு நிலக்கூறுகளைச் சார்ந்து எழுந்தவை என ஒரு கோட்பாடு உளது.[1] நம் தாயகத்துப் பாலை என்று சுட்டிக் காட்டத்தக்க நிலப்பால் இல்லை (தொல். 947) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நாற்றிணைகளுக்கே இயல்பான நிலப்பாங்குகள் உள. இதனால் நானிலம் என்பது உலகிற்கு ஒரு பெயராயிற்று. பாலைக்கு இயல்நிலம் இன்றேனும், திரிநிலம் உண்டு என்றும், காடும் மலையும் கோடைத் தீ வெப்பத்தால் தத்தம் பசுமை இழந்த திரிநிலையே பாலை என்றும் சிலப்பதிகாரம் நன்கு தெளிவுபடுத்தும்.

> **வேனலங் கிழவனொடு வெங்கதிர் வேந்தன்**
> **தானலந் திருகத் தன்மையிற் குன்றி**
> **முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து**
> **நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப்**
> **பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்(சிலப்.15, 95-9)**

1. The Ancient Tamils, Part 1; p.46. S. K. Pillai.

ஒரு காலவேற்றுமையால் இரண்டு திங்கள் இயல்புமாறித் தோன்றும் நிலச்செயற்கையே பாலைத்திணைக்கு இடமாம். எனினும், நிலையா நீரில்லா நிலத்திலிருந்து நீடித்து நிலைக்கும் பன்னூறு பாலைப் பாடல்களை விளைவித்துக்கொண்ட சங்க காலச் சொல்லேரு ழவர்களின் இலக்கிய உழவு அறிவின் கொழுமுனைக்கு ஓர் எடுத்துக்காட்டு. இங்ஙன் பாலைத் திணைக்கு ஒருவகையான நிலம் உண்டென்று கொள்ளினும் கைக்கிளை பெருந்திணைகட்கு எவ்வாற்றானும் நிலம் இல்லை என்பது நூன்முடிவு. ஆதலின் எழுதிணை அகப்பிரிவு நிலவடிப் படை கொண்டது என்றாலும் பொருந்தாமை காண்க.

திணை ஏழாயின்மைக்குக் காரணம் முக்காமத் தன்மையும் அன்று; நானிலப் பாங்கும் அன்று; எழுவகைக் காதலொழுக்கங்களே உரிப்பொருள்களே - ஆம், என்று அறிவோமாக. இவ்வொழுக்கங்கள் தனி நிலைகொண்டவை; தம்முள் தொடர்பு வேண்டி நில்லாதவை என்பது நீள நினையத்தகும் ஒரு சிறப்பியல்பு. ஆதலாலன்றோ குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பவை ஒத்த காமத் தன்மையால் ஒன்றாயினும், ஐந்திணை எனத் தனிநிலை குறிக்கும் எண்ணுப் பெயர் பெற்றன. குறிஞ்சி முதலாய குறியீடுகள் அவ்வந்நிலத்துக்கு உரிய மலர்களின் பெயர்களே என்றும், இப்பெயர்கள் பின்னர் உரிப்பொருள்களைப் புலப்படுத்தும் குறியீடுகளாயின என்றும் கருதுவர் ஒரு சாரார்.[1] அற்றன்று என மறுத்துக் குறிஞ்சி முதலாயவை புணர்தல் முதலாய உரிப் பொருள் களை முதற்கண் தருவன எனவும் பின்னரே மலர்களையும் நிலங்களையும் குறிக்கப் போந்தன எனவும் கருதுவர் மற்றொரு சாரார்.[2] முதற்பொருள் எது? வழிப்பொருள் எது? எனத் துணிவதில் இன்னோர் மாறுபடுவர். இருவகைப் பொருளும் குறிஞ்சி முதலாம் சொற்களுக்கு முன்னோ பின்னோ உண்டு என்பதிலும், அகத்திணையிலக்கணம் வகுத்த நாளில் இருபொருளும் வழங்கின என்பதிலும் இன்னோர் வேறுபட்டிலர். எனினும் கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய் எழுதிணை என எண்ணுங்கால், குறிஞ்சி முதலாம் சொற்கள் தரும், தரவேண்டும் பொருள்கள் என்ன? நிலமில்லாக் கைக்கிளை பெருந்திணைகளோடு எண்ணப்படுதலின், இவற்றுக்கு நிலப்பொருள் செய்தல் ஆகாது; உரிப்பொருள் கோடலே முறை என்பது தெளிவு. ஐந்திணையுள் அடங்கிய

1. தொல் - பொருள். ரு. இளம்பூரணம்; தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, ப. 24; பழந்தமிழர் நாகரிகம்; ப. 18: Studies in Tamil Literature and History P. 273.

2. இறையனார் அகப்பொருள். பவானந்தர் கழகப் பதிப்பு, ப. 25; தொல். பொருள். ரு. நச்சினார்க்கினியம்; டாக்டர் பாரதியார். தொல், அகம். பாயிரம்; இளவழகனார் அகத்திணையியல் விளக்கம், ப. 87-89. அடிக்குறிப்பு.

ஒவ்வொன்றும் தனித் திணையாகக் கருதப்பட்டமையின், அவையப் புலவர்கள் ஐந்திணை மேலும் பாடாது ஆளுக்கு ஒரு திணையாக இலக்கியம் கண்டனர்.

மருதமோ ரம்போகி நெய்தலம் மூவன்
கருதுங் குறிஞ்சி கபிலன் - கருதிய
பாலையோத லாந்தை பனிமுல்லை பேயனே
நூலையோ தைங்குறு நூறு.

எட்டுத்தொகையுள் ஐங்குறுநூறும் கலித்தொகையுமே பாடினோர் எண்ணிக்கை குறைந்த நூல்கள். ஆண்டும் திணைக்கொரு ஆசிரியரான செய்தியை - ஐந்திணையையும் ஓராசிரியன் பாடா முறையை - மேலை வெண்பாக்கள் அறிவிக்கும்.

பெருங்கடுங்கோன் பாலை கபிலன் குறிஞ்சி
மருதனிள நாகன் மருதம் - அருஞ்சோழன்
நல்லுத் திரன்முல்லை நல்லந் துவனெய்தல்
கல்விவலார் கண்ட கலி.

பெருங்கடுங்கோ பாலைத்திணை (பிரிவு) ஒன்றனையே பாடிப் 'பாலை பாடிய' என்ற சிறப்புப் பெற்றவர். ஒரு திணைக்குரிய உரிப்பொருளைப் பாடுங்காலும், எல்லாத் துறை மேலும் பாடாது ஒரு துறையளவில் பாடிநின்ற அகப் புலவர் பலர். வெறி பாடிய காமக்கண்ணியார் ஒரு துறை பாடிய சிறப்புப் புலவர். மேலும் முதல் கருப்பொருள்களைச் சிறிதும் கூறாதே உரிப்பொருள் மட்டும் கூறும் அகப்பாடல்களும் பலவுள.

நோமென் னெஞ்சே நோமென் னெஞ்சே
இமைதீய்ப் பன்ன கண்ணீர் தாங்கி
அமைதற் கமைந்தநங் காதலர்
அமைவில ராகுதல் நோமென் னெஞ்சே (குறுந். 4)

உரிப்பொருள் ஒன்றே நுவலும் இவ்வனைய பாக்கள் பாலைத்திணை, குறிஞ்சித்திணை யெனச் செவ்விதின் பெயர் பெறுகின்றன. காரணம் திணைமெய்யாவது உரிப்பொருளே பற்றியது. முதலும் கருவுமோ அப்பொருட்குத் துணைமையாம் அத்துணையே. ஆதலின் அகத்திணை எழுமைப் பகுப்பு காதலர்களின் கைக்கிளை புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல்பெருந்திணை என்னும் காமவொழுக்கங்களை அடிப்படையாகக் கொண்டது என்று தெளியத்தகும்' அகத்தின் இலக்கணம் என்னை? அகம் என்ற கிளவிக்குப் பொருள் என்னை? இவை இனித் தொடர்ந்து ஆயவேண்டுபவை எனினும், இப்போது ஆய்வு பெறுமாறில்லை. இடையே சில்பல அகச்செய்திகள் விளக்கம் பெற்ற பின்பு. இவ்வாய்வைத் தொடங்குவது தெளிவுக்கும் முடிபுக்கும் எளிமை செய்யும்.

அகத்திணையும் ஐந்திணையும்

அகத்திணைப் படைப்பில் கைக்கிளை பெருந்திணைகளைவிட ஐந்திணை பல்லாற்றானும் மேலாயது என்பதற்கு உறழ்கூற்று வேண்டா. அகத்திணைத் தொல்லாசிரியர் தொல்காப்பியர் கைக்கிளை பெருந்திணைகளின் பொருள்களை இருவேறு தனிச்சிறு சூத்திரங்கள் அளவில் (995-996) அகத்திணையியல் இறுதிக் கண்ணே சொல்லி அமைகுவர். 'கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்' (949) என எண்ணுங்கால் முதலிடம் பெற்ற கைக்கிளைகூடப் பொருள் கூறுங்கால் அவ்விடம் பெறாமை கருதத்தகும். 'கைக்கிளைக் குறிப்பே', 'பெருந்திணைக் குறிப்பே' என்று இவ்விரு திணைகளின் சிறுநிலை தோன்ற அவற்றின் பொருட் சூத்திரங்களை முடித்துக் காட்டுவர். 'குறிப்பு' என்ற சொற்பெய்வால் இவ்விரு திணைகள் விரித்துப்பாடும் பெற்றியவல்ல என்று சுட்டுவர். இதனால் தொல்காப்பியம் ஐந்திணையே அகத்திணை என்பதுபோல, ஐந்திணையின் இலக்கணக் கூறுகளைப் பலபட விரித்துரைப்பக் காணலாம். அகத்திணையியல் 55 நூற்பாக்களைக் கொண்டது. அகத்திணை எனப் பொதுப் பெயர் பூண்டிருந்தும், இதன் 50 நூற்பாக்கள் ஐந்திணையின் நெறிகளையே விரித்து மொழிதல் காண்க. களவியல் கற்பியல் பொருளியல் மெய்ப்பாட்டியல் எனப்படும் பிற நான்கு இயல்களுங்கூட ஐந்திணை நுவலும் அமைப்பினவாகவே உள. ஐந்திணைக் காதல் அறநலத்தது, உலகம் ஒப்புவது, மக்கட்கு இயல்வது, இலக்கியத்துக்கு இசைந்தது. இன்ன நன்னயங்களை நோக்கிச் சங்கப் புலமையினோர் ஐந்திணைத் துறைகளையே பெரிதும் பாடினர். தொல்காப்பியர் செய்தது போலக் கைக்கிளை பெருந்திணைகட்கு உரிய ஒதுக்கிடம் நல்கினர். இப்பாங்கின்படி, ஐந்திணை பெரிதும், ஏனை இருதிணை சிறிதுமாக இந்நூலிலும் ஆராய்ச்சிப்படும்.

ஐந்திணை இவ்வளவு மேலாந் தரத்ததெனினும், அகத்திணை ஐந்திணை என்ற சொற்கள் ஒருபொருட் பன்மொழியாகா என்பது அறிக. இவற்றை ஒன்றெனக் கருதியும், கைக்கிளை பெருந் திணைக்களை அகத்தின் வேறெனக் கருதியும் வளர்ந்த எழுத்தெல்லாம் பெரும் பிழை. 'அகத்திணையின்கண் கைக்கிளை வருதல் **திணை மயக்காம்** பிறவெனின், கைக்கிளை முதற் பெருந்திணை யிறுவாய எழுதிணையினுள்ளும் கைக்கிளையும் பெருந்திணையும் **அகத்தைச் சார்ந்த புறமாயினும்**" (பா.4) என்னும் திருக்கோவை யுரையாசிரியர் கருத்துரை இப்பிழையிடங்களுள் ஒன்று. ஒருகுடிப் பிறந்த பல்லோருள் சிலர் சிறப்புற்றும் மற்றும் சிலர் சிறப்பின்றியும் இருத்தற்காக, அன்னோர் ஒரு குடிப்பிறப்புக்கு இழுக்குண்டோ? ஐந்திணை நோக்கக் கைக்கிளை பெருந்திணைகள்

சிறப்பிலவாகலாம்; எனினும், அவ்விரண்டும் எழுதிணை எனப்பட்ட அகத்திணை யாதற்கு இழுக்கில்லை.

கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை யென்ப (தொல். 946)

என்ற தொன்னெறிப்படி, அகத்தின் முதலாகவும் இறுதியாகவும் எண்ணுப்பெற்ற கைக்கிளை பெருந்திணைகளை 'அகத்தைச் சார்ந்த புறம்' என்று கோவையுரையாசிரியர் குறிப்பது அடி முரணில்லையா? இவ்விரண்டையும் புறமாக்கிய அவர் 'அகத்தை' என்ற சொல்லால் முழுதும் ஐந்திணையைத்தானே கருதிவிட்டார் என்பது புலப்பட வில்லையா? கைக்கிளை பெருந்திணைகளின் பெருமைப்பாடு எவ்வாறாயினும், அவற்றை அகத்திணைப் பகுப்பினின்று தள்ள முடியாமைக்கும், ஐந்திணையோடு உடனெண்ணு தற்கும் குருதி யொப்பன்ன பண்பொப்பினை இவற்றிடைத் தமிழ் மூதாளர் கண்டிருத்தல் வேண்டும். அவ்வொப்பினை பின்னியல்களில் விரிப்பாம். இவ்விரண்டனையும் சேர்த்து கொள்ளாவிடின், அகத்திணை நகமற்ற விரல்போலவும் படியற்ற மனைபோலவும் முழுவனப்பில் ஒரு குறைவுடையதாகத் தோன்றும் என ஈண்டுக் குறிப்பிடல் போதும். ஏழுதிணைகளையும் ஒருங்கு சுட்டவேண்டுங்கால், அகத்திணை என்னும் பொதுக் குறியீட்டை ஆளுதல் தொல்காப்பிய வழக்கு.

புறத்திணை மருங்கிற் பொருந்தி னல்லது
அகத்திணை மருங்கின் அளவுத லிலவே. (தொல். 1000)

அகத்திணை மருங்கின் அரில்தப வுணர்ந்தோர்
புறத்திணை யிலக்கணம் திறப்படக் கிளப்பின் (தொல்.1001)

அகத்திணைப் பொதுப்பெயரை ஐந்திணைப் பிரிவின் மறு பெயராகத் தொல்காப்பியம் ஆண்டதில்லை. "மக்கள் நுதலிய அகன் ஐந்திணை" (999) "அன்பொடு புணர்ந்த ஐந்திணை (1037) என்றாங்கு உரிய பிரிவுப் பெயரால் விதந்து சொல்லும் நடை நினையத்தகும். 'அகன் ஐந்திணை' என்ற பொதுவடையால், ஐந்திணை அகத் திணையுள் ஒருவகை என்பதும், அகக்கைக்கிளை அகப்பெருந் திணை எனப் பிறவகைகளும் உள என்பதும் கொள்ளக்கிடத்தல் காண்க. "அன்பின் அகத்திணை களவெனப்படுவது" என்னாது, "அன்பின் "ஐந்திணை களவெனப்படுவது" என்ற இறையனாரும், "அகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறியளாவி" என்று கும்பரும் விழிப்போடு சொற் பெய்தலை ஒப்பு நோக்கவேண்டும். ஆதலின் கைக்கிளை பெருந் திணைகள் குறைந்த பாடல்கள் உடையனவே யெனினும், அகத் திணை ஆராய்ச்சியில் இடம்பெற வேண்டியவை என்பது தெளிவு.

3.4.

1. ஐந்திணை – களவியல் – இயற்கைப் புணர்ச்சி

அகத்திணையின் பெருங்கூறான ஐந்திணைக் காதல்களை இனி ஆராய்வோம். சங்க அகப் பாடல்களைச் சான்றாகக் கொண்டு ஐந்திணைத் துறைகளின் திறன் காண்போம். களவொழுக்கம் கற் பொழுக்கம் என ஐந்திணை இருபாற்படும் என்று பொதுவாகக் கூறினாலும், குறிஞ்சிக்களவு குறிஞ்சிக் கற்பு, பாலைக்களவு பாலைக்கற்பு, முல்லைக்களவு முல்லைக்கற்பு, மருதக்களவு மருதக்கற்பு, நெய்தற்களவு நெய்தற்கற்பு எனத் திணைதோறும் இரண்டும் கொள்ளத்தகும். இங்ஙனம் கொள்வதால் களவுக்காதலும் கற்புக்காதலும் எல்லா நிலத்திலும் நிகழ்வனவே என்னும் உலக வழக்கம் பெறப்படும்.

காதலுக்குக் காரணம்

காமப்பருவம் எய்திய நங்கை, தாய் ஏவற்படி தினைப்புனம் செல்கின்றாள். தோழியரும் உடன்செல்கின்றனர். முற்றிய கதிர்களைக் கவரும் கிளிக்கூட்டத்தைத் தட்டைக் கருவிகொண்டு வெருட்டுகின்றனர். அருவியாடியும் தழை கொய்தும் மலர் தொடுத்தும் வந்து அசோகந்தண்ணிழலில் அமர்கின்றனர் (குறிஞ்சிப். 39, 102) குமரப்பருவம் எய்திய நம்பி தன் வேட்டைநாயொடு மலையெலாம் சுற்றித் திரிகிறான். பல் மணம் கமழும் தலைமாலை அணிந்து இவ்வேட்டுவக் குமரன் நங்கை இருக்குமிடத்துக்குத் தானாக வந்து சேருகிறான் (அகம். 28). தன் அம்பால் புண்பட்ட மதயானை இப்பக்கம் போந்ததுண்டோ? போக நீவிர் கண்டதுண்டோ? என்று மலரூதும் வண்டின் இசைக்குச் செவி கொடுத்திருந்த இளம் பெண்களை உசாவுகிறான் (அகம் 388.) அப்போது அவனுக்குக் காதற்குறிப்பு இல்லை. மார்பில் செங்கழுநீரும் தலையில் வெட்சிப்பூவும் அகத்துச் சந்தனப் பூச்சும் கையில் வில்லம்பும் கொண்டு முன்னிற்கும் இளைஞனுக்கு முன்னே இளமாதர்கள் நிற்கக் கூசினர். வினாவுக்கு மறுமொழி அன்னோர் நாவெழவில்லை. இதற்கூடே நம்பியின் கண்ணும் நங்கையின் கண்ணும் நட்புக்கொண்டன. காதலாடின; காமத்தீப்பற்றின (அகம். 48)

கண்டதும் காதல் என்பது இதுவே. "கண் தரவந்த காம ஒள்ளெரி" (குறுந். 305) என்று குப்பைக் கோழியார் காமத்தின் பிறப்பிடமாகக் கண்ணை கூறுவர். கல்லொடு கல் சேர்ந்து தீ உண்டாவதுபோலக் கண்ணொடு கண்ணும் சேர்ந்து தீ உண்டாம்; அது காமத்தீயாம் என்று இப்புலவர் குறிப்பிப்பர். கல் பிறப்பித்த தீ பஞ்சு முதலான பற்று பொருள் இல்லையாயின் வளராது. கண் பிறப்பித்த காமத்தீ தானேயும் ளரவல்லது என்பதை 'ஒள்ளெரி' என்னும் அடையால் அறியலாம். ண்கள் கலந்தபின் காதலர்தம் உள்ளங்கள் கலக்கின்றனவா? முன்னரே .ள்ளங் கலந்தமையைக் காட்டும் அறிகுறியா கண்கலப்பு?

நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்குக்
கூட்டி யுரைக்கும் குறிப்புரை யாகும் (தொல். 1041)

ஒன்றுபட்ட உள்ளக்குறிப்பைத் தலைவன் பார்வை தலைவிக்கும், அவள் பார்வை அவனுக்கும் உரைக்கின்றன. ஒரு கருத்தை வாயாற் சொன்னால் வெளிப்படையாக நன்கு விளங்கும், வாயாற் சொல்லிக் கொள்ளுதல் காதலுலகிற்குப் பொருந்துமா? காதல் நோயை வளர்க்குமா? ஆதலின் காதலர்கள் உள்ளக்கருத்தைக் கண்ணாற் சொல்லிக்கொள்ப. அஃது அவர்கட்கு வாயாற் சொல்லிக் கொள்வதுபோலப் புரியும். வாயின் செயலைக் கண் செய்தலால், "நாட்டம் இரண்டும் உரையாகும்" என்பர் தொல் காப்பியர். காதற் களத்தில் கண்ணுக்குரிய மதிப்பு சிறிதும் வாய்க்கில்லை. "வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல" என்பர் திருவள்ளுவர். கண்தந்த காமம் என்பதற்காகக் காமத்துக்குக் கண் காரணமாய்விடுமா? வீரனைப்பெற்ற வயிறு ("ஈன்ற வயிறோ இதுவே" புறம் 89.) என்றால், வீரன் பிறப்புக்கு வயிறு காரணம் என்று சொல்ல மாட்டோம். ஆதலின் உள்ளக் காமம் கண்ணில் வெளிப்பட்டது என்பதல்லது காமத்துக்கும் கண்ணுக்கும் பிறப்புத் தொடர்பின்று.

பால் வேறுபட்ட ஆண்மையும் பெண்மையும் பார்த்ததும் உள்ளம் பறிகொடுத்துக் காமப் பித்தேறுதற்குக் காரணம் என்கொல்? இவ்வினா இன்னும் தீரா வினாவே. காதல் காரணம் என்று எளிதாகச் சொல்லி விடுகின்றோம். காதல் என்பதுதான் யாது? இதற்கு அறிவியலும் விடை கூற ஒண்ணாமையைக் கென்னத்து வாக்கர் 'பாலுடலியல்' நூலில் ஒப்புகிறார்:- "பாலுணர்வுபற்றி ஒரு பொருத்தமான கொள்கையை நாம் கூறுவதற்கியலவில்லை என்பதை ஒத்துக்கொள்ளவேண்டும். பெண்ணொருத்தியைக் காண்கின்றான்; அவள் மொழியைக் கேட்கின்றான்; அவள் மணத்தை மோக்கின்றான். அவள் மெய்யைத் தீண்டுகின்றான். கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் போது உள்ளம் காமத்தின் கொள்கலம் ஆகின்றது. உடம்பில் சில மாற்றங்கள் நிகழ்கின்றன. இவையெல்லாம் புணர்ச்சியிற்போய் முடிவடையும் காதல் புறநிலைகளைக் கண்டு கூறுமளவே அறிவியல் செய்யக்கூடியது. அதன் தோற்றத்தை இது தெளிவாக்குமா? இல்லவே இல்லை."[1] ஏராளமான இளைய ஆண்களும் பெண்களும் நாள்தோறும் சாலையிலும் சோலையிலும் ஒருவரையொருவர் காண்கின்றனரே; கண்டும், ஒருவன் யாரோ ஒருத்திமேல் காதல் கொள்கின்றான்; ஒருத்தி எவனோ ஒருத்தன்பால் கண்சாய்க்கின்றாள். பலரை விலக்கி ஒருவரைத் தேர்ந்து விரும்பும் இச்சிறப்புப் பார்வைக்குக் காரணம் இதுவென உயிரியல் நூலும் சொல்ல முடிவதில்லை. இஃது

1. Physiology of Sex. p. 43 p: 4.

ஆய்வுக்கு உரிய அரிய சிக்கல் என்று நம் முன்னோரும் கருதினர். வாளாவிராது காரணங்காண முயன்றனர். ஆண் பெண் என்பன படைப்புத் தொடக்கத்து ஒரே ஒரு பொருளாம் என்றும், தெய்வ சாபத்தால் பிளவுபட்டு இரண்டாயின என்றும், அன்று முதல் ஒன்றாய் இணையப் பாடுபடுகின்றன என்றும் காதலுக்கு விளக்கம் கூறுவர் பிளேட்டோ.[1] இது உமையொரு பாகம் அருத்தநாரீசுவரன். எனச் சிவனுக்கு ஆண்பாதி பெண்பாதி உருவம் கற்பிக்கும் இந்துப் புராணத்தைப் போன்றது.

ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பால தாணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப (தொல். 1038)

உயர்ந்த பாலின் ஆணையால்-நல்லூழின் ஏவலால்-காதற் காட்சி நிகழும் என்பர் தொல்காப்பியர். கிழவன் கிழத்தியைக் காண்பான் என்றோ, கிழத்தி கிழவனைக் காண்பாள் என்றோ எழுவாயும் செயப்படு பொருளுமாகத் தொல்காப்பியம் நடை தொடுக்கவில்லை. முந்திக் காதலித்தவர் யார்? என்ற காதலியல்பு புலப்பட, கிழவனும் கிழத்தியும் காண்ப என இருவரையுமே எழுவாயாக, வைத்துக் காட்டும் நடைப்பாடு அறியத்தகும். இப் பாலாட்சியைச் சங்கப் புலவர்களாம் பேரிசாத்தனாரும் அம்மூவனாரும் ஒப்புப:

பால்வரைந் தமைத்தல் அல்லது அவர்வயின்
சால்பளந் தறிதற்கு யாஅம் யாரோ (பேரிசாத்தனார் குறுந். 366)

பிறிதொன் றாகக் கூறும்
ஆங்கும் ஆக்குமோ வாழிய பாலே. (அம்மூவனார் ஐந். 110)

ஒரே பாடலின் ஆசிரியர் மோதாசனார் காதற் பாங்கை அழுந்த ஆராய்ந்தார். காதலராவார் வெவ்வேறிடத்தவர்களாக இருக்க வேண்டும் என்பதில்லை. முன்பின் முகமறியாப் புதியவர்களாதல் வேண்டும் என்பதில்லை. நாள்தோறும் பல்கால் பழகிக்கொண்டு வரும் ஓர் இளையானும் இளையாளும் என்றோ ஒருநாள் திடீரெனக் காதல் தோன்றப் பார்த்தல் இயல்பேயாம். சிறுவன் சிறுமியாய் இருந்த பருவத்து இவ்விருவரும் தலைமுடி பற்றியிழுத்து அடித்துக் கொண்டனரே; செவிலியர் இடைமறித்து விலக்கவும் விடாது சண்டையிட்டனரே: இன்றே இணைந்த மலர்மாலை போல மண மக்களாக விளங்கக் காண்கின்றோம் நல்லூழின் விளையாட்டன்றே இது என்று தலைவன் தலைவியைச் சிறுபருவம் தொட்டு அறிந்தோர் அவ்விருவர்தம் உடன் போக்கைக் கண்டு பாலாற்றலை வியக்கின்றனர்.

1. cf. Hans Licht - Sexual Life in Ancient Greece. p. 307.

இவனிவள் ஐம்பால் பற்றவும் இவளிவன்
புன்தலை ஓரி வாங்குநள் பரியவும்
காதற் செவிலியர் தவிர்ப்பவும் தவிராது
ஏதில் சிறுசெரு உறுப மன்னோ
நல்லைமன் றம்ம பாலே மெல்லியல்
துணைமலர்ப் பிணையல் அன்னவிவர்
மணமகிழ் இயற்கை காட்டி யோயே. (குறுந். 229)

மோதாசனாரின் இப்பாடல் "பாலதாணையின்" என்ற தொல் காப்பியத்துக்கு நல்விளக்கமாதல் காண்க. இளம்பூரணர் தொல் காப்பியத்துக்கு முதலுரையாசிரியர். இவர் உரை உள்ள உரைகளுள் ஏற்றமுடையது. ஒன்றே வேறே (1038) என்னும் நூற்பாவிற்கு,

"ஒருவரையொருவர் கண்டுழியெல்லாம் புணர்ச்சிவேட்கை தோற்றாமையின், பாலதாணையான் ஒருவரையொருவர் புணர்தற் குறிப்போடு காண்ப என்றவாறு"

என அரிய விளக்கம் தருவர் இளம்பூரணர். கண்டதும் காதல்-கண்ட முதற்பார்வையிலே காதல்கொண்டு விடுதல் என்ற கோட்பாட்டை ஒருபால் மறுப்பர். ஆண் பெண் பாலர்களைச் சந்திக்கச் செய்வது விதியின் வேலையன்று. அவர்கள் முதல்முறை சந்திக்கலாம்; பலமுறை சந்தித்தும் இருக்கலாம். இச் சந்திப்பெல்லாம் பாலதாணையில்லை. முதல்நாள் முதற்பார்வையிலோ, பின்னால் பல பார்வையிலோ, ஒரு பார்வையைக் காதலோடு பார்க்கச் செய்வதே விதியின் ஆணை என்று தெளிவிப்பார் உரையாசிரியர். இக்காதற் புணர்ச்சி-விதி கூட்டிய முதலுறவு-இயற்கைப் புணர்ச்சி என்று பொதுவாகப் பெயர் பெறும். தலைவனும் தலைவியுமாம் விதி முன்னரே உண்டெனினும் தோன்றாது, காலம் பார்த்து அடங்கியிருக்கும். காலமாவது இருவரும் காமம் நுகர்வதற்குரிய குமரப் பருவம். அப்பருவம் வாயாதார்க்குக் கண்ணில் காதல்நோக்கம் எழாது; பிறர் கண்ணில் எழுந்த காதல்நோக்கத்தைப் புரிந்து கொள்ளும் அறிவும் இராது. ஆதலின் அடங்கியிருந்த விதி, புணர்தற்குரிய இருவரும் ஆளான பின்னர்த்தான் வெளிப்படுவது முறையும் பயனுமாம். இதுகருதியே, தொல்காப்பியமும் இறையனார் அகப்பொருளும், காமபுணர்ச்சி என்று இம்முதற்புணர்ச்சிக்குப் பெயரிட்டுள. இக்குறியீடு இயற்கைப் புணர்ச்சி என்ற குறியீட்டினும் விரும்பத்தக்கது. இதுவரை ஆராய்ந்த காமத் தொடர்புபற்றி இறையனாரகப் பொருள், திருக்கோவையார் உரையாசிரியர்களும் தொடைவிடைபட எழுதியுள்ளனர்.

உள்ளப்புணர்ச்சியும் மெய்யுறுபுணர்ச்சியும்

ஆண்பெண் உறவுக்குக் காதல் காரணம் என்றோம். காதலுக்குப் பால் காரணம் என்றோம். அறிதோறும் அறியாமை கண்டதல்லது என்ன விளக்கம் கண்டோம்? பாலாவது யாது? பாலதாணை என்பது என்? பால் கூட்டு வித்தற்குக் காரணம் என்ன? ஒத்த தலைவனும் தலைவியும் பாலதாணையால் காதற் குறிப்பொடு காண்பர் எனின், அவ்விருவரும் ஒத்தவர்களாக இருப்பதற்குக் காரணம் பிறிதுண்டோ? ஒப்பு என்பது எது? அஃது ஒருபிறவியொப்பா? பல்பிறவியொப்பா?

இம்மை மாறி மறுமை யாயினும்
நீயா கியரென் கணவனை
யானா கியர்நின் னெஞ்நேர் பவளே. (குறுந். 49)

நினக்கிவன் மகனாத் தோன்றி யதூஉம்
மனக்கினி யாற்குநீ மகளா யதூஉம்
பண்டும் பண்டும் பல்பிறப் புளவால்
கண்ட பிறவியே யல்ல காரிகை (மணிமே. 24, 56-9)

என்று இலக்கியம் கூறுமாங்கு, தலைவன் தலைவியர் வழிவழிக் கணவன் மனைவியரா? இன்ன ஐயங்கள் நம் அறிவில் கிளைக்கின்றன. திருக்கோவை உரைப் பேராசிரியர் காதல் வாழ்க்கையில் விதிக்கு உயரிய மதிப்பு நல்கவில்லை. பாங்கற் கூட்டம் தோழியற் கூட்டங்களுக்குப் பாங்கனும் தோழியும் துணையாவார் அத்துணை யல்லது தலைவன் தலைவி காதலுக்குக் காரணமாகார் அன்றே; அதுபோல இயற்கைப்புணர்ச்சியில் விதி கூட்டுவித்த துணையல்லது அவர்தம் அன்புக்கு காரணமாகாது என்பது அவ்வுரையாசிரியர் துணிபு; நிற்க.

காதலர்தம் மனவொற்றுமையே அகத்திணையின் உயிர்ப் பண்பு. இவ் வொற்றுமையை 'உள்ளப் புணர்ச்சி' என்று அகவிலக்கணம் கூறும். எவ்வகை அகத்திணைப் பாடலுக்கும் அகத்துறைப் பாடலுக்கும் உள்ளப் புணர்ச்சி இன்றியமையாதது; புற நடையில்லாதது; இறைமை சான்றது. அகப்புலவர் இவ் வடிப்படைக்கு ஊறுபட யாதும் கூறார். ஊறுபடா நிலையில் யாதும் கூறுவர். இப் பேருண்மை இவ்வாராய்ச்சி முழுவதும் நீள நினைய வேண்டுவது என்று குறிக்கொண்மின்.

ஆளான தலைவன் தலைவி உள்ளம் புணர்ந்தபின் உடற்புணர்ச்சிக்கு அவாவுதல் முறையே. மனம் ஒன்றிய காதலோர் உடல் ஒன்றுதற்குத் தக்க தனியிடம் தேர்வர். இடம் வாய்ப்பின் இன்பப்பாயல் கொள்ளப் பின் வாங்கார். பெற்றோரைக் கலந்து மேல்செய்வன செய்வோம் என்னும் அறிவு ஓடார். மண் சுழலினும்

1. இறையனார் ப. 33-35. திருக்கோவையார் பா. எ.

கடல் பொங்கினும் மலை பெயரினும் விண் வீழினும் அரசு விதிப்பினும் மக்கள் எதிர்ப்பினும், வருவது வருக என்று, அச்சம் அறியார். காதல் காதல் காதல், காதல் நீங்கிற் சாதல் சாதல் சாதல் என்னும் பேராண்மை கொண்ட இளைய உள்ளங்கள் பெற்றோர்க்கு அஞ்சியோ பிற அச்சங்கொண்டோ புணர்ச்சியைத் தள்ளிப்போட எண்ணா. இடம் வாயாமையின் புணர்ச்சி நிகழாதிருக்கலாம். இடம் வாய்த்தும் தாய்துஞ்சாமை நாய்துஞ்சாமை முதலான இடையூறுகளால் புணர்ச்சி தடைப்பட்டிருக்கலாம். உள்ளம் கலந்த சின்னாட்களில் திருமணம் நடைபெற்றிருக்கலாம். களவுக்காலத்து உடற் கூட்டுறவே இல்லை என்றும், அது கூடாது என்றும் கூறுவார் கொள்கை பிழையாம்; இயற்கை யுணர்ச்சிக்கு முரணாம். கற்பு எனப்படுவது காதலர்தம் மெய்த்தொடர்புக்குப் பின் வரும் ஒழுக்கமன்று. ஒருவரை யொருவர் உள்ளத்தால் நினைத்த அப்போழுதே கற்பென்னும் திண்மை வேண்டப்படும். மெய்ப்புணர்வு பட்டபின், பெற்றோர் இசையாராயின், என்செய்வது? கற்புக் கெடுமன்றே; அன்னோர் இசைவு தெரியும்வரை உள்ளம் புணர்ந்த அளவில் வைத்துக் கொள்வோம் என்ற பகுத்தறிவு உண்மைக் கற்புத்திறமாமோ? "உள்ளத்தான் வேட்கை செல்லினும் மெய்யுற்றாராயிற்று" என அறுதியிட்டுரைப்பர் இறையனாரகப் பொருள் உரையாசிரியர். ஆதலின் கற்புக் கருதி, களவில் மெய்யுறார் என்பது அறமாகாது. களவுக் காலத்து மெய்யின்பம் துய்த்தமை பற்றிய அகப்பாடல்கள் பலவுள. மெய்யுறும் செய்கை இன்றாயின், இரவுக்குறி முதலான எத்துணையோ துறைகள் சிறந்த பயனிலவாய் ஒழியுங்காண்.

அயத்துவளர் பைஞ்சாய் முருந்தின் அன்ன
நகைப்பொலிந் திலங்கும் எயிறுகெழு துவர்வாய்
ஆகத் தரும்பிய முலையள் பணைத்தோள்
மாத்தாட் குவளை மலர்பிணைத் தன்ன
மாயிதழ் மழைக்கண் மாஅ யோளொடு
பேயும் அறியா மறையமை புணர்ச்சி (அகம். 62)

தலைவன் முதற்புணர்ச்சியை மீண்டும் நினையும் பாட்டு இது. மாநிறத் தலைவியின் செவ்விதழ் சுவைத்து, அரும்பிய மார்பையும் அகன்ற தோளையும் தழுவி நுகர்ந்த மறைத்தற்கரிய முதற்கூட்டுறவை நினைவு கொள்கின்றான். பேயும் நடமாட்டம் ஒடுங்கித் தூங்கும் நள்ளிரவில் துய்த்த களவுப் புணர்ச்சி என்று பெருமிதங் கொள்கின்றான். உள்ளப் புணர்ச்சிக்கு மறைவிடம் வேண்டிய தில்லை. பேயும் அறியா நடுயாமம் வேண்டியதில்லை. ஆதலின் பரணர் இப்பாட்டில் களவுக் காதலரின் மெய்ம்முயக்கத்தைக் கூறுகிறார் என்பது வெளிப்படை முன்பின் யாதொரு உறவும் முகவறிவும் இல்லாதார் உள்ளம் அன்புற்று உடல் இன்புற்ற காட்சியை ஒரு

குறுந்தொகைப் பாட்டால் அறிகின்றோம். காதலன் புணர்ச்சி நிறைவில் காதலியை நோக்கி, இப்போது நம் உடல்களா கலந்தன? "அன்புடை நெஞ்சந் தாம் கலந்தனவே" (குறுந். 40) என்று நாகரிகமாக நலம் பாராட்டுகின்றான்.

2. இடந்தலைப்பாடு

தற்செயலாக ஒருநாள் கண்ட இருவர் உள்ளம் புணர்ந்தனர்; காதலராயினர். அடங்கிய வேட்கை பெருகிற்று. முதல்நாள் கண்டவிடத்தே இன்றும் காணலாம் என்ற நம்பிக்கையோடு தலைவன் தானே அவ்விடம் செல்கின்றான். ஆராக் காதலுடைய தலைவியும் அவனுக்கு முன்னரே வந்து அங்கு நிற்கின்றாள். ஏன்? ஒருமுறை ஆண் புல்லியபின், பெண்ணுக்குக் காமம் சிறக்கும். முன்போல தோழியரொடு விளையாட வந்தும் விளையாட்டில் மனங்கொள்ளாள்; பூப்பறித்து மலர் தொடுக்க உள்ளம் நாடாள். அவள் காதற் பெருக்கை உணர்ந்த தலைவன், "ஆடலும் தொடுத்தலும் செய்யாது தனித்துநிற்கும் நீ யாரோ; உனக்கு என் வணக்கம். கண்டவர் கண்ணைப் பறிக்கும் அழகியே! கடல் வாழ் தெய்வமோ நீ?"

யாரை யோநிற் றொழுதனம் வினவுதும்
கண்டோர் தண்டா நலத்தை தெண்டிரைப்
பெருங்கடற் பரப்பின் அமர்ந்துறை அணங்கோ(நற். 155)

என்று தன் காதற்பறையை முழக்குகின்றான்; அழகுத் தெய்வமாகத் தொழுகின்றான். "வளை ஒலிப்ப நண்டினை ஆட்டுபவளே! நண்டினை ஆட்டுபவள் போலக் கூந்தலால் முகத்தை மறைத்து நிற்பவளே! மாலை மறையின் நின் முயக்கம் கிடைக்கும்" (ஐங். 197) என்று வாயூறி மொழிகின்றான். என் சொல்லுக்கெல்லாம் மறுமொழி சொல்லாது நாணுபவளே! நின் நாணம் என் காமத்தைப் பெருக்கின் தாங்குவது எப்படி? ("காமம் கைம்மிகின் தாங்குதல் எளிதோ"-) என்று தானே தானே பன்னுகிறான்.

இடந்தலைப்பாடு பற்றி மூன்று பாடல்களே (ஐங். 197. நற். 39; 155, சங்கவிலக்கியத்தில் உள. புணர்ச்சி வேட்கை காணப்படுவதன்றிப் புணர்ந்த குறிப்புச் சிறிது இப்பாடல்களில் இல்லை. இயற்கைப் புணர்ச்சி, பாங்கற் கூட்டம், தோழியிற்கூட்டம் என்ற குறியீடுகள் காதலரிடைப் புணர்ச்சியுண்டு என்பதை வெளிப்படையாகக் காட்டுவது போல, இடந்தலைப்பாடு (தொல். 1443) என்னும் குறியீடு காட்டவில்லை. இதன் உட்கோள் என்ன? கண்டால் முயங்குதல், முயங்குதற்கே காணுதல் என்பது ஆசைக்காமம் ஆகுமன்றி அன்புக் காமம் ஆகாது. காதலர்கள் புணர்வு விருப்பின்றியும் கண்டு கொள்வார்; காணுந்தோறும் புணர்வு மேற்கொள்ளார் என்பது

(கீழான பருவ எழுச்சிக்கு இடங்கொடா) உயர்ந்த காதலாகும். இயற்கைப் புணர்ச்சியில் கண்டு கலந்த தலைவனுக்கும் தலைவிக்கும் அவ்வளவில் மனநிறைவு ஏற்படுமா? பிரிந்த பின் புணர்ந்த நினைவும் புணர்ந்தார் உருவமும் நெஞ்சை அரித்தன. புதிய பெரிய உறவை மீண்டும் ஒருமுறை களித்துக் காண்பதே இடந் தலைப்பாடு. இத் தலைப்பாட்டால் ஆரா இளைய நெஞ்சங்கள் வேகந்தணிகின்றன; அமைதிக்கு வருகின்றன; நம்பிக்கை கொள்கின்றன.

3. பாங்கற் கூட்டம்

இடந்தலைப் பாட்டின் பின்னர், நண்பன் தலைவனைக் காண்கின்றான்; முகச்சோர்வைக் கண்டு இரவெல்லாம் உறக்க மில்லையோ என்று பொதுப்படக் கேட்கின்றான். காமத்தைப்பற்றி வெளிப்படையாக உரையாடல் ஆண் நண்பர்களின் மனக்கூறு. உறங்கவில்லையோ என்ற வினாவுக்கு ஒரு குறச்சிறுமியின் தண்ணீர்போலும் மென்சாயல் தீப் போலும் என் நெஞ்சுரத்தை அவித்துவிட்டது;

சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறுமகள்
நீரோ ரன்ன சாயல்
தீயோ ரன்னவென் உரனவித் தன்றே. *(குறுந். 95)*

என்று தலைவன் ஒளிவு மறைவின்றிப் பெருமிதம் தோன்ற மறுமொழி கின்றான். இவ்வொழுக்கம் நின் அறிவுக்கும் பெருமைக்கும் குடிமைக்கும் தகுமோ என்று இடிக்கும் நண்பனுக்கு, 'இவை யெல்லாம் உன்னைவிடஎனக்குத்தெரியும். அவள் குவளைக் கண்ணைப் பார்ப்பதற்குமுன் பேச 'வேண்டிய பேச்சுக்கள்' எனத் தலைவன் எதிருரைக்கின்றான் (நற். 190) அறிவுநிலையில் நிற்கும் இளம்பாங்கன், "தலைவி அரியவள்; அவள் நினைப்பை விட்டொழி (நற். 201) என்று மேலும் தடுத்துரைப்பவே. தலைவன் ஆற்றலன் ஆயினான். காமக்கிறுக்கனாய்க் காதற்பித்தனாய் கைகடந்து பேசல் ஆனான்.

கேளிர் வாழியோ கேளிர் நாளுமென்
நெஞ்சுபிணிக் கொண்ட அஞ்சில் ஓதிப்
பெருந்தோட் குறுமகள் சிறுமெல் லாகம்
ஒருநாட் புணரப் புணரின்
அரைநாள் வாழ்க்கையும் வேண்டலென் யானே *(குறுந். 280)*

இறைவனைப் பேசாத நாளெல்லாம் பிறவாத நாளாக அன்பன் கருதுவான். போர்க்களம் புக்குப் புண்படாத நாளெல்லாம் புறங்கொடுத்த நாளாக மறவன் கருதுவான். அகம் புகுந்தவளின் மெல்லிய ஆகத்தை மேவாத நாளெல்லாம் வாழ நாளாகக் காதலன்

கருதுவான். மக்கள் ஆண்டு பலவாக ஆயிரம் ஆயிரம் நாட்கள் வாழ்கின்றனர். பலர் வாழ்க்கையை நினைந்து பார்ப்பின், எல்லா நாளும் சிறப்பின்றி, ஒருநாள் போலவே கழிகின்றன. இன்னநிலையை மேற்காட்டி குறுந்தொகைத் தலைவன் வெறுக்கிறான். இதுவரை வாழ்ந்ததை வாழ்க்கையாக அவன் மதிக்கவில்லை. இனியும் இவ்வாறு செல்வதை அவன் விரும்பவில்லை. நினையத்தக்க வினைச்சிறப்புடைய ஒரு நாளாவது வேண்டும் என்றும், அந்நாள் தன் உள்ளம் கவர்ந்த கள்வியின் ஆகத்தைத் தழுவும் நாளே என்றும், அதன்பின் வீண்வாழ்க்கை சிறுபொழுதும் வேண்டாம் என்றும், ஆராக் காதலால் தன் நண்பன் அதிரும் குறிக்கோளைச் சொல்லுகிறான். கேளிர் கேளிர் என்று தோழனை அன்புதோன்ற அடுத்தடுத்து விளித்தல் காண்க. உண்மை நட்பு மறுப்பறியாது; காமத்துக்குக் கண்ணில்லை (குறுந். 78); அந்நோய் பற்றிய தலைவனுக்கு எப்போதும் உறக்கமில்லை (ஐங். 173); என்செய்வது என்று இயல்பு உணர்ந்த தோழன் தலைவன் சொல்லை குறியிடம் செல்கின்றான். முன்னரே வந்து நிற்கும் தலைவியின் அன்பைக் கண்டு வியக்கின்றான் (ஐங். 174) பாங்கனால் தலைவனுக்குத் தலைவியோடு ஒரு கூட்டம் நிகழ்கின்றது. இது பாங்கற்கூட்டம் எனப்படும்.

பாங்கற் கூட்டம் பற்றி 27 அகப்பாடல்கள் உள. இவற்றுள் பாங்கன் கூற்றாய் வருவன இரண்டே. (குறுந். 78, 204) எஞ்சிய இருபத்தைந்தும் தலைவன் கூற்றாவன. சங்கப்புலவர்களுள் மிளைப் பெருங் கந்தனார் என்பவரே தலைவன் கூற்றாகவும் பாங்கன் கூற்றாகவும் இரு பாடல்கள் பொருள் தொடர்ச்சி படப் பாடியிருக்கக் காண்கின்றோம். சங்கப் பாடல் எல்லாம் ஒன்றோடொன்று கருத்துக் கோவையில்லாத் தனித்தனித் துறைப் பாடல்களே; எனினும் கந்தனார் போலும் ஓரிரு புலவர்கள் சில துறைத் தொடர்பு அமையப் பாடிய கோவைப் பாடல்களும் உள என்பது குறிப்பிடத்தகும்.

மிளைப்பெருங் கந்தனார்

காமம் காமம் என்ப காமம்
அணங்கும் பிணியும் அன்றே நுணங்கிக்
கடுத்தலும் தணிதலும் இன்றே யானை
குளகுமென் றாண்மதம் போலப்
பாணியும் உடைத்தது காணுநர்ப் பெறினே (குறுந். 136)

இது தலைமகன் பாங்கற்கு உரைத்தது.

காமம் காமம் என்ப காமம்
அணங்கும் பிணியும் அன்றே நினைப்பின்
முதைச்சுவற் கலித்த முற்றா இளம்புல்

மூதா தைவந் தாங்கு
விருந்தே காமம் பெருந்தோ ளோயே. (குறுந். 204)

இது தலைமகற்குப் பாங்கன் உரைத்தது.

இருபாட்டிலும் முதலடிகள் இரண்டும் ஒத்தன. காமம் என்னும் சொல் பண்டு இடத்திற்கேற்ப உயர்காமத்தையும் இழிகாமத்தையும் குறித்தது போலும், 'உயர்ந்த காமத்தை இழிவான காமமாக உலகோர் கருதுவர்; அவ் வுயர்காமம் இழிகாமம் போல வருத்தமும் நோயும் தருவதில்லை, என்று மிளைப்பெருங் கந்தனார், காதலை நுகர்ந்த தலைவன் வாயிலாகவும், அவனை இடித்துரைக்கும் அறிஞன் வாயிலாகவும் உலகோர்க்கு மறுப்பு உரைப்பர்; காமத்தின் சிறப்பைப் புலப்படுத்துவர். இவ்வுயர் காமமாவது யாது? அன்புடைய எதிர்பாலாரைக் காணும்போது வெளிப்படுவது என்கின்றான் தலைவன். இஃது இவன் துய்த்துக் கண்டது. காமமாவது ஒரு மனநிலை; விரும்பினோரை அது விடாது; வெறுத்தோரை அது தொடாது என்று இடித்துரைக்கின்றான் பாங்கன். இஃது இவன் துய்ப்பின்மையால் வந்த அறிவுரை; அல்லது, கடமையுணர்ச்சியால் எழுந்த உரை என்றும் கொள்ளலாம். பாங்கற் கூட்டச் செய்யுட்கள் எல்லாமே அறிவுச்செறிவும் இலக்கியப் பொலிவும் உடையன. காதலியர் தம் கண் என்னும் பின்னா வலையுள்ளும், கூந்தல் என்னும் பின்னிய வலையுள்ளும் பட்ட ஆடவர் தம் நெஞ்சத் துடிப்பைக் காட்டுவன. இப் பாடல்களால், காதலாவது ஒற்றுமை வேற்றுமைத்தரம் பார்த்து ஆராய்ச்சிசெய்து அறிவுநிலையில் நிகழ்வதன்று; 'இதற்கிது மாண்டது என்னாது அதற்பட்டு ஆண்டொழிந்தன்றே மாண்ததை நெஞ்சம்' (குறுந். 184) என்று ஒரு தலைவன் கூறியபடி, காரணம் கடந்த தூய மனநிலையில் அமைவது என்ற உண்மையைக் கற்கின்றோம்.

ஐந்திணை இலக்கிய மாந்தர்களில் பாங்கன் படைப்பு இருவகைப் பயனுடையது. செகப்பிரியர் எழுதிய 'பன்னிரண்டாம் இரவு'[1] நாடகத்தில், இலீரியாக் கோமகன் ஆர்சினோ செல்வப் பெருமாட்டி ஒலீவியாவைக் காதலிக்கின்றான். இவன் காதலுக்கு அவள் இணக்கக்குறிப்பு நல்கவில்லை. ஆதலின் தன் பாங்கன் செசாரியோவைத் தூது விடுக்கவே அவன் ஒலீவியாவை நேரிற் கண்டு அவள் தனியழகையும் ஆர்சினோவின் பெருங்காதலையும் கவிஞன் போல எடுத்தியம்புகின்றான். 'மிக நலம் பெற்ற நீ ஒரு தமியளாய் மூப்படையலாமா? உன் எல்லையற்ற அழகுக்கு உலகில் ஒருபடி வேண்டாமா?' என்று இனிக்கப் பேசுகின்றான். 'இங்ஙன்

1. "Lady, you are the cruell'st she alive
If you will lead these graces to the grave
And leave the world no copy."

தலைவியாவாளைப் பாங்கன் நேர்நின்று காணலும் முன்னின்று மொழிதலும் தமிழ் அகத்திணைக்கு ஒவ்வா; தமிழகம் பெற்ற மகளிர் நாணத்துக்கு ஏலா. ஈண்டு பாங்கன் தலைவியைத் தான்காண்பான், அவளால் காணப்படான். தலைவி பாங்கன் தன்பக்கமாகச் செல்வதைக் கண்டாலுங்கூட, அவனை ஒரு வழிப்போக்கன் எனவே கருதிவிடுவாள். தன்னைப் பார்த்துவரத் தலைவன் விடுத்த தோழன் என எண்ணாள். ஏன்? தலைவனது தோழர்கள் யார் என்பதுபற்றி அவளுக்குத் தெரியாது. 'தோழியிற் கூட்டம் போலப்பாங்கன் உரையாடி இடைநின்று கூட்டாமையின்' (தொல். 1047) என நச்சினார்க்கினியரும், "தன் வயிற்பாங்கன் அவள்வயிற் பாங்கு செய்யான்" (தொல். 1443) எனப் பேராசிரியரும் பாங்கன் கருமத்தை வரையறுத்தல் காண்க.

குறித்த இடத்துத் தலைவி வந்து நிற்கின்றாளா? என்பதைப் பார்த்துச் சொல்லும் ஓர் அறிவிப்பாளனே பாங்கனாவான். எனினும், இவன் தொடர்பால் அகத் தலைவனுக்கு இருநலம் உண்டு. இன்ப வெள்ளத்தால், துன்பப் புயலால் நெஞ்சு அலையும்போது, அவற்றைப் பிறரிடம் பேசினால் ஆறுதல் உண்டாகும். கேட்பதற்கு உற்ற நண்பர்களும் நண்பிகளும் வேண்டும். தலைவன் எதிர்பாரா நிலையில் ஒரு நங்கை பால் காதல் கொண்டு தன் நெஞ்சகத்தைப் புதிய உணர்ச்சிகளுக்குப் பறிகொடுத்து விட்டான். காம வணுவும் காம சுரமும் அவன் உள்ளத்தைத் தின்றன.

ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கிற்
கையில் ஊமன் கண்ணிற் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போலப்
பரந்தன் றிந்நோய் நோன்றுகொளற் கரிதே (குறுந். 58)

என்றபடி, களவுத்தலைவன் தன்வயம் இழந்து, காமவயத்தன் ஆனான். திருமணத்துக்குப்பின் தலைவி உடன்வாழ்வாளாதலின், தலைவனது காமவேகத்துக்கு இடனில்லை. களவொழுக்கத்தோ அவள் காணற்கும் கலத்தற்கும் அரியவள். அதனால் அவனுக்கு மேலும் காமசுரம் பெருகின் உயிர்போதலும் கூடும்; அறிவு திரியவும் செய்யும். இந்நிலையில் பாங்கன் ஒரு பற்றுக்கோடு. அவனிடத்துத் தன் தலைவியைத் 'தெய்வச்சாயல் உடையவள், மெல்லியள்' அரும்பிய முலையள், சிவந்த வாயினள்' (ஐங். 255) என்று சொல்லுந் தோறும் 'சிறுபாம்புக்குட்டி காட்டானையை வருத்தியதுபோல அவள் மெல்லுறுப்புக்கள் என்னைத்தாக்கின' (குறுந். 119) என்று சொல்லுந்தோறும் தலைவனுக்கு மனவேகம் தணியவும், அறிவு நிலைக்கு வரவும் காண்கின்றோம். தலைவன் கூற்றாக 25 பாடல் இருப்பதற்கு இவ்வுளவியலே காரணமாம்.

பாங்கன் தலைவனுடன் சேர்ந்து அவன் செல்லுழி எல்லாம் செல்லும் வழக்கமுடையவன். விட்டுப் பிரியாத தோழமை கொண்டவன். தலைவன் ஒருத்திபாற் பட்ட பின்னும், பாங்கன் முன்போல் உடன்வருதல் தகாதன்றோ. இதனை அவன் எப்படி அறிவான்? தலைவனது புதிய உணர்ச்சியையும் புதிய உறவையும் அவன்தன் மெய்ப்பாட்டாலும் சொல்லாலும் தெரிந்து கொண்ட பாங்கன் குணமும் குலமும் அறிவும் சுட்டி மாற்ற முயல்கின்றான்; பயனின்மை கண்டபின் அவனோடு கூட வருவதை நிறுத்திக் கொள்கின்றான். இதனால் தலைவனுக்குத் தலைவியைக் காணவேண்டும்போது தனித்துச் செல்லும் பெருவாய்ப்புக் கிடைக்கின்றது. இவ்வாறு பாங்கன் தலைவனது காமப்புதுமையைக் காது கொடுத்துக் கேட்கும் செவியனாய், மேலும் சிறிது இடையூறும் செய்யாத தோழனாய்க் களவின் தொடக்கத்தே வந்து போய்விடக் காண்கின்றோம். ஐந்திணை இலக்கியத்து இவன்வரவு இதனொடு முற்றும்.

மேல் விளக்கிய இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு பாங்கற்கூட்டம் என்ற மூன்று காட்சிக்கும் குறியிடம் ஒன்றே ஆகவும், தலைவன் இடந்தலைப்பாடுபோல் மீண்டும் ஏன் தானே சென்றிருத்தல் கூடாது? பாங்கனை விடுத்ததன் நோக்கம் என்ன? பல் இழந்த கிழப்பசு இளம்புல்லைத் தடவி மகிழ்ந்த மனவின்பமே காமவின்பம்; காமமாவது தன்னை உணர்ந்தார் உணராதார் எனப் பாராது எல்லாரையும் பற்றும் பெரும் பேதைமையுடையது; இனி உள்ளல் கூடாது என்றெல்லாம் காதல்காயும் தலைவனைப் பாங்கன் நகையாடி இடித்துரைக்கின்றனன். தன் வேட்கை தக்கதே என்றும், இடிப்புரையால் ஒழியாதது என்றும் உணர்த்த விரும்பினான் தலைவன். பாங்கன் தன் சொல்லை நம்பான்; தன்னை மயக்கியவளைக் கண்டால் நம்புவான்; பின்னர் இடித்துரையான் என எண்ணினான்.

அம்ம வாழி கேளிர் முன்னின்று
கண்டனி ராயிற் கழறலிர் மன்னோ....
நற்றேர் வழுதி கொற்கை முன்றுறை
வண்டுவாய் திறந்த வாங்குகுழி நெய்தற்
போதுபுறங் கொடுத்த உண்கண்
மாதர் வாண்முகம் மதைஇய நோக்கே *(அகம். 130)*

'தோழ! என்னைப் பிணித்தவளின் நோக்கு மதர் மதர்ப்பு உடையது. அவள் கண் பசுமைக்குக் கைபடாத, வண்டுவாய் திறந்த, துறையிடத்து வளர்ந்த நெய்தற்பூவும் நிகராகாதே. இந் நோக்கழகியை முன்னின்று நீ ஒருமுறை கண்டுவிட்டாற் போதும்; பின் என்னைக் கடிந்துரையாய்' என்று ஏவவே, பாங்கனும் தலைவன்

சொன்ன குறியிடம் சென்று, அத்தகையாளைக் காண்கின்றான். 'நெய்தற்பூ மணக்கும் கூந்தலழகியின் பிடிப்பட்டோர் இரவும் உறங்குவாரோ? பாம்பு கடித்தன்ன பாடுபடாரோ?' என்று பாங்கனே உணரக் காண்கின்றோம்.

இரவி னானும் இன்துயில் அறியாது
அரவுறு துயரம் எய்துப தொண்டித்
தண்ணறு நெய்தலின் நாறும்
பின்னிரும் கூந்தல் அணங்குற் றோரே. (ஐங். 173)

4. தோழியிற் புணர்ச்சி

சங்க இலக்கியத்து 882 களவுப் பாடல்கள் உள. இவற்றுள் 40 பாடல்களே இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு பாங்கற் கூட்டம் என்ற மூன்று வகைக்கும் உரியன. எஞ்சிய 842 பாடல் - 95 விழுக்காடு - தோழியிற் புணர்ச்சி என்னும் ஒரு வகைக்கே வருவன. இதனால் தோழியின்றிக் காதலர்களின் களவொழுக்கம் நீளாது என்பதும், ஐந்திணை இலக்கியப் படைப்புக்குத் தோழி என்னும் ஆள் (பாத்திரம்) இன்றியமையாதவள் என்பதும், தோழியிற் புணர்ச்சிக்குரிய துறைகளே புலவர்களின் நெஞ்சைக் கவர்ந்தன என்பதும் பெறலாம். தோழியின் தொடர்புக்குப் பின்நிகழும் காதற் செய்திகள் அளவில. அவற்றையெல்லாம் இங்குக் கூறப் புகுதல் மிகையும் குறையுமாம், வேண்டுமளவே விளம்புவல்.

காதலியைத் தற்செயலாக எவ்வளவு நாள் காண முடியும். பாங்கன் எவ்வளவு உதவி செய்வான்? நினைத்த விடமெல்லாம் சுற்றித்திரியும் போக்குரிமை ஆடவர்க்குத் தமிழ்ச் சமுதாயத்துக்கு உண்டு. அன்ன உரிமை குலமகளிர்க்கும் குமரியர்க்கும் இல்லை.

யாயே கண்ணினும் கடுங்கா தலளே
எந்தையும் நிலனுறப் பொறாஅன் சீறடி சிவப்ப
எவனில குறுமகள் இயங்குதி என்னும் (அகம். 12)

காப்பும் பூட்டிசின் கடையும் போகலை
பேதை யல்லை மேதையங் குறுமகள் (அகம். 7)

இரவும் பகலும் தாய் தந்தையின் கடுங்காப்புக்கு இல்லக் குமரியரை உள்ளாக்குவது தமிழ் நாகரிகம். "வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்" எனச் சிலப்பதிகாரமும், "கன்னிக் காவலும் கடியிற் காவலும் விலைமகளிர்க்கு இல்லை" என மணிமேகலைக் காப்பியமும் மொழிதல் காண்க. ஒருகால் பெற்றோர் இசைவுபெற்று வெளிச் செல்லினும் விடாது தோழியும் உடன் செல்வாள்.

யாமே பிரிவின் றியைந்த துவரா நட்பின்
இருதலைப் புள்ளின் ஓருயி ரம்மே (அகம். 12)

எனத் தலைவி தோழியின் இணைபிரியாக் கேண்மையைக் கபிலர் இல்பொருளுவமை என்னும் கற்பனையால் வெளிப்படுத்துவர். இவ்விருவரும் ஒருநாள் நீர்விளையாடப் பார்த்த தலைமகன் அவர்தம் கடுநட்பைத் தெளிந்தான். 'தெப்பத்தின் தலைப் பாகத்தைத் தோழி பிடித்தால், இவளும் அப் பாகத்தையே பிடிக்கின்றாள். அவள் அதன் கடைப்பகுதியைத் தழுவினால் இவளும் அதனையே தழுவ முந்துகின்றாள். தோழி தெப்பப்பிடி வழுவி நீருள் மூழ்கினால், இவளும் உடன் மூழ்குவாள் போலும் (குறுந். 222)' எனக் கண் சான்றாகத் தலைவன் கண்டு கொண்டனன். தோழி நீங்கா ஓர் இடையூறு என்றும், தோழியின் தோழமையைப் பெற்றாலன்றித் தலைவியின் தோளைப் பெறுதல் அரிது என்றும் அவனுக்குப் புலனாயிற்று.

களவுத் தொடர்பைத் தோழிக்கு உணர்த்துவது எங்ஙன்? தலைவி நாணொடு பிறந்து நாணிலே வளர்ந்தவள். ஆதலின் தோழியிடத்துத் தன் புதிய உறவைக் கூறவே கூறாள். கூறும் பொறுப்போ கூசாப் பிறப்பினானாகிய ஆடவனைச் சார்ந்தது. தோழியும் தலைவியும் ஒருங்கு இருக்கும்போது சென்று வெளிப் படையாகவோ குறிப்பாகவோ களவை நயமாகப் புலப்படுத்தல் தலைவன் முறையாகும்.

ஒன்று, இரப்பான்போல் எளிவந்தும் சொல்லும் உலகம்
புரப்பான் போல்வதோர் மதுகையும் உடையன்
வல்லாரை வழிபட் டொன்றறிந் தான்போல்
நல்லார்கட் டோன்றும் அடக்கமும் உடையன்
இல்லோன் புன்கண் ஈகையிற் றணிக்க
வல்லான் போல்வதோர் வன்மையும் உடையன்
அன்னான் ஒருவன்தன் ஆண்டகை விட்டென்னைச்
சொல்லுஞ்சொற் கேட்டீ கூடரிழாய் (கலி. 47)

எளிமை, பெருமிதம், அறிவு அடக்கம், அருள் ஆற்றல் உடைய ஒரு நம்பி எவ்வன்மையும் இல்லாத என்பால் வந்தான்; நின்னை இன்றி எனக்கு வாழ்க்கை இல்லை என்றான்; ஒரு பெண்பொருட்டுத் தன் ஆண் தகுதிகளை யெல்லாம் கை விட்டான். இவன் சொல் நம்பத்தக்கதோ? தனி ஒரு பெண்ணால் ஆராய்ந்து உண்மை காணும் தகுதியுடையதோ என இவ்வாறு தலைவனின் தோற்றத்திலும் பண்பிலும் தோழி ஈடுபட்டாள். அவன் குறையை முடித்து வைக்கவும் எண்ணினாள். எனினும் தலைவியை அணுகுவது எப்படி? களவுச் செய்தி தோழிக்குத் தெரியும் என்று அறிந்தாற்கூட அவள் நாணம் பொறுக்காதே? மெய்யானநிகழ்ச்சியைச்சொல்லியோ (கலி. 60), பொய்யாக நிகழ்ச்சியைக் கற்பித்தோ (கலி. 37 அகம். 32) இரு பொருள்படும்படி தொடரமைத்து, எவ்வகையானும் தலைவியின் மெல்லிய நாணம் ஊறுபடாதவாறு, அவள் நெஞ்சத்தை அறிய முயல்க என்று தொல்காப்பியர் வழி கூறுவர்.

மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது
பல்வேறு கவர்பொருள் நாட்டத் தானும் (தொல். 1059)

மகளிற்கு நாணுணர்ச்சி மிகுக் கூரியது. ஒரு பெண்ணின் காதலுள்ளத்தை நெருங்கிப் பழகும் மற்றொரு தோழிப் பெண் வினவத்துணியாள். "என் தோழி நனி நாணுடையள் (ஐங். 205) என்று தன் தலைவியின் இயல்பை ஒரு தோழியே கூறுதல் காண்க. தோழி என்ன, ஈன்று வளர்த்த தாய்கூடத் தன் ஒரு மகளின் காதற்கரவைக் கேட்க அஞ்சுவாளென்றால் திருநுதல் நல்லவர் நாணின் நுண்மை அறியத்தக்கதோ? 'தன்மகள் போக்கைத் தாயே அறிந்துகொள் ளட்டும்; இது பற்றி நமக்கென்ன கவலை என்று வாளா இராது, வாய் கொழுத்த ஊர்ப் பெண்டுகள் ஒருநாள் இருநாள் அல்ல, பலநாள் வந்து வந்து என்னிடம் என்மகள் பற்றிச் சொல்லுகிறார்கள். யானோ அவளிடம் அதுபற்றி ஒன்றும் வாய்திறப்பதில்லை. ஏதும் கேட்கப் புகின், நாணம் அவளைக் கொல்லும். ஆதலின் உரார் சொல்லும் செய்தியை மிகவும் மறைத்து வைத்துக் கொள்கிறேன்."

உவக்குந ளாயினும் உடலுந ளாயினும்
யாயறிந் துணர என்னார் தீவாய்
அலர்வினை மேவல் அம்பற் பெண்டிர்
இன்னள் இனையள்நின் மகளெனப் பன்னாள்
எனக்குவந் துரைப்பவும் தனக்குரைப் பறியேன்
நாணுவள் இவளென நனிகரந் துரையும் யான் (அகம். 203)

என ஒரு தாய் கூற்றில் வைத்துக் கபிலர் பெண்பாலின் நாணச் செவ்வியைப் புலனாக்குவர். குமரியர் தம் காமக்குறிப்பைச் சொல்லாலும் வெளிப்படுத்துவதில்லை. எண்ணத்தாலும் அறிய இடங்கொடுப்பதில்லை. ஆகலின், அன்னவர் அகமனத்தைக் காண்பதற்கு ஒருவழி போதாதென்று தோழிக்கு எழுவழி கூறுவர் தொல்காப்பியர். அவையாவன. 1. புதிய மணம் 2. புதிய களை 3. புதிய ஒழுக்கம் 4. உணவில் மனம் செல்லாமை 5. செயலை மறைத்தல் 6. தனியே செல்லல் 7. தனியே இருத்தல்.

மடலேறுதல்

தலைவியின் நற்குறிப்பு அறிந்தபின், காதலர்கள் பகலும் இரவும் காணவும் கூடவும் தோழி வழிசெய்வாள். இயற்கைப் புணர்ச்சி முதலான முன்னைக் கூட்டங்கள் நிகழ்ந்த இடத்தே நிகழும். தோழி கூட்டுவிக்கும் கூட்டங்களோ வேறுவேறிடத்து நடக்கும். இன்ன இடம் என்று களம் சுட்டுவது, தோழியின் பொறுப்பாகும். இக்காட்சிக் களங்கள் பகற்குறி, இரவுக்குறி எனப்படும். தலைவனோடு தலைவியின் உறவை அறிந்துகொண்ட பின்னும், தோழி தலைவனுக்கு இடையூறு போலக் காட்டிக் கொள்வாள்.

அவனது பொங்கிய காதலுக்குச் செவிசாயாள். அவன் அரிது முயன்று ஆர்வத்தோடு கொண்டுவரும் கையுறையை ஏற்க மறுப்பாள். வேண்டுமென்றே கூட்டம் நிகழாவாறு நாட் கடத்துவாள். தலைவியின் அருமையைத் தலைவன் உணர வேண்டும் என்பதும், தலைவனின் உறுதியைத்தான் உணர வேண்டும் என்பதுமே தோழி இங்ஙனம் செய்வதன் நோக்கம்.

அகத்திணைக்கண் மடல் அல்லது மடல்மா என்பது பனங்கருக்கால் செய்யப்பட்ட குதிரையைக் குறிக்கும். இக் குதிரைக்கு ஆவிரம்பூ மாலையும் மணியும் அணிதல் உண்டு. (குறுந்.173) காமுற்ற பெண்ணை எய்தப்பெறாத ஆடவன் மார்பில் எலும்பு மாலையும் தலையில் எருக்க மாலையும் கொண்டு மடல்மாமேல் ஏறித் தெருவில் வருவான் (குறுந். 17, 182). இவ்வழக்கு மடலேறுதல் எனப்படும். இதனால் தலைவனின் திட்பத்தையும் அவன் காதற்கு இலக்கான நங்கையையும் ஊரார் அறிவர்; மேலும் அரம்போலும் பனங்கருக்குப் பட்டுப்பட்டு அவன் மேனியிலிருந்து ஓடிவரும் குருதியொழுக்கைக் கண்டு இரக்கங் கொள்வர். இன்ன காதலனுக்கு மகளைக் கொடுக்க மறுக்கலாமா என்று அவள் பெற்றோரைக் குறையுங் கூறுவர். ஆதலின் ஊரறிய மடலேற்றம் நிகழாதபடி மணங்கள் முடிந்துவிடும் என அறியலாம். தோழி, முன் சொல்லியபடி தலைவனது குறைக்குச் செவிசாய்க்காது, கையுறைக்குக் கைகொடாது காலந் தாழ்த்தும்போது, இனி மடலேறுவது தான் எண்ணியது எண்ணியாங்கு எய்துவதற்கு வழி என்று அவன் அவளிடம் கூறுவான்.

மாவென மடலும் ஊர்ப பூவெனக்
குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் சூடுப
மறுகின் ஆர்க்கவும் படுப
பிறிதும் ஆகுப காமங்காழ்க் கொளினே. (குறுந். 71)

இக்கூறுகை தோழிக்குச் சிறிது கலக்கத்தை உண்டாக்கும். அதன்பின் தோழி துணையால் களவு நீளவும் காமம் செழிக்கவும் காண்கின்றோம்.

சங்கப் புலவர் மாதங்கீரனார் பாடிய செய்யுட்கள் இரண்டே (குறுந். 182, நற். 377) அவ்விரண்டும் மடல் மாத் துறை பற்றியன. 'மடல்பாடிய மாதங்கீரனார்' என்ற சிறப்புப் பெயர் இப்புலவர்க்கு வழங்கியிருத்தலைக் கருதுங்கால், இரண்டு சிறிய பாடல்களுக்காக இப் பெயர் பெற்றிரார் என்றும், இவ்வொரு துறையில் பல பாடல்கள் ஆக்கியிருப்பர் என்றும் துணியலாம். மடல்மாப்பொருள் குறித்துப் பதின்மூன்று பாட்டுக்கள் சங்கஇலக்கியத்து உள. இவற்றுள். நற்றிணை 143, 152, 342, 377; குறுந்தொகை 14, 17, 32, 173, 182 என்ற ஒன்பதும் ஐந்திணைக்கு உரியவை. கலித்தொகை 138, 139,

5.5.

140, 141 என்ற நான்கும் பெருந்திணைக்கு உரியன. ஐந்திணை மடலுக்கும் பெருந்திணை மடலுக்கும் நுண்ணிய பெரிய வேறுபாடு உண்டு. மடல்மா ஏறுவேன் என்று வாயளவிற் சொல்லுதல் ஐந்திணையாம். "மடல்மா கூறும் இடனுமார் உண்டே" (தொல். 1047) என்பது இலக்கணம். அவ்வாறன்றி மாமேல் ஏறியே காட்டும் செய்கை பெருந்திணையாய் விடும். "ஏறிய மடற்றிறம்" (தொல். 969) என்ற தொடரில் 'ஏறிய' எனவரும் இறந்த காலவினை பெருந்திணை யிலக்கணத்தைச் சுட்டுதல் காண்க.

பகல் இரவுக் கூட்டங்கள்

களவொழுக்கம் திடீரென நின்றுபோவதற்கு இடனுண்டு. தோழியின் உறுதுணையால் அது நீடித்து ஓடுகின்றது. தோழி பெண்ணாயினும் பணிமகளாகலின், தலைவியைவிடத் துணித்துச் செல்லும் உரிமையும் கடமையும் அவளுக்கு உண்டு. காதலோர் தம் கூட்டத்துக்கு தகும் இடம் எது? தகுங்காலம் எது? என்று அவளால் காணமுடியும். எனினும், அவளும் ஒரு குமரியாகலானும் ஏவல் மகளாதலானும் சில எல்லைக்கு உட்பட்டே உதவிசெய்யக் கூடும். அவளுடைய சுற்றுச் செலவும் ஓரளவுபட்டதே, மறைவொழுக் கத்தைச் சமுதாயப் பெருங்கண்கள் பார்த்துக் கொண்டிரா; சுற்றுப் புறக் குளவிகள் கொட்டாது விடா; எண்ணஞ்சிகள் துளையாது போகா; ஆதலின் காதற்களவுக்கு உலகில் புகலிடம் இல்லை. களவைக் கற்பாக்கினாலல்லது உலகுக்கு உறக்கம் இல்லை.

'மலர்ந்த வேங்கை மரநிழலில் தலைவனொடு ஒக்க இருந்து கதிர்தின்ன வந்த கிளிகளை இருவரும் எழுந்து ஓட்டி அருவியாடிச் சந்தனம் பூசி மகிழ்ந்த இன்பப் புணர்வுக்கு இனி வாய்ப்பு உண்டோ? தினைக்கதிர்கள் முற்றி விளைந்தன. வேட்டுவர் கொய்து செல்வர். ஆதலின் புனங்காவலைச் சாக்காக வைத்துத் தலைவனொடு அளவளாவுதல் இனிமேல் இயலாது' (நற். 259)' என்று தோழி தலைவிக்கு அறிவிக்கின்றாள். தலைவனுக்கும் அது கேட்கின்றது. முற்றிய தினை களவொழுக்கத்திற்கு முதல் இடையூறாகும். தலைவி புனங்காத்தல் இல்லெனவே, பகற்காட்சியும் புணர்ச்சியும் இல்லையன்றே. பின்னர் இரவுக்குறிக்கு வழிசெய்க என்று தலைவன் தோழியைக் குறையுற்று நிற்பான். இரவுக் களவின் தொடக்கத்துக் கூட்டத் தலைவி வீட்டின் புறத்து நடக்கும் என்றும், சிலநாளைக்குப்பின் அச்சம் ஒழிந்து உள்மனையிலும் சென்று களவு நிகழ்த்துவர் என்றும் நச்சினார்க்கினியர் குறிப்பிடுவர் (தொல். 1076). "மனையோர் கிளவி கேட்கும் வழி" என்பதனால், வீட்டின் புறமாவது வீட்டார் பேசுவது கேட்கக்கூடிய அருகு என்பது பெறப்படும். புதியராய் இல்லம் வந்தார் யார்க்கும் விருந்தோம்புதல் தமிழர்தம் இல்லறமரபு. மாலைப்போது கதவைச் சார்த்துவதற்கு

முன் விருந்தினராய் வெளியில் நிற்பார் உண்டோ? எனக்கேட்டுச் சார்த்தல் பண்டைப் பழக்கமாம் (குறுந். 118). ஒரு சமுதாயத்தை அது நம்பும் பழக்க வழக்கங்களைக் கருவியாகக் கொண்டே ஏய்த்துவிட முடியும். ஆதலின் களவுத் தலைவன் தலைவியின் இல்லத்துக்கு மாலையிற் செல்லுதலும், அவள் தாய் அவனை விருந்தினன் எனக் கருதி முறையாக வரவேற்றலும் உண்டு. எனினும் ஒரு தாய்க்கு உறக்கம் வீரவில்லை. குமரி வாழும் வீட்டகத்துப் புதிய ஓர் இளைஞன் வருதலும், இரவில் தங்குதலும் அவளுக்கு ஐயத்தை உண்டாக்கின. தாயின் விழிப்பு இரவுப் புணர்ச்சிக்குத் தடையாயிற்று. எதிர் பார்த்தது நடவாமையின், மகளுக்கு ஒரே சினம். 'அரிதாக ஒரு நாள் நம் மகிழ்ச்சிக்கு உரிய விருந்தினன் வந்தான். பகைவன் வந்த ஊரினர்போல அன்னை தூங்கவில்லை. காதலர் தம் இன்பத்துக்குக் குறுக்காக நின்ற இவள் நரகத் துன்பம் என்றும் பெறுக"

பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரையத்துச் செலீஇயரே அன்னை
ஒருநாள் நகைமுக விருந்தினன் வந்தெனப்
பகைமுக ஊரிற் றுஞ்சலோ இலளே (குறுந். 292)

எனப் பெண்ணாக ஈன்று குமரிவரை வளர்த்த தாயையும் மகள் சபிக்கக் காண்கின்றோம். பருவத் துணிச்சல் இது. பெற்ற மகளைக் காவல் செய்யும் தாயைப் பெண் கொலை புரிந்த நன்னனோடு ஒப்பிடும்போது, இளம் பெண்ணின் ஆராக் காமவுணர்ச்சியையும், அதனால் வரும் வெகுளியுணர்ச்சியையும், அன்னையை நன்னனெனக் கருதும் வெறுப்புணர்ச்சியையும் உணர்ச்சி யுடையோர் புரிந்துகொள்ள முடிகின்றது.

காதலர்கள் காதலிக்கும் தொடக்கத்துத் தம்மை எதிர் நோக்கி யிருக்கும் துன்பத் தொகையைப் பற்றி அறியார். அதுபோல் துன்பமலையை இன்பக் கடலுக்குள் தூக்கி எறியும் வன்மை காதலுயிர்களுக்கு உண்டு என்பதையும் அறியார். காலப்போக்கு காதலின் பேராற்றலையும் வழி துறைகளையும் மெல்ல மெல்ல அன்னோர்க்குச் சுற்றுக் கொடுக்கும். காதல் வெள்ளத்து மூழ்கிய ஆடவன் மத யானைகளையும் சுழித்தடித்துக் கொண்டோடும் காட்டாற்று வெள்ளத்தைப் பொருட்படுத்தாது குறுக்கே பாய்ந்து ஆண் பன்றி போல நீந்தித் தலைவியைக் காண நடுயாமத்துப் புறப்படுகிறான். இரவுக்குறியிடம் வந்து நிற்கிறான் (அகம். 18) கூர்த்த மதியுடைய மடந்தை, முருகன் போலும் முன்சினம் கொள்ளும் தந்தை வீட்டில் இருப்பவும், காற் சிலம்பை ஓசையிடாதபடி கட்டிக்கொண்டு, ஏணிமேல் ஏறித் தோட்டத்து இறங்கி, மழை சோ எனப் பெய்யும் நள்ளிரவில் காதலன் அகலத்தைத் தழுவுகிறாள் (அகம். 158, 198) இதுபற்றிக் கேட்கும் செவிலிக்கும், நீ கண்டது கனவு

எனவும், வேண்டிய வடிவம் எடுத்து மலர்சூடி நம் தோட்டத்து ஒரு பேய் வந்து போவதை அறியாயோ எனவும் தோழி நகையாகவும் நயமாகவும் வேறொன்று சொல்லி மழுப்பக் காணலாம். முன்பில்லாத ஆற்றலும் துணிவும் ஒட்பமும் காமத்தால் உண்டாகும் என்ற அடிப்படையில் இரவுக் குறிப்பாடல்கள் அமைந்துள்ளன.

தோழியின் நோக்கம்

ஐந்திணை இலக்கியத்துத் தோழி என்னும் ஆளைப் படைத்த பயன் என்ன? அவள் துணையின்றிப் பகற்குறி, இரவுக்குறிகள் நிகழா; களவொழுக்கம் நீடிக்காது; ஆதலின் தோழி வேண்டும் எனப் பலர் கருதுவர். இக்கருத்துப் பிழைபட்டது. களவு நீளவேண்டும் என்பதும், காதலாயினார் இருவகைக் குறிகள் நிகழ்த்த வேண்டும் என்பதும் அகத்திணையின் நோக்கம் இல்லை. பால் வயத்தால் தாமே கண்டு தம்முட்புணர்ந்த களவுக் காதலர்கள் கற்பாக வேண்டுப் வெளிப்படையாக மணந்து இல்லறம் நடத்த வேண்டும் என்பதே அதன் நோக்கம். இந்நோக்கத்தை நிறைவேற்ற வருபவளே தோழி எனை அறிக. இதனால் தோழி கற்பொழுக்கத்திற் காட்டிலும் களவொழுக்கத்தில் இன்றியமையாதவள் என்பதும் விளங்கும். நோக்கம் நிறைவேறத்தக்க காலம் வாயாவிட்டால், களவு நீடிக்கு என்றும், களவு நீளும்போது பகற்புணர்ச்சி, இரவுப் புணர்ச்சிகள் நடைபெறும் என்றும் கொள்ளவேண்டும்.

காமம் காழ்க்கொண்ட இளைய நெஞ்சங்களுக்கு மேல் செய்ய வேண்டுவன புலப்படா. எண்ணிப்பார்க்கும் அறிவு சில நாளைக்குத் தோன்றாது. இவ்விருவர் செய்கையைத் தோழி அறிவுநிலையில் நின்று நாடுகிறாள். களவு நீடிப்பின், வரத்தகும் கேடுகளைக் காண்கின்றாள். இளையளாயினும் பொறுப்பு உணர்ந்தவளாதலின், திருமணம் செய்து கொள்க என்று தலைவனை இடித்துரைக் கின்றாள். "இவள்மீது வைத்த அன்பால் முதலைகள் வழி மறைத்துக் கிடக்கும் கடற்கரையில் மீன் கூட்டம் துள்ளும் உப்பங்கழிகளை நீந்தி இரவென்று பாராது நீயோ வருகின்றாய். இவளோ நீ வரும் வழியின் கொடுமையை எண்ணிப்பார்த்துத் தன் பேதைமையால் கலங்குகின்றாள். நஞ்சுண்ட இரட்டைக் குழந்தைகளுக்கு வருந்துவதுபோலக் காமங்கொண்ட உங்கள் இருவர் பொருட்டு நான் அஞ்சுகிறேன்.'

கொடுங்கால் முதலைக் கோள்வல் ஏற்றை
வழிவழக் கறுக்கும் கானலம் பெருந்துறை
இனமீன் இருங்கழி நீந்தி நீநின்
நயனுடை மையின் வருதி இவள்தன்

மடனுடை மையில் உயங்கும் யானது
கவைமக நஞ்சுண் டாஅங்கு
அஞ்சுவல் பெருமவென் னெஞ்சத் தானே (குறுந். 234)

என்று தலைவனது அன்பையும் தலைவியின் அறியாமையையும் தன் அச்சத்தையும் சுட்டிக்காட்டித் தலைவனுக்கு வரைவுணர்ச்சி ஊட்டக் காண்கின்றோம். "திருமணம் தவிர்க்க முடியாதது; இன்றியமையாதது. இதனைப் புரிந்து கொள்ளுவோமேல், நயமும் பொருத்தமும் உடையதாகத் திருமணத்தைச் செய்ய முயல்வோம்" என்று அறிஞர் பெர்னாட்சா 'மணங்கோடல்' என்னும் நூலின் முன்னுரையில் குறிப்பிடுவர்.[1] களவொழுக்கம் தூயது, கள்ளவொழுக்கம் தீயது. களவுக் காதலர் மனமாசற்றவர், மணந்து கொள்ளும் உள்ளத்தினர், வெளிப்பட்ட பின்னும் வாழ்பவர். கள்ளக் காதலர் தம்முள் அன்பற்றவர், மணம் என நினையா வஞ்சகர், வெளிப்படின் மாய்பவர் அல்லது மாய்க்கப்படுபவர். காதலுக்குத் திருமணமின்றேல் சமுதாயத்துக்கு வாழ்வில்லை. ஆதலின், அகத்திணை கண்ட தமிழ்ச் சான்றோர் வரைவை - மன்றலை வலியுறுத்தினர் எனத்தெளிக. தோழி களவொழுக்கத்தில் பேரிடம் பெற்றிருப்பதற்கும் 882 களவுப் பாடல்களில் பாதிக்குமேல் வரைவுத் துறைகளாய் இருப்பதற்கும் திருமணக் கொள்கையே ஏதுவாகும்.

நள்ளிரவில் தலைவன் வரும்வழி யானையும் புலியும் பாம்பும் நடமாடுவது. தடம் குறுகலும் வழுக்கலும் அமைந்தது. மழை இடி மின்னலோடு கொட்டுவது. மரப்பொந்தும் செடித்தூறும் கொடிப் பிணக்கமும் உடையது. நடுயாமம் எனக் காலம் பாராதும், உயர்ந்து சரிந்த சிறிய இட்டிடை என இடம் பாராதும், காதல் வலியே வலியாகத் தலைவன் வருவது தோழிக்கு நல்ல வரவாகப் படவில்லை.

மன்றல் வேண்டினும் பெறுகுவை ஒன்றோ
இன்றுதலை யாக வாரல் (அகம். 318)

'திருமணம் உடனே செய்துகொள்ள விரும்பினாலும் செய்து கொள்க; இனிமேல் இரவுக்குறி வராதே' என்று தோழி கடுமையாக முன்னுறுத்தக் காண்கின்றோம். வழியச்சம் தோழிக்கே இருக்கும்போது, தலைவிக்கு எவ்வளவு இருக்கும்? செங்குத்தான யானை போலும் ஓங்கலின்மேல் கயிறுபோலும் ஒற்றைச் சிறுதடத்து இருளில் தலைவன் வருகின்றானே; ஈரம் வழுக்கிப் படுகுழியில் விழுதலும் கூடுமே; அங்கிருந்து அடிதாங்கி அணைத்தற்கு ஆள் வேண்டுமே என்று என் நெஞ்சு என்னைக் கேளாது உன்னிடமும் சொல்லாது புறப்பட்டுப் போய்விட்டது';

1. Preface of 'Getting Married' p. 182.

எவன்கொல் வாழி தோழி மயங்கி
இன்ன மாகவும் நன்னர் நெஞ்சம்
என்னொடும் நின்னொடும் சூழாது கைம்மிக்கு
இறும்புபட் டிருளிய இட்டருஞ் சிலம்பிற்
குறுஞ்சுனைக் குவளை வண்டுபடச் சூடிக்
கான நாடன் வரூஉம் யானைக்
கயிற்றுப்புறத் தன்ன கன்மிசைச் சிறுநெறி
மாரி வானம் தலைஇ நீர்வார்பு
இட்டருங் கண்ண படுகுழி இயவின்
இருளிடை மிதிப்புழி நோக்கியவர்
தளரடி தாங்கிய சென்ற தின்றே (அகம். 128)

எனத் தலைமகன் கேட்குமாறு தோழிக்குச் சொல்வது போலத் தலைவி தன் அச்சத்தைப் புலப்படுத்துகின்றாள். இரவுக்குறி வந்த தலைமகனை, 'வழி கொடியது. உன் உயிர்க்கு ஊறுவந்தால் இவளுயிர் என்னாகும்? இனி இரவில் வருவதைத் தவிர்க. பழங்கள் தொங்கும் காந்தட் சோலையில் பகல் நீ வரினும் புணரலாம் (அகம். 18), என்று கூறுவதும், பகல் வந்தொழுகும் தலைமகனை, 'பெருங்களிறு புலியொடு பொருது வலி சோரும் மலைச்சாரலில் நடுயாமத்து வருக, ஏதத்துக்கு நாணோம்' (குறு.88)என்று கூறுவதும், 'நீ பகல் வரின் ஊரார் அலருக்கு அஞ்சுகின்றோம்; இரவு வரின் புலிக்கு அஞ்சுகின்றோம்; ஆதலின் இரவும் பகலும் வராதே' (அகம். 118) என்று கூறுவதும், அடிக்கடி இவ்விடம் வருக, அவ்விடம் வருக என இடமாற்றி உரைப்பதும் எல்லாம், பார்வைக்குத் தலைவனை அலையவைத்து அலைக்கழிவு செய்வதுபோல் தோன்றினும், அவன் நாள் நீடிக்காமல் தலைவியை மணந்துகொள்ள வேண்டும் என்பதே பொறுப்புடைய தோழியின் உட்கிடையாகும். தோழியின் செய்கையெல்லாம் 'வரைதல் வேட்கைப் பொருள (தொல். 1155) என்று தொல்காப்பியம் எடுத்துக் காட்டுதல் காண்க. காதலர்கள் அன்புடையவர் களாயினும், களவு என்பது எப்படியும் களவுதானே. அதற்குரிய அச்சமும் இடையூறும் சூழ்நிலையும் வெளிப்பட மணந்தாலன்றி எங்ஙனம் ஒழியும்? இதனை அறிவுடைத் தலைவன் அறியாதானல்லன். மணமே மறைவுக்கு முடிவு என அவன் அறிந்திருந்தும், அச்சநிலையில், களவு தரும் பேரின்பம் கருதி, அதனில் சின்னாள் நீடித்தொழுக விரும்புவான். எனினும் தோழியின் முடுக்கும் வேறுபல இடையூறுகளும் விரைந்து மணக்குமாறு தலைவனைத் தூண்டும். சங்கப் பெரும்புலவர் பரணர் களவு நெறிக்கு வரும் முட்டுப்பாடுகளை யெல்லாம் அடுக்கி ஒரு பாட்டில் (அகம். 122) சொல்லுவர். இப்பாட்டு அவலச் சுவைக்குப் பேரிலக்கியம். நாள்தோறும் எதிர்பார்த்திருந்த கூட்டம் நாள்தோறும் வந்த புதிய இடைஞ்சலால் நடவாமாற் போயிற்று

என்றும், இங்ஙனம் ஏழுநாள் ஏழு இடையூறுகள் ஏற்பட்டன என்றும், இது எங்கள் குறையுமன்று, யார் குறையுமன்று, களவின் குறை என்றும் ஒரு தலைவி ஏங்கி இரங்கி மொழிகின்றாள்:-

"விழாக் காலத்துத்தான் ஊர்மக்கள் தூங்க மாட்டார்கள். இவ்வூராரோ விழா இல்லாக் காலத்தும் உறங்குகின்றிலர். ஒருகால் இவ்வூரினரும் வாணிகம் பெருத்த கடைத்தெருவினரும் தூங்கிப்போனாலும், என் தாயென ஒருத்தி இருக்கின்றாளே, எப்போதும் வெடுக்கென்று கொத்துகின்ற அவளுக்கு உறக்கம் என்பது ஒன்று வருவதேயில்லை. என்னை வீட்டகத்துப் பூட்டி வைக்கும் அன்னை மறந்து ஒரு வேளை தூங்கிவிடினும், ஊர் காவலர்கள் விழித்த கண்ணராய் வேலேந்தி மூலை முடுக்கெல்லாம் கிடுகிடெனச் சுற்றித் திரிவர். ஒரு சமயம் அவர்கள் தூங்கினும், வால் மடங்காக் காவல் நாய் விடாது குரைக்கும். ஓயாது குரைத்து அயர்ந்து அக் கூரிய பல் நாய் ஒரு கணம் கண் சாயினும், வெண்ணிலா வானத்து நின்று பகல்போலப் பேரொளி வீசும். மதியும் தண்கதிர் சுருக்கி மலைக்குள் மறையும்போது, இன்னாக் குரல் கொண்ட கோட்டான்கள் வீட்டெலிகளை இரைகொள்ள வேண்டி, பேய் திரியும் நடுச்சாமத்து விடாது குழறும். கோட்டானும் கத்துதல் நின்றபோது, விடிவை அறிவிக்கும் கோழி கூவும். இவ்விடையூறெல்லாம் இல்லாத நாளொன்றில்லை. ஊராரும் தாயாரும் காவலோரும் நாயாரும் தூங்கித் திங்களும் தோன்றாது கோட்டான் குழறாது கோழி கூவாது ஒரு நல்லிரவு வரப் பெற்றேனாயின், ஐயகோ, நாள்தொறும் பயனின்றி வந்த அவர் அன்று வராதிருந்து விடுவார். தித்தன் உறந்தைக் காட்டுப்பாதை எவ்வளவு முட்டுப்பாடு உடையது. அவ்வளவு இடர்ப்பாடு நிரம்பியது நம் களவு நெறி."

எல்லாம் மடிந்த காலை ஒருநாள்
நில்லா நெஞ்சத் தவர்வா ரலரே
அதனால் . . . . . .
நொச்சி வேலித் தித்தன் உறந்தைக்
கல்முதிர் புறங்காட் டன்ன
பல்முட் டின்றால் தோழிநங் களவே. **(அகம். 122)**

வெறியாட்டு

தன்மகள் மேனி நாள்தோறும் மெலிவதைப் பார்த்து நற்றாய் (செவிலித்தாய்) கவல்கிறாள். உண்மையான காரணம் அவளுக்குப் புலனாகவில்லை. மரபுவழிப்பட்ட தாயாதலின், இம்மெலிவு முருகனால் வந்தது என்று நம்பி, முருக பூசை செய்யத் துணிந்தாள். இதுவே வழியெனக் கிழவிகளும் கூறினர். வீட்டில் நல்லதோர்

இடத்து நடுயாமத்துப் பூசை தொடங்கிற்று. முருக பூசாரி வேலன் எனப்படுவான். தினையை இரத்தத்திற் கலந்து எறிந்து முருகனைக் கூவி அழைப்பதும், வெறியாட்டு என்னும் ஆவேசக் கூத்தை ஆடுவதும், கழற்சிக்காயிட்டு நோய்க்கும் முருகென மொழிதல் அவன் வாய் மரபு (அகம். 22; ஐங். 249). வழக்கம்போல, இவள் முருகேறப்பட்டவள் என்று தாய்க்குக் கூறினான். தன் காதல் நோய்க்குப் பிறிதொரு காரணம் தெய்வச்சார்பு ஆகுக. கற்பிக்கப்படுவதைக் கற்புடைக் குமரி பொறாள் அன்றோ? ஆயினும் 'என் நோய் காதல் நோய்; தலைவன் மார்புத் தழுவலால் வந்த நோய். கடவுளான நீ இதனை அறிந்திருப்பாய். அறிந்து வைத்தும், மரபறிவு அன்றி மெய்யறிவு இல்லாத பூசாரி அழைக்கத் தோன்றிய முருகனே! என் சொல்வது? கடவுளாயினும் உனக்குத் தன்னறிவு இல்லை. இத்தகைய இடங்களில் இனி வாராது வாழ்க';

அருவி யின்னியத் தாடும் நாடன்
மார்புதர வந்த படர்மலி யருநோய்
நின்னணங் கன்மை யறிந்தும் அண்ணாந்து
கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி
வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்
கடவு ளாயினும் ஆக
மடவை மன்ற வாழிய முருகே (நற். 94)

எனத் தெய்வத்தை எள்ளுகின்றது கற்பு. கற்புச் சினக்கும் போது தெய்வம் முன்னிற்குமோ? காதல் நோயைக் கழற்சிக் காயால் அறியலாம் என்றால், இவள் கற்பு மேன்மைக்கு அவமானம் என்பது தோழி கருத்து; 'நன்றால் அம்ம நின்ற இவள் நலனே' (ஐங். 248) எனினும்,இவ்வெறியாடு காலத்துக் களவுத் தொடர்பைத் தாய் வெளிப்படையாகவோ குறிப்பாகவோ அறிய வாய்ப்பு உண்டு. அறிவித்து விடவும் தலைவியும் தோழியும் முயல்வர்.

ஒருதாய் கட்டுவிச்சியை அழைத்துத் தன் மகளின் நோய்க் காரணத்தை வினவினாள். முறத்தில் நெற்களைப் பரப்பி எண்ணிக் குறி சொல்வது கட்டுவிச்சியின் வழக்கம். குறி சொல்லும்போது பல்வேறு மலைகளைச் சொல்லிப் பாடுவது உண்டு. அதன்படி முதிய அகவல்மகள் (கட்டுவிச்சி) தமிழ் நாட்டு ஒவ்வொரு மலையாகப் பாடிக்கொண்டு வந்தாள். தங்கள் தலைவன் வாழும் மலையைப் பாடியபோது,

அகவல் மகளே பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டே
அவர்,
நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே (குறுந். 23)

என்று தோழி இடைப்புகுந்து உரைக்கப் பார்க்கின்றோம். பிற மலைகளை மேலே பாடாதபடியும், தலைவனது மலையையே திரும்பத் திரும்பப் பாடிக்கொண்டிருக்கும்படியும் கட்டு விச்சியை வேண்டினாள் தோழி. தோழியின் துணிச்சல் தாயின் சிந்தனையைத் தூண்டுமன்றே? 'இம்மலை யொன்றில் இவர்கட்கு ஈடுபாடு ஏன்? 'நன்னெடுங் குன்றம்' என்று பாராட்டுவதேன்? மகள் மெலிவுக்குக் காரணம் இம்மலைவாழ் ஒருவனோ? தமிழ்ப் பெண்கள் கணவர் பெயர் கூறார் ஆதலின், 'அவர்' என்று சுட்டினரோ'? என்றெல்லாம் தாய்க்கு ஆராய்ச்சி தோன்றுகிறது. வெறியாட்டால் இவ்வாறு தோழி அன்னைக்கு அறத்தொடு நிற்கவும், மறை வெளியாகவும் இடம் ஏற்படுகின்றது. மேலும் தலைவனை நோக்கி, 'நின்னால் இவள் வருந்தவும், முருகனால் வந்தது என்று வேலன் சொல்ல நீ வைத்துக் கொள்ளலாமா? இது கெழுதகை கொல்?' (ஐங். 245) என்று தோழி இடித்துரைக்கவும் வரைவு முடுக்கவும் வெறியாட்டு கருவியாகின்றது.

சமுதாயச் சடங்குக்கும் சற்பொழுக்கத்துக்கும் ஒரு போராட்டத்தை வெறியாட்டிற் காணலாம். முதுமை மரபைப் பின்பற்றும், இளமை முதுமையை எள்ளும் என்ற நிலையில் வெறித்துறைப் பாடல்கள் எழுந்துள. எதிர்ப்புணர்ச்சிகள் புலவோர் பாடுதற்குக் கவர்ச்சியான இடங்களாம். ஆதலின் இத்துறையில் 40 பாடல்கள் சங்கவிலக்கியத்து உண்டு. காமக்கணியார் மூன்று அகச்செய்யுட்கள் பாடிய பெண் புலவர். இம் மூன்றும் (அகம் 22, 98; நற். 268); வெறிப்பொருளனவே. இவ்வொரு துறையை ஆழ்ந்து பாடவல்ல புலமை பற்றி, 'வெறி பாடிய' காமக் கணியார் என்று இவர் சிறப்புப் பெற்றார். அன்னை - மகள் பூசலை ஒரு பெண் புலத்தி பாடுவது சிறப்புத் தானே! கபிலரின் 'வெறிப் பத்துப்' பாடல்கள் (ஐங். 241-50) அன்னையின் அறியாமை, வேலனின் அறியாமை, தோழியின் எதிர்ப்பு, தலைவியின் கற்பு முதலியவற்றைத் தொடர்பாக நமக்கு அறிவூட்டுகின்றன. எல்லாப் பாடலிலும் கற்பின் வென்றியே இலங்கக் காண்கின்றோம்.

அலர்

ஐந்திணை இலக்கியத்துக்கு அழகு செய்பவர் உள்ளூர்ப் பெண்டுகள். அவரின்றேல் அவ்விலக்கியம் உப்பின்றியிருக்கும். 'அல்லது செய்தல் ஓம்புமின்' (புறம். 195) என்பதற்கு நேர்மாறாக ஊர்ப்பெண்டிர் செய்வது அல்லதேயாயினும், சமுதாய நெறிக்கு நல்லது என்ற கருத்தால் தமிழ்ச் சான்றோர் ஊராரையும் அகத்திணை யிலக்கியத்துப் போற்றிக் கொண்டனர். களவிலும் கற்பிலும் ஊரார்க்கு இடனுண்டு, (தொல் 1107). ஊரார் என்பது ஆண்பெண் இருபாற்கும் பொதுச் சொல்லாயினும் அகத்திணையில் பெண்டிரையே குறிக்கும். வீட்டகத்துச் செய்திகளை அடுக்களைப்

புகைபோல நுழைந்து காணும் ஆசையும், கூடியிருந்து முணுமுணுத்துப் பேசும் துணிவும் எப்படியோ பெண் சமுதாயத்துக்குப் பிறவிக்குணம்போல் அமைந்துவிட்டன. ஒரு குமரியின் காதலொழுக்கம் பற்றி ஊர்மகளிர் வாய்க்குள் பேசிக்கொள்வது அம்பல் எனவும், வெளிப்படையாகப் பேசுவது அலர் எனவும் பெயர்பெறும். "அம்பல் மூதூர் அலர்வாய்ப் பெண்டிர்"(நற் 143) "அலர்வினை மேவல் அம்பற் பெண்டிர்" (அகம். 203) என இவ் வாய்ப்பட்டிகளை அகப்புலவர்கள் குறிப்பிடுவர்.

ஊரார் தூற்றும் அலரால் பல நலங்கள் உண்டு. 'மணங்கமழும் கடற் சோலையில் எங்கள் இன்பப் புணர்வைத் தடுத்து விட்டதே; நாள்தோறும் வந்த தேரை நிறுத்திவிட்டதே' (நற். 203) என்று தலைவி சில பலபோது அவரைப் பழித்தாலும், 'எம் அன்னை என்னை வீட்டினுள் அடைத்து வைப்பதற்கு ஊர்வாயன்றோ காரணம்; இனி என் மாநிற அழகு வெண்ணிறப் பசலையாகிப் போகுமோ? (நற். 63) என்று ஊராரை வைதாலும், முடிவில் அலரின் நல்விளைவைத் தலைவியும் தோழியும் அறிந்தே யிருந்தனர். ஒருதாய் தன் மகளைச் சிறிது கடிந்துரைத்தாள். அது தெரிந்த முல்லைநிலப் பெண்டுகள் இவளுக்கு இவனோடு தொடர்பு உண்டு என அலர் தூற்றினர். இவ்வலர் கேட்ட தலைவி வருத்தப்படவில்லை. தன்னை அவனோடு சேர்த்துப் பேசப்பேச அவளுக்குப் பெருமகிழ்ச்சி. ஊருக்கு உண்மை தெரிந்தது என்றும், இனித் தன் வீட்டார் அவ்விடையனுக்கே தன்னை மணப்பிப்பர் என்றும், கற்புக்கு ஊறு இல்லை என்றும் நன்முறையில் அலரை மதிக்கின்றாள்.

ஒண்ணுதால்,
இன்ன உவகை பிறிதியாது யாயென்னைக்
கண்ணுடைக்கோலள் அலைத்ததற் கென்னை
மலரணி கண்ணிப் பொதுவனோ டெண்ணி
அலர்செய்து விட்டதிவ் வூர். (கலி. 105)

இனி அலரைத் தவிர்க்கமுடியாது, ஊர் வாயை மூட முடியாது என்ற எண்ணத்தால், காதலர்களுக்குத் திருமண நினைவு பெருகுகின்றது. மணப்பது உறுதி என்ற துணிவாலும், இனிமேல் களவொழுக்கம் கிடைக்கப்பெறாது என்ற நசையாலும்' சில ஆடவர்களுக்குக் களவின்பத்தை நீடிக்கும் மனப்பாங்கு வருதல் உண்டு. "மாணா ஊர் அம்பல் அலரின் அலர்கென, நாணும் நிறையும் நயப்பில் பிறப்பிலி" (கலி. 60) என்ற பாட்டால், அலருக்கு நாணாத ஆண் பிறப்புக்களை அறியலாம். முகிழ்முகிழ்த்த அம்பல் இன்னும் விரிந்து மலர்போல மலரட்டுமே என்று ஒரு தலைவன் துணிவாகப் பேசுகின்றான். எனினும் இவ்வகைத் துணிவு நாண்பிறப்பு எனத்தக்க

பெண்பிறப்புக்கு வருவதில்லை. 'துணையெனத் தொழுத தெய்வமே அன்பனுக்குக் கொடுமை செய்தது என்னுமாப் போல, காதலனாகிய நீ காதலிக்குக் கொடியவனாகின்றாய். உன்னால் அவளுக்குப் பழிதோன்றவும் அலர் பரவவும் மனம் அலையவும் காண்கின்றேன். இனியேனும் வரைந்து ஆட்கொள்' என்று தலைவன் நாணுமாறு தோழி இடித்துரைக்கின்றாள்:

வழிபட்ட தெய்வந்தான் வலியெனச் சார்ந்தார்கண்
கழியுநோய் கைம்மிக அணங்காகி யதுபோலப்
பழிபரந் தலர்தூற்ற என்தோழி
அழிபடர் அலைப்ப அகறலோ கொடிதே. (கலி. 132)

ஊரலரை மிக வெறுக்கும் ஓர் ஐந்திணைப் பாத்திரம் தலைவியின் தாயே (அல்லது தலைவியை வளர்த்த செவிலியே). எவ்வகையானும் அம்பலையோ அலரையோ அவள் விரும்பு வதில்லை.' தன் குடும்பத்தைப் பற்றிப் பேசுதற்கு இவர் யார்? தன் மகள் நடத்தைபற்றி வாயெடுத்ததற்கு ஊரார்க்கு என்ன உரிமை யுண்டு?" என்றெல்லாம் தாய் மனம் கொதிக்கின்றது.

கௌவை மேவல ராகி இவ்வூர்
நிரையப் பெண்டிர் இன்னா கூறுவ
புரைய அல்லவென் மகட்கு (அகம். 95)

ஊர் கூறும் அலர் என்மகளுக்குப் பொருந்துமோ? என்று சொல்லும் போது, தாயின் குடிப் பெருமிதத்தையும் என் மகள் மேல் இடுதேளிட்டாற்போல் பழிபரப்பும் இவ்வூர்ப் பெண்டுகள் இவ்வுலகப் பெண்டுகள் இல்லை, நரகப் பெண்டுகள் என்று சொல்லும்போது, தாயின் ஆறாச் சினத்தையும் நாம் புரிந்து கொள்கின்றோம். குடிப்பெருமைக்குக் கேடு வருங்கால், வெகுளி பிறக்கும் என்பர் தொல்காப்பியர். அத்தகைய வெகுளித் தாயர்களை அலர்த்துறைபற்றிய பாடல்களில் காணலாம். தன் மகள் களவொழுக்கத்தைத் தாயே ஒரு நாள் தெரிந்து கொள்வாள் என்று சும்மா இராமல் ('யாய் அறிந்து உணர என்னார்') என் வீட்டுப்படியேறி வந்து என்னிடமே பலகாலும் குறைசொல்லும் இவ்வூர் மாதர்கள் நல்ல வாயும் குடும்பத் தொழிலும் உடையவர்கள் இல்லை; "தீவாய் அலர்வினை மேவல் அம்பற் பெண்டிர்' (அகம். 203) என்று பெற்ற மனம் பித்தாக ஒருதாய் வசை பொழிகின்றாள். பெதும்பைப் பருவ மகளைப் புறத்தே போகவிடாள், கோல்கொண்டு அலைப்பாள், இரவு பகலெல்லாம் கண்காணிப்பாள் என்று தாயின் செய்திகளை அகவிலக்கியத்துப் படிக்கின்றோம். படிப்பார்க்கும் தலைவிக்கும் தோழிக்கும் தலைவனுக்கும் அன்னை கொடிய வளாகவும் காதலுக்குப் பகைத்தி ஆகவும் தோற்றம் தந்தாலும் இளமை வேகத்தால், தன் பழங்குடி ஒழுக்கவடுப்படுதல் கூடாது, ஊர்

வாய்ப்படுதல் கூடாது என்ற விழிப்புத்தான் முதிய அன்னையின் கடுமைக்குக் காரணம். சிலரும் பலரும் மூலை முடுக்கெல்லாம் கூடிநின்று மகளைப்பற்றிச் சாடையாகவும் நேராகவும் பேசும்போது, அங்ஙனம் பேச நடந்துகொண்ட மகள்மேல் எவ்வன்னைக்குத்தான் சினம் கனலாது?

சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி
மூக்கின் உச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி
மறுகிற் பெண்டிர் அம்பல் தூற்றச்
சிறுகோல் வலந்தனள் அன்னை (நற். 149)

நொதுமலர் வரைவு

"காதல்நெறி மெத்தெனச் செல்வதன்று. பெற்றோர்கள் வேற்று மாப்பிள்ளைகளைத் தேர்ந்தெடுக்கும்போது, காதற் பெண்மக்கள் கட்டாயம் மறுக்கின்றனர்; பழிக்கின்றனர். தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்று அடக்கம் மிக்க நன்மகள் கூட, அயலவனை - அல்லவனை - மணக்க ஒருபோதும் ஒப்புவதில்லை" எனப் பேராசிரியர் ஆர்போர்டு 'செகப்பிரியர் கண்ட காதலும் மணமும்' என்னும் நூலில் அரிய உண்மையை மொழிகின்றார்.[1] இங்ஙனம் பெற்றோர் இயல்பாக மணம்பேசும் சமூகப்போக்கில் ஒரு பெண் தன் கற்பைக் கட்டாயம் வெளிப்படுத்திக் காக்கவேண்டும் சூழ்நிலை அமைந்திருப்பக் காண்கின்றோம். ஆண் வீட்டார் தலைமுடி யணிந்து தண்டூன்றிய கிழவர்களை ('தண்டுடைக் கையர் வெண்தலைச் சிதவலர்' குறுந். 146) பெண் வீட்டிற்கு மணம்பேச விடுப்பது தமிழக மணமுறை. பெண் கேட்க வருவாரைப் பெண் பெற்றார் நன்று நன்று என்று முகமலர்ந்து வரவேற்பர். நற்காலமாக அங்ஙனம் வந்த ஆண் வீட்டார் தலைவியோடு களவுத் தொடர்புடைய தலைவன் வீட்டவராகவே அமைந்து விடுதலும் உண்டு.

கொடிச்சி கூந்தல் போலத் தோகை
அஞ்சிறை விரிக்கும் பெருங்கல் வெற்பன்
வந்தனன் எதிர்ந்தனர் கொடையே
அந்திங் கிளவி பொலிகநின் சிறப்பே (ஐங். 300)

தலைவன் வந்தான் உடன்பட்டனர் என்பதனால், என்னாகுமோ என்று அஞ்சிய அரிய காரியம் விரைவாக இனிமையாக எளிமையாக நடந்துவிட்டது என்ற மகிழ்ச்சிக் குறிப்புப் பெறப்படும். மகிழ்வுற்ற தோழி தலைவியை மகிழ்வூட்டிப் பொலிக என வாழ்த்துகின்றாள்.

1. Shakespear's Treatment of Love and Marriage. p. 19
- Professor C.H. Herford.

ாதொரு இடர்ப்பாடும் இன்றி மணமாக முடிதல்வேண்டும் தான் தலைவியும் தோழியும் விரும்புவர். நினைத்தவாறே முடிந்தக்கால் பேருவகைப்படுவர். இதுவே இயல்பும் முறையும் ஒழுங்குமாகும்.

களவியல் நீரோட்டம் போலக் கற்பாகிவிடின், நெஞ்சக் குமுறலுக்கும் அறிவுத்தீட்டுக்கும் வேகவுணர்ச்சிக்கும் புரட்சிக்கும் இடமில்லை. எனவே ஐந்திணைக் களவிலக்கியம் பாடுவார்க்கும் படிப்பார்க்கும் சுட்டித்தனம் இல்லாக் குழந்தை போலவும், கட்சியற்ற அரசியல் போலவும் உணர்ச்சி வறண்டு தோன்றும். தலைவன் பக்கத்தார் மணம் பேச வந்தபோது, எல்லாத் தலைவியரின் பெற்றோரும் இசைந்துவிடார். மறுத்துவிட்ட நிகழ்ச்சிகளும் உலகில் பல இருக்கவே செய்யும். இந்நிலையில் களவிலக்கியம் உயிர்ப்பும் மிடுக்கும் சுவையும் பெறுகின்றது. எங்கே தன் காதலன் விடுத்த தமரைப் பெற்றோர் மறுத்துப் போக விட்டுவிடுவார் கொல்லோ என்ற பேரச்சம் தலைவிக்கு ஓடிக் கொண்டிருக்கும் (ஐங். 230). மறுக்காதீர்கள் என்று முன்னே சொல்ல நாணம் இடங்கொடாது. மறுத்த பின்னர்ச் சொல்லக் கற்புக் காத்திராது. என் செய்வாள் பேதைப் பெரும்பெண்! செய்தியறியாப் பெற்றோர்க்கு அஞ்சுவது கோழைமையாம்; தலைவன் தொடர்பை உரிய காலத்தும் வெளியிடப் பின்வாங்குவது மடமையாம். துணிவற்ற காதல் செயலற்ற கல்வியை ஒக்கும். எவரிடமிருந்து எத்தொல்லைவரினும் அவரையும் அதனையும் தூவெனத் தள்ளும் பெருவலி தூய மெய்க்காதலுக்கு இயல்பில் அமைந்தது. 'இம்மாநிறத்தாளின் பசலையை - பிரிவுச் சோர்கையை - நீக்கினவன் யாரெனின், ஞாழல் மரத்தின் பெருங்கிளையை அலைகள் வளைக்கும் துறைவன்' (ஐங். 145) என்று தோழி துணிந்து களவை வெளிப்படுத்தல் காண்க. குமரியர்க்குப் பிரிவும் பாலையும் இல்லை; காதலர்ப் புணர்ந்த மகளிர்க்கே அவையுள. ஆதலின் 'மாயோள் பசலை நீக்கினன்' என்ற தோழியின் சொற் கேட்ட பெற்றோர், ஒரு தலைவனோடு தம் மகளுக்குத் தொடர்பு ஏற்பட்டுளது போலும் என்றும், அத்தலைவன் இங்கு மணம்பேச வந்திருக்கும் வீட்டவரின் நம்பியே என்றும் புரிந்து கொண்டு மணத்துக்கு உடம்படுவர். உடம்படாது தலைவனது சுற்றத்தாரை வலிந்து பேசி, இவ்வாடவனுக்கு என் அருமைச் செல்வியைக் கொடுப்பதாவது என்று மறுத்துப் பெற்றோர் செருக்கி நிற்கும் அமயம், தோழி மறத்திபோல் துணிவுகொண்டு, 'இவனுக்கு உரியவள்தான் இவள்' என்று மிக வெளிப்படையாக உள்ளதைச் சொல்வாள்:

> குன்றக் குறவன் காதல் மடமகள்
> அணிமயில் அன்ன அசைநடைக் கொடிச்சியைப்
> பெருவரை நாடன் வரையு மாயின்

கொடுத்தனெ மாயினோ நன்றே
இன்னும் ஆனாது நன்னுதல் துயரே (ஐங். 258)

தலைவன் நெடுநாள் களவொழுக்கம் ஒழுகினான்; வரைவை நீட்டித்தான். இது தலைவிக்குத் துயரைத் தந்தது. பல முறை தோழி இடித்துரைத்தபின், இன்று வரைவுபேசச் சுற்றத்தாரை அனப்பியுள்ளான். இந்த நிலையைத் தெரியாமல் பெற்றோர் மறுக்கலாயினர். இது தலைவிக்கு மேலும் துயரை விளைத்தது. தோழி இடைப்புகுந்து அவனே உண்மையுணர்ந்து வரைவு வேண்டியபொழுது, நீவிர் உண்மையுணராமல் கொடுக்க மறுக்கலாமா? எனப் பெற்றோர்க்கு அறிவுறுத்தக் காண்கிறோம். கற்புக்குக் கேடு வரும்போது பெண்ணுக்குப் பெரும் துணிவு வரும். ஒழுக்கத் துணிவைப் பெற்றோரும் வரவேற்பர். ஒருத்தனோடு உறவுடையாள் என்று அறிந்தபின், மகளின் கற்பு மாசுபட மாற்றவனுக்கு மணம்பேச நினையார். தெய்வச் செயலென்று மகிழ்ந்து உற்றவனுக்கே திருமணம் செய்வர். "தெய்வமால் காட்டிற்று இவட்கென, நின்னை அப்பொய்யில் பொதுவற்கு அடை சூழ்ந்தார், தந்தையோடு ஐயன்மார் எல்லாம் ஒருங்கு" (கலி. 107)

மகள் குமரப்பருவம்—குமரமை—எய்தியபின், பெற்றோர் இயல்பாகவே திருமணம் பேசத் தொடங்குவர்: பேசவருவாரை முகனமர்ந்து வரவேற்பர்; தக்கான் எனத் தம் மனத்துக்கு உகந்த ஓர் ஆடூஉவிற்கு வரைந்து கொடுப்பர். இது உலகப் பொதுமுறை. தம் மகள் களவில் ஒருத்தனோடு பிணைப்பு உடையளா? இல்லையா? என்று முன்னர் அறிந்து மணம்பேச முடியுமா? இவ்வையப்பாடு எப் பெற்றோர்க்கும் எழாது. எழுவதும் நாகரிகமன்று. ஆதலின் சமுதாய வழக்கப்படி தாய்தந்தையர் ஒருவனுக்கு மணங்காணவே முயல்ப; எனினும் இம் மரபியலோடு களவுக் குமரிக்கு ஒரு போராட்டம் வந்தே தீரும். தன்னளவில் அவள் மரபுப் போராடித்தான் கற்பைக் காத்தல்வேண்டும். பெற்றோராயினும் அவர்தம் முடிபை மாற்றியோ மறுத்தோ எதிர்த்தோதான் வாழ்வைக் கைப்பற்ற வேண்டும். இன்றேல் சாதல் வேண்டும். வெறியாட்டும் நொதுமலர் (அயலவர்) வரைவும் களவுடை நங்கையின் கற்பைச் சோதிக்கும் சமுதாயக் களங்கள்; என்றாலும், தலைவியின் காதல் நோக்குத் தெய்வமூலம் கூறும் வெறியாட்டைக் கற்புக்கு மாசாகச் சமூகம் கருதுவதில்லை. சமூகம் மாசு கருதா நிலையில் தலைவியும் வெறியாட்டுப்பற்றி அத்துணைக் கவல்வதில்லை. அது நடைபெறாது தடுக்க முந்துதலும் உண்டு. தடையின்றி நடந்தொழிய விட்டு விடுதலும் உண்டு. வெறியாட்டு ஒரு கேலிக்கூத்து என்பது தலைவியின் கருத்து; வீட்டின் ஓர் புறம் இரவில் வெறியாட்டு நடந்து கொண்டிருக்கவும், மறைந்து வந்த காதலனைத் தழுவி முயங்குகின்றாள். பசலை

மாறுகின்றது. காதலனால் மாறிற்று என்பதை அறியாது, வேலனின் வெறியால் மாறிற்று என்று அன்னையும் பிறரும் மகிழ்கின்றனர். இவர் அறியாமையைக் கண்டு தலைவி சிரிக்கின்றாள்:-

உருவச் செந்தினை குருதியொடு தூஉய்
முருகாற்றுப் படுத்த உருகெழு நடுநாள்...
நன்மனை நெடுநகர்க் காவலர் அறியாமைத்
தன்னசை யுள்ளத்து நந்நசை வாய்ப்ப
இன்னுயிர் குழைய முயங்குதொறு மெய்ம்மலிந்து
நக்கனென் அல்லனோ யானே எய்த்த
நோய்தணி காதலர் வரவீண்டு
ஏதில் வேலற் குலந்தமை கண்டே. *(அகம். 22)*

வெறியாட்டு நடந்த பின்னும் களவொழுக்கம் நீடித்தல் உண்டு. வெறிக்குத் தலைவி அஞ்சுவதில்லை என்று இதனாற் பெறப்படும். வேலன் வெறிக்கு அஞ்சாக் கள்ளி (கள்வி என்பதன் பொருள் வேறு) நொதுமலர் வரவுக்கு அஞ்சுவாள். அயல்மணம் கற்புடைக் குமரியின் உயிரை அறுப்பதோடு, சமுதாயத்தின் ஒழுக்க வேலியைப் பிரித்துவிடும். ஒருத்தி உறவுமாறி மணப்பதை உண்மை யறிந்தக்கால், பெற்றோரும் ஒவ்வவே ஒவ்வார். ஆதலின் தலைவியும் தோழியும் வேற்று மணம் பேசுதலைப் பார்த்துக் கொண்டிரார். முடிவுவரை காத்திருப்போம் என்று அமைதி கொள்ளார். பேச்சை இடை முடிப்பதற்குக் கூடிய வழிகளையும் கையாள்வர். வேற்றவனது தமர் பெண்கேட்க வந்த ஒரு சமயம் தலை மகள் பட்டினி கிடந்தாள் என்றும், இன்ன தலைவன் உணவு கொடுத்தாலல்லது இவள் இப் பட்டினி நோன்பை விடாள் எனத் தோழி செவிலிக்கு அறிவித்தாள் என்றும் அம்மூவனார் பாடுகின்றார்:-

தண்ணந் துறைவன் நல்கின்
ஒண்ணுதல் அரிவை பாலா கும்மே. *(ஐங். 168)*

நாணத்தை விட்டேனும் காக்கவேண்டும் முதன்மையுடையது கற்பு. ஆதலின், வேற்றவர்க்குத் தன் வீட்டார் விருந்தோம்பும் அமயம் என்று பாராதே, தலைவி விருந்திற் கலந்து கொள்ள மறுத்தாள். தன் பொருட்டு நடக்கும் இவ்வினிய விருந்து தனக்கு இனியதில்லை என்று காட்டினாள். கற்பு காலமறிந்துதுணியும் என்பதற்கு இஃதோர் சான்று.

களவு நீடிப்பின், வெறியாட்டு நொதுமலர் வரைவு முதலான பல தொல்லைகளுக்கு இடம் ஏற்படும் என வருவது அறிந்த அறிவுடைத் தோழி, களவென ஒன்று நடந்தது என்பது தோன்றா வகையில் மணத்தை முடித்துவைக்கப் பாடுபடுவாள். பல்வேறு வழிகளால் தலைவனை வற்புறுத்துவாள். இத்துறை வரைவுகடாவல்

எனப் பெயர்பெறும். நூற்றுக் கணக்கான பாடல்கள் இத்துறைக்கு உள. வேறு பல துறைப் பாடல்களும் இத்துறையைச் சார்ந்துவரக் காணலாம். அயல் மணப் பேச்சால் தலைவனை இடித்துரைக்கும் பெருவாய்ப்பைத் தோழி பெறுகின்றாள். எவ்வளவோ அறைந்தும், வரைவை மனங்கொள்ளாக் களவுடை நம்பியும் இனி வரைவை முடிக்கத்தான் வேண்டும் எனக் காலம் அறிகின்றான்.

சிறுநனி வரைந்தனை கொண்மோ பெருநர்
வலைவர் தந்த கொழுமீன் வல்சிப்
பறைதபு முதுகுரு கிருக்கும்
துறைகெழு தொண்டி யன்னவிவள் நலனே (ஐங். 180)

தலைவ! இவள் அழகுவளம் தொண்டிப் பட்டின வளத்துக்கு ஒப்பாகும். தொண்டித்துறை எத்தகையது, அறிவாயா? செம்படவர்கள் கடலிற் பிடித்து வந்த வளமான மீனை இரையாகக் கருதிச் செவ்வி பார்த்திருக்கும் கிழநாரைகளையுடையது. ஆனால் இவள் அழகு உனக்கே சொந்தமாமாறு மணஞ் செய்துகொண்டு அழைத்துப் போய்விடு' எனத் தோழி நொதுமலர் வரைவைக் காட்டித் தலைவனை எச்சரிக்கிறாள். கிழ நாரைகள் மீன் செவ்வி பார்க்கும் குறிப்பைக் கேட்ட தலைவன் கிழவர்கள் ஒருத்தனக்குத் தன் காதலியை மணம் பேசும் காலம் பார்த்திருப்பார்கள் என்ற கருத்தை உணராத அறிவிலியாகவா இருப்பான்.

அறத்தொடு நிற்றல்

அறம் எனப்படுவது பல பண்புகளையும் தழுவிய பொதுச் சொல்லாயினும், ஈண்டு பெண்ணுக்கு உரிய முதற் பண்பான கற்பையே குறிக்கும். கற்பென்னும் கடைப்பிடியில் நின்று களவொழுக்கத்தைப் பெற்றோருக்கு வெளிப்படுத்தல் என்பது இத்துறையின் பொருள். பெற்றோருக்கு அறிவித்தல் தோழியின் நோக்கம் இல்லை. அங்ஙனம் அறிவிப்புழி, தலைவி ஏற்கெனவே கற்பு நெறிப்பட்டுவிட்டாள் என்பதனை முதன்மையாக வலியுறுத்துவதே அவள் நோக்கமாம்.

இந்நன்னோக்கம் சங்கப் புலவர்களின் நெஞ்சைப் பிணித்து ஆண்மை சான்ற பல பாடல்களை உருவாக்கியுள்ளது. வேறு வழியெல்லாம் பயனற்றுப் போனகாலை, அறத்தொடு நிற்றல் என்னும் நேர்நெறியைத் தலைவியும் தோழியும் மேற்கொள்ப நாணமும் கற்பும் ஒருவந்தம் காக்கத்தகும் இரு பேரொழுக்கங்கள். ஆயினும், குழந்தை இறப்பினும் தாய் பிழைக்க என்பதுபோல, நாண்விட்டேனும் கற்பைத் தலையாகப் போற்றியொழுக வேண்டும் என்பது தமிழ் முன்னோர் கண்ட மனையியல்.

உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந் தன்று (தொல். 1058)

'நாணத்தைக் காக்க உயிர்விடுக, கற்பைக் காக்க (உயிரோடு) நாணத்தை விடுக' என்று தமிழ்த்துறை முற்றிய தொல்காப்பியர் தெளிவிப்பர். அறத்தொடு நிற்பது பெற்றோர்க்கு முன்பேயாயினும், அவ்வளவிற்கு நாணம் என்னும் அணியைக் கழற்றி வைக்க வேண்டுமாதலால், அறத்தொடு நில்லாவகை தோழி மண விளை முடிக்க முயல்வாள். களவுச் சுவடு படாமல், பல தீமைகள் தோன்றுவதற்கு முன்னரே தலைவன் வரைந்துகொள்ள வேண்டும் என்பது தோழியின் ஆசை. இரவுக்குறிக்கண் வந்த தலைமகனைக் கண்ட தோழி, 'மலைநாடனே, இனி மணந்துகொண்டால் என்ன? மான் கூட்டமும்மிளகுக் கொடியும் படரும் மலைப்பகுதியில் நீ நிகழ்த்திய களவொழுக்கத்தை எம் சுற்றத்தார் அறியாரன்றே? அவர் அறியாத நிலையில், மரபு மணஞ் செய்து கொண்டுவிடுக. கொள்வையாயின், நின்னை முன்பின் அறியாதார்போல நாங்கள் நடந்துகொள்வோம்! இவளும் முதன் முதல் நின்னைக் காண்பவள் போல நாணம் அடைவாள்! அவள் பொய்யாக நாணிக் கோணி நிற்பதைக் கண்டு நாங்கள் மகிழ்வோம்:'

வரையின் எவனோ வான்தோய் வெற்ப
கணக்கலை இகுக்கும் கறியிவர் சிலம்பின்
மணப்பருங் காமம் புணர்ந்தமை யறியார்
தொன்றியல் மரபின்மன்றல் அயரப்
பெண்கோள் ஒழுக்கம் கண்கொள நோக்கி
நொதுமல் விருந்தினம் போலவிவள்
புதுநாண் ஒடுக்கமும் காண்குவம் யாமே (அகம். 112)

என்று தன் ஆசையைச் சொல்லுதல் போல அறிவு சொல்லுதல் காண்க.

அகத்திணை யிலக்கியத்துத் தோழி வரம்பற்ற உரிமை யுடையவள்; தலைவியின் உரிமையையும் செயலையும் தன் உரிமையும் செயலுமாகக் கொள்ளும் உறவுடையவள். எனினும், தலைவியின் இசைவின்றி அறத்தோடு நிற்கும் உரிமை மட்டும் தோழிக்கு இல்லை. இவ்வரம்பை,

அறதொடு நிற்கும் காலத் தன்றி
அறத்தியல் மரபிலள் தோழி என்ப

என்னும் தொல்காப்பியத்தால் (1151) அறிகின்றோம். ஏன்? அறத்தொடு நிற்பதால் நாணத்துக்கு இழுக்கு வரும். அந்நாண் இழுக்குக்கு உரியவள் தலைவி. சுற்பின் பொருட்டு நாணக் குறைவு வரினும் வருக என்று துணியவேண்டியவள் அவள். அத் துணிவை அறிந்த பின்னரே தோழி அறத்தொடு நிற்றலை மேற்கொள்ள

வேண்டும். நச்சினார்க் கினியர் கூறுவதுபோல, நொதுமலர் வரைவு வெறியாட்டெடுத்தல் முதலான அரியபெரிய தொல்லைக் காலத்தன்றித்தலைவி நாண்விட்டு அறத்தொடு நிற்பதை விரும்பாள். 'தலைவன் என் மெய்யைத் தடவித் தலையளி செய்தான். அவன் என்னை மணப்பது தவறுமாயின், நம் குடிக்கு வடுவாகும். என் செய்வது? தோழி, இன்னது செய்தாள் இவளென மன்னா உலகத்து மன்னுவது புரைமே' (கலி. 54) என வேற்று வரைவுக்கு மணமுரசு கேட்ட தீய அமையத்து, கற்புடை நல்லாள் தாய்க்கு அறத்தொடு நிற்கவேண்டும் குறிப்பைத் தோழிக்கு மொழிதல் அறியத்தகும். 'இன்னது செய்தாள் இவள்' எனத் தலைமகள் தன் களவை வெளிப் படையாகச் சொல்லப் பணிக்குங்கால் கற்புக்கு நாண் பலியாதல் காண்க.

அறத்தொடு நிற்றல் என்ற நுண்துறை பற்றி 51 செய்யுட்கள் சங்கவிலக்கியத்து உள்ளன. கூறுபாடுகளையெல்லாம் விளக்கும் வனப்பு நிலையில் சில செய்யுட்கள் அமைந்துள்ளன. நுண் துறையென்று இத்துறையைச் சுட்டினேன். ஏனெனின், அறத்தொடு நிற்றல் முற்கூறியாங்கு சில சூழ்நிலைகளுக்கு உட்பட்டது என்பது ஒரு புறம் இருப்ப, நிற்கும் முறையிலும் ஏணிபோலச் சில மனநிலைகளை யுடையது. களவொழுக்கத்தை யார்க்கு யார் வெளிப்படுத்தலாம்? தோழியும் அறியாது மறைந்தொழுகிய தலைவி தன் களவை அவளுக்குக் கூறி அறத்தொடு நிற்பள். பின்னர்த் தோழி தன் தாயாகிய செவிலிக்கும், செவிலி தலைவியின் தாயான நற்றாய்க்கும் களவைக் கூறுவர். இதுவே வயதுக்கும் உறவுக்கும் ஒத்த முறையாகும். நற்றாயோ தலைவியின் தந்தைக்கும் உடன் பிறந்தோர்க்கும் சொல்லாற் கூறாது அவர்கள் அறிந்து கொள்ளுமாறு குறிப்பால் தெரிவிப்பாள். "தந்தையும் தன்னையும் முன்னத்தின் உணர்ப" (தொல். 1082) என்னும் உளநயம் நினையத் தகும். தலைவி தோழி செவிலி நற்றாய் நால்வரும் பெண்பாலார் ஆதலின் சொல்லால் சொல்லிக் கொள்ளலாம் எனவும், தந்தையும் அண்ணனும் நெருங்கிய கேளிரேனும் ஆண்பாலார் ஆதலின் ஒரு குமரியின் களவினைக் குறிப்பினால் உணரச் செய்தல் நல்லது எனவும் அகத்திணையிலக்கணம் மனப்படிகள் வகுத்துக் காட்டும். சங்கப் பெரும் புலவர் கபிலர் ஐம்பத்தோரடிக் கலிப்பாட்டில் (கலி. 39) அறத்தொடு நிலையை நிகழ்ச்சி முறையால் வைத்துச் சிறுகதைபோல் வேகமாகச் சொல்லிச் செல்வர்.

அறத்தொடு நின்றேனைக் கண்டு திறப்பட
என்னையர்க் குய்த்துரைத்தாள் யாய்

என நிற்குமுறையினையும் சுட்டிக் காட்டுவர். ஐந்திணைக் களவுத் துறைகளுள் அறத்தொடு நிற்றல் முதற்பெருஞ் சிறப்புடையது அதனாலன்றோ வேற்றரசன் ஆரியன் பிரகத்தனுக்குத்

தமிழ்மொழியின் தனியிலக்கிய மதிப்பை அறிவுறித்த விரும்பிய கபிலர் அறத்தொடு நிற்றல் என்னும் துறையில் 261 அடிகள் கொண்ட குறிஞ்சிப் பாட்டை யாத்தார்.

உடன் போக்கு

படிகடவா இளமங்கை பிறந்த வீட்டைத் துறந்து பெற்றோரை மறந்து முன்பின் அறியா ஆடவனைக் காதற் கொழுநன் என நம்பிக் கரடுமுரடான வழியில் உடன் போக்குத் துணிந்தபோது, அகவிலக்கியம் புதினம்போலும் சாயலையும் விறுவிறுப்பையும் பெறுகின்றது. கற்பவருக்கும் உணர்ச்சிக் கூர்மையை விளைக்கின்றது. உடன் போக்கு எப்பொழுது நிகழும்? அறத்தொடு நின்ற பின்னும், எண்ணிய காதலனுக்குப் பெற்றோர் மணம் முடிக்க மறுத்தராயின், இவ்வழிச் செலவு நிகழும் என்று கொள்ளலாமா? கூடாது. அறநிற்புக்குப்பின் பெற்றோர் மறுக்கார், மகள் கற்பிழுக்குப்பட நடவார்; உரியவனுக்கே மணஞ் செய்வர், ஆதலின் உடன் போக்குக்கு இடமில்லை. இற்செறிப்பு, ஊரலர், வெறியாட்டு, நொதுமலர் வரைவு என்ற இன்னாச் சூழ்நிலைகளைக் கடத்தற்கு இரண்டு வழிகள் உள. ஒன்று அறத்தொடு நிற்கை; ஏனையது உடன் போகுகை. இவற்றுள் ஒன்று நிகழின் மற்றொன்று நிகழாது. அறத்தொடு நின்ற பின் உடன் போகார். உடன்போயபின் அறத்தொடு நிற்பதாற் பயனில்லை. இரண்டில் ஒன்றே களவு நாடகத்தின் இறுதிக் காட்சியாகும் என்று தெளிக. 'களவுத் தொடர்பை எனக்கு அறிவித்திருந்தால் சுற்றம் சூழ அவனுக்கே நன்மணம் செய்வேனே; அவனோடு உடன் போக்கு அவளுக்குத் திருமணத்தினும் இனிதாயிற்றுப் போலும்:

தன்னமர் ஆயமொடு நன்மண நுகர்ச்சியின்
இனிதாங் கொல்லோ தனக்கே பனிவரை
இனக்களிறு வழங்குஞ் சோலை
வயக்குறு வெள்வே லவற்புணர்ந்து செலவே (ஐங். 379)

என்று நற்றாய் தன் மகள் உடன்போயதை அறிவித்த தோழியிடம் நொந்து கொள்கின்றாள். முன்னரே அறத்தொடு நின்றிருந்தால் உடன்போக வேண்டியதில்லையே எனப் பரிந்து பேசுகின்றாள்.

உடன் போக்கினைத் தலைவன் எளிதாக நாடுவதில்லை! கிடைத்தற்கரிய களவுப்புணர்ச்சி என்னும் துணிவுப் புணர்ச்சியைச் சில நாளில் முடித்துக்கொள்ள விழைவதில்லை. களவினிற் பலநாள் ஒழுகி இன்புற்றபின்னரே, இயல்பு புணர்ச்சி என்னும் வரைவுப் புணர்ச்சியை மேற்கொள்வான் (ஐங். 6) தோழியின் மனப்பாங்கு வேறு. தலைவன் தலைவி இருவர்தம் உள்ளோட்டங்களையும் ஊரின் புறவோட்டங்களையும் கணித்தறிந்த தோழி இனிக் களவு நீளாது,

ஊரலர் தாங்காது, பெற்றோர்க்கும் உணர்த்த இயலாது, உடன் போக்கே வழி எனக் காதலரை நெறிப்படுத்துவாள். அறத்தொடு நிற்கப் பெற்றோர்க்கு முன்னின்று சொல்லுப் துணிவுவேண்டும், இவ் வகைத் துணிவு இளம்பெண்மக்கள் பால் எதிர்பார்த்தற்கில்லை. அன்னை வாய் என்ன சொல்லுமோ? முகம் என்ன காட்டுமோ என்று பேதை மனம் பித்துக்கொள்ளும். 'நீ சின்னஞ் சிறுமியா? பேதைநிலை கடந்து பெதும்பைப் பருவம் எய்திய நீ, வாயில் தாண்டிப் புறத்தே செல்லலாமா?' எனக் கூடிந்தேன். எங்கே தாய் தன் களவைத் தெரிந்து கொண்டாளோ என்று எனக்கு அஞ்சி வீட்டை விட்டுக் காட்டுவழிப் புறப்பட்டாள் (அகம். 7) இவ்வாறு உடன் போய ஒரு தலைவியின் செவிலித் தாய் இவளுக்கேன் இவ்வச்சம் என்று கவலைகொள்ளக் காண்கின்றோம். அயலோர் மணம்பேச வந்த காலத்துத் தலைவியும் தோழியும் அதனை விலக்கத் தவறிவிட்டனர். பின்னர் அறத்தொடு நின்று களவை வெளிப்படுத்தவும் பின்வாங்கினர். இந்நிலையில் அல்லவன் ஒருத்தனுக்கு மகளை மணவினை காணப் பெற்றோர் ஏற்பாடு செய்ததில் என்ன குற்றம்? மகிழ்ச்சியோடு வீட்டிடத்தை வனப்புச் செய்து முற்றத்தும் புதுமணல் பரப்பினர். நிலை கைகடந்து சென்றதை அறிந்தாள் தோழி. தலைமகனுக்கும் அறிவித்தாள். ஊரைவிட்டு உடன்போதலே வழி என்று அவன் சொல்லிய துணிச்சலான கருத்து அவள் அறிவிற்கும் சரியெனப்பட்டது.

நனைவிளை நறவின் தேறல் மாந்திப்
புனைவினை நல்லில் தருமணற் குவைஇப்
பொம்மல் ஓதி எம்மகள் மணனென
வதுவை அயர்ந்தனர் நமரே அதனால்
புதுவது புனைந்து செயலை வெள்வேல்
மதியுடன் பட்ட மையணற் காளை...
அருஞ்சுரம் சேறல் அயர்ந்தனென் யானே (அகம். 221)

என்று தோழி தலைமகட்கும் உடன் போக்கை மேற்கொள்ளுமாறு வலியுறத்துவள். களவொழுக்கத்துக்கு அஞ்சாத தலைவியும் தோழியும் நொதுமலர் வரைவுக் காலத்துப் பெற்றோர்க்கு நடுங்குவர் என்பதும், இந் நடுக்கமே உடன் போக்கிற்குப் பெருங்காரணம் என்பதும் இதனால் அறியலாம்.

பெண் மக்களின் ஒழுக்கத்துக்குக் காப்பாளி பெற்ற தாயே. யாதும் தவறு நேரின், 'இவள் வளர்த்த அழகு இது' என்று ஊரார் தாய்மேல் பழிசுமத்தக் காணலாம். அது கேட்டு அன்னை நாணுவாளேயன்றிப் பொறுப்புத் தனக்கில்லையென்று தட்டிக் கழியாள். களவுக் குமரி பெற்றோரை அஞ்சுவாள் எனத் தந்தையையும் உளப்படுத்திப் பொதுவாகச் சொல்லினும்

ஈன்றவளையே சிறப்பாகக் குறிக்கும். ஊர்மாதர்கள் இன்னவள் மகள் என்று தாயைச் சுட்டி மகளைச் சுட்டுவதுதான் நம் சமுதாய மரபு. தாய் பெயரை இழுத்தும் அவட்குமுன் வந்தும் ஊரினர் அலர் கூறுவராதலின், மகள் களவொழுக்கத்தால் மனங்கசப்பவளும் கொதிப்பவளும் ஈன்றாளே. உடன் போக்குத் துறைபற்றிய பாடல்களைத் தொகுத்துவைத்து நோக்கின் அப்போக்குக்குக் காரணள், தாய் என்பது தெளிவாம். "அழுங்கல் மூதூர் அலர்எழச் செழும்பல் குன்றம் இறந்த என்மகளே" (ஐங். 372) என ஓர் அன்னை அலரச்சத்தால் தன்மகள் உடன் போகலாயிற்று என்று குற்றம் பகரினும், அலர்கேட்டு அன்னை சீறுவாள் என்ற தாயச்சமே முடிந்த காரணம் என உய்த்துணரப்படும்.

ஊஉர் அலரெழச் சேரி கல்லென
ஆனா தலைக்கும் அறனில் அன்னை
தானே இருக்க தன்மனை யானே
நெல்லி தின்ற முள்ளெயிறு தயங்க
உணலாய்ந் திசினால் அவரொடு சேய்நாட்டு
விண்தொட நிவந்த விலங்குமலைக் கவாஅன்
கரும்புநடு பாத்தி யன்ன
பெருங்களிற் றடிவழி நிலைஇய நீரே. (குறந். 262)

காதற் சுழிப்பட்ட குமரிக்கு வரும் துணிவுகளைப் பாருங்கள். வயாவும் வருத்தமும் பட்டுத் தள்ளமுடியாத பொருளாகச் சுமந்து ஈன்று பால் நினைந்து ஊட்டிப் பருவம்வரை காத்த அன்னை இன்று அறனில்லாதவளாம்; அவள் உரக்கச் சொல்வது அலைத்தலாம்; தன் ஒழுக்கத்தால் அன்றி, அவள் அலைத்தலால் ஊரில் அலர் பரவுகின்றதாம்; இதுவரையில் வாழ்ந்தமனை இனி அன்னையின் தன்மனையாம்; இதுகாறும் தன்னால் மகிழ்ச்சியோடிருந்த அன்னை இனி தானே தனித்து வருந்தியிருக்கட்டுமாம்; தாயோடு வீட்டிலிருப்பின் நல்ல நீரும் நல்ல காய்கனிகளும் கிடைக்கு மாயினும், வேண்டாவாம்; காதலனோடு மலைவழிச் சென்று நெல்லிக்காயைத் தின்று கலங்கிய நீரைக் குடித்து மகிழ்வாளாம். மிகுந்த செய்ந் நன்றிக்கு உரிய தாயை இவ்வாறு மிக அஞ்சி வெறுத்து ஒரு தலைவி மனமாறி உடன்போகத் துணிகின்றாள். இது வேண்டாத அச்சமாகும். தாய்க்கு உண்மையை உணர்த்தாது அவளைக் கொடியவள் என்று கடிவது பொருந்துமா? உண்மையை அறிந்தபின், தாய் துறக்கத் தக்கவளாக நடந்தாளா? இல்லை என்பதே இலக்கிய விடை.

மகள் காதலனுடன் ஏகியபின், அன்னைபடும் ஆற்றாமை யையும் அன்பையும் கபிலர் ஒரு செய்யுளில் புதுவனப்போடு புலப்படுத்துகிறார். ஊர்மக்கள் இடைவிடாது அலர்வந்து சொல்லவும், அதனை மகளுக்குத் தாய் சொல்ல நினைக்கவில்லை.

சொன்னால் நாணி மடிவாள் என்பது அவளச்சம். மகள் நீங்கிய தன்மனையைப் பொலிவற்ற வறுமனையாகக் காண்கிறாள். "அன்னை அறியின் இவணுறை வாழ்க்கை எனக் கெளிதாகல் இல்" என மகள் கருதிய அறியாமைக்கு இரங்குகின்றாள். அச்சுறுத்தும் தாயார் உலகத்துப் பலர் இருக்கலாம், தான் அவ்வினத்தாள் இல்லை என்று காட்டிக் கொள்ளத் துடிக்கின்றாள். காதலர்கள் பகலெல்லாம் சுரநெறி கடந்து இரவிடை ஓரூரில் தங்குவார்களன்றே; அவ்வூர்க்கு அவரினும் முன்னம் சென்று அவரை விருந்தாக ஏற்றுத் தங்குமிடம் கொடுத்துத் தன் நல்லன்பைக் காட்டும் வாய்ப்புக் கிட்டாதா? என்று வேணவாக்கொண்டு கற்பனை பண்ணுகின்றாள். களவுக்குமரியர் தம் மறைவொழுக்கத்தால் தாமே அஞ்சவேண்டியவர் ஆகின்றார் என்பதும், அன்னையர் என்றும் அன்புடையர் என்பதும் இதனால் பெறப்படும்.

காதல் நம்பிமார் நங்கைமார் உடன்போக்கும், போயபின் நற்றாய் இரங்கலும் புலவோர்தம் கற்பனைப் பாய்ச்சலுக்கு வளமான துறைகளாம். 122 பாடல்கள் - களவுச் செய்யுட்களில் ஏழில் ஒரு கூறு - இத்துறைப் பாலன. இவற்றைப் பாடினோர் இருபத்தெண்மர். இத்துறை யொன்றில் புலங்கண்டவர் கயமனார் ஆவார். இவர் பாடிய இருபத்திரண்டு சங்கச் செய்யுட்களில் இருபது உடன் போகலும் தாயிரங்கலுமே பற்றியவை; அகநானூறு; நற்றிணை, குறுந்தொகை என்ற ஐந்திணைத் தொகைநூல் மூன்றினும் காணப் படுபவை. கயமனாருக்கு அடுத்து இத் துறையிற் புலமை சான்றோர் ஐங்குறுநூற்றில் பாலைக்குறுநூறு பாடிய ஓதலாந்தையார்.

> **மகட்போக்கிய வழித் தாயிரங்கு பத்து**
> **உடன்போக்கின்கண் இடைச்சுரத்து உரைத்த பத்து**
> **மறுதரவுப் பத்து** (ஐங். 371-400)

என்ற தலைப்புக்களிலும் பிறதலைப்புக்களின் இடையிலும் 35 செய்யுட்கள் இத்துறை மேலனவாகக் கணக்கிடலாம். காதலர் வழிச்செலவையும் வரவையும் தாயின் அவலத்தையும் ஆசையையும் வகுத்து வளர்த்து நுனித்துப் பாடும் இவர் கூர்திறம் புதுமை யுடையது.

> **காமப் புணர்ச்சியும் இடந்தலைப் படலும்**
> **பாங்கொடு தழாலும் தோழியிற் புணர்வுமென்**
> **றாங்கநால் வகையினும் அடைந்த சார்பொடு**
> **மறையென மொழிதல் மறையோர் ஆறே.** (தொல். 1443)

களவுநூற் புலவர் களவொழுக்கத்தைக் காமப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், தோழியிற் கூட்டம் என்று நால்வகைப் படுத்துவர் எனத் தொல்காப்பியம் மொழிந்த நெறிப்படி, காரணத்தோடும் காட்டோடும் கணக்கோடும் களவுத்துறைகளைப்

பொதுவாக அலசிக் கண்டோம். காணுங்கால், அல்லகுறி (குறி மாறுபாட்டால் கூட்டமின்மை) வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் முதலான சிலபல துறைகளைத் தொடவில்லை. ஓரிடத்தே அனைத்தையும் சொல்லப் புகுதல் அறிவுக்குத் தொல்லைதருமன்றோ? ஈண்டுச் சொல்லிய சிலதுறைகள்கூடப் புலவோர்தம் அறிவுக் கொழுமுனைக்குத் தக்கபடி வேறும் வீறும் ஆன புனைவுகளைப் பெற்றுள. இவ்வெல்லாம் உரிய இடங்களில் விளக்க வேண்டுமவை.

சங்கப்புலவோர்	தொகை	473
அகத்திணைப்புலவோர்	...	378
களவுத்திணை பாடியோர் (இவர் கற்புத்திணையும் பாடியவர்)	...	238
களவுத்திணைமட்டும் பாடியோர்	...	145
களவுத் திணைப்பாடல்கள்	...	882
கபிலர் பாடியவை	...	182
அம்மூவனார்	...	82
ஓதலாந்தையார்	...	38
பரணர்	...	33
உலோச்சனார்.	...	27
கயமனார்	...	21
நக்கீரர்	...	17
நல்லுருத்திரனார்	...	16
மருதன் இளங்கீரனார்	...	16
நல்லந்துவனார்	...	16
ஓரம்போகியார்	...	15
பேரிசாத்தனார்	...	14

களவுத்திணைக்கு மிகுந்த பாடற்கொடை நல்கிய பன்னிரு புலவர் பெருமக்களை மேலே காண்க. 41 களவுப் பாடல்களுக்கு ஆசிரியர் பெயர் அறியோம்.

ஐந்திணை – கற்பியல்

களவு ஒரு குறிக்கோள் அன்று; முடிவான பயன் அன்று. ஒரு குறிக்கோளை, முடிந்த பயனை அடைவதற்கு உரிய நெறியேயாம். கற்பாக - திருமணமாக - முடியுங்கால், களவு நெறி நன்னெறி எனப் போற்றப்படும். இன்றேல் கள்ளத் தனம் என இகழப்படும்.

கற்பென்னும் மணவாழ்க்கைக்கு முன்னரெல்லாம் களவென்னும் மறைவுநெறி ஒரு தலையாக நடக்கவேண்டுமோ எனின் இல்லை. இதுவே பண்டைத் தமிழ் மன்பதையின் கருத்து. இக் கருத்தினை அறிஞர் பெத்திரண்டு ரசல் இன்றும் ஒப்பக் காணலாம்.[1] மறைவுக் காதலர்கள் ஊரில் இருப்பினும் ஊர்விட்டு ஓடினும் வரைவு என்னும் பெருவேலிக்கு உட்பட்டுக் கணவன் மனைவி என்று பலர் வெளிப்படையாகச் சொல்லும் இயல்பு நிலையை ஒருநாள் அடைதல் வேண்டும். இந் நிலைபேறு அடையும் அன்புக் களவைத்தான் பெற்றோரும் போற்றி வரவேற்பர். சமுதாயமும் நல்லொழுக்கம் என உடன்பாடு அளிக்கும். களவின் முடிபு கற்பு என்பது அகத்திணை வலியுறுத்தும் அறங்களுள் தலையானது. கற்பு வழக்காவது தலைவியைக் கொடுத்ததற்குரியோர் கொடுப்பக் கரணமுறையால் தலைவன் ஏற்றுக் கொள்வதாகும்.

> **கற்பெனப் படுவது கரணமொடு புணரக்**
> **கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்**
> **கொடைக்குரி மரபினோர்**
> **கொடுப்பக்கொள் வதுவே (தொல். 1087)**

எனத் தொல்காப்பியர் தமிழ்ச் சமுதாயத்தின் மணமுறையைச் சுருக்கமாக உரைப்பர்.திருமணம் என்னும் கட்டுப்பாடு என்றும் யாண்டும் இன்றியமையாதது; மாறாதது. மணச் சடங்குகள் (கரணம்) தேயந்தோறும் இனந்தோறும் வேறுபடுவன; காலந்தோறும் கூடுவன, குறைவன, மயங்குவன.[2] ஆதலின் வாழ்வியலறிஞர் தொல்காப்பியர் கற்பென்னும் தலையாய அறத்தை வலியுறுத்திக் 'கரணமொடு புணர' என்று சடங்கினைப் பொதுப்படக் கூறினார்; தன்காலத்துத் தமிழ்ச் சமுதாயம் தழுவிய சடங்குகளை - கரணங்களை வெளிப்படையாகச் சொல்லவில்லை குறிப்பிட்ட ஒரு காலச் சடங்குக்கு வழிவழித் தமிழரை அடிமைப்படுத்த விரும்பவில்லை. 'கரணமொடு புணர' என்ற பொது நடையால், காலத்திற்கேற்ற நடைமுறைகளை அறிவோடு தழுவிக்கொள்ளத் தொல்காப்பியம் வழிவகுத்தல் காண்க. இவ்வாறு இன்ன கரணம் வேண்டும் என்று விதந்து உரையாவிட்டாலும், அரசுக்கு ஒரு கொடிபோல, வரைவுக்கு ஏதாவது ஒரு கரணம் - பலர் அறியும் வெளிப்படையான சடங்கு வேண்டும் என்பதுவே ஆசிரியர் துணிபு. கரணமொடு புணர்தல், கொடைக்குரியோர் கொடுத்தல் என்ற சுற்றுக் கூறுகள் இரண்டனுள், பின்னது இல்லையேனும், நன்று; முன்னது இல்லாதிருத்தல் கூடாது;

---

1. Marriage and Morals. p. 64
2. The History of Marriage in psychology of Sex

Vol. II, p. 507, —Havelock Ellis

கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே
புணர்ந்துடன் போகிற காலை யான (தொல். 1088)

என்று வலியுறுத்தல் காண்க.

காதற்களியினர் திருமணங்கொள்ளக் குறுக்கே நிற்காச் சமுதாயம் எது? அன்னவர் கட்டாயம் மணப்படுமாறு சூழ்நிலை அளிக்கும் சமுதாயம் எது? அதுவே தூய திருமணக் கட்டுப்பாட்டை உணர்ந்த சமுதாயமாம். உலகத்து உய்யும் சமுதாயமாம். கரணம் வேண்டும், அது யாதாகவும் இருக்கலாம்; கொடுப்போர் வேண்டும், உடன் போக்கில் அவர் வேண்டுவதுமில்லை; எங்ஙனமும் திருமணம் கொள்க என்று தளரத்தக்கதைத் தளர்த்தி வலியுறுத்தத் தக்கதை வலியுறுத்தும் தமிழ்ச் சமுதாயத்தின் அகநாகரிகத்தை நாம் விளங்கிக் கொள்வோமாக. காதற்களவினர் எவ்வாற்றானும், ஒரு குடியாகிச் சமுதாயவுறுப்பினராதல் வேண்டும் ஆதலின் தமிழினத்தின் திருமண வாயில் யார்க்கும் நல்வரவு கூறும் அடையாத அகலக் கதவுடையது. அதன் ஐந்திணைக் கொள்கை அன்புடைக் காதலோரை ஐ விரல்களையும் அகல விரித்து அணைக்கும் அறமுடையது. உடன்போகிய தலைமகன் உடன் போய ஊரில் தலைமகளைக் கரணஞ் செய்து வரைந்து கொண்டான்; தன்னூர் திரும்பினான்; ஏதிர்சென்று தோழி வரவேற்றாள். திருமணம் முடிந்ததை இவள் சுற்றத்தார்க்குத் சொல்லுக என்று தலைவன் உரைத்தபோது, 'இச் செய்தி முன்னரே எனக்குத் தெரியும். தாய்க்கு அறிவித்து விட்டேன்.'

வரைந்தனை நீயெனக் கேட்டு யான்
உரைத்தனென் அல்லெனோ அஃதென் யாய்க்கே (ஐங். 280)

எனத் தோழி சட்டென மறுமொழிந்தாள் என்பதனால், பண்டைத் தமிழகத்தில் இனிய எளிய மணமுறை நிலவியமை தெளிவு.

களவு கற்பு என்னும் ஐந்திணைக் கைகோள் இரண்டனுள் கற்பு மக்கள் எல்லோரும் எய்துதற்குரிய பேரறமாம். இது களவுபோல இலக்கியவூற்றுக்கும் கற்பனைப் பரப்புக்கும் இடந்தராது என்று பொதுவாகக் கருதினும், பாடுதற்குத் தரமான பொருள் இல்லை என்று அத்துணை எளிதாகத் துணிந்துவிட வேண்டா. புலவர்கள் குறிக்கோள் உடையவர்கள். அக் குறிக்கோளைப் பதியவைப்பதற்கு அன்னவர் கையாளும் இலக்கியக் கருவியே கற்பனை யென்பது. கற் பொழுக்கத்தைக் காட்டிலும் சிறந்த சமுதாயக் குறிக்கோள் யாண்டுண்டு? சங்கவிலக்கியத்துக் கற்புத்திணையைப் பாடிய புலவர் தொகை 233 ஆகவும், அத்திணைப் பாடற்றொகை 966 ஆகவும் காண்கின்றோம். களவுத் திணைக்கோ 882 பாடல்களே உள. இவற்றைப் பாடியோர் தொகை 236. இவ் வொப்புமையால் சங்கச் சான்றோர் களவுத் துறைகள் போலக் கற்புத் துறைகளையும் இலக்கியம் பாட மதித்தனர் என்பது வெளிப்படும்.

கற்புத்திணை பாடியோர் தொகை		233
கற்புத்திணை மட்டும் பாடியோர்		140
பேயனார்	பாடியவை	104
ஓரம்போகியார்	”	94
ஓதலாந்தையார்	”	65
பாலை பாடிய பெருங்கடுங்கோ	”	60
மருதன் இளநாகனார்	”	58
அம்மூவனார்	”	45
பரணர்	”	29
மாமூலனார்	”	25
ஔவையார்	”	18
நக்கீரர்	”	16
இளங்கீரனார்	”	15

இப்பதினொருவரும் கற்புத்திணைக்கு நிறைந்த பாடல்கள் அருளியவர். 28 பாடல்களை இயற்றியோர் பெயர்களை அறியோம்.

பொருள்வயிற் பிரிவு

திருமணத்துக்குப் பின் அகத்தும் புறத்தும் யாதொரு தங்குதடையின்றிக் காதலர்கள் ஆரா இன்பத்தை அமர்ந்து அணைத்துத் துய்ப்பர்;

> **கரணத்தின் அமைந்து முடிந்த காலை**
> **நெஞ்சுதளை அவிழ்ந்த புணர்ச்சி** (தொல். 1091)

என்று தொல்காப்பியர் களவென்னும் மொட்டு கற்பாக மலர்ந்த விடுதலையைக் குறிப்பிடுவர். தலைவன் தலைவி நெஞ்சங்கள் களவுக் காலத்து ஊரறியுமோ என்ற அச்சத்தால், தளைபட்டுக் கட்டுண்டு கிடந்தன. அன்பிற்கும் அடைக்குந்தாழ் ஏற்பட்டிருந்தது. பலரறிய மணச்சடங்கு முடிந்த பின்னர், அன்பு நெஞ்சங்களைப் பிணித்திருந்த தளைகள் தாமே அவிழ்ந்தன. காதலர்கள் கட்டற்ற கலவியின்பம் கற்பில் துய்க்கின்றனர் என்பது தொல்காப்பியக் கருத்தாகும். 'சடங்கு நிகழ்ந்து முடிந்த காலத்துக் களவுக் காதலர்கள் நெஞ்சிலிருந்த கட்டு அவிழப்பெற்றுப் புணர்வர்' என்பது இந்நூற்பாவின் இயல்பான உரை. பல சொல் தந்து உரை செய்ய வேண்டா நிலையில் தொல் காப்பியச் சூத்திரம் அமைந்திருக்கும் எளிமையைக் காண்க. இவ்வெளிய இனிய கற்பியல் நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர்

ஒழுக்கமில்லுரை எழுதியிருக்கின்றார் என்று வரைய என்கோல் நடுங்கினும், எடுத்துக் காட்டினாற்றானே தெரியும் என்ற முறையால், எழுத என் மனம் ஒப்புகின்றது. "கரணப்படி முதல்நாள் திங்களுக்கும் இரண்டாம் நாள் கந்தருவருக்கும் மூன்றாம் நாள் அங்கிக்கும் தலைவியை அளிப்பார்களாம்! இத் தெய்வங்களோடு அவள் பள்ளி செய்து ஒழுகுவாளாம்; இந் நாளெல்லை முடிந்த காலத்து' அங்கியங்கடவுள் நான்காம் நாள் தலைவனுக்குத் தலைவியை அளிப்ப, அவன் அவளை நுகர்வானாம்; வரைந்தபின் மூன்று நாளும் கூட்டமின்மையால் நிகழ்ந்த மனக்குறை, நெஞ்சு தளை—நாலாம் நாள் இரவின் புணர்ச்சியால் தீருமாம்; இது வேத வழக்கு எனத் தலைவன் தலைவிக்கு விளங்கக் கூறுவானாம்' என இவ்வாறு நச்சினார்க்கினியர் கருத்துரை செய்துள்ளார் (தொல். 1091—அடி 1-2; 10-11 உரைகள்). தமிழர் கண்ட கற்பியல் இதுவா? தமிழினத்தின் நாகரிக ஏடான தொல்காப்பியத்துக்கு உரையா இது? இக் கருத்தெல்லாம் அல்தமிழ் நெறியென்று அகற்றுக.

உடனிருந்து துய்க்கும் இன்பியல் வாழ்க்கை ஆண்டுக் கணக்காக நீடித்தற்கில்லை. கடமைகளைச் செய்து குடும்பம் நடத்துதற்குப் பொருள் வேண்டும். அதனை வேற்றூர் சென்றும் வேற்றுநாடு சென்றும் ஈட்டுதற்குத் தலைவியைப் பிரிவான் தலைவன். இப்பிரிவு இன்றியமையாத உலகியல் அறமாகும். இன்பவுணர்வு பெண்ணைக் காட்டிலும் ஆணுக்கு அதிகம் என்பர் உயிர் நூலார்; எனினும் சமுதாயத்தில் ஆடவனுக்கு வகுக்கப்பட்டுள்ள புறக் கடமைகளும் புகழுணர்ச்சியும் அவனது இன்ப நாடியை மெலிதாக்குகின்றன. காதலெண்ணத்தைக் கலைக்கின்றன. நெடுநாட்புணர்வை இடையறுக்கின்றன. "பெருமையும் உரனும் ஆடூஉ மேன" (தொல். 1043) பெருமை நோக்கும் மனத்திட்பமும் ஆண்பாலுக்கு உரிய பண்புகள் என்று தொல்காப்பியர் சுட்டுவர். ஆதலின் நீடிய காமத்தில் அழுந்திக் கடமை குறைதலும் வறுமைப்படுதலும் தலைவனுக்கு உளவாகா. பொருளாவது கடமையை எளிமைப்படுத்தும் கருவி. இக் கருவியை ஈட்டுதற்குத் தலைவர்கள் தலைவியர்களை விட்டுப் பிரிப. பொருள்வயிற்பிரிவு என்னும் இத்துறை சங்கப் புலவர்களின் நெஞ்சை அள்ளிய துறைகளுள் ஒன்று. இன்பமும் கடமையும் போராடும் இடமாக, நல்ல உணர்ச்சிகள் மோதிக்கொள்ளும் இடமாக இத்துறை அமைந்திருப்பக் காணலாம்.

நட்டோர் இன்மையும் கேளிர் துன்பமும்
ஒட்டா துறையுநர் பெருக்கமும் காணூஉ

ஒருபதி வாழ்தல் ஆற்றுப தில்ல;
பொன்னவிர் சுணங்கொடு செறிய வீங்கிய
மென்முலை முற்றம் கடவா தோரென,
நள்ளென் கங்குலும் பகலும் இயைந்தியைந்து
உள்ளம் பொத்திய உரஞ்சுடு கூரெரி
ஆள்வினை மாரியின் அவியா நாளும்
கடறுழந் திவணம் ஆக . . . (அகம். 279)

நண்பினர் மிடியையும் உறவினர் துயரத்தையும் பகைவர்களின் எக்களிப்பையும் உள்ளூரில் இருந்தே பார்த்துக் கொண்டிருப்பர்; அவர் யாரெனின், பொன்னிறச் சுணங்கும் திரட்சியும் வீக்கமும் மென்மையும் பொருந்திய முலைத் தடத்தை விட்டு அகலமாட்டா ஆடவர்கள். யான் இவ்வினத்தவன் ஆகிவிடுவேனோ என்ற அச்சத்தீ யாமத்தும் பகலும் என் உள்ளத்தில் மூண்டது. மூண்ட நெருப்பை முயற்சி மழையால் அவித்தேன். பொருளின் பொருட்டு வீட்டை விட்டு இதோ காட்டில் நடக்கின்றேன். இவ்வாறு புலவர் இருங்கோன் ஒல்லையாயன் செங்கண்ணனார் ஒரு தலைவன் தன் அகப்பூசலை மடித்துக் கடமைத் திட்பம் கொண்ட எண்ணவீற்றைப் புலப்படுத்துகின்றார்.

கவலையற்று மனையாளொடு இன்பந்துய்த்தல், பிறரிடம் சென்று இரவாமை, தன்னிடம் வந்து இரந்தார்க்கு இல்லை என்று சொல்லாமை, சுற்றத்தார்க்கு உதவுதல், நண்பர் கூட்டத்தைப் பெருக்கிக்கொள்ளல், தக்கவர் தொண்டுக்கு உறுதுணையாதல், பகைவர் செருக்கை அடக்கல், அடங்காரை அழித்தல், அடங்கி வந்தார்க்கும் தண்ணளி செய்தல், எண்ணிய வினை முடித்தல் என்றிவையெல்லாம் ஆடவனுக்கு உரிய கட்டுப்பாடுகளாம். மானவுணர்ச்சியும்புகழ்ப் பற்றும் இக் கடமைகளைச் செய் செய் என்று அவனைத் தூண்டும். இவற்றைச் செய்தற்குப் புதிய பொருட் காதல் வேண்டும்.

இல்லோர்க் கில்லென் றியைவது கரத்தல்
வல்லா நெஞ்சம் வலிப்ப நம்மினும்
பொருளே காதலர் காதல்
அருளே காதலர் என்றி நீயே (அகம். 53)

காதலர் காதல் மாறிவிட்டது எனவும், அதற்குக் காரணம் ஈகைப் பற்று எனவும் தலைமகளே கூறுதல் காண்க. நாடு காவற் பிரிவு, பகைவயிற் பிரிவு, தூதிற்பிரிவு, ஓதற்பிரிவு, பரத்தையிற் பிரிவு எனப் பிரிவுவகைகள் பல. இவற்றினும் பொருள்வயிற் பிரிவே பரந்தது, எல்லோர்க்கும் உரியது, களவிற்கும் கற்பிற்கும் பொதுவாயது.

செலவழுங்கல்

இளங் காதலர்களுக்குப் பிரிதல் என்பது முகவாட்டமும் உயிர்வாட்டமும் தரும் கொடுஞ் செயலாகும். பருவத்தாரின் இம் மன நிலை பருவம் வாராதார்க்குத் தோன்றாது; பருவம் கழித்தார்க்கோ மறந்து போகும். "உயிர்த்தவச் சிறிது காமமோ பெரிதே" (குறுந். 18) என்றபடி, தலைவி ஆழ்ந்து அகன்று அடங்கிய காமச் செறிவு உடையவள்; "நம் பிரிபு அறியா நலனொடு சிறந்த நற்றோள்" (அகம். 41) என்னுமாறு, பிரிவென்ற ஒருநிலையுண்டு என்பதையே அறியாதவள். இம் மடமகளின் ஒப்புதலின்றிப் பிரிந்து செல்லல் நலைவனுக்கு இயலாத, கூடாத காரியம். மின்விளக்கனைய பெண்மை மெல்லியல் என்றும், எண்ண அதிர்ச்சி தாங்காதது என்றும் உணர்ந்த தலைவன் மெத்தென்ற நயப்பாடுகளால் பிரிவுக் குறிப்பைத் தலைவி உணரச் செய்வான். பிரிவிற்கு முந்திய சிலநாள் இரவுப் புணர்ச்சிகளில் கணவன் மிகையாகச் செய்யும் காதலாரவாரம் இந்நயப்பாடுகளுள் ஒன்று. "முலையை அகத்திட்டும் ஆசை நீங்கானாய்க் கூந்தலை அணி செய்கின்றான்; எயிற்றுநீர் சுவைத்தும் தாகம் தணியானாய்க் கைவளையல்களை ஒழுங்கு செய்கின்றான்; பொன்மார்பைப் பார்த்த பார்வை வாங்க மாட்டானாய் நுதல் தடவுகின்றான்; ஏன் இங்ஙனம் ஒன்றல்ல பல செய்ய வேண்டும்? இனி நெடுநாள் புணர்வில்லை என்ற ஏக்கம் போலும். இவன் தன் பேரார்வத்திடை பிரிவுக் குறிப்பு உண்டு' ("கழிபெருநல்கல் ஒன்று உடைத்து" கலி. 4) என்று அறிவுடை நங்கையொருத்தி ஐயப்பட்டு அழுகின்றாள். இன்ன வருத்தத்தைக் கண்டும் சட்டெனப் பிரிந்துபோம் துணிவு எத்தகைய வீரக் காதலனுக்கும் தோன்றாது. புறப்படும்போது அப்பா என்று குழந்தை அழுதால், திரும்ப வந்து மகவை அணைத்துக் கொஞ்சும் தந்தைமையைக் காண்கின்றோம். கணவன்மையும் இத்தகையதே.

பாவை மாய்த்த பனிநீர் நோக்கமொடு
ஆகத் தொடுக்கிய புதல்வன் புன்தலைத்
தூநீர் பயந்த துணையமை பிணையல்
மோயினள் உயிர்த்த காலை மாமலர்
மணியுரு இழந்த அணியழி தோற்றம்
கண்டே கடிந்தனம் செலவே ஒண்டொடி
உழைய மாகவும் இனைவோள்
பிழையலள் மாதோ பிரிதும்நாம் எனினே. (அகம். 5)

பிரிவை எண்ணிய மனைவியின் பெருமூச்சு மலரைக் கரியாக்கக் கண்ட தலைவன், பிரியா முன்னரே உயிர் வேதனைப்படும் இவள். நாம் பிரிந்தால் உயிர் விடாதிருப்பாளோ? என்று புறப்பட்ட செலவைத் தள்ளிவைத்தான்.

குடும்பமாவது இளமையும் வளமையும் (செல்வம்) மோதிக் கொள்ளும் போர்க்களம் என்று சங்கச் சான்றோர் கண்டனர். இப்பொருளத்தைத் திறம்படப் புனைந்தவர் பாலைக்கலி பாடிய பெருங்கடுங்கோ. இளமை ஒரு பருவ காலம். அது கழிந்தால் திரும்ப வாராது. துய்த்துக் கழிக்க வேண்டிய நிலையாப் பொருள். செல்வத்துக்குக் காலம் இல்லை. அது சகடக்கால் போல மாறி வரக்கூடியது. வேண்டும் போது நுகரத்தகும் வரவுப் பொருள். இவற்றுள் முந்திப் பயன் கொள்ள வேண்டுவது இளமையா? வளமையா?

வளமையோ வைகலும் செயலாகும் மற்றிவள்
முளைநிரை முறுவலார் ஆயத்துள் எடுத்தாய்ந்த
இளமையும் தருவதோ இறந்த பின்னே (கலி. 15)

என்று அறிவுடைத் தோழி தலைவனுக்கு உறழ்ந்து மொழிகின்றாள். புறம்போய்ப் பொருள் தேடினும், அடைய வேண்டும் இடம் வீடுதானே. வீட்டவள் மனக்கவலையை மாற்றாமல் புறப்படுதல் அறிவுடைமையாகாது. ஆதலின் தலைவன் மேலும் சிலநாள் இல்லில் தங்கி அன்பு தோன்ற அளவளாவிப் பிரிவது கடமை. இச் செலவுத் தாழ்ச்சி-செலவழுங்கல் - தலைவிக்கு வெள்ளம் தணிவது போன்ற ஆறுதலை அளிக்கும். இரவு பகல் போலப் புணர்வு பிரிவுகள் இயல்பு என்பதை உணர்ந்து தெளிவாள்.

செலவிடை யழுங்கல் செல்லாமை யன்றே
வன்புறை குறித்த தவிர்ச்சி யாகும் (தொல். 1130)

என்ற நூற்பா நம் முன்னையோர் உளவியலறிவுக்குச் சிறந்த சான்று. அறிவுடைக் குடும்பத்தில் காதலும் கடமையும் மோதிக் கொள்ளா, ஒத்துச் செல்லும் என்று செலவழுங்கற் பாடல்களால் கற்கின்றோம்.

பிரிவாற்றாமை

"கீழாய துன்பம் மேலாய இன்பத்தைத் தரவல்லதாக உள்ளது. இம் மனிதவியல்பு நமக்குப் புரியவில்லை. அவலக் கவலை கையாறு அழுங்கல்கள் நன்மையின் வெளிப்பாடுகளாகக் கொள்ளப்படும்; துன்பக் கதையில் நாம் இரக்கங்காட்டுவதற்கு இதுவே காரணம். இக் கதை நமக்கு ஓர் இன்ப மாயையை அளிக்கின்றது. இம் மாயை துன்பத்தில் தோன்றுவது. இன்பக் கதையிடைத் துன்பச் சாயலை

நாம் நுகர்தற்கும் இவ்வியல்பே ஏதுவாம். 'துன்பத்தில் தோன்றும் இன்பம் இன்பத்தில் தோன்றும் இன்பத்தினும் இனிமை மிக்கது" என்று ஆங்கிலப் புலவர் செல்லி 'கவிதைப் காப்பு' என்னும் நூலில் இலக்கியச் சுவையின் நுண்ணிய மனப் பாங்கினை விளக்க முயல்வர்.[1] இம் மனத்திறத்தினை நிலைக்களனாகக் கொண்டு எழுந்தவைகளே பாலைத்திணைப் பாடல்கள். தலைவன் பிரிவிலும் தலைவியின் அவலத்திலும் நாம் இலக்கிய வுரத்தையும் இன்ப நயத்தையும் காண்கின்றோம். தலைவன் பிரிந்து போவேன் என்று அடிக்கடி சொல்லியும் போகாதிருந்தான். பின்னொரு நாள் போவேன் என்று உரைத்தபோது, வழக்கம்போல் சும்மா சொல்லுகின்றான் என்று எண்ணிய தலைவி, போய்வாருங்கள் என்று தானும் வழக்கம்போல் மொழிந்தனள். இத் தடவை அவள் இசைவு தந்தாள் எனக் கருதிக்கொண்டு தலைவன் உடனே புறப்பட்டு விட்டான். எதிர்பாரா இப்பிரிவு அவளால் தாங்க முடியுமா? அழுதாள், ஆறாகக் கண்ணீர் பொழிந்தாள். குளமாகப் பெருக்கெடுத்தது. முலைகள் கரைகளாக அமைந்த கண்ணீர்க் குளம் நாரைகள் மேயும் நன்னிலமாயிற்று:

> சேறும் சேறும் என்றலிற் பண்டைத்தன்
> மாயச் செலவாச் செத்து மருங்கற்று
> மன்னிக் கழிகென் றேனே அன்னோ!
> ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ?
> கருங்கால் வெண்குருகு மேயும்
> பெருங்குளம் ஆயிற்றென் இடைமுலை நிறைந்தே (குறுந். 125)

என்று புலவர் நன்னாகையார் தலைவியின் கண்ணீர்த் துன்பத்தில் கவிதையின்பம் விளைப்பர். துன்பத்தின் இன்பமே கவிதைக்கும் கற்பார்க்கும் சுவைக்கும் ஆதலின், சங்கச் சான்றோர்கள் பாலைத் துறைகளை விரும்பிப் பலபடப் பாடினர். கற்புச்செய்யுட்களில் மூன்றுள் இருபகுதி பாலைத் திணையாக இருப்பதை நினைவு கொள்க. இளைய மடந்தையின் இல்லத் தனிமையும், புறக்காட்சிகள் அத் தனியுள்ளத்தை அலைக்கும் அலைவுகளும், கொடிய சுரத்திடை நெடுந்தொலை சென்ற கொழுநன் இடையூறின்றி வருக என அவள் விழையும் ஏக்க வுணர்வுகளும், அவன் திரும்பி வரும்வரை குடும்பத்தைக் குற்றப்படாது காக்கும் கடமைத் தூண்டுதல்களும் இலக்கியநிலத்தில் பாவத்தக்க நாற்றுக்களாம். இப் பாலைப் பாடல்களின்றேல், கற்பிலக்கியம் அணையிலிருந்து வந்த ஆற்றொழுக்குப்போல உணர்ச்சி வெள்ளமும் வேகமும் இன்றித் தோன்றும்.

---

1. "The pleasure that is in sorrow is sweeter than the pleasure of pleasure itself." - Shelly: A Defence of Poetry, p. 45.

பருவ வரவு

தனிமையை நினைந்து புலம்பும் மனைவிக்குக் கார் இளவேனில் முதலான பருவங்கள் தூபமிட்டாற் போலத் துன்பத்தைப் பெருக்கும். தலைவி பருவங் கண்டழிதல் என்னும் இவ்வொரு துறைமேல் 58 பாக்கள் உள. கார் கூதிர் முன்பனி பின்பனி இளவேனில் முதுவேனில் என்று ஆறு பருவங்கள் இருப்பினும், காரும் இளவேனிலுமே கணவன்மார் வீடு திரும்புவர் என்று மனைவிமார் வரவு பார்த்திருக்கும் பருவங்களாம் (ஐங். 411-20; 341-50). காலம் என்னும் பெருந்தோழி கடமை என்னும் விசிறி கொண்டு வீச, தனிமைத் துயரைத் தலைவி ஒருவாறு ஆற்றியிருத்தல் உண்டு; எனினும் தலைவன் குறித்த பருவக் கூத்து ஆடியும் அசைந்தும் வனப்போடு வருங்காலை அவளுக்கு உறக்கம் என்பது வருமோ? காமவுணர்வு என்னும் அரும்பு முனைகள் தளிர்த்து அவளைக் கொல்லுமன்றே.

அம்ம வாழி தோழி பொருள்புரிந்து
உள்ளார் கொல்லோ காதலர் உள்ளியும்
சிறந்த செய்தியின் மறந்தனர் கொல்லோ (அகம். 235)

பொருள் விருப்பத்தால் என் நினைவு அவருக்குத் தோன்றவில்லை யோ? என் நினைவு அவருக்கு ஒரு முறை வந்தும், இவளைவிடச் சிறந்தது பொருளே என மீண்டும் என்னை நினைப்பதை விட்டுவிட்டாரோ? எனத் தலைவி எதிர்பார்த்து கார்ப்பருவம் கண்டு எண்ணம் அலைகின்றாள். அலைவுற்ற தலைமகளை ஆற்றுவித்தல் தோழியின் கடன். இத்துறைக்கு 26 பாடல்கள் உண்டு. 'இது உண்மையான கார் காலம் அன்று; திடீரென வந்த மழைப் போலி' எனப் பொய்யாகவும் தோழி தலைவியை ஆற்றுவிப்பாள். இது முழுப்பொய் எனவும், தன் ஆறுதலுக்காகக் கூறப்படுவது எனவும் தலைவியும் அறிவாளாதலின், மரபுப் பொய்யாதலின்' இந்நெறி அகத்திணைச் சான்றோரால் போற்றப்படலாயிற்று.

தலைவன் வரவு

பிரிந்த தலைவி இல்லிருந்து தலைவனை அல்லும் எல்லும் நினைந்து கவலுதல் போலச் சென்ற தலைவன் அவளை நினைந்து கவலுவானோ எனின், இல்லை. கவலுதல் அவன் ஆண்மைக்கும் வினைத்திறத்துக்கும் இழுக்காம்; எனினும் காதலியை வினைமுடிக்குமளவும் நினைக்கமாட்டான் என்பது பொருந்தாது. நினைக்கக்கூடாது என்று அறங்கூறினும், நினைப்பு வருவது உளவியல்பு. உயிர் கலந்து ஒன்றிய தலைவியை வினையின் பொருட்டு உள்ளத்தை விட்டு அப்புறப்படுத்தி வைக்க முடியுமா? வேண்டுங்கால் வா என்றும், வேண்டாக்கால் போ என்றும் ஏவத்தக்க உணர்ச்சி

காமம் இல்லையே. ஆதலின் போர்க்குச் சென்ற தலைமகன் பாசறைக் கண் இருந்து காதலியை ஒரொருகால் எண்ணிப் பார்ப்பான் (ஐங்.441. 50 பாசறைப்பத்து). வருவேன் என்று சொல்லிய நாட்கள் கடந்துவிட்டன; அவன் கண்கள் நீரைக் கொட்டுமே; எத்தனை நாள் கூந்தலை அணிசெய்யாதிருப்பாள்? என்னை அருளிலன் என்றும் அறமிலன் என்றும் சொல்லிப் புலம்புவாளே? என்று, தலைவன் தன் வரவு பார்த்திருக்கும் தலைவியின் அவலநிலையைத் தானே நினைந்து பார்ப்பான் (அகம். 144). வினைமுடித்தபின் விரைந்து வீடுதிரும்ப வேண்டும் என்று இவன் உள்ளம் துடிக்கும். இத் துடிப்புக்கு ஈரம் வீண்போகாமல் தனக்கு உரிய நிலத்தை உழுதுவிடப் பாடுபடும் சிறிய உழவன் மனவேகத்தை உவமிப்பர் ஒரு புலவர் (குறுந். 131). பிரிவு நோயால் தலைவியின் கண்கள் ஒளியை இழக்கும். பசலை நிறம் பெறும். நிறம் மாறிய மனைவியின் அருந்துயரைப் போக்குதற்குத்தன் வருகையை முன்னே சென்று அறிவிக்க என்று தூதனைத் தலைவன் விடுப்பான் (ஐங். 477). இதனால் அவன் அன்புடைமையும் அறிவுடைமையும் வெளிப்படும். வினைமுற்றிய தலைமகன்தேர்ப்பாகற்கு உரைத்தல் என்னும் துறையில் 44 செய்யுட்கள் காணப்படுவ. வினையால் தடையுண்டு கிடந்த அன்பன் தன் காதல் வெள்ளமும் அன்பியின் தோள் தழுவி அவ்வெள்ளத் திற்குக் கரைகாண விரும்பும் விதுவிதுப்பும், நெடுநாட் பிரிவுக்குப் பின் புணரும் புணர்வு என நினைந்து வாயூறும் காட்சியும், ஞாயிறு மறையுமுன் என் திங்களைக் காணச்செய்வாய் என்று பாகனை வேண்டும் பரிவும், இப்பாடல்களில் விளங்கக் காண்போம். பாண்டியன் பன்னாடுதந்தான் ஒரு பாட்டே படைத்த சங்கப் புலவன். இப்பாட்டில் அவன் புலமைக் கதிர் ஒளிருகின்றது. குறித்த கார்காலத்துள் வினையை முடித்து வீடு திரும்பிய காதலன் மழையை நோக்கிப் பொருட்படுத்தாது சொல்லுகின்றான்; 'கார்மேகமே, மின்னுக, துளிவீசுக, இடி இடிக்க, நன்றாகப் பெய்க, பெய்து வாழ்க. வினையை வெற்றியொடு முடித்தேன். இப்போது இவள் கூந்தல் தலையணையில் படுத்துள்ளேன்:'

தாழிருள் துமிய மின்னித் தண்ணென
வீழுறை இனிய சிதறி யூழின்
கடிப்பிகு முரசின் முழங்கி யிடித்திடித்துப்
பெய்தினி வாழியோ பெருவான்; யாமே
செய்வினை முடித்த செம்மல் உள்ளமோடு
இவளின் மேவின மாகிக் குவளைக்
குறுந்தாள் நாண்மலர் நாறும்
நறுமென் கூந்தல் மெல்லணை யேமே (குறுந். 270)

ந.7.

என்று தற்பாராட்டுகின்றான். மழையை விளித்துக் கூறுவது போலத் தான் சொல்லிய காலத்துக்கு முன்னரே மீண்டமையைத் தலைவிக்கு உணர்த்துகின்றான். பின்னொருகால் பிரியும்போது உடனே பிரிவுக்கு இசைவாள் அன்றோ? பிரிந்து வந்து புணரும் ஒரு தலைவன் "உள்ளிய வினைமுடித்தன்ன இனியோள்" (நற். 3) என்று புணர்ச்சி யினிமையை வினையினிமையோடு ஒப்பிடுவது எவ்வளவு நடை முறைப் பொருத்தம். புலவர் பேயனார் ஐங்குறுநூற்று முல்லைத் திணையில் பருவ வரவும் தலைவன் வரவும் பற்றிய துறைகளைப் பல நிலைகளில் வைத்து இலக்கியங் காண்பர்.

பரத்தையிற் பிரிவு

அன்பிற் சிறந்த ஐந்திணைக்கண் பரத்தையிற் பிரிவு வருவது பொருந்துமா? அகத்தலைவன் தன் இன்பினையப் பிரித்து இன்பங்கருதிப் பொருட் பெண்டிர்களை நாடி அலைகின்றான் என்பது இவ்விருவர் தலைமைக்கும் இழுக்காகாதா? இவ்வினாக்கள் தொன்று தொட்டுக் கேட்கப்படுபவை. அறிஞர்கள் காலந்தோறும் விடைகாண முயன்ற முயற்சியை வரலாற்றால் அறிகின்றோம். இன்றும் இம் முயற்சி வளர்ந்து வருகின்றது. உலகில் அகத்திணை என்னும் அன்பிலக்கியத்தைக் கண்ட நம் அறிவு மூதாதையர்களே பரத்தையிற் புணர்ச்சியையும் ஒருகூறாக இயைத்திருத்தலின், வேறென் செய்வது? தகும் என்று அமைதி கூறவே நம் மனம் விழைகின்றது. இந்நூற்றாண்டுப் பெரும்புலவர் டாக்டர் உ.வே.சா. அவர்கள் தம் குறுந்தொகைப் பதிப்பின் அரிய நூலாராய்ச்சியில், "இப் பரத்தையிற் பிரிவு உலகியலையே கருதி அமைந்தது போலும்" என ஒருவகைத் தெளிவுசெய்வர். இது பற்றிய என் கருத்தைப் பின்னர் உரைப்பன். 966 சுற்பியற் பாக்களில் 279 பரத்தையிற் பிரிவுக்கு உரியனவாயிருத்தலின், இப்பிரிவு விரிந்தநிலையில் ஆராய வேண்டுவது எனவும், இத் திணைக்கண் இதன் பொருத்தம் கண்டு தெளிய வேண்டுவது எனவும் போதரும். இன்பம் கருதிய இப் பிரிவுத் துறைகள் ஊடல் பொருளான மருதத் திணைப்பாற் படும். இவை குறிஞ்சித்திணையாகவோ பாலைத்திணை யாகவோ வகுக்கப்படுதல் இல்லை.

பரத்தையிடம் சென்று வந்த கணவனுக்கு வீட்டினுள் நுழைய இசைவு கொடுத்தல் (வாயில் நேர்தல்), இசைவு கொடாமை (வாயில் மறுத்தல்) என்ற இரண்டு துறைகளும் மருதத்திணையில் பெருவரவின. இத்துறைகள் காட்டும் குறிப்பு என்ன? பரத்தை வழிப்பட்ட பின்பு, ஒரு தலைவன் தன் வீட்டிற்குள் புக அஞ்சுகின்றான். புகும் உரிமையை இழக்கின்றான், கேட்டுப் புகவேண்டிய நிலைக்குத் தாழ்கின்றான் என்பது.

நன்னலம் தொலைய நலமிகச் சாஅய்
இன்னுயிர் கழியினும் உரையல்; அவர்நமக்கு
அன்னையும் அத்தனும் அல்லரோ தோழி
புலவியஃ தெவனோ அன்பிலங் கடையே *(குறுந். 93)*

அவர் நம்மிடம் இன்பம் துய்க்கும் காதலரா? இல்லையே; நம்மைக் காக்கும் தாயும் தந்தையும் அல்லவா? அதனால் அவரிடத்து ஊடல் எனக்கு எப்படித் தோன்றும்? என்று முறைமாற்றம் காட்டி ஒரு தலைவி வாயில் வேண்டி வந்த தலைவனை வீடு நுழைய மறுக்கின்றாள். மானமுடைய தலைவன் திருந்துதற்கு இவ்வாயில் நிறுத்தம் போதாதா? ஓரம்போகியாரும் இளநாகனாரும் மருதத்துறைகளை வகை படப் பாடிய மருதப் புலவர்கள். பரணரும் இத்திணையில் பல பாடல்கள் ஆக்கியுள்ளாரேனும், அவை இலக்கியத்தினும் வரலாற்றுக்குறிப்பு மிக்கவாக உள.[1] மருதம் பாடிய இளங்கடுங்கோவின் பாடல் மூன்றும் (அகம். 69, 171, நற். 50) வாயில் மறுத்தல் என்னும் ஒரு துறைப்பட்டன. ஒரு துறை கன்றிய புலவர்களை, மடல் பாடிய மாதங்கீரனார், வெறிபாடிய காமக் கண்ணியார் என அத்துறைப் பெயரால் பாராட்டுதல் வழக்கு. இதன்படி, இளங்கடுங்கோ 'வாயில் மறுப்புப் பாடிய' என்று சிறப்புப் பெயர் பெற்றிருத்தலே சாலும். ஆனால், பாலைபாடிய பெருங்கடுங்கோ என்பதுபோல 'மருதம் பாடிய' எனத் திணைப் பாராட்டு சுட்டப்படுதலின், இளங்கடுங்கோ மருதத் திணையில் பல துறைகளைப் பாடியவர் என்று கருத இடனுண்டு. அவர் யாத்த வேறு துறைச் செய்யுட்கள் எங்கே? என்பார்க்கு, இறந்தொழிந்தன போலும் என்பதுவே நாம் கூறும் விடை. இவ்விடை தமிழிலக்கிய வரலாறு கற்பார்க்குப் புரியும்.

கற்பியலிற் சிறந்த சில துறைகளை இதுகாறும் விளக்கமுறக் கண்டோம். திருமணத்துக்குப்பின் தலைவி தலைவனொடு உடன்போதல், பரத்தை கூற்று, தலைவனது ஆற்றாமை, காமம் மிக்க கழிபடர் கிளவி முதலான பலதுறைகள் விரிவஞ்சி ஈண்டு விடப்பட்டன.

கைக்கிளையும் பெருந்திணையும்

கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப *(தொல். 946)*

எழுதிணையை எண்ணும் வரிசையில், கைக்கிளைக்குத் தொல் காப்பியர் உரிய முதலிடம் அளித்தாலும், அதன் இலக்கணத்தை ஐந்திணை விரிவுக்குப் பின்னரே பெருந்திணையோடு அடுத்துச்

1. வேங்கடராசுலு ரெட்டியாரின் பரணர். ப. 24

சுருங்கக் கூறுவர். அதனால் கைக்கிளை பெருந்திணைகளின் சின்னிலையை நாம் அறிகின்றோம். ஓர் அகப்பாட்டிற்கு இரண்டு மூன்று துறைகள்கூட எழுதப் பட்டுள. ஒருதுறை களவாகவும் மற்றொரு துறை கற்பாகவும் அமைந்துள.

1. உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லியது. (கற்பு)

2. அல்ல குறிப்பட்டழிந்த தலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லியதூஉமாம். (களவு)

3. தோழியைப் பின்னின்ற தலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லியதூஉமாம். (களவு)

என மூன்று துறைகள் 126ஆம் அகப்பாட்டுக்கு உண்டு. இங்ஙனம் துறை பல கொண்ட பாடல்கள் சங்கவிலக்கியத்து நிரம்பக் காணப்படும். இத்துறையாராய்ச்சியில் நான் புகவில்லை. முதலில் நிற்கும் துறையே அப்பாட்டின் துறையெனத் தழுவிக் கொண்டேன்.[1] அகநானூறு நற்றிணை குறுந்தொகை ஐங்குறு நூறுகளின் உரையாசிரியர்களும் முதற்றுறைக்கே உரை கண்டனர். இந்த நான்கு தொகை நூல்களுக்கும் உரையெழுது முன்னரே, தொகுத்த காலத்துத் துறைகள் எழுதப்பட்டன என்பது நினையத்தகும். கலித்தொகையின் நிலைமட்டும் வேறாயிற்று. தொகுத்தவர் துறை வகுக்கவில்லை. உரையெழுத வந்த நச்சினார்க்கினியரே துறையும் எழுத வேண்டியவராயினார். இவர் தொல்காப்பியத்துக்கும் உரை கண்டவரன்றோ. இதன் விளைவு என்ன? தொல்காப்பியத்தில் தாம் வலிந்து எழுதிய இலக்கணங்களுக்கு இலக்கியங் காட்டவேண்டிக் கலித்தொகைத் துறைகளைத் திரித்து எழுத நேர்ந்தது. முற்கூறியாங்கு அகநானூறு முதலிய தொகைகளின் பழந்துறைகளை உள்ளபடி உடன்பட்ட யான், நச்சினார்க்கினியர் எழுதிய கலித்தொகைத் துறைகளை மட்டும் திறனாய்ந்து மேற் கொண்டுள்ளேன். எட்டுத் தொகையுள் கலித்தொகை யிற்றான் கைக்கிளை பெருந்திணைப் பாடல்கள் இருத்தலின், இத்திறனாய்வு இத் தொகையளவில் இன்றியமையாதாயிற்று.

கைக்கிளை பெருந்திணைகளின் இலக்கணம் பலவகையான கருத்து வேற்றுமைக்கு உரியது; அகத்திணையின் பொது விலக்கணத்தைத் தெளிந்து கொண்டால், இக் கருத்து மாறுகள்

1. நூலிற்கண்ட துறைகள் சிலவற்றில் இரண்டாவதாக அமைந்ததும், சிலவற்றிற்கு உரையாசிரியர்கள் எழுதுவதும், பிறவற்றைவிடப் பொருத்தமுள்ளனவாகத் தோன்றுகின்றன. -டாக்டர் உ.வே.சா. குறுந்தொகைப் பதிப்பு, முகவுரை.

தாமே அகலக் காண்போம். நான்காவது இயலில் இதுகுறித்த ஆராய்ச்சி யெல்லாம் நிகழும். இப்போது இவ்விருதிணைகளின் செய்திகளை, நான் கருதியபடி குறிப்பிடுவேன்.

கைக்கிளை

பருவம் எய்தாப் பெண்ணை (பருவம் எய்தியவளாக மயங்கி) ஒருவன் காதல் கொள்கின்றான், காதற்றுன்பமும் படுகின்றான்; நன்மை எனவும் தீமை எனவும் அவளைத் தொடர்புபடுத்திச் செருக்குகின்றான்; அவளிடமிருந்து மறு மொழியாக ஒரு சொல்லும் பெறவில்லை; எனினும், தானே சொல்லிச் சொல்லி இன்புறு கின்றான்;

காமஞ் சாலா இளமை யோள்வயின்
ஏமஞ் சாலா இடும்பை எய்தி
நன்மையும் தீமையும் என்றிரு திறத்தான்
தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்
சொல்லெதிர் பெறாஅன் சொல்லி யின்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே. (தொல். 995)

கைக்கிளையின் இலக்கணம் கூறும் இந்நூற்பா நீண்ட சிந்தனைக்கும் நினைவுக்கும் உரியதாதலின், முழுதும் தரப்பட்டது. அகத் திணையைச் சார்ந்த கைக்கிளைக்கு ஒரே ஒரு துறைதான் உண்டு. 'புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே' என்ற நடையால், இத் திணை விரிவற்றது, துறைபல இல்லாதது என்பது போதரும், நான்கு பாடல்களே இத்திணைக்குச் சங்கஇலக்கிய முழுதும் காணப்படு கின்றன. அந் நான்கும் கலித்தொகை ஒன்றிலேதான் உள (கலி. 56, 57, 58, 100). கபிலர் பாடியவை மூன்று; நல்லுருத்திரனார் பாடியது ஒன்று.

பெருந்திணை

ஏறிய மடற்றிறம் இளமை தீர்திறம்
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே(தொல். 996)

பெருந்திணை நான்கு துறைகள் கொண்டது:-

1. காதலியைப் பெறாத நிலையில், காதலன் மடலேறிச் செல்லுதல்.
2. கட்டிளமைக் காலத்து இன்பம் துய்க்காது கணவன் நெடுங்காலம் பிரிந்திருத்தல்.

3. எவ்வகையானும் தேறுதல் அடையாமல் மனைவி காமம் முற்றுதல்.

4. காமம் கொண்ட மனைவியின் துணிவுச் செயல்.

இத்திணைக்கு உரியன பத்துப் பாடல்களே; ஆசிரியரும் நல்லந்துவனார் ஒருவரே. இப்பத்தும் கலித்தொகை நெய்தற் றிணையில் (138-147) காணப்படுவன. இவற்றுள் நான்கு ஆண்பாற் பெருந்திணையும், ஆறு பெண்பாற் பெருந்திணையுமாம்.

கைக்கிளை பெருந்திணைப் பாடலெல்லாம் கலிப்பாவில் அமைந்திருப்பது ஏன்? சங்ககாலத்து ஆசிரியப்பாவிற்குப் பெருவழக்கும் நன்மதிப்பும் இருந்தும், இத்திணைகள் இப்பாவில் ஏன் பாடுபெறவில்லை? ஐங்குறுநூறு குறுந்தொகை நற்றிணை அகநானூறு என்ற நான்கும் ஆசிரியப்பாவில் இயன்ற அகத் தொகைகள். ஆயிரத்துக்கு மேலான பாடல்கள் உடைய இத்தொகைகள் முற்றும் ஐந்திணைத் துறைகளே கொண்டவை என்றும், கைக்கிளை பெருந்திணைக் குறிப்புக்கள் மருந்துக்குங்கூட இல்லை என்றும் எளிதாக முடிவு சொல்ல என் அறிவு துணியவில்லை. துறை யாராய்ச்சியைத் தனிப்பொருளாகக் கொண்டு சங்கத் தொகைகளை ஆய்வோமேல், சில அகவற்பாக்கள் கைக்கிளை பெருந்திணைகளாகவும் காணப்படும் என்பது என் கருத்து.[1] இதுகாறும் எழுதப்படாத நல்ல துறைகளும் சில செய்யுட்களுக்குப் புலனாகும். என் திணையாராய்ச்சிக்கு இத்துறையாராய்ச்சி உட்பட்டதேனும், இரண்டினையும் ஒருங்கு மேற்கொள்வது மயக்கந்தரும் ஆகலானும், பெரும்பாலான துறைகள் பொருந்தும் ஆகலானும், சில துறைகள் வேறுபடுதற்காக யான் கருதும் முடிபுகள் பிழையா ஆகலானும், துறையாராய்ச்சியைத் தனி யுறுப்பு மருத்துவம் போல்வது என்று விட்டமைந்தேன்.

1. குறுந். 78 கைக்கிளைத் திணையாகவும், அகம். 135; குறுந் 31; 326 பெருந்திணையாகவும் கருதலாம்.

3. அகத்திணைத் தோற்றம்

அகத்திணையின் தோற்ற வளர்ச்சிகள் தொல்காப்பியம் கூறும் இலக்கிய விதிகளாலும் சங்கவிலக்கியங்களாலும் தெற்றென அறியப்படும். அகத்திணை உருவாகுங் காலத்து இருந்த நூல்களையும், தொல்காப்பியத்துக்கு முன் இருந்த நூல்களையும், தொகையாக நாம் இழந்தோம். இழந்த மொழித் தனத்தைத் தெய்வச் செயலால் எய்தப் பெறுவோமேல், (இதற்கு உவே.சா. பலர் பிறத்தல் வேண்டும்) பழந்தமிழ் இலக்கியம் கருக்கொண்ட நிலையையும், ஒழுங்கு பெற ஊட்டம்பெற்று அகத்திணையாக உருக்கொண்ட நிலையையும் படி முறையாகக் காட்டச் சான்று பல கிடைக்கும். நமக்குக் கிட்டா அத்தொன்னூல்களை அவற்றின் அணிமைக் காலத்து வாழ்ந்த தொல்காப்பியரும் சங்கப் புலவர்களும் கற்றிருப்பர் என்றும், கற்றுத் தம் செய்யுட்களில் அத்தொன்னூல் களின் சொற்களையும் சொற்றொடர்களையும் மரபுகளையும் கருத்துக்களையும் போற்றிப் பொதிந்திருப்பர் என்றும் துணிவதில் தடை என்ன? முந்துநூல் கண்டு எழுதினார் தொல்காப்பியர் எனப் பாயிரம் புகல்கின்றது. 'எழுதிணை யென்ப', 'மொழிப புலன் நன்குணர்ந்த புலமையோரே', 'பாடலுட் பயின்றவை நாடுங்காலை' என்று நூற்றுக்கு மேலாக வரும் தொடர்களிலிருந்து, தொல்

---

1. Cf. K.M. Panikkar, A survey of Indian History, p.2

காப்பியத்துக்கு முன்னே பற்பல நூல்கள் இருந்த வரலாறும், அந்நூல்களின் செய்திகளைத் தொல்காப்பியம் தழுவிக் காத்து நிற்கும் வழிநிலையும் எளிதில் விளங்கும். மேலும் சங்கத் தமிழ்மக்களின் வாழ்க்கை அவர்க்கு முன்னையோர் நடத்திய வாழ்வினின்றும் மிக வேறுபட்டதென்று கருதுதற்கில்லை. ஓரின மக்களின் பழக்க வழக்கங்களில் நனிசிறு மாறுதல்களே காலவயத்தால் பண்டு ஏற்பட்டன. அறிவியலேற்றம் விரையும் இஞ்ஞான்றும் பன்னூறாண்டுத் தொல் வழக்காறுகள் சமுதாயத்தில் ஊன்றிய வேரோடு நிலைத்திருப்பக் காணலாம்'. இவ் விளக்கத்தால் கொள்ளக் கிடப்பது என்ன? அகத்திணை தோன்றிய முதற்காலத்தை நோக்குழிச் சங்கவிலக்கியம் காலத்தால் பிற்பட்டதேனும், கருத்துவகையால் அகத்திணை முதனூலுக்கு மாறுபட்டதன்று; ஆதலின் அகத்திணை யாராய்ச்சிக்குச் சங்க விலக்கியங்களை நம்பலாம் என்பது.

சங்க இலக்கியத்தின் தகுதி

இன்று உள்ள தமிழ்ப் பாட்டு எதுவும் தமிழிலக்கியத்தின் தொடக்க காலத்தைச் சார்ந்ததில்லை. நாம் பழமையெனப் போற்றிப் பாராட்டும் சங்கப் பாட்டுக்கூட தொல்காப்பியக் காலத்து (கி.மு. 3-ஆம் நூற்றாண்டு) எழுந்ததில்லை. சங்கப் பாடல்கள் என்பவை முந்திய யாப்பு விதிகளை அப்படியே பின்பற்றிப் பாடப்பட்டவை என்றும், நுணிகி யுயர்ந்த பழைய இலக்கிய மரபுகளைத் தழுவி நிற்பவை என்றும் பேராசிரியர் திரு. சீனிவாச அய்யங்கார் மொழிவது முற்றும் பொருந்துரையாகும்.[1] அகப்பாட்டின் பலவகைக் கூறுகளை வரலாற்றுக் கண்ணோடிக் காணும்போது இவர் துணிபு மேலும் தெளிவாகின்றது. தமிழில் எவ்வளவோ அகப்பாடல்கள் இருந்தன; அவற்றிலிருந்து அகவிலக்கணம் எழுதப்பட்டது; நுண்ணிய விதிகள் வகுக்கப்பட்டன; துறைகள் அமைக்கப்பட்டன; இலக்கணக் குறியீடுகளும் படைக்கப்பட்டன; இவ்வளவிற்கும் பிந்தியே நம் சங்கப்பாக்கள் இயற்றப்பெற்றன. இக் கோட்பாட்டின் உறுதிக்குச் சான்று பல வேண்டா. குறியீட்டுச் சொற்களையும் அமைத்துச் சங்கச் சான்றோர்கள் பாடியிருப்பதே ஒரு பெருஞ்சான்று. சங்கத் தொகை நூல்களில் வரும் அகத்திணைச் சொற்கள்:

பல்பூங் கானற் பகற்குறி மரீஇச்
செல்வல் கொண்க செறித்தனள் யாயே *(நற். 258)*
பின்னிலை முனியா நம்வயின் *(நற். 349)*
வேட்டனை யல்லையால் நலந்தந்து சென்மே *(நற். 395)*

1. History of the Tamils, p. 150.

அறத்தொடு நின்றேனைக் கண்டு திறப்பட
என்னையர்க் குய்த்துரைத்தாள் யாய் (கலி. 39)
பொருள்வயிற் பிரிதல் வேண்டும் என்னும்
அருளில் சொல்லும் நீசொல் வினையே (கலி. 21)
ஆழல் மடந்தை அழுங்குவர் செலவே (நற். 391)
அழாஅல் தோழி அழுங்குவர் செலவே (குறந். 135)
வாரான் அவனெனச் செலவழுங் கினனே (ஐங். 427)
தேர்செல வழுங்கத் திருவிற் கோலி
மனைமருண் டிருந்த என்னினும் (அகம். 189)
மாமயி லன்னார் மறையிற் புணர்மைந்தர்
காமங் களவிட்டுக் கைகொள் கற்பு (பரி. 11)
கன்னிமை கனியாக் கைக்கிளைக் காமம் (பரி. 11)
அலர்வினை மேவல் அம்பற் பெண்டிர் (அகம். 203)
அம்பல் மூதூர் அலர்வாய்ப் பெண்டிர் (நற். 143)

இவ்வாறு சங்கப் பனுவல்கள் இலக்கணவழி வந்த இலக்கியமாகவும், காலப்பிற்பட்டனவாகவும் இருத்தலின், முதனூல்கள் போல அகத் திணையின் தோற்ற ஆய்வுக்கு உகந்த கருவியாகா என்று கொள்ள லாமோ எனின், அதுதான் இல்லை. ஒரு மரம் தந்த விதையிலிருந்து உண்டாக்கிய மரம் வேற்றுச் சாதியாகுமோ? முற்றும் இலக்கண வழிவந்த நம் சங்கவிலக்கியம் அவ் விலக்கணத்தைத் தந்த மூலவிலக் கியத்தோடு ஒப்ப மதிக்கத்தக்கது என்று சுட்டுவதற்கே, துறைச் சொற்களின் ஆட்சியை எடுத்துக் காட்டினேன். இதனால் சங்க விலக்கியத்தின் அடிப்படைபற்றி யான் நிறுவும் அகத்திணை முடிபுகள் காயாகா, பழமாம் என்பது என் துணிபு.

II

பண்டைத் தமிழரின் வாழ்வியல் நோக்கம் அல்லது தமிழியம்

அகத்திணைத் தோற்றம் சமுதாயவியல் மானிட நிலவியல் தொல் தமிழினத்தின் உளவியல் என்னும் முக்கூற்றுத் தன்மைகளைச் சார்ந்து நிற்பது. ஆதலின் இம் மூவகையாலும் நாம் ஆராய வேண்டும். இம் மூவகையுள் அகத்திணைப் பிறப்புக்குச் சிறந்தது எது? என்று கணிக்க முடியாது. மூன்றும் சிறந்தனவே. அகத்திணைக்கு உரிய இச் சிறப்பியலைத் தனித்தனியாக விளக்குதற்கு முன்னர், பண்டைத் தமிழினத்தின் வாழ்க்கை முழுதும், சிறிய பெரிய எச்செயலகத்தும், உயிரென ஓடிக்கிடக்கும் ஒரு தமிழியத்தை– நினைவியலை–நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். இவ் விளக்க மில்லாத் தமிழாராய்ச்சி மண்ணை விண்ணெனவும் மலையைக் கடலெனவும் கருதிய பெருங் குற்றப்படும். நாம் பிறந்து வாழும்

இவ்வுலகம் உள் பொருளே; பெருகிய பொருள் நாகரிகம் வேண்டத்தக்கது''[1] அறமும் வளமும் உடைய இவ்வுலக வாழ்வே வாழ்க்கை[2] என்பது சங்கத் தமிழ் மண்பதை - சமுதாயம் - தெளிந்து கடைப்பிடித்த பெருநெறியாகும். "மன்னா உலகத்து (புறம். 165) என்ற தொடருக்கு நிலையா உலகம் - உலகம் நிலையாதது என்றல் கருத்தன்று. பொருள்கள் நிலையாத தோன்றியும் அழிந்தும் வரும் நிலையாத பொருள்கள் உடைய ஆனால் தான் நிலைத்த உலகம் என்பது கருத்து. நில்லாத கால், இல்லாத மனிதன் என்ற தொடர்களை ஒப்பு நோக்குக. உலகத்துப் பொருள்கள் நிலையா என்று உரை செய்யாமல், உலகமே நிலையாதது என்று உரைப்போமேல்'

நிலையா உலகத்து நிலைக்கும் புகழைத் தேடுக என்பதும் "மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர் தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே" என்பதும் பொருந்துமா? உலகம் நிலையுடையது என்றும், உலகத்துப் பொருள்களுள் புகழ் நிலையுடையது என்றும் நம் முன்னோர் துணிந்தனர். "தொலையா நல்லிசை உலகமொடு நிற்ப' (மலைப்டு. 70) "கொடாஅ நல்லிசை நிலைஇத் தவாஅலியரோ இவ்வுலக மோடுடனே" (பதிற். 14) "தாவில் நல்லிசை" (தொல். 1039), "நிலமிசை நீடுவாழ்வார்" (குறள். 3), "ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால் பொன்றாது நிற்பது ஒன்றில்" (குறள். 23) எனவரும் சான்றடிகள் பண்டையிலக்கியத்துப் பலப்பல. இத் தமிழியற்படியே, தொல்லைச் சமுதாயம் உருவாகி வளர்ந்தோங்கிற்று.

பொருள் நாகரிகம் என்பது அறத்துக்குப் புறம்பான நாகரிகம் என்று ஆமோ? பெருவாரியர் தத்தம் கடமைகளை மனவுணர்வொடு ஆற்றும் ஓர் அமைதிச் சமுதாயத்திற்றானே முயற்சி பெருகும், பொருள் கொழிக்கும், ஈகை சுரக்கும், நெஞ்சம் விரியும். ஆதலின் புறநலம் சமுதாயத்தின் அகநலத்தைக் காட்டும் பளிங்கு. பிறப்புத் தந்த இவ்வுலகத்துப் பல்லாற்றானும் நன்கு வாழ்தல் வேண்டும் என்பது தமிழினக்குறிக்கோள். இவ்வுலக வாழ்வு என்பதற்காக அகங்கெட்டு அறங்கெட்டுப் போதவேண்டுமா? வேண்டுவதில்லை என்பது தமிழ்விடை. நல்ல அறத்தொடும் தூய அகத்தொடும் உலக வாழ்க்கையை நடத்தலாம், நடத்த வேண்டும். அகத்திணையாகுக, புறத்திணையாகுக, தமிழின் எத்துறைப் பாடலிலும் இவ் வாழ்வறம் இலங்கக் காண்பீர். பண்டைப் புலவர்களும் பாணர்களும் வாழ்ந்த பெற்றியை ஓர்க. கொடிய நல்குரவுப் பட்ட காலத்தும், தன்மானம் இழந்து இல்லாதனவெல்லாம் ஏற்றிப் புகழ்ந்து இரக்கும் கீழ்மை அவர்கள்பால் இல்லை:

1. புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்
முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்–பட்டினப்பாலை - 217-8
2. புகழ்நிலைஇய மொழிவரை
அறநிலைஇய அகனட்டில். 42-3

முற்றிய திருவின் மூவ ராயினும்
பெட்பின் றீதல் யாம்வேண் டலமே (புறம். 205)

அகனகவாரா முகனழி பரிசில்
தாவி லாளர் வேளா ரல்லர் (புறம். 207)

வாழ்தல் வேண்டிப்
பொய் கூறேன் மெய் கூறுவல் (புறம். 139)

அறத்தின் வழிவராத எவ்வகைப் பேறும் முன்னையோரால் வைத்துப் பாராமல் பழிக்கப்பட்டது.

ஒழுக்கப்பற்றோடு ஒரு சமுதாயம் காணும் உலகியல் முன்னேற்றம் ஏன் உயிரியல் முன்னேற்றம் ஆகாது? ஒழுக்கம் இல்லா உலகியம் அழிவைத் தரும். ஒழுக்கமில்லா உயிரியம் வஞ்சகம் எனப்படும். உலகியம் உயிரியம் மற்று எவ்வியத்துக்கும் ஒழுக்கியம் மிக இன்றியமையாதது, தூய அடிப்படையாவது. இதனால் முன்னைத் தமிழர் எல்லா வாழ்க்கைத் துறையிலும் குருதியோட்டம் போலும் ஒழுக்கத்தையே வற்புறுத்தியிருப்பக் காண்கின்றோம். உயிரியம் என்பது ஒரு நெறியன்று; உயிர்கள் அடைதற்கு உரிய இறுதி நிலையாகும். அதனை அடைதற்குத் தக்க நெறிகளை மேற்கொள்ள வேண்டும். தக்க நெறிகளாகத் தமிழ்ச் சான்றோர் கண்டவை: இல்லறம், குடும்பக் கடமைகள், பொருளீட்டி வறியார்க்கும் உற்றார்க்கும் ஈதல், கண்ணோட்டம், மனம் வாய் மெய்த் தூய்மை, நாட்டுக் கடமை, புகழ்ப்பேறு, சுருங்கச் சொல்லின் பிறந்த உலகத்துச் சிறந்து வாழ்தல்.

தமிழினத்தின் ஒவ்வோர் எண்ணத்துள்ளும் இவ்வுலகியற் பண்பு செறிந்து கிடக்கின்றது. பரத்தைகளை நாடிச்சென்ற தலைவன் தன் வீட்டு வழியாகத் தேரைச் செலுத்தினான். அம் மணியொலி கேட்டு வீட்டினுள் இருந்த சிறுமகன் குறுகுறு நடந்து தந்தையைக் காணத் தள்ளாடித் தெருவிற்கு ஓடி வந்தான். வந்தவனைக் கண்ட தந்தைக்கு மேலும் தேரைச் செலுத்த மனம் வருமோ? தேரை நிறத்துக என்று பாகனுக்கு சொல்லி இறங்கிவந்து, எச்சில் ஊறும் தன் அன்புக்குழவியை மார்போடு அணைத்து, இனி வீட்டினுள் செல்வாய் என்றான். குழந்தை செல்ல மறுத்தது. அதனை வாயிற்படியிலேயே அழவிட்டுப் பரத்தை நாட்டங்கொள்ளத் தலைவன் உள்ளம் மறுத்தது. அழுங் குழவியையும் உடனழைத்துக் கொண்டு பரத்தையின் மணமனை ஏகுதல் சமுதாய மரபல்லவே. என் செய்வான் இப் பேதைப் பெருந்தகை? மகன்தன் விடாப் பிடிக்கு மகிழ்ந்து தன் வீட்டினுட் புக்கான். நிகழ்ச்சி அறிந்த தலைவி மக்கட்பேற்றால் இம்மையின்பத்தொடு மறுமையின்பமும் எய்தலாம் என்று ஒரு பழமொழி உண்டு; அம்முதுமொழி என் வாழ்க்கையில் உண்மையாதல் கண்டேன்:

இம்மை யுலகத் திசையொடும் விளங்கி
மறுமை யுலகமும் மறுவின் றெய்துப
செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்ம லோரெனப்
பல்லோர் கூறிய பழமொழி யெல்லாம்
வாயே யாகுதல் வாய்ந்தனம் தோழி (அகம். 66)

என்று உளம் பூரித்துத் தோழிக்கு உரைத்தாள். குடும்ப வொற்றுமைக்குக் குழந்தைப்பேறு வேண்டும் எனவும், இப்பேற்றால் மறுமைப்பேறும் கிட்டும் எனவும் நம்முன்னோர் நம்பிய எளியநெறி பெறப்படும்.

சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை வெற்றிதந்த முரசைக் குளிப்பாட்டும் பொருட்டு வெளியே எடுத்துச் சென்றிருந்தான். முரசு வைக்கும் கட்டில் தனியே கிடந்தது. அவ்வமயம் வந்த புலவர் மோசிகீரனார் நடையயர்ச்சியால் வீரக்கட்டிலைப் படுக்கைக் கட்டில் என மயங்கி, அதன்மேல் ஏறித் துயின்றார். முரசுவிழாக் கொண்டாடித் திரும்பிய அரசன் முரசு தூங்கவேண்டிய இடத்து மோசி தூங்கக் கண்டான். மறம் வாழும் தூய இடத்து மடிவாழக் கண்டான்; அதுவும் வெற்றிவிழாக் கொண்டாடி வரும்போது கண்டான்; பலர் முன்னிலையில் கைவாளோடு கண்டான் என்றால், மோசிகீரனார் வெட்டுண்பார், செத்தொழிவார் என்றன்றோ நாம் எதிர்பார்ப்போம். நடந்தது வேறு. முரசைத் தரையிற் கிடத்திக் கைவாளைத் தூர எறிந்து வெண்சாமரங் கொண்டு தன் கையாலே மெல்ல வீசிப் புலவர் தூக்கத்தை மேலும் வளர்த்தான். நெடிது உறங்கி விழித்த புலவர் வாள் வீச வேண்டிய வேந்தன் விசிறி வீசுவதைப் பார்த்துத் தன் புலமையெல்லாம் கொட்டிப் பாராட்டினார். அவ்வுலகம் யார்க்குக் கிடைக்கும்? இவ்வுலகத்துப் புகழ் உடையோர்க்குத்தான் கிடைக்கும். அப்புகழ் எப்படி வரும்? இதுபோன்ற அரிய நல்ல தொண்டு தெய்தாற்றான் வரும். என்னைக் கொன்றாலும் உனக்குப் பழியில்லை; அது செய்யாது, என் புலமையைப் போற்றிப் புகழ்கொண்டாய். நீ இங்ஙனம் செய்வதற்குக் காரணம் என்ன? இவ்வுலகத்து நல்ல பணிசெய்து இம்மைப் புகழ் கொண்டோர்க்கல்லது, மறுமையுலகத்து இருப்பு இல்லை என்று விளங்கிக்கொண்ட நெறித் தெளிவுதான்.[1]

1. ஒ.நோ.
புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவன் ஏவா வான ஊர்தி
எய்துப என்பதஞ் செய்வினை முடித்தெனக்
கேட்பல் எந்தை சேட்சென்னி நலங்கிள்ளி (புறம். 27)

மதனுடைய முழவுத்தோள் ஓச்சித் தண்ணென
வீசி யோயே வியலிடம் கமழ
இவணிசை யுடையோர்க் கல்ல தவணது
உயர்நிலை யுலகத் துறையு ளின்மை
விளங்கக் கேட்ட மாறுகொல்
வலம்படு குரிசில்நீ ஈங்கிது செயலே. (புறம். 50)

என்று பெருஞ்சேரல் இரும்பொறையின் இசையைப் பாடுங்கால், தமிழினத்தின் உலகியல் நெறியைப் புலப்படுத்துதல் காண்க.

தமிழர் கண்கண்ட உலகத்தை மதித்தனர்; வாழுங் காலத்துப் பெறும் இன்பத்தை உவந்தனர்; அழிக்க வொண்ணாக் காதல் என்னும் பாலாற்றலும், பகைவரைப் பொருது களிக்கும் மறவாற்றலும், அகம் புறம் என்னும் பாவகைக்கு முறையே பொருள்களாயின எனவும், பழந் தமிழ்ப் புலவர்கள் இந்நில நோக்கினரே, மக்கள் அறிந்த மெய்யான வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கண்டாங்குப் புனைவதையே விழைந்தனர் எனவும், தமிழ் நெஞ்சம் காணப்பட்ட இஞ்ஞாலத்தை நல்லதென்று கருதிற்று எனவும், தமிழர்கள் வரலாற்றின் பேராசிரியர் சீனிவாசனார், தமிழினத்தின் மெய்யியலை வரையறுத்து மொழிவது நினையத்தகும்.[1] தொல்தமிழர் தம் கால வரலாற்றின் பேராசிரியர் சிவராசனார் தமிழிலக்கியத் தோற்றத்தை மூன்று காலப்பகுதிகளாக ஆராய்வர்; இயற்கைக் காலம் என்று சங்ககாலத்துக்குப் பெயரிடுவர்; அக்காலப் பாட்டுக்களில் இவ்வுலக நல்வாழ்வுக்கு வேண்டுகைகளும் உலகவின் பங்களுமே பெரிதும் பாடப்பட்டுள என்று தெளிவிப்பர்.[2] இச்சான்றுகளால் இவ்வுலகத்தையும் ஈண்டுச் செய்யும் வினைகளையுமே முதன்மையாக மதித்த தமிழினத்தின் கோட்பாடு விளங்கும்.

அகத்திணையின் உரிப்பொருள்

நம் பிறப்போடு ஒட்டியது, உலகப் பிறப்பை அருளுவது'' யாண்டும் பரந்தது, உணர்ச்சியுள் வலியது,[3] ஐம்புல வின்பமும் ஒருங்கு தருவது[4], எண்ணம் சொல் செயலெல்லாம் இனிப்பது எது? காதல், காதல், காதல். இக் காதலே, இயல்பான பாலுணர்ச்சியே அகத்திணை யிலக்கியத்தின் பாடற்பொருளாம். உலகியலில் வாழ்வியலைக் கண்ட தமிழினத்தின் தனியிலக்கியத்துக்கு வேறு எவ்வுணர்ச்சி பாடுபொருளாக இருக்க முடியும்? இவ்வுணர்ச்சிக்குத்

1. P.T.S. History of the Tamils, p. 154
2. K.N.S. The Chronology of the Early Tamils, p. 8
3. கா.சு. பிள்ளை; பழந்தமிழர் நாகரிகம், ப. 4.
4. குறுந். 70. ஒ.நோ. குறள் - 1101

திணையும் துறையும் வகுத்துத் தனியிலக்கியம் காணும் எண்ணம் வேறு எவ்வினத்துக்குத் தோன்ற முடியும்? காதலுக்கு அடுத்த உலகப் பேருணர்ச்சி மறம் ஆதலின், அதற்கும் புறத்திணையென ஒரு தனியிலக்கியம் தமிழர் காண்பாராயினர்.

காமமும் வீரமும் அல்லது சிறந்த வாழ்க்கை யுணர்ச்சிகள் வேறில்லை. இவ்விரண்டிற்கும் இரண்டு இலக்கியங்கள் கண்ட தமிழ்மொழியின் முழுத்திறம் நமக்குப் பெருமிதம் தருவதாகும். இவ்விரண்டுணர்ச்சியுள் வீரம் ஒரு பாலார்க் கிடையே நிகழ்வது; காமம் பால்மாறி நிகழ்வதாகலின், ஓவியக் காட்சிக்கும் கற்பனைத் தொடுப்புக்கும், சுவை மிகுதிக்கும், அகத்திணையிலக்கியமே இடங்கொள்வது என்று புலவோர்கள் போற்றினர். வீரத்தினும் காதலுக்குத் தலைமை நல்கினர். மறத்தைப் பாடும் முடிவில் காதலை இணைத்துக் காட்டினர். பத்துப்பாட்டில் உள்ள பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, மலைபடுகடாம் முதலியவை புறப்பாட்டுக்கள் ஆயினும், இறுதியில் காதல் வெண்பாக்கள் அமைந்திருப்பதை நினைக.

தமிழுக்கு ஒரு தனிப்பெரு முதல் நூலான திருக்குறள் காமத்துப்பாலென ஓரியல் வகுத்து ஐந்திணைத் துறையனைத்தையும் செவ்விபெறப் பாடுகின்றது. உலகிற்கு அறங்கரைய வந்த திருவள்ளுவர் காமக்கூறுகளை அகத்திணை நெறிப்படிப் பாடுவானேன்? தமிழினத்து அறிவின் இமயத்துப் பிறந்த தூய புலநெறி வழக்கைச் சொல்லாதுவிடுதல், தமிழ்ப் புலமை பெற்ற தமக்கும், தமிழில் எழுதப்படும் தம் வாழ்வு நூலுக்கும் இழுக்காம் என்று கருதியிருப்பர். மேலும் இக் காதல்நெறி நன்றெனத் தெரிந்திருந்தும், மக்கட்கு அறமாக உரையாவிடில், உலகிற்குச் செய்த வஞ்சகமாம் என்றும் கருதியிருப்பர். தமிழ் மொழிக்கண் தோன்றிய சமய விலக்கியங்களும், அறவிலக்கியங்களும் பொருளாலும், வடிவாலும் அகத்திணைக்குட்பட்ட கடன் சொல்லுந் தரமன்று. கடவுட் காதலைப் பாடியருளிய ஆழ்வார் நாயன்மார்கள் மக்கட் காதலுக்கென வகுத்த அகத்திணையுலகச் சுவடுகளைப் பின்பற்றிய தாலன்றோ - தெய்வ அன்பு அக இலக்கியத் தடத்துப் பாய்ந்ததாலன்றோ - தமிழகத்தில் இறைப் பாசுரங்கள் புதுமையும் தனிமையும் பெற்ற ஓர் இலக்கியவுலகமாக விளங்குகின்றன.[1] தெய்வப் புலவர்களுக்கு அகத்திணைப் புலமை இல்லாதிருந்திருக்குமேல், இப் பாசுரங்களின் இலக்கியத்தரம் மிகக் குறைவுபடும், இலக்கியமோ என்ற ஐயத்திற்கும் உரியதாய்விடும் .

---

1. டாக்டர் ரா.பி.சே. திருவள்ளுவர் நூல் நயம். ப. 86.
V.R. Ramachandra Dikshitar; Studies in Tamil Literature and History, p. 275.

III

1. சமுதாய அடிப்படை

அகத்திணை யிலக்கியத்தின் உரிப்பொருளான காதல் தமிழினம் கொண்டொழுகிய உலகியல் நோக்கத்துக்கு முற்றும் இயைந்தது என்று மேலையாராய்ச்சியிற் கண்டோம். காதல் தன்னேரில்லா வலிய பெரிய உணர்ச்சியே யாயினும், அஃது உருப்பெற்றும் உருப்புப்பெற்றும் ஓர் இலக்கியப் படைப்பு எய்துதற்குத் துணைக் கூறுகள் எத்துணையோ வேண்டும். இக் கூறுகளும் காதலென்னும் மூலப்பொருளுக்கேற்ப உலகினவாக இருத்தல் வேண்டும். இலக்கியம் என்பது மக்கள் வாழ்வில் கண்டவை நுகர்ந்தவை எண்ணியவை உணர்ந்தவை தம்மைப் புலப்படுத்தும் பதிவேடு .என்றும், மொழிவழிப்பட்ட வாழ்க்கை விளக்கம் என்றும், ஆங்கிலத் திறனாளி அட்சனார் இலக்கிய ஆராய்ச்சி முன்னுரை நூலில் எழுதியுள்ளார்.[1] இலக்கியம் வாழ்விலிருந்து நேரடியாகத் தோன்றுவது என்றால், ஒரு தனி மனிதன் வாழ்விலிருந்து தோன்றுவது என்றா பொருள்?

மக்கள் பலர்கூடி வாழும் சமுதாயக் கூட்டுறவிலிருந்து இலக்கியம் முகிழ்க்கும் என்று கொள்க. சமுதாயப் பெருங்களம் இன்றேல், மக்கட்கு வினையாற்றலும் நாகரிகப் பாங்குகளும் தோன்றா. வேறுபட்ட எண்ணங்கள், வேட்கைகள், எதிர்பார்ப்புக்கள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்களெல்லாம் சமுதாய நிலைக்கண்ணாடியிற்றான் முழுதும் காணப்படும். அரசு மதம் ஒழுக்கப்பாடெல்லாம் சமுதாய நிலைபேற்றுக்குத் தானே வேண்டப்படுகின்றன. ஆதலின் தமிழர் கண்ட அகவிலக்கியக் கட்டிடத்துக்கு வேண்டும் துணைக்கூறுகளும் தமிழ்ச் சமுதாயத்திலிருந்தே கிடைத்தன என்பது என் கருத்து. ஈராயிரம் ஆண்டுக்கு முற்பட்ட தமிழினச் சமுதாய வாழ்வைச் சங்கப்பாடல்களே காட்டுகின்றன, காட்ட வல்லன.[2] இப்பாடல்களும் நான்கில் மும் மடங்கு அகத்திணை சார்ந்தவை எனின், சமுதாயச் செய்திகள் அகவிலக்கியப் படைப்பில் பெற்றுள்ள பேரிடம் வெளிப்படை.

களவு நெறி

களவொழுக்கம் பண்டைத் தமிழகத்தில் பரவியிருந்தது. பெற்றோர் அறியாமல் காதலர்களைத் தேடிக்கொள்ள முயன்ற இளம் பாலார்கள் அன்று மிகப்பலர். இரவும் பகலும் களவுக்

1. W.H. Hudson; an Introduction to the Study of Literature, p. 10.
2. J.V. Chelliah;"Pattuppattu: General Introduction; p.2.

கூட்டங்கள் நிகழ்ந்தன எனவும், தேரேறியும் வந்து இக் களவு நடத்தும் துணிவு இருந்தது எனவும் அறிகின்றோம். இவ்வூரில் நள்ளிரவில் எவ்வளவோ தேர்கள் வந்து செல்கின்றன. என்னைப் போன்ற இளமகளிர் பலர் இவ்வூரில் வாழ்கின்றார்கள். துயர் செய்யாத அன்புத் தாயைப் பெற்றிருப்பது அவர்களின் நல்ல காலம். ஓர் தேர் வந்து போயிற்று என்று யாரோ சொல்லக் கேட்ட என் அன்னை ஐயப்பட்டு என்னைத் தொல்லைப்படுத்துகின்றாள்.'

பனிக்கழி துழவும் பானாள் தனித்தோர்
தேர்வந்து பெயர்ந்த தென்ப அதற்கொண்டு
ஓரும் அலைக்கும் அன்னை பிறரும்
பின்னுவிடு கதுப்பின் மின்னிழை மகளிர்
இளையரும் மடவரும் உளரே
அலையாத் தாயரொடு நற்பா லோரே (குறுந். 246)

என்று ஓர் இளநங்கை கொள்ளும் பொறாமையிலும், ஊரில் களவு மிகுதியும் நடந்தது என்று அறியலாம். சங்ககாலத்தில் வரையாது உடன்போயினார் பலர் என்றால், களவொழுக்கம் ஒழுகினார் பலப்பலராதல் வேண்டுமன்றே. மற்றும் ஒரு சான்று; மகள் உடன்போனபின், செவிலி தேடிப் புறப்பட்டாள். பாலை நிலத்தின் வழிநெடுகச் சென்றாள். நடந்து நடந்து முதிய கால்களும் தள்ளாடின. ஆணும் பெண்ணும் இருவர் இருவராகத் தூரத்தே வரக்கண்டாள். தம்மவரோ என்று ஆசையொடு ஒவ்வொரு முறையும் பார்த்தாள். வேறு இளையவனும் இளையவளுமாக இருக்கக்கண்டு அவலித்தாள். காதலராக எதிரே வருவார் பலரிருந்தும், வேற்றவராக உள்ளனரே என்று ஏங்கினாள். உற்றுப் பார்த்துப் பார்த்து அவள் கண்கள் ஒளி மழுங்கின.

காலே பரிதப் பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந் தனவே
அகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்றவிவ் வுலகத்துப் பிறரே! (குறுந். 44)

உடன்போகும் காதற்சோடிகள் வானத்து மீன்களினும் பலராவர் என்ற உவமையால், பண்டைத் தமிழகத்தில் களவின் பெருக்கம் நிலவிற்று என்பது அங்கைநெல்லி.

---

1 'பிறர்' என்றது பொதுவாக வழிப்போவாரையெல்லாம் குறியாது. புணர்ந்துடன் வரும் களவுக் காதலர்களையே குறிக்கும். "மீண்டாரென உவந்தேன் கண்டு நும்மை இம் மேதகவே பூண்டார் இருவர் முன்போயினரே" என்னும் திருக்கோவைப் பாட்டில் (244) குறுந் தொகையின் உரைப் பொருளைக் காண்க.

சமுதாய இசைவு

இன்பத்துறையில் அவரவர் விருப்பத்துக்கு இடனுண்டு எனவும், ஒருவர் விருப்பத்தை வெளிப்படுத்தலின் களவுநெறி நன்னெறியே எனவும் தமிழ்ச் சமுதாயம் ஒப்பியதோடு, அந்நெறிக்கு ஆதரவும் அளித்தது. "காதற்காமம் காமத்துச் சிறந்தது" (பரி.9) என்று குன்றம்பூதனார் களவொழுக்கத்தின் பெருமையை எடுத்துரைப்பர். ஆணும் பெண்ணும் விருப்பம் ஒத்துக்கூடும் கூட்டம் ('விருப்பு ஒரொத்தது மெய்யுறுபுணர்ச்சி') என்று அதற்கு ஏதுக்காட்டுவர். களவு நெறிக்கு இசைந்த நம் சமுதாயம் அந்நெறி வளர வேண்டிய சூழ்நிலையையும் வகுத்து உதவிற்று. இளைஞர்கள் ஒன்று குழுமுதற்கும், அவர்தம் தீரங்களை இளைஞியர் முன் அமர்ந்து காண்பதற்கும் ஏற்ற மறவிழாக்கள் பல நிகழ்ந்தன. ஏறுகோள்விழா முல்லை நிலத்துப் பண்டு கொண்டாடிய பெருவிழாவாகும். இஃது ஆண்டுதோறும் யாண்டும் நிகழும். இவ்விழாவில் முல்லைக் குமரியர்கள் உடன் வளர்த்த காளையேறுகள் விரட்டப்படும். கொன்றையும் காயாவும் வெட்சியும் பிடவும் தளவும் சூடி முல்லைக் காதலர்கள் ஏறுபிடிக்கப் புறப்படுவர். முல்லை வரிசை போன்ற பல்லும் குளிர்ந்த கண்ணும் பேதைச் சொல்லும் பொற்றோடும் கொண்ட அழகியர் பரண்மேல் வீற்றிருந்து ஆரவாரஞ்செய்து விழாவிற்கு உணர்ச்சியூட்டுவர். இங்ஙனம் காளையர் ஓடுங்காளையைச் சாடிப் பிடிக்கும்போது, குமரியர் கூடியிருந்து காணும் வாய்ப்பினைப் பண்டைச் சமுதாயம் நல்கிற்று.

பல்லான் பொதுவர் கதழ்விடை கோட்காண்மார்
முல்லை முகையும் முருந்தும் நிரைத்தன்ன
பல்லர் பெருமழைக் கண்ணர் மடஞ்சேர்ந்த
சொல்லர் சுடருங் கனங்குழைக் காதி னர்
நல்லவர் கொண்டார். விடை (கலி. 103)

மைந்தரும் மகளிரும் விருப்பம்போல் பலர்காணத் தழுவிக் கைகோத்தாடும் துணங்கைக் கூத்து முன்பு பெரு வழக்காக இருந்தது. 'மள்ளர் குழீஇய விழவு, மகளிர் தழீஇய துணங்கை' என்பது குறுந்தொகை (31). ஆடுவார் இறுகத்தழுவி ஆடுவது இக்கூத்தின் இயல்பாதலின், தழூஉ என்ற ஒரு பெயர் ("துணங்கையஞ் சீர்த்தழூஉ" மதுரைக் காஞ்சி. 160) இதற்கு ஏற்படலாயிற்று. எண்ணிறந்த விழாக்களும் ஆடல்களும் பாடல்களும் வரிகளும் தமிழகத்துப் பொலிந்த ஏற்றத்தைச் சங்கப் பனுவல்களால் அறிகின்றோம். இவையெல்லாம் இருபாலாரும் அடிக்கடி நெருங்கிப் பழகுதற்கும், பழக்கம் களவொழுக்கமாக வளர்தற்கும் வழிசெய்தன. பெருத்த மழையில் பட்டமரம் தளிர்த்தாற்போல, முதியோர்க்கும் காதலுணர்வு மழுங்காதிருந்தது. சிறானும், சிறாளும்கூடி விளையாடித் திரியும் குழந்தை நட்பினை அற்றைச் சமுதாயம் தடுக்கவில்லை காண்.

செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத்
தண்கயம் ஆடும் மகளிரொடு கைபிணைந்து
தழுவுவழித் தழீஇத் தூங்குவழித் தூங்கி
மறையெனல் அறியா மாயாமில் ஆயம் (புறம். 234)

என்றும் புலவர் தொடித்தலை விழுத்தண்டினார் சிறுவர் கூட்டமும் சிறுமியர் கூட்டமும் கைபிணைந்து மெய்தழுவி விளையாடும் குழந்தைத் துணங்கையைக் குறிப்பிடுகின்றார். இவளும் இவனும் சிற்றில் இழைத்தும் சிறுபறையறைந்தும் விளையாடுபவ என்று இலக்கணர்கள் காட்டும் நடையில் மேலைத்தமிழ்ச் சமுதாய வழக்கம் புலப்படுதல் காண்க.

ஊர்ப்பெண்கள் இளங் காதலர்களின் மறையொழுக்கத்தை அறவே கடிந்து ஒதுக்கார். அவர்தம் போக்கிற்கு இடையூறாய் நின்று விலக்கார். விலக்கினார்கள் என்று சொல்ல யாதொரு சான்றும் இல்லை. காதலர்களின் வரவு செலவுகளைக் கண்டுபிடித்து மகிழ்ந்து இன்புறுவது, இன்னவளுக்கு இன்னவனோடு தொடர்பு என்று பலரறியப் பேசிப் பரப்புவது, இவையே அலர்வாய்ப் பெண்களின் வேலையாகும். 'ஊரார் துறைவற்கு என்னைப் பெண்டென மொழிப' (ஐங். 112) என்று ஒரு தலைவி ஊர் நோக்கத்தைச் சுட்டிக்காட்டுவள். அலர் களவு நெறிக்கு என்றும் பகையாக வளர்ந்த தில்லை. காதலோர்களைப் பிரித்து உறவைக் கெடுக்க முயன்ற தில்லை. பெண்ணின் உற்றார்க்கும் ஊரார் பிறர்க்கும் நம்மூர்க்கண் களவொன்று நடக்கின்றது என்பதனை அம்பலப் படுத்தும் நன்னோக்குடையதே அலராவது (அகம். 40). நும் மகள் விரும்பும் நம்பி இவனே, இனி மணங்காண்க என்ற அலர் பெற்றோர்க்குக் கலக்கமின்றி வழிகாட்டுகின்றது. தம் மகள் தேர்ந்த அம்மகன் பெற்றோர்க்குப் பிடிக்காதிருந்தாலும், என் செய்வது, ஊரறிந்த உறவிற்கு உடன்பட்டுத்தானே ஆகவேண்டும். எனவே பெற்றோர் திருமணத்திற்கு முறையான ஏற்பாடு செய்குவர். செய்யவே, களவைக் கற்பாற்றுப்படுத்திய அலரும், ஓடும் நெஞ்சு ஒரு நொடியில் நின்றது போல, தானே கும்பி யொழியக் காண்கின்றோம். அலர்வாய்ப் பெண்டிர் நங்கையை மணப்படுத்தித் தம்மொடு ஒருத்தியாகக் கூட்டிக் கொண்டபின், அவருக்குப் பற்றுக்கோடு உண்டோ?

அம்பலும் அலரும் தாங்கமாட்டாது அஞ்சிய இளங்குமரி இவ்வலரைக் காட்டிலும் பாலை வெயில் கொடுமையாமோ? தாங்கத்தக்க இனியதன்றே என்று கொழுநனோடு சுரம் போதலும் உண்டு. அப்போது, அலர் பொழிந்த அரிவையர்கள் இனிய பொருளைப் பறிகொடுத்தாற் போல வருந்தவும் இரங்கவும் காண்கின்றோம். "மனை மருண்டிருந்த என்னினும்.....ஊர்

இழந்தன்று தன்வீழ்வுரு பொருளே" (அகம். 189). இவ்வாறு தன் கவலையினும் ஊர்க்கவலை பெரிதாயிற்று எனத் தாய் புலம்புகின்றாள். இதனால் ஊரலர் அன்புவழிப்பட்டது என்பது பெறப்படும்.

தமிழ்ச் சமுதாயம் களவுமுறையை ஒருநெறியாகக் கண்டு ஓம்பியது என்ற கருத்து இன்னும் வலியுறக் காண்போம். உடன்போய காதலர்கள் இடைச்சுரத்து வெயிலுக்கு ஆற்றாது மராமரத்தின் நிழலில் தங்கினர்; நீர் விடாய்க்கு நெல்லிக்கனிகளைத் தின்று கொண்டிருந்தனர். 'இவர்கள் எந்நாட்டினரோ, எவ்வூரினரோ, எவர்மக்களோ? யாராயினும் அருளுக்கும் ஆதரவுக்கும் உரியவர்கள். ஏன்? இணைபிரியா மகன்றிற் பறவை போல என்றும் நீங்காது உடனிருக்கும் காதற் கொள்கையுடையவர்கள்;'

யார்கொல் அளியர் தாமே வார்சிறைக்
குறுங்கால் மகன்றில் அன்ன
உடன்புணர் கொள்கைக் காத லோரே **(ஐங். 38)**

என்று இவ்விருவரையும் கண்ட வழிப்போக்கினர் பாராட்டு வாராயினர். 'உடன்புணர் கொள்கைக் காதலோர்' என்ற தொடரால், கற்புக்கடன் பூண்ட இவ்வுடன்போக்கு வழிப்போகுநர்க்கும் உடன்பாடே என்பது பெறப்படும். உடன் போய மகளைத் தேடிச்சென்றாள் ஒரு செவிலித்தாய். 'தன் மகளையும் அவள் காதலனையும் கண்டதுண்டோ' என்று எதிர்ப்பட்ட முக்கோற் பகவரைத் துடிதுடித்து வினவினாள். தமிழியல் அறிந்த அந்த ணாளர்கள், 'கண்டோம் கண்டோம். கற்புவழிப்பட்டாளைச் சுரத்திடைக் கண்டோம். அவள் சென்ற நெறியே தலையாய அறநெறி. வாழ்வுக்குச் சிறந்தானை வழிப்பட்டுச் சென்ற கற்பியின் பொருட்டு, தாயே, கவலற்க' என்று அறமும் அமைதியும் தோன்ற ஏதுக் காட்டினர் (கலி. 6). உடன் புணரிகளை வழியிடைக் கண்டார் யாரும். 'இவ்வகைப் போக்குத் தவறு, பெற்றோர் அறியா இச்செலவு பழியுடையது' என மறித்து நிறுத்தியதாக ஒரு பாடற் குறிப்பும் இல்லை. இக் காதற் செலவை வரவேற்ற பாடல்களே உள. இதனால் நன்மைக் காதலர்கள் மறைவொழுக்கத்திற் பெற்ற பொது அன்பும் அளியும் சமுதாய இசைவும் தெரிய வரும்.

குடும்ப இசைவு

மறைவுச் செய்தியைக் கேட்டதும், தடம் பிறழ்ந்தாற் போலத் துடிக்கும் சிலர் உண்டு. அவர் தலைமகளின் குடும்பத்தாராவர். பெற்றோர்கள் களவு நெறியை உடன் படாது கதப்பட்டார்கள் என்று கொள்ளக் கூடாது.[1] அன்னோர் சினப்பு களவு நெறி

1. ஒ.நோ. அகநானூற்றுச் சொற்பொழிவுகள். ப. 12.

மேலன்று; அந்நெறிப்பட்ட மகள் மேலாம். நாமிருக்க, மணஞ் செய்துவைப்பது நம் கடமையாயிருப்ப, கடமையை உணரும் நம்மை மறந்து, மகள் தானே தனக்கொருவனைத் தேடலாமா? இம் முதலெண்ணம் எப் பெற்றோர்க்கும் எழவே செய்யும். சமுதாய முன்னிலையில் குடிமானத்திற்கு இழுக்கெனவே தாய் தந்தையர் துடிப்படைவர்.இத்துடிப்பு கடமை யுணர்ச்சியில் எழுவதேயன்றிக் களவு வெறுப்பில் எழுவதன்று காண். தனக்குப் பிடித்தவனை மகள் மணப்பதிலோ அவளை மணப்படுத்துவதிலோ பெற்றோர் தடையாக நில்லார். தமக்குப் பிடித்தவனைத்தான் தம்மகள் பிடித்தவனாக்கிக் கொள்ள வேண்டும் என்று வன்மம் செய்யார். இஃது அகத்திணை இலக்கியம் காட்டும் பெற்றோர் இயல்பு. எனினும் கன்று தானே அவிழ்த்துக் கொண்டு பால் குடிப்பதை மாட்டாளி விரும்புவதுண்டோ? பாராட்டிச் சீராட்டிப் பருவம்வரை வளர்த்த மகளின் மனப்போக்கே - உரிமை யுணர்ச்சியே - பெற்றோர்க்குச் சிறிய மனக்கசப்பை ஊட்ட வல்லதாகும். மனங்கசப்பினும், காதற்களம் தெரிந்தபின், மகள் விருப்பத்திற்கு மாறு செல்லும் பெற்றோரிலர். வேறாக ஒருவனை மணமகனாக விதிக்கும் பெற்றோரிலர். அதுபோல மகள் செய்தியைக் கண்டதும் கேட்டதும், ஆம், நன்கு செய்தாள், வல்லவள் என்று முகமலர்ந்து வாய்மொழியும் பெற்றோருமிலர்.

அவரும்,
தெரிகணை நோக்கிச் சிலைநோக்கிக் கண்சேந்து
ஒருபக லெல்லாம் உருத்தெழுந் தாறி
இருவர்கட் குற்றமும் இல்லையால் என்று
தெருமந்து சாய்த்தார் தலை (கலி. 39)

மனிதவுணர்ச்சியும் தமிழ் நாகரிகமும் பின்னிய பாட்டு இது. தங்கையின் களவுப்புணர்ச்சியைத் தாய் சொல்லாமற் சொல்லக் கேட்ட அண்ணன்மார்கள் 'குடிவடுப்பட இப்படியும் நடந்தது கொல்? நடக்கத் தூண்டிய அவ்வாடவன் யார்? ஒருகை பார்ப்போம்' என்று கொதித்தனர். கூரிய அம்பினையும் கொடிய வில்லையும் வீரத்தால் நோக்கினர். இது தகாது என்று ஒருகால் வீறிட்டு எழுந்தனர். விளைவு என்னாமோ என்று மறுகால் அமைந்தனர். இவ்வுள்ளப் பூசல் சில பொழுதுவரை நின்றது. இவளுக்கு ஒருவன், அவனுக்கு ஒருத்தி வாழ்வுக்கு வேண்டும்; தன் வாழ்வுக்குத் தக்காரைத் தானே தேடி எய்துவதில் பிழைபாடு என்னோ? யார்பாலும் குற்றம் இல்லை என்று தெளிந்தனர். தெளியவே, காதலரைப் பிரித்தற்குப் புணரவிருந்த அம்பும் வில்லும் கூடாதொழிந்தன. போர்க்களக் கருவிகளைத் தங்கையின் காதற் களத்தில் பயன்படுத்த எடுத்தோமே? காதலுக்கு வீரம் துணையாக வேண்டும்; என்செய்தோம்? என்று

அண்ணன்மார் நாணத்தால் தலைகீழாயினர். காதற் களவு தமிழ்நிலத்தில் அறமாகப் போற்றப்பட்டது என்று இதனாலும் உறுதிப்படும்.

களவும் கற்பே

தமிழ் வரலாறு என்னும் நூலாசிரியர் களவு அறமாகாது; பிழை நெறியாம் என்று விரித்துரைக்கக் காண்கிறோம். சங்கப் பாடல்களுக்கு இவர் பிழையாகச் செய்து கொண்ட கருத்துரைகள் இப்பிழை முடிபிற்குக் காரணமாயின. அவற்றுள் ஒன்று காட்டுவன்;

> **குறமகள் அவளெம் குலமகள் அவளொடும்**
> **அறுமுக வொருவனின் அடியிணை தொழுதேம்**
> **துறைமிசை நினதிரு திருவடி தொடுநர்**
> **பெறுகநன் மணம்விடு பிழைமணம் எனவே. (சிலப். குன்ற. 18)**

பிழை மணத்தை ஒழித்து நன் மணத்தை அருளுக என்று தோழியும் தலைவியும் முருகன்பால் வேண்டுகின்றனர் என இளங்கோ கூறுவர். பிழை மணம் என்பது களவைக் குறிக்கும் என்றும், களவொழுக்கத்தைத் தவிர்த்து நாடறிந்த நன்மணமாகிய கற்பொழுக்கத்தை முடிப்பிக்க என்பதே தோழியின் வேண்டுரை என்றும், களவைப் பிழைமணம் என்றதனால் களவு தீது என்பது தெளிவு என்றும், மகாவித்துவான் ரா. இராகவவையங்கார் அவர்கள் முடிவுக்கு வருவர். இளங்கோ பிழைமணம் என்றது களவையா? இல்லை; இல்லை. அகத்திணைக் களவில் வெறியாட்டு நிகழும் என முன்னே படித்திருக்கின்றோம். இவள் வாட்டம் முருகனால் விளைந்ததுஎன்று பூசாரி வழக்கப்படி சொல்வான். அவனை இகழ்வதும், அவன் மேல் ஏறிய முருக தெய்வத்தை இகழ்வதும் காதலியர்தம் துணிச்சல்.

> **வேலன் மடவன் அவனினும் தான்மடவன்**
> **ஆலமர் செல்வன் புதல்வன் வருமாயின் (சிலப். குன்ற. 13)**

எனச் சிலப்பதிகாரத்துக் குறிஞ்சிக் காதலாளின் துணிவுரையைக் கேட்கின்றோம். இவ்வெறியாட்டமயத்து வருவது 'பெறுக நன்மணம் விடு பிழைமணம்' என்ற அடி. 'என் காதலான் இன்னும் களவையே விரும்புகின்றான்; அவனுக்கு அக்களவெண்ணத்தைத் தவிர்த்தருள்; திருமண எண்ணத்தை ஊட்டுக' என்று தலைவன் செயலைச் சொல்லுதற்காக வெறியாட்டு நடப்பதில்லை. தலைவனைத் திருத்துக என்று முருகன் முன் முறையிடார் தலைவியர். தலைவனது நெறியைப்பற்றிப் பேசும் இடம் வெறியிடம் அன்று என்ற மரபை நாம் உணர வேண்டும். வெறியும் நொதுமலர் வரைவும் கற்புக்கு ஏலா ஆதலின், அவற்றை விலக்க முயல்வர் காதற்

பெண்டுகள் என்று முன்னரே விளக்கியுள்ளேன். அம் முயற்சியைச் சிலப்பதிகாரப் பாடல்களும் புலப்படுத்துகின்றன. வேலன் வந்து வெறியாடும் களத்து மயில்மேல் முருகன் வருவான்; வந்தால், மலைநாடனது திருமணத்தை வேண்டுவோம் (குன்ற. 15). (வேறு மணத்தை வேண்டோம் என்பது குறிப்பு). அயல் மணம் ஒழி, அவர் மணத்தை அருளெனத் தொழுவோம் (குன்ற.16); அவர் பலரறிமணம் செய்து கொள்வார் எனக் கூப்புவோம் (குன்ற. 17). இங்ஙனமாகத் தோழியும் தலைவியும் அயல்மண வொழிவையும் அவர் மணவுறுதியையும் சுட்டி மொழிந்து வருகாலை, நன்மணம் பெறுக, பிழைமணம் விடுக (குன்ற. 18) என்று கூறிமுடிப்பர். ஆதலின் பிழைமணம் என்பது நொதுமலர் வரைவை - தலைவன் அல்லாத பிறனுக்கு மணம்பேசுவதைக் குறிப்பதாகும். பிறர் மணமே கற்புக்குக் கேடு பயக்கும் தவறான மணமாகும்; அறங் கடந்த மணமாகும். ஆதலினன்றே அறத்தொடு நிற்றல் வேண்டுவதாயிற்று.

களவு கற்பு என்பன சமுதாயநிலை நோக்கிய சொற்கள். சமுதாயத்திற்கு மறைவு களவு எனவும், வெளிப்படை கற்பு எனவும் படும். உள்ளம் ஒன்றிய காதலர்தம் அன்புநிலை நோக்கின், களவும் கற்பேயாம். சமுதாய ஒழுங்குக்கு உட்படுவான் தூயகாதலாளர்கள் மணநிலை கொள்வர். அஃதன்றித் திருமணத்தால் உள்ளம் ஒன்றும் என்றோ, காதல் தூய்மை பெறும் என்றோ அகத்திணைக்கண் பொருள்கொள்ளல் ஆகாது. காதலர்கள் எஞ்ஞான்றும் கற்புடையவர்கள், அன்பினர் என்பது அகத்திணைக் கோளாகும். 'இது தீமை பயக்கும் களவன்மை கொள்க' என்பர் இளம்பூரணர் (தொல். பொருள். 487). 'இளையோள் வழுவிலள்' என்பது ஒருதாய் மொழி (நற். 143)

கரநனி இனிய தாகுக தில்ல
அறநெறி இதுவெனத் தெளிந்தவென்
பிறைநுதற் குறுமகள் போகிய கரனே (ஐங். 371)

களவொழுகி உடன்போகிய தன்மகள் அறநெறி தெளிந்தவள் என்று தாய் தெளியக் காண்கின்றோம். ஆதலின், அகத்திணை கூறும் களவு அறநெறிப் பட்டது என்று துணிவோமாக. பிழை மணம் - அயலார் மணம் என்பது நாட்டாரின் நல்லுரை. அறஞ்சாலும் அகத்திணைக் களவு புலவர் தம் படைப்பன்று; தமிழ்ச் சமுதாயத்தில் பரவிக் கிடந்த ஒழுக்கமாகும். மக்கள் வாழ்க்கையில் ஊறிக்கலந்த இன்பக் களவுணர்ச்சியை அகத்திணைப் படைப்பிற்கு நற்கூறாகப் புலவர்கள் தழீஇக் கொண்டனர்.

---

1. தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, ப.7.
திருவள்ளுவர் நூல்நயம் ப. 73.

IV

மரபு நெறி

களவுக்கும் கற்புக்கும் உரிய தொடர்பு என்ன? இது மிகவும் ஆராய வேண்டுவது. கற்பாவது நல்வாழ்வு என்றும், களவாவது அவ்வாழ்வை எய்துவிக்கும் ஒரு நன்னெறியே என்றும் கொள்க.[1]

மாமயி லன்னார் மறையிற் புணர்மைந்தர்
காமம் களவிட்டுக் கைகொள் கற்புற்றென (பரி. 11)

இவ்வாறு இரண்டன் தொடர்பை ஆசிரியர் நல்லந்துவனார் எடுத்துக் காட்டுவர். களவு கொண்டுவிடுதற்குரியது; கற்பு கைக்கொள்ளுதற் குரியது என்று களவின் நிலையாமையையும் கற்பின் நிலைமையும் உறவுபடுத்திக் கூறுவர். இதனால் கற்பு வாழ்க்கைக்குக் களவு நல்ல தோற்றுவாய் எனப்படுமன்றி, இத் தோற்றுவாயின்றிக் கற்பியல் அமையாது, சிறவாது எனப்படாது. நல்ல காதல்வாழ்க்கை களவானே முகிழ்க்கும் என்றல் பொருளன்று. 'கற்பெனப்படுவது களவின் வழித்தே' என்பது இறையனார் களவியல் (15). இக்கருத்து அகத்தமிழ் நெறியன்று. ஒவ்வொரு கற்பியலுக்கு முன்னும் களவியல் நிகழ்ந்தாதல் வேண்டும் எனவும், திருமணங் கூட்டும் ஒரே நெறி களவுதான் எனவும் கூறுவார் கூற்று அல்தமிழ் என அகற்றுக. இறையனார் யாத்த இவ்விலக்கணம் அகவிலக்கியத்திலும் தமிழ் மன்பதையின் வாழ்க்கையிலும் காணாத கட்டுரையாகும். பெத்தரண் ரசல் எழுதுகிறார்: 'மருட்கைக் காதல் வாழ்வில் ஆழ்ந்தகன்ற இன்பக்களிப்பை ஊட்டும் என்று கருதுகின்றேன். ஒருவனும் ஒருத்தியும் வேட்கை, வேட்பு, மென்மையோடு காதற் படுவரேல், அக்காதல் இனைத்தென அறியா நயமுடையது. இக் காதல் நயப் பாங்கை மனிதவினம் உணர வேண்டும். உணராமை அறியாமையாகும். களவுக்காதல் வாழ்வின் நோக்கம் ஆகா தெனினும், வாழ்வின் ஒரு கூறேயாமாயினும், களவினால் வரும் ஆரா இன்பத்தை நுகர்ந்து திளைக்கச் சமுதாய அமைப்பு கட்டாயம் இடங்கொடுக்க வேண்டும் என்று எண்ணுகின்றேன். இங்ஙனம் இருவர் தம்மூட் புல்லிப் பெறும் தனி இன்பத்தினும், இல்லறம் என்பது ஒருபெரும் கருத்துடையது. அஃது ஓர் ஒழுங்கியல். குழந்தைகளைப் பெற்று அளிப்பதால், திருமணம் சமுதாய வமைப்பின் ஒரு பொதுக் கூறாகவும், கணவன் மனைவி இருவரின் சொந்த நிலைக்குஅப்பாற்பட்ட சிறப்புக் கூறாகவும் விளங்குகின்றது. ஆர்வக் காதல் திருமணத்திற்கு ஒரு தூண்டுகோலாக அமையவேண்டும். அமைவது நன்று என்பதே என் கருத்தாயினும், ஒன்று சொல்லுவன். காதலார்வம் கடைசி வரை

1. கலித்தொகைச் சொற்பொழிவுகள். ப. 4.

நில்லாது, மக்கட் கொடை என்னும் சமுதாயப் பணி புரியாது. இன்பத்தோடு சமுதாயக் கடனாற்றும் வரைவுக் காதல் உண்டே. அது மிக்க பிணிப்பும் அன்பும் உண்மையும் உடையது.[1] இவ்வாறு சமுதாயத்தில் களவிற்கும் கற்பிற்கும் உரிய இட நிலைகளை ரசலார் ஆராய்ந்து வகுப்பர். இவர் கருத்தோடு தமிழ்ச் சமுதாய அமைப்பை ஒத்திடுக. நம் சமுதாயம் களவொழுக்கத்தை ஒப்பியது, ஊக்கியது; ஆயினும் களவுக்காதலே முதன்மைக் காதல் என்று தலைமையளிக்க வில்லை. திருமணத்திற்குக் களவே வாயில் என்று ஒரே வழி கட்ட வில்லை.

களவு நெறியும் மரபுநெறியும்

திருமண வாழ்வு என்னும் கற்பியலுக்கு இருநெறிகள் உள. களவுநெறி, மரபுநெறி என்று அவை சொல்லப்படும். "மறை வெளிப் படுதலும் தமரிற்பெறுதலும்" என்பர் தொல்காப்பியர் (1444). இவ்விரு நெறிகளும் களவே சங்க விலக்கியத்துப் பாடல் சான்றது என்பதை நாம் அறிவோம், களவொழுக்கத்தில் காதல் நெஞ்சங்கள் விம்மியெழுகின்றன, விரைந்து அலைகின்றன, இயல்புகடந்து எண்ணுவதும் சொல்லுவதும் செய்கின்றன. இவ்வெண்ணக் கிளர்ச்சிகள் பாடலுக்கு விறுவிறுப்பைக் கொடுத்தலின், களவு சான்றோர்களால் பாடுபெற்றது. அன்னோர் பாடியது கள்ளக் களவன்று, கற்புடைய காதற் களவாதலின், களவுப் பாடல் காலம் கடந்த இலக்கியமாய் இலக்கணம் பெற்றது. களவுக் காதல் பாடல் கொண்டமையால் அந்நெறி உயர்ந்தது என்றோ, பெற்றோர் கூட்டுவிக்கும் இயல்புக் காதல் பாடல் பெறாமையால், இந்நெறி தாழ்ந்தது என்றோ கொள்ளவே கொள்ளற்க.

மரபுமுறை அகத்திணைக்கண் ஒரு துறையாகப் பேசப்படுத லில்லை. இலக்கியப் படுத்தற்கு வேண்டும் உணர்ச்சிக் கூறு அதற்கு இல்லை என்றுகூடக் கூறலாம். திருமணமாகிய ஓராண்டிற்குள் ஆண்குழந்தைப் பேறு கிடைத்தது என்று வைத்துக் கொள்வோம். இப்பேறு உலகிடைப் பலர்க்கு நிலைப்பின்றி எளிதிற் கிட்டப் பார்க்கிறோம். இஃதோர் உலகியல். ஆண்டுக் கணக்காக எதிர்பார்த்துப் பார்த்து நாளெல்லாம் கோயில்குளம் சுற்றித் தலஞ்சென்று தொழுது நீராடி, பெண்ணாயினும் ஒரு குழந்தைப் பேற்றுக்குத் தவங் கிடக்கும் இல்லற முதியர்களும் பலர் உளர். எண்ணியாங்குக் குழந்தைச் செல்வம் எய்திய இவர்கள் கடவுள் அருளாற் பிறந்தது என்றும், முன்னோர் தவத்தாற் பிறந்தது என்றும் கொண்டாடுகின்றனர். இக்கொண்டாட்டத்தில் உறவினரும் ஊராரும் கலந்து கொள்கின்றனர். இஃதோர் உலகியல், நாட்கடந்து உதித்த தவக்குழந்தை இலக்கியத் தொடுப்பிற்கு நயப் பொருளாகலாம். நாளிற் பிறந்த காலக் குழந்தைமேல் பாடுதற்குக்

1. Marriage and Morals, pp. 62-3

கருத்து வற்றலாம்[1]. இலக்கியத் தொடைக்குக் கருத்துச் சுரத்தலால், தவக்குழந்தை காலக் குழந்தையினும் ஏற்றமுடைத்து என்றோ, நாட்கடந்து பெறும் மகப்பேறே சிறந்தது என்றோ யாரும் சொல்லார். இல்லறத்திற்குக் குழவிப்பேறு வேண்டும். அப்பேறு முன் கிடைப்பினும் பின் கிடைப்பினும் முடிவு ஒன்றே. சமுதாயம் இருவகைப் பேறுகளையும் வரவேற்கவே செய்கின்றது. இளம் பெற்றோர்க்கும் முதியபெற்றோர்க்கும் மகிழ்நிலை வேறாயினும், சமுதாயத்தின் மனநிலை ஈரிடத்தும் ஒன்றே. அதுபோல களவின் வழிவந்த மறைவுக் கற்பினையும், களவின் வழிவாரா மரபுக் கற்பினையும் சமுதாயம் ஒன்றுபோல் நோக்குகின்றது; ஏற்றத்தாழ்வு சுட்டுவதில்லை.

இலக்கியத்தில் ஆளப்பட்ட பொருட்கூறுகளை ஒப்புநோக்கித் திறங்காணின், ஒருண்மை புலனாகும். இலக்கியப்படு பொருள்கள் அறஞ்சான்றனவாக வேண்டும் என்பதில்லை. நல்வாழ்வுக்கு வேண்டும் பொருள்கள் கவிதைநயஞ் சான்றனவாக வேண்டும் என்பதும் இல்லை. பெற்றோர் பேசிமுடிக்கும் திருமணப் புணர்ச்சியில், புலவரின் கற்பனைக்கு இடமேது? காதலர்தம் வேட்கைக் கொள்ளைக்கு இடமேது? எண்ணத் துடிப்புக்கு இடமேது? ஆதலின் சங்கச்சான்றோர்கள் ஆற்றொழுக்குப் போன்ற இயல்புமணத்தைப் பாட முன்வரவில்லை. பாடாமையினால் அதன் சமுதாய மதிப்புக் குன்றவில்லை.

மரபுநெறிச் செல்வாக்கு

மண வாழ்வுக்கு மேற்சொல்லிய இரண்டும் தக்க நெறிகளே என்று தமிழ்ச் சமுதாயம் உடன்பட்டது. "களவொழுக்கமின்றியே தனிக் கற்புமுறை முன்பு வழங்கிய தில்லை" என்று தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி என்னும் நூலாசிரியர் மொழிகுவர்.[2] இக் கருத்துக்கு முன்னர் யான் எடுத்து மறுத்த இறையனார் அகப்பொருள் நூற்பா உண்டன்றே, அதனை ஏதுக் காட்டுவர். களவு நெறியல்லது கற்புக்கு வேறு நெறி தமிழகத்து இல்லையா? எல்லாத் திருமணங்கட்கு முன்னும் காதலர்களிடைக் களவு நிகழ்ந்தது கொல்? இன்னவர் கருத்து உண்மையாயின், மகள் தன் களவைப் பெற்றோர்க்கு ஏன் மறைத்தல் வேண்டும்? களவறிந்த பெற்றோர் குடிமைக்கு இழுக்கென வெகுள்வானேன்? பின்னர் உடன்போதல் எற்றுக்கோ? கற்புக்குக் களவு இன்றியமையா இயல்பு நெறியாயின், களவுக்கு மறையென்ற பெயர் பொருந்துமோ? களவுத் தேர்ச்சி சமுதாயம் உடன்பாடளித்த நெறியாயினும், களவாளர்கள் தம் ஒழுக்கம் புலனாகிவிடுமோ என்று சமுதாயத்திற்கும் குடும்பத்திற்கும்

1. A.C. Bradley: Oxford Lectures on Poetry, p. 11.
2. தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, ப.12

அஞ்சினார்கள். வெறியாட்டு, அறத்தொடு நிற்றல் எனவரும் ஒவ்வொரு கட்டத்திலும் இவ்வச்ச வுணர்ச்சியை அறிகின்றோம். மறை வெளியாதற்கு முன்னரே, மறையென ஒன்று நிகழ்ந்தது என்று தெரியாதபடியே, மணம் நடந்துவிட வேண்டும் என்று தோழி தலைவனை வரைவு முடுக்குகின்றாள்; அரும்பாடு படுகின்றாள்.

கழியக் காதல ராயினும் சான்றோர்
பழியொடு வரூஉம் இன்பம் வெஃகார்
வரையின் எவனோ வான்தோய் வெற்ப
கணக்கலை இகுக்கும் கறியிவர் சிலம்பின்
மணப்பருங் காமம் புணர்ந்தமை யறியார்
தொன்றியல் மரபின் மன்றம் அயர (அகம்.112)

"தொன்றியல் மரபின் மன்றல்" என இயல்பு மணத்தை பெற்றோர் கூட்டுவிக்கும் மணத்தைத் தோழி சுட்டுதலை நினைக. மிளகுக் கொடிபடர்ந்த மலைச்சாரலில் நிகழ்த்திய காமக்களவினைத் தலைவியின் பெற்றோர் அறியாத நிலையில் வைத்தே, மறுமன்றல் செய்துவிடவேண்டும் என்று தோழி ஆசைப்படுகின்றாள், காதலர்க்குள் எவ்வளவு அன்பிருந்தாலும், நீடித்த களவின்பம் பழிதருவது என்று தலைவனை இடித்துரைக்கின்றாள். களவுக்கு அஞ்சுகின்றனர் என்பது தானே இவற்றின் உட்கிடை. தமிழ்ச்சமுதாயத்துக் களவு நெறி ஒன்றல்லது வேறின்றெனின், இவ் வச்சம் பொருளற்றது காண். ஓரூர்க்கு வழி இரண்டு மூன்று இருப்பின் , இவர் எவ்வழி வந்தார் என ஆராய்தற்கும் வினாதற்கும் பொருளுண்டு. வழியொன்றே யாயின், வந்தவழி சொல்லாமலே உணரப்படும்; ஒத்துக்கொள்ளவும் படும். இறையனார் அகப்பொருள் நூற்பிப்பதுபோல, களவுநெறியே நெறியாயின்,மகள் களவைப் பெற்றோர் உணர்தலும் உடன் படுதலுமல்லது கொதித் தெழுதல் பொருளற்றது. கற்புக்கு வழி இரண்டு உண்டாமாதலின், மரபு நெறிப்பட்ட பெற்றோர் கொதித்தெழுந்தனர் என்று அறிகின்றோம்.

தலைவியரும் தோழிமாரும் கூறும் களவுப் பாடல்களைத் தொகுத்து ஆராய்வோமாயின், உற்றார்க்கும் ஊரார்க்கும் களவை அறவே மறைத்து, விரைவில் திருமணம் கொள்ள வேண்டும் என அப்பெண்களுக்கு இருந்த நாணமும் கவலையும் நாட்டமும் புலப்படும். இம்மறைவு முயற்சியைப் "படாமை வரைதல்" என்று தொல்காப்பியம் (1085) நூற்பிக்கும். மரபு மணத்தைத் "தமரிற் பெறுதல்" (தொல். 1444) என்று கூறுவர் ஆசிரியர். களவை முற்றும் மறைத்தோ அன்றிச் செவ்விதாக வெளிப்படுத்தியோ, எப்படியும் பெற்றோரின் இசைவையும் வாழ்த்தையும் பெற்று, மரபு மணம் கொள்ளவேண்டும் என்ற பெருவிழைவு அகத்திணைப் பெண்ணாட்களுக்கு இருந்தது.

நன்றா கின்றால் தோழிநம் வள்ளையுள்
ஒன்றிநாம் பாட மறைநின்று கேட்டருளி
மென்றோட் கிழவனும் வந்தனன் நுந்தையும்
மன்றல் வேங்கைக் கீழிருந்து
மணநயந் தனன்அம் மலைகிழ வோற்கே (கலி. 41)

இது களவு வெளிப்படா முன்னரே, பெற்றோர் மூலம் நடத்திக் கொண்ட திருமணமாகும். தோழியும் தலைவியும் பாடிய வள்ளைப் பாட்டு ஒளிந்து நின்ற தலைவன் நெஞ்சைத் தாக்கியது. இனி, களவு நீளாது வரைதலே தகும் என்று மணம்பேச வந்தான். வந்தவனுக்குத் தன் மகளோடு உறவுண்டு என்று தந்தை அறியான். அறியாத நிலையிலே, தலைவனதுவிருப்பத்திற்கு இசைந்தான். எதிர்பாரா இந் நல்லிசைவு, காவல் நிலையத்து எழுதி வையா முன்னரே இழந்த பொருள் கிடைத்தாற் போன்ற மகிழ்ச்சியைத் தோழிக்கு அளித்தது. 'தோட் கிழவனும் வந்தனன்; நுந்தையும் நயந்தனன்' என்ற அணுகிய சொன்னடையால், களவு புலப்படவில்லை என்பது அறியலாம். இம் மணமுடிவு 'படாமை வரைதல்' என்பதற்கு இலக்கியமாம்.

எந்தையும் யாயும் உணரக் காட்டி
ஒளித்த செய்தி வெளிப்படக் கிளந்தபின்
மலைகெழு வெற்பன் தலைவந் திரப்ப
நன்றுபுரி கொள்கையின் ஒன்றா கின்றே (குறுந். 374)

இது பெற்றோர்க்குக் களவை வெளிப்படுத்தி முடித்துக் கொண்ட திருமணமாம். களவொழுக்கத்தை 'ஒளித்த செய்தி' என்றும், தலைவன் கேட்க வரைவுக்குப் பெற்றோர் உடன்பட்டதை 'நன்று புரி கொள்கை' என்றும் பல்காயனார் பாடுவர். இனி, நேர்வழியல்லது குறிப்புவழி பயன்படாது என்ற நிலையில், காதற் கன்னியர் துணிவு தலைக்கொண்டு, வெளிப்படு சொல்லால் களவைப் பெற்றோர் முன்னும் அறிவிப்பர் எனவும், உறுதியும் உண்மையும் தெரிந்த அறிவுடைப் பெற்றோர் கற்புக்கு ஆவனவே செய்வர் எனவும், இவ்வாற்றால் தமிழ்ச் சமுதாயம் முடிவில் கற்புக்குச் செவி சாய்த்துத் தலைவணங்கிற்று எனவும், இக் குறுந்தொகைப் பாட்டால் செவ்விதின் விளங்கும்.

கற்புக்குப் பின்னிடல் யாண்டும் தமிழொழுக்கம் அன்று. இதுவே அகத்திணை கற்பிக்கும் பெருந்தமிழ்மை என அறிக. உடன்போய மகள் களவுக் காதலனோடு ஊர்வந்து தன் வீட்டில் வழக்கம்போல் மணஞ்செய்து கொள்ள வேண்டும் என்ற மரபுப்பற்று பெண் வீட்டார்க்கு இருந்தது. "எம்மனை வதுவை நன்மணம் கழிக" (ஐங். 344), "ஆனாது துயரும் என் கண் இனிது படீஇயர் எம்மனை முந்துறத் தருமோ" (அகம்.195) என்று, இங்ஙன் உடன்போகியாளின் அன்னை பேராசைப் படுகின்றாள்.

மரபு நாட்டம் எல்லார்க்கும் ஊறிக்கிடந்தமை மேலைச் சான்றுகளால் தெளியலாம். களவு நெறிப்பட்ட வரைவு என்பதனைக் குறுந்தொகைப் பாட்டும் (374). களவு நெறியாக விடாது மரபு நெறியாக்கிய வரைவு என்பதனைக் கலித்தொகைப் பாட்டும் (41) காட்டி நிற்கின்றன. பல்வேறு துறைகளையும் அத்துறைத் தோற்றத்திற்கு உரிய மனப் பாங்குகளையும் நோக்கின், தமிழ்ச் சமுதாயத்தில் மரபு நெறிக்கிருந்த நன்மதிப்பு வெளியாகும். அகத்திணைப் பாடல்களிலிருந்து, அஃதாவது பெயர் சுட்டப்படாத் தன்மைப் பாடல்களிலிருந்து இதுவரை மேற்கோள்கள் கண்டோம். புறப்பாடல்களும், அஃதாவது பெயர் சுட்டும் வரலாற்றுப் பாடல்களும் இக்கருத்தை வலியுறுத்தக் காண்போம். சங்கச் சான்றோர் கபிலர் சான்றோர் பலரால் மதிக்கப் பெற்றவர்; முழுக்க முழுக்கக் களவியல் பாடிய காதற் புலவர்; வள்ளல் பாரி இவர்தம் நண்பன். பாரி இறந்தபின், அவன் பெண் மக்கள் இருவர்க்கும் தக்க கணவரைத் தேடும் பொறுப்பு கபிலருக்கு ஏற்பட்டது. களவு பாடிய கபிலர் என் செய்தார்? இருமகளையும் அழைத்துக்கொண்டு குறுநில மன்னன் விச்சிக்கோனிடம் சென்றார்; பரந்தோங்கு சிறப்பினை யுடைய பாரி மகளிரை யான் கொடுப்ப மணந்து கொள் என்று வேண்டினார். விச்சிக்கோன் மணக்க உடன்படவில்லை. அதன்பின் குறுநில மன்னன் இருங்கோவேள்பால் சென்றார்; இந் நங்கையரை யான் கொடுப்ப மணஞ்செய்து கொள்க என்று இரந்தார். இருங்கோ வேளும் இசைந்தானில்லை. இவ்வரலாற்றுக் குறிப்புக்களைப் புறநானூற்றில் அறிகின்றோம்.

பரந்தோங்கு சிறப்பிற் பாரி மகளிர்
யானே, பரிசிலன் மன்னும் அந்தணன்; நீயே
வரிசையில் வணக்கும் வாண்மேம் படுநன்
நினக்கு யான் கொடுப்பக் கொண்மதி (புறம். 200)

இவர்யார் என்குவை யாயின் இவரே...
நெடுமாப் பாரி மகளிர்; யானே
தந்தை தோழன் இவரென் மகளிர்
அந்தணன் புலவன் கொண்டுவந் தனனே..
யான்தர இவரைக் கொண்மதி (புறம். 201)

இப் புறநானூற்றடிகள் மரபுநெறி வழக்கைச் சொல்லுகின்றன. "தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சியர்" (கலி. 9) என்பது களவுநெறியின் இலக்கணம். ஈண்டோ, நினக்கு யான் கொடுப்பக் கொள், யான் தர இவரைக் கொள்' என்று கபிலர் தற்சுட்டிச் சொல்லுகின்றார். இது மரபு மணப்பேச்சாகும். இப் புறநானூற்றடி களைக் "கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே" (தொல். 1089) என்னும் அகவிலக்கணத்தோடு ஒப்பிட்டுக் கொள்க.

இவ்வரலாற்று மெய்ச்செய்தி கற்பிப்பது என்ன? தமிழர் திருமணத்துக்குத் தாமே தேரும் களவொன்று தான் நெறியாக இருந்தது என்பதில்லை, தமர் கொடுப்பக் கொள்ளல் என்னும் மற்றொன்றும் நெறியாக இருந்தது என்று தெளிகின்றோம். இந்நெறியும் பழைமையுடையது, பரவிக் கிடந்தது, மரபென மதிக்கப்பட்டது என்ற கருத்தெல்லாம் "தொன்றுஇயல் மரபின் மன்றல்" (அகம். 112) என்ற தொடரால் வலியுறும். மரபு நெறிக்கு மதிப்பின்றேல் பாரியின் பெருமை சிறுமைப்படக் கபிலர் அந்நெறியை மேற்கொள்ளாரன்றோ!

V

மரபுவழிக் காதலர்

களவின் வழிவந்த பழைய காதலர்க்கும், களவின் வழி வாராப் புதிய காதலர்க்கும், இன்பநிலையிலும் அறநிலையிலும் வேறுபாடுண்டோ? மணநிலைகள் வேறுபடப் புலவர்கள் பாடியதுண்டோ? என்று காணற்குச் சங்க இலக்கியங்களைத் துருவின், வேறுபாடு யாதும் கண்டிடலோம். கூட்டுக்களிப்பில் இருதிறத்தாரும் தம்மை மறக்கின்றனர். உரையாடலில் யாரும் இளைத்தாரிலர். ஊடல் முடிவில் உயிரொன்றாகின்றனர்.

தமர்நமக் கீத்த தலைநாள் இரவின்
உவர்நீங்கு கற்பினெம் உயிருடம் படுவி
முருங்காக் கலிங்கம் முழுவதும் வளைஇப்
பெரும்புழுக் குற்றநின் பிறைநுதற் பொறிவியர்
உறுவளி யாற்றச் சிறுவரை திறவென
ஆர்வ நெஞ்சமொடு போர்வை வவ்வலின்
உறைகழி வாளின் உருவுபெயர்ந் திமைப்ப
மறைதிறன் அறியா ளாகிப் பையென
நாணினள் இறைஞ்சி யோளே...
இரும்பல் கூந்தல் இருள்மறை ஒளித்தே (அகம். 136)

"என் உயிர்படு மெய்யாளே, புதிய ஆடையால் முழுதும் போர்த்த நின்உடல் புழுக்கமடையாதா? காற்று பணிசெய்தற்கேனும் இடங் கொடு என்று சொல்லி, ஆர்வ நெஞ்சத்தால் ஆடையைப் புறப்படுத்தினேன். உறையைக் கழித்த வாள்போல் அவள் மேனி ஒளிறிற்று. கூந்தலாடையால் அற்றம் மறைத்து நாணி ஒசிந்தாள்" என்று மரபுநெறிக் காதலன் தலைநாள் இரவின் பாயல் விளையாட்டைப் பல நாட்சென்று நினைக்கின்றான். களவுக்காதல் உறவில்லா தாரிடத்தும் செல்லும், உறவுடையாரிடத்தும் செல்லும். இவ்விரு வகை நிலை மரபுக்காதலுக்கும் ஏற்கும். பெற்றோர்கள் தம்மக்கட்கு உறவுகடந்தும் ஊர்கடந்தும் மணங்காண முயல்வர். தாய்வழியாலோ

தந்தை வழியாலோ தொடர்பில்லா எட்டாக்கை யிடத்தும் மணம்பேசி முடிப்பர். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற நிலையை இக் கொள்வனை கொடுப்பனைகளிற் பார்க்கின்றோம். இத்தகைய ஒரு மணவரைவைப் புலவர் செம்புலப் பெயல் நீரார் அருமையாகப் பாடுகின்றார்.

யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலத் தனவே (குறுந்.40)

இது பெற்றோர் முடித்திட்ட திருமணக் காதலன் புணர்ச்சியில் மகிழ்ந்து கூறும் கட்டுரையாகும். நம்முள் முன்னுறவில்லை, நம் தகப்பர்க்கும் முன் அறிமுகம் இல்லை. நம் தாயரும் தெரிந்தவர்கள் இல்லை, யாதும் உறவில்லா நாம், மண்ணக நிலனும் வானக நீரும் கலந்து ஒன்றானாற் போல, அன்பினால் உள்ளங் கலந்துவிட்டோம் என்று உடல் மயங்கிய கணவன் புதுநட்பின் ஆழத்தை அறிவுறுத்து கின்றான். இப்பாடலுக்குக் குறுந்தொகையில் வகுக்கப் பட்டுள்ள துறை வேறு. இயற்கைப் புணர்ச்சி எய்திய தலைவன் நமக்குள் பிரிவு ஏது என்று சொல்லித் தலைமகளை ஆறுதல் செய்தான் என்பது அத்துறை. இக்களவுத் துறையும் பொருந்துமெனினும், குரவர் கூட்டிய கற்பின் முதற் புணர்ச்சியாகக் கொள்ளுதல் இன்னும் சாலும் என்பது என் கருத்து. இருவகைக் குரவரையும் நினைகின்றான், நினைப்பிக்கின்றான். ஆதலின், குரவரிற் புணர்ச்சியாகக் கொள்க. குறிஞ்சித் திணைக் களவுத்துறைப் பாடலில் முதற்பொருள் கருப்பொருள் பெரிதும் இடம் பெறுதல் உண்டு. புணர்ச்சி கூறும் இக் குறுந்தொகைப் பாடலில் முதலும் கருவும் இடம் பெற்றில; மலையோ பிறவோ கூறப்பெற்றில; ஆதலின், இல்லத்து நிகழ்ந்த கற்புப் புணர்ச்சியாகவே கொள்க.

களவின் வழிவாராக் காதலர்தம் இன்பநிலை அக நானூற்றப் பாட்டாலும் (136), அன்புநிலை குறுந்தொகைப் பாட்டாலும் (40) தெளியவரும். எந்நிலையிலும் இவர்க்கும் களவின் வழிவந்த காதலர்க்கும் அகத்திணை வேறுபாடு காட்டவில்லை. அன்புடைப் பெற்றோர் தம்மக்கள் நல்வாழ்வு வாழவேண்டும் என்றே எண்ணுவர். அறிவும் உடைய பெற்றோர் அன்னவர்தம் நோக்கத்தைக் குறிப்பால் அறிந்தே மணமுடிவு செய்குவர். ஆதலின் பெற்றோர் முடிபெல்லாம் பிள்ளைகள் காதல் நாட்டத்திற்கு மாறாக இருக்கும் என்று சொல்லுதற்கில்லை. ஒத்திருப்பனவே பெரும்பாலன. கற்புவழிப் பட்ட களவுகளே அகத்திணையில் இடம்பெறகின்றன. அதுபோல் அகத்திணையில் பிள்ளைகள் ஒத்துக்கொள்ளும் பெற்றோர்

மணமுடிபுகளே இடம் பெறுகின்றன. ஆதலின் புலவர்கள் வேறுபடப் பாடுதற்கு விதியில்லை. களவுநெறியாகுக - மரபு நெறியாகுக, எந்நெறிக் கண் காதலர்களிடை உள்ளப்புணர்ச்சி - ஒருமை நெஞ்சம் - உண்டு. அந்நெறியெல்லாம் ஐந்திணைப் பாற்படும் என்று அறிவோமாக. எவ்வழித் திருமணத்தராயினும், உள்ளம் ஒன்றிய காதல் மாந்தர் அவ்வொருமைகெட யாதும் செய்யார். இவ்வொருமை கெடாதவாறு யாதுஞ் செய்வர். காதலுக்கு ஒருமை இலக்கணம் கூறும் இத்தமிழியம் மனிதவினத்திற்கே பொதுமை.

உண்மைக் காதலர் உறவுக் கிடையே
திண்மை குலைக்கும் தீமைகள் தோன்றா
ஏதுக் கண்டால் மாறிக் கொள்ளும்
காதல் தானும் காத லாமோ

பிளவுபடுதற்குரிய காரணம் இருப்பினும், பிரியா ஒருமை வாழ்வே காதல் என்று உலகப்புலவர் செகப்பிரியர் இல்லறத்தின் ஆழத்தை அளந்து காட்டுவர்.[1]

பிற்சங்க காலத்தெழுந்த தமிழ் முதற்காப்பியமாம் சிலப்பதி காரம் கோவலன் கண்ணகியர் திருமணத்தை ஒருகாதை முழுதும் விரித்துப் பாடுகின்றது. யாதொரு களவுச்சுவடும் ஆண்டு இல்லை. இது குரவர் முடித்த மணம் என்று இளங்கோ வெளிப்படையாகக் கூறுவர்.

அவரை,
இருபெருங் குரவரும் ஒருபெரு நாளால்
மணவணி காண மகிழ்ந்தனர் மகிழ்ந்துழி
யானை யெருத்தத் தணியிழையார் மேவிரீஇ
மாநகர்க் கீந்தார் மணம்

குரவர் முடிவைக் குழந்தைகள் மறுக்கவில்லை. மணம் மணமாக நடந்தது. ஆராக் காதலில் இருவரும் கையற்றனர் என்று மனையறம்படுத்த காதை முழுதும் படிக்கின்றோம். பாம்பின் புணர்ச்சிபோலத் தொலையாத இன்பமெலாம் துன்னினார் என்பது வெண்பா. கோவலன் கண்ணகியர்தம் உடம்படு புணர்ச்சி கூறுமுகத்தால், 'உள்ளம் புணர்ந்திருந்த நிலையை இளங்கோ காணச்செய்வர். இக்காதைக் கண்ணும் களவுக் குறிப்பில்லை என்பதும் நினையத்தகும். காதலாயின் களவு செய்யும் என்றும், களவொழுக்கத்தாரே காதலர் எனச் சொல்லுதற்கு உரியார் என்றும் கருதலாமோ எனின், அது பிழை. காதல் என்பது உள்ளப்புணர்ச்சி;

1. "Let me not to the marriage of the true minds
Admit impediments. Love is not love
Which alters when it alteration finds" Sonnet CXV

உள்ளப் புணரிகளெல்லாம் காதலர்களே. ஆதலின், "காதலற் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல்" (1, 16) "களமலர்க் கண்ணியும் காதற் கொழுநனும்" "தீராக் காதலின் திருமுகம் நோக்கி" (2, 36) "காதலி தன்னொடு கதிர் செல்வதன்முன்" (15, 11) "காதலன் தன் வீவும் காதலி நீ பட்டதூஉம்" (29, 7) என்றாங்கு சிலப்பதிகாரத்தில் கோவலனும் கண்ணகியும் காதற் சொற்களால் பாடப் பட்டனர். கற்புக்குக் காப்பியம் அருளிய கண்ணகி நல்லாளை விடக் காட்டாவாள் யார்கொல்? அவள் மணம் மரபு நெறிப்பட்டது ஆதலின் அந்நெறிக்குக் குறை என்ன சொல்ல முடியும்? ஆர்வப் பிணைப்பு (களவியல்) அறவே இல்லாவிடத்தும் பிறநெறியான் வந்த மணங்கள் நிலைப்புடையனவாக உள என்பர் கென்னத்து வாக்கர்.[1] "களவின்வழி நிகழாதேயும் உண்டு உலகக் கற்பு; அஃது இத்துணைச் சிறப்பின்று" என எழுதுகிறார் இறையனார் அகப்பொருள் உரையாசிரியர் (பக். 124). 'உலகக் கற்பு' என்று இவர் குறிப்பது மரபுவழி மணத்தை. இலக்கியப் படைப்பிற்குத் துறைபல உடைய களவு நெறியில் வாய்ப்பிருப்பது போல மரபுநெறியில் இல்லை, ஆதலின் உலகக் கற்புச் சிறவாது என்பது உரையாசிரியர் கருத்தாயின், (அவர் அங்ஙனம் கருதவில்லை) அஃது ஒக்குமன். இலக்கியம் நோக்கிக் கூறாது வாழ்க்கைச் சிறப்புநோக்கிக் கூறினாராயின், கற்புக்கடம் பூண்ட தெய்வக் கண்ணகியின் மணமே தன் மறுப்பாகும். மேலும் அகத்திணையில் உலகக் கற்பிற்கு இடமில்லை என்று இவர் கருதுவது, "உலகியல் வழக்கினும் பாடல் சான்ற புலனெறி வழக்கம்" (தொல். 998) என்னும் அகக்கருத்திற்குப் பெருமுரணாம். அகத்திணை ஆகாயத்திற் பூத்த கற்பனை யிலக்கியமன்று; நல்ல தமிழ்ச் சமுதாயம் தந்த வழக்கிலக்கியம் என்று அறியவேண்டும். இறையனாரகப் பொருள் உரையாசிரியரும், அவ்வாசிரியர் அனைய பிறரும் நம் சமுதாய் வழக்கை மறந்தும் துறந்தும் எழுதும் போதெல்லாம் பிழை எழக் காண்கின்றோம்.

களவுநெறி ஒன்றுதான் திருமணத்துக்கு நெறியாக இருந்தது என்று துணிதற்கோ, அந்நெறிதான் சிறப்பிடம் பெற்றிருந்தது என்று துணிதற்கோ இலக்கியத்தும் சான்றில்லை. தமிழ்ச் சமுதாய வழக்கும் சான்றாமாறில்லை. குரவர் தாமே முடிக்கும் மரபுநெறி என ஒன்று இருந்தது. இயல்பாகச் சமுதாயத்துப் பரவிக்கிடந்தது, இலக்கியத்தும் கற்புத்திணையில் களவுபோல் பாடப்பெற்றது என்ற நிலைகளை இதுகாறும் கண்டோம். மணநிலை ஒரு சமுதாயத்தை உருவாக்கும் பெரு நிலையாகும். புதிய சமுதாய இனங்களில் மணநெறிகள் ஒழுங்கு படுவதில்லை. அவ் வினத்தார்க்கும் இதுதான் மணமுறையென ஏற்க மனம் பக்குவப்படுவதில்லை. தமிழ்ச் சமுதாயம் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னே பயின்று பரந்து ஓங்கித் தமிழ்மொழி போல்

1. The Physiology of Sex: p. 99

ஒழுங்குபட்டுவிட்டது. மணமுறைகள் நெறிப்பட்டன; மக்கள் மனங்கள் வழிப்பட்டன. ஆதலின் கொடுப்பக் கொள்ளுதல் என்னும் முறை எல்லார் நெஞ்சத்தும் இயல்பாகப் பதிந்து கிடந்தது. மக்கட்கு மணஞ்செய்து வைப்பதைப் பெற்றோர்கள் தம் இல்லறக் கடமையாகக் கொண்டனர். பலர் அஞ்சுவதுபோல, வளர்ச்சிக்கும் மாறுதலுக்கும் மரபு இடையூறாகாது. போலி மாறுதல்களையே மரபு தடுக்கும்; அவற்றைத் தடுக்கவல்லதும் ஆகும். மரபும் அறிவும் இணைந்து செல்லும் தமிழ்ச் சமுதாயத்தில், இளையவர்கள் தாமே தேர்ந்துகொள்ளும் களவு நெறியும் போற்றப்பட்டது, இலக்கியங்களால் பரப்பப்பட்டது. சான்றோர்களால் பாடப்பெற்றது, இலக்கணம் வகுக்கப்பெற்றது. மரபு நெறியைப் பன்மாணும் விளக்கி வரையும் இவ்வமயத்துக் களவு நெறியையும் உடன்நினைந்து கொள்க. கொண்டாற்றான் தமிழ்ச் சமுதாயத்தின் நாகரிக முழுமையும், அகவிலக்கியத்தின் முழுவனப்பும் அறியமுடியும் என்று வலியுறுத்துவல்.

சங்கப் பின்னூல்கள்

பிற்காலத் தமிழ்ப் புலவர்கள் மரபுநெறியினும் களவு நெறிக்கு ஓர் ஏற்றமும் முதன்மையும் கொடுத்துவிட்டனர். களவு நெறிதான் கற்புக்கு முன் நிகழும் தமிழ்நெறி என்ற எண்ணத்தை விதைத்துவிட்டனர். திருத்தக்கதேவர் சீவகன் பல மணத்தைப் புனையும் போதெல்லாம் களவினையும் காட்சி ஐயம் முதலான துறைகளையும் வைத்துப் பாடத் தவறுவதில்லை. மணத்திற்குமுன் காதலர்தம் கண்கள் கவ்விக்கொண்டன என்று கற்பிக்கும் ஓர் இலக்கியப் பேராசை தேவருக்கு இருப்பக் காண்கின்றோம். தேவர் வழி வந்த கம்பரும் மிதிலைக்காட்சிப் படலத்தில் இராமனும் சீதையும் உள்ளம் ஒன்றிய களவுப்புணர்ச்சியைச் சுவையூற அமைத்துக் காட்டுவர், "அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்", "இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினார்" என்று கண்வழிக் காதலைப் புனைவர். இவ்வமைப்பு வான்மீகத்தில் இல்லை; இராம காதையைத் தமிழிற் பாடிய கம்பர் தமிழ் நெறிக்கேற்ப வகுத்துரைத்தார் என்று கற்றார் பலர் எடுத்துரைக்கின்றனர். முற்கூறியாங்குக் களவும் தமிழியமே யாதலால், தமிழ்க் காப்பியங்களில் வரைவுக்கு முன் காதலர்களின் காட்சியும் துணிவும் கவலையும் உள்ளம் புணரலும், மெய்யுறு புணர்ச்சியும்கூட இடம்பெறல் தவறன்று; நன்முறையாகும். ஆதலின் தேவரும் கம்பரும் நெஞ்சக் கலப்புக் கூறியபின் திருமணம் செய்விப்பதை வரவேற்போம். இருவரும் அங்ஙனம் கூறாது, தம் காப்பிய மாந்தர்கட்குத் திருமணம் செய்து வைத்திருந்தாலும் அம்முறையையும் வரவேற்போம், அதுவும் தமிழியமாதலின்.

த.வ.

இளங்கோவடிகள் மரபுநெறிப்படி காப்பியம் அமைத்தவர். அவர் பாடிய மாந்தர்கள் தமிழ்நிலத்துப் பிறந்து தமிழ்பயின்ற தமிழ் மக்கள். எனினும் களவுக் காட்சியை ஆசிரியர் சுட்டவில்லை என்பதை உன்னுக. சிலப்பதிகாரம் உண்மையாக நடந்த வரலாறு கூறுவது. கண்ணகி கோவலனார் திருமணம் மரபுப்படி நடந்திருக்குமேல், அதனை மாற்றிப்புனைவது எழுத்தறமன்று என ஒருவர் எதிரிடலாம். வரலாற்றுக் காப்பியமாயினும், காதற் களங்களைக் கற்பனை வண்ணப்படுத்தி இன்ப விளையாட்டுக் காட்டுவதற்குப் புலவனுக்கு இலக்கியவுரிமை உண்டு. தீராக் காதலால் கண்ணகியின் திருமுகத்தை நோக்கிக் கோவலன் இன்பத்தில் புரியாக் கட்டுரைகளைப் பொழிந்து நலம் பாராட்டுகின்றான்; செங்குட்டுவன் வடநாடு சென்ற பிரிவுக்காலை, வஞ்சிநகர் அரண்மனையில் வதியும் அவன் கோப்பெருந்தேவி நானிலப் பாணியும் கேட்டுச் செவிலியர் ஆற்றவும் ஆற்றாதிருக்கின்றாள். இவ்வகைக் கருத்துக்களாலும் பல வரிகளாலும் இலக்கிய உரிமையுணர்வுடையவர் இளங்கோ என்று அறியலாம். களவு நெறியாகப் பாடும் பெற்றியும் துணிவும் அவர் இல்லாதாரிலர். பாடியிருப்பின், அதனை நாம் வரவேற்றுப் போற்றாதிருப்போமோ? முதற்காப்பியம் படைத்த இளங்கோ அடிகளின் சுவட்டினர் தேவரும் கம்பரும் என்று வழிமருங்கு சுட்டாதிருப்போமோ?

இதுகாறும் ஆய்ந்த விளக்கத்தின் நோக்கம் என்ன? தமிழ்க் காப்பியங்கள் மேற்கொண்ட மரபுநெறி களவுநெறியிரண்டும் சமுதாயத்திற்கும் அகத்திணைக்கும் பொருந்திய தமிழ் நெறிகளே எனவும், களவுநெறிக் காதல் பாடினாற்றான் தமிழ் நாகரிகமாகும் எனக்கொள்வது ஒருபாற் பிழையுடைத்து எனவும் தெள்ளிதின் விளங்கும். சுந்தரரும் காரைக்காலம்மையாரும் இந்நிலத்துத் தோன்றிய நம்மவர்; வரலாற்று மாந்தர்கள். சுந்தரர் பரவையார் திருமணத்தைக் 'களவு நெறியாகவும் "நற்பெரும் பான்மை கூட்ட நகைபொதிந்து இலங்கு செவ்வாய் விற்புரை நுதலின் வேற்கண் விளங்கிழையவரைக் கண்டார்" (பெரிய 285), அம்மையார் திருமணத்தை மரபு நெறியாகவும் "முந்தை மரபினுக்கு ஏற்கும் முறைமை மணம்" (பெரிய. 1729) சேக்கிழார் தமிழ்ச் சமுதாயத்தின் முழுக்கூறும் தோன்றத் தம் காப்பியக் கலையைப் படைத்துள்ளார், இப் பிற்குறிப்பும் மேலை ஆராய்ச்சிக்குத் துணைசெய்தல் காண்க.

VI

களவுவழிக் காதலர்

களவின் வழிவந்த இல்லறத்தார் வாழ்க்கை இனிமை மிக்கது. அவ்வழிக் கணவன் பரத்தையை நாடான், பரத்தையிற் பிரிவு காரணமாக மனைவி ஊடாள் என்று களவுநெறிக்கு ஏற்றம்

கூறலாமா? பரத்தை நாட்டம் களவின் வழி வாராக் காதலனிடத்தே காணப்படும்; கோவலன் அதற்கு ஒரு சான்று என்று மரபுநெறிக்குத் தாழ்வு கூறலாமா? எனின், அங்ஙனமும் கூறுதற்கில்லை. களவு நெறியிலும் பரத்தை நாடிகள் பலர் காணப்படுகின்றனர். பரத்தை நாடாக் கற்புத்திண்மையைக் களவுநெறிக் காதலன்மாரும் உடையராக இல்லை. இருவகைக் காதலர்க்கும் பரத்தை யொழுக்கத்தில் வேறுபாடின்றேனும், அவ்வொழுக்கத்தை இடித்துக் காட்டும் முறையில் வேறுபாடு தோன்றுகின்றது.

மலையிடை யிட்ட நாட்டரும் அல்லர்;
மரந்தலை தோன்றா ஊரரும் அல்லர்;
கண்ணிற் காண நண்ணுவழி யிருந்தும்,
கடவுள் நண்ணிய பாலோர் போல
ஓரீஇ யொழுகும் என்னைக்குப்
பரியலென் மன்யான் பண்டொரு காலே (குறுந். 203)

வேற்றுநாட்டு வேற்று ஊரராகிய நம் தலைவர் களவுக் காலத்து மலை பாராது, மரச்செறிவு பாராது, சேய்மை பாராது, நம்மைப் பார்க்க ஒருநாளும் தவறாது வந்தார். அன்று நம்மாட்டு அவர்க்கு இருந்த ஆர்வம் அது. திருமணக் கற்பாகியபின் அவர் ஆர்வம் சென்ற திசை வேறு. கடவுளை அடைந்த துறவிகள் இல்லறத்தை நீத்து ஒழுகுவாரன்றே; பரத்தைக் கடவுளைப் (கலி. 93) பற்றிய் என் கணவரும் அங்ஙனம் ஆகிவிட்டார். இப்போது ஓர் ஊரில் ஒரு தெருவில் நம் கண் படாதவாறு துறவை நடத்தி வருகின்றார். அதனைக் கெடுப்பது அழகன்று. அவர் ஆர்வம் காட்டிய பண்டைக் களவுக் காலத்து நானும் அன்பு காட்டினேன். இன்று அன்பு மாறிய அவர்மாட்டு நமக்கு அன்பு எங்ஙனே தோன்றும்? இவ்வாறு தலைவி பரத்தத் தலைவனுக்குச் சார்பாக பேசிய தோழியை மறுத்துரைக் கின்றாள்; அவனது அன்பு பொய்யது என் முந்திய களவைச் சுட்டிக் காட்டிக் கழறுகின்றாள். இத் தலைவன் இல்லத்திற் பல்லாண்டு நல்லவனாக ஒழுகிப் பின்னர் பரத்தமைக்குமாறினான் என்பது, "பண்டொரு கால்" என்ற காலச் சேய்மைக் குறிப்பால் அறியலாம். களவின் வழிவந்த வேறுசிலர் மணந்த புதுமையிலேயே மணமனை (பரத்தைவீடு) நாடினர் என்று அறிவிக்கும் பாடல்களும் உள:

நல்ல சொல்லி மணந்தினி
நீயேன் என்ற தெவன்கொல் அன்னாய் (ஐங். 22)
தேற்றஞ் செய்துநப் புணர்ந்தினித்
தாக்கணங் காவ தெவன்கொல் அன்னாய் (ஐங். 23)

காதற் கிளவிகள் பல சொல்லி மணந்தான்; ஒருகாலும் தவறாகப் பிரியேன் என்றான்; சூளுறவு தந்து நம்பும்படி செய்து நம்மைப் புணர்ந்தான், இன்று என்னானான்? நாம் வணங்கும் தெய்வம் இன்று

நம்மை வருத்தும் தெய்வமாயிற்று எனத் தலைவி களவிற் சொல்வேறு கற்பிற் செயல் வேறு என்று ஒழுக்கப் புறத்தானை இடித்துரைக் கின்றாள். நல்ல சொல்லி மணந்தான், தேற்றஞ் செய்து புணர்ந்தான் என்று தலைவிக்கு நினைவோடுவதால், இவள் மணம் அணிமையில் நிகழ்ந்தது எனவும், மணந்த அணிமையிலேயே களவுக்காதலன் பரத்தைக் காமுகன் ஆயினான் எனவும் கொள்ளலாம். களவுக் காதலர்களும் பரத்தையாடல் காணுதலின், மரபுநெறியினும் களவுநெறிக்கு என்ன ஏற்றம் சொல்ல முடியும்? மெய்யாக நோக்கின், எந்நிலைக் கண்ணும் தன் தலைவியல்லாதாளை எண்ணா ஒழுக்கத்திட்பம் களவுநெறியால் உண்டாக வேண்டும்.

களவுநெறியாவது வாழ்நாள்காறும் ஒருயிர் தன்காதல் செல்லுதற்குரிய மறுபாலுயிரைத் தானே தேர்ந்து கொள்ளும் இயற்கை நெறி.அந்நெறிக்குத் தானும் பரத்தைமையைத் தடுக்கும் ஆற்றல் இல்லெனின், மெல்லிய பாலுணர்ச்சியின் வன்மையையும் தீமையையும் என் சொல்வது? உட்குடைந்து புகவும் நுண்ணிய வேர் முனைகளால் மறைகளும் மதில்களும் பிளக்கவில்லையா? களவுக் காதலுக்குத்தடுப்புத் திறம் இல்லை என்று கென்னத்து வாக்கர் ஒரு விளக்கம் செய்கின்றார்:- "விழிப்புணர்ச்சி காதற் பொருளிடத்து இல்லா நயங்களை இருப்பனவாகக் கற்பிக்கின்றது. இல்லா அழகுகளை வண்ணப்படுத்திக் காண்கின்றது. இல்லா உணர்ச்சி களை ஏற்றிச் சுவைக்கின்றது. காதலிக்கப்பட்ட பொருள் எய்துதற்கு அரும்பொருளாக இருக்கும்வரை, கற்பித்த ஏற்றங்களுக்கு வாழ்வு உண்டு. வியப்பின் விளைந்த பொய்ம்மைகள், மணமான பின்னர் மறைந்தொழியும்[1]" "பரத்தமை பற்றிய மருதப்பாடல்களில் வியப்பின் விளைவை அறிகின்றோம்.

வேம்பின் பைங்காயென் தோழி தரினே
தேம்பூங் கட்டி என்றனிர்; இனியே
பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கள் தண்ணிய தரினும்
வெய்ய வுவர்க்கும் என்றனிர்
ஐய அற்றால் அன்பின் பாலே (குறுந். 196)

"நல்ல வேப்பங்காயை என் தலைவி தருவாளேல், அவள் கைப்பட்ட அக்கசப்புக் காயைத் தின்று,தேனில் ஊறியவெல்லக் கட்டி போல இனிக்கின்றதே என்று நீர் சொல்லிய ஒரு காலம் உண்டு. அதுதான் களவுக்காலம். இப்போது சாம வேணவா நீங்கியபின், குளிர்ச்சிக்குப் பெயர்போன பாரியின் பறம்புச்சுனை நன்னீரை அவள் தந்தாலும், சூடாய் உப்புக் கரிக்கும் என்று வாங்க மறுக்கின்றீர். நும் அன்பின் இயல்பு இருவேறு பட்டது" என்று தோழி ஒழுக்கம் புறம்போந்த

1. Physiology of Sex, p. 99

தலைவனுக்கு ஒப்பிட்டுக் காட்டுகின்றாள். இப்பாடலாசிரியர் மிளைக் கந்தனார் காதற்றொடக்கத்தின் கவர்ச்சியையும் பொலிவையும் காலப்போக்கில் அதன் தணிவையும் ஏமாற்றத்தையும் நேர்மாறுபடப் புலப்படுத்தும் உளவியல்பு அறிவியலுக்கும் நடையியலுக்கும் பொருந்துவதாகும். "ஏனது சுவைப்பினும் நீ கை தொட்டது வானோர் அமுதம் புரையுமால் எமக்கென" (1091) என்று தொல்காப்பியர் வேட்கையின் மனவிம்மலை வெளிப்படுத்துவர். காதலார்வம் தவறன்று; தகுவது எனினும், ஆர்வமிகுதியில் சோர்வு தோன்றும். ஏற்றத்திற்கேற்ப இறக்கம் உண்டு. மணந்த தொடக்கத்துக் கோவலன் கண்ணகியைப் புகழும் ஆர்வ வுரைகள் அகராதியில் இல்லை. மாசறு பொன்னே, வலம்புரி முத்தே, காசறு விரையே, கரும்பே, தேனே, மருந்தே, மணியே, அமிழ்தே, இசையே என்று உலவாக் கட்டுரை பல பாராட்டுகின்றான். இவ்வார்வப் புனைவின் விளைவென்ன? சில ஆண்டிற்குள் கண்ணகியை மறந்தான்; பல ஆண்டு மாதவிபால் மயங்கிக்கிடந்தான். ஆர்வச் சொற்களால் கோவலன்மாதவியைப் புகழவில்லை என்பதை நினைக.

VII

காரணம் (சடங்கு முறை)

கற்பு என்றால் கொண்ட கொழுநன்பால் அன்புத் திண்மை என்பது பொருளென எல்லாரும் பொதுவாக அறிவோம். இப்பொருள் பொருளே. அகத்திணைக்கண் வரும் களவு கற்பு என்பனவோ இலக்கணக் குறியீடுகள். இவை பொதுவாக நாம் அறியும் பொருளோடு இன்னும் விரிந்த பொருளையுடையன. மணமும் மணப்பின் நிகழும் காதற் செய்கைகளும் எல்லாம் கற்பெனப்படும் (தொல். 1444). "பன்மாண் கற்பின் நின்கிளை முதலோர்" என்னும் புறநானூற்றுத் தொடரில் கற்பென்னும் சொல்லின் பொருட்பரப்பை அறியலாம். பெண்ணிற்கு இன்றியமையாத ஒழுக்கம் என்று போற்றுகின்றோமே கற்பு என்னும் திண்மை, அத்திண்மை திருமணத்தால் தோன்றுவதில்லை, திருமணத்திற்குப் பின் வளர்வுறுவதில்லை, திருமணமாயிற்று என்பதற்காகத் தேய்வதில்லை. களவிலும் கற்புண்டு, களவிற்கு முன்னும் கற்பு உண்டு. கற்பொடு பிறக்கின்றாள் பெண். களவிற்குமுன் பெண்ணுள்ளம் ஒருவனை நினையவில்லையாதலின், கற்பு வெளிப்பட ஏதுவில்லை. களவில் ஒருவனை நாடும்போதே கற்பொடு நாடுகின்றாள். கற்புத்திண்மை அவளுக்கின்றேல், தலைவன் வருவழி ஏதத்திற்கு ஏன் கவல்கின்றாள்? ஏன் வெறியாட்டை விலக்க முற்படுகின்றாள்? ஏன் அறத்தொடு நிற்கின்றாள்? எல்லாம் பலியாத போது, பிறந்த இல்லத்தையும், பெற்றோரையும், அறிந்த சூழ்நிலையையும் ஒரு நொடியில் வெறுத்து, உடன்போகத் துணிவது ஏன்? இவ்வெல்லாம் இன்பத்தின் பொருட்டா? இல்லை, இல்லை.

ஒருவனை நினைத்த உள்ளக்காப்பின் பொருட்டு, ஆதலின் கற்பு என்னும் சொல் - ஒழுக்கத்திண்மை என்னும் வழக்கப் பொருண்மை உடைய அச்சொல் - களவுப் பாடல்களிலும் பயிலக் கற்கின்றோம்.

அஞ்சிலம் பொடுக்கி அஞ்சினள் வந்து
துஞ்சூர் யாமத்தும் முயங்கினள் பெயர்வோள்
ஆன்ற கற்பிற் சான்ற பெரிய
அம்மா அரிவையோ அல்லள் (அகம். 168)

இறந்த கற்பினாட் கெவ்வம் படரன்மின்
சிறந்தானை வழிபடூஇச் சென்றனள் (கலி. 9)

இடைச்சுர மருங்கின் அவள்தமர் எய்திக்
கடைக்கொண்டு பெயர்த்தலிற் கலங்கஞர் எய்திக்
கற்பொடு புணர்ந்த கௌவை (தொல். 86)

1. பெற்றோரைக்கரந்து. காற்சிலம்பின் நாவைக்கட்டி, நள்ளென் யாமத்து வந்து ஆரத்தழுவிய தலைவியை, ஆன்ற கற்பிற்சான்ற பெருமையுடையவள் என்று தலைவன் அவள் கற்பின் ஆற்றலை உணர்கின்றான். 2. மகள் உடன்போயினாள் என்று அலைந்து திரியும் செவிலிக்கு முக்கோற் பகவர்கள், அன்ன கற்புத்திண்ணியள் நின்மகள்காண் என்று உணர்த்துகின்றனர். 3 தன்னை மீட்பதற்குச் சுரத்தளவும் ஓடிவந்த வீரச்சுற்றத்தைக் கண்டபோது, அவ்வரவைப் பொருட்படுத்தாது, தலைவனைப்பற்றி நின்று கற்புத் திண்மையை வெளிப்படுத்துவாள் எனவும், வெறுங்கையோடு சுற்றத்தார் மீள்தலின் அவள் கற்பை ஊர் அறியும் எனவும் தொல்காப்பியர் களவுக்கற்பை அறிவுறுத்துவர். ஆதலின் ஒழுக்கக்கற்பு எஞ்ஞான்றும் உளது. அதனை ஈண்டுப் பேசாது, திருமண வாழ்க்கை என்னும் கற்புக் கைகோள்பற்றி ஆராய்வோம்.

கற்பு முறைகள்

தமிழ்ச் சமுதாயத்தில் திருமணக் கற்பு முறைகள் வந்த வரலாற்றை ஆராயின், சில மறைவுக் கூறுகள் புலனாகும். சமுதாயத்தின் குறிக்கோளும், அதன் செயல்வழியும், வழி இதுவெனக் காட்டிய அறிவுக் கூர்வும் விளங்கும். சமுதாயம் மரபுப் பற்றுடையது, மரபினைப் புதுக்கிக் கொள்ளும் வழியறிவும் உடையது என்பதெல்லாம் தெளிவுபடும்.

கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர்
கொடுப்பக்கொள் வதுவே (தொல். 1087)

கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே
புணர்ந்துடன் போகிய காலை யான (தொல். 1088)

இவை தொல்காப்பியக் கற்பியலின் முதலிரண்டு சூத்திரங்கள். கரணம், கொடுப்பக் கொள்ளுதல் இவ்விரண்டும் கற்பின் பகுதிகளென முதல் நூற்பாவால் அறிகின்றோம். கரணமொடு புணர மரபினோர் கொடுப்பர் என்பதனால், அக் கரணத்தைச் செய்வார் மரபினோரே என்றும் அறிகின்றோம். கொடுப்போர் இல்லாமலும் இருக்கலாம், வேண்டுவது கரணமே எனத் திருமண முறையில், கரணத்தின் (சடங்கின்) இன்றியமையாமையை அடுத்த நூற்பா வலியுறுத்துவது காண்க. கொடுப்போர் இல்லா இடம் எது? அது உடன் போகிய இடம் எனவும், உடன் போக்கிடத்துத் திருமணம் கொள்ளின், கொடுப்போர் இலர் என்பதற்காகக் கரணத்தை விடற்க, யாரைக்கொண்டேனும் கரணம் பெற வேண்டும் எனவும் இந்நூற்பா குறிப்பிடுகின்றது. திருமணக் கற்பின் இன்றியமையாத ஓர்முறை கரணமாம் என்பது தெளிவு. "கற்பிற்குக் கரண நிகழ்ச்சி ஒருதலை யாயிற்று (தொல். 1088) என்பது இளம்பூரண நச்சினார்க்கினியங்கள். மரபினோர் கொடுப்பதிலும், கரணம் மேம்பட்டது என்ற குறிப்பு "கரணமொடு புணர" என்னும் ஒடு உருபினாலும் பெறப்படும் (தொல். 574) மிகத் தொல்பழங்காலத்துக் கொடைக்குரிய மரபினோர் கொடுத்தல் என்ற ஒன்றே தமிழினத்தின் மணமுறையாக இருந்தது; பின்னர் கரணம் (சடங்கு) என்ற ஒன்று உடன் சேர்ந்தது; மணமுறைகள் இரண்டாயின; முன்னர் இருந்த கொடுப்புமுறை பிற்படப் பின்னர்ச் சேர்ந்த கரணமுறை வலுப்பட்டது; அதுவே போதிய முறையென்றுகூட ஆயிற்று என்றினைய வரன்முறைகளை நாம் அறியத் தொல்காப்பியம் உதவுகின்றது. கரணம் (சடங்கு) ஏன் வந்தது? அதன் ஏற்றத்திற்குக் காரணம் என்ன?

பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப **(தொல். 1090)**

இத்தொல்காப்பியப் பாவிற்கு வேறுபட்ட உரைகளும் கருத்துரைகளும் பல்கியுள்ளன. எண்ணுவார் தம் எண்ணத்தை இந்நூற்பாவில் காண விழைகின்றனர்.[1] எனக்கும் அவ்விழைவு உண்டு. அகத்திணையை ஆராயப் புக்க நான் இப்பாவை ஆராயாது விடுதற்கில்லை. முன்னை உரைகள் போல் தள்ளுப் படக் கூடாதே என்னும் ஒரு பேரச்சம் என் நெஞ்சையும் அறிவையும் நல்வழிப் படுத்தலின், ஒல்லும் உரைகாண முயல்வன்.

பொய்யும் வழுவும்

பொய், வழு, கரணம் என்பதற்குப் பொருள் என்ன? கரணம் (சடங்கு) இன்றியமையாதது எனின், அதன் பயன் என்ன? ஒருவன் ஒருத்தியைக் களவிற் காதலித்துப் புணர்ந்தான். பின்பு தனக்கும்

1. தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, ப. 9, 12, தொல். 1090: நச்சினார்க்கினியர் உரை.

அவளுக்கும் தொடர்பு இல்லை என்று வஞ்சித்துக் கூறினான். இவன் வஞ்சனையைக் கரணம் தடுக்குங்கொல்? திருமணத்திற்கு உடன்பட்டு வந்தார்க்கன்றே சடங்கு உண்டு. உடன்பாடில்லை, தொடர்பில்லை என்று கூறியொழிந்தக்கால், கற்பு எது? கரணம் எது? ஆதலின் களவு முறையில் தோன்றும் பொய்யையும் வழுவையும் கரணம் தடுக்கும் என்றும், தடுத்தற்காகக் கரணத்தை அமைத்தனர் என்றும் மொழிவார் கருத்துப் பொருளற்றது. மணமாகியபின், கைப்பிடித்த மனைவியைக் கைவிடுகிறான், காதல் மாறுகின்றான், பரத்தை நாடுகின்றான். கட்டிய கரணம் அவனை என் செய்யும்? ஆதலின் கற்புக்குப்பின் திருமணத்தின்பின் தோன்றும் பொய்யையும் வழுவையும் கரணம் தடுக்கும் என்றாலும் பொருளற்றது. காதலித் தாரை வஞ்சித்தலும், மணந்தாரைக் கைவிடுதலும் சமுதாயத்தில் காணும் நிகழ்ச்சிகளே. நிகழாதவை என்பார் எழுத்து வஞ்சகர்.

தொல்புகழ் நிறைந்த பல்பூங் கழனிக்
கரும்பல் படப்பைப் பெரும்பெயர்க் கள்ளூர்த்
திருநுதற் குறுமகள் அணிநலம் வவ்விய
அறனி லாளன் அறியேன் என்ற
திறனில் வெஞ்சுள் அறிகரி கடாஅய்
முறியார் பெருங்கிளை செறியப் பற்றி
நீறுதலைப் பெய்த ஞான்றை
வீறுசால் அவையத் தார்ப்பினும் பெரிதே (அகம். 265)

கள்ளூரில் குமரிப் பெண்ணாள் ஒருத்தியின் நலம் துய்த்த ஒருவன், அவள் யார் நான் யார் என்று உறவு பொய்த்துச் சூளும் செய்தான். ஊர்ச்சான்றோர்கள் தக்கபடி உசாவி, உறவுண்டு என்பதைத் தெளிந்தனர். காதலறம் பொய்த்த அக்கயவனை மரத்திற்பிணித்துத் தலையில் நீற்றினைக் கொட்டினர். உரார் அறியத் தண்டனை செய்தனர் அந்நாள் என்று, கடுவன் மள்ளனார் ஒருவனது கள்ளத் தனத்தையும், அவன் சமுதாயத்திற்பட்ட பாட்டையும் உவமை வாயிலாகக் குறித்திருக்கின்றார். இன்ன அறமில் நிகழ்ச்சிகள் எஞ்ஞான்றும் நடக்கக் காண்கின்றோம். இவற்றை உயிர்த்தண்டனை தடுக்குமே தவிரக் கரணச்சடங்கு தடுக்காது.

தொல்காப்பியம் கூறும் பொய்யும் வழுவும் காதலர்களிடைத் தோன்றுவன என்று நாம் இதுவரை கருதியிருக்கின்றோமே, அது பெருந்தவறு. காதலர்களுடைய பொய்யையும் வழுவையும் அகற்றக் கரணம் வகுக்கப்பட்டது என்று கருதியிருக்கிறோம், அதுவும் தவறுகாண். முற்கூறியாங்குக் களவை இல்லையென்பானையும், கற்பைக் கடந்தொழுகுவானையும் திருமணச் சடங்கு தடை செய்யாது. செய்யா, செய்யமாட்டாச் செயலைக் கரணத்தின் மேலிட்டுக் கூறுதல் பொருந்தாது. கரணமாவது களவின் வழிவந்த

காதலர்க்கும், களவின் வழி வாராக் காதலர்க்கும், அஃதாவது திருமணம் புகும் எல்லார்க்கும் செய்யப்படுவது. அது திருமணக் காலத்துச் செய்யும் சடங்கு. பொய்யும் வழுவும் இல்லாத ஆண் பெண்கட்கே திருமணத்தன்று சடங்கு நிகழ்கின்றது என்பதை நினைத்துக்கொள்க. உலகத்து காதற் பிழைபாடுகள் பல இருந்தாலும், தமிழ் அகத்திணையும் அகவிலக்கியங்களும் அன்பிற் கூடிய காதலர்களையே எடுத்துக்கொள்கின்றன, தொடுக்கின்றன என்பதனையும் நினைக. "அன்போடு புணர்ந்த ஐந்திணை" (1037), "ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின் ஒத்த கிழவனும் கிழத்தியும்" (1038) எனத் தொல்காப்பியர் அகத்திணைக் காதலர்களின் அன்புக் கிடக்கையைப் புலப்படுத்துவர். ஐந்திணைக் காதற் பொருளின் அறிவுடை அமைப்பினை அடுத்துவரும் இயலில் விளங்கக் காணலாம்.

VIII

கரண வரலாறு

திருமணத்தன்று கரணம் நிகழும் என்று சொல்லும் போது, கரணம் ஆணுக்கும உண்டு. பெண்ணுக்கும் உண்டு என்பதுபோற் படினும், மெய்யாக நோக்கின், கரணத்துக்கு உரியாள் பெண்ணே என்று கொள்ளவேண்டும். தமிழ்ச் சமுதாய வழக்கும் இலக்கிய வழக்கும் காட்டும் நெறியிது. இன்று பெரும்பாங்கு காணத்தகும் மரபு இது. திருமண நாளன்று பெண்ணுக்குக் கரணம் ஏன்? பெற்றோர் தம் மகளை மணஞ்செய்து கொடுத்திட்டார்கள் என்று கொள்வோம். அவள் மனைவியானாள் என்பது திருமணத்தைக் கண்டார்க்கும் கேட்டார்க்குமே தெரியவரும். பலர் அறிதற்கு இடனில்லை. அணிமையில் மணம் கொண்ட ஒரு பெண்ணுக்கும், மணப்பக்குவம் கொண்ட ஒரு பெண்ணுக்கும் என்ன புற வேறுபாடு உண்டு? களவு நெறியைப் போற்றி உடன்பட்டது தமிழ்ச் சமுதாயம். நெருநற்குமரி இன்று மனைவியாவாள். அதற்கு ஓர் மணக்குறி இன்றெனின், நாளை அவள்மேல் ஒரு நல்லிளைஞனுக்கும் இயல்பாகக் காதல் ஓடலாமன்றோ? இவள் ஒருவனுக்கு உரியவளாயினாள், இனியார் எண்ணுதற்கும் உரியாளில்லை என்று சட்டென அறிதற்கு ஏதுவாக ஒரு புறத்தோற்றத்தைச் சமுதாயம் அளிக்குமேல் பிறன்மனை நயந்த பெருங் குற்றத்திற்கு இளைஞர் ஆளாகாரன்றே.

ஏகு நல்வழி யல்வழி யென்மனம்
ஆகு மோவதற் காகிய காரணம்
பாகு போல்மொழிப் பைந்தொடி கன்னியே
ஆகும் வேறிதற் கையுற வில்லையே (பால. மிதிலை)

'என் உள்ளம் தீவழிச் செல்லாது. அவ்வளவு தூய்மையுடையது. என் நல்லுள்ளம். இவள்மேல் ஓடியமையின், இவள் கன்னிதான் (பிறருடைய மனைவியில்லை). ஐயப்படவேண்டாம் என்று, இராமன் மீண்டும் சீதையின்மேல் மனஞ் செலுத்தினான் எனக் கம்பர் தமிழ்ச் சமுதாய ஒழுங்கை உட்கொண்டு பாடுதலை ஒப்புநோக்குக.

குற்றத்திற்கு இடங்கொடுத்துவிட்டுத் தண்டிக்கப் புறப்படுதல் சமுதாயத்திற்கும் அரசுக்கும் அறிவுடைமையாகாது. குற்ற வழியை அடைத்து எதிரதாக் காக்கும் அறிவுடைமையே அழகாகும். கன்னிமை கழியாக் குமரியோடு கன்னிமை அகன்ற இளமனைவிக்குத் தோற்றரவில் பண்டு எவ்வேறுபாடும் இல்லை. இவ் வேமாற்ற நிலையைப் 'பொய்' எனத் தொல்காப்பியர் குறிப்பர். புறவேறுபாடின்மை பலர்க்கு மயக்கஞ் செய்தலின் பொய்யெனப் பட்டது. மண அடையாளம் இல்லா மனைவியை இளந் தோற்றத்தால் குமரியெனக் கொண்டு உள்ளம் போக்கிய நல்இளைஞன், அவளை நோக்கவும் களிக்கவும் உரையாடவும் செயல் காணவும் முற்படுவான். ஏமாறு தோற்றத்தால் மேற் கொள்ளும் இக்காதல் முயற்சிகளை 'வழு' எனத் தொல்காப்பியர் குறிப்பர். சில இடங்களில் காதல் முயற்சியின் தொடக்கத்திலேயே, இவள் மணவாட்டி என்னும் உண்மை புலனாகியிருக்கும். அறியா இளைஞன் செய்தியறிந்து காதலை அடக்கிக் கொண்டிருப்பான்! புணர்ச்சி நிமித்தத்திற்கு உரிய செயல் முற்றும் வரை, ஓரோ விடங்களில் உண்மைச் செய்தி வெளிப்படாது இருந்திருத்தலும் கூடும். உண்மை உணர்த்த வந்த கூறுகளை, வேட்கை மயக்கத்தால் ஒருவன் தனக்கு நன்மை உணர்த்த வந்த கூறுகளாகத் திரிபுபடக் கொண்டிருத்தலும் கூடும். பொய்யான குமரித் தோற்றத்தைக் கண்ட ஒருவன் உள்ளத்தளவில் காதலை அடக்கிக் கொண்டபொழுது, அதனைச் சமுதாயம் உணர வாய்ப்பில்லை. அடக்கிக் கொள்ளாது, எண்ணத்தைப் பெருக்கி, இணைவிழைச்சு நச்சிக் குமரியனை யாளைக் கொள்ள முந்துறும் போது, சமுதாயம் இவனது காதல் வழு என்பதனையும், இவ்வழுவிற்கு இவள் பொய்த்தோற்றம் - குமரியோடு வேறு பாடின்மை - காரணம் என்பதனையும் காரண காரியத்தோடு அறிந்து கொள்கின்றது. காதல் வழுப்பட்டானைக் குறை கூறுதற்கோ, வழுவுக்குக் களமாகிய இளமனையாளைக் குறை கூறுதற்கோ இடனில்லை. குறை சமுதாயத்தின் பாலது.

காரணத் தோற்றம்

எச்சமுதாயத்தின் பழக்க வழக்கங்களும் குறைவற்ற நிறையுடையன வல்ல எனினும், ஆசிரியன் போலக் குறைகளைய வேண்டும் என்ற செந்நோக்கமும், குறைபாடுகளைக் கூர்ந்து காணும்

அறிவுமுனைப்பும், வளரும் சமுதாயத்திற்கு வேண்டியவை. திருத்திக் கொள்ளும் சமுதாயத்தில் குற்றப் பெருக்கத்திற்குப் பற்றுக்கோடு இல்லை. பண்டைத் தமிழ்ச் சமுதாயத்தில், அதன் இயக்கத்தை உற்றுநோக்கி ஓர்ந்து ஆவன செய்யும் இனப் பெரியவர்கள் இருந்தனர். இவர்களை 'ஐயர்' என்பர் தொல்காப்பியர். நாடு முழுவதும் நன்கு மதித்த பெரியோரவை தமிழ் நிலத்து விளங்கிற்று என்பதற்கு வேறு சரி வேண்டா. புலவரெல்லாம் ஒப்பிய அகத்திணைப் படைப்பே போதுமானது. மேற்கூறிய பொய்யும் வழுவும் தோன்றிய பிற்பாடே, சமுதாயத்தின் திருமணமுறைக் குறைபாடு இனச்சான்றோர்கட்குப் புலனாயிற்று. வழுவிற்குக் காரணம் பொய். வழுவகல வேண்டின் பொய் அகலவேண்டும். மணப்பக்குவம் எய்தியிருக்கும் பெண்ணுக்கும், பக்குவம் வந்து மணம் எய்திய பண்ணுக்கும் புறத் தோற்றத்தில் யாரும் காண அடையாளம் வேண்டும் என்று சான்றோர்கட்குப் பட்டது. வேறுபாடு காட்டும் சரணம் சடங்கு - வகுத்தனர். "பொய்யும் வழுவும்" என்ற தொல்காப்பியப் பாவின் கருத்து இதுவே. பெண்ணின் கற்பு எவ்வகையானும் ஊறுபடக் கூடாது, ஊறுபட விடலாகாது என்று கண்ணும் கருத்துமாய் நாட்டஞ் செலுத்திய தமிழ்ச் சமுதாயத்தின் மனவோட்டம் பெறப்படும்.

மண்டிணி ஞாலத்து மழைவளந் தரூஉம்
பெண்டிராயின் பிறர்நெஞ்சு புகா அர்

என்று மணிமேகலைச் சாத்தனார் கற்புக்குக் கடிய வரம்பு செய்வர். மனைவிக்கு மணப்பொறி இல்லையெனின், தவறாகப் பிறர் நெஞ்சு புகும்நிலை எற்படுமன்றோ? பெற்றோரின் வறுமையால் பிள்ளைகள் வாடுதல்போலச் சமுதாயக்குறை நல்லவர்களையும் குறையாக்கும். "பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்" என்னும் வரலாற்று நூற்பாவிற்கும், இவ்விரண்டும் காதலர்களிடைத் தோன்றியவை என்று எல்லோரும் உரை செய்வர். அது உரையாகாமை மேலை விளக்கத்தால் அறிந்தீர் அகத்திணைக் காதலர்களிடைத் தோன்றுவன வல்ல என்று தெளிவாக நினைத்துக் கொள்ள வேண்டும். கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்ளல் என்னும் ஒரு மணநெறியால், பொய்யும் வழுவும் (உள என்று) வெளிப்படையாக அறிந்த பின்னர் அஃதாவது பொய்யும் வழுவும் இனச்சான்றோருக்கு வெளிப்பட்ட பின்னே - அவர்கள் அவற்றை யொழித்தற்குக் சரணம் என்னும் மற்றொரு நெறியை வகுத்துத் தந்தனர் என்பதன் பொருளைக் கூர்ந்து கொள்க, தோன்றல் - வெளிப்படுதல்.

கரணக்குறி

திருமணதிற்குக் கரண வழக்கு இன்றியமையாதது என்ற உண்மை தொல்காப்பியர் காலத்துக்கு முன்னரே உணரப்பட்டது. எனினும், கரணக்குறி அல்லது சடங்கடையாளம் காலந்தோறும் தமிழகத்து வேறுபட்டிருக்கக் காண்கின்றோம். இஞ்ஞான்று நாடு முழுவதும் தாலி பொதுவடையாளமாக விளங்குகின்றது. சில பகுதிகளில் தாலியுடன் மிஞ்சி என்னும் கால்விரல் மோதிரங்களும் மணக்குறியாக உள. இம்மோதிரங்கள் காலின் இரண்டாவது விரலில் மாட்டப்படுபவை. கழுத்திற் கட்டும் தாலி அடிமைக்குறி எனவும், கணவனுக்கு மனைவி அடிமை என்பதுவே தாலியின் கருத்து எனவும் ஒப்பாடிகள் கரணக் குறிக்கு விளக்கஞ் செய்குவர். அ டிமைக் கருத்தாயின் பெரும் பிழைதான்; தாலி அகற்றப்பட வேண்டியதுதான். தாலியாவது மணவணி. மணங் காட்டி, பிறர்க்கு வேண்டா எண்ணம் தோன்றாது தடுக்கும் அறிவணி. இன்றைய கருத்துக்கோள் பொருந்தாது என்பது கரணம் தோன்றிய வரலாற்றால் தெளியலாம். பண்டைச் சமுதாயத்தில் பெண்ணினத்துக்கு உரிமையிருந்ததா? ஒத்த மதிப்பு இருந்ததா? இவ்வினாக்களுக்கு விரிவிடைகூற இஃது இடமில்லை.

பெண்ணுரிமை

பல்வேறு நகரங்களின் கூறுகளையும் இனங்களின் வழக்காறுகளையும் அறிகின்றோம். அறிவியல் வேகம் எல்லார்க்கும் பொதுவுணர்வை உட்டுகின்றது. இந்நிலையில் இன்று உரிமைக்கும் ஒத்தலுக்கும் உலகளவால் விரிந்த கருத்துக் கொண்டு வருகின்றோம். இக்கருத்து இன்னும் வளரவுங் கூடும். பண்டைத் தமிழ்ச் சமுதாய அளவில் நோக்கின் பெண் கற்கும் உரிமையும், கவிபாடும் உரிமையும், காதலுரிமையும், காதற் களவு செய்யும் உரிமையும், காதலனை இடித்துரைக்கும் உரிமையும், இல்லறத் தொழிலுரிமையும் பெருமையும் புகழும் எல்லாம் ஆடவர்க்கு நிகராகப் பெற்றிருந்தாள் என்பது நெற்றித் திலகம் (வெளிப்படை). சமுதாயத்தின் நாகரிகத்தை அதன் மொழிச் சொற்களில் கண்டு கொள்ளலாம். மொழி நாகரிகத்தை வஞ்சிக்காது, தலைவன் தலைவி, காதலன் காதலி, கிழவன் கிழத்தி என்னும் பால்நிகர் சொற்கள் தமிழ்ச் சமுதாய மொழியில் உள. "பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டு" (12, 18) என இருபாலார்க்கும் ஒப்பினது வகைகளைத் தொல்காப்பியர் ஏற்றத் தாழ்வின்றிச் சுட்டுவர்.இவை ஒத்திருந்தாலல்லது அறிவுடையார்கட் காமக்குறிப்புத் தோன்ற மாட்டா என்று உரைவிளக்கம் செய்குவர் போராசிரியர். இன்ப நுகர்ச்சிக்கே ஏற்ப ஒப்பு வேண்டும் என்பது அவர் உரைத்துணிபு. "இரு பேராண்மை செய்த பூசல்" (குறுந். 43) என்று சங்ககால ஔவையார் பாடுதலின், ஆண்மை பெண்ணுக்கும்

உண்டு எனவும், எண்ணத்தைத் திறம்பட ஆளும் மதுகை இருபாலார்க்கும் உரியதே எனவும் பண்டைத் தமிழ்ச் சமுதாய மனப்போக்கை அறிந்து கொள்கின்றோம்.

அகத்தில், குடும்பவுலகில் தலைவியே இறைமை உடையாள்; அவளே வேந்தாவாள். மனைவி, இல்லாள் என்னும் வீட்டுச் சொற்கள் அவளுக்கே உரியவை. இவற்றிற்கு நிகரான ஆண்பாற் கிளவிகள் இல்லாமை நினையத்தகும். திருமணம் என்பது தலைவன் தன் அகவாழ்வின் உரிமையெல்லாம் மனைவிக்கு வழங்கும் ஆவணக்களரி. புறத்தொழுக்கம் கண்ட தலைவனை இல்லில் நுழையற்க என்று இடித்துத் திருத்தும் சொல்லுரிமையும் உடையவள் தலைவி. இதனை "அஞ்ச வந்த உரிமை" (1091) என்பர் தொல்காப்பியர். வாயில் வேண்டல், வாயில் மறுத்தல், வாயில் நேர்தல் என்ற துறைகளெல்லாம் கற்புடைய மனைவியின் உரிமையிற் பிறந்தவை. ஆதலின் நம் சமுதாயத்தில், பெண்ணிற்கு மதிப்புக் குறைவு எனவும், கரணக்குறி அஃதாவது திருமணம் காட்டும் அடையாளம் அடிமைப் பொறி எனவும் கருத்துப்படுத்தல் என்னானும் பொருந்தாது. காதலர்களின் கள்ளத்தனத்தையும் கைவிடுதலையும் தடுத்தற்குச் செய்யப்படுவது கரணம் என்றலும் பொருந்தவே பொருந்தாது.

திருமணச் சடங்கு கற்பாகாது, கற்பைப் பிறப்பிக்காது, காதற்களவு நடத்தும் குமரி நங்கைக்கு "யாய்" என்று பெயர் கொடுக்கின்றார் ஓரம்போகியார் (ஐங். 6-10) "வேட்டோளே யாயே") நாளை மணந்து மனைவியாய் மகப்பெற்றுத் தாயாவாள் என்பதில். தடையென்னோ? ஈண்டுத் தலைவியையாய் என்றது எதிர்ப்பட்ட ஞான்றே கற்புப் பூண்டொழுகுகின்ற சிறப்பை நோக்கி" என்பர் ஐங்குறு நூற்றின் முதலுரை யாசிரியர். இவ்வுரை உரைகளுள் நல்லது, சிறந்தது. கற்பொழுக்கம் திருமணத்தால் உண்டாவதில்லை. உரிய காதலனை எதிர்ப்பட்ட அப்பொழுதே அவள் அவ்வொழுக்கத் தலைப்பட்டாள் என்று இவ்வுரை அறிவிக்கின்றது. கரணம் (சடங்கு) என்பது திருமண அடையாளம்; பெண்ணொருத்தி கன்னிமை கழிந்து மனைவிமை புக்காள் என்பதனைக் காட்டும் மனையணி என்பது என் துணிபு.

IX

சிலம்பு கழி நோன்பு

சங்க காலத்து வழக்கில் இருந்த கரணம் யாது? அன்று கரணம் இருந்தது, அது வேண்டுவது எனச் சமுதாய மரபைக் கூறினாரே யன்றி, நடை முறையில் மேற்கொண்ட கரணக்குறி இதுவெனத்

தொல்காப்பியர் கூறினாரல்லர். அவர் கூறாமைக்குக் காரணம் திணைதோறும் கலந்தோறும் வேறு வேறு சரண அடையாளங்கள் வழங்கியிருக்கலாம். தற்காலத்துக் கரணக் குறியைக் கூறின், இதுதான் குறியென வழிவழி மக்கள் அடிமைப்படுவர். அது வேண்டா; புதிய கரணக் குறிகள் காலத்திற் கேற்பக் கொள்ளினும் தவறில்லை என்று ஆசிரியர் கருதியிருக்கலாம். கரணம் இதுவெனக் கூறாது, கரணம் வேண்டும் என்று சமுதாய இலக்கணத்தை மட்டும் வலியுறுத்துவர் தொல்காப்பியர். சங்கப் பனுவல்களைக் கொண்டு பண்டு நிலவிய கரணக்குறிகளை நாம் உய்த்துணர முடியும். பெண் குழந்தைகள் குழவிமைதொட்டே காலிற் சிலம்பு அணியும் வழக்கம் முன்பு இயல்பாக இருந்தது என்று பல பாடற் குறிப்புக்கள் கூட்டுகின்றன.

சீர்கெழு வியனகர்ச் சிலம்புநக இயலி
ஓரை யாயமொடு பந்துசிறி தெறியினும்,
வாரா யோவென் றேத்திப் பேரிலைப்
பகன்றை வான்மலர் பனிநிறைந் ததுபோல்
பால்பெய் வள்ளம் சால்கை பற்றி
என்பா டுண்டனை யாயின் ஒருகால்
நுந்தை பாடும் உண்ணென் றூட்டிப்
பிறந்ததற் கொண்டும் சிறத்தவை செய்துயான்
நலம்புனைந் தெடுத்தவென்
பொலந்தொடிக் குறுமகள் (அகம். 219)

"தன் பெரிய வீட்டின்கண் காற்சிலம்பு ஒலிப்பச் சிறு தோழியரொடு பந்து விளையாடுவாள். சிறிது ஆடினும், கால் நோவுமே, நாவேட்குமே என்று அழைப்பேன். அழைத்து, கிண்ணம் நிறைந்த பாலை எனக்காக ஒருவாய் உண்டாய், உன் தந்தைக்காகவும் ஒருவாய் குடிப்பாய் என்று சொல்லில் மயக்கிப் பாலூட்டிப் பிறந்த நாள் முதல் வளர்த்தேன்" என இவ்வாறு பருவகாலத்து உடன்போய மகளுக்கு அவள்தன் மழமைக் காலத்துக் காட்டிய அன்பினைத் தாய் எண்ணிப் பார்க்கின்றாள். பாலுண் பருவத்துச் சிலம்பு இடும் வழக்காறு இதனாற் பெறப்படும்.

தலைவன் தன் புணர்ச்சி வேட்கையை வெளிப்படச் சொல்ல, அவன் விழைவுக்கு இசைந்து, மழை பெய்யும் நடு யாமத்துத் தலைவி இரவுக்களம் வருகின்றாள். செலவு வரவை வீட்டார் தன் சிலம்பின் ஓசையால் அறிந்துவிடலாகாதே என்று அதன் அரவத்தைக் கட்டி ஒடுக்கி வந்து செல்கின்றாள்:

அஞ்சிலம்பு ஒடுக்கி அஞ்சினள் வந்து
துஞ்சூர் யாமத்து முயங்கினள் பெயர்வோள்(அகம். 198)

என்று தலைவன் காதலியின் அன்பையும் அறிவையும் வியக்கின்றான்.[1] உடன்வரும் காதற் களவர்களை வழியிடைக் கண்டார் வில்லேந்திய இவன் காலில் வீரக்கழல்கள் உள; வளையல் அணிந்த இவள் மெல்லடிகளில் சிலம்புகள் உள ("வில்லோன் காலன கழலே; தொடியோள் மெல்லடி மேலவும் சிலம்பே" - குறுந். 7) என்று காலணி பார்த்து, இன்னும் திருமணம் கொள்ளாதவர்கள் எனத் துணிகின்றனர். இந் நல்லோர் யார்கொல், பேணத்தக்கவர்கள் என்று தண்ணளிக்கின்றனர். நக்கண்ணையார் ஆமூர் மல்லனைக் காமுற்றாள். அம்மல்லன் வேற்று நாட்டு வேற்றூரினன். அவனது மற்போர் வென்றியினைக் கண்குளிர்ப்பக் காணும் இனிய வாய்ப்பு அவட்குக் கிடைத்தது. மகிழ்ச்சியில் "அஞ்சிலம்பு ஒலிப்ப ஓடினேன்" (புறம். 85) என்று நக்கண்ணையாரே பாடுகின்றார். காலிற் சிலம்பு உடையாள் குமரி என்று ஒரு சமுதாய உண்மையை அறியவும் துணியவும் இம்மேற்கோள்கள் கரியாவன.

குமரிக்குச் சிலம்பு அடையாளம் என்பதனால், குமரிக் கழிவுக்குச் சிலம்புக் கழிவு வேண்டப்படும். எனவே திருமணத்திற் சிலம்புகழி நோன்பு ஒரு கரணமாயிற்று, சடங்காயிற்று, இன்றியமையாத விழாவாயிற்று. இது சங்கச் சமுதயா வழக்கு. உடன்போகிய காலத்து உறவினரில்லாப் புதியதோர் நாட்டில் மணஞ் செய்து கொண்டாலும், ஆண்டும் சிலம்பைக் கழற்றும் சடங்கு நிகழும்; நிகழ வேண்டும் என்று அறிகின்றோம்.

உள்ளாது கனிந்த முள்ளெயிற்றுத் துவர்வாய்ச்
சிறுவன் கண்ணி சிலம்பு கழீஇய
அறியாத் தேஎத்தள் ஆகுதல் கொடிதே. (அகம். 385)
சிலம்பு கழீஇய செல்வம்
பிறருணக் கழிந்தவென் னாயிழை யடியே. (நற். 275)

தன் மகள் சென்ற நாட்டிற் சிலம்பு கழித்தல் கொடிது என ஒரு தாய் சினக்கின்றாள். சிலம்பு கழித்தல் ஒரு செல்வம் என்றும், அதனைக் காணும் பேற்றை ஈன்ற தாய்க்கு அளிக்காது பிறர்க்கு அளிக்கப் போயினாளே என்றும் ஒரு தாய் அவலிக்கின்றாள். "கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே, புணர்ந்துடன் போகிய காலையான" (1088) என்னும் தொல்காப்பிய விதி நடைமுறையில் இருந்த வழக்கு என்பதனையும், அவ்வழக்கின் உட்பொருளையும் மேலை விளக்கத்தால் அறிக.

சிலம்பு அணிநோன்பு என ஒரு விழாமரபு காணப்படாமையின், பெண் குழந்தைகட்குச் சிலம்பு இடுதல் மிக இயல்பான வழக்கு என்று ஊகிக்கலாம். அக்குழந்தையணியைத் திருமணத்திற்குமுன்

1. அகம். 321: அரிபெய்து பொதிந்த தெரிசிலம்பு கழீஇ யாயறி வுறுதல் அஞ்சி.

நீக்குவர். நீக்குங்கால் அது ஒரு விழாவாகக் கொண்டாடப்பட்டுச் சிலம்புகழி நோன்பு எனப் பெயர்பெறும். இந்நோன்பு திருமணத்திற்குச் சிறிது முன்னர்த்தான் நிகழும் என்பதனை "நும்மனைச் சிலம்புகழீஇ அயினும், எம்மனை வதுவை நன்மணம் கழிக" (ஐங். 399) என்ற நற்றாய் வேட்கையால் அறியலாம். மேலும், சிலம்புகழி விழாவை ஓரிடத்து நிகழ்த்தி, அதன் பின்னர் (கொடுப்பக் கொள்ளல் என்னும்) திருமணத்தை வேறோரிடத்துச் செய்தல் உண்டு என்ற வழக்காற்றையும் அறியலாம். குழந்தை முதலே கிடக்கும் சிலம்பின் நீக்கம் இவள் மனைவியானாள் என்பதனை முழுச் சமுதாயத்திற்கும் காட்டிவிடும். இவள் மனத்தியானாள் என்பதனை அணுகிக் காலிற் சிலம்பில்லாமை கண்டுகூடத் துணியவேண்டும் என்பதில்லை. சிலம்பின் உள்ளிருக்கும் பரலோசை கேளாமை யினால், சேய்மையிலேயே துணிந்துவிட இடமுண்டு. சிலம்பைக் கழித்தல், இருந்ததை நீக்குதல் என்பது ஒரு காரணமாகவும், அதுவே திருமணத்தின் அறிகுறியாகவும் ஆயிற்று. உள்ளதை ஒழித்தல் அடையாளமாகுமா? ஆகும். இயல்பாக வளரும் தலைமயிரை மழித்தல் துறவுக் கோலமாகவில்லையா?

X

கூந்தல் மலரணிதல்

பண்டை நாளில் வழங்கிய கரணம் ஒன்றே; அதுதானும் சிலம்பின் அகற்சி என்று முடிவு கட்டுதற்கு இல்லை. சிலம்பின்மை ஓர் எதிர்மறை யடையாளம். இவள் மணவாட்டி என்று அறிவிப்பான் பல அடையாளங்கள் திணைக்கேற்ப இருந்திருத்தல் கூடும். அவை இலக்கியம் ஏறாதிருத்தலும் கூடும். சங்கச் செய்யுட்களை நுணுகிக் காண்பார்க்கு மற்றொரு அடையாளமும் வழங்கியமை தெரியவரும். இஃது உடன்பாடான அறிகுறி; பெரிதும் வழக்கில் பரவியிருந்த கரணம்.

தண்கயத் தமன்ற ஒண்பூங் குவளை
அரும்பலைத் தியற்றிய சுரும்பார் கண்ணி
பின்னுப் புறந்தாழக் கொன்னே சூட்டி
நல்வரல் இளமுலை நோக்கி நெடிதுநினைந்து
நில்லாது பெயர்ந்தனன் ஒருவன் அதற்கே...
பொன்னேர் நுண்தாது நோக்கி
என்னும் நோக்குமிவ் வழுங்கல் ஊரே (அகம். 180)

'குவளைக் கண்ணியை என் பின்னிய கூந்தலில் சும்மா சூட்டினான்; வளரும் மார்பை ஒரு நோக்கு நோக்கிச் சென்று விட்டான்; இந்தச் செயலுக்கே ஊர் என்னை ஒருவகையாகப்

பார்க்கலாயிற்று. புன்னைத் தாதின் நிறத்தையும் பசலை படர்ந்த என் மேனி நிறத்தையும் உற்று நோக்கிற்று' எனத் தலைவி ஊரலருக்குக் காரணம் உரைக்கின்றாள். கூந்தலில் பூவைக் கண்டவளவிலேயே ஊர்ப்பார்வை மாறிவிட்டதே என்று தலைமகள் நொந்து கொள்ளினும், ஒருவனோடு ஒருத்திக்கு உறவு உண்டு என்பதற்கு மலர் போதுமான அடையாளம் என்று ஊரார் துணிவுற்று அலர் மொழிந்தனர் என்று நாம் அறிய வேண்டும்.

அம்பல் மூதூர் அலர்வாய்ப் பெண்டிர்
இன்னா இன்னுரை கேட்ட சின்னாள்
அறியேன் போல உயிரேன்
நறிய நாறும்நின் கதுப்பென் றேனே *(நற். 143)*

"இன்னானுடன் இவர் மகளுக்குத் தொடர்பு என்று என் காது கேட்க ஊர்ப்பெண்டுகள் பேசுவதை அறிவேன். சில நாட்களாகத் தெரிந்து வைத்தும், தெரியாதவள் போல ஒன்றும் காட்டிக் கொள்ளாதிருந்தேன். ஒருநாள் 'நின் கூந்தல் நறுமணம் வீசுகின்றதே என்று கேட்டுவிட்டேன்' என்று தாய் தன் மகள் உடன் போகியதற்குத் தானே காரணம் எனச் சொல்லுகின்றாள். குமரியர் கூழையில் பூமணத்திற்கு இடமில்லை; நின் கூந்தல் மணக்கின்றதே என்று அன்னை வினவியதும் களவு வெளிப்பட்டுவிட்டது. இனி வீட்டில் இருத்தல் பொருந்தாது என்று மகள் தாய்க்கு அஞ்சி உடன்போயினாள். இயற்கை வனப்புமிக்க இடத்தில் இன்புறும் தலைவன் காதலியின் கருங்குழலில் பூங்கொத்துக்களைச் சூடி அணிசெய்து மகிழ்வான். வீடு செல்லும்போது தலைமகள் பூவைக் கூந்தலிலிருந்து அகற்றி விடுவாள். மலரை எடுத்தெறிந்து விட்டாலும், மலர் இருந்த கூந்தல் மணக்குமன்றோ? ஆதலின் தாய் மகளின் கூந்தலில் மலரைப் பார்க்காவிட்டாலும், அதன் மணத்தை அறிந்து, நின் கதுப்பு நறிய நாறும் என்று வினவினாள் எனக் கொள்க.

காட்டிக் கொடுத்த முல்லை

புல்லினத் தாய மகன்சூடி வந்ததோர்
முல்லை யொருகாழும் கண்ணியும் மெல்லியால்
கூந்தலுட் பெய்து முடித்தேன்மன் தோழி யாய்
வெண்ணெய் உரைஇ விரித்த கதுப்போடே
அன்னையும் அத்தனும் இல்லரா யாய்நாண
அன்னைமுன் வீழ்ந்தன்றப் பூ *(கலி. 115)*

இடைமகன் சூடிய முல்லைத் தொடையையும் முல்லைச் சரத்தையும் புறத்தே தெரியாதபடி என் கூந்தலுக்கு உள்ளே வைத்து முடித்தேன்; அதனால் என்ன? நினைவின்றி வெண்ணெயைத் தடவவே, கூந்தல் விரிந்து உள்ளிருந்த பூ அன்னைக்கு முன்னே

வீழ்ந்தது. அவள் நாணினாள். யாதும் வினவவில்லை; சினக்கவும் இல்லை. ஏன்? அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. நெருப்பைத் தொட்டவர்போலக் கையை விதிர்விதிர்த்து, அவ்விடத்து நில்லாதே போய்விட்டாள். மறைத்துப் புதிதாகக் கட்டிவைத்தவன் மெய்மறந்து வாயால் உண்மையை உளறுதல் போல, என் நிலை யாயிற்று என ஒரு களவு நங்கை, பூவால் களவு வெளிப்பட்டுவிட்டது என்றும், மேல்விளைவு யாதாகுமோ என்றும் நடுங்குகின்றாள். 'கூந்தலுள் பெய்து முடித்தேன்' என்ற 'உள்' உருபுநடையால் காதலன் சூடிய பூமேல் அவளுக்கு இருந்த காதலும், அதனை மணத்தாலும் அன்னை அறியாதபடி ஒளித்துச் செறிந்து வைத்துக்கொள்ளும் அவள் அறிவுடைமையும் விளங்குகின்றன. 'அன்னை முன் வீழ்ந்தன்று அப்பூ' என 'முன்' உருபாற் சொல்லுங்காலை, யாருக்கு மறைக்க வேண்டுமென்று நினைத்தேன், அவருக்கு முன்னே அந்தப்பூ விழுந்ததே என்ற அவள் நடுக்கமும் அச்சமும் தோன்றுகின்றன. கூந்தலின் உள்ளே பூவை மறைப்பானேன்? அது அன்னை முன் வீழ்ந்தக்கால் அஞ்சுதலேன்?

குமரி மலரணியாமை

பண்டைத் தமிழ்க் கன்னி மலர்சூடாள் என்பதும், மலர் சூடின் கன்னியாகாள், ஒருவனை வரித்தாள் என்பதும் நம் பழஞ் சமுதாய வழக்கு. இக்கருத்து கற்றார்க்கு இன்று வியப்பாகவும் புரட்சியாகவும் தோன்றும், தோன்றக்கூடும். இவ் வழக்கம் இந்நாள் தமிழகத்து இல்லாமையும், இருக்க இயலாமையும் கண்டு பலர் மலைக்கவும் மலைப்பர். தெளிவிற்கு இன்னும் சில சான்றுகள் காண்போம்.

இரண்டறி கள்விநங் காத லோளே
முரண்கொள் துப்பிற் செவ்வேல் மலையன்
முள்ளூர்க் கானம் நாற வந்து
நள்ளென் கங்குல் நம்மோ ரன்னள்;
கூந்தல் வேய்ந்த விரவுமலர் உதிர்த்துச்
சாந்துளர் நறுங்கதுப் பெண்ணெய் நீவி
அமரா முகத்த ளாகித்
தமரோ ரன்னள் வைகறை யானே. (குறுந். 312)

இரவுக்குறி வந்து செல்லும் தலைமகன் இனி மணந்து கொள்ள வேண்டியதுதான் என்று தன்னெஞ்சிற்குக் கூறும் கருத்துடையது இப்பாட்டு. 'பலமலர்களைச் சூடிக் கமகமவென்று மணம் பரப்பி இரவில் வந்து முயங்கி என்னவளாகின்றாள்; பின்பு சூடிய மலர்களை உதிர்த்துக் கலவியிற் கலைந்த கூந்தலைச் சீர்செய்து, யாதொரு மாறுபாடும் தோன்றாதபடி, காலையில் தன் வீட்டாருக்குக் காட்சியளிக்கின்றாள். எனக்கு ஏற்பவும் தன் சுற்றத்தாருக்கு ஏற்பவும்

இடமறிந்து நடந்து கொள்ளும் என் காதலி, நெஞ்சே! எத் தன்மையள் தெரியுமா? அவள் 'இரண்டறி கள்வி' என்று தலைவன் காதலாளின் அறிவுத் திறத்தை வியக்கின்றான். கூந்தலில் பெய்த மலர், தானே உதிரவில்லை; வேண்டுமென்றே உதிர்க்கின்றாள். ஏன்? "உதிர்த்து" என்ற பிறவினையை நினைக. கன்னியர் மலர் சூடுவது இயல்பு வழக்காயின், தலைவன் அணிந்த மலரையும் இயல்பு வழக்குப் போலப் பெற்றோர்க்குக் காட்டிவிடலாமன்றோ? அன்னை முன் பூ விழுந்தபோது தலைவி அவலப்பட வேண்டாமன்றே? அன்னையும் அதிர்ச்சியுற வேண்டுவதில்லையே! அன்போடு சூடிய பூவை அச்சத்தோடு நினைந்து உதிர்த்தாள் எனின், குமரியர் பூவணிதல் சமுதாய வழக்கிற்கு ஒவ்வாக் காட்சி என்பது தெளிவு.

முல்லைக் குமரியின் கவலை

பெய்போ தறியாத்தன் கூழையுள் ஏதிலான்
கைபுனை கண்ணி முடித்தாளென்று யாய்கேட்பின்
செய்வதி லாகுமோ மற்று. *(கலி. 107)*

குமரிப் பெண்ணாள் ஒருத்தியின் கவலையை இம் முல்லைக்கலி உணர்த்துகின்றது. அவள் கவற்சிக்குக் காரணம் என்கொல்? முல்லைத்திணையில் ஏறுகோள்விழா நடந்தது. பார்வையாளராகக் குமரியரெல்லாம் குழுமியிருந்தனர். செவியிலே மறையுடைய ஒரு காளையை இடையன் மடக்கினான், அடக்கினான். அக்காளை தன் கொம்பினால் அவன் தலையிற் சூடிய முல்லைச்சரத்தை எடுத்து மாட்டிக்கொண்டு சுழற்றியது. கொம்பு சுழன்ற வேகத்தில் ஒரு முல்லைப்பூ தனித்துச் சென்று எங்கோ இருந்த இடைமகளின் கூழைக் கற்றை யுள்ளேபோய் விழுந்தது. ("அப்பூ வந்து என் கூழையுள் வீழ்ந்தன்று"). இழந்த பொருள் எதிர்பாராது கிடைப்பின், ஆசையோடு அதனைப் போற்றிக்கொள்வதுபோல, தானே வந்து கூந்தலில் விழுந்த பூவைக் கீழே நழுவி விழாதபடி அந்த ஆய்மகள் தலையில் முடித்துக் கொண்டனள். விழாவிற்கு வந்த பெண்கள் சிலர் கண்ணிலேனும் இந் நிகழ்ச்சி பட்டிருத்தல் கூடும். காதலிற் கண்டதைக் காணாதார்க்குப் போய்க் கூறினாலல்லது சில கண்களுக்குத் தூக்கம் வந்தொழியா; ஆதலின், முல்லைப்பூவை முடித்துக் கொண்டமை கண்ட மாதர்கள், தம் வீட்டுக்கு நேரே செல்லாது அவள் அன்னைக்குச் சென்று அலர் சொல்லியிருத்தல் கூடும். இந்நிலையில் 'என்ன செய்வேன்? எங்ஙனம் தாயைக் காண்பேன்? கேட்டால், எதனை மறுமொழிவேன்' என்று துடிக்கின்றாள் முல்லைமுடித்த கூந்தலி. 'இவள் கூழைக் கூந்தல் இதுவரை மலர் பெய்து அறியாதது, ஒரு பூமேல் ஆசைகொண்டு இவள் தானே சூடிக்கொண்டாலும், அதுவே தவறாம். அயலான் கைதொட்டுத் தலையில் வைத்த கண்ணிப் பூவந்து விழுந்ததெனின், ஏறிட்டுப் பாராது எடுத்து எறிய வேண்டியதிருப்ப, என் மகள்

அதனை விழைந்து முடித்துப் பொதிந்து கொண்டாளாயின், அக்குற்றம் பொறுக்குந் தரத்ததோ? என்றெல்லாம் தாய் காரணத்தை அடுக்கி நினைத்து அடங்காச் சினங்கொண்டால், என்செய்வோம்? எனக் கற்பனைசெய்து கவல்கின்றாள் முல்லைக் குழலி.

அவள் கவலை கிடக்க; அக்கவலை நமக்கு அறிவிப்பது என்ன? 'பெய்போது அறியாத் தன் கூழை' என்ற தொடரின் கருத்து யாது? "மயிருக்கு மணந்தரும் பூ முடித்தல் வேண்டும் என்று அறியாதவள்" என்பது நச்சினார்க்கினியர் உரைவிளக்கம். பூ முடித்துப் பழக்கமில்லாதவள் என்பது இதன் கருத்து. "பெய்போது அறியா" என்பது அவருரை. இவ்வுரையைக் காட்டிலும் 'போதுபெய்தலை (சூடுதலை) அறியாத' என்று உரைப்பதுவே பொருந்தும். "ஓதல் வேண்டும் ஒளி மாழ்கும் செய்வினை" (653) என்னும் குறள் நடையோடு பெய்போது என்ற நடையை ஒப்பிடுக. உரை எதுவாயினும் குமரிக்கொண்டை பூ மணம் அறியாதது என்பதுவே பொருள்.

கூழைக் கூந்தல்

கூந்தலைக் குறிக்கும் பலவகைச் சொற்களுள் கூழை என்பது ஒன்று. இச்சொல் ஒருபொருளின் இறுதி நிலையை, இறுதிப்பகுதியின் குறை நிலையைக் குறிக்கும்.[1] இளங்குமரியின் தலைமயிர் நீண்ட வளர்ச்சி பெற்றிருப்பதில்லை. இன்னும் வளர வேண்டும் குறையுடையது.[2] ஆதலின் கூழைக் கிளவியைக் குமரியர் கூந்தலுக்கே ஆட்சிசெய்யும் இலக்கிய வழக்கைக் காண்கின்றோம். (குறுந். 113 நற். 140.; அகம். 315 கலி. 107). முடித்தற்கு வேண்டும் கூந்தல் நீட்சி மனைவிப் பருவத்தே வளருமாதலின், பூ அணியும் வழக்கம் திருமணம் தொடங்கி மேற்கொள்ளப்படுவது எனக் கொள்ளலாம். குமரிப் பருவத்துக் கூழைக் கூந்தலைச் செவிலியர் எண்ணெய் தடவி வாரிப் பின்னி விடுமளவே செய்குவர். பின்னிய கூந்தலில் பூ அணிவதில்லை.

பின்னுவிட் டிருளிய ஐம்பால் (கலி. 59)
மண்ணி மாசற்ற நின்கூழை (கலி. 107)
பின்னுவிடு நெறியிற் கிளைஇய கூந்தலள் (அகம். 108)
கூந்தல் வாரி நுசுப்பிவந் தோம்பிய
நலம்புனை யுதவி (அகம். 195)

இனைய பாடலடிகள் குமரியர் கூந்தலின் ஒப்பனையில் பூ இல்லாமைக்குச் சான்றுகளாம். கன்னியர் பூவணிதல் ஆகாது என்று தமிழ்ச் சமுதாயம் கொண்ட முறைக்குக் காரணம் என்ன?

1. கூழைமோனை "ஈறிலி கூழை, எனப்படும். (காரிகை 19)
2. ஐங் 374; "முடியகம் புகாஅக் கூந்தலள்"

பொலிவுடையது, கண்ணுக்கினியது, நட்பாடத் துணையாவது, கைக்கு அழகியது,மணம் பொதிந்தது, மனத்தைக் கிளறுவது, காதலுக்கு நாகரிகத் தூதாவது; அனைய பெருஞ் சிறப்பும் வாய்ந்த ஒரு சிறு பொருள் பூ; பூவனையர் பூப்பெய்திய குமரியர்.

கோடல் எதிர்முகைப் பசுவீ முல்லை
நாறிதழ்க் குவளையொ டிடைப்பட விரைஇ
ஐதுதொடை மாண்ட கோதை போல
நறிய நல்லோள் மேனி
முறியினும் வாய்வது முயங்கற்கும் இனிதே. (குறுந். 32)
வேங்கையும் காந்தளும் நாறி
ஆம்பல் மலரினும் தான்தண் ணியளே (குறுந். 84)

காதற்கன்னி முல்லையும் குவளையும் வேங்கையும் காந்தளும் ஆம்பலும் போல்பவள் எனவும், ஐம்மையும் நறுமையும் இனிமையும் தன்மையும் வாய்ந்த மென்மையள் எனவும், பூவாகவும் பூவின் தன்மையனவாகவும் போற்றப் படுகின்றாள். இல்லக் குமரியர் பூச்சூடி மணம் பரப்பிப் பிறரைக் கவரவேண்டும் என்பதில்லை; கவருதலும் கூடாது. அத்தகைய செய்புனை கவர்ச்சி கற்பு நெறிக்கு ஒவ்வாது. காதல் நெறியை வளர்க்காது என்றெல்லாம் தமிழ் மூதறிஞர்கள் கண்டனர்; குமரியர் பூவணிதலைக் கடிந்தனர் என்று கொள்ள வேண்டும்.

XI

பூவணியும் உரிமை

குமரியர் பூவணியும் உரிமையைத் திருமணநாள் முதல் பெறுகின்றனர். இவள் இல்லறத்தி, மனைவியானாள் என்பதற்குப் பூக்கரணம் செய்யப்படும். இக்கரணத்தைத் தலைவன் செய்வான் என்று அறிகின்றோம். செந்நிற வேங்கை பூவின்மேல் இருந்த மயில் நகையணிந்த பெண் போலக் காட்சியளிக்கும் நாட்டவனே, நல்லது செய்தாய்; நின் குடும்பம் வாழ்க. திருமணத்தைக் கொண்டாடும்படி பின்னிய கரிய இவள் கூந்தலில் மலர் சூட்டினாய்;

எரிமருள் வேங்கை யிருந்த தோகை
இழையணி மடந்தையில் தோன்றும் நாட
இனிதுசெய் தனையால் நுந்தை வாழியர்
நன்மனை வதுவை அயரவிவள்
பின்னிருங் கூந்தல் மலரணிந் தோயே (ஐங். 296)

என்று மணஞ்செய்து கொண்ட களவொழுக்கத் தலைவனைப் பார்த்துத் தோழி மனமார வாழ்த்துகின்றாள். கூந்தலைப் பின்னி மலரணிந்தான் என்று கூறாமல், பின்னிய கூந்தலில் மலரணிந்தான்

என்று கூறுவதால், பின்னியநிலை குமரிக் கோலம் என்றும் மலரணிகை கற்புக்கோலம் என்றும் தெளிவாதல் காண்க. மலரணி சடங்கு செய்யும்போது, தலைவியின் கூந்தலைத் தலைவன் கை தொடும். தன் கூந்தலைத் தொட்டானுக்குக் குமரி உரிமையாகின்றாள். உற்றார்க்கு உரியர் பொற்றொடி மகளிர்' என்பது பழமொழி. "இவள் ஒலிமென் கூந்தல் உரியவாம் நினக்கே" (குறுந். 225) "குறுந்தொடி மகளிர் நாறிருங் கூந்தற்கிழவர்" (புறம். 113) என்ற அடிகளால், கூந்தலுக்கு உரியவன் யாவன் .அவன் கொழுநன் என்ற மணவழக்குப் பெறப்படும். கூந்தலுக்கு உரியவன் என்றால், கூந்தலில் மலர் வேய்ந்து மணங்கொள்பவன் என்பது குறிப்பு.

நல்லாவூர் கிழார் பண்டு நடந்த மணமுறைகளைத் தாம் பாடிய ஒரே ஒரு பாட்டில் தொகுத்துச் சொல்லுவர். குழந்தைகள் பெற்ற இல்லற மாதர் ஒருங்குகூடி, 'கற்பு வழாமல் அறம்பல செய்க, கொண்டானைப் பேணி ஒழுகுக, தக்க வாழ்க்கைத் துணையாகுக' என்று திருமணக் காலத்து மணப்பெண்ணை வாழ்த்துவர் எனவும், கூந்தல்மேல் பூவும் பிறவும் விளங்க நன்மணம் நிகழ்த்துவர் எனவும் அப்பாட்டு மணச்சடங்கைச் சொல்லிச் செல்கிறது:-

நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க
வதுவை நன்மணம் கழிந்த பின்றை (அகம். 86)

திருமணந் தொட்டு மகளிர் பூவணிவர் என்பதற்கு இப் பாட்டும் குறிப்பிற் சான்றாதல் காண்க; இம் முடிபை நினைத்து களவுத் துறைப் பாடல்களைக் கற்கும்போது, எதிர்ச் சான்றுகள் போல்வன சில தோன்றக்கூடும்; குமரிக் காலத்துப் பூச்சூடும் வழக்கம் உண்டு போலும், அது சமுதாய விலக்கன்று என்று காட்டுவதுபோலச் சில செய்யுட்கள் காணப்படும்.

வண்டுவழிப் படரா தண்மலர் வேய்ந்து (அகம். 198)
வீபெய் கூந்தல் வீகுவளி உளர (நற். 264)
அணிமலர் முண்டகத் தாய்பூங் கோதை
மணிமருள் ஐம்பால் வண்டுபடத் தைஇத்
துணிநீர்ப் பௌவம் துணையோ டாடி (நற். 265)
குவளை நாறுங் குவளையிருங் கூந்தல் (குறுந். 300)

இவ்வாறு வரும் பகுதிகளைக் கண்டு, என் முடிவுக்கு மாறான சான்றுகள் என்று கருதிவிட வேண்டா. துறைகளோடு பொருத்தி நேர்பட ஆராயின், இயற்கைப் புணர்ச்சியிலும் உடன்போக்கிலும் இன்பக் களிப்பிலும் இன்ப எதிர்பார்ப்பிலும் நீர் விளையாட்டிலும் குமரியர் பூவணிந்த குறிப்புக்களாகவே இருக்கும்.

முடிபுகள்

மேற் செய்த ஆராய்ச்சியால் கண்ட தெளிவு என்ன? மணந்த குமரியரை மணவாக் குமரியரினின்றும் வேறுபடுத்திக் காட்டும் நோக்கமே கரணத் தோற்றத்திற்குக் காரணம் ஆம்: காலிற் கிடந்த சிலம்பை அகற்றுவது ஒரு கரணம். கூந்தல் மேல் மலரணிவது ஒரு கரணம். இவ் விரண்டும் பண்டைத் திருமணக் காலத்துப் பரவலாக வழக்கில் இருந்த கரணங்கள் என்று தெளிகின்றோம். இவள் மனைவியானாள் என்ற அறநிலையைச் சிலம்பு கழித்த அடியாலும், மலர் வேய்ந்த முடியாலும் அறிந்து கொள்ளலாம்; சிலம்பு இன்மையை நெருங்கிக் காணவேண்டும் என்பதில்லை. செவிக்குச் சிலம்பின் ஓசை கேளாமையால், இவள் மனைவிமை எய்தியவள் என்பதனைச் சேய்மையிலேயே விளங்கிக் கொள்ளலாம். மலர்சூடியிருப்பதை அணுகிக் காணவேண்டுவதில்லை; மூக்கிற்குப் பூமணம் வந்து தாக்குதலால், இவள் இல்லறத்தி என்று சேய்மைக் கண்ணேயே முடிவு கொள்ளலாம். அடியாலும் முடியாலும் இன்மைக் குறியாலும் கன்னிமை கழிந்த மனையாட்டி என்பதனைத் தமிழ்ச் சமுதாயம் எல்லாரையும் அறியச் செய்தது. மணமாகி யாளைத் தோற்றத்தால் குமரியென மயங்கி விடாதவாறும், அங்ஙனம் மயங்கிப் பொய்யும் வழுவும் மேற்கொள்ளாதவாறும் கரணத் தடுப்புக் கண்டது தமிழ்ச் சமுதாயம். சடங்கு தோன்றக் காரணம் என்ன? சடங்கு என்ன? சடங்கின் குறிக்கோள் என்ன? இவற்றிற்கு இன்று நாம் விடை பலவாறு கூறலம். தொல்காப்பியம் சங்கப் பனுவல்களின் துணைகொண்டு, தமிழ்ச் சமுதாயம் காட்டும் விடைகளை மேலே கண்டோம்.

சடங்கு என்பது பெண் இனத்திற்கு மட்டுமா? மணமாகிய குமரனை மணமாகாக் குமரனினின்றும் வேறு படுத்திக் காட்ட வேண்டியதில்லையா? இவன் திருமணத்தான் என்பதற்கு அடையாளம் வேண்டாவா? இவ்வினாக்களுக்கு அறிவு ஒப்பும் நேரிய மறுமொழி தரமுடியாதுதான். கற்பு இருபாலார்க்கும் பொது என்று நாம் இன்று கொள்வது போலப் பண்டைத் தமிழ்ச் சமுதாயம் கொள்ளாமலில்லை; கொண்டிருந்தது. எனினும் வழிவழிப்பட்ட சில செயல் முறைகளை நடைமுறையில் ஒருவாறு ஒப்புக்கொண்டு குடும்பவியலைப் போற்றியது; போற்றும் பொறுப்பைச் செறிவும் நிறைவும் மிக்க பெண்ணினத்துக்கு அளித்தது. பலதாரமணம் ஆடவர்க்கு வழக்காறாக இருந்தமையின், இவன் மணங்கொண்டான் என அடையாளம் விதிக்கவேண்டும் என்ற நிலை தோன்றவில்லை. "தீதிலா வடமீனின் திறம் இவள் திறம்" என்று கண்ணகியின் கற்பின் மாட்சியைப் பாராட்டினார் இளங்கோ. கோவலனைப் பாராட்டும்போது அவர் பாராட்டிய தென்ன?

மண்தேய்த்த புகழினான் மதிமுக மடவார்தம்
பண்தேய்த்த மொழியினார் ஆயத்துப் பாராட்டிக்
கண்டேத்தும் செவ்வேளென் றிசைபோக்கிக் காதலாற்
கொண்டேத்தும் கிழமையான் கோவலன்

ஒருவன் மணமாகாப் பெண்டிர் பலரைக் காதலிக்கலாம்; ஒருவனை மணமாகாப் பெண்டிர் பலரும் காதலிக்கலாம். இவை தமிழ்ச் சமுதாயத்தின் குறிக்கோள் அல்ல. ஒருவன் ஒருத்தி என்பதுவே அதன் குறிக்கோள். எனினும் ஒருவன் பலர் என்னும் நடைமுறைக்கு இணங்கிச் சமுதாயம் இயங்க வேண்டியதாயிற்று. அதனாலன்றோ பிறன்மனை நயவாமை என்ற அறம்போலப் பிறன் கணவனை நயவாமை என்ற அறம் தோன்ற இடமில்லை.

களவு கற்பு என்னும் காதல் நிலைகளும், வெறியாட்டு அலர் உடன்போக்கு கரணம் முதலான வழக்காறுகளும் தமிழ்ச் சமுதாயத்தில் காணப்பட்டவை. இவற்றையே அக விலக்கியத்திலும் காண்கின்றோம். ஆகவே அகத்திணையியல் கண்கண்ட சமுதாய அடிப்படையுடையது. நடைமுறை தழுவியது, மெய்யானது என்று உணர்வோமாக. "இல்லது" என்று நாட்ட எழுதினார் இறையனார் அகப்பொருள் உரையாசிரியர் (ப. 30) அகத்திணை பொய்க் கூறுகளின் புனைவா? எல்லாம் புனைநெறி வழக்கா? இல்லை என்பர் தொல்காப்பிய உரையாசிரியர் நச்சினார்க்கினியர் (தொல். 999). தமிழ்ச் சமுதாயத்தில் இருந்தாலும். தகாத மரபுகளுக்கு அகத்திணையில் இடமில்லை? தக்க மரபுகளுக்கு மிக்க இடமுண்டு. இது பொய்யெனப் படாது, அறிவுடைக் கற்பனையாகும். இதனைத் தொல்காப்பியர் புலன்நெறி வழக்கு என்று தெளிவாகக் கூறுவர். இறையனாரகப் பொருளும் அதன் உரையும் அவற்றின் வழிவந்த கருத்துரைகளும் அகத்திணைக்கு நேர் முரணாக எழுதிய இடங்கள் பல. பொய்யாப் புலனெறி வழக்கைப் பொய்ந்நெறி வழக்கு (இல்லது) என்று எழுதிய இவ்விடம் அவற்றுள் ஒன்று.

XII

2. நில அடிப்படை

அகத்திணை அமைப்பு உருவாதற்கு உதவிய ஏதுக்கள் மூன்றனுள், முதலாவதாகிய சமுதாய அடிப்படையை இது காறும் ஆராய்ந்தோம். அடுத்து இனி ஆராயத்தக்கது புறநிலை என்னும் நில அடிப்படையாகும். இவண்கூறும் கருத்துக்களைச் சமுதாய அடிப்படைக்கும் கொள்ளலாம். ஏன்? எவ்வழியான் வரும் சூழ்நிலைகளும் ஒடிப்பரவி முடிவில் ஒன்றாய்க் கலக்குமிடம் சமுதாயக் கடலன்றோ? எனினும், அங்ஙனம் கலந்த கூறுகளை கூறுகளுள் நிலச்சார்பாலும் காலச் சார்பாலும் அகத்திணை பெற்ற இயற்கைச் சாயல்களை தனித்தெடுத்துக் காண்போம்.

நானிலச் சாயல்

பழந்தமிழோர் இயற்கையைக் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் —மலை காடு வயல் கடல்—என நானிலங்களாகக் கண்டனர், வரையறுத்தனர் என்பதனை நாம் பலகால் கேட்டுள்ளோம். சங்க இலக்கியத்தைச் சிறிதுபற்றி எழுதுவாரும் நானிலப் பாகுபாடுகளைக் குறித்தெழுதுவது இன்று ஒரு வழக்காறாயிற்று. பல்கால் பலரால் எழுதப்படுதலின், திணையமைப்பு சுவையற்ற பழங்கருத்தாகப் படலாம்; எனினும் திணையறிவில்லாதார்க்குச் சங்க விலக்கியம் விளங்குதல் பருவம் வாயாதார் இன்பம் நுகர்வதை ஒக்கும். ஆதலின், நிலம் பற்றிய திணைப்பாகுபாடு எல்லோர்க்கும் தெரிய வேண்டும். இத் தொடக்கவறிவு சங்கநூற் கல்விக்கு நன்னர் வேண்டும். இவ்வறிவு பெறுதல் ஒருவகை. இனி, தமிழகத்தின் இத்திணைச் சூழ்நிலைகள் தமிழ்மக்களின் வாழ்க்கையையும் தமிழ் இலக்கியத் தோற்றத்தையும் எங்ஙனம் உருப்படுத்தின? ஊடுருவின? என்று காண்டல் மற்றொரு வகை. இவ்வகையினைத்தான் இவ் வாராய்ச்சி விரித்துரைக்க முற்படுகின்றது. "மானிட இனவியலின்படி ஆராயின், தமிழ்ச் சமுதாயம் தன்னைச் சூழ்ந்த இயற்கைக்கு ஏற்ற தனிக் கூறுகளைக் கொண்டு விளங்குவது. மிகத்தொல் பழங்காலத்திலேயே மனித வாழ்க்கையின் ஐவேறு நிலைகளை அறிந்திருப்பது.இவ்வறிவு பெற்ற சமுதாயம் வேறொன்றில்லை" என்று பேராசிரியர் இராமச்சந்திர தீட்சிதர் தமிழ்இலக்கியத்தின் வரலாற்றின் ஆராய்ச்சி எனப் பெயரிய நூலில் வரைந்துள்ளனர்.[1] தமிழர் வகுத்த குறிஞ்சிமுதலாம் ஒவ்வொரு திணையும் தன்னிறைவுடையது; தன்னகத்து வாழும் மக்கட்கு வேண்டும் உணவு முதலான நுகர்ச்சிகளையும், யாழிசை முதலான கலைகளையும், தெய்வம் முதலான நெறியுணர்வையும், தொழில் முதலான வினை வாய்ப்புக்களையும் வழங்கவல்ல பெற்றியது. வாழ்க்கைக்கு வேண்டும் கூறுகளெல்லாம் கொண்டிருத்தலின், திணை ஒவ்வொன்றும் தனியுலகம் என்று சொல்லத்தக்க அமைவுடையது. ஆதலினன்றே காடுறையுலகம், மைவரையுலகம், தீம்புனல் உலகம், பெருமணல் உலகம் என்று பரந்த நிலையைக் காட்டினார் தொல்காப்பியர் 650.

உலக வாழ்க்கைப் பொருளியெல்லாம் நிலக்கண்கொண்டு திணைமனப்பான்மையோடு நோக்கினர் பழந் தமிழோர் என்பதனை, அன்னவர் கண்ட சமயம் அறம் அரசியலெல்லாம் நமக்கு மூக்கணி போலக் காட்டுகின்றன. முல்லைத் திருமாலும் குறிஞ்சி முருகனும் மருத வேந்தனும் நெய்தல் வருணனும் (பாலைக் கொற்றவையும்) திணைத் தெய்வங்கள் ஆகும். இத் தெய்வங்கள் நிலத்திற் கேற்ற

1. Studies in Tamil Literature History, p. 178.

cf; Chapter I'' the Geographical basis of the Ancient Culture of the Tamils, in The History of the Tamils.

படைப்புக்களே; அவ்வந் நிலப் பொருள்கள் தோற்றிய உருவங்களே என்று அறியவேண்டும். "தமிழர்களுக்கு மலை மேல் வாழ்க்கை தொடங்கிய அக்காலத்திலேயே கடவுண்மை முகிழ்த்துவிட்டது. ஆதலின் அன்னவர்தம் வழிபாடும், தெய்வப் பிறப்பியலும் எல்லாம் வாழ்ந்த இயற்கைச் சூழ் நிலையின் வடிவாக உள. முருகன் முழுமுதற் கடவுள் ஆவான் என்று கருதினாலும், உருவத்தில் மலை கிழவோனாகவே கண்டனர். அக்காலத்து அன்னவர் வாழ்ந்த திணைநிலம் குறிஞ்சியாக இருந்ததே அதற்குக் காரணம்" என டாக்டர் தனிநாயகம் பழந்தமிழ்ப் பாட்டிற் கண்ட இயற்கை என்னும் ஆங்கில நூலில் விளக்குவர்.[1] தமிழர் சமயம் திணைத் தன்மை யுடையது என்று இதனால் அறியலாம். "தெய்வம் உணாவே மா மரம் புள்" (தொல். 636) எனத் தெய்வமும் திணைக்கருப் பொருளாக எண்ணப்பட்டு வருதலின், தமிழர் தெய்வங்கள் தமிழ்நிலத் தாய் ஈன்றவை என்று துணிதற்குச் சான்று வேறு வேண்டுமோ?

நாடா கொன்றோ; காடா கொன்றோ;
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே. (புறம். 781)

என்பது ஔவையார் தம் அறப்பாட்டு. இப்பாட்டில் நாடு என்பது மருதம், காடு என்பது முல்லை, அவல் (பள்ளம்) என்பது நெய்தல், மிசை (மேடு) என்பது குறிஞ்சி. வாழ்விடத்தின் மேன்மை அங்கு வாழ்வாரது திறத்தைப் பொறுத்தது என்று மனிதவாற்றலை உணர்த்த வந்த ஔவையார், தமிழர் கண்ட நானில அடிப்படையில் அறங்கூறுதலை எண்ணுக. தமிழகத்தின் நாடுகளும் நகரங்களும் ஊர்களும் திணைப் பெயராலும் கருப்பெயராலும் திசைப் பெயராலும் வழங்கப் பட்டுவந்த மரபுகளை ஊரும் பேரும் என்னும் ஒரு பெருநூலில் டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை எடுத்துக் காட்டுவர்.

சங்க மக்கட்கு உறைந்திருந்த திணைப்பான்மை பின்னே தமிழ்மக்கட்குக் கறையலாயிற்று. சமயப் பான்மை உள்ளத்துப் பரவலாயிற்று. அதனால் ஊர்ப்பெயர்கள் இடைக் காலத்துச் சமயச் சார்பு உடையனவாய்த் தோன்றின என்ற புதிய வரலாற்றையும் இந்நூலால் அறியலாம். நின் நாடு நானிலக் கூறுகளும் உடையது என்று திணைநிறைவு சுட்டினாற்றான், சங்கத் தமிழ்வேந்தன் மகிழ்வான். இம்மனமையை அறிந்த புலவர்கள் அவ்வாறே பாடல் யாத்துச் சிறப்பித்தனர்.

"பாடல் சான்ற நெய்தல் நெடுவழி"
"முல்லை சான்ற முல்லையம் புறவு"
"மருதஞ் சான்ற மருதத் தண்பணை"
"குறிஞ்சிக் கோமான் கொய்தளிர்க் கண்ணி"

1. Nature in Ancient Tamil Poetry, pp-68-9.

என்று சிறுபாணாற்றுப் படையில், புலவர் நத்தத்தனார் புரவலன் நல்லியக் கோடனை நானில உரிமை காட்டிப் போற்றுவர். "நாடன் என்கோ ஊரன் என்கோ பாடிமிழ் பனிக்கடற் சேர்ப்பன் என்கோ" (புறம். 43) எனப் பொய்கையார் சேரமான் கோக்கோதை மார்பனை ஓர் இரவலனுக்கு அறிமுகப்படுத்துவர். நானிலம் உடைய வேந்தன், ஆதலால் பெருஞ்செல்வம் உடையன் என்பது இதன் கருத்து என அதன் உரைகாரர் விளக்குதலையும் நினைக. சேரன் செங்குட்டுவன் பத்தினிக்கல் கொணர வடநாடு சென்றான். வஞ்சித் தலைநகரில் அவன் பிரிவுக்கு ஆற்றாது கோப்பெருந் தேவி துயருற்றாள். துயருடைத் தேவி குறத்தியர் பாணியும் உழவர் பாணியும் கோவலர் பாணியும் பரதவ மகளிர் பாணியும் ஆக நானில இசைகளையும் செவியுற்றாள் என்று சிலப்பதிகாரம் நீர்ப்படைக் காதை நவிலுகின்றது. தமிழினம் திணைநெஞ்சம் உடையது. அந் நெஞ்சப்படி வளர்ந்தது. வாழ்ந்தது என்ற தொல்லோட்டங்களைச் சிலவாறாகக் கண்டோம். இத்திணைச் சிந்தனை இவ்வியலின் முதற்கண் மொழிந்த தமிழினத்தின் உலகச் சிந்தனைக்கு முற்றும் இயைந்தது. இவ்வுலக வாழ்க்கை நன்கு செழிக் வேண்டும் என்று விரும்புபவரே தாம் வாழும் ஞாலப் பகுதியையும், அதன் இயற்கைக் கூறுகளையும் நாடித் துருவி அறிந்து கொள்வர். அறிந்து சூழ்நிலைக்கு ஏற்பச் சமுதாய நெறிகளை ஆக்கி அமைத்துக் கொள்வர். உடற்கூறு அறியாதான் நன்மருத்துவனாய் ஒளிர முடியுமா?

XIII

சாதிமதச் சார்பின்மை

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுக்குப் பின் தமிழில் தோன்றிய சிறிய பெரிய இலக்கியத்திற்கெல்லாம் சமயச் சார்பும் சாதிச் சார்பும் உண்டு. இலக்கியம் பெற்ற இப் புதிய உறவுகளை இலக்கிய வரலாறு கற்குநர் அறிகுவர். திணைமக்கள் என்ற இயற்கைப் பாகுபாடு உடையவராகச் சங்கத் தமிழ்மக்கள் விளங்கினர். சங்கப் பின்மக்களோ, சமய மக்களாகவும் சாதிமக்களாகவும் சில அயற் சூழ்நிலைகளால் பிரிவுண்டனர்; தமக்குள்ளே ஏற்றத்தாழ்வு செய்து கொண்டனர். இலக்கியப் பிறவிக்குச் சமுதாயமே தாயாதலின், சாதி சமயக் கோட்பட்ட இடைக்காலத் தமிழ்ச் சமுதாயும், அன்ன இலக்கியங்களையே தோற்றிற்று; சங்கவிலக்கியம் போல்பவற்றைப் பிறப்பிக்கும் ஆற்றலை இழந்து விட்டது. இடைக்காலத்தோர் காதல் முதலாம் வாழ்க்கைக் கூறனைத்தையும் சாதி சமயக் கண்கொண்டே மதித்தனர். அன்னவர் உள்ளம் சாதி நெஞ்சாகவும் சமய நெஞ்சாகவும் புதிய வடிவு பெற்றது. அன்னோர் தம் இல்லற துறவறமெல்லாம்

சாதிசமய வரம்புக்கு உட்பட்டே வளர்ந்து வந்தன. இக்காலப் பெருங் காப்பியங்களுள் ஒன்று சீவகசிந்தாமணி. கோவிந்தன் என்னும் இடையர் கோன் தன் பகைவர்களை வெல்லுபவனுக்குத் தன்மகள் கோவிந்தையை மணஞ்செய்து அளிப்பதாகப் பறையறைந்தான். சத்திரியப் பிறப்பு (அல்லது வணிக வளர்ப்பு) உடைய சீவகன் கோவிந்தனது எதிரிகளை வென்றான். எனினும் இடைமகளாகிய கோவிந்தையை மணங் கொண்டானா?

குலநினையல் நம்பி; கொழுங்கயற்கண் வள்ளி
நலனுகர்ந் தானன்றே நறுந்தார் முருகன்;
நிலமகட்குக் கேள்வனும் நீள்நிரை நப்பின்னை
இலவலர்வாய் இன்னமிர்தம் எய்தினான் அன்றே (சீவக. 483)

இது இடையர்கோன் கோவிந்தன் சீவகனுக்குச் செய்யும் வேண்டுகோள்குலவேற்றுமையைநினையாதே; தெய்வ முருகன் குற வள்ளியை மணக்கவில்லையா? திருமால் இடையர் குலத்து நப்பின்னையைத் திருமணங் கொள்ளவில்லையா? என்று ஏதுக் காட்டுகிறான் கோவிந்தன். பயனில்லை. சீவகன் சமணனாயினும் சாதிமை கொண்டவன். முருகன் திருமால் போன்ற தெய்வங்கள் சாதிமாறி வரையலாம்; "பொன்னிழை மகளிர் ஒவ்வாதவரை முன் புணர்தல் செல்லார். இன்னதான் முறைமை மாந்தர்க்கு என மனத்து எண்ணினானே" என்று சீவகன் சாதிப்பற்றைத் திருத்தக்க தேவர் வலியுறுத்துகிறார். முடிவில் நடந்தது என்ன? சீவகன் தான் மணவாது தன் தோழனான பதுமுகனுக்குக் கோவிந்தையை மணப்பித்தான்.

சூர்ப்பனகை இராமனைக் காதலித்தாள். அக்காதல் உணர்ச்சிக்குக் கற்புடை இராமன் உடன்படான் என்பதை யாவரும் அறிவர்; எனினும் இராமனது உரையாடல் சூர்ப்பனகைக்குக் காதற்கவர்ச்சியை ஊட்டிற்று. அவளோடு சிறுபொழுது நகையாட ஆசைப்பட்டு விட்டான். தான் பிரமன்வழி வந்தவள் எனவும், உயர்ந்த அந்தணர் குலத்தவள் எனவும் சூர்ப்பனகை தன் குலப்பெருமையை விளம்பினாள். இவளைத் தட்டிக் கழிப்பது எப்படி என்று எண்ணிய இராமனுக்குச் சாதிநெறி நினைவு வந்தது? ஒரு சாதியான் தன் சாதிப் பெண்ணையும் தன் கீழ்ச்சாதிப் பெண்ணையும் மணக்கலாம்; மேற்சாதியாளை மணக்கலாகாது என்பது மனுதருமம்.

சுந்தரி மரபிற் கொத்த தொன்மையின் துணிவிற்றன்றால்
அந்தணர் பாவை நீ; யான் அரசரில் வந்தேன்

மேலாய சாதியிற் பிறந்த உன்னை, சத்திரியனாகிய நான் மணப்பது தொன்மை முறையன்றே என்று சாதிவேற்றுமை காட்டினான் இராமன். தன்னைக் காதலிக்கின்றாள் என்பதைத் தெளிவாக அறிந்தும், இராமன் அதனை வெட்டென மறுக்க வேண்டாவா?

அவ்விடத்தை விட்டு அகலவேண்டாமா? நான் மணமானவன், இருமாதரை எண்ணேன்என்றுஇராமன் முதலிலேயே தெளித்திருக்க வேண்டாமா? அவ்வாறெல்லாம் செய்திலன். இலக்கியத்தில் அருமையான இத்தகைய காட்சியைக் கம்பர் எளிதில் விட்டுவிட விரும்பவில்லை. இலக்கியப் பாத்திரங்கள் புலவனுடைய அடிமைகள்; அவன் ஆட்டினால் ஆடவேண்டும்; அடக்கினால் அடங்க வேண்டும். ஆதலின், இராமன் சட்டெனத் தன் கருத்துக் களைத் தெளித்திலன் என்றால், அங்ஙனம் தெளிவிக்கக் கம்பர் விட்டிலர் என்பதுதான் இலக்கியப் பார்வை. சாதி குறுக்கிடா விட்டால், இராமன் இசைவான் போலும் என்று கருதிக் கொண் டாள் ஏழைச் சூர்ப்பனகை. என் தந்தைதான் அந்தணன்; மற்று என் யாயோ அரக்கக் குலத்தவள் என்று சாதியழிவு சாதிக்கலப்பு - சுட்டியும் பார்த்தாள் சூர்ப்பனகை எனவும், அரக்கியை மானிடன் மணத்தல் என்பதுவும் பொருத்தமில்லை என்று மறுத்தான் இராமன் எனவும் மேலும் காண்கின்றோம்.

சமய எழுச்சிக் காலத்துப் பாவை நோன்பு மிகப் பரவியது. இளம்பெண்களுக்கு இசையோடு சமயப்பற்றைக் குழைத்து ஊட்டும் பொருட்டு ஆண்டாள் திருப்பாவையும் மணிவாசகர் திருவெம்பாவையும் தோன்றின. சமயக் குறிக்கோள் உடைய பாவைச் சிறுமியர்கள் இறைவனைத் தொழுது பாடுங்கால் சில வேண்டுகோள் இடுவர். தம் இல்லற வாழ்க்கை சமய நெறியோடு அமையவேண்டும் என்று விழைவர். தம்மை வரிக்கும் கணவனும் சமய அடியவனாக இருந்தாற்றானே, வாழ்வு சிறக்கும் என்று ஆசைப்படுவர்.

உன்னைப் பிரானாகப் பெற்றவன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க.

மாணிக்க வாசகரின் திருவெம்பாவைப் பெண்கள், சிவனடியார் களையே காதலர்களாகக் கொள்ளத் துடிக்கும் உறுதியையும், சிவனுக்கு அன்பர் அல்லாதாரைத் தீண்ட நினையாத் துணிவையும் காண்க. பள்ளுப்பாட்டுத் தமிழ்ச் சிறுநூல் வகையினுள் ஒன்று. முக்கூடற்பள்ளு நூலில் அப்பள்ளன் இருமனைவியர்களை உடையவன் என்றும், மூத்தவள் வைணவப்பள்ளி, இளையவள் சைவப்பள்ளி என்றும், இப்பள்ளியர் தம்முள் ஏசிக் கொள்ளும் போது மாற்றுச் சமயங்களை இகழ்ந்தனர் என்றும் அறியவேண்டும்.

காப்பியத்திற்கு ஓரிரு மேற்கோளும் அருட்பாசுரத்திற்கு ஒரு மேற்கோளும் சிறுநூற்கு ஒரு மேற்கோளுமாக மேலே கண்டோம். இடைக்காலத்து இலக்கிய வடிவெடுத்த இந்நூலினங்கள் அறிவிப்பது என்ன? இடைத் தமிழ்ச் சமுதாயத்தைச் சாதிகளும் சமயங்களும் இயக்கின; காதலும் மணமும் எல்லாம் சாதிவழி சமய வழிப்பட்டன; சங்க காலம் போல இயற்கைத் திணை வழிப்பட வில்லை என்பது தெளிவு. சங்க காலத்து இருந்த குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என்ற நிலத்திணையமைப்பு தமிழகத்து இடைக் காலத்தும் இருந்தது. இருந்தும், திணைவழிப்பட்ட மனப்பான்மை அக்காலத்தோர்க்கு இல்லாதொழிந்தது. திணைப்பான்மை மதப் பான்மையாக மாறிவிட்டது. பண்டைக் காலத்தார்க்குக் குலநினைவு இருந்தது. அது தொழில் அடிப்பட்ட நினைவு. ஆதலின் அகத் திணைப் படைப்பில் சாதி சமய வரவுக்கு இடமில்லை என்று அறிக. சாதி சமயங்கள் முளைத்துக் கிளைப்பதற்குப் பன்னூறாண்டுகள் முன்னரே அகத்திணையிலக்கியங்களும் இலக்கணங்களும் எழுந்தன. ஆதலான், தமிழர் கண்ட அகத்திணை சாதி சமயத்திற்குட்படாதது, உட்படுத்த முடியாதது, உயர்ந்தது, எல்லார்க்கும் உரியது.

சங்க மக்கள் வாழும் இடத்தால் அல்லது செய்யும் தொழிலால் பெயர் பெற்றனர், பகுதிப்பட்டனர் (தொல். 965) நாம் இன்று காணும் சாமிப் பிரிவினைக்கு அன்று இடமேயில்லை.[1] மதங்கள் இருந்தன வேனும், மக்களின் நடைமுறை வாழ்க்கையில் அவற்றிற்குப் பேரிடம் இல்லை. வரலாற்றுக்கு முற்காலத்தேயே தமிழ்ச் சமுதாயம் வளர்ந்து விட்டது எனவும், அதன் மக்கட்பாகுபாடு நிலத்திற்கு ஏற்ற தொழில் அடிப்படையில் விளங்கியிருந்தது எனவும் பேராசிரியர் தீட்சிதர் எடுத்தியம்புவர்.[2] அகத்திணைத் தலைமக்கள் வெற்பன் கானவன் துறைவன் என நிலப்பெயர் தாங்கியும், உழவன் உழத்தி வேட்டுவன் வேட்டுவிச்சி எனத் தொழிற்பெயர் தாங்கியும் வழங்கப்படுதலை இலக்கியங்களால் அறியலாம். பண்டு எல்லாத் திணைநிலமும் எல்லாத் தொழில் வினையும் ஏற்றத்தாழ்வின்றிக் கருதப்பட்டன. ஆதலின் இன்ன நிலத்தான், இன்ன தொழிலான் எனக் கீழ்மைப்படப் பேசுவதின்று, தமிழ்ச் சமுதாய மக்களிடை நிகர் மதிப்பு நிலவியது; நிலமும் தொழிலும் பிளவுக் காரணங்களாக இல்லை. தலைவன் தலைவி பெரும்பாலும் ஒரு நிலத்தவராகவே அகத்திணைப் பாக்களில் காணப்படுவர்.[3]

---

1. The Tamilian Antiquary, No 6: p. 10
2. Studies in Tamil Literature and History, p. 180
   cf. J.V. Chelliah: Pattuppattu: General Introduction
3. குறிஞ்சிக் காதலர்கள் நற். 102; முல்லைக் காதலர்கள், கலி. 101; மருதக் காதலர்கள், அகம். 156; நெய்தற் காதலர்கள் ஐங். 199

நிலங்கடந்து எழுந்த காதல்கள் சிலவே. மலைக்கு உப்பு விற்க வந்த உமணச் செல்வியை அம்மலை நாட்டவன் காண்கின்றான்; வளையொலிக்க நடக்கும் ஒசிந்த நடையில் மயங்குகின்றான்; நெல்லுக்கும் உப்புக்கும் நேர்விலை என்று கூறும் குயிலோசையைக் கேட்கின்றான்; நாய்க் குரைப்புக் கேட்டு வெருவும் கண் மருட்சியில் மனமிழக்கின்றான். இத் திணைக்கலப்புக் காதல் இருதிணை எல்லைப் பகுதிகளில் நிகழ்ந்திருத்தல் வேண்டும். நகர மாந்தர் களையும் பேரூர் வாழிகளையும் தலைமக்களாகக் கொண்ட அகப் பாடல்களும் உள (குறுந். 31; அகம். 35). அகத்திணை தலைமக்கள் யார்க்கும் சாதி சமயக் குறிப்பு இல்லை என்று நாம் அறிவோமாக.

XIV

முல்லை வழக்கம்

பிற திணைகளிற் காணப்படாத சில தனிப் பழக்க வழக்கங்கள் முல்லைத் திணையில் உண்டு. நல்லுருத்தினாரின் முல்லைக் கலியில் இத்தனிக் கூறுகள் புலப்படுத்தப்பட்டுள.

> **எல்லா இஃதொன்று கூறு, குறும்பிவர்**
> **புல்லினத் தார்க்கும் குடஞ்சுட் டவர்க்குமெங்**
> **கொல்லேறு கோட்டல் குறையெனக் கோவினத்தார்**
> **பல்லேறு பெய்தார் தொழூஉ** (கலி. 107)

முல்லைத்திணை மக்கள் ஆட்டிடையர் பசுவிடையர் கோவிடையர் என முப்பிரிவுப்படுவர்; எனினும் அப்பிரிவு மணவுறவுக்குத் தடையாக இல்லை என்பதனை மேலைக் கலிப்பாவால் அறியலாம். முல்லைக் குமரன் முல்லைக் குமரியை மணக்க வேண்டின், அவள் பெற்றோர் விடுக்கும் காளை யேற்றினைச் சாடிப் பிடித்துத் தழுவி அடக்குதல் வேண்டும். இவ் வழக்கம் ஏறுதழுவுதல் எனப்படும். இதுபற்றிய துறை முல்லைத் திணைக்கே உரியது. ஓர் இடைமகன் காதலியை மணக்குமுன் ஏறுதழுவுதல் வேண்டும்; அத்தழுவுதலில் நழுவிவிடினும் வழுவிவிடினும் காதலி தன் மனைவியாகாள். விடுத்த ஏற்றினைப் புல்லினான் யாவன், அவன் தன்மனத்துக் கொவ்வாப் பிறனாயினும், அவனுக்கு அவ்விடைமகள் மனைவியாவாளா? இத்துறை அகத்திணையில் இருக்கலாமா? ஒரு வழக்கத்தின் விதிக்குக் காதலை உட்படுத்தலாமா? ஒத்த மனம் காதலுக்கு விதியாக வேண்டுமேயொழிய, ஒரு விதியாகலாமா? அவ்விதியைக் காதலன் நிறைவேற்றவில்லையென்றாலும், வேறொருவன் நிறைவேற்றினான் என்றாலும், பெண்ணின் பெருமை என்னாகும்? உள்ளப் புணர்ச்சியை உயிர்நாடியாக உடைய அகத்திணைக்கு ஏறுதழுவும் துறை ஏற்குமா? ஏலாது. இங்ஙனம் ஒரு சொல்லால் விடைகூறி விடலாம். செவ்விய அகத்திணை வகுத்த நம் தமிழ் மூதறிஞர்களே

ஏறுகோளை ஒரு துறைப்படுத்தி இணைத்துக் கொண்டிருக்கும் போது, ஏலாது என்று நாம் நன்கு எண்ணாமற் சொல்லிவிடலாமா? அவர்கள் எண்ணவில்லை, மயங்கினர், வழுவினர் என்று மொழிவது நம் எண்ணவுயர்ச்சிக்குச் சான்றாகுமா? இவ்வெதிர் வினாக்கள் நம் சிந்தனையை மேலும் தூண்டுகின்றன.

அகத்திணைத் தமிழ்ச் சமுதாய வழக்கோடு ஒட்டியது என்று மேலே விளக்கமாக அறிந்தோம். ஒரு நில மக்களிடை ஒரு மணவழக்கம் மிகுதியாகக் காணப்படின், அந்நில மக்களின் காதலைப் புரியும் போது, அவ்வழக்கத்தை அகத்திணை ஒளிக்க லாமா? கூடாதாதலின், ஏறுகோள் இடம் பெறலாயிற்று. பொதுவாக ஏறுதழுவும் வழக்கம் அகத்திணைக்கு முரணாகாது, ஒவ்வாக் காதலை வளர்க்கவேண்டி இவ்வழக்கம் எழுந்ததன்று. நாளை ஒருத்தியைக் காமுறுங் கால், அவளது காளையை அடக்க வேண்டிவரும் என்று முல்லைநில ஆடவர்கள் அறிவர். அதற்கேற்பக் குமரர்களை முல்லைச் சமுதாயம் பயிற்றியிருக்கும். ஆதலின் உரிய ஏற்றை மடக்கி ஒத்த காதலியர்களைக் கைப்பிடித்த காதலர்கள் பலரிருப்பர். இந் நன்னிகழ்வுகளைத்தான் அகத்திணை கூற முற்படுகின்றது. ஏற்றை அணைக்கமாட்டாது காதலில் தோல்வி யுண்ட இளைஞரும் இளைஞியரும் இருந்திருப்பர். ஏற்றை ஒடுக்க முனைந்துழி, அதன் கொம்பு கிழிக்க உயிர் புறங்கொடுத்த வீரர்களும் இருந்திருப்பர். ஒருத்தியின் ஏற்றினை அவள் காதற்பகைஞரும் அடக்கியிருப்பர். அடக்கியக்கால் அவ்வொருத்தி தன்னுயிரை அடக்காது விட்டிருப்பாள், அல்லது மனத்தைவிட்டு மன்பதைக்கும் பெற்றோர்க்கும் அஞ்சி மணங்கொண்டிருப்பாள். இத்தகையவை நிகழ்ந்திருக்கும் என்பதை நாம் மறுக்கவில்லை; எனினும் இவ்வின்னா நிகழ்வுகளை அகத்திணைக்குப் பொருளாக்கவில்லை என்பதை வலியுறுத்துவன். அகத்திணைக்குப் பொருள் எது? அப்பொருளின் வரம்பு எது? என்பவற்றைப் பிற்பகுதியில் தெளிவீர்கள். உள்ளப்புணர்ச்சி அடிப்படையில் எழுந்த ஏறுகோள்களையே அகத்திணை நுவலுகின்றது என்பதை மறவற்க. உலகியலை விடாதும் ஒத்த மனத்தை விடாதும் மக்கட்காதலைப் புனைவது தமிழ் அகத்திணை என்பதற்கு ஏறுதழுவும்துறை சான்றாகும். இத்துறைப்பாடல்களை மிக விழிப்போடு புலவர்கள் பாடுவர்; பாடியுளர். அவளைக் காதலித்த ஆயனே ஏற்றை வயப் படுத்தினான் எனவும், இவ்வேற்றை வென்ற இவனே அவள் காதலித்தவன் எனவும் உள்ளப்புணர்ச்சி முன்தோன்ற எடுத்துக் காட்டியுளர்.

ஒன்றிப் புகரினத் தாயமகற் கொள்ளிழாய்
இன்றெவன் என்னை எமர்கொடுப்ப தன்றவன்
மிக்குத்தன் மேற்சென்ற செங்காரிக் கோட்டிடைப்
புக்கக்காற் புக்கதென் நெஞ்சு *(கலி. 105)*

ஏற்றைப் புல்லினான் இவன், இவனுக்கே நம்மகள் உரியவள் என்று நம் சுற்றத்தார் ஒரு நாள் வைத்து என்னைக் கொடுப்பது என்ன? எந்நாள் ஏற்றை அணிந்தான், அணைக்க முயன்றான், முயன்று அதன் கோட்டின்மேற் பாய்ந்தான், அந்நாளே, அக்கணமே என் நெஞ்சினுள் அவன் பாய்ந்து அமர்ந்தான்; காளையைத் தழுவுமுன்னரே என் காதல் இவனுள்ளத்தைத் தழுவிற்று என உள்ளப்புணர்வு மொழிகின்றாள் ஒரு முல்லைப் பெண்ணாள்.[1]

முல்லைத் தெய்வம்

திருமால் முல்லைநிலத் தெய்வம். ஆயர்கள் திருமால் அன்பினர்; திணைத்தெய்வப் பற்றுடையவர். பல முல்லைக் கலிப்பாடல்கள் தெய்வ வணக்கமாகவும் வாழ்த்தாகவும் முடிகின்றன. நானில மக்களுள்ளும் முல்லைத்திணையினர் எவ்வகை வினைக்கும் தெய்வம் பரவுவர்; எல்லாம் தெய்வச் செயலெனக் கருதுவர். அதனாற்போலும் தொல்காப்பியர் "மாயோன் மேய காடுறை யுலகம்" என்று தெய்வவரிசையில் முல்லைக்கு முதலிடம் அளித்தனர். தொழுவில் ஆனேறுகள் அவிழ்த்து விடப்பட்டன. செவிமறைக் காளையை ஓரிளைஞன் அடக்கி மடக்கிப் புல்லினான். அவன் தலையிற் சூடிய முல்லைக்கண்ணியை மாட்டின் கொம்பு அலைத்து வீசி யெறிந்தது. அக்கண்ணியின் ஒரு முல்லைப்பூ தனித்துச்சென்று பார்வைக் கூட்டத்தில் இருந்த பெண்ணொருத்தியின் கூந்தலுள் வீழ்ந்தது காண். மணமுடைய முல்லைப்பூவை மணங்கூட்டும் பூவாக அந்நங்கை போற்றிப் பொதிந்தாள். இச்செய்தி கேட்ட பெற்றோர் துடித்திலர்; அப்பூவுடையான் யார் என்று சினந்திலர்; ஊர் யாது சொல்லுமோ என்று கவன்றிலர். இது தெய்வத் திருமாலின் அறிவிப்பு என்று தெளிந்து, மனமகிழ்ந்து அப்பூவாளனைத் தம் மகளின் மணவாளனாக்கிக் கொண்டனர்.

மண்ணிமா சற்றநின் கூழையுள் ஏறவன்
கண்ணிதந் திட்ட தெனக் கேட்டுத் திண்ணிதாத்
தெய்வமால் காட்டிற் றிவட்கென நின்னையப்
பொய்யில் பொதுவற் கடைசூழ்ந்தார் தந்தையோடு
ஐயன்மார் எல்லாம் ஒருங்கு *(கலி. 107)*

XV

பாலைத்திணையும் கோடைக்காலமும்

நடுவண் ஐந்திணை நடுவண தொழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே *(தொல். 947)*

1. இம்முறை பற்றியே, வில்லொடிப்பதற்கு முன் இராமனுக்கும் சீதைக்கும் உள்ளப்புணர்ச்சி நிகழ்ந்தது எனப் பாடுவர் கம்பர்.

என்ற தொல்காப்பியப்படி, தமிழகம் கடல் சூழ்ந்தது எனவும் அதன் நிலவியற்கை நால்வகை எனவும் அறியலாம். நம் நாட்டமைப்புக் காட்டுவதற்கென்றே தோன்றியது நானிலம் என்னும் சொல். அகவிலக்கணத்து வரும் ஐந்திணைக் குறியீடு நிலவகை பற்றியதன்று, காதலின் ஒழுக்கவகை பற்றியது என்று முன்னதிகாரத்திற் கற்றோம். இதனால் நிலவடிப்படை முற்றும் மறுக்கப்பட்டது என்பது கருத்தாகாது. குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என்ற காதல்வகை நான்கிற்கும் நிலவகைகள் வகுக்கப் பட்டுள. தமிழகம் அத்தகைய நிலப்பாங்குகள் உடைமையே அதற்குக் காரணம். பாலைக்காதலுக்கு நிலங் கூறவில்லை. கூறாமைக்குக் காரணம் தமிழகத்துச் சகாரா போன்ற நிலப்பாங்கு இல்லை; பாலை நிலம் இன்று; எனவே பாலைநில மக்கள் என்பாரும் இலர் என்பது தெளிவு. அதனாலன்றோ அகத்திணைத் தலைவராகவும் தலைவி யராகவும் இலக்கியத்தில் பாலைநில மக்கள் வந்திலர். காதலர்களின் காட்சிக்குப் பாலைச்சூழ்நிலை கூறப்படாமையும் காண்க. அகத் திணைப் பனுவல்களில் பாலைப் பாடல்களே பெருவாரியன. இப்பாடற்குப் பொருளான காதலர்கள் ஆறலை கள்வர்களும் சூறையாடிகளும் அல்லர்: குறிஞ்சி முதலாம் நானில மக்கள்தாம் என அறிக. அன்னவர்தம் பிரிவுகளே பாலைத்திணைச் செய்யுட்களில் புனையப்படுவன. பாலை ஒருசார் வழிநிலமேயன்றி நிலையான வாழ்நிலம் அன்று.

தமிழ்நாட்டில் நிலத்தாற் பாலை இலதேனும், காலத்தாற் பாலையுண்டு. நிலையான சுரம் இன்றேனும், வந்துபோம் சுரம் உண்டு. கோடை என்னும் காலப்பாலை குறிஞ்சி முல்லைப் பகுதிகளை ஓரிரு திங்கள் நீரற்ற களமாக, வெப்பம் வீசும் சுரமாக, யாதுந் தோன்றாப் பாலைநிலமாக, கடுங்கதிர் ஞாயிற்றின் விருந்தில்லாக மாற்றிவிடுகின்றது. இஃது உண்மைப் பாலையன்று; பாலைப்போலி என்று நிலவியற்கை தெளிந்த இளங்கோ "பாலை என்பதோர் படிவங் தொள்ளும்" என்றார்; ஒருகாலச் செயற்கைத் தோற்றம் உடைய அவ்வளவே என்று சுட்டினார். கோடை நீங்கிக் கார் பொழியுங்காலை, இச் செயற்கைப்பாலை ஒழிந்துபோம். மீண்டும் குறிஞ்சி முல்லைத் திணைகள் பலதிங்கள் நீர் பெற்று நிலம் தழைத்துப் பயிர்களை ஈனும். இரண்டு திங்கட்பாலையேயாயினும்; இதுவிளைக்கும் வெம்மைக்கு அளவின்று. நன்னலத்தொடு பன்னாள் இருந்தானைச் சின்னாட் காய்ச்சல் கொல்ல வில்லையா? காய்ச்சற் புடம் கொண்ட பலர் நோயணு ஒழிந்து உடலுரமும் வளமும் நிறமும் பெற்றிலங்கக் காண்கின்றோம். தமிழகத்தின் நிலச்சுரம் மக்களின் உடற்சுரம் போல்வது. கதிர் தெறுதலால் தமிழ்நிலமகள் காய்ச்சற்பாடு உறுகின்றாள்; பெய்யும் மாரியைத் துளியும் விடாது வாங்கிக் கொண்டு எழில் காட்டுகின்றாள்.

அன்புப் பாலை

சின்னாட் செயற்கைக் கொடுஞ் சுரத்தைக் காதலோர்தம் அன்பின் நிலைக்களமாக்கினர்; வறண்ட பாலைத்தடத்தை அன்பு நீர் சுரக்கும் ஆயிர உள்ளங்களின் பிரிவுப் பாடல்களுக்குக் கற்பனைச் செய் ஆக்கினர் தமிழ்ப் புலனேர் உழவர்கள். இஃதோர் இலக்கியப் புதுமையுட் புதுமைகாண். கோடைக் காலன் ஒருசார் குறிஞ்சி மாக்களைக் கொள்ளையர்கள் ஆக்குகின்றான். அக்கொள்ளையர் வழிநடையாளரை அச்சுறுத்திப் பொருள் பறித்துக் களவேர் வாழ்க்கை நடத்துவர். இப்பாலை மறவர்கள் நாடு காக்கும் படைமறவர்கள் போல்வாரல்லர்: அஞ்சியோடும் எளிய மக்களைத் தன்னலங்கருதி அடித்துக் கொல்லும் வன்கண்ணர்! ஊராண்மை என்னும் கண்ணோட்டம் இல்லாக் கழி பெருங்கொடிஞர்.

வலிமுன்பின் வல்லென்ற யாக்கைப் புலிநோக்கிற்
சுற்றமை வில்லர் சுரிவளர் பித்தையர்
அற்றம்பார்த் தல்கும் கடுங்கண் மறவர்தாம்
கொள்ளும் பொருளில ராயினும் வம்பலர்
துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்துயிர் வெளவலிற்
புள்ளும் வழங்காப் புலம்புகொள் ஆரிடை *(கலி. 4)*

வல்லுடலும் புலிக்கண்ணும் பறட்டைத் தலையும் விற்கையும் கொண்ட மறவர்கள் வருகுநர் சோர்வு பார்த்து வழி மறைந்து கிடப்பர். பறிக்கும் பொருளிலதேனும் அடிப்பர்; அடிக்குங்கால் துடிக்கும் மெய்ந்நிலையைக் கண்டு இன்புறுவர். அவ்வழி நிலத்திடை மக்களும் நடவார். வான்வழிப் பறவைகளும் ஓடா. இக்கடிய அருஞ்சுரத்தின்கண் ஆருயிர்த் தலைவன் செல்வதை தலைவி உடன்படுவாளா? பொருள் வேண்டுந்தான், கடமைகளைச் செய்ய வேண்டுந்தான் என்பதற்காக, இல்லற அன்பனை இழக்கும் நெறியில் ஏகவிடுத்து அன்பி வாளா இருப்பாளா? அவளது பெருங்கவலை பாலைச் செய்யுள்களின் பொருளாகும். பாலை நெறிகள் இன்னா வேனும், பாலைத்துறைகள் அன்பின்பாலன; நல்வாழ்வுக்கு இனியன; செறிந்த கூடலை அளிப்பன. பிரியாத புணர்ச்சியும், புணராத பிரிவும் உள்ளத்தையும் உடலையும் வளர்க்கா; கெடுக்கும். இடையீடு உடைய புணர்வு பிரிவுகளே அன்பை வளர்த்து ஆர்வத்தை மிகுத்து அறிவைத் தூண்டி நெஞ்சினைச் செவ்விதாக்கி, உவரா இன்பத்தை நெடிது தரும். பாலைக்கொடுநெறி அன்பின் நெறியைப் பெருக்குதலின், பெருகிய அன்பினைப் புலப்படுத்தலின், சங்கச் சான்றோர் பாலைத்திணையைப் பாடல்சால் திணையாக மதித்துப் பாடினர்.

வடவேங்கடம் தென்குமரி இடைப்பட்ட தமிழக எல்லைக்குள் நிலையான பாலை இல்லை; எனினும் பல பாலைப் பாடல்களில் நிலையாய சுரம் புனையப்படுதலைக் கற்கின்றோம். இச்சுரங்கள் வேங்கடத்திற்கு வடபால் உள்ள பிறநாட்டுப் பகுதிகளாம்.

வில்லலைத் துண்ணும் வல்லாண் வாழ்க்கைத்
தமிழ்கெழு மூவர் காக்கும்
மொழிபெயர் தேஎத்த பன்மலை இறந்தே (அகம். 31)
வானிணப் புகவின் வடுகர் தேஎத்த
நிழற்கவின் இழந்த நீரில் நீளிடை
அழலவிர் அருஞ்சுரம் நெடிய என்னாது (அகம். 213)
செந்நுதல் யானை வேங்கடம் தழீஇ
வெம்முனை அருஞ்சுரம் இறந்தோர் (அகம். 265)

தமிழ்மொழி வழங்காத அயல்நாட்டுச் சுரங்களைத் தலைவன் பொருளீட்டுவான் கடந்து செல்கின்றான். மாற்றுமொழியும் வேற்றுநாடும் புதிய பாலை வழியும் காதலியின் அவலத்திற்கு ஏதுவாகின்றன. வேங்கடம் என்ற சொற்றானும் வேம் + கடம் எனப் பிரிவுற்று, வேகும்சுரம் (பாலை நிலம்) என்று பொருள் தருதல் காண்க. தமிழ்கூறு நல்லுலகத்தினையும் அதன் ஒழுகலாற்றையுமே சொல்லுவதாக வரம்பு கொண்டமையின், தொல்காப்பியர் தமிழக எல்லைக்குட்பட்ட நிலப்பாங்கினையும் பருவப்பாங்கினையுமே குறிப்பாராயினர். நம் எல்லைக்குள் முதுவேனில் தோன்றுதலின், பாலைக்குப் பெரும் பொழுது வரைந்தார்; சுரப்பகுதியின்மையின் நிலம் என ஒன்று வரையாதமைந்தார்.

XVI

கடல்வழிச் செலவைப் பாடாமை

தமிழகம் கிழக்கு தெற்கு மேற்கு ஆகிய முத்திசையானும் நீர்வளைவுண்டது. 'முந்நீர்' என்னும் தமிழ்க்கிளவி இம் முப்புறக் கடலமைப்பைச் சுட்டுவது; சுட்டுதற்கென்றே தோன்றியது.

முந்நீர் விழவின் நெடியோன் (புறம். 9)
முந்நீர் வழங்கு நாவாய் போலவும் (புறம். 13)
முந்நீர் உடுத்தவிவ் வியனுல கறிய (புறம். 382)
முந்நீர் ஏழக்கம் மகடூஉவோ டில்லை (தொல். 979)

இப்பழஞ் சொல்லின் அரும்பொருள் சங்கப்பிற் காலத்தே வழக்கில் இல்லை. முந்நீர் - கடல் என்று பொதுச் சொல்லாகக் கருதினர். யாற்றுநீர் ஊற்றுநீர் மழைநீர் என்று விரித்துரைத்தனர் புறநானூற்று உரையாசிரியர் (புறம்.). அதனை மறுத்து, படைத்தல் அழித்தல் காத்தலாகிய முச் செய்கை (மூந்நீர்மை) கொண்டது கடல் என்று சொல் விளக்கம் செய்தார் அடியார்க்கு நல்லார் (சிலப். 17). நச்சினார்க்கினியரும் இக்கருத்தினரே என்று பெரும் பாணாற்றுப் படையாலும் சிந்தாமணியாலும் (செய்யுள். 5) அறியலாம். இச்சொல் முப்புறமும் தமிழகத்தை வளைத்துக் கிடக்கும் ஒரு பெரும்

நீர்ப்பரப்பைக் குறிப்பது என்பதனையும், தீபகற்பகமாகிய நிலவடிவைச் சுட்டுவது என்பதனையும் இடைக்கால உரையாசிரிய ரெல்லாம் எண்ணிப் பார்க்கவில்லை. இத்தமிழகத்தைப் "படுதிரை வையம்" என்பர் (147) தொல்காப்பியர். "நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும்" என்ற குறளைப் பாடுதற்குத் தாய்நாட்டைச் சூழ்ந்து கிடக்குங் நெடுங்கடல் அழுவம் வள்ளுவர் நெஞ்சை இயக்கியிருத்தல் கூடும்.

தமிழ்நாடு கடல் சூழ்ந்த இயற்கைத்து ஆதலின், தமிழர்கள் தொன்றுதொட்டே கடல் வாணிகர்களாகத் திகழ்ந்தனர். "கலத்தினும் காலினும் தருவனர் ஈட்டக் குலத்திற் குன்றாக் கொழுங்குடிச்செல்வர்" என்று இளங்கோ நீர்வழி நிலவழி வாணிகங்களை மொழிகுவர். "நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும், காலின் வந்த கருங்கறி மூடையும்" என்ற பட்டினப்பாலை அடிகள் அவ்வழிவந்த சரக்குக்களை இயம்புகின்றன. கடல்வழி நெடுஞ் செலவை "முந்நீர் வழக்கம்" என்ற சிறு தொடரால் தொல்காப்பியம் அறையும்.தொன்மைசால் இலக்கணத்தில் இடம்பெறும் அளவிற்குத் தமிழனத்தார் பலர் கடலோடிகளாகவும், வணிகப் பரதர்களாகவும் தொன்றுமுதிர் இத்தமிழ் ஞாலத்தே விளங்கினர். கண்ணகியின் தந்தை மாநாய்கனைக் கடல் வணிகன் எனவும், கோவலனது தகப்பன் மாசாத்துவானை நிலவணிகன் எனவும் கருத இடனுண்டு.

தமிழகம் கடலகமாக இருந்தும், தமிழர்கள் கடலர்களாக இருந்தும், "வருணன் மேய பெருமணல் உலகம்" என்று தொல் காப்பியம் கடற்றிணை (நெய்தற்றிணை) 950 வகுத்திருந்தும், அகத்திணையியலின்கண் "முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை" எனக் காதலனது தனிக் கடற் செலவை நூற்பித்திருந்தும், ஏனோ சங்கச் சான்றோர்கள் பாலைத்திணையில் நீர்வழிப் பிரிவுகளைப் பாடிற்றிலர்? அப்பிரிவுக்கு ஆற்றாத தலைவியர்தம் இரங்கல்களை நெய்தற்றிணையிலும், கடல்வினை முற்றிய தலைவர்தம் வரவுகளை முல்லைத் திணையிலும் அல்வழிப் புணர்ச்சிகளைக் குறிஞ்சித் திணையிலும் தொடர்ந்து பாடிற்றிலர்? இற்றைச் சங்க விலக்கியத்து வரும் பாலைத்திணைச் செய்யுட்களும் பிறதிணைச் செய்யுட்களும் எல்லாம், நிலவழிப் பிரிவுகளையும் வரவுகளையும் புணர்வுகளையும் கூறுவன. அகத்திணை என்பது ஒருபால் நிலத்திணையாகவே உளது. நீர்த்திணைமேலும் அகத்திணைப் பாடல்கள் பாடவேண்டும், பாடியிருத்தல் வேண்டும். சங்கப் புலவோர் நீரகப்பாடல்களை யாக்கத்தவறிவிட்டனர்; தமிழ் மன்பதையின் கடல் வாழ்க்கைமேல் காதற்கவிதை புனையா தொழிந்தனர்.

கடற்பாலைப் பாட்டு

இப் பொதுக்குற்றப் பாட்டிற்கு ஆளாகாச் சங்கப் புலவர் ஒருவரை - ஒருவரையே கண்டேன். மருதன் இளநாகனார் அகப்பாக்கள் எழுபத்து நான்கு பாடிய பெரும் புலவர். அத்துணைப்

பாடல்களுள் ஒன்றே ஒன்று தலைவன் தன் நாவாய்ச் செலவையும், அப்பிரிவுக்குத் தலைவி ஆற்றாமையையும் பொருளாகக் கொண்டது. இஃது ஒரு பாலைப் பாட்டு.

உலகுகிளர்ந் தன்ன உருகெழு வங்கம்
புலவுத்திரைப் பெருங்கடல் நீரிடைப் போழ
இரவும் எல்லையும் அசைவின் றாகி
விரைசெலல் இயற்கை வங்கூழ் ஆட்டக்
கோடுயர் திணிமணல் அகன்றுறை நீகான்
மாட வொள்ளெரி மருங்கெறிந்த தொய்ய
ஆள்வினைப் பிரிந்த காதலர் நாள்பல
கழியா மையே அழிபடர் அகல
வருவர் மன்னால் தோழி (அகம். 255)

கடற்பிரிவு என்பதனை முதலடியே காட்டுகின்றது. 'உலகு கிளர்ந்தன்ன' என்ற உவமையாலும், பெருங்கடல் நீரைப் பிளந்து சென்றது என்ற கருத்தாலும், வங்கம் என்பது மிகப் பெருங் கப்பல் என்று அறியலாம். மீகாமன் காற்றின் இயக்கத்தை அறிந்து இரவும் பகலும் சோராது வங்கத்தை ஓட்டுவான் எனவும், நகரின் மாடவிளக்குக்களை நோக்கிக் கரைசேர்ப்பான் எனவும், முதல் ஆமடிகள் கடற்செலவை ஓரளவு புனைகின்றன. இப்புனைவு நயமில்லை என்பது வெளிப்படை. பாலை நிலச் செலவைத்தான் வளம்படப் பாடும் திறம் சங்கப்புலவர்க்கு இருந்தது. அத்திறந்தான் அக்காலத்து வளர்க்கப்பட்டது. நிலத்திணைப் பாடல்கள்தாம் மிகவும் பயிலப்பட்டது. நிலத்திணைப் பாடல்கள்தாம் புதிய கற்பனையோடு மேலும் படைக்கப்பட்டன. இக்கல்விச் சூழ்நிலையில் மருதன் இளநாகனாரின் கடற்பாட்டு நல்ல கவிதையாகத் தோன்றுதற்கு இடனில்லை. அவர் கடற்பாட்டு ஒன்றினைப் பாடிய அத்துணைக்கே தனிப்பெருமை யுடையவர் ஆகின்றார். நிலத்திணையில் தேர்ப்பாகன் கூறப்படுவான். இந்நீர்த்திணையில் கப்பலோட்டியை இளநாகனார் அமைக்கின்றார். நிலப்பாலையில் முதுவேனிலும் நண்பகலும் வரும். இந்நீர்ப் பாலையில்,

அறனின் றலைக்கும் ஆனா வாடை
கடிமனை மாடத்துக் கங்குல் வீச

எனப் பின்பனிப் பெரும்பொழுதும் கங்குற் சிறுபொழுதும் வந்திருத்தல் காண்க. ஆலங்குடி வங்கனார் ஒரு சங்கப் புலவர், வங்கப் பெயர் பெற்றிருந்தும், இவர் பாடல்களில் கடற் குறிப்பு இல்லை.

பாலைத்திணைக்கண் கடற்பிரிவைப் பாடியிருந்தால், புதிய பல இலக்கியப் புனைவுக்கு வாய்ப்பு உண்டு. அலைகடல் நடுவண் சாடிவீசும் கடும்புயல், கடற்கொள்ளை, சுறாமீன்களின் தாக்கு, பாறைமோது பாய்மரமுறிவு, பாய்கிழிவு, கலங்கவிழ்வு,

திசையறியாமை, உணவின்மை, நன்னீரின்மை முதலான இடையூறு களையும், அவற்றை எண்ணிப் பார்த்துத் தலைவிபடும் அவலங் களையும், கடல்நீந்தித் திரைக்கையால் கரையடைந்த தலைவன் துய்க்கும் ஆராப் புணர்வுகளையும் சொல்லும் பாலைக்கடற் பாடல்களைப் பெரிதும் பெற்றிருப்போம். சங்கப்புலவர்கள கடற்பாலையை மறந்தனர்காண். நிலப்பாலையே பாலையென மயங்கி விட்டனர் போலும். கடுங்கதிர்க் கனலியின் வெப்பம், நீரின்மை, நிழலின்மை, தஞ்சமின்மை, கானல்நீர், சுரம்வாழ் உயிர்களின் வாட்டம், வன்கண்ணர்தம் வழிப்பறி, பொருளச்சம், உயிரச்சம் விலங்கச்சம், நெறியின் கரடுமுரடு ஆகிய பல்லூறுகளை வேறு வேறுபடப் புனைந்து காட்டும் பழந்தடத்திலேயே சங்கச்சால்பினர்தம் மனம் சென்றது, இயல்பாக ஓடியது, கவிதை வளம்பட்டது.

நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு
முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே *(தொல். 956)*

பாலைத்திணையின் பொழுதுகளாகக் கோடையையும் நண்பகலையும் தொல்காப்பியர் வகுத்திருத்தலின், அப்பொழுதுகள் நிலப்பாலைக்கு நனிபொருந்துதலின், சங்கக் கவிஞர்கள் தலைவன் தன் சுரவழிச் செலவையே வழிவழிப் பிரிவுதான் பிரிவெனவும் தொல்காப்பியம் வரையறவு செய்யவிலலை. "பின்பனிதானும் உரித்தென மொழிப" *(தொல். 955)*, எனப் பாலைக்கு மேலும் ஒரு பெரும்பொழுது வகுப்பர் ஆசிரியர். கலத்திற் பிரிவு நோக்கியே இப்பனிப் பொழுது பாலைக்கு வகுக்கப்பட்டது என்று கருதலாம். எனினும் கலத்துப் பாடல்கள் தோன்றவில்லை. "தலைமேல் வெம்மை, காற்கீழ் வெம்மை, நெஞ்சத்துள் வெம்மை, இந்நிலையில் பாலைச் செலவினர் பெரும் பாழான தோற்றத்தைக் காண்கின்றனர்" என்று விளக்கஞ் செய்வர் தனிநாயகர்.[1] வெம்மை வளம் மிக்க சுரமும், அச்சுரத்துக் கோடைக் காலமும், அக்கால நண்பகலும், பிரிந்தாரின் காதற் சரத்தையும் கவலைக் கொதிப்பையும் பெருக்க வல்லவை. உள்ளக் கொதிப்பை நிலக்கொதிப்பும் காலக்கொதிப்பும் காட்டுவன. ஆதலின் சங்கத்தார் நிலவழிப் பிரிவுகளையே பாலைத்திணையாகப் பாடினர் போலும். கடல்வழிப் பிரிவாயின், நிலவெம்மையும் கால வெம்மையுமாகிய புறக்கொடுமையைப் புனைதற்கு இடமில்லைகாண்.

முல்லைத்திணையும் கார்காலமும்

பாலைத் திணைச் செய்யுட்களைக் கோடைக்காலம் வளஞ்செய்தல் போல, முல்லைத்திணைச் செய்யுட்களைக் கார்காலம் வளப்படுத்தக் காணலாம். தலைவன் மேற்கொண்ட

1. Nature in Ancient Tamil Poetry. P. 147.

வினையை முடித்து வீடு திரும்புகின்றான் என்பது ஒருதுறை. இதுபற்றிய முல்லைப் பாட்டெல்லாம் மழை முழக்கையும், சிறுதுளியையும், நீருண்ட பிணைமான்புணர்ச்சியையும், தாதுண்ட வண்டின் இசையையும், செம்பவளப் பூச்சியின் வனப்பையும், வண்டுவாய் திறக்கும் முல்லை மொட்டின் நறுமணத்தையும், நிலத்தின் குளிர்ச்சியையும், நெடுவழியின் தண்பதத்தையும், காதலர் உள்ளமொடு கற்பார் உள்ளமும் குளிரப் புனைவு செய்கின்றன. 'வினைமுற்றிய தலைமகன்' என்ற தொடருக்குப் பொருளீட்டும் வினையை முடித்தவன் என்றோ, போர் செய்யும் வினையை முடித்தவன் என்றோ பொருள் கொள்ளலாம்; எனினும் இத்துறைப் பாடல்களில் போர்க்குச் சென்ற தலைவர்களின் வருகையே மிகவும் இடம் பெற்றுள்ளது.

வினைவலம் படுத்த வென்றியொடு மகிழ்சிறந்து
போர்வல் இளையர் தாள்வலம் வாழ்த்தத்
தண்பெயல் பொழிந்த பைதறு கார்லை (அகம். 74)

நன்கலம் களிற்றொடு நண்ணார் ஏந்தி
வந்துதிறை கொடுத்து வணங்கினர் வழிமொழிந்து...
வண்பெயற் சுவிழ்ந்த பைங்கொடி முல்லை
வீகமழ் நெடுவழி யூதுவண் டிரியக்
காலை யெய்தக் கடவுமதி (அகம். 124)

புலனணி கொண்ட காரெதிர் காலை
ஏந்துகோட் டியானை வேந்தன் பாசறை
வினையொடு வேறுபுலத் தல்கி (அகம். 304)

இவ்வகைப் பாடல்களில் காரும் போரும் இணைந்து வருதலைக் காண்க. பண்டைத் தமிழ் அரசர்கள் கார்காலத்திற்குள் திறைகொடுத்தோ திறைவாங்கியோ போரைச் சந்துசெய்து கொள்வர்; அல்லது போரை நிறுத்தி வைப்பர். ஆவணி தொடங்கிப் பெய்யும் ஓயாப் பெருமழைக் காலத்தில் போரிட இயலாது. யானை குதிரை தேர் காலாள் என்ற நாற்படையும் வலியொடு இயங்கமாட்டா. இயற்கையொடு முரணிப் படைகளைப் போருக்கு ஏவுவதில்லை. ஆதலின் இருதிற மன்னர்களும் காரின் தொடக்கத்துப் போரை நிறுத்தி விடுவது முறையும் ஆயிற்று. போர் நின்றவுடன், வேந்தரும் மற்ற வரும் தத்தம் வீடுநோக்கி மீளுதல் வழக்கம். திரும்பிவருவர் என்று தலைவியர்கள் எதிர்ப்பார்த்திருப்பதும் வழக்கம். கார்காலத்து வருவேன் என்று தலைவர்கள் சொல்லிச் செல்வதும் வழக்கம். இதனால் முல்லைத்திணைக்குக் கார்ப்பருவம் வகுத்தது பொருத்தமே எனவும், தமிழ் நிலவியல்புக்கு உகந்ததே எனவும் தெளியலாம்.

XVII

3. உளவியல் அடிப்படை

ஈண்டு உளவியல் என்பது என்ன? அகவிலக்கியத்தைப் படைத்தது தமிழினம். அதனைப் படைப்பதற்கு அந்நல்லினம் பெற்றிருந்த தனி மனக்கூறு எது, அது நாம் காணுதற்கு உரியது. தமிழ்ச் சமுதாயம் அகத்திணைக்குத் தளமிட்டது. தமிழ் நாட்டின் பூதவியல்பு அத்தளத்திற்கு வேண்டும் கட்டிடப் பொருள்களை நல்கிற்று. தமிழினத்தின் தனி நெஞ்சியல் காண் அகத்திணை எண்ணத்தையே உண்டாக்கிற்று. இந் நெஞ்சியல் இன்றேல் தளம் ஏது? கட்டிடப் பொருள்கள் எற்றுக்கு? கருவற்ற வயிற்றுக்குப் பிறவற்றாற் பயனென்கொல்? தமிழினத்தின் எண்ணக் கருவை நன்கு விளங்கிக் கொண்டாலன்றி, அவ்வினம் தோற்றிய இலக்கியப் படைப்பை நாம் அணுகி அறிந்துகொள்ள இயலோம். எண்ணம் தெரியாது காதலாடலாமா?

தமிழர் இயற்கையோடு பெருங்கேண்மையினர்; நிலம் புல் மரம் புள் விலங்கு என்றின்ன அஃறிணைகளைப் பற்றிய அறிவு இயல்பாக நிரம்பியவர்; அன்னவர்தம் இயற்கைப் பேரறிவுக்கும் தொடர்புக்கும் சங்கவிலக்கியத்தின் ஒவ்வோரடியும் சான்று எனப் பலர் எழுதல் இன்று வழக்காறாயிற்று. பண்டைத்தமிழர் என்ன, உலகின் எப்பகுதிக் கண்ணும் வாழ்ந்த பண்டை மக்கள் என்பார் இயற்கையோடு அகலாத் தொடர்புடையவரே, இயற்கை யாசானிடமிருந்து எல்லாம் கற்றவரே. ஆதலின் இயற்கையோடு ஒன்றிய வாழ்க்கை தொல் தமிழர்க்கு மட்டும் உரியதன்று; தொன்மாந்தர்க்கெல்லாம் பொதுமையதே.

இயற்கை வாழ்வு பொதுவதேனும், அதன் ஆட்சி, அது மக்கள் உள்ளத்தில் எழுப்பும் எண்ணம் வெவ்வேறாகும். இயற்கைத் தன்மை என்பது வேறு! அஃது என்றும் மாறாதது அகநிலையானது. இயற்கையாட்சி என்பது வேறு. அஃது ஆளப்படுவார் உள்ளத்தைப் பொறுத்தது, அவர் உள்ளத்தை வெளிப்படுத்துவது. உள்ளத்திற் கேற்ற எண்ணத்தையே உறுவிப்பது. எனவே புறநிலையானது, இயற்கைதான் ஒரு தன்மைத்தாயினும், எல்லார் மாட்டும் செய்யும் தாக்குதல் பலதன்மைத்து. ஏன்? தாக்கப்படுவார் பலதன்மையினர், பல்வகை எண்ணக் கிளையினர், ஆதலின் மனிதன் பண்டு அடர்ந்த இயற்கை நடுவண் இருந்தான், இயற்கையோடு உறவுற்றான் என்று பொதுப்படையாக மொழிவதைக் காட்டிலும், இயற்கை தன்னைச் சூழ்ந்த மக்களின் மனத்தை எவ்வெண்ண வாயிலாக ஊடுருவிற்று? அம்மக்கள் இயற்கையின் பல்பொருள்களைக் காணுந்தோறும் கேட்குந்தோறும் சொல்லுந்தோறும் தம் நெஞ்சகத்து

எவ்வெண்ணப் பான்மையை வளர்த்துக் கொண்டனர்? வளர்க்க இடங் கொடுத்தனர்? என்று வரையறுத்துக் காண்பது நன்று. அகத்திணைச் செய்யுட்களில் பரந்து செறிந்து கிடக்கும் இயற்கைப் புனைவுகளையும் அப்புனைவுகளுள் மறைந்தோடிக் கிடக்கும் ஒருபெரும் தன்மையினையும் ஆராய முனைந்தால், பண்டைத் தமிழின்த்தின் தனிமனக்கூறு தெளிவாகத் தோன்றும். அக் கூறுதான் அகத்திணைப் படைப்பிற்கு முதற்காரணமாம்.

மக்களின் முதன்மையும் இயற்கையின் துணைமையும்

தமிழர்கள் இயற்கையை இயற்கைக்காக இயற்கையாகக் காதலித்தார் அல்லர்; வேறொன்றும் நோக்காது அழகு நோக்கியே அதன் பூப்பிலும் பொலிவிலும் வனப்பிலும் ஈடுபட்டு அகமகிழ்ந்தார் அல்லர். தமிழர் இயற்கையின் பாவை அல்லர். இயற்கை தமிழரின் எண்ணப்பாவை, வாழ்க்கைக் கருவி. ம்லையையும் மானையும் கடலையும் மீனையுங் காரையும் பொழுதையும் செடியையும் கொடியையும் ஒரு பயன் நோக்கியே பார்வை செலுத்தினர். சங்கவிலக்கியம் ஏறத்தாழ ஈராயிரத்து நானூறு பாடல் கொண்டது. எல்லாம் தனிச்செய்யுட்களே. எனினும் இயற்கையைத் தனிப்பொருளாகக் கொண்டு அதன்மேல் எச்செய்யுளும் எழுந்ததில்லை. சங்கப் புலவர்கள் ஏறத்தாழ ஐந்நூற்றுவர். தனி இயற்கைப் புலவராக யாரும் இலர். பாலைபாடிய பெருங்கடுங்கோ எனின், பாலைத்திணையின் உரிப்பொருள் பாடிய புலவர் என்பதுவே கருத்தாம்; பாலையின் முதலையும் கருவையும் பாடியவர் என்பது கருத்தன்று. முதலும் கருவும் உரிப்பொருளுக்குத் துணைப் பொருளேயன்றிப் புலவனுக்குப் பாடற் பொருளன்று. துறைப் பொருளன்று, தலைமைப் பொருளன்று. பெருங்கடுங்கோ அகப்புலவரேயன்றி, இயற்கைப்புலவர் அல்லர். இவ்விளக்கம் மருதன் இளநாகன், குறிஞ்சிக் கபிலன் என்பவற்றிற்கும் பொருந்தும்.

ஆங்கில இலக்கியத்தில் இயற்கைப் புலவர் பலர் உளர். பூவும் வானம்பாடியும் பாம்பும் வாவலும் ஏரியும் மேகமும் மலையும் அன்னவர்க்குத் தலைமைப் பாடுபொருளாகும். இவ் விலக்கியமுறை இந்நூற்றாண்டு முதலே தமிழகத்துப் பரவி வருகின்றது. இன்று இயற்கைப் புலவர்கள் தமிழ் மொழியில் பல்கி வருவர். குழந்தைப் பாடல்களில் இயற்கை மிக இடம் பெறுகின்றது.

தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு - அங்கே
துள்ளிக் குதிக்குது கன்றுக் குட்டி;
அம்மா என்குது வெள்ளைப்பசு - உடன்
அண்டையில் ஓடுது கன்றுக் குட்டி;
நாவால் நக்குது வெள்ளைப்பசு - பாலை

நன்றாய்க் குடிக்குது கன்றுக்குட்டி;
முத்தங் கொடுக்குது வெள்ளைப்பசு - மடி
முட்டிக் குடிக்குது கன்றுக் குட்டி.

இது கவிமணியின் இயற்கைப்பாட்டு. மெய்யாகச் சொல்லின் இயற்கைப் புல்வர் என்பார், முற்றும் இயற்கை பாடியவர் அல்லர். இயற்கையைக் கிடந்தாங்குக் காட்டுதல் அறிவியல்; நினைத்தாங்குப் புனைதல் கவியியல். புலவன் இயற்கையாகப் பாடும்போது மனிதச் சாயலைப் பூசிக் காட்டுகின்றான். காட்டாது காட்டின் புலவனாகான். 'வெள்ளைப்பசு முத்தங் கொடுக்குது' என்னும்போது மானிடவொழுக்கம் புகுந்துவிட்டது. இயற்கையைத் தலைமைப் பொருளாக மேற்கொண்டு பாடுதலின், இன்னோர் இயற்கைப்புலவர் எனப்படுவர். "சங்க விலக்கியத்தில் தனியியற்கை பற்றி ஒரு பாடல்கூட இல்லை' தனியாக இயற்கையைப் புனைந்ததில்லை" என்ற நுண்மாண் கருத்தினை முதற்கண் கண்டு எழுதியவர் டாக்டர் வரதராசனார். சங்க இலக்கியமும் இயற்கையும் என்னும் ஆராய்ச்சி நூலில் இதன் விளக்கத்தைக் காண்க.

மக்களின் செயலுக்கும் ஒழுகலாற்றிற்கும் பயன் செய்யும் துணைவனாகத்தான் இயற்கை விளங்கிற்று. சங்கத்தார் இயற்கையை யெல்லாம் பாட்டுத்தொடுக்க முனைந்தாரிலர். நாடெங்கணும் காடெங்கணும் மண்டிக்கிடக்கும் இயற்கைப் பரப்பில், மீக்கள் வாழ்வொடு கலந்த சில இயற்கைப் பகுதிகளே புலவர்தம் அறிவைக் கவர்ந்தன. பாடும் தகுதிப்பாடு பெற்றன. அல்லாதவை அழகுடையவேனும், மக்கட்கு ஊழியப் படாமையின், சங்கப் பாட்டில் ஏறவில்லை. பண்டைத் தமிழ் மக்கள் பயன்கொண்ட இயற்கைப் பொருள்கள் எவை? பயன் கொண்ட முறைகள் என்ன? புலவர்களால் பாடுபெற்ற இயற்கைப் புனைவுகள் யா? இவற்றை ஈண்டு விரித்துரைக்க வேண்டா. ஒன்றுமட்டும் அழுத்தமாக அறைய விரும்புவன். தொல்காப்பியர் அகத்திணை புறத்திணை என்ற இரண்டின் இலக்கணங்களையும் வகுத்துரைத்தவர். வீரம், கொடை, புகழ் என்பனவெல்லாம் புறத்திணைப் பொருளன. இத்திணைக்கு முதற்பொருள் கருப்பொருள் அவர் கூறவில்லை. புறப் பாடல்களிலும் முதலும் கருவும் ஆகிய அமைப்பு முறை காணவில்லை.

முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை (தொல். 948)

இதனால் அகத்திணை உரிப்பொருளுக்கே - புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் ஆகிய காதற் பொருளுக்கே முதலும் கருவும் வகுக்கப்பட்டன, பயன்பட்டன, பாடப் பட்டன என்பது தெளிவு.

புறப்பொருள்மேல் இயற்கை செல்லாமை

சங்கத்தமிழ் இலக்கியத்தில் மக்களின் காதற்செய்கைக்கு இயற்கைப் புனைவு உண்டு; ஏனைச்செய்கைகளுக்கு அப்புனைவு இலக்கண நெறியால் இல்லை என்பதனால் அறியப்படுவது யாது? தமிழினம் காமம் என்னும் பாலுணர்ச்சி மிகப்பெற்றது. தமிழ் நெஞ்சம் பாலெண்ணம் மிக்கோடும் நெஞ்சம். தமிழர் பாலுணர்வோடு இயற்கையை நாடுபவர். இயற்கையிலிருந்து அவ்வுணர்வையே பெருக்கிக் கொண்டவர். அன்னவர்க்குப் பிறவுணர்வுகளை இயற்கை அத்துணை ஊட்டியதில்லை.

வயப்புலியும் வெண்கோட்டு யானையும் பொருத மறக்காட்சியை ஒரு தமிழன் கண்டான்; அச்சம் தொலைந்து வீரம் பெற்றான் என்று பாடியிருக்கலாம். ஒரு வெள்ளாட்டைக் குள்ளநரி கழுத்திற் பாய்ந்து கவ்விற்று; ஆட்டின் ஈனக் குரலைக் கேட்டான் வழிஞன்; வாழ்வில் இரக்கவுணர்ச்சி கொண்டான் என்று எடுத்துக் காட்டியிருக்கலாம். ஈசல்களின் உதிர்ந்த இறகுக் குவியலைக் கண்ணுற்றான்; அது யாக்கை முதலான நிலையாமைகளை ஒரு மெய்யனுக்கு உணர்த்திற்று எனப் புலப்படுத்தியிருக்கலாம். பறந்து சென்ற காக்கை கொட்டிக் கிடக்கும் சோற்றுத்திரளைக் கண்டது; கரைந்து இனத்தையெல்லாம் கூட்டித் தின்றது. இக்காட்சி சுற்றந்தழுவுதல் என்ற சமுதாயவுணர்வை ஓர் தமிழனுக்குக் கற்பித்தது எனச் சுட்டியிருக்கலாம். ஓடும் புனல் ஊக்கத்தையும், வானோங்கிய மலை உயர்ந்த உள்ளத்தையும், கிலந்திக்கூடு வினைத்திட்பத்தையும், எறும்பின் வரிசை ஒழுங்கினையும், பால்கறக்கும் பசு தனக்கென வாழாமையையும், குஞ்சு காக்கும் கோழி குடும்பக் காப்பினையும், தாவும் குரங்கு மலையாமையையும், ஆடும்பாம்பு இன்னா இனிமையையும், மரஞ்சேர் கொடி பற்றுக்கோடாதலையும், நாய்ப்பூசல் இனம் அடித்துக் கொள்ளாமையையும் காண்பார்க்குக் கற்பித்தன என்றோ. இவற்றைக் காண்பவர் தம் நெஞ்சத்து எண்ணினர் என்றோ, பழந்தமிழ்ப் புலவர்கள் புறத்திணைப் பகுதிகளில் பாடியிருக்கலாமே; இன்ன வாழ்வெண்ணங்கள் இயற்கையினால் தமிழர்க்கு முகிழ்த்ததில்லை.

ஏழுதிணைகளும் எண்ணிறந்த துறைகளும் கொண்டபுற விலக்கியத்தில் திணை துறைக்கேற்ற இயற்கையைப் பாடாமைக்கு பாடவேண்டாமைக்குக் - காரணம் இதுவென அறிக. புறத்திணைச் செய்யுட்களில் பொருட்கு உரிய இயற்கைப் புனைவு இல்லை. இருப்பனவெல்லாம் இயற்கை யுவமைகள்; மக்கள் உணவாகவும் உடையாகவும் பிறவாகவும் வாழ்க்கையிற் பயன்கொண்ட இயற்கைப் பொருள்கள். எனவே தமிழ்ச் சமுதாய வழக்கவொழுக்கங்களைக் காட்டுதற்கும், உவமைகள் கூறுதற்குமே புறத்திணைப் புலவர்கள் இயற்கையைக் கையாண்டனர் என்று அறியலாம்.

XVIII

இயற்கையின் காதலாட்சி

இயற்கை காதல்மாந்தர்களின் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் மிகவும் தாக்கி உறுத்திற்று என்பதனைப் பொதுவாக அகத்திணைப் பாடல்களிலும், சிறப்பாக ஐந்திணைப் பாடல்களிலும் காண்கின்றோம். ஒவ்வொரு அகத்துறையும் காதல் நினைவும் - இயற்கையோடு உறவுடையது. பண்டைத் தமிழினத்தின் காதலுள்ளத்தோடு கலந்த ஓர் அகவுறுப்பாகவே புறவியற்கை விளங்கிற்று.

நின்னே போலும் மஞ்ஞை ஆலநின்
நன்னுதல் நாறும் முல்லை மலர
நின்னே போல மாமருண்டு நோக்கு
நின்னே யுள்ளி வந்தனென்
நன்னுதல் அரிவை காரினும் விரைந்தே (ஐங். 492)

வினைவயிற் சென்ற தலைமகன் தான் மிகவிரைந்து வந்ததற் குரிய காரணத்தைக் காதலிக்கு அறிவிக்கின்றான். "மயில் அசைவில் நின்சாயலை அறிந்தேன்; முல்லைமலரில் நின்கூந்தல் மணத்தை நுகர்ந்தேன்; மான்பார்வையில் நின்மருட்சியைக் கண்டேன். மயிலும் முல்லையும் மானும் எனக்கு அவையாகத் தோன்றவில்லை, நீயாகத் தோன்றின. நின்னையே எனக்குக் காட்டின. வழியிடை இயற்கையெல்லாம் நின்னுணர்வை எனக்கு மிகுத்தமையின், வேறொன்றையும் நினையாது நின்னையே நினைத்து ஓடிவந்தேன்" என்கின்றான் காதலன். மயிலின் சாயல்போலும் நின்சாயலையும், முல்லை போலும் நின் கூந்தல் மணத்தையும், மான் மருட்சிபோலும் நின் கண்நோக்கத்தையும் கண்டேன் என்ற நடையில் தலைவன் கூறினானல்லன்; அவைகளை உவமப்படுத்தாது, 'நின்னே போலும் மஞ்ஞை' என அவற்றுக்கு அவளை உவமப்படுத்துகின்றான். இதனால் தலைவன் தன் உள்ளத்தை இயற்கைபால் ஏற்றிக் காண்கின்றான் என்பது பெறப்படவில்லையா?

நலமாண் எயிற்றி போலப் பலமிகு
நன்னல நயவர வுடையை
என்னோற் றனையோ? மாவின் தளிரே (ஐங். 365)

திருமணச் செலவிற்காகப் பொருளீட்டச் சென்ற காதலன் வரும் வழியில் தளிர்த்து நிற்கும் ஒரு மாமரத்தை காண்கின்றான். மாநிறம் என்ற சொல்வழக்கு தமிழில் உண்டு. இது தமிழினத்தின் மேனிநிறத்தைப் பொதுவாகக் குறிக்கும். மாநிறம் என்று சொல்லும் போது மாந்தளிரின் நிறத்தையே கருதிச் சொல்லுகின்றோம்.

மாயோன், மாயோள் என்ற சொற்களுக்கு இந்நிற்மே பொருளாகும். இளவேனிற் காலத்துத் தோன்றி நிற்கும் மாமரத்தின் தளிர்ச் செறிவையும் கருஞ்சிவப்பன்ன அதன் நிறப் பொலிவையும் பார்த்த காதலனுக்குத் தன் காதலியின் மேனிநிறம் நினைவிடை பாய்கின்றது. தன்னவள் ஒருத்திக்குத்தான் இத் தனிநிறம் இயய்பாக உண்டென்று மயங்கியிருந்தான். இப்போது அந்நிறம் உடைய தளிரைக் காணும்போது, "இந்நிறம் இதற்கு இயற்கையன்று; என் காதலியின் மேனி வண்ணத்தைப் பெறவேண்டுமென்று தவங்கிடந்து பெற்றது போலும்" என்று காரணங் கூறுகின்றான் தலைவன். மாவின் தளிர்போன்ற மேனியாள் என் மாவினை உவமப்படுத்தாது, எயிற்றிபோலும் தளிர் எனத் தன் அகப்பொருளாகிய தலைவியைப் புறப்பொருளிற் காணுகின்றான். காணுகின்ற மாவின் தளிரில், சென்று காணத் துடிக்கும் மங்கையைக் காண்கின்றான்.

என்றூழ் நீடிய வேய்பிறங் கமுவத்துக்
குன்றூர் மதியம் நோக்கி நின்றுநினைந்து
உள்ளினே னல்லனோ யானே முள்ளெயிற்றுத்
திலகம் தைஇய தேங்கமழ் திருநுதல்
எமதும் உண்டோர் மதிநாள் திங்கள்
கல்பிறங்கு மாமலை யும்பரஃ தெனவே (நற். 62)

பொருள் வயிற் சென்று திரும்பி வந்த கணவன் இல்லத் திருந்து பழைய ஓர் எண்ணத்தை நினைந்து பார்க்கின்றான். "யானை பெருமூச்சு விட்டாற்போலக் காற்றடிக்கும் மூங்கிற் காட்டுவழியே முன்னொருமுறை சென்றேன். செல்லுங்கால் குன்றின் மேல் திங்கள் தோன்றி வரக்கண்டேன். உடனே எனக்கு என்ன நினைவு தோன்றிற்று தெரியுமா? எனக்கும் ஒரு சொந்தத் திங்கள் உண்டு. அஃது எனது நாட்டின் மலை மேல் இருக்கின்றது. இதுபோல் வெறுந் திங்கள் இல்லை; திலகம் இட்ட நெற்றித் திங்கள் அது. ஏ! குன்றே! உலகத்து ஒரு திங்கள்தான் உண்டு; அது உன் மேலிடத்துள்ளது என்று செம்மாக்காதே. திலகம் பொலியும் உயர்திணைத் திங்களும் ஒன்று உண்டுகாண். அது எனக்கே சொந்தம் என எண்ணி இறுமாந்தேன், இன்புற்றேன்" எனவாங்கு தலைவன் பழைய இயற்கைக் காட்சியையும், அக்காட்சி தந்த காதற் கவர்ச்சியையும் நினைந்து நினைந்து மகிழ்கின்றான்.

காதல் நினைப்புக்கள்

தலைவனது பிரிவுக்காலை தோழி தலைவியை ஆற்றுவாள்; சிலபோது தலைவியும் தானே ஆறியிருப்பாள். பிரிந்த பேரன்பன் அயல்நாட்டில் நெடுநாள் தங்கிவிட்டான்; தங்கினாலோ, ஆண்டு அவன் கண்முன்படும் இன்பக் காட்சிகள் வீட்டை நினையும்படி

அவனைத் தூண்டும். தூண்டும் என்பது தலைவி தோழியரின் நம்பிக்கை. இந்நம்பிக்கை இயற்கையானது, காதலை நினைப்பிக்கும் என்ற கருத்து, மரபாகத் தமிழினம் முழுதும் ஓடிவருதலின், தொல்காப்பியர்,

அன்புறு தகுந இறைச்சியுட் சுட்டலும்
வன்புறை யாகும் வருந்திய பொழுதே (தொல். 1176)

என்று ஒரு நூற்பா வடிவில் யாத்துக் காட்டினார்; இயற்கையுள் புலனின்பம் காணும் இனவுள்ளத்தை இலக்கணப்படுத்தினார். தோழி ஆற்றுவித்தல், தலைவி ஆற்றுவல் என்பது படக் கூறல் என்னும் துறைகள்மேல் எழுந்த நூற்றுக்கு மேலாய பாடல்களில் நாம் காண்பது என்ன? ஆண்யானை தன்மனைவியாகிய பிடியின் நாவறட்சியைக் காண்கிறது. யாமரத்தைத் தன் கொம்பாற் குத்திப் பட்டையை எடுக்கின்றது. அதுவோ நீர்ப்பசையற்ற பட்டை என் செய்ய வல்லது களிறு? பிடியின் வருத்தத்தைத் தீர்க்கமுடிய வில்லையே என்று தானும் வருந்துகின்றது. பாலைநிலத்தில் இந்த ஆண் யானையின் அன்பைக் காணும் நம் காதலர் என் வருத்தத்தைத் தீர்க்கவேண்டும் என்று எண்ணமாட்டாரா?

மறந்தனர் கொல்லோ தாமே; களிறுதன்
உயங்குநடை மடப்பிடி வருத்தம் நோனாது
நிலையுயர் யாஅம் தொலையக் குத்தி,
வெண்ணார் கொண்டு கைசுவைத் தண்ணாந்து
அழுங்கல் நெஞ்சமொடு முழங்கும்
அத்த நீளிடை அழப்பிரிந் தோரே (குறுந். 307)

என்பது ஒரு தலைவியின் வினா. கார்காலத்தில் நின்னைப் பிரிவது எப்படி? பிரிந்து குளிர்ந்த காட்டுவழிச் செல்வது எப்படி? காண்போர் கண்ணைக்கவரும் இன்பக் காட்சியைக் கண்டும் அப்பாற் செல்வது எப்படி? கலைமான் தன் இளையமான் மனைவியோடு கூடிப் புணர்ந்து வேலமரத்தின் தாழ் நிழலிலே கிடப்பதைக் கண்டால், காண்பவனுக்குத் தன் மனைவி நினைவுதானே தோன்றும்? வீடு திரும்பும் எண்ணந்தானே விதுவிதுக்கும்? புறப்பட்டுப்போய் வழியிடை மான் குடும்பத்தைப் பார்த்து அறிவறிந்து திரும்புவதைக் காட்டிலும், போகாதே நின்னொடு உடனிருந்து விடுதல் நல்லது:

கார்பெயல் செய்த காமர் காலை,
மடப்பிணை தழீஇய மாவெருத் திரலை
காழ்கொள் வேலத் தாழ்சினை பயந்த
கண்வர் வரிநிழல் வதியும்
தண்படு கானமும் தவிர்ந்தனம் செலவே (நற். 256)

என்பது ஒரு தலைவனின் முடிபு. காதலன் பிரிவதை முன்னுணர்ந்த தலைவி என்னையும் உடன் கூட்டிக்கொண்டு செல்லுக என்றாள். செல்லும் வழியில், கிளிக்காதலியே, காடு உண்டு, தண்மையில்லை; ஆறு உண்டு, நீரில்லை; மரம் உண்டு நிழலில்லை. அன்ன வெங்கானத் திடையே நீ வரலாமா? என்று நயமாக மறுத்தான் தலைவன்.

அனையரும் வெம்மைய காடெனக் கூறுவீர்
கணைகழி கல்லாத கல்பிறங் காரிடைப்
பணையெருத் தெழிலேற்றின் பின்னர்ப்
பிணையுங் காணிரோ? பிரியுமோ அவையே (கலி. 20)

நல்லது, அக் கடுங்காட்டின் கண், ஐய, ஒருகாளை நிற்கவும் அதனைப் பிரியாதே ஒரு பசு நிற்கவும் கண்டதில்லையா? காடு வெம்மை என்தற்காக அவை பிரிந்து நிற்கின்றனவா? என இணைபிரியா நிலையை நினைவூட்டுகின்றாள்; இயற்கையிலிருந்து காதற் காட்சியை எடுத்து மொழிகின்றாள் தலைவி.

கணவன் வருவேன் என்று குறித்த பருவத்து வந்தானல்லன். அவன் தாழ்த்து வருவதற்காகப் பருவம் தாழ்த்து வருமா? பருவ வரவுகண்டு மனமகிழ்ந்தாள் மனைவி. இதோ விடியற்காலை வருவார். இல்லை, இல்லை; அதோ பகற் காலத்து வந்துவிடுவார். இல்லை, இல்லை; கட்டாயம் இரவில் வந்தே தீருவார்; என இவ்வாறு அவள் பேதையுள்ளம் ஏங்கியேங்கி அமைதியடைந்தது "யாண்டு உளர் கொல்லோ. தோழி, ஈண்டு இவர் சொல்லிய பருவமோ இதுவே" என்று தோழியிடம் புலம்பினாள்.

கார்ப்பருவத்தில் காதற் முகிழ்க்கின்றது. எல்லாஉயிர்களும் பாலின்பம் துய்ப்பான் நெருங்கி இணைகின்றன, அணைகின்றன. காதல் என்பது ஓர் பருவகாலப்பயிர். காலையில் அரும்பும், பகற்காலத்துப் போதாகும், மாலையில் மலர்ந்து மணம் வீசும் என்றார் முப்பாற் புலவர். மக்கள் காதற் பயிரைப் பிறவுயிரினம்போல இயற்கையொடு பொருந்த வளர்க்கவேண்டும். இயற்கை துணையாகத் துய்த்தல் வேண்டும். மழைசெறிந்து வளம்பொழிந்து இரவுகுளிர்ந்த மாரிக்காலத்து எல்லா உயிர்களும் தத்தம் இணையை விழைந்து நிற்கும் நிலையில், உயர்திணை எனப் பெயரிய மனிதவினம் மட்டும் பொருள் காரணமாகவும் போர் காரணமாகவும் இணைவிழைவைத் துறந்து இயற்கைக்குப் புறமாகத் தனித்திருத்தல் பொருந்துமா? திருமணத்தால் உயிர்மெய்யாக ஒன்றினவர்கள் அங்ஙனம் வாழாது உயிரும் மெய்யுமாகப் பிரிந்திருத்தல் ஒல்லுமா? யாண்டு தனித்திருந்தாலும் பிரிந்திருந்தாலும் இளந்தலைமக்களை இயற்கையுயிர்ச்சோடிகள் வாளாவிடா. அஃறிணைப் பிணையல் களைக் காணும்போது, அவற்றின் புணரொலிகளைக் கேட்கும் போது, இளம் உள்ளங்கள் பாலுணர்வை எண்ணும், எண்ணும்.

புன்புறப் பெடையொடு பயிரி இன்புறவு
இமைக்கண் ஏதாகின்று (குறுந். 285)

அகத்து எழும் பால்வேட்கையைப் புறத்தே கணவனுக்குங் கூடக் காட்டாது ஒளித்துக் கொள்ளும் நிறையுடையது பெண் பிறவி என்பர். புறத்துப் புலனாகாது ஒடுக்கிக்கொண்டாலும், காதற் கலவைகளைக் கண்ணுறும்போது, இளைய உள்ளத்தைக் காமத்தீ கதுவவே செய்யும். இது நிறையுடைப் பெண்ணிற்கும் விலக்கன்று. தலைவியின் வீட்டில் புறாக்கள் வளர்கின்றன. மாரிப்பருவம் வந்ததும், ஆண்புறா இன்பக் குரல் எழுப்புகின்றது. இன்னொலி கேட்ட பெண்புறா விரைந்தோடி வந்து அருகணைகின்றது. குறித்த கூட்டின்பத்தைப் புறா அடையக் காண்கின்றாள் வீட்டுத் தலைவி. தனித்துத் திரிந்த இவை நொடிப்பொழுதில் என்னாயின, என்ன இன்பம் பெற்றுவிட்டன (இமைக்கண் ஏதாகின்று) என்று வியந்து விம்மி ஏங்குகின்றாள். புறாக்கூடல் அவளின் நிறை நெஞ்சைப் பொத்துவிட்டது. பொருளீட்டச் செல்லும் கணவன் போகும் வழியில் ஆண்புறாக்களின் அழைப்புக் குரல்களைக் கேட்பான்; அவை பெண்புறாக்களை விழைந்து பயிருகின்றன என்று உணர்வான். அப்போது என்னை நினைவான், வேற்றூரில் தங்கான், விரைந்து மீள்வான் என்று ஒருதலைவி சொல்லிக் கொள்கின்றாள் (குறுந். 79) புறாவின் புணர்குரல் கேட்பின், தமிழினத்தின் இருபாலர்களும் காதற் கலக்கம் கொள்வார்கள் என்று இப்பாடல்களால் அறியலாம்.

உள்ளார் கொல்லோ? தோழி கள்வர்தம்
பொன்புனை பகழி செப்பங் கொண்மார்
உகிர்நுதி புரட்டும் ஓசை போலச்
செங்காற் பல்லி தன்துணை பயிரும்
அங்காற் கள்ளியங் காடிறந் தோரே (குறுந். 16)

பிரிந்து பேதுறும் தலைவிக்கு ஆறுதல் மொழியும் தோழி பாட்டு இது. 'கள்ளிக்காட்டின் வழியே சென்ற நம் தலைவர் நின்னை நினைப்பார். வழிக்காட்சி நின்னை நினைப்பிக்கும். ஒரு சிறு ஆண்பல்லி தன் பல்லி மனைவியை ஆர்வத்தோடு அழைக்கும் இன்குரல் அவர் செவியில் வந்து விழும். விழுந்த பின், அவர் உள்ளத்தைக் காதல் அரிக்கும். அரிக்கவே காதற் பிடியாள் நின்னை எண்ணுவர். எண்ணி மீள்வர்.' எனத் தோழி அமைதி மொழி கின்றாள். பயிருதல் என்னும் தமிழ் வினைச்சொல் குரல்காட்டி அழைத்த என்ற பொருளுடைய தேனும், காதற்குறிப்பு உடைது. யார் யாரையும் அழைத்தற்கு இச்சொல் ஆளப்படுதல் இல்லை. அஃறிணை ஆணினம் தன் பெண்ணினத்தை அணைய அழைக்கு மிடத்துத்தான் சங்கப் புலவர்கள் இவ்வினைச் சொல்லைப் பெரிதும் கையாண்டுள்ளனர்,

தி. 12.

கட்சி காணாக் கடமான் நல்லேறு
மடமான் நாகுபிணை பயிரின் (புறம். 157)
முட்புற முதுகனி பெற்ற கடுவன்
துய்த்தலை மந்தியைக் கையிடூஉப் பயிரும் (புறம். 158)
புன்புறப் பெடையொடு பயிரி இன்புறவு
இமைக்கண் ஏதாகின்றோ (குறு.ந். 285)

களிறும் பிடியும், கலையும் மானும், காளையும் பசுவும், புறாவும் பெடையும், பல்லியும் துணையும் இணைந்து கலக்கும் இனிமையைக் கண்டுகேட்ட காதலர்கள் தம் உள்ளத்தைப் பறிகொடுத்தார்கள் எனவும், காமப் பாய்ச்சலுக்கு இடங் கொடுத்தார்கள் எனவும், காமப் பாய்ச்சலுக்கு இடங் கொடுத்தார்கள் எனவும் இதுகாறும் தெளிந்தோம். குயிலும் அன்றிலும் குருவியும் வண்டும் கரடியும் குரங்கும் தத்தம் இனப்பிணையோடு அளவளாவியிருக்கும் காட்சிக் கொள்ளைகள் தமிழ்த் தலைமக்களுக்குக் காதற் கொள்ளைகளை, உரித்த வாழைப்பழத்து ஊசிபோல, எளிதில் விளைத்தன. காதலுடைய இயற்கைக் காட்சிகள் எளிதிற் பற்றிக் கொள்ளுமாறு, தமிழினத்தின் நெஞ்சம் காதற்பதம் உடையதாக அமைந்து கிடந்தது. கவித்தொகையின் பதினோராம் பாடல் பலரறிந்த அகப்பாட்டாகும்.

"தலைவன் பொருளீட்டச் செல்லும் கடும்பாலை வழியில் நீரில்லை. குட்டையில் உள்ள சிறுநீரும் யானைக்குட்டியால் கலங்கலாயிற்று, அந்நிலையிலும் பெண் யானையை முன் குடிக்கச் செய்து எஞ்சியதைப் பின்குடிக்கும் அன்புடையது ஆண்யானை. இக்காட்சியைக் கணவன் காண்பான்.

"இலைவறண்ட அக்காட்டில் காற்றில்லை. அன்புப்பேடை வியர்வையால் துன்புறக் காண்கின்றது ஆண்புறவு: தன் சிறகையே விசிறியாகக்கொண்டு வீசிக் காற்றைப் பிறப்பித்துப் பெண்புறாவிற்கு ஆறுதல் செய்கின்றது. இதனையும் காண்பான் காதலன்.

"மலைகொதிக்கக் கதிரவன் புகழ்விளங்கும் அக் கானகத்தில் நிழ லில்லை. அதனால் பிணைமான் நிலம்பாவாது வருந்துகின்றது. அறிவுடைய கலைமான் ஓரிடத்து நின்று கொண்டு வெப்பத்தைத் தான் ஏற்றுத் தன் மெய்நிழலை ஒதுங்கும் நிழலாகப் பெண்மானுக்கு உதவுகின்றது. இதனையும் காணாதிரான் தலைமகன். வழியிடை ஒன்றல்ல. இரண்டல்ல, இவை போலும் அன்புச் செயல்களை அஃறிணைக் குடும்பத்திடைக் காணும் தலைவன் நின்னை வாடவிடான்" என்று தோழி தலைவியை ஆற்றுவிக்கின்றாள். யான் எடுத்துக் காட்டிய தமிழின மனப்பான்மையை இக் கலிப்பாவால் மேலும் தெளியலாம். கார் கூதிர் இளவேனிற் பருவங்களும் மாலை யாமப் பொழுதுகளும் தென்றல் வாடைக் காற்றுக்களும் இளநிலவும் வெண்ணிலவும் பசுவின் மணியொலியும் அன்றிலின்

அகவலும் குயிலின் கூவலும் புறாவின் பயிரும் வண்டின் முரலும் பல்லியின் சொல்லும் குழலின் இசையும் முல்லையின் மணமும் எல்லாம் காதற் கிளர்ச்சியையே இளம் பாலார்க்கு எழுப்பின; இள நெஞ்சங்களும் அக்கிளர்ச்சிக்குத்தான் பண்பட்டுக் கிடந்தன.

அழுந்துபடு விழுப்புண் வழும்புவாய் புலரா
எவ்வ நெஞ்சத் தெஃகெறிந் தாங்குப்
பிரிவில புலம்பி நுவலும் குயிலினும்,
தேறுநீர் கெழீஇய யாறுநனி கொடிதே.
அதனினும் கொடியாள் தானே; மதனின்
துய்த்தலை இதழ பைங்குருக் கத்தியொடு
பித்திகை விரவுமலர் கொள்ளீ ரோவென,
வண்டுசூழ் வட்டியள் திரிதரும்
தண்டலை யுழவர் தனிமட மகளே (நற். 97)

த்னித்துறையில் ஓர் இல்லக்கிழத்தி கார்காலத்து நிகழ்ச்சிகளால் தாக்குண்ட காதற்பாடுகளைத் தொகுத்துக் கூறும் அரும்பாடல் இது. இணைபிரியாக் குயில் கூவுவதைக் கேட்கின்றாள். 'கார்ப்பருவத்து நாங்கள் கூடிக்கலந்து குலவி வாழ்கின்றோம். நீயோ தெரிந்து இரங்குகின்றாய்' என நகையாடி இடித்துரைப்பது போல், அக் கூவல் அவன் உள்ளத்தைத் தைக்கின்றது; அவனை என்று கூடப்பெறுவேன் என்னும் பால்வேட்கையைத் தூண்டுகின்றது. கார்ப்பருவத்தில் ஆற்று நீரோட்டத்தைக் காண்கின்றாள். இத் தலைவெள்ளத்தில் புனலாடிக் களிக்கும்வண்ணம் அவன் உடனுறைகிலனே; இவ்வெள்ளம் யான்காண ஏன் ஓடுகின்றது என்று வெறுக்கின்றாள். பசுங்குருக்கத்தி மலரும் சிறுசண்பக மலரும் விலைக்கு வேண்டுமா? கொள்வாருண்டா என ஒரு சிறுமி கூறிக்கொண்டு மாலைப்போதில் தன் தெருவழியே செல்லுகின்றாள். அவள் சொல் செவிக்கு ஏறுகின்றது, மலரின் மணம் மூக்கிற்கு ஏறுகின்றது. மலரைச் சூட்டி மணத்தை நுகர்வார் பக்கத்தில் இல்லையே; இல்லாத போது, இம்மடல்கள் என் செவிகேட்க ஏன் மலர் விற்பனை பகர்கின்றாள் என்று நோகின்றாள் தனித்த தலைவி. குயிலின் இசை தலைவியின் செவிக்கு இனிக்கவில்லை; ஆற்றொழுக்கு அவள் கண்ணுக்கு இனிக்கவில்லை. மலரின் மணம் அவள் மூக்கிற்கு இனிக்கவில்லை. இனிக்கவேண்டும் இவை ஒருவனுடன் இல்லாமையால் இனிக்கவில்லை. இயற்கைப் பொலிவுகள் அவட்கு இன்பப் பொலிவை அளிக்காவிட்டாலும், இன்பக் கிளர்ச்சியைத் தூண்டிவிட்டன, புணரும் ஏக்கத்தைப் பன்மடங்காக்கின. ஓர் இளந்தமிழ் மக்கள் தன் காதலெண்ணத்திற்கு ஏற்பவே இயற்கைச் சூழ்நிலைகளைப் பார்க்கின்றாள். கருத்து வாங்கிக்கொள்கின்றாள். சூழ்நிலைகளின் தன்மைக்கு வயப்படாமல்,

தன் காதற்றன்மைக்கு இணங்கவே அவைகளைக் கருவியாக வணங்குகின்றாள். இதுவே தமிழ் நெஞ்சம்; இதுவே இயற்கையிலிருந்து பண்டைத் தமிழினம் வளர்த்துக் கொண்ட வாழ்வெண்ணம்.

XIX

காதற் பார்வை

உளவியல் அடிப்படை என்ற இம்மூன்றாவது தலைப்பில் நாம் கண்ட முடிபு என்ன? தமிழினம் காதல் நோக்கிற்றான் இயற்கைக் கூறுகளை அணுகிற்று. விலங்குகளின் பறவைகளின் காதற் செய்கைகளிடையே தமிழ்மக்கள் தம் காதல் நினைவுகளைக் காண முயன்றனர். இயற்கைக் காட்சிகள் பல திறத்தன. அஃறிணை யுயிர்களின் செயல்களும் மிகப்பல. எனினும் அவற்றுள் குடும்பத் தொடர்பான கருத்துக்களே தமிழினத்தின் நெஞ்சத்தைக் கவர்ந்தன, கவரவல்ல வாயின.

முறியார் பெருங்கிளை யறிதல் அஞ்சிக்
கறிவளர் அடுக்கத்திற் களவினிற் புணர்ந்த
செம்முக மந்தி செல்குறி கருங்காற்
பொன்னினர் வேங்கைப் பூஞ்சினைச் செலீஇயர்
குண்டுநீர் நெடுஞ்சுனை நோக்கிக் கவிழ்ந்துதன்
புன்தலைப் பாறுமயிர் திருத்தும் *(நற். 151)*

மிளகுக்கொடி வளரும் மலைச்சாரலில் பெண்குரங்கு ஓர் ஆண் குரங்கோடு களவொழுக்கம் நிகழ்த்தியது எனவும், அடையாளங் களால் தன் மறைவொழுக்கத்தை மந்திச் சுற்றத்தார் அறியக்கூடாதே என்று மறைக்க நினைத்தது எனவும், வேங்கை மரத்தின் கிளைமேலேறிக் கீழே கிடக்கும் தெளிந்த சுனைநீரைக் கண்ணாடி யாகக் கொண்டு, புணர்ச்சியால் குலைந்த தன் தலைமயிரைச் சரிசெய்தது எனவும் கண்டு புலவர் இளநாகனார் பாடுகின்றார்; மக்கட் செயலுக்கு முழுதும் ஒத்த மந்தியின் காதற்செயலை அறிவுறுத்துகின்றார்; காதல் நிலையில் மறைக்கும்மனிதப் பண்பும் மந்தியின் பண்பும் ஒன்றெனக் காட்டுகின்றார்.

கடுந்தோட்கர வீரன் என்னும் சங்கப் புலவரும் உயர் திணைபோல் அஃறிணையிலும் உயர்ந்த கற்பியல் நிகழ்வதைப் பாடுவர். ஆண் குரங்கு வழக்கம்போல் மரந்தாவிச் செல்லும் சமயம் பிடி தவறி வீழ்ந்திறந்தது. அன்புடைய மந்தி கைம்பெண்ணாய் வாழ விரும்பவில்லை. குட்டிகளை மரக் கிளையில் விட்டுவிட்டு மலையேறி உயிர் விட்டது.

கருங்கண் தாக்கலை பெரும்பிறி துற்றெனக்
கைம்மை யுய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி
ஓங்குவரை யடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்கும் (குறுந். 69)

எனத் தலையாய கற்பினை மந்திக் குரங்கினிடம் கண்டு போற்றுவர். ஒரு மந்தியின் களவொழுக்கத்தையும் ஒருமந்தியின் கற்பொழுக்கத் தையும் சங்கச் சான்றோர்கள் நமக்குப் புலப்படுத்தியுள்ளனர். இவ்வொழுக்க நாகரிகம் மந்திகளுக்கு எங்ஙனம் ஏற்பட்டது? மக்கள் நாகரிகத்தைச் சான்றோர்கள் மந்திமேல் ஏற்றிக் கூறிவிட்டனர் என்று எண்ணலாமா? இஃதோர் இலக்கியநெறி என்று சொல்ல முற்படலாமா? நான் அங்ஙனம் கருதுகிலேன். பிறர் செய்வனவற்றை உற்றுப் பார்த்து அப்படியே செய்யவல்ல ஆற்றலும் அறிவும் குழந்தைபோல் குரங்கினத்துக்கு உண்டு. உப்பு வாணிகச் சிறுவர்கள் கிலுகிலுப்பை ஆட்டுவதைப் பார்த்துக் குரங்கும் கிளிஞ்சலுக்குள் முத்தையிட்டு ஆட்டும் என நல்லூர் நத்தத்தனார் சிறுபாணாற்றுப் படையில் குறித்திருப்பதைக் காண்க. ஒரு மானிட மகள் பகற்குறிக்கண் களவொழுக்கத்திற் காதலனைக் கூடிக்குலைந்த கூந்தலைத் தெளிந்த நீரில் திருத்தியிருக்கக் கூடும். இதனைப் பார்த்துக் கொண்டிருந்த 'மந்தி தானும் அங்ஙனம் செய்தது போலும். கணவன் எதிர்பாராது இறந்தபோது, கற்புடை நங்கை மலைமேல் ஏறிப்போய் மண்மேல் விழுந்து மாய்தலுண்டு.

தொழுநாள் இதுவெனத் தோன்ற வாழ்த்தி
மலைத்தலை யேறியோர் மால்விசும் பேணியில்
கொலைத்தலை மகனைக் கூடுபு நின்றோள் (சிலப். 23)

என இளங்கோ இவ்வகை மாய்வைச் சுட்டுவர். அங்ஙனம் ஒரு மானிடன் மலையேறி உயிர்விட்ட நிகழ்ச்சியைக் குறிஞ்சிக்குரங்கு கண்டு உளங்கொண்டு, தன் கடுவன் இறந்தபோது வரை பாய்ந்தது போலும். கருத்து முடிபு யாதாயினும்,இரு திணையிடத்தும் ஒத்த காதற் கூறுகளைப் புலவர்கள் கண்டனர் எனவும், தமிழினப் புலவர்கள் இங்ஙனம் காணும் நோக்கில் வளர்ந்திருந்தனர் எனவும் அறியலாம்.

உள்ளுறையுவமங்கள்

உள்ளுறையுவமம் என்பது தமிழ் இலக்கியத்திற்கே உரிய தனிநெறி. இவ்வுவமம் மிகவரம்பான இலக்கணம் உடையது; அகப்பொருளாம் ஐந்திணைக் கண்ணேதான் ஆளுதற்குரியது. கருப்பொருள் என்னும் இயற்கைச் சூழலிலிருந்து புனையப்படுவது. வெளிப்பார்வைக்குச் செடிகொடி மரம் பறவை விலங்குகளின் செயல்களைப் புனைவது போற் காணப்படும். இவற்றை நேரடியாகச்

செவ்வன் புனைவு செய்வது அகப் புலவர்களின் நோக்கமன்று. உள்ளொன்று வைத்து அதற்கிணையான புறமொன்று கூறுவர். கூறினும் அகத்தொடர்பான உட்கருத்து மெய்யுள் உயிர்போல விளங்கிக் கிடக்கும்.

யாரினும் இனியன்; பேரன் பினனே
உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்
சூன்முதிர் பேடைக் கீனில் இழைஇயர்
தேம்பொதிக் கொண்ட தீங்கழைக் கரும்பின்
நாறா வெண்பூக் கொழுதும்
யாணர் ஊரன் பாணன் வாயே (குறுந். 85)

பரத்தையொழுக்கம் உடைய கணவனுக்குச் சார்பாக வாயில் வேண்டிப் பாணன் வந்தான்; வந்தவனை மறுத்துத் தோழி கூறும்பாட்டு இது. தலைவனது போன்பினை நகையாடுவள்; உன் வாயளவில் இனியன் என்று எள்ளுவள். 'தலைவனது உள்ளூரில் ஒரு குருவிக் குடும்பம் உண்டு. பெண் குருவி கரு முதிர்ந்து ஈனும் நிலையில் உள்ளது. ஈனுதற்கு மெத்தென்ற சேக்கை வேண்டும். துள்ளுநடை ஆண்குருவி சேக்கைக்கு வேண்டும் பொருள்களைத் தேடிப் புறப்பட்டது. இனிய கரும்பினது வெண்பூக்களைக் கோதி வந்தது. இத்தகைய இயற்கை நலம் மிக்கது. தலைவனது ஊர்' என்று தோழி ஓர் இயற்கையை, ஊரின் அடையாகத் தொடுத்து மொழிகின்றாள். ஊரில் பலவகை இயற்கைகள் உண்டாதலின், புனைவு பலவாறு செய்யலாம். தோழி இனி இயற்கை காட்டப் புனைந்தாளா? உள்ளக்குறிப்பைக் காட்ட அதற்கேற்றபடி ஓர் இயற்கையைப் புனைந்து கொண்டளா? அகப்பாடல்களில் இயற்கைப் புனைவிற்கு உள்ளுறைப் பொருள் வேண்டும். உள்ளுறை தரும் அகப்பாடல்களே மிகப் பல. அங்ஙனம் தாராத இயற்கைப் பாடல்கள் அகத்துறைக்கண் சிறப்பில, வழுவமைதிப் படுவன. குருவிப்பெண் கருவுற்றபோது குருவிக்கணவன் பரத்தை நாடி அலையவில்லை, அகலவில்லை. கருவுயிர்ப்பிற்கு வேண்டும் பேற்றிடத்தைச் சமைக்கின்றது. அதற்குரிய பொருளைத் தேடுதற்காகவே வெளிச்சென்று மீள்கின்றது. அஃறிணைக் குடும்பத்தில் காணப்படும் ஆணின் கடமையுணர்வு இத்தகைத்து. இத்தகைய நல் அஃறிணைகள் தலைவனது ஊரில் உள்ளன. இதனைக் கண்டும் தலைவன் கடமையுணர்ச்சி பெற்றானல்லன். மனைவிக்குக் கருவூட்டினான்; கருவுற்றபின் உற்றாளுக்கு உறுதுணையாகாமல் அகத்தை அறவே நீத்துப் போய்க் கருவிலிகளின் இன்பத்தை நாடி அலைகின்றான். இவன் காதல் அன்பற்றது. அறிவற்றது, பணியற்றது எனத் தோழி இடித்துரைக்கின்றாள்; இல்லறப் பண்பின்மையைக் குறிப்பிற் புலப்படுத்துகின்றாள்; குருவிச்சுட்டு தலைவனது உள்ளத்தைக் [illegible]த்துமன்றோ?

XX

இயற்கையைப் படைத்தல்

குறிப்பினைப் புலப்படுத்துதற்கு வழிகள் பலவுள; அவ்வழி களால் புலப்படும் குறிப்புக்களும் பலவுள. காதல் மாந்தர்கள் தம் குறிப்பினை அமைப்பதற்கு நம் முன்னோர் கண்டெத்த இனிய நேரிய நாகரிக வழியே உள்ளுறையுவமமாம். இவ்வுவமத்தால் காதலுள்ளுறையன்றிப் பிறிது பெறப்படாது. பிறகுறிப்புப் பெறப்படுமேல், அஃது உள்ளுறையுவமம் என்ற பெயரைப் பெறாது. இவ்வுலகம் முன்சொல்லியாங்கு இயற்கைப் பொருள்களிலிருந்து அமைய வேண்டும், அமைக்கவேண்டும். புலவன் பொதிய வைக்கும் உட்குறிப்பைப் புனைவதற்கேற்ப இயற்கை ஒழுங்குபெற அமைந்து கிடக்குங்கொல்? தமிழினத்தின் அகத்திணைக்கு ஒத்துவரவேண்டு மென்று "கருதியா இறைவன் இயற்கையைப் படைத்தான்? இயற்கைகள் தம் இயல்பில் ஒழுகுகின்றனர். காதலோர்கள் தம் இயல்பில் ஒழுகுகின்றனர். ஈரிடத்து இயல்புகளிலும் ஒத்த கூறுகள் சில பலவுள. அப்போது அகப்புலவன் இயற்கை நிகழ்ச்சியை இயல்பாகவே புனைவான்; எண்ணிய காதற்குறிப்பு அதனுள் புலப்படும். சிலபோது புலப்படுத்த எண்ணும் காதற் குறிப்புகளுக்கு அப்படியே இயற்கை கிடைப்பதில்லை. அதனால் தன் புலமைக்கருவி கொண்டு இயற்கையைத் தொகுத்தும் வகுத்தும் செகுத்தும் இயைத்தும் வேண்டுமளவு செப்பம் செய்து கொள்வான்' வணங்கா இயற்கையை ஒடித்து வணக்கிக் கொள்வான்.

சேற்றுநிலை முனைஇய செங்கட் காரான்
ஊர்மடி கங்குலின் நோன்தளை பரிந்து
கூர்முள் வேலி கோட்டின் நீக்கி
நீர்முதிர் பழனத்து மீனுடன் இரிய
அந்தூம்பு வள்ளை மயக்கித் தாமரை
வண்டுது பனிமலர் ஆரும் ஊர (அகம். 46)

ஓர் எருமை தனக்கெனக் கட்டிய தொட்டிலை வெறுத்தது. வீட்டார் தூங்கும் நள்ளிரவில் தன் கயிற்றை அறுத்துக் கொண்டது. வீட்டு முள்வேலியைத் தன் கொம்பினால் எடுத்தெறிந்தது; பின்னர் நேரே நீர்மிக்க வயலுக்குள் மீன்கள் ஓடவும், வள்ளிக்கொடிகள் சிதையவும் வேகமாகச் சென்று, வண்டுகள் ஒலிக்கும் தாமரை மலரைத் தின்றது. அள்ளூர் நன் முல்லையார் ஓர் எருமையின் செயல்களை இங்ஙனம் நிரல்பட அமைத்துக்கொள்ளுவர்; உள்நோக்கம் ஒன்றுவைத்து அதற்கேற்ப அஃறிணையின் போக்கை வழிப்படுத்துவர், எருமைக் கடா, தடையெல்லாம் கடந்து தாமரையைத் தின்னவைப்பர். இதன்

உள்ளுறை என்ன? தலைவன் தனக்கென வரைந்த மனைவியையும் மனையையும் உவர்த்தான். இல்லத்தார் எல்லாரும் தூங்கும் நடுயாமத்தில் நாணமின்றிப் பரத்தையை விழைந்தான். கிளையேறிக் குதித்து வீட்டு வேலியைக்கடந்தான். நேரே பரத்தையர் சேரிக்குச் சென்றான். அங்குப் பரத்தையின் தோழியரும் தாயும் இருந்தனர். பொருளால் அவர்களை மயக்கிப் புறம்போகச் செய்தான். பாணர்கள் இசை வாசிக்க, இளம் பரத்தையை நுகர்ந்தான். தலைவனது இச்செயல்கள் நிரலாக இயல்பாக நிகழ்ந்தவை. இவன் செயல்களின் ஒவ்வொரு கூறும் புலப்பட வேண்டுமென்று, எருமைக்கு அனைத்து இடங்களையும் செயல்களையும் ஏற்றி நிகழ்த்திக் காட்டினார் புலவர். மலர்விலைஞர் காலையில் வயலிலிருந்து நீலப்பூக்களைப் பறித்துக்கட்டி ஊருக்கு வந்தனர். அக்கட்டோடு ஒரு வண்டும் வந்தது. யானை மதத்தில் மொய்த்துக் கொண்டிருக்கும் ஊர் வண்டுகள் வயல் வண்டுக்கு விருந்தோம்பின. அதனால் அவ்வண்டு பகல் முழுதும் அங்கே தங்கிவிட்டது. இரவில் கணவனோடு கூடி இன்புறும் காதலியர்தம் நறுங் கூந்தலில் அமர்ந்தது. அக்கூந்தலில் செருகியிருக்கும் முல்லை மணத்தை நுகர்ந்தது. அன்று முதல் ஊரிலே தங்கித் தனக்குரிய பழைய வலை மறந்தொழிந்தது.

வீங்குநீர் அவிழ்நீலம் பகர்பவர் வயற்கொண்ட
ஞாங்கர் மலர்சூழ்தந் தூர்புகுந்த வரிவண்டு,
ஓங்குயர் எழில்யானைக் கனைகடாம் கமழ்நாற்றம்
ஆங்கவை விருந்தாற்றப் பகலல்கிக், கங்குலான்
வீங்கிறை வடுக்கொள வீழுநர்ப் புணர்ந்தவர்
தேங்கமழ் கதுப்பினும் அரும்பவிழ் நறுமுல்லை
பாய்ந்தூதிப் படர்தீர்ந்து, பண்டுதாம் மரீஇய
பூம்பொய்கை மறந்துள்ளாப் புனலணி நல்லூர்(கலி. 66)

தலைவன் தன் வீட்டை அறவே மறந்ததையும், காலை பகல் இரவெல்லாம் பரத்தையர் சேரிக்கண்ணே புணர்ந்தாடித் திரிவதையும், வெளியிட்ட சொற்களால் சொல்வது நாகரிகமன்று என்று கருதி, உள்ளுறைப் பொருளாகப் புனைந்துள்ளார் மருதன் இளநாகனார். தலைவனது செலவு வரவுகளை நினைந்து வண்டிற்கும் செலவு வரவுகளைப் படைத்து மொழிதல் காண்க. இஃது அகப்புலவன் தன் உரிமை. இதனால் இயற்கை பற்றிய தமிழ் நெஞ்சம் என்ன? இயற்கை மக்கள் வாழ்வுக்கு ஒரு கருவி; அது காதல் என்னும் அகப்பொருளை உணர்த்த வேண்டும். இயல்பாக உணர்த்தாவிடின், உணர்த்துமாறு அதனை வளைவிக்கவேண்டும்.

அகத்திணைக் கரு

சமுதாயவியல், நிலவியல், உளவியல் என்ற மூன்று அடிப்படைகொண்டு அகத்திணைத் தோற்றத்தை இதுகாறும் கண்டோம். அகத்திணையின் உரிப்பொருளான காதற்காமம் தமிழினத்தின் உள்ளத்தோடு ஒன்றிய உணர்ச்சியாகும்; அகப்பொருள் அவ்வுணர்ச்சி தந்த பேறாகும். காதற் குருதியோடும் இளமக்களிடமிருந்து பிற பேற்றை எதிர்பார்க்கலாமா? இனப்பண்புதான் இலக்கியப் பண்பாகும். அகத்திணை போன்ற தனி இலக்கியப் படைப்பு காதற்கண்ணோடு உலகியற் பொருள்களை நோக்கி வாழும் இயல்புடைய இனத்திலிருந்தல்லது பிற நோக்குடைய இனத்தில் தோன்றாது. தமிழினம் காதற் கண்ணுடையது என்பதும், அதனால் அகத்திணை யிலக்கியத்தைப் படைக்க வல்லதாயிற்று என்பதும் தெளிவு. காதல் என்னும் அகத்திணைக் கருவைத் தமிழின நெஞ்சம் ஈனிற்று. அக்கருவை இலக்கிய மகவாகச் செவிலிப் புலவர்கள் எடுத்து வளர்த்து நல்லாளாக ஆக்குதற்கு, வேண்டும் ஊட்டு பொருள்களைத் தமிழ்ச் சமுதாயமும் தமிழ் நிலமும் வழங்கின.

4. அகத்திணைக் குறிக்கோள்

அகத்திணை இலக்கண இலக்கியம் பற்றிய பேருண்மைகளையும் பெரும் சிக்கல்களையும் இனி ஆராய்வோம். அகத்திணையின் பொருட் பாகுபாடுகளையும் தோற்றக் காரணங்களையும் முன்னியல்களில் விரிவாக விளங்கிக் கொண்டீர்கள். இவ் விளக்கத்திற்குப் பின்னரே, சிக்கறுப்பதும், உண்மை காண்பதும் நமக்கு எளிதாக இருக்கும். அகத்திணை, கைக்கிளை, பெருந்திணை என்ற குறியீடுகளுக்குப் பொருள் என்ன? இதன் விடை ஒரு சிக்கல். தொல்காப்பியத்தில் கைக்கிளை, பெருந்திணைகட்குத் தனி நூற்பாக்கள் உள. இப்பாக்கட்கு வரைந்த உரையும் விளக்கமும் எல்லாம் முற்றும் பிழை. இப் பிழைபாடு உரையாசிரியர்கள் காலமுதல் ஏழுத்து வழக்கில் ஏறி நிலைபெற்று விட்டது. இப்பிழையான உரையே பன்னூற்றாண்டுகளாக வழக்கில் இருக்கும் மரபான உரையாகும். மாற்றி நினைக்கவோ மறுக்கநினையவோ உண்மை காணவோ முயன்றாரிலர். இவ்வுரைக் கருத்து அகத்திணை இலக்கணத்திற்கு அடிமுரண் என்று சிந்தித்தாரிலர். ஏன்? அகத்திணையின் இலக்கணந்தானும் ஒரு சிக்கல்.

ஒன்றினது உண்மை ஐயந்திரிபறப் புலனாகிவிட்டால் அதன் கடைப்பிடியில் பிறவற்றைத் தெரிந்து தெளியலாம். அகத்திணைக்கு வரைந்த உரைகளும் பல. தொல்காப்பியத்திற்குப் பின் தோன்றிய

அகப்பொருள் நூல்களும் பல. இந்நூற்றாண்டில் அகம்பற்றி எழுதிவரும் உரைநடை நூல்களும் பலப்பல. எந்நூல்களும் அகத்திணையின் அடிப்பண்புகளைத் துருவித் துளைத்துப் பன்மாணும் காண முயன்றதில்லை. மேலும் மேலும் இலக்கிய விளக்கம் செய்ய முயன்றனவேயன்றி முதன்மையான இலக்கணத் தெளிவு செய்ய முனைந்தில. வழி வழி வந்த ஒன்று உண்மையாகி விடாது. பெரும்பிழையானவை மரபாயினும் புரட்டித் தள்ளப் பின்வாங்குதல் கூடாது. எஞ்ஞான்றும் முதனூலாசிரியன் கருத்தைக் கண்டுகொள்ளத் துணிவு வேண்டுமேயன்றி, வழிவந்த சான்றோர் கருத்துரையில் மயங்கி அறிவு முனைப்பை மழுக்கிவிடக் கூடாது.[1] மூலவாராய்ச்சிக்கு என்றும் முதன்மை அளிக்க வேண்டும். புகழ் சான்ற அறிஞர்களின் முடிபுகளைத் திறங்காண்பதால், எம்மனமும் கசப்புறும். அவர்தம் அறிவுத் துணிபுகளைப் பிழையெனக் காண்பதால் யார்க்கும் மனமாசில்லை காண். உண்மை வளர்ச்சியே நல்லறிஞர்களின் நோக்கம். அகத்திணையின் அடித்தன்மைகளை ஆராய்வான் முனையும் எனக்கு, மேற்றொட்டு வந்த கருத்துக்களை அலசிக் காண்டல் தவிர்க்க முடியாது. அகவிலக்கணத் தெளிவின்றி அகவிலக்கியங்களைக் கசடறக் கற்றல் என்பது உடலியல் அறியாதான் கற்ற மருந்தியலை ஒக்கும்.

II

அகத்திணையின் முப்பிரிவுகள்

கைக்கிளை பெருந்திணைகளின் உண்மைப்பொருளை அறிய முயலுங்காலை, அவை அன்புசான்ற அகத்திணையின் உட்பிரிவுகள் என்பதனை மறந்துவிடலாகாது. மற்றொரு உட்பிரிவாம் சிறந்த ஐந்திணையோடு எழுதிணையாக உடன் எண்ணப்படுவன என்பதனையும் நினைக்கவேண்டும். அகத்திணையாவது ஒன்றற்கொன்று சிறிதும் தொடர்பில்லா ஏழு தனித்திணைகளின் வெறுந் தொகுதியன்று. ஒவ்வொரு திணையையும் தனித்தனியாகப் பாடலாம் என்பதனால், அவை தம்முள் முற்றும் தொடர்பற்றவை மாறுபட்டவை என்று கொள்ளற்க. ஒன்றின்கீழ் உட்பிரிவுகள் வருமேல், அப்பிரிவுகளுக்கெல்லாம் ஒரு பொதுத்தன்மை இருக்கும்; இன்றேல், அவ்வொன்றன்கீழ் வருவது முறையில்லை. கைக்கிளை, பெருந்திணை, ஐந்திணை என்ற மூன்றும் அகத்திணையின் உட்பகுதிகள். அகத்திணையின் தன்மை எது? அது இம் முப்பகுதியிலும் காணப்படுதல் வேண்டும். உட்பகுதிக்கு ஒரு தனித்தன்மை இருக்கும். அத்தன்மையோடு மூலத்தொகுதியின்

1. Dr. A. Chidambaranathan: Advanced Studies in Tamil Prosody, P.3.

பொதுத்தன்மையும் இருக்கும். அகத்திணையுள் ஐந்திணை பாடல் சான்ற புகழ்த்திணை, பல்துறையுடைய திணை. ஆதலின் ஐந்திணைக்குச் சிறந்த தனித்தன்மையுண்டு; மிக்க பொதுத் தன்மை யுண்டு. ஐந்திணை போலக் கைக்கிளை பெருந்திணைகள் சிறப்பில்லை, பாடல் பெறவில்லை என்றாலும், அவையும் அகத்திணையின் உட்பிரிவுகள் அல்லவா? அகத்திணைக்கு ஒரு நற்பண்பு உண்டெனின், அப்பொதுப் பண்பு அவ்விரு உட்பிரிவுகளுக்கும் இருக்கத்தானே வேண்டும்? ஐந்திணை நல்ல திணையாயின்' அதனொடு வைத்து எண்ணப்படும் கைக்கிளை பெருந்திணைகளும் நல்லனவாகத்தானே இருத்தல் வேண்டும்? இம்முறையான் ஆராயின், இவ்விருதிணைகளின் தூய்மையும் மேன்மையும் வெளிப்படும்.

அகத்திண, கைக்கிளை, பெருந்திணை, ஐந்திணை இவற்றின் இலக்கணங்களைத் தொல்காப்பியர் கூறிற்றிலர். கைக்கிளை பெருந்திணைகட்கு (தொல். 995, 996) இரண்டு நூற்பாக்களில் இலக்கணம் கூறினாற்போலத் தோன்றும். ஆண்டுக் கூறியிருப்பவை இலக்கணம் அல்ல; அவ்விருதிணை பற்றிய காதற் செய்கைகள். அதுபோல் ஐந்திணைக்கும் வருஞ் செய்கைகளையெல்லாம் துறையாக வகுத்துக் காட்டினரே யன்றி இலக்கணம் சுட்டவில்லை. அவ்வவற்றிற்கு வரும் துறைகளையும் கொண்டுதான் திணைகளின் இலக்கணத்தை வடிக்க வேண்டும். உட்பிரிவுகளின் இலக்கணத்தைத் தனத்தனி கண்டு, பின்னர் அவற்றை ஒருசேரக்கொண்டு அகத்திணை என்னும் பொதுப் பெயரின் பொது விலக்கணத்தை உணர வேண்டும். இலக்கணம் கண்டு பிடிக்க இடர்ப்பாடுகள் உள என்பது இதனால் விளங்கும்.

தொல்காப்பியத்திற்குப் பின்னெழுந்த இலக்கண நூல்கள் பொருளதிகாரக் குறியீடுகட்கு இலக்கண வரையறவுதருகின்றன. அகப்பொருள் விளக்கம் என்பது நாற்கவிராச நம்பி யாத்தது. இந்நூல் பலராலும் போற்றிக் கற்கப்படுவது.

"கைக்கிளை யுடையது ஒருதலைக் காமம்"
"ஐந்திணை யுடையது அன்புடைக் காமம்"
"பெருந்திணை என்பது பொருந்தாக் காமம்"

ஒருதலை, அன்புடை, பொருந்தா என்ற அடைகளால் திணைகளின் காமத்தன்மையையும் வேறுபாட்டையும் மொழிவர் அகப்பொருள் நம்பி. இந்த அடைகளைக் கற்ற மாத்திரத்தில் அன்புடையது ஐந்திணைதான் எனவும், பிற இரண்டும் அன்பற்றவை எனவும் யாரும் கருத்துக்கொள்வர். அங்ஙனமாயின், ஒன்று வினவுவல்:

மலர்தலை யுலகத்துப் புலவோர் ஆய்ந்த
அருந்தமிழ் அகப்பொருள் கைக்கிளை ஐந்திணை
பெருந்திணை யெனவெழு பெற்றித் தாகும்

என்ற நூற்பாவால் கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என்பன அகப்பொருளின் வகைகள் என உடன்படுவர் நம்பியார். வகைகளின் தன்மை அவர் கூறியபடி, ஒரு தலையும் அன்புடைமையும் பொருந்தாமையும் என்றால், மூலப்பெயரான அகம் என்பதன் தன்மை என்ன? அகம் என்பதற்கு ஒரு தன்மை உண்டெனின், அப்பொதுமை அதன் முக்கூற்றிலும் கலந்து காணப்பட வேண்டுமன்றோ?

III

1. கைக்கிளைக் குறிக்கோள்

காமஞ் சாலா இளமை யோள்வயின்
ஏமஞ்சாலா இடும்பை யெய்தி
நன்மையும் தீமையும் என்றிரு திறத்தான்
தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்
சொல்லெதிர் பெறாஅன் சொல்லி யின்புறல்
புல்லித் தோன்றும்கைக்கிளைக் குறிப்பே (தொல். 995)

என்பது கைக்கிளைத் திணையின் நூற்பா. இதற்கு யான் கருதிய பொருள்: பருவம் எய்தாப் பெண்ணை (பருவம் எய்தியவளாக மயங்கி) ஒருவன் காதல் கொள்கின்றான்; காதற்றுன்பமும் படுகின்றான்; நன்மை எனவும் தீமை எனவும் அவளைத் தன்னோடு உறவுபடுத்திச் செருக்குக் கொள்கின்றான்; அவளிடமிருந்து மறுமொழியாக ஒரு சொல்லும் பெற்றானில்லை; எனினும் தானே சொல்லிச் சொல்லி இன்புறுகின்றான்.

பொருள் விளக்கம்

'காமஞ் சாலா இளமையோள்' என்ற தொடரைக் கொண்டு இருவகைக் கருத்துரைக்க இடமுண்டு. ஓர் இளைஞன் பெண்ணொருத்தியைக் கண்டு காமவுணர்வு கொண்டான். இவன் இங்ஙனம் ஆனானேயன்றி அவளிடத்து யாதொரு குறிப்பும் தோன்றவில்லை. அதனால் இவள் காமத்திற்குரிய பருவம் நிரம்பாத பெண் என்று அறிந்துகொண்டான் என்பது ஒரு பொருள். குமரி எனக் கருதிக் காதலைத் தொடுத்தான் எனவும், ஒத்தோ மறுத்தோ யாதொரு காதற் சிந்தனையும் அவளிடத்துப் பிறவாமையின், இவள் மலராத மூகை என்று தன் காதல் ஓட்டத்தை நிறுத்திக் கொண்டான் எனவும் இதனால் அறியப்படும். மற்றொரு பொருள், ஆளாகாத

பெதும்பை என்று தெரிந்தே ஒருத்தியை ஒருவன் காதலித்தான். அவள்பால் காதலரும்பு தோன்றாமையின், தன் உணர்வைத் தடுத்துக்கொண்டான் என்பது. இதுவே எல்லாரும் கருதி எழுதிவரும் பொருள்.

குமரியில்லை என்று முன் தெரிந்திருந்தும், வேண்டுமென்றே காதல்விளையாட்டுப் புரிந்தான் என்ற கருத்து அந் நூற்பாவில் பின்வரும் தொடர்களோடு பொருந்தவில்லை.** அங்ஙனம் அன்னவளைக் காதலாடினான் எனின், அவள் தன் காமத்துயரைத் தீர்க்கவில்லையே என்று அவன் ஏன் கவலவேண்டும்? தீர்த்தற்கு வாய்த்த பருவத்தி இல்லை என்பது தெரிந்ததுதானே? தன்னை மணந்தால் தனக்கும் அவளுக்கும் நன்மை எனவும், மணக்காவிட்டால் இருவர்க்கும் தீமை எனவும் பெருமிதச்சொல் பேசினான் என்பதில் பொருளுண்டோ? தன் சொல்லுக்கு அவளிடமிருந்து மறுமொழி பெற்றானில்லை என்று சுட்டிக் காட்டுவானேன், காமஞ்சாலாச் சிறுமியிடமிருந்து மறுமொழி வாராது என்பது தெரியாதா? காமத்துயர் எய்தினான், பெருமிதம் மொழிந்தான், சொல்லெதிர் பார்த்தான், பயனொன்றுமில்லை, சொல்லியின் புற்றான் என்ற பிற்செயலெல்லாம் காதலித்த பெண்ணைக் குமரி என்று முன்னே கொள்ளாதானுக்குத் தோன்றா. குமரி என்ற கருத்தால் அவளை நாடினான் என்றும், அவள்யாதொரு நாட்டமும் கொள்ளாமையின், ஆளாகாதவள் என்று குறிப்பால் அறிந்து அமைந்தான் என்றும், முதற்பொருளைக் கொள்ளுவதே பொருந்தும்.

கைக்கிளையும் பெதும்பையும்

கைக்கிளை என்பது வயதுவந்த ஓர் இளைஞனுக்கும் ஏழோ எட்டோ என்றின்ன வயதுடைய மிகச்சிறுமிக்கும் இடையே நிகழும் காதல் நிகழ்ச்சியைக்கூறும் திணையே எனின், அன்று. கைக்கிளைக்கண் ஆணால் காதலிக்கப்படுபவள் இன்னும் ஆளாகாதவள், பூப்பெய்தாதவள் என்பது உண்மையேயாயினும், பேதைப் பெண் அல்லள். இன்றோ நாளையோ இன்னும் ஓரிரு திங்களிலோ, அணிமையில் ஆளாகத் தக்க பெரும்பெண் ஆவாள். "மகள் மேம்பட்ட கன்னிமை கனியாகக் கைக்கிளைக் காமம்" என்பர் நல்லந்துவனார் (பரி.11.). கல்லூரிப் படிப்பில் சேருவதற்குப் பதினாலரை வயது மாணவனோ மாணவியோ எய்தியிருத்தல் வேண்டும். பெற்றோரைப் பார்த்து,' 'உங்கள் மகள் கல்லூரியிற் படிக்கின்றாளா?' என ஒருவர் வினவுகின்றார். கல்லூரிக்கு உரியவயதைக் கிட்டத்தட்ட நெருங்கிய ஒரு மகளை வினவுகின்றார் என்றுதான் பொருள்படும். அம்மகள் பதின்மூன்றிற்கும் பதினாலரைக்கும் இடைப்பட்ட அகவையினள் என்று கருதலாம்.

எந்த வயதுடைய மகளும் என்று பொருளாகாதன்றோ? "காமம் சாலா இளமையோள்"என்ற அடைத்தொடரால், காமம் சாலுதற்கு, காமச்செவ்வி பக்குவப்படுதற்கு, உரிய பருவ அணிமையில் இருப்பவள் என்பது பெறப்படும். அவ்வாறின்றிக் குமரிக்கு முன்னுள்ள குழந்தைப் பருவமெல்லாம் குறிக்குமா? வயிறு உணவு நிரம்பவில்லை, ஊருணி நீர் நிறையவில்லை என்றால், நிரம்புதற்கும் நிறைதற்கும் உரிய அளவை நெருங்கிவிட்டன எனவும், இன்னும் சிறிது உணவு உண்டால் நிரம்பிவிடும், இன்னும் சிறிது நீர் வந்தால் நிறைந்து விடும் எனவும், நாம் கருத்தெடுத்துக் கொள்கின்றோம். நிறைவுக்கு நெருங்கிய நிலையிற்றான், நிறைவு பற்றிய வினைச் சொற்கள் ஆளப்படும். ஆதலின் இன்னும் ஓரிரு திங்களுக்குள் ஓராண்டிற்கும் காமப்பதம் நிறைதற்குரிய அன்ன இளையவனைத் தான் 'காமஞ்சாலா இளமையோள்' என்றார் தொல்காப்பியர்.

பருவம் உற்ற குமரியரெல்லாம் காதலித்தற்கும் மணங் காணுதற்கும் உரியவர்கள். இவை கன்னிமை கழிந்து மனைவி யாகின்றவள் நேற்றுவரை குமரியாக இருந்தவள். நெறுநற்குமரி இன்று ஒரு கொண்டானைப் பெற்று இல்லாள் ஆயினாள் என்பதை அறிவது எப்படி? இனி இவள்மேல் பிறனொருவன் காதல் நோக்கம் செலுத்தக்கூடாது என்று அறிவிப்பது எப்படி? அதற்குத்தான் கரணக்குறி ஏற்பட்டது என்று முன் இயலில் கற்றோம். அணிமையில் மணந்த குமரியரை மணக்க இருக்கும் குமரியரோடுவேறுபடுத்திக் காட்டுவதற்கென்றே கரணவழக்கைச் சமுதாயம் கண்டது என்று முன்னை இயற்கண் தெளிந்தோம். அன்னதொரு புறவடையாளம் காமஞ்சான்று ஆளான குமரி நங்கைக்கு இல்லைகாண். அணிமையில் ஆளான கன்னிக்கும் ஆளாக இருக்கும் பெண்ணுக்கும் மெய்வேறுபாடு பெரிதும் உண்டா? புற அடையாளம் இன்மையானும், மேனி வேறுபாடு இன்மையானும், குமரியெனக் கொண்டு ஒருவன் காதல் செலுத்துகின்றான்; அவளது கோதி நெளிந்த கூந்தலையும், பருத்த மெல்லிய தோளினையும், மலர்போலும் குளிர்ந்த கண்ணினையும், மான் போலும் மருண்ட பார்வையினையும், மழை பெற்ற தளிர்போலும் மேனியினையும், ஒளி விளங்கும் நெற்றியினையும், முகைபோலும் கூரிய பல்லொழுங்கினையும், கொடி போலும் துவளும் இடையினையும்,

> **வாருறு வணரைம்பால் வணங்கிறை நெடுமென்தோள்**
> **பேரெழில் மலருண்கண் பிணையெழில் மானோக்கின்**
> **காரெதிர் தளிர்மேனிக் கவின்பெறு கூர்நுதல்**
> **கூரெயிற்று முகைவெண்பல் கொடிபுரை நுசுப்பினாய் (கலி. 58)**

எனப் பாராட்டி வியக்கின்றான். அன்னமும் மயிலும் புறாவும் போன்ற நின் எழில் நலத்தைக் கண்டார் காம மயக்கம் கொள்ளாரோ? என்று (கலி. 59) தன் காமத்துயரை அறிவுறுத்து

கின்றான். இவ்வினைஞனது காதற்பதிவை அவள் எதிரேற்கவில்லை, பாராட்டைச் செவிமடுக்கவில்லை; துயரை உணரவில்லை. இங்ஙனம் தன்னால் ஒருவன் அவதியுறுகின்றான் என்று அவள் யாதும் அறியாள். ஏன்? அவள் முன்னின்று கேட்கும்படியாகவும் உணரும்படியாகவும் அவன் நேர்நின்று யாதும் செய்யான். தன் வாயளவில் தன் உள்ளத்தளவில் காதல் நிலைகளை ஆக்கிக் கொள்கின்றானே யன்றி, அவ்வளறியப் புறத்துத்தொடர்ந்து யாதும் செய்திலன். களவு செய்யலாமா, காதலைப் புலனாக்கலாமா என்று அவன் உள்ளம் அவாவுகின்றது.

வழிச்செல்வான் ஒருவனது மடி கனமாக இருக்கின்றது என்று வைத்துக்கொள்வோம். களவெண்ணம் உடையவன் என்னவெல்லாம் கருதுவான்? இம்மடி வயிற்றுக் கனமா? பொருட்கனமா? அப்பொருளும் மதிப்புடையதாக இருக்குமா? வழிச்செல்வான் பறிகொடுத்து விடத்தக்க இயல்புடையவனா? என்று இங்ஙனம் உள்ளப்பூசல் தன்னுள் கொள்வான். இவனைப் பற்றியும் இவனது உள்ளோட்டம் பற்றியும் வழிஞன் ஒன்றும் அறியான். இந்நிலையினளே காமஞ்சாலா இளமையோள். அவன் தன்பாட்டுக்குப் போவதும் வருவதும் செய்வதும் செய்கின்றான். இவனாக ஒன்றை நினைத்து அவாவிக் கவல்கின்றான்:

நேர்சிலம் பரியார்ப்ப நிரை தொடிக்கை வீசினை
ஆருயிர் வெளவிக்கொண் டறிந்தீயா திறப்பாய்கேள் *(கலி. 58)*

சிலம்பு ஒலிப்பக் கைவீசி என்னுயிரைப் பறித்துக்கொண்டு அறியாது செல்கின்றவளே என்று, தன்னுயிரைத் தானே பறிகொடுத்துப் புலம்புகின்றான். அவளிடத்து எச் சிறுமாற்றமும் தோன்றாமையின்,

பேதுற்றாய் போலப் பிறரெவ்வம் நீயறியாய்
யாதொன்றும் வாய்வாளா திறந்தீவாய் கேள் *(கலி. 56)*

என்று ஓரளவு உண்மையை உணர்ந்து அந்நல்லிளைஞன் தன் காதலரும்பைக் கிள்ளிக் கொள்கின்றான். இவன் மயக்கத்திற் கெல்லாம் ஒரே காரணம் கண்ணுடை பெண் குமரிபோலும் தோற்றம் உடைமைதான். இம்மயக்கத் தோற்றத்தின் நிலைக்களத்தில் கைக்கிளைக்காதல் உருவாகின்றது. எனவே அகத்திணைக் கைக்கிளை என்பது காமப்பருவத்தை இன்னும் எய்தாத (அணிமையில் எய்தக் கூடிய) பெதும்பைப் பெண்ணைத் தோற்றத்தால் குமரி என மயங்கிப் பருவம் வந்த இளைஞன் அறியாதே தன்னுட் புலப்படுத்திய காதல் முகிழ்ப்பைமட்டும் கூறியமைவது. இவ்வளவில் இத்திணையின் காமப்பொருள் முடிவடையும்.

பருவ மயக்கம்

ஆண் பெண் உருவ மயக்கங்களையும் அவற்றிற்கேற்ற மாற்றுவேடங்களையும் சூழ்ச்சித்தளமாகக் கொண்டு, செகப்பிரியரின் சில நாடகங்கள்நிகழ்கின்றன. ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் இரு பாலார்க்கிடையே கோலமாற்றி நாடகம் புனைவர் செகப்பிரியர். ஓரளவு அன்ன தன்மைத்தே கைக்கிளை யிலக்கியம். இஃது ஒருபாலார் தம்முள் மயக்கம் காட்டுவது. ஏறக்குறையப் பெண்பாலுள் ஒத்த பருவத் தோற்றத்தை அடிப்படையாகக் கொண்டு நிகழ்வது. உடன் பிறந்தார் சிலர் முற்றும் உறுப்பு ஒத்தவர்களாகக் காண்கின்றோம். அண்ணனோ தம்பியோ, தமக்கையோ தங்கையோ என்று உற்றுநோக்கினும் வேறுபாடு காணல் அரிதரிது. இங்ஙனம் இயற்கை தானே விளைக்கும் ஒருமை மயக்கங்கள் பலவுள. அவற்றின் காரணமாக மக்கட்கு அறிவு மயக்கம் ஏற்படவே செய்யும். அதனால் அவர்க்கு மனமாசு கற்பித்தலும், அறப்பிழை ஏற்றலும் கூடாது. "மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்" என்பர் அறநூற் புலவர். ஆதலின் தோற்றத்தால் குமரியெஞ மயங்கிக் காதல்கொள்ள நினைத்த குமரன் குற்றமுடையவன் அல்லன், மாசுடைய மனத்தவன் அல்லன். குமரியல்லள் என்று உணர்ந்தபின் தன் செயலைத் தானே நகைத்துக்கொள்கின்றான். அவளும் குற்றமிலள்; தானும் குற்றமிலன் என்று உணர்கின்றான்.

நீயும் தவறிலை நின்னைப்புறங்கடைப்
போதர விட்ட நுமரும் தவறிலர்:
நிறையழி கொல்யானை நீர்க்குவிட் டாங்குப்
பறையறைந் தல்லது செல்லற்க என்னா
இறையே தவறுடை யான் *(கலி. 59)*

'புறத்தே வந்த உன்மேலும் பிழையில்லை. புறத்தே வரவிடுத்த உன் பெற்றோர்மேலும் பிழையில்லை. போர் யானை குளத்திற்கு நீர்குடிக்க வந்தால், மதயானை வருகின்றது விலகிச்செல்லுங்கள் என்று பறைகொட்டி முன்னறிவிப்பது அரச வழக்கம். அதுபோல, நீ புறத்தே வரும்போதும் அரசன் தெரிவித்திருக்க வேண்டும். செய்யாமையின் அவனே பிழையுடையான்" என்று கைக்கிளை இளைஞன் யார்பாலும் தவறவில்லை என்ற பொருள்படப் பேசுகின்றான். கன்னியில்லை என்றும், தன் காதலுக்குப் பொருளற்றவள் என்றும், "வருந்த நோய் செய்திறப்பின் அல்லால் மருந்தல்லள் (கலி.109) என்றும் அறிந்து கொண்டபின், அவன் பேசும் பேச்சினைச் "சொல்லியின்புறல்" என்று கூறுவர் தொல்காப்பியர். எண்ணிய மெய்யின்பம் பெறவில்லையே என்று அவ்விளைஞன் கவல மாட்டான் என்பதும், கைக்கிளைச் செயல் அவன்தன்

தி. 13.

சொல்லளவில் நின்றொழிவது என்பதும் பெறப்படும். இவன் பலபடப்புனைந்தும் வருந்தியும் இன்புற்றும் பார்த்தும் கூறும் கருத்தெல்லாம் இவன்தன் செவியளவினவே, கண்ணளவினவே. அப்பெண்ணுக்கு யாதும் எட்டவில்லை; அவளுக்கு ஒன்றும் தெரியாது; அவள் இவனைச் சிறிதும் அறியாள், எண்ணாள். இவ்வமைப்பு நிலையைநினைத்துக் கொண்டு கைக்கிளைப் பாடல்களைக் (கலி. 56, 57, 58, 109) கற்கவேண்டும்.

VI

கைக்கிளையும் இளைஞனும்

ஒருறுப்பு நாடகம் என்பதுபோல ஒருதுறை கொண்ட திணை கைக்கிளை. இதனை விரித்துப் பலதுறையாக்க முயலலாம். காமஞ்சாலா இளையவள் முன்னின்று விளம்பினாள் என்று கூறலாம். தான் இன்னும் பருவம் வாயாதவள் என்று அவள் சொல்லெதிர் மொழிந்ததாகக் கூறலாம். அவள் நேரே மறுத்துச் சொல்லியதாகவும், அதுகேட்டுத் துன்புற்றான் எனவும் கூறலாம். என் உள்ளம் முதற்கண் சென்ற உன்னை, ஆளாகியபின் மணப்பேன் என்று உறுதி செய்தான் என்று கூறலாம்.

இவ்விரிவெல்லாம் உலகியல் முறைக்கும் கற்பனைக்கும் ஓரளவு பெ ாருந்திவருமேனும், சான்றோர் வடித்த அகத்திணைக் கைக்கிளைக்குப் பொருந்தா. எவ்வகையேனும் இக்கைக்கிளைக்கு ஒருகூற்றாகப் பெண்ணைத் தொடர்புபடுத்தக் கூடாது.

கைக்கிளை என்ற தொடருக்குச் சிறியஉறவு என்பது பொருள். சிறிய என்றால் இழிந்த என்னும் பொருளன்று. அவ்வுறவு நிற்கும் காலம் சிறியது என்பது கருத்து. கிளை என்பது ஓர் உருவகச் சொல். இச்சொல்லாலும் விரிவற்ற வளராத நிலை பெறப்படும். கை என்பதற்குத் தனிமைப் பொருளும் உண்டு; கைம்பெண் என்ற தொடரிற்காண்க. ஆதலின் கைக்கிளை சிறிய தனித்த உறவு என்று கொள்ளலாம். கைக்கிளை என்னும் குறியீடு இருபாலர்க்கும் சொல்லத்தக்க பொதுநிலையிற்றான் அமைந் துள்ளது எனினும், ஆண்பாற் படுத்துவதே, இளையவன் காதலைக் கூறுவதே, இலக்கணமரபாகும்.[1] "சொல்லெதிர் பெறாஅன்" என்பது தொல்காப்பியம்.

குமரியொருத்தியும் காமஞ்சாலா இனையவனைக் குமரனாகக் கருதித் தன் காதலைச் செலுத்தலாமே; அவனிடத்துக் காதற்குறிப்பு யாதும் தோன்றாமையில், சொல்லெதிர் பெறாளாகிச் சொல்லி

1. தொல், அகம், பாரதியார் உரை; ப. 185.

யின்புறலாமே, இதுவும் கைக்கிளை தானே எனவினவலாம். தமிழ்ச் சமுதாயத்தில் அத்தகைய பெண்ணீர்மை இல்லை. இளங்குமரியர் காதலை முந்துற்றுக் காட்டுதல் இல்லை. நம் சமுதாயத்தில் காதற் போக்குக்கள் பலவுண்டு. நல்லனவும் உண்டு. தீயனவும் உண்டு. தீயனவற்றை விலக்கி நல்லனவற்றைத் தெரிந்து இலக்கியப்படுத்தி இலக்கணம் வகுத்தனர். சமுதாயத்தில் இல்லாத ஒழுகலாற்றை அன்னோர் யாண்டும் கூறிற்றிலர்.

பொதுவாகவே பெண்ணைக் காட்டிலும் ஆடவன்சில ஆண்டு மிக்கவனாக இருத்தல்வேண்டும் என்பது தமிழ்மணமுறை. "மிக்கோனாயினும் கடிவரை யின்றே" (தொல். 1038) என்பர் முதலாசிரியர். குமரனாயினும் தன்னின் இளையவனை மணக்கவிழையார் தமிழ்ப்பெண்கள். சிலவாண்டு உயர்ந்தவனையே மணம் நாடுவது அன்னவர் இயல்பு. அத்தகைய மன்ப்பான்மையோடு தமிழ்ச்சமுதாயம் தன் பெண் மக்களை வளர்த்து வந்தது; இன்றும் வளர்த்து வருகின்றது. ஆதலின் குமரியர் மகன்மை எய்தாத இளையவனைக் காமுறுதல் என்பது ஈண்டு இல்லாத வழக்கு. தமிழ்ப் பெண்கள் கற்புப்போல நாணத்தைக் காப்பவர்கள்; கற்புக்காக நாணத்தைப் பலியிடுவரேயன்றிக் காதலுக்காக நாணத்தைப் பலியிடாதவர்கள். பலியிடுவரேல் சமூகப்பழி பெரிதாய் விடும்; வாழ்வு இழிந்துவிடும். குமரன் ஆயினும் குமரன் ஆகாதவனாயினும் ஒருபெண் தன்காமவுணர்வைத் தானே முந்துற்று வெளிப்படுத்தி நில்லாள். அங்ஙனம் செய்வதை அவளது நாணமே தடுத்துவிடும்.

தாமுறு காமத் தன்மை தாங்களே யுரைப்ப தென்பது
ஆமெனல் ஆவ தன்றால் அருங்குல மகளிர்க் கம்மா

என்று தமிழ்ப் பெண்ணீர்மையைக் கம்பர் சூர்ப்பனகை வாய்மொழியாகக் கூறுவர். ஆதலின் அகத்திணைக் கைக்கிளையில் பெண்பாற்கு இடமில்லை. இடமில்லாதது இயல்பும் பெருமையும் ஆகும். ஆண் தன் காதலைத் தானே முந்துற்று விளம்பி நிற்கும் பிறவியாகும்; காதற்சுவைக்கண் 'மாசறு பொன்னே! வலம்புரி முத்தே! காசறு விரையே! கரும்பே! தேனே!' என்று ஆர்வச்சொல் அடுக்கும் பாலாகும். பெண்போல் ஆணும் நாணிப் பாலுணர்வை அடக்கிக் கொள்ளுமேல், பின்னர் யார்கொல் காதற்சிறையை உடைப்பவர்? யார்கொல் காதற் பயிரை வளர்க்கும் உழவர்கள்?

கொடும்புறம் வளைஇக் கோடிக் கலிங்கத்து
ஒடுங்கினள் கிடந்த ஓர்புறம் தழீஇ
முயங்கல் விருப்பொடு முகம்புதை திறக்க (அகம். 86)

திருமண நாளிரவில் கோடியாடைக்குள் தன் உடலை வளைத்து மிகமறைத்துக் கிடந்த காதலியைப் புறம் தழுவி முகமறைவை எடுத்தான் என்று நல்லாவூர்கிழார் ஆடவனது நீர்மையை, காதலில்

அவனது முதன் முயற்சியைப் புலப்படுத்துவர். ஆதலின் ஒருபுடைக்காமம் ஆகிய அகத்திணைக் கைக்கிளைக் கண் ஆண்பால் ஒன்றே இடம்பெறுதல் இயல்பும், தமிழ்ச் சமுதாய முறையுமாம்.

குழந்தை மணம் இல்லை

காமக்குறிப்பில்லாப் பேதையிட்த்து நிகழும் கைக்கிளையைத் தொல்காப்பியர் முதற்கண் ஏடுத்தோதுதலால் தமிழ்நாட்டிற் சிறுமிகளை விரும்பிவந்த வழக்கம் முன்பு இருந்தது போலும் என்று சிலர் கருதுவர்.[1] அங்ஙனம் ஒரு சமுதாய வழக்கு இருந்தமையாற்றான், கைக்கிளைத்திணை வகுக்கப்பட்டது என்று கருத்துறுத்த முயலுவதில் தவறில்லை. அகத்திணை தமிழ்ச் சமுதாயப் பழக்க வழக்கங்களை நிலைக்களனாகக் கொண்டே படைக்கப்பட்டது என்பதனை நெடுக இந்நூலின்கண்வலியுறுத்தி வருகின்றேன். இந்நிலையில் இக்கைக்கிளைக்கும் ஒரு சமுதாய வழக்கு உண்டா? என்று கண்டாக வேண்டும். "காமஞ்சாலா இளமையோள்" என்பதற்கு இதுகாறும் பேதைச் சிறுமி என்று பொருள் கண்டனர். அப்பொருள் பொருளாயின், (பொருளில்லை) பேதைப் பெண்ணைக் காதலிக்கும் மணநெறி தமிழ்ச் சமுதாயத்தில் இருந்ததாகவே கொள்ள வேண்டும். ஓர் இளைஞன் பேதைப் பருவத்தியை வெளிப்படையாகக் காதலிப்பதும், அவளின் பெற்றோர் அவன் காதலை ஏற்று மகளைப் பருவமடையா முன்னரே மணஞ் செய்தலும் ஆகிய நெறி நடைமுறையில் இருந்திருக்குமேல், அவ்விளைஞன் ஏமஞ்சாலாக் காமத்துன்பம் அடையவேண்டா, நன்மையும் தீமையும் தொடுத்துக் கூற வேண்டா, சொல்லெதிர் பெறாது சொல்லியின்புற வேண்டா. பேதைக் காதல் வழக்கில் இருந்திருப்பின், ஆசிரியர் கூறும் கைக்கிளைத் தன்மைக்கு அது பொருந்தி வாராமை காண்க. உண்மையாக இருந்திருக்குமேல், அதற்கெனத் தனித்திணை கண்ட ஆசிரியர் துறைபல வகுத்துப் பேதைப் பெண்ணை வரையுங்காறும் முறையாக மொழிந்து செல்வர்மன்; பேதையைக் காதலித்தான், அவள் குமரியாகும்வரை காத்திருந்தான், காமஞ்சென்ற இளையவளாகியபின், மணந்து ஐந்திணைக் காதலன் ஆனான். என்று கைக்கிளைக்கும் ஐந்திணைக்கும் ஒரு தொடர்பு காட்டியிருப்பர்மன்.

பேதைக்காதல் வழக்காறாயின், இலக்கணமும் இலக்கியமும் அறநூலும் அதனைத் தக்கதென்றோ தகாதென்றோ சுட்டுவதில் பிழைபாடு இல்லை. கிரேக்கப் பேரிலக்கியங்கள் இளஞ்சிறுவனைக் காதலித்தல் முதலான பாலொழுக்கங்களைப் பாடுகின்றன என்பது நினையத்தகும். தொல்காப்பிய இலக்கணமும் சங்கஇலக்கியமும் தமிழ்ச்சமுதாயத்தின் பரத்தையொழுக்க மிகுதியை மறைக்கவில்லை;

1. தொல்காப்பியப் பொருளாதிகாரவாராய்ச்சி, ப.15

உள்ளதை உட்கொண்டு புனைகின்றன.[1] திருக்குறள் வரைவில் மகளிர் என்ற அதிகாரத்தால் பரத்தையைக் கடிகின்றது. பிறன் மனைநயக்கும் கயமை தமிழ்ச் சமுதாயத்தில் காணப்படினும், அதனைப் பொருளாக வைத்து இலக்கியம் பாடினாரிலர். எனினும் ஒழுக்கமுரணான அவ்விழுக்கத்தை அறநூல்கள் சுட்டிக் காட்டுகின்றன. இலக்கணமும் இலக்கியமும் அறநூல் என்ற முத்திறமும் தொகுத்துக் காணின், தமிழ்ச் சமுதாயத்தில் நிலவியிருந்த நல்ல கெட்ட காதற்போக்குகளை முழுதுற அறிந்து கொள்ளலாம். பேதைக் காதல் எத்திறத்தும் இடம் பெறாமையின் தமிழ்ச்சமுதாயத்தில் இல்லை என்பதே முடிபு. அகத்திணைக் கைக்கிளையில் இடம் பெறுபவள் பேதைப்பெண் அல்லள், காமப்பருவத்தை நெருங்கும் பெதும்பைப் பருவத்தவளே என்று முன்னர் விளக்கியுள்ளேன். கைக்கிளைச் செய்யுட்களில் பெண்ணுறுப்புக்களைப் புனையும் பெற்றியை நோக்கினால், அப்புனைவு குமரிப்பருவத்தை அணுகும் பெதும்பைக்கு உரியது என்பது தெளிவு.

முதிர்கோங்கின் முகையென முகஞ்செய்த குரும்பையெனப்
பெயல்துளி முகிலெனப் பெருத்தநின் இளமுலை
மயிர்வார்ந்த வரிமுன்கை மடநல்லாய் நிற்கண்டார்
உயிர்வாங்கும் என்பதை உணர்தியோ உணராயோ *(கலி. 56)*

வேயெனத் திரண்டதோள் வெறிகமழ் வணரைம்பால்
மாவென்ற மடநோக்கின் மயிலியல் தளர்பொல்கி
ஆய்சிலம் பரியார்ப்ப அவிரொளி இழையேய்ப்பக்
கொடியென மின்னென அணங்கென யாதொன்றும்
தெரிகல்லா இடை *(கலி. 57)*

மேலும் இக் கைக்கிளைப் பாக்கள் அவள் உறுப்பும் வனப்பும் கண்டவர்தம் உயிரை வாங்க வல்லன (கலி. 54) எனவும், அவள் கண்ணோக்க எல்லார்தம் உள்ளத்தையும் புண்ணாக்கும் (கலி. 109) எனவும் தோற்றத்தை நுவலுகின்றன. எனவே ஆளானவள் என்று கருத்தோடத்தக்க அணுகிய பருவத்தினள் என்று துணியலாம்.

காமப்பருவம் உற்றவர்க்கே மணங்கூட்டுவது என்பது தமிழ்ச்சமுதாய மரபு. மணப்பட்டார் அன்றே இன்பந்தலைப் பெய்வர்- தமர் நமக்கு ஈந்த தலைநாள் இரவில் கோடிக்கலிங்கம் உடுத்தவளைக் கூடிக்கலந்தேன் என்று (அகம். 136) ஒரு மணமகன் நினைவு கொள்கின்றான். கோடிக் கலிங்கத்துள் நாணி ஒடுங்கிய காதலியின் முகமறைவைத் திறந்து இன்புற்றேன் என்று (அகம். 86) ஒரு தலைவன்மணநாளை நினைக்கின்றான். மணவிழாவன்று காதலிக்குக் கோடி கொடுத்தல் வழக்கு. கோடி உடுத்திருந்தாளொடு இனிது கலந்தான் என வருதலின், மணமான, அன்றிரவே

1. அகநானூற்றுச் சொற்பொழிவுகள். ப. 20

மெய்ம்முயக்கம் உண்டு என்பது போதரும். இதனால் காமஞ்சான்ற குமரியைத்தான் மணம் செய்வர் என்று தெளியலாம். காதலனும் காதலியும் ஒத்த ஆண்டினராதல் வேண்டும் என்பர் தொல்காப்பியர். ஒத்த ஆண்டாவது ஆணுக்குப் பதினாறு, பெண்ணுக்குப் பன்னிரண்டு என்று விளக்கந்தருவர் பேராசிரியர். இம்மரபை யொட்டி, ஈராறு ஆண்டகவையாள் கண்ணகி எனவும், ஈரெட்டாண்டு அகவையான் கோவலன் எனவும் பாடுவர் இளங்கோ. இவ்வாண்டுக் கணக்கு குறைந்தது என்று கருத வேண்டா. குளிர் நாடுகளைக் காட்டிலும் தமிழகம் போலும் வெப்ப நாடுகளில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இளமை விரைவில் வந்துவிடும். பன்னிரண்டு பதினாறு என்ற ஆண்டின் உட்கோள் மணங்கொள்ளும் இருபாலாரும் ஆளாகியிருத்தல் வேண்டும் என்பதே ஆதலின், குமரியாகாதவளை வரைந்து கொடுக்கும் சிறுமணம் தமிழ்ச் சமுதாயத்தில் இல்லை எனத் தெளிக. சங்க இலக்கிய முழுதும், ஏன், தமிழிலக்கியத்து யாண்டுமே இச்சிறுமணம் பற்றிய செய்தி குறிப்பாகக்கூட இல்லை.

V

கைக்கிளை ஒரு மனநிலை

இதுகாறும் செய்த விளக்கத்தின் முடிவு என்ன? காமஞ் சாலாத இளையவளை—குமரிபோல்வாளை—ஓர் இளைஞன் காதலிக்கும் அகத்திணைக் கைக்கிளைக்குத் தமிழ்ச்சமுதாய வழக்கு இல்லை; அத்தகைய காதலை நிலைக்களனாகக்கொண்டு மேல் எந்நிகழ்ச்சியும் நடந்ததில்லை. இல்லாத ஒன்றினை ஏன் திணையாகப் படைத்தனர்? வெளிப்படையான தமிழ்ச் சமுதாய நடைமுறையில் இல்லாதது, செயல்படாதது என்பதுதவிர, இக்காமத் தன்மை தமிழ் மாந்தர்தம் உள்ளத்து நிகழும் ஒன்றேயாகும். ஒத்த தோற்றத்தால் பருவம் மயங்கி ஆடவன் கொள்ளும் காமத்தின் மனநிலையைச் சுட்டிக்காட்டுவதே அகக் கைக்கிளை. அம்மனநிலை கனாமயக்கம் போல்வது, நீடித்து நில்லாதது. இளம் பெண்களைக் காணுங்கால் குமரர்களுக்கு இயல்பாகத் தோன்றுவது. எனவே உள்ளத்தளவில் உள்ளது. கைக்கிளைப் பொருளாவது அறியாதே ஆணுள்ளத்தில் தோன்றி நின்று, உடனே உண்மை அறிந்தபின், தோன்றிய அவ்வுளத்திலேயே ஒழியும் ஒருவகைக் காமவுணர்வாகும். இது காமந் தந்த பெண்ணுக்கும் புறத்தார் யார்க்கும் புலனாகாதது. ஆயினும், ஓரிளையான் அகத்துப் பிறந்து நின்று மறைவது. இந்நுட்ப மனநிலையைத் தமிழ் மூதறிஞர்கள் கண்டனர். இந்நிலை குற்றமுடையதன்று எனவும், ஓரன்ன இயற்கையின் விளைவு எனவும் தெளிந்தனர். மெய் பருவத் தகுதி பெற்றிருந்தாலன்றி, உள்ளமாகிய நிலத்துக் காமவுணர்வு தோன்றாது.

அகத்திணைப் பண்பாவது உள்ளப் புணர்ச்சி (ப.46). உள்ளங்கள் புணரவேண்டுமேல், உடல்கள் கூடும் பருவம் எய்தியிருத்தல் வேண்டும். அப் பருவமிலிகள் உள்ளம் ஒன்றிக் காதலர்கள் ஆனார்கள். ஆவார்கள் என்றல் நிலமின்றி நீர்விளைக்கும் என்பது போலாம். உள்ளப்புணர்வுக்கு உடற்பருவத்தின் இன்றியமை யாமையைக் காட்டுவதே கைக்கிளையின் குறிக்கோள். பாலுளவியல் நூலாசிரியர் ஆசுவால் சார்ச்சு "காமவுணர்வும் காதலும் தனி இயல்பினாவாயினும், ஒன்றினை ஒன்று சார்ந்து நிற்பன. தம்முள் துணையாவன. முற்றிய பருவச் செம்மை அடைந்த மக்களிடத்துத் தான் பாலுணர்ச்சியும் காதல் நோக்கமும் மிக இணைந்து நிற்கின்றன' என்று அறுதியிடுவர்.[1]

கைக்கிளை ஒரு குறுங்கரு

அகத்திணையின் பண்பு உள்ளப்புணர்ச்சி எனின், அப் புணர்ச்சிக்கு இடந்தாராத கைக்கிளை அகத்திணையாவது எப்படி? உள்ளப் புணர்ச்சியாவது நெஞ்சுத் தூய்மை, அன்புக் கூட்டுறவு. கைக்கிளைக் காதலில் இத்தூய்மையில்லை, இக்கூட்டுறவு இல்லை. இக்காதலால் தூய்மை கெட்டு விட்டது என்றோ, கூட்டுறவுக்கு இடையூறு என்றோ சொல்லுதற்கும் இல்லை. ஒருள்ளம் புணர அவாவிற்று; மற்றோருள்ளம் அதனை ஏற்கும் பக்குவ நிலையில் இல்லை. அதனால் அவாவிய முதலுள்ளம் தன் அவாவை முற்றும் அடக்கிக் கொண்டது. இதனால் யார்க்கும் கேடு இல்லை; யாருடைய தூய்மையும் கெடவில்லை. கைக்கிளை இளைஞன் இதனைத் தன் காதல் வீழ்ச்சி, தோல்வி என்று கருதமாட்டான். நல்ல பருவ முற்றாளைக் காதலித்து மணந்து வாழ்தலை இக் கைக்கிளை நினைவு தடுக்காது. காமம் சாலா இளமையோள் காமப் பருவம் பெற்று ஒருவனுக்கு வரைந்து வாழ்வாள். ஓர் இளைஞனால் முன் கைக்கிளைப் பட்டவள் என்பதற்காக' அவளுக்கு நிறை மாசு இல்லை, மணத்தடையில்லை. இக்கைக்கிளை இளைஞனே அவள் ஆளானபின் மணங்கொண்டு ஐந்திணைக் காதலனாகலாம். எவ்வகையான நன்மணத்திற்கும் கைக்கிளை மாறில்லை, ஏன்? அதனால் மாசில்லை. "காமம் சாலா என்றதனால் தலைமைக்குக் குற்றம் வாராதாயிற்று" என்பர் இளம்பூரணர்.

வயது வந்த ஒருவனுக்கும் வயதுவந்த ஒருத்திக்கும் சிலர் மணம் பேசுவதாக வைத்துக் கொள்வோம். இங்ஙனம் பேசி முடித்தல் நாட்டில் ஒரு பெருவழக்கு. அப்பேச்சு கடைபோகவில்லை. முரிந்து விடுகின்றது என்பதனால், ஆணுக்கும் பெண்ணுக்கும் மாசு உண்டா? அவன் புதியவொரு பெண்ணை மணப்பான்; அவள் புதியதொரு ஆடவனுக்கு மணம்பேசப்படுவாள். பேச்சு முரிவு புதிய

1. Oswald Schwarz: The Psychology of Sex, P.21

மணவுறவுக்குத் தடையில்லை; இழுக்கில்லை. ஏன்? யார்பாலும் மாசில்லை. சமுதாயம் மாசெனக் கருதுவதில்லை. இதுபோன்ற ஒரு குறிப்புடையதுவே கைக்கிளை. உள்ளம் புணராமைக்குப் பெண்ணுக்கு உடற் பக்குவமின்மையே தலையாய காரணம். உள்ளங்கள் ஒன்றவில்லையேயன்றிப் பகையாக வில்லை. இன்மை பகையகாது. நண்பனிடம் பொருளிருக்கும் என்று கருதி உதவி கேட்கிறோம்; இல்லை என்று மெய்யாகக் கூறுகின்றான். கொடான் என்பது முடிபன்று. இருந்தாற் கொடுப்பான் அல்லது மறுப்பான் என்பது கருத்து. பருவத்தாள் என்று கருதி ஒருவன் உள்ளம் செலுத்துகின்றான். அன்னளாக இருப்பின் உடன்குறிப்போ மறுகுறிப்போ காட்டியிருப்பாள். பருவமின்மையின் ஏற்றுயாதுமே செய்திலள். நண்பனிடம் கேட்பதுபோல் இவன் செலுத்தியதும் இயல்பு.

ஒருவன் தூய உள்ளத்தோடு காதல் நாடினான். அவள் பருவச் செவ்வியிலள். அதனால் அகத்தளவில் தோன்றிய தன் காதலரும்பைக் கிள்ளியெறிந்தான். இவன் காதல் நின்றது சிறுபொழுதாயினும் தூயது, அன்பினது, மாசு தராது என்ற நலத்தால். கைக்கிளை அகத்திணையாயிற்று. இவ்வகை உள்ளோட்டம் இளைஞர்களுக்கு இயல்பாதலின் கைக்கிளை அகத்திணையின் கைக்கிளைக் காமம் மேல்வளராது தோன்றியவுடன் அழிதலின், காதற் குறுங்கரு என்று கூறலாம்.

பிற கைக்கிளைத் தன்மைகள்

தமிழ் இலக்கியத்தில் அகத்தும் புறத்தும் வரும் பல்வேறு கைக்கிளைகளைத் தொல்காப்பிய உரையாசிரியர்கள் தொகுத்துக் காட்டியுள்ளனர் (தொல். 1035). நம்பியகப் பொருளும் புறப்பொருள் வெண்பாமாலையும் கைக்கிளை பற்றி விரித்துரைக்கின்றன. அவற்றையெல்லாம் ஈண்டு ஆராய்வது நமக்குப் பயனில்லை. அகத்திணைக் கைக்கிளைக்கும் ஏனைக் கைக்கிளைகட்கும் உரிய பெரிய வேறுபாட்டை இவன் நாம் தெளிந்து கொண்டாற் போதியது. ஆண்பாற் கைக்கிளை பெண்பாற் கைக்கிளை என இருபாற் சுற்றுக்கும் ஏனையக் கைக்கிளையில் இடமுண்டு. தன் ஒருபுடைக் காமத்தை ஆணும் உரைப்பான்; பெண்ணும் உரைப்பாள். எனினும் ஆடவன் தான் காமம் கொள்ளும் பெண்ணுக்கு முன்னோ, பெண் தன் காமத்துக்கு உரியவன் முன்னோ நேர் நின்று உணர்வைப் புலப்படுத்தலும், உரைத்தலும் இல. கைக்கிளை என்னும் பெயருக்கேற்ப, எதிர்பாலாரின்றித் தனக்குத் தானே மொழிந்து கொள்வர். சொல்லெதிர் பெறாமை எல்லாக் கைக்கிளைக்கும் பொது. ஏனைக் கைக்கிளையில் காதலுறுவாரும் காதற்படுவாரும் எல்லாம் காமஞ்சான்ற பருவமக்களே, காமத்தை உணரவும் நுகரவும்

வல்லவர்களே. இக்கிளையினர், ஆணாயினும் பெண்ணாயினும், விழைந்தாரைப் பெறுகை அரிது என்று அறுத்தெறிந்த பின்னுங்கூடக் காதல் ஒழியார், கவற்சி நீங்கார். காமம் விளைந்த பருவத்தாரைக் காதலித்தும் அக்காதல் அவரால் ஏற்கப்பெறா விட்டால், ஏக்கத்திற்கு எல்லையுளதோ? உள்ளம் அவமானத்தைத் தாங்க மாட்டுமா?

சங்கப்புலமகள் நக்கண்ணையார் ஆமூர் மல்லன்மேற் கொண்ட காதல் கைக்கிளைக் காமமாய் முடிந்தது. இவை பற்றிய செய்யுட்கள் அகத்திணையாகாது புறத்திணையாயின (புறம். 83, 84, 85) பருவம் அடைந்த நக்கண்ணையார் ஒத்த இளைஞனான மல்லனைக் காதலித்தும், இருபாற்கும் பருவத் தகுதியிருந்தும், உள்ளப்புணர்ப்பு இல்லைகாண். அகத்திணைக் கைக்கிளை என்பது அறியாமையால் ஓர் இளைஞன் அகநிலத்து சிறுபோது தோன்றி நீடியாது ஒழியும் காம மனநிலை. இக்கிளைக்கு ஆண்பால் முதல்வனாயினும் ஆண்பாற் கைக்கிளை என்று பெயர் பெறுதல் இன்று. இவனது காமம் நிற்கும் காலம் சிறிதேயாதலின், யாதொரு மெய்ப்பாடும் இவன் உறான். ஏனைக் கைக்கிளையினர் காமக் காழ்ப்புப் பெற்றவர்கள், பிரிவுக் கவலையுறுபவர்கள். ஆதலின் புறத்தே புலனாகும் மெய்ப்பாடுகள் அவரிடத்துத் தோன்றும். "யாமே புறஞ்சிறையிருந்தும் பொன்னன்னம்" (புறம். 84) என்று நக்கண் ணையார் பசலை நிறம் உற்றதைத் தெரிவிப்பர். பருவம் வாய்ந்த இருபாலாரிடை நிகழும் அறிந்த கைக்கிளைக்கும், பருவம் வாய்ந்த ஆண்பாலுக்கு நிகழும் அறியாக் கைக்கிளைக்கும் உள்ளத்தில் உடலில் எண்ணத்தில் செயலில் காமத்தில் விளைவில் பெரும் வேறுபாடும் மாறுபாடும் உள. அகத்திணைக் கைக்கிளையான் தன் அறியாமையை உணர்ந்து திருந்துகின்றான். தூய்மையைக் காக்கின்றான். வாய்ப்பைப் பெறுகின்றான். உள்ளத்தளவில் ஒருபொழுது நிகழ்வதாயினும், துறைவிரிவு இல்லாததாயினும், உரனும் பெருமையும் உடையதாதலின் திணை என்ற பெரும் பெயர்க்கு உரித்தாயிற்று; எழுதிணையுள் ஒன்றாக, ஒருபிரிவாக எண்ணப்பட்டது. ஏனைக் கைக்கிளைகளே புறத்திணையில் துறையளவாய் நிற்கின்றன.

VI

2. பெருந்திணைக் குறிக்கோள்

ஏறிய மடற்றிறம் இளமை தீர்திறம்
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே(தொல். 996)

என்பது பெருந்திணையின் நூற்பா. இதற்கு யான் கருதிய பொருளை முன்னர்க் காணலாம் (பக். 89). பெருந்திணை அன்புசான்ற அகத்திணையின் ஒரு பிரிவு என்பதனை மறவாது நாம் பெருந் திணைக் கருத்தைக் காணவேண்டும். இத்திணைக்கு உரையாசிரியர் களும் பிறரும் இந்நாள்வரை சொல்லிவரும் பொருள் களாவன:-

1. பெருந்திணை என்பது பொருந்தாக் காமம்.

2. ஒருவன் ஒருத்தியிடம் கழிகாமம் கொள்ளுதல்: அவளை அடையப் பெறாது மடலேறுதல்.

3. தனக்கு இளைய பருவத்தாளைக் கூடுதல் நெறியாகும். அவ்வாறின்றி ஒப்பும் மூப்பும் உடைய பருவத்தாளைக் கூடி நுகர்தல்.

4. தலைவியின் இளமைக்கு ஒவ்வாது ஆடவன் மிக முதிர்ந்திருத்தல்.

5. இளமைதீர்ந்து முதிர்ந்த வயதில் துறவுகொள்ளுதல் நெறி; அவ்வாறின்றி இருவரும் காமநுகர்தல்.

6. தேறுதல் அடையாது அறிவழிக்கும் கழிகாமம் கொள்ளுதல்.

7. கரைகடந்த காமத்தால் விரும்பாதவரை வலிதிற்புணர்தல்.

ஐந்திணையாவது ஒத்த அன்பால் உண்டாகும் இன்ப வொழுக்கங்கள் எனவும், கைக்கிளையாவது ஒருப்க்க அன்பால் உண்டாகும் தாழ்ந்த இன்பவொழுக்கம் எனவும், பெருந் திணையாவது ஏற்றத்தாழ்வான இருபக்க அன்பால் உண்டாகும், மற்றொரு வகையான தாழ்ந்த இன்பவொழுக்கம் எனவும் இளவழகனார் உரைப்பர். அதன்பின் பெருந்திணையின் தாழ்வு பற்றிப் பின்வருவமாறு விளக்குவர்: "முதலில் மடலேறுவன் என்று தலைவன் சொல்லிப் பார்ப்பான். அதற்கத் தலைவியைச் சார்ந்தோர் இசையாவிட்டால், தலைவன் மடலேற வேண்டிய கட்டாயத்துக்கு வரநேரும். அப்போது தலைவியின் அன்பைவிடத் தலைவன் அன்பு மிக்க உச்சநிலையை எய்தும். மடலேறும் நிகழ்ச்சி வெறும் பேச்சு முறையில் இல்லாமல் இங்ஙனம் செயல் முறையில் வரும்போது தலைவன் அன்புக்கும் தலைவியின் அன்புக்கும் ஏற்றத்தாழ்வு காணப்படும். இனித் தலைவன் இளமை நீங்கிய முதியோனாயிருந்து தலைவி இளையவளாயிருந்தாலும், தலைவி மூத்தோளாயிருந்து தலைவன் இளையனாயிருந்தாலும், அல்லது இருவரும் இளமைநீங்கிய முதுமைப் பருவத்தர்களாயிருந்தாலும், அவர்கள் ஒருவர்க்கொருவர் ஏற்றத்தாழ்வான அன்புள்ளவர்களாகவே இருப்பர். தலைவன் தலைவியர் இருவருள் ஒருவர்

தெளிவிழந்துபோன மிகு காமநிலையில் உள்ளவராயிருந்தாலும் அவர்கள் அன்பு ஏற்றத்தாழ்வாகவே இருக்கும். இனி, மிக்க காம நிலையில் ஒருவரையொருவர் வற்புறுத்தி நிற்கும்போதும் அவர்கள் அன்பு ஏற்றத்தாழ்வாயிருக்கும் என்பது சொல்லாமலே பெறப்படும்."[1] இளவழகனார் தரும் இவ்விளக்கம் பெருந்திணை பற்றி முன்னையோர் கொண்ட கருத்தினை விரித்துத் தெளிவாக்குகின்றது. உரையாசிரியர்களும் உரைநடையாசிரியர்களும் இத்திணைக்குத் தந்த விளக்கங்களில் மிகச் சிறு வேறுபாடுகள் உளவேனும், ஒவ்வாக் காமத்தையும் வலிந்த காமத்தையும் கூறுவது பெருந்திணை என்ற கருத்து முடிபில் இன்றுவரை யாரும் வேறுபட்டிலர். டாக்டர் சோமசுந்தர பாரதியார், பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை முதலானவரும் இக்கருத்தினரே.

பெரும் என்ற அடை

பெருந்திணை என்ற குறியீட்டில், 'பெரும்' என்னும் பண்படை குறிப்பது எதனை? இது தெளிவானால் திணைப்பொருளே தெளிவாகிவிடும். பெருந்திணைக் சமமம் உலகினுள் பெருவழக்கு ஆதலின் இந்த அடைபெற்றது என்பர் இளம்பூரணர். ஒவ்வாக் கூட்டமும் வலிந்த புணர்ச்சியும் சமுதாயத்தில் மிகுந்து காணப்படுகின்றனவா? காணப்படுமேல், அச்சமுதாயம் அழிந்தொழியாது நீடித்து இயங்குமா? நினைமின். தமிழர் எழுவகைத் திணைகொள்வர். ஆரியர் எண்வகை மணம் கூறுவர். இவ்விரண்டி னையும் தொடர்பு படுத்துக் கூறும் ஒரு மரபு உண்டு:

1.	ஆசுரம்	கைக் கிளைத் திணை
2.	இராக்கதம்	
3.	பைசாசம்	
4.	காந்தருவம்	ஐந் திணை
5.	பிரமம்	பெருந் திணை
6.	பிரசாபத்தியம்	
7.	ஆரிடம்	
8.	தெய்வம்	

எல்லாவற்றினும் பெரிதாதலின் பெருந்திணையாயிற்று எனவும் பெரிதாயவாறு எப்படி எனின், அகத்திணை ஏழனுள் கைக்கிளை ஐந்திணை என்ற ஆறும் ஆசுரம் முதலாகக் காந்தருவம் வரையான நான்கினைத் தாம் பெறுகின்றன: பிரமம் முதலாக எஞ்சிய நான்கினையும் பெறும் ஒருதிணை எது, அது பெருந்திணை

1. அகத்திணையியல் விளக்கம், ப. 132-4

எனலாயிற்று என்பர் நச்சினார்க்கினியர். இது சிறு கணக்குநயமே யன்றிக் காரணம் ஆகாது. ஐந்து வரை எண்ணுதற்காக ஐவிரல்களைப் படைத்தான் என்று கட்டுரைப்பது போலும்.

1. பிரமமாவது: நாற்பத்தெட்டாண்டு பிரமசரியம் காத்தவனுக்குக் கன்னியை அணிகலம் அணிந்து தானமாகக் கொடுப்பது.

2. பிரசாபத்தியமாவது: மகளைக் கொள்ளுதற்கு உரிய கோத்திரத்தார் கொடுக்கும் பரிசப் பொருளை இரட்டித்துத் தம் மகட்கு அளிப்பது.

3. ஆரிடமாவது: தக்கான் ஒருவனுக்கு மகளைக் கொடுக்கும் போது, பசுவோடு காளையைப் பொன்னணிந்து வழங்குவது.

4. தெய்வமாவது: வேள்வியாசானுக்கு வேள்வித்தீ முன்னர் பெண்ணைத் தக்கிணையாகக் கொடுப்பது.

மேற்கூறிய ஆரிய மண நான்கிற்கும் ஏறிய மடற்றிறம் முதலாக வரும் தமிழ்ப் பெருந்திணைக்கும் என்னானும் பொருத்தக்கூறு உண்டா? பெருந்திணை நான்கு தன்மையுடையது என்று எண்ணிக்கையால் ஆரிய மணத்தோடு மாட்டி விட்டனர் போலும். ஆரிய மன்றல் நோக்கிப் பெருந்திணைப் பெயர் வைத்தனரேல், கந்தருவம் ஒன்றே பெறுந்திணை ஐந்திணை எனலாமா? குறுந்திணை எனல் வேண்டும். மூன்று பெறுகின்ற திணையைக் கைக்கிளை எனலாமா? இடைத்திணை எனல் வேண்டும்.

தமிழ் மண நெறிகளும் ஆரிய மணநெறிகளும் இன்னவகையில் ஒப்பு மையுடையன என்று காண்பது அறிவின்பாலது. அஃதன்றி, தமிழர் தம் தன்னேரில்லாப் படைப்பான் அகத்திணையின் உட்பிரிவாகிய பெருந்திணைப் பெயர் ஆரிய மணப் பிரிவுகளை எண்ணி இடப்பட்டது என்றல், சுருங்கச் சொல்லின், தமிழ் அகத்திணையையும் அதனைக் கண்ட சான்றோர் அறிவையும் அவமதிப்பதாகும். மேலும் தம் அறியாமையை நன்கு வெளிப் படுத்துவதுமாகும்.

இழி காமம் கூறும் திணையைப் பெருந்திணை என்றது, தாலி பெருகிற்று என்பதுபோல மங்கல வழக்கு என்று உரைப்பர் டாக்டர் சோமசுந்தர பாரதியார். சிறுதிணை என்று பெயரிடவேண்டிய ஒன்றைப் பெருந்திணை என்றனர்; இது அவையல் கிளவி என்று விளக்குவர். ஆசிரியர் சிறுதிணை என்று பெயர் வைத்திருப்பின், அது அவையல் கிளவி ஆகிவிடுமா? கைக்கிளை என்னும் மற்றொரு உட்பெயரைப் பெருங்கிளை என்பதுபோல அமைத்திலர் என்பதை ஒப்புநோக்குக. இவற்றை யெல்லாம் மங்களமாக இசைக்க வேண்டிய

இன்றியமையாமை இல்லை. மக்களின் சமுதாய வாழ்க்கையில் ஒழுக்கமும் உணர்ச்சியும் நோக்கி மங்கல வழக்கு ஏற்படும், வேண்டப்படும். குறியீடுகளே அறிவுத் தெளிவுக்குப் புலவனால் ஆக்கப்படுபவை. அவற்றை மங்கலமாக்கின், எண்ணிய கருத்து மயக்கந்தரும். ஆதலின் குறியீடுகளை நேர்படவே கூறுவர் நூலோர். தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம், மிக்க காமத்து மிடல் என் பவற்றை மங்கலமாக மொழியவில்லையே? உடற்கூறுகள் தம்மையே வெளிப்படையாகச் சொல்லியிருத்தலின் பெருந்திணை என்பதும் வெளிப்படையான குறியீடேயாகும்.

பருவம் வந்த ஓர் ஆடவன் காமஞ்சான்ற ஒருத்திமேல் ஒருபுடைக் காமம் கொள்ளலாம்; பருவம் உற்ற ஒரு பெண்ணும் ஒருவர்மேல் ஒருபுடைக் காமம் கொள்ளலாம். இங்ஙனம் பருவம் வாய்ந்தார்தின் தனிநிலைக் காமம் ஒருவகைக் கைக்கிளையாம். பகையரசன் 'நான் மணஞ் செய்து கொள்வேன் நின் மகளைத் தருக' என்று வேண்டுங்கால், அவளின் வீரப்பெற்றோர் மறுத்துரைப்பர். இது மகண்மறுத்தல் என்ற துறைப்படும். மகள் கேட்ட அரசன் போரிட்டு வீரத்தால் அவளைக் கைக்கொள்ள நினைப்பானாயின், மகள் வீட்டினர் உயிரைப்போற்றாது எதிர்த்துப் போராடுவர். இதற்கு மகட்பாற்காஞ்சி என்று துறை சொல்லப்படும். இக்காதல் வகைகளைப் புறத்திணையென வகுப்பர். ஈண்டு ஒன்று நினையல்வேண்டும். ஒருவனோ ஒருத்தியோ தானே எண்ணி நீடித்துவருந்தும் காமத்தையும் ஒருவன் இகல்கருதி வீரத்தால் கொள்ளும் காமத்தையுமே, நம்முன்னோர் புறத்திணையென்று தள்ளிவிட்டனராயின், வலிந்த பெருந்திணைக் காமம் அகத்திணை யாகுங்கொல்? பிறன் மனையாளை விரும்பும் இராவணக் காமம் (பாரதியார் ப. 192) அகத்திணையுள் ஒன்றாக எண்ணப்படுமா? வழிவழிப் புலவருலகத்தின் இப்பிழை மரபிற்குத் தலையாய காரணம் அகத்திணையாவது ஐந்திணையே எனக்கொண்டதும், கைக்கிளை பெருந்திணைகள் அகமல்ல என்று எளிதாகக் கருதிவிட்டதுமாம்.அறம் பொருள் இன்பங்களில் வழுவாத அகத்திணை நன்மக்கள் கொள்ளும் காதல்நிலை எனவும், கைக்கிளை பெருந்திணைகள் குற்றேவல் செய்வார் கொள்ளும் காதல் நிலைகள் எனவும் இளம்பூரணர் எழுதுகின்றார். எழுதியபின், "குற்றேவல் செய்வார் புறப்பொருட்டு உரியராயினார் என்க. எனவே இவ்வெழுவகைத் திணையும் அகம் புறம் என இருவகையாயின" என்று முடிக்கின்றார்.[1] எவ்வளவு முரண்? உணவின் வகைகள் சோறும் கறியும் துவையலு மெல்லாம். சோறு? உணவினுட் சிறந்ததுதான் என்பதற்காகச் சோறே உணவாகி விடுமா? ஏனைக்கறியும் துவையலும் நஞ்சாகிப் போமா?

1. தொல். பொருள்; 25, இளம்.
தொல். பொருள்: 54, 55, 77, நச்.

இடைக்காலத்து முரணான கருத்து மரபாகிய காரணத்தால் ஐந்திணையை 'அகம்' எனவும், கைக்கிளை பெருந்திணைகளை 'அகப்புறம்' எனவும் ஆளும் பிழையான இலக்கண வழக்காறு ஏற்பட்டு விட்டது காண்.[2] இடைக்காலத் தமிழ்ச் சமுதாயத்தில் மதங்களும் சாதிகளும் பல கோட்பாடுகளை விதைத்தன; பரப்பின. இவற்றைத் தொல்காப்பியம் சங்கவிலக்கியம் போன்ற தொன்னூல்களிலும் காணவிழைந்தனர் அக்காலப் புலவர்கள். இவ்வேண்டா வேட்கையால், பண்டை எளிய கருத்துக்கள் அரியவாயின; தெளிந்த கருத்துக்கள் கலங்கின.

VII

ஐந்திணையும் பெருந்திணையும்

பெருந்திணைக்கண் எவ்வகையானும் வலிந்த காமத்துக்கு இடனில்லை என்பதும், உள்ளப்புணர்ச்சி என்னும் அகத்திணைப் பண்பிற்கு ஒத்ததுவே பெருந்திணை என்பதும், தொல்காப்பியரும் சங்கப்புலவர்களும் பெருந்திணையை அன்புக்காமமாகவே வகுத்துப் பாடியுள்ளனர் என்பதும் என் அதிராத் துணிபு. அகத்திணையின் பெரும்பிரிவான ஐந்திணை நூற்றுக்கு மேலான துறைகள் கொண்டது என நாம் அறிவோம். பெருந்திணை மிகச்சில துறைகளே உடையது; விரிவாக்க இயலாதது. "செப்பிய நான்கே" என்பதனால் துறை வரம்பினையும், "பெருந்திணைக் குறிப்பே" என்பதனால் விரிவுக்கு இடமின்மையையும் ஆசிரியர் தெளிவாக்குவர். பெருந்திணைத்துறை நான்கும் ஐந்திணைக்கு முற்றும் வேறானவையல்ல என்பதும், ஐந்திணையின் சில துறைகளே இந்நான்கின் பிறப்பிடம் என்பதும் யான் கண்ட முடிபுகள். பெருந்திணை நூற்பா "ஏறிய மடற்றிறம்" என்று தொடங்குவதே ஒரு சான்று. இத்தொடர் "மடல்மா கூறும் இடனுமார் உண்டே" (1047) எனவரும் ஐந்திணைக் களவடியை நினைவூட்டவில்லையா? தலைவன் தலைவியர் சில காதல்களை உள்ளத்தளவிலும் சொல்லளவிலும் காத்தோம்பிக்கொள்ளும் போது, அக்காதற் பாங்குகள் ஐந்திணைப்படுகின்றன. அவ்வளவுகளுள் காத்தோம்பமாட்டாது சிலர் காதல் மிகுவர்; மிகுதியால் சில காதற்செயல்களை மேற்கொள்வர். அதனால், ஊரறியும் இக்காதல் மிகைகளே பெருந்திணைப் பொருளாவன. 'ஐந்திணையாவது அளவுக்காதல்; பெருந்திணையாவது மிகுதிக் காதல் பெரும்' என்ற அடை அளவினும் மிகுதிப்பாட்டை, மிகையைக் குறிக்கின்றது. பெருமூச்சு, பெருங்காற்று, பெருமழை, பெரும்பேச்சு, பெருங்காஞ்சி, பெருவஞ்சி என்ற தொடர்களை உடன்நோக்குக.

2. நம்பி அகப்பொருள்: 241, 244

சான்றவிர்? வாழியோ சான்றவிர்! என்றும்
பிறர்நோயும் தந்நோய்போற் போற்றி அறனறிதல்
சான்றவர்க் கெல்லாம் கடனானால் இவ்விருந்த
சான்றீர்! உமக்கொன் றறிவுறுப்பேன் (கலி. 139)

என்று சான்றோர்கள் முன் எடுத்துரைப்பான். விரும்பாத பெண்ணை வேண்டிய ஒருவன் மடலேறி வருவானாயின், அவன் வீதிவரவைச் சமுதாயம் ஒப்புங்கொல்? அவன்பேச்சைப் பெரியவர்கள் ஏற்பார்களா? அத்தகைய ஒரு போக்கிற்கு இடங்கொடுத்தால், எப்பெண்ணையும் மடலேறிப் பெறச் சில காமுகர்கள் முனையமாட்டார்களா? தன்விழைவுப்படி ஒருவனைக் கணவனாகத் தேர்ந்து கொள்ளும் வாழ்க்கையுரிமை பெண்ணினத்துக்கு உண்டு என்பது தமிழியம். பெற்றோர் கூறியவனைப் பிடிக்காவிட்டால் மறுக்கலாம்; கூறாதவனைப் பிடித்தால் மணக்கலாம். இசையாத ஒரு பெண்ணை ஓராடவன் நச்சுவானாயின், அவன் தனித்த நிலையிலேர், அவளைத் தனித்துக் கடத்தியோ வலிவு செய்வான். ஊரறியவும் சான்றோர் கேட்கவும் மடலேறுவானோ? ஆதலின் விருப்பமில் கன்னியை வணக்குதற்கு ஒருவன் மடலூராான். மடலேற்றம் ஒத்த காமம் உடையார் மாட்டே நிகழ்வது. இது நிகழும் வரலாற்றைச் சிறிது விளக்குவாம்.

அன்புக் காதலர்கள்

கல்வியறிவுடைய ஓர் இளைஞன் பருவ அழகும் நன்னலமும் செறிந்த ஒரு நங்கையை ஒருநாள் காண்கின்றான். கண்டபொழுது சிறிதேயாயினும் இருவர் உள்ளமும் காதலால் ஒன்றிக் கலந்தன. இயற்கைப் புணர்ச்சியும் நிகழ்ந்ததுபோலும். அதன் பின்னர் அவ்விளைஞன் 'தன் காதலாளைக் காணப் பெற்றானிலன். இடந்தலைப்பாடோ, பாங்கற்கூட்டமோ, தோழியர் கூட்டமோ நடைபெற வழியில்லை. ஒருநாள் நனவுக்கூட்டம் கனவு போலாயிற்று, காமப் பசியைக் கிளறிற்று. என்செய்வான் இளந்தகை!

மின்னவிர் நுடக்கமும் கனவும்போல் மெய்காட்டி
என்னெஞ்சம் என்னொடு நில்லாமை நனிவெளவித்
தன்னலங் கரந்தாளைத்
தலைப்படுமா றெவன்கொலோ (கலி. 138)

துளியிடை மின்னுப்போல் தோன்றி ஒருத்தி
ஒளியோடு உருவென்னைக் காட்டி அளியள் என்
நெஞ்சாறு கொண்டாள் அதற்கொண்டும் துஞ்சேன் (கலி. 139)

ஒருநாள் ஒருபொழுது அவளைக்கண்டு கலந்தவளவில் பிரிந்து போயினாளாதலின், மின்னலையும் கனவையும் உவமை கூறுகின்றான்; அவளும் தன்னைக் காதலித்தாள், சிரித்தாள், மேனி காட்டி மகிழ்வித்தாள் என்ற உண்மையை, "நகுபுடன் மெய்காட்டி,"

"உருவென்னைக் காட்டி அளியள்" என்று வெளிப்படுத்துகின்றான்; அன்று சென்றவள் அப்படியே மறைந்துவிட்டாள். அவளைத் தலைப்படுதல் எப்படி என்று புலம்புகின்றான்.

ஏன் அவள் திரும்ப வரவில்லை? நடந்த இடையூறு என்ன? முதல்நாள் கூட்டுறவிற்குப்பின், மகள் செய்கையை ஐயுற்று பெற்றோர்கள் அவள் சிறிதும் வெளியே செல்லாவாறு தடுத்துவிட்டனர். அவள் முற்றும் இற்செறிக்கப்பட்டாள். தலைவி புனத்திற்கும் ஆடிடத்திற்கும் வந்தாலன்றோ பிறகூட்டங்கள் நிகழும்? தோழியின் உறவு ஏற்படும்? பெற்றோர் ஒவ்வா விடினும் உடன்போக்கிற்கு வழியுண்டு. காதலியை மீண்டும் ஒருமுறைகூடக் காணும் வாய்ப்பில்லாக் காதலனுக்குக் கவற்சி பெரிதாயிற்று. மடலேற்றம் பற்றிய நான்கு கலிகளையும் ஆராயின், காதலுக்கே நிற்பவர் தலைவியின் பெற்றோர்கள் என்பதும், அவர்களை வணக்குதற்கே தலைவன் களவில் தன் உள்ளம் கவர்ந்தாளை ஊரறிய வெளிப்படுத்துவான் என்பதும் தெளியலாம். மடலேற்றம் கண்ட ஊர்மக்கள், மகள் இசையும் போது பெற்றோர் குறுக்கிடல் பொருந்தாது, இவன் காதலை இனியும் சோதித்தல் ஆகாது என்று கருத்துரைப்பர். இவன் காதலிப்பவள் தானும் இவனைக் காதலிப்பவளே. இஃது அன்புடைக் காமம் என்று சான்றோர் நெறி பகர்வர். மகளும் ஊராரும் சான்றோரும் ஒப்பும்போது, தலைவனும் விடாக் காதலனாக இருக்கும்போது, பெண் பெற்றோர் என்செய்வர்? தாம் விரும்பாவிடினும் அவளை அவனுக்கு மணஞ் செய்வர்.

வருந்தமா ஊர்ந்து மறுகின்கட் பாடத்
திருந்திழைக் கொத்த கிளவிகேட் டாங்கே
பொருந்தாதார் போர்வல் வழுதிக்கு அருந்திறை
போலக் கொடுத்தார் தமர் *(கலி. 141)*

பெருந்திணைத் தன்மையைக் கசடறக் கற்பிக்கும் ஒரு பாடல் இது. கண்டவர்க்கு இரக்கம் தோன்றும்படி, தலைவன் மடற்குதிரை ஏறினான்; தெருவிலே தன் காதலைப் பாடினான்; பெண்ணுக்குப் பொருத்தமான சொற்களைச் சொன்னான். அதனைக் கேட்ட அவள் சுற்றத்தார் (பெற்றோர்) பாண்டியனுக்கு அஞ்சிப் பகைவர்கள் திறை கொடுப்பதுபோல, மடலேறியவனுக்கு அவனை மணஞ்செய்து கொடுத்தனர் என்ற கருத்தால், அறியலாகும் பெருந்திணைப் பகுதிகளை நினைமின். 'வருந்த' என்பதனால், ஊரார் மடலேறியவன் பக்கம் சார்ந்தனர் என்பது பெறப்படும். 'திருந்திழைக்கு ஒத்த கிளவி' என்பதனால், மகளும் இவனைக் காதலிக்கின்றாள் என்பது பெறப்படும். 'பொருந்தாதார்' என்ற சொல்லினாலும் உவமை யினாலும், இக்காதலுறவிற்குப் பெற்றோர்கள் மனம் பொருந்த வில்லை என்பதும், வேறு என் செய்வது என்று கருதித் திறைபோல மகளைக் கட்டாயத்திற்காகக் கொடுத்தார்கள் என்பதும்பெறப்படும்.

9.14.

குடிகளின் நலங்கருதித் தன் மனம் பாராது அரசன் திறை கொடுத்தேனும் அமைதி செய்துகொள்ள வேண்டும் என்பர் அரசியற்புலவர் (குறள். 680). அதுபோல் பெற்றோர்கள் மகள் நலம் நோக்கித் தம் குடிமானம் பாராது, அவள் உள்ளங் கவர்ந்தானுக்கு வரைவுசெய்வர்; வரைவு செய்ய வேண்டும். இதுவே அறமாம்.

யார் ஒவ்வாமை?

அகத்திணையாவது உள்ளப்புணர்ச்சி; ஆண் பெண் இருவர் உள்ளமும் காதலுக்கு ஒத்திருத்தல். பெற்றோர் முதலாகப் பிறர் யாருள்ளமும் ஒத்திருக்க வேண்டும் என்பது இல்லை. பிறர் உள்ளமெல்லாம் இவ்விருவர் உள்ளத்திற்கு இணங்கியாதல் வேண்டும். இதுவே அகநெறி. "அன்புறு கிளவியாள்" (கலி.138) "ஒண் டொடி நோய் நோக்கு" (கலி. 140) என வருதலின், தலைவி அவன்காதலுக்கு இசைந்தாள் என்பது தெளிவு. "என் நெஞ்சாறு கொண்டாள்" (கலி. 139) "என் நெஞ்சம் இடியஇடைக் கொள்ளும் சாயல் ஒருத்தி" (கலி.140) என வருதலின், அவன் காதல் வெளிப்படை. இருவரும் ஒத்த அன்புடைக் காதலர்கள்; இயற்கைப் புணர்ச்சியளவில் இடையூறுபட்ட ஐந்திணைக் காதலர்கள். தலைவன் மடலேறி இடையூற்றைத் தவிர்த்தான். இற் செறிக்கப்பட்ட காதலியைத் தன் பெருமுயற்சியால் இல்லக்கிழத்தி ஆக்கினான்; கற்பியற்படுத்தினான். அப்பெருமுயற்சிக்கு அவன் நாண்விட வேண்டியதாயிற்று. காதற்றொடர்பை மடலேறி ஊருக்கு அறிவிக்க வேண்டியதாயிற்று. அங்ஙனம் செய்து அவள்தன் பெற்றோரை வணக்கவேண்டியதாயிற்று. இவையெல்லாம் மிகுசெயல் அல்லவா? ஆதலின் பெருந்திணையாயிற்று என அறிக. பெருந்திணையாவது இருவர் உள்ளமும் பொருந்தாக் காமம், ஒவ்வாக் காமம் என்று, இதுவரை நாம் கற்று வருகிறோமே, அது பிழை என்பது இப்போது தெளிவு. இப் பெருந்திணைக்கண் பெற்றோர் ஒவ்வாமையைக் காண்கின்றோமேயன்றிக் காதலுக்கு உரியோர் ஒவ்வாமையைக் காணவில்லை. சமுதாயப்படி ஒப்பவேண்டும் பெற்றோர் ஒவ்வாவிடினும் (அது முதன்மையன்று), காதல் மாந்தர்கள் அகம் ஒத்த உள்ளப் புணர்ச்சியராதலின், இப் பெருந்திணை அகத்திணைப் பகுதியாயிற்று. களவை நாணின்றி வெளிப்படுத்திக் கற்பாக்கினமையின், ஐந்திணைப் படாது, பெருந்திணைப்பட்டது.

VIII

2. இளமை தீர்திறம்

மணமானபின், காதலர்க்கு இல்லறப் பொறுப்புப் பலவந்து சேரும். அகலாது அணைந்து ஆரத் தழுவி இன்பச் சுவையை நாளும் பருகிக் கொண்டிருத்தல் என்பது இயலாது. இல்லறம் ஆற்றப்

பொருள் வேண்டும்; பொருளீட்ட ஆடவன் பிரியவும் மனைவி பிரிந்திருக்கவும் வேண்டும். செல்வத்தின் பொருட்டு இன்பப் புணர்வை இழத்தலும் கூடாது. மக்கள்வாழ்க்கையில் இளமைப் பருவம் நிகரற்ற ஆற்றல் சான்றது; வனப்பிற்கும் ஊக்கத்திற்கும் ஆக்கத்திற்கும் ஏற்றது. இளமையின்பமே இன்ப வீறுடையது. இன்பமின்றி இளமையைக் கொன்னே கழித்தல் இல்வாழ்வார்க்கு அறமாகாது, அறிவுமாகாது. கூடியவரை கூடிவாழப் பார்த்தல் வேண்டும். இளமைத் தனிவு உடலுக்கும் உளத்துக்கும் நயமில்லை. எண்ணவுயர்ச்சிக்கும் சிறப்பில்லை. நாளும் கழியும் இளமையை, மீண்டு வாராத நற்பருவத்தை உடனிருந்து ஐம்புலவின்பம் துய்த்துக் கழிப்பது இல்லற ஒழுக்கமாகும்.

இளமை சிறந்ததாயினும் அது சிறக்கச் செல்வம்வேண்டும், வேண்டும். வறியவன் இளமைஇல்லற வேரை அரித்துவிடும். பூவாது, பொலியாது. இளைய வறுமை இன்பக் கொல்லி. இஃதோர் வாழ்க்கைச் சிக்கல்.

புணரிற் புணராது பொருளே; பொருள்வயிற்
பிரியிற் புணராது புணர்வே *(நற். 14)*

இளமைக் காலத்துத்தான் இன்பம் துய்க்க முடியும். அக்காலத்தேதான் உலைவின்றித் தாழாது 'உஞற்றிப் பொருளீட்ட முடியும். முதிர்ந்த பருவத்தில் இன்பத்திற்கும் உழைப்பிற்கும் உடல் இடங்கொடாது. இன்பமோ இளமைக்கு உரியது. செல்வமோ இளமையொடு முதுமைக்கும் வேண்டுவது. முதுமை அளவுக்கு வேண்டிய செல்வ வைப்பை முன்னினைந்து இளமையிலேயே ஈட்டித் தொகுக்க வேண்டும். என்செய்வார்கள் இல்லறப் புதியர்கள்!

கார் கூதிர் முதலியன இன்பத்துக்குத் தகுந்த பருவங்கள். அக்காலத்துத் தலைவன்கூடிவாழ்ந்து இன்புறுவான். பிற பருவங்களில் பிரிந்தகன்று பொருள் தேடுவான். கூடுதலும் பிரிதலும், பிரிதலும் கூடுதலுமான ஓர்அளவுபட்ட வாழ்க்கை நெறியைக் கடைப்பிடிப்பான். ஆண் நீடித்த இளமையுடையவன். முதிர்விலும் அவனுக்குக் காமச் செவ்வி உண்டு. பெண்ணுக்கு இளமைப்பருவம் குறுகியது. அகவை ஐம்பதிற்குள் அவள் காமம்நின்றுவிடும். இஃது உடலியல் ஆதலின் இயல்பாகவே பெண் இளமையைக் கழியாது போற்றிக் காமப்பயன் கொள்ள விரும்புவாள். பொருட்காகக் காமத்தைப் பலியிட எண்ணினாள். காமஇன்பம் கையில் உள்ளது. கால வெல்லைக்கு உட்பட்டது எனவும், பொருளோ சென்று தேடவேண்டுவது என்றும், தேடிக் கொள்ளக் கிடப்பது எனவும் கூறுவாள். "எம்மையும் பொருளாக மதித்தீத்தை" *(கலி. 13)* என்பது ஒரு தலைவியின் அறிவுரை.

ஒரோஒகை தம்முள் தழீஇ ஒரோஒகை
ஒன்றன்கூ றாடையுடுப்பவரே யாயினும்
ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை அரிதரோ
சென்ற இளமை தரற்கு (கலி. 18)

'உடுப்பதற்கு ஆடை இரண்டில்லை. உள்ளது ஒன்றேயாயினும் அதனை இருதுண்டாக்கி உடுத்துக் கோள்வோம். வாட்டும் வறுமையிலும் கூட்டு வாழ்வே வாழ்க்கை. இளமை செல்லும். சென்றுவிட்டபின், ஐயகோ, எத்துணைச் செல்வம் கிடைப்பினும் திரும்பவருமா?' என்று வறுமையிலும் காமச்செம்மை பாடுகின்றாள் ஓர் மங்கை. இப்பெண்ணுள்ளத்தைக் கணவன் மதிக்கவேண்டும். ஆடவனுக்கு இளமை நீடிப்பினும் அவன்தலைவியின் இளமைக்குள் தானே இன்பம் துய்த்துக் கொள்ள வேண்டும்?அவளது இளமை கழிந்தபின்,அவனது இளமை யெச்சத்திற்குப் பொருளுண்டோ? பற்றுக்கோடு உண்டோ? பருவத்திற்கும் காமத்திற்கும்உரிய உறவையும் பயனையும் காதலர்கள் உணர்ந்து ஒழுகவேண்டும். செலவழுங்கல் என்னும் அகத்துறை பெண்டாட்டியின் காமத்தைக் கணவன் பொருட்படுத்தி உடனிருப்பான் என்பதற்கு ஒரு சான்று (பக். 95) கொண்டானுக்கும் கொண்டாளுக்கும் உடல் மனநிலையில் ஒத்தமதிப்பாடு இருப்பின்இல்லறம் சிறக்கும் என்பர் பெத்தரண் ரசலார்.[1] தலைவன் சேண்சென்று பொருளீட்டிப் புகழ் எய்துதற்குத் தலைவி இசையவும் வேண்டும். பெண் தன் உள்ளுறும் காம வேட்கையை வெளிப்படக் கிளவாள். அஃது பெண்மையின் இயற்கை.

காமத் திணையிற் கண்ணின்று வருஉம்
நாணும் மடனும் பெண்மைய வாதலிற்
குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை
நெறிப்பட வாரா அவள்வயி னான (தொல். 1053)

அவள் நாணத்தால் மறைத்துக்கொண்டிருக்கும் காமக் குறிப்பை நுனித்து உணர்ந்து கண்டுகொள்ளல் ஆடவன் கடமை. காணத் தவறுவானாயின், அவளின் காமவுணர்வு கசப்புணர்வாக மாறி விடும்; அக் கசப்பு வாழ்க்கை முழுதும் பரவும். மனைவியின் காமப்பதத்தைப் புரிந்து கொள்பவனே சிறந்த கணவனாவான்; இல்லறத்தைக் காத்தவனாவான். செல்வம் திரட்டப் பலரோடு சென்றான் ஒரு தலைவன். நினைத்த பொருளளவு கிடைக்கவில்லை. பிரிந்திருக்கும் மனைவியின்நலத்தை எண்ணிப் பார்த்தான். உடன்வந்த பலர் பொருளீட்டிக் கொண்டிருக்கட்டும். தனக்குக் கிடைத்தது போதும் என்று, யாரிடமும் சொல்லாது வீடுவந்து சேர்ந்தான்.

1. Marriage and Morals, P. 115

திருந்திழை அரிவை நின்னலம் உள்ளி
அருஞ்செயற் பொருட்பிணி பெருந்திரு வுறுகெனச்
சொல்லாது பெயர்தந் தேனே பல்பொறிச்
சிறுகண் யானை திரிதரும்
நெறிவிலங் கதர கானத் தானே (ஐங். 355)

பொருள் கிடக்க; நின்னலத்தை மதித்து வந்தேன் என்று மனைவி முன்னர் எடுத்துரைக்கின்றான் ஒரு தலைவன். ஓர் இல்லறத் தான் பொருளீட்டப் போவேன் என்றான். அது கேட்ட தோழி நல்லது, செய்ய வேண்டியதுதான் என்றாள். தலைவியும் தலைவன் பிரிவிற்கு உடன்பட்டனள். "செய்பொருட்கு அகல்வர்; அது அதன் பண்பே" (நற். 24) என்று ஆடவரது இயல்பைப் புரிந்து கொண்டாள். ஈண்டுக் காட்டிய ஐங்குறுநூற்றாலும் நற்றிணையாலும் கணவனும் மனைவியும் விளங்கியவர்கள், ஒருவர் போக்கை ஏனையவர் மதித்து ஒழுகுபவர்கள் என்பது பெறப்படும். இங்ஙன் விளங்கி மதித்து ஒழுகும் பண்புகள் ஐந்திணைக்கு உரியன.

வேறோரு தலைவன் செயலைக் காண்போம். அவன் ஐந்திணைத் தலைவனே, காதலியிடத்து அன்புடையவனே, மனக் குற்றம் இல்லாதவனே, எனினும் அளவறி வாழ்க்கை அறிந்தவன் அல்லன். காமத்தை நெடுநாள் கைவிட்டுப் பொருள் ஈட்டுவதிலேயே பெருநாட்டங் கொண்டவன். இல்லறத்தில் பொருளை முதன்மையாகக் கருதுகின்றான். அவனது மனைவியும் அப்படிக் கருதினால் அக்குடும்பம் ஒத்தவுணர்வு உடையது என்று சொல்லலாம். பெண் நெஞ்சம் என்றும் பொருளுக்கு முதன்மை கொடாது. யாது கூறினும், இளமையும் அவ்வின்பமுமே பெண்ணுள்ளத்தை மகிழ்விக்கும் (நற். 64) பொருளுக்குப் பிரியும் ஐந்திணைத் தலைவன் வருங்காலம் குறிப்பான். அக்கால எல்லைக்குள் அல்லது எல்லை முடிவில் வருவான், வரத் துடிப்பான். இன்பத் துய்ப்பின்றி இளமை யாண்டுபல கழிதலை விரும்பான்.

இளமையிற் சிறந்த வளமையும் இல்லை
இளமை கழிந்த பின்றை வளமை
காமம் தருதலும் இன்றே. (நற். 126)

என்பது அவன் தெளிவுடைக் கருத்து. ஐந்திணைத் தலைவன் இக்கருத்துப்படி ஒழுகாது, முற்றிய பொருட்காதல் கொண்டு இளமையைக் கழிப்பானாயின், பெருந்திணையாளன் ஆகிவிடுவான் என்று அறிக. "இளமை தீர்திறம்" என்ற தொடருக்கு தலைவியின் இளமையும் தன் இளமையும் வறிதே தீரும்படி, கழியும்படி, தலைவன் நடந்துகொள்ளும் முறை என்பது பொருள். பொருள்வயிற் பிரிந்தானாயினும், பிறபிரிவு மேற்கொண்டானாயினும், காலம் நீட்டியாது தலைவியொடு இளங்காமப் பயன் நுகரவேண்டும் என்பது இதன் கருத்து.

இளமை . தீர்திறம் என்னும் பெருத்திணைத் துறைக்குச் சங்கவிலக்கியத்தில் பாடல்கள் உண்டா? கலித்தொகையில் கூனும் குறளும் முடமும் செய்த சில காதற்காட்சிகள் வருகின்றன (94, 65). இத்துறைக்கு இவற்றை எடுத்துக் காட்டுவர் உரையாசிரியர்கள். பாரதியார் மேற்கோள் காட்டும் முடவனது காட்சி (கலி. 65) உரிய கலித்துறைக்கு நேரடியாகப் பொருந்துவதன்று. அது படைத்து மொழிந்த ஒரு கதையாகும். ஒரு குட்டையனுக்கும் ஒரு கூனிக்கும் நிகழும் காதற்பேச்சினையும் காதலொழுக்கத்தினையும் பற்றி மருதன்இளநாகனார் புனைந்து காட்டுவர் (கலி. 94) அவ்விருவரும் அரண்மனையில்: குற்றேவல் செய்பவர்கள்; தமக்கெனத் தனிவீடு இல்லாதவர்கள்; அவர்கள் சூழ்நிலையையும் வாழ்க்கை முறைகளையும் உட்கொண்டு அதற்குத்தக்க காதற்சொற்களையும் புணர்ச்சிப் போக்கினையும் அமைப்பர். கூனி குறளன் குற்றேவலாளர் என்பதற்காக. இவர்தம் காதலொழுக்கம் பெருந்திணையாகாது. இக் காதலைப் பெருந்திணை என்று நாம் இதுவரை கருதி வருவது தவறு. ஐந்திணை என்பது செல்வர்கட்கே உரியதா, ஏழைகட்கு இல்லையா? யாண்டு இருவர் மாட்டு அன்பு உண்டு ஆண்டு ஐந்திணை உண்டு.

குறுந்தொகை நற்றிணை அகநானூறு ஐங்குறுநூறு என்ற அகத்தொகை நூல்களுக்கு ஐந்திணைத் துறைகளே எழுதியுள்ளனர். அந்நூல்களை ஐந்திணைத் தொகைகளாகவே நாம் கற்றும் ஆராய்ந்தும் வருகின்றோம். அகவிலக்கணத்தை நன்கு தெளிந்து, எழுதிய துறைகளை மீண்டும் ஒருமுறை அலசிப் பார்ப்பின். சில பாடல்களுக்குப் பெருந்திணைத் துறைகள் சொல்ல முடியும்!

புதன்மிசை நறுமலர் கவின்பெறத் தொடரினின்
நலமிகு கூந்தல் தகைகொளப் புனைய
வாரா தமையலோ இலரே நேரார்
நாடுபடு நன்கலந் தரீஇயர்
நீடினர் தோழிநங் காத லோரே. (ஐங். 463)

தலைவன் சொல்லிய கார்காலம் வந்துவிட்டது. வந்தும் நாளாயிற்று. எதிர்பார்த்துப் பார்த்துத் தலைவன் வந்திலன். விரைந்து வருவான், ஆற்றியிரு என்று சொல்லத் தோழிக்கு துணிவில்லை. நீடினர் என்பதனை உடன்படுகின்றாள். பகைவரிடம் திறை வாங்குவதனால் காலம் தாழ்த்தது போலும் எனக் காரணம் காட்டுகின்றாள். இளமை தீர் திறத்திற்கு இப்பாடல் ஓர் எடுத்துக்காட்டு. 'என் யாக்கை காமத்தால் மெலிந்து ஏங்கி வறிதாயிற்று. இனி அவர் வரினும் என் நோய்க்கு மருந்தாகார். போன இடத்திலேயே அவர். இருப்பாராக' (நற். 64) என்று ஓர் ஐந்திணைத் தலைவி பெருந்திணை மொழிகின்றாள். "அனைத்தால் தோழி நம் தொல்வினைப் பயனே" (அகம். 234) என்ற தலைவியின் நோவிலும் பெருந்திணைக் குறிப்பு உண்டு.

இல்வாழ்க்கையில் காதல் நுகர்ச்சிக்கு ஒத்த மதிப்புக் கொடாது, இளமையை வேண்டுமளவு நுகராது, பொருள் முதலாயவற்றில் நாட்டங்கொண்டு ஒழுகுவது மிகையாதலின், இளமை தீர்திறம் பெருந்திணையாயிற்று. எனினும் காதலர்களின் உள்ளன்பிற்குக் குறைவில்லை, களங்கமில்லை யாதலின் அகத்திணையாயிற்று என அறிக.

IX

3. தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்

தலைவன் பிரிந்த ஞான்று ஐந்திணைத் தலைவி பிரிவு பொறாது வருந்துவாள். பறவையின் புணர்ச்சியும் விலங்கின் தழுவலும் காரும் மாலையும் பிற இன்பச் சூழ்நிலைகளும் அவளைக்கொல்லும்; அவள் அடக்கத்தைக் கிளறும். தலைவன் குறித்த காலவரவை எதிர்நோக்கி வருவான், வருவான் என்ற நம்பிக்கையோடு தன் காமத்தை நாணங்கடாவது காத்துக்கொள்வாள். வீட்டுக் குருவி முற்றத்தில் காயும் தானியங்களைத் தின்று குப்பையைக் குடைந்து விளையாடிப் பிள்ளையொடு இறவாரத்தில் தங்கும் இயல்பினது இம்மாலைக் காலம். இதனைக் காணும்போது என் உள்ளம் அலைகின்றது, தனிமைக்கு வருந்துகின்றது. அதனாலென்? என் தலைவன் சென்ற நாட்டிலும் இத்தகைய மாலைப்போது இருக்கும்; அவன் அதனைக் காண்பான்; என்போல் உள்ளம் அசைந்து திரும்புவான்:

இல்லிறைப் பள்ளித்தம் பிள்ளையொடு வதியும்
புன்கண் மாலையும் புலம்பும்
இன்றுகொல் தோழியவர் சென்ற நாட்டே (குறுந். 46)

எனத் தானே சொல்லி அனுமதி பெறுகின்றாள் பிரிவுத் தலைவி.

சுற்றுப்புறக் காட்சிகள் விடாது தாக்கினாலும், காமம் சுரந்து நெஞ்சிற் பரவி அலைத்தாலும் தலைவி நாண்விடாள், ஊரறிய உணர்ச்சியைக் காட்டாள். தனக்குத் தானே ஆறுதல் அடைவாள்; அல்லது தோழியால் ஆற்றுவிக்கப்படுவாள். இது ஐந்திணை நெறி. இந்நெறி வழுவிக் காதலனைப் பிரிந்த தலைவி தனைமறந்த துயர்கொண்டு ஊர் அறிய வந்து புலம்பும்போது நாண் நீங்குகின்றது; பெருந்திணை தோன்றுகின்றது.

ஒருவனுக்கு ஒருத்திக்கும் காதல் நிகழ்ந்தது, மணம் நிகழ்ந்தது. புணர்ச்சி நிகழ்ந்தது. அகம் மகிழக் கூடிக் குலவி மனம் நிறைவுபெறா முன்னரே பிரிவு நிகழ்ந்து விட்டது. என்னாவாள் இளம்பெண்!

புரிவுண்ட புணர்ச்சியுள் புல்லாரா மாத்திரை
அருகுவித்து ஒருவரை அகற்றலின் தெரிவார்கண்–
பயனின்று மன்றம்ம காமம் (கலி. 142)

என ஆசிரியர் இத்தகைய இளம்பிரிவிற்கு இரங்குகின்றனர். மணந்த அணிமையிற் பிரிவதாயின் காமத்திற்கு என்ன பெருமை யுண்டு? என நகுகின்றார்.தலைவி குற்றமிலள், குற்றஞ் செய்யும் நிலையில் வளர்ந்தவளும் இலள்.தோழியரோடு விளையாடுங் காலத்தும் கலகலவென்று பல்தோன்றச் சிரித்தறியாள், பல்லின் நுனியும் வெளிப்படாத வண்ணம் முறுவலை உள்ளடக்கிக் கொண்டு, மனமகிழ்ச்சியைக் கண்ணாலும் முகத்தாலும் காட்டும் மெல்லியள்; நாண மிகுதியுடையவள். இன்று என்னானாள்? தலைவன் அவள் நெஞ்சென்னும் அடுப்பில் காமக் கொழுந்தைப் பிறப்பித்து அகன்றான். அது மூண்டு நீண்டு எரியாகி நற்பண்புகளை அழிக்கலாயிற்று. ஊராருக்கெல்லாம் கேட்கும்படி கத்துகின்றாள்; எல்லாப் பல்லும் காட்டிச் சிரிக்கின்றாள்; உடனே அழுகின்றாள்.

ஒண்ணுதல் ஆயத்தார் ஓராங்குத் திளைப்பினும்
முண்ணுனை தோன்றாமை முறுவல்கொண்
டடக்கித்தன்
கண்ணினும் முகத்தினும் நகுபவள்; பெண்ணின்றி
யாவரும் தன்குரல் கேட்ப நிரைவெண்பல்
மீயுயிர் தோன்ற நகாஅ நக்காங்கே
பூவுயிர்த் தன்ன புகழ்சால் எழிலுண்கண்
ஆயிதழ் மல்க அழும் *(கலி. 142)*

நல்லந்துவனார் ஐந்திணைப் பெண் பெருந்திணைப் பெண்ணாக மாறும் நிலைகளை மேற்கண்டாங்கு வடித்துக் காட்டுவர். அதனால் நாணமும் காமஅடக்கமும் ஐந்திணைப்பண்பு எனவும், நாணாமையும் அடங்காமையும் பெருந்திணைப் பண்பு எனவும் அறிகின்றோம். இம்மாற்றத்திற்குக் காரணம் நிறையாப் புணர்ச்சி, புணர்ந்தும் ஆராமை எனவும் தெளிகின்றோம். நெடுநேரம் தாகத்தைப் பொறுத்துக் கொண்டிருக்கலாம்; அரைகுறையாகத் தண்ணீர் குடிக்க முடியுமா? பல்போது பசி பொறுத்திருக்கலாம்; பாதியுண்டளவில் பசியை அடக்கமுடியுமா? காமப் பசியும் இன்ன தன்மைத்து.

மணமாகிய ஓர் ஐந்திணைத் தலைவியின் ஆராக் காமவுணர்வே பெருந்திணைப் பொருளாகும். மணந்த் அணிமையிற் பிரிவது மனைவி உ ள்ளத்தை வாட்டும். ஆறுவாள் ஆற்றப்படுவாள் என்று நினைத்துக்கொண்டு அறிவுடைக் கணவன் புறப்பட்டான். குழந்தை ஈன்ற மனைவிகூடத் தலைவனது அகற்சிக்கு இசையாள் என்று பல பாடல்கள் விளம்புகின்றன. கார்ப்பருவத்தே தலைமகன் பிரியக் கருதுகின்றான். அவன் மனைவி ஒரு குழந்தை பெற்றவள். அக்குழந்தை தாய்ப்பால் குடித்துக்கொண்டிருக்கிறது. இந்நிலையில் தலைவனது பிரிவைத் தோழி தடுக்கின்றாள்.

புறவணி நாடன் காதல் மடமகள்
ஒண்ணுதல் பசப்ப நீசெலின் தெண்ணீர்ப்
போதவிழ் தாமரை யன்னநின்
காதலம் புதல்வன் அழுமினி முலைக்கே *(ஐங். 424)*

நீ பிரிந்தால் குழந்தை பாலுக்கு அழும் என்று சுருக்கமாகக் கூறுகின்றாள் தோழி. நீ பிரிவையாயின் தலைவி உயிர் விடுவாள், குழந்தையும் பாலின்றி இறக்கும் என்பது குறிப்பு. தாய்நிலை எய்திய மனைவியின் உள்ளம் இதுவாயின், புதுமணப் பெண்ணை ஒருவன் பிரிதல் கொடிதினும் கொடிது. திருமணங் கொண்டவுடன் கடமைகள் வந்துவிடுகின்றன என்றாலும், அவற்றைப் பலநாள் மனைவியொடு உடனிருந்து ஆற்றுவதே இல்லறமாம்.

இளமனைவியின் பெருந்திணைக்காமத்தை, தேறுதற்குரிய மிகுகாமத்தைக் குற்றமாகவும் பழியாகவும் தமிழ்ச்சமுதாயம் கருதவில்லைகாண். காம வேட்கையை அரைகுறையாகத் தணித்துப் பிரியும் போக்கைத்தான் குற்றமாகக் கருதிற்று. 'எல்லா, நீ உற்ற வருத்தம் என்ன? யார் இதுசெய்தார்?' என்று பரிவோடு வினவியது. பிரிந்த தலைவன் இயல்பாகவே வீடுவந்துசேர்ந்தான். மனைவியின் துயரச்செய்தியைப் பலர் வாய்க் கேட்டு வந்தான் என்றும் கொள்ளலாம். காதலியின் நோவையும் அழுகையையும் பெரு மூச்சையும் இரவுபகல் உறக்கமின்மையையும் கண்ட காதலன் அவளை நெருங்கிப் புல்லி ஆரத்தழுவினான். தேற்றா விதை கொண்டு தெளிந்தபின் கலங்கியுள்ள நீர் தெளிவடைவது போல, நல்லெழில் மார்பனை அணைந்து காமக்கலக்கம் நீங்கி அறிவுநலம் பெற்றாள் (கலி. 142) காம மருள் கொண்ட இளநங்கை இழந்த நலத்தையும் புன்முறுவலையும் மீண்டும் எய்தினாள் (கலி 143) அவளது நுதற் பசலை மறைந்தது. அறிவிலார் சொல்லிய சில பழியெல்லாம் பொய்யாயின. (கலி. 144)

பாயல்கொண் டுள்ளா தவரை வரக்கண்டு
மாயவன் மார்பில் திருப்போல் பவள்சேர
ஞாயிற்று முன்னர் இருள்போல மாய்ந்ததென்
ஆயிழை யுற்ற துயர் *(கலி. 145)*

தூக்கத்தைக் கெடுத்துப் போனவன் திரும்பிவரக் கண்டதும், மரு வுற்ற மங்கை அவன் மார்பைத் தழுவிக் கொண்டனள். பெரிய ஒளிப்பிழம்பாகிய கதிரவன்முன் இருளுக்குச் சிறிய ஒதுக்கிடமும் உண்டோ? அவனை அணைந்ததும் அவள் துயர் பறந்தோடிற்று. பித்துக்கொண்ட சுவடும் இல்லை. முன்னைய நன்னிலை பெற்றனள். இவ்வுலவிற்குத் திருமால் மார்பை அகலாது ஒன்றி உறையும்

திருமகளை ஆசிரியர் உவமித்தல் காண்க. இதனால் இளநங்கையின் வேட்கையும் தூய்மையும் கற்பும் பெறப்படும். நாண் நீங்கினாள், ஊரறிய வெளிப் பட்டாள், காமம் புலம்பினாள் என்பதற்காக, அத் தையலாள் கற்பிழந்தாள் என்று ஆகாது. உள்ளங்கவர்ந்த ஒருவனையே ஊரறியக் கூப்பிடுகின்றாள். ஞாலங்கேட்கக், கதறுகின்றாள்.

இன்னுயிர் அன்னாற்கு எனைத்தொன்றும் தீதின்மை
என்னுயிர் காட்டாதோ மற்று. (கலி. 143)

ஈண்டுநீர் ஞாலத்துள் எங்கேள்வர் இல்லாயின்
மாண்ட மனம்பெற்றார் மாசில் துறக்கத்து
வேண்டிய வேண்டியாங் கெய்துதல் வாயெனின்
யாண்டும் உடையேன் இசை. (கலி. 143)

என் தோளை நெகிழ்த்துப் பிரிந்தவன் யாதொரு நோயும் உறவில்லை; உயிரோடிருக்கின்றான். அதற்குச் சான்று, நான் உயிரோடிருப்பதுவே என உயிரொருமை கூறுவதாலும், ஒருகால் என் கணவன் இறந்திருப்பானாயினும், நல்ல மனமுடையார் எண்ணியதைத் துறக்கத்தில் எய்துவர் என்பது உண்மையாயின், நானும் அவனை அடைவேன் என்று மனத்தூய்மை நவிலுதலாலும், காமக் கலக்குண்ட அவள் கற்பிற்கலங்கவில்லை என்பது தெளிவு. கற்பு போய்வரும் பொருளில்லை. நாணோ ஒழுக்கத்தை விடாது அரிதிற் போய்வரும் தன்மையுடையது. ஆதலின் காதலன் வரக் கண்டதும் பேதை துயரமெல்லாம் மறந்தனள், போன நாணம் திரும்பப் பெற்றாள், வணங்கினாள். அதனோடு பழைய பண்புகளெல்லாம் வந்து சேர்ந்தன.

காதலன் மன்ற அவனை வரக்கண் டாங்கு
ஆழ்துயர மெல்லாம் மறந்தனள் பேதை
நகையொழிந்து நாணுமெய் நிற்ப இறைஞ்சித்
தகையாகத் தையலாள் சேர்ந்தாள் நகையாக
நல்லெழில் மார்பன் அகத்து (கலி. 147)

என்று இப்பெண்பாற் பெருந்திணையை ஐந்திணையாக முடித்துக் காட்டுவர் நல்லந்துவனார். "நகையொழிந்து நாணுமெய் நிற்ப இறைஞ்சி" என ஐந்திணைப் பண்புகளை மீண்டும் பொருத்திக் காட்டுவர்; பெண்ணின் பெருமையை நிறுவுவர் நாண்விட்டமை யால், காத்து மிகுதிறத்தால் பெருந்திணையாயிற்று. உள்ளம் ஒத்த இல்லத்தாராதலின், அகத்திணை எனப்பட்டது. மனைவியின் காமநாடியைக் கண்டு ஒழுகல் வேண்டும்; இதனைக் கணவன் உணர்வானாக என்பது இத்துறையின் அறிவுரை.

X

4. மிக்க காமத்து மிடல்

இத்தொடருக்குக் "காமமிகுதியானே எதிர்ப்பட்டுழி வலிதிற் புணர்ந்த இன்பம்" என்று நச்சினார்க்கினியர் உரைப்பர். "கரைகடந்த காமத்தால் விரும்பாரை வலிதிற் புணரும் வன்கண்மை" என்று பாரதியார் உரை செய்வர். இதுவரை பிறர் பலரும் எழுதியுள்ள கருத்து இதுபோன்றதே. கட்டாயப்படுத்திப் புணர்தல் என்று கருத்துக் கொள்ளுதற்கு, மிக்க காமத்து மிடல் என்ற தொடர் எப்படி இடங்கொடுக்கின்றது? மிடல் என்ற சொல்லுக்கு இப்பொருள் உண்டு என்று பலர் கருதலாம். பொதுக் கருத்து. முன்னும் பின்னும் வரும் கருத்துத் தொடர்ச்சி, சொல்லின் இயல்பான பொருள் என்ற அடிப்படையிற்றான், ஒரு தொடரின் பொருளைக் காண முயல வேண்டும். இவ்வியலின்கண் ஓடிவரும் பொதுக்கருத்து அகத்திணையாம். "தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்" என்ற முன்தொடரின் பொருள் தெளிவானது. தலைவனது பிரிவில் தலைவிபடும் ஆறாத்துயரை அத்தொடர் குறிக்கும் 'மிடல்' சொல்லுக்கு வலி-பேராற்றல்-துணிவு-என்பதே இயல்பான பொருள்.

உள்ளம் அழிய ஊக்குநர் மிடல் தபுத்து (பரிபா. 13)
ஓடாப் பூட்கை மறவர் மிடல்தப (பதிற். 57)
அடங்காதார் மிடல்சாய அமரர்வந் திரத்தலின் (கலி. 2)

வலியினாற் செய்தல் என்பது வேறு; வலிந்து செய்தல் என்பது வேறன்றோ? மிக்க காமத்து அடல் என்றிருப்பின், பிறரை வருத்தி வலிந்து வம்பு செய்தல் என்ற பொருள் படுமன். பெருந்திணை அகத்திணை ஏழனுள் ஒன்றாதலானும், அகத்திணை அன்புத்திணை யாதலானும், அகத்துறை எதற்கும் அன்பிற்கு, உள்ளப் புணர்ச்சிக்கு முரணாக உரை காணல் அடித்தவறாகும். பெருங்காமத்தால் தலைவி செய்யும் துணிவுச்செயல் என்பது மிக்க காமத்து மிடல் என்ற தொடரின் பொருள். கழிகாமுகன் ஒரு பெண்ணை வம்பு செய்து கூடுதல் என்ற உரைமரபு என்னானும் பொருந்தாது. இன்ன செயல்கள் நடந்திரா என்பது என் வாது அன்று. இவற்றிற்குத் தமிழ் மூதறிஞர்கள் சமுதாய ஒழுக்கத்திற்கேற்ப ஆய்ந்தெடுத்து அறிவோடும் பண்போடும் அமைத்த அகத்திணைக்கண் இடமில்லை என்பது என் அதிகாரத் துணிபு.

செய்வ தறிகல்லேன் யாதுசெய் வேன்கொல்லோ
ஐவாய் அரவின் இடைப்பட்டு நைவாரா
மையில் மதியின் விளங்கு முகத்தாரை
வௌவிக் கொளலும் அறனெனக் கண்டன்று (கலி. 62)

என்பது கபிலர் பாட்டு. காதலனும் காதலியும் உறழ்ந்து பேசிக் கொள்ளும் ஊடல் நடையில் அமைந்தது.தலைவன் தலைவியை இழுத்துப் புல்லுகின்றான்.

தலைவி: நான் விரும்பாதபோது என்னைக் கைப்பற்றிப் புல்லலாமா?

தலைவன்: எனக்கு விருப்பமாக இருந்தது. உன்னைத் தழுவினேன்.

தலைவி: தனக்கு இனிது என்று வலிதில் பிறருக்குத் துன்பம் செய்யலாமா?

தலைவன்: நின் அறிவைக் காட்டாதே. தமக்கு இனிதென்று தண்ணீர் குடிப்பார்கள். இனிதா என்று தண்ணீரைக் கேட்டுக் குடிப்பார் உண்டோ? காமத் துயர்ப்படுகின்றேன்; யாது செய்வதென்று அறியேன். திங்கள்போலும் ஒளியுடைய முகப் பெண்களைக் கைப்பற்றிக் கொள்ளுதலும் அறம் என்று சொல்லப்படும்.

தலைவி: (தன்னுள்) கௌவிக் கொள்ளுதல் அறமாம். இவனும் நம் சொல்லைக் கேளாது வருத்துகின்றான். முற்பிறப்பில் இருவரும் ஒன்றாகவும் வாழ்ந்திருக்கின்றோம். இனி இவன் எண்ணத்துக்கு இணங்க வேண்டியதுதான்.

இங்ஙனம் உரையாடல் புணர்ச்சியாக முடியப் பார்க்கின்றோம், அது கூடலை மிகுப்பதற்கு மேற்கொண்ட ஊடற் பேச்சேயன்றி, இக் காதலர்கள் அன்பற்றவர்கள், உள்ளம் ஒன்றாதவர்கள் என்று கருத்தாகாது. காதலும் அன்பும் இல்லாதவர்கள் இவ்வண்ணம் நயமாக நெடிது உரையாடார்கள். ஊடற் காலத்துக் காதலர்கள் உறழ்ந்து உரையாடும் ஒருவகையைப் புனைந்து காட்டுகின்றார் கபிலர். புலவி நுணுக்கம் என்ற திருக்குறள் அதிகாரத்தை ஒப்பு நோக்குக.

பெண்ணியலார் எல்லாரும் கண்ணிற் பொதுவுண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு (குறள். 1311)

ஆதலின் ஊடலுவகையில் வரும் காதல் மொழிகளை உணர்ச்சி நீக்கிப் பொருள் காணல் வேண்டும். 'வெளவி' என்ற சொல்லுக்கு 'வலிந்து' என்பது அகராதிப் பொருள் எனினும்,அச்சொல் அகச் செய்யுளில் வருதலானும் புணர்ச்சிக்கு முன் காதலன் வாயினின்று பிறத்தலானும் இடத்திற்கேற்பக் கருத்துரைக்க வேண்டும். விரும்பாத பெண்ணை வலிந்து வெளவிப் புணர்தல் அறமாம் என்று சொன்ன நூல் எது? இராவணன் செயல் அறமற்றது. கொடிதினும் கொடிது என்பதை உணர்த்துதற்கென்றே பெருங்காப்பியம் பிறந்தது. எல்லா நல்லறங்களும் நல்லாற்றல்களும் இவ்வொரு தீச் செயலால்

அழிந்தொழியும் என்று காட்டுவதற்கென்றே இராமாயணம். அற நூல் அனைத்திற்கும் இலக்கிய நூலனைத்திற்கும் புறம்பாக ஒரு தொடருக்குப் பொருள் செய்யப் பாடுபடலாமா? அப்பொருள் கொள்ளத்தான் அத்தொடர் இடந்தருகின்றதா?

மையில் மதியின் விளங்கு முகத்தாரை
வெளவிக் கொளலும் அறனெனக் கண்டன்று

அன்புடைய காதற்பெண்ணை இனிது மொழிந்து நலம் பாராட்டி மெல்லிய உணர்வூட்டி அணைத்துத் தழுவுதல் ஆண் முறை. காலம் மிக்க காதலன் அங்ஙனம் செய்யக் காத்திராது திடீரெனத் தழுவிக் கூடலும் உண்டு. இது புணர்முறையாகாது எனினும் அறத்திற்கு மாறில்லை. ஏன்? அவன் அன்பனாதலின். இதுவே இக் கலியடிகளின் கருத்து.

அவன் வெளவினன் முயங்கும் மாத்திரம் *(கலி. 47)*

தன்னை யறியாது சென்றேன்மற் றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்டு *(கலி. 51)*

நரந்தம் நாறு இருங்கூந்தல்
எஞ்சாது நனிபற்றி *(கலி. 94)*

கபிலர் மேலும் பல கலிப்பாக்களில் ஆளும் வினைச் சொற்களை நினைக. காதலன் தன் காம அழுத்தத்தைக் கூறுங்கால், ஆற்றலுடைய வினைக்கிளவிகளைக் கையாளும் அவர் இயல்பு விளங்கும்.

இக்கலிப்பாவின் (62) மாந்தர்கள் ஏவல் செய்யும் அடியவர்கள் ஆதலால் பெருந்திணையாம் என்று நச்சினார்க்கினியரும் பிறரும் கொள்வர். பணியாளர்களுக்குத் தலைமையும் ஐந்திணையும் இல்லை என்பது இன்னோர் கோட்பாடு. இப்பிழையான கோட்பாட்டினால் தொல்காப்பியத்திற்கும் சங்க இலக்கியத்திற்கும் இவர்கள் காணும் அடிப்படை உண்மைகள் வழுவாகின்றன.

வேறல்லம் என்பதொன்று உண்டால் அவ னொடு
மாறுண்டோ நெஞ்சே நமக்கு *(கலி. 62)*

இதனால் தலைவியும் மனம் ஒன்றிக் காதலிக்கின்றாள் என்பது தெளிவு. உள்ளம் ஒத்த அன்பும், உடல் ஒத்த புணர்ச்சியும் இக்கலியிற் சொல்லப்படுதலின், இத் தலைமக்கள் ஐந்திணைக்கு உரியவர்களே.

மிக்க காமத்து மிடல் என்பதன் பொருள் ஆண் செய்யும் வம்புப் புணர்ச்சியன்று; ஐந்திணைத் தலைவி காமம் மிக்குச் செய்யும் துணிவுச் செயலாம். இத்துணிவுச் செயல்கள் யாவை? இப்பெருந் திணைத் துறைக்குச் சங்கப்பனுவலில் எடுத்துக்காட்டு நிரம்ப உண்டெனத் தோன்றவில்லை. எனினும் இச்செயல் யாதாகலாம் என்று ஊகித்து அறியவல்ல குறிப்புக்கள் உள. சில காமக்

கருத்துக்கள் எண்ணத்தளவிலும் சொல்லளவிலும் அடங்கியிருக்கும் போது, நாணவெல்லைக் கடவாதபோது, ஐந்திணையாம் என்று முன்னர்க் கண்டோம்.

அருங்கடி அன்னை காவல் நீவிப்
பெருங்கடை இறந்து மன்றம் போகிப்
பகலே பலருங் காண வாய்விட்டு
அகல்வயற் படப்பை அவனூர் வினவிச்
சென்மோ வாழி தோழி; பன்னாள்
கருவி வானம் பெய்யா தாயினும்
அருவி யார்க்கும் அயந்திகழ் சிலம்பின்
வான்றோய் மாமலை நாடனைச்
சான்றோய் அல்லை என்றனம் வரற்கே. (நற். 365)

இஃது ஓர் களவுத்திணைப் பாட்டு.தலைவன் விரைவில் மணக்க விரும்பிவில்லை. களவொழுக்கத்தை நீடிக்க விரும்புகின்றான். அவன் வந்திருப்பதை அறிந்துகொண்டும் அறியாதாள்போலத் தோழி சொல்லுகின்றாள். இனி நாம் செய்ய வேண்டுவது ஒன்றே ஒன்றுதான். அன்னையின் காவலையும் பெரிய கடைத்தெருவையும் கடந்து பலருங்காணப் பகற்காலத்தே புறப்படுவோம்; எல்லாரும் கேட்க அவனூர் எது என்று வாய்விட்டுக் கத்துவோம்; வரையாது ஒழுகும் நீ ஒரு சான்றோனா என்று அவனூருக்குச் சென்று சொல்லிவிட்டுத் திரும்புவோம் எனத் தோழி அழுத்தமாகக் கழறுகின்றாள்.

கோடூர் இலங்குவளை ஞெகிழ நாள்தொறும்
பாடிய கலிழுங் கண்ணொடு புலம்பி
ஈங்கிவண் உறைதலும் உய்குவம்; ஆங்கே
எழுவினி வாழியென் நெஞ்சே! முனாது
குல்லைக் கண்ணி வடுகர் முனையது
பல்வேற் கட்டி நன்னாட் டும்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினும்
வழிபடல் சூழ்ந்திசின் அவருடைய நாட்டே (குறுந்.11)

இது கற்புத்திணைப் பாட்டு. தலைவனது பிரிவால் தலைவிக்கு உடல் மெலிந்து வளை கழல்கின்றது. கண்ணுக்கு உறக்க மில்லை. இல்லத்து இருப்புக் கொள்ளவில்லை. தலைவன் பொருளீட்டச் சென்ற இடம் நெடுந் தொலையாயினும், மொழி வேறுபட்ட நாடாயினும், அவன் இருக்கும் இடத்திற்குப் போக நினைக்கின்றாள். உய்திக்கு அதுதான் வழி என்று நெஞ்சிற்குச் சுட்டுகின்றாள். இங்ஙனம் களவிலாயினும் கற்பிலாயினும் ஐந்திணைக்கண் தலைவியர் தலைவன்மார் சென்ற தேயத்திற்குச் செல்ல நினைப்பதும், அதனை வாய்விட்டுக் கூறுவதும்

உண்டு. இவ்வகை நினைவும் சொல்லும் ஐந்திணைப் பாலன; நாண் வரம்பு இகவாதன. இவை மிக்க காமமாயினும் தக்க எல்லைக்குள் அடங்கி நிற்கின்றன.[1]

மள்ளர் குழீஇய விழவி னானும்
மகளிர் தழிஇய துணங்கை யானும்
யாண்டும் காணேன் மாண்டக் கோனை
யானுமோர் ஆடுகள மகளே என்கைக்
கோடூர் இலங்குவளை நெகிழ்த்த
பீடுகெழு குரிசிலுமோர் ஆடுகள மகனே (குறுந். 31)

இது ஆதிமந்தியார் பாடிய அகப்பாடல். "வீரர்கள் கூடியிருக்கும் விழாக் களத்திற்குச் சென்றேன். அங்கு என் தலைவனைக் காணவில்லை. மகளிர் கைகோத்தாடும் துணங்கை யரங்கத்திற்குச் சென்றேன். ஆண்டும் அவனைக் கண்டிலேன். பிற இடங்களுக்கும் சென்றலைந்தேன். யாண்டும் காண்கிலேன்" எனக் களவுத் தலைவி புலம்புகின்றாள். மள்ளரின் விழாவிற்கும் மகளிரின் துணங்கைக்கும் இல்லங்கடந்து புறப்பட்டே போய்விட்டாள். எண்ணம் சொல் அளவில் அமையாது இயங்கி இச்செய்கை, "மிக்க காமத்துமிடல்" எனப்படும். இப்பாடலை ஐந்திணைக் களவுத் துறையாக இதுகாறும் கருதி வருகின்றனர். அது சரியெனப் படவில்லை. நாண் கடந்த செயலால் களவுத் தலைவி பெருந்திணைத் தலைவியாகின்றாள். களவிலாயினும் கற்பிலாயினும் ஆணும் பெண்ணும் நாண்வரை கடத்தலாகாது காண். களவில் நாண் இறப்பினும் பெருந்திணையாம்; கற்பில் இறப்பினும் பெருந்திணையாம். ஆடுகள மகள் காதலனை ஓடி ஆடித் தேடிய செயல் கூறப்படுதலின் இவ்வகப்பாட்டு பெருந்திணைக்கு இலக்கியமாம் என்று தெளிக. மணமாய தலைவியாரும் தம் கணவன்மார் இருக்குமிடம் தேடிப் புறப்பட்ட செய்திகளைச் சார்த்துவகையில் சங்க இலக்கியத்தில் கற்கின்றோம். வெள்ளி வீதியார் காமநோயால் ஊணும் உறக்கமும் இன்றி நெறிபடு கவலை நிரம்பா நீளிடைச் சென்றமிடலுடையவர். இச்செயல் கூறப்புகின், பெருந்திணையாயினும் பெயர் சுட்டி வந்தமையின் அகத்திணையாகாது; ஆகாதெனவே அதன் உட்பிரிவான பெருந் திணையும் ஆகாது. இவ்வுண்மையை வருகின்ற இயலில் தெளியலாம். ஆதிமந்தியும் கணவனைத் தேடியலைந்தாள். அதற்குக் காமம் யாதும் காரணமன்று. காவிரி நீத்தம் அவனை அடித்துச் சென்றதுவே காரணம் (அகம். 222). ஆதலின் ஆதிமந்தியின் துணிவுச் செயல் முற்றும் புறத்திணைப்பாற்படும். அவள் செயல் ஒருமருங்கு சிலப்பதிகாரக் கண்ணகியின் செயலோடு ஒக்கும்.

1. ஐங். 114, 237; அகம். 309

தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம் என்பது ஐந்திணைத் தலைவியின் ஆராக்காமப் புலம்பல் என்றும்,மிக்க காமத்து மிடலாவது அத்தகைய தலைவியின் துணிவுச்செயல் என்றும், இவை பெருந்திணையாம் என்றும் இவண்வரை விளக்கினேன். அன்புடைத் தலைவியரின் காதல்கள் நாணிறக்கும்போது பெருந்திணை யாகின்றன என்று இவ்விளக்கத்தால் தெளியலாம். நாணழிவு கற்பழிவாகாது. நாண் விட்டேனும் கற்பைக் காப்பது தமிழியம். இப்பெருந்திணைத் தன்மைகளைத் தொல்காப்பியர் பின்வரும் நூற்பாவில் விளங்க உரைப்பர்.

> **உயிரினும் சிறந்தன்று நாணே; நாணினும்**
> **செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந் தன்றெனத்**
> **தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு**
> **காமக் கிழவன் உள்வழிப் படினும்,**
> **தாவில் நன்மொழி கிழவி கிளப்பினும்,**
> **ஆவகை பிறவும் தோன்றுமன் பொருளே** *(தொல். 1058)*

இந் நூற்பாவினையும் "ஏறிய மடற்றிறம்" என்று நூற்பாவின் பிற்பகுதியினையும் இணைத்துச் சிந்தியுங்கள். 'காமக்கிழவன் உள்வழிப்படுதல்' என்பதும், 'மிக்க காமத்து மிடல்' என்பதும் ஒன்றாம்.'தாவில் நன்மொழி கிழவி கிளப்பினும்' என்பதும், 'தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்' என்பதும் ஒன்றேயாம். ஐந்திணை எந்நிலைக்கண் பெருந்திணையாகின்றது? நாணைக் காட்டிலும் கற்புச் சிறந்தது என்று நெறி தெளிந்த பெண்கள், கற்புக் காவலின் பொருட்டு நாண்வேலியைக் கடந்து செல்வார்கள்; அதுவும் அகப்பொருளேயாம் எனத் தொல்காப்பியர் விதந்து மொழிகுவர். "ஆவகை பிறவும்" என்றுஅகத்திணை யாசான் கூறுதலால், காமக் கூறுகள் மிகினும், நாணம் கடப்பினும், உள்ளப் புணர்ச்சிக்கு முரணின்றி நிகழுமாயின், அகப்பொருளாம் என்பது குறிப்பு. எனவே அவ்வகைக் கூறுகள் பெருந்திணைக்கு உரியன என்று அறியலாம்.

XI

3. ஐந்திணைக் குறிக்கோள்

அகத்திணையின் உட்பிரிவுகள் மூன்றனுள் கைக்கிளையாவது நிகழா ஒழுக்கம்; பெருந்திணையாவது கழிபேரொழுக்கம்; ஐந்திணையாவது இயல்பொழுக்கம். உனக்குக் குழந்தைகள் எத்தனை என்று ஒரு மாதினை வினவின், உள்ள குழந்தைகளையும் கூறுவாள்; கருவிற் சிதைந்தவற்றையும் கழிசடையாய்ச் சென்றவற்றையும் உடன் மொழிவாள். அகத்திணைத்தாயின் முப்பகுதிக் குழந்தைகளும் இத்தன்மையனவே. அகத்திணையின் அன்புப்பண்பின் விரிவாகவும்

தெளிவாகவும் அறிந்து கொள்ளுவதற்கு ஐந்திணையே உறுதுணை, பிறதிணைகள் சிறு துணையே, கைக்கிளை விளையாக்காமம் என்னும் ஒரு துறையளவில், காட்சியளவில், தோன்றும்போதே இறுவாயாகின்றது. பெருந்திணைக்கு மிகுதி காட்டும் நான்கு துறையே உண்டு. ஐந்திணைத் துறைகளோ எண்ணில:

மரபுநிலை திரியா மாட்சிய வாகி
விரவும் பொருளும் விரவும் என்ப *(தொல். 190)*

ஆதலின் நெறிக்கு உட்பட்டுப் புதியனவாய்ப் படைத்துக் கொள்ளக்கூடியவை, முதற்பொருள் கருப்பொருள் உள்ளுறை இன்னபிற பாடல் மரபெல்லாம் ஐந்திணை ஒழுக்கங்கட்கே வருபவை. புறத்திணைக்கண் வேறுவேறான கைக்கிளைகளையும் பெருந்திணைகளையும் பிற்கால இலக்கணர்கள் புதுவதாக வகுத்துக் காட்டியுள்ளனர். அன்ன புறத்தன்மை ஐந்திணைக்கு இல்லைகாண், புறப்பொருட் கைக்கிளை புறப் பொருள் பெருந்திணை என்பதுபோலப் புறப்பொருள் ஐந்திணை என ஒன்றில்லை காண். கைக்கிளை பெருந்திணை என்ற குறியீடுகளைக் கேட்பின், இவை அகமோ புறமோ என்று மயங்கும் மயக்கம் ஐந்திணைக்கு வராது. ஐந்திணைக் குறியீடும் பிரிவும் அகத்திணையிற்றான் வருவது. இச்சிறப்புப் போலும் ஐந்திணையும் அகத்திணையும் ஒன்றெனக் கொள்ளுமாறு அறிஞர்களை மயக்கிவிட்டது. முதலாகவும் இறுதியாகவும் எண்ணப்படும் கைக்கிளை பெருந்திணைகளை, ஒருப்பால் நிறுத்தி, நடுவண் உள்ள ஐந்திணையை ஒருபால் நிறுத்தி, உடன் வைத்தும் எதிரிட்டும் ஆராயின் அகத்திணையின் தன்மை இதுதான் என்பதனை முடியத் தெளியலாம். அத்தன்மை துறைபலவும் செய்யுள் பலவும் கொண்ட ஐந்திணைக்கண் குடிகொண்டு விளங்கவும் காணலாம்.

ஐந்திணைக் காதலின் இயல்பு

உடற்பருவம் இன்றேல் காமம் பிறவாது, சுரவாது என்பது கைக்கிளைக் கருத்து. ஆர்ந்து நிறைந்த காமம் துய்யாமையால் அறிவு கடந்த செயல்கள் நிகழும் என்பது பெருந்திணைக் கருத்து. நாணமும் அறிவும் காமமும் ஒத்து நிற்றலால், பருவமுடையார் காதல் இன்பமாம் என்பது ஐந்திணைக் கருத்து. கைக்கிளையில் வாழ்க்கை தோன்றாது; பெருந்திணைக்கு வாழ்க்கையை விடுதல் கூடாது. கைக்கிளை இளைஞன் காமஞ்சான்ற இளையவளைக் காதலித்து ஐந்திணைக் காதலன் ஆவான். ஒருகால் பெருந்திணைக்குப் போகிய காதலர்கள் நெறியறிந்து ஐந்திணை வாழ்வுக்கு மீள்வார்கள், வாழ்வெனப் படுவது ஐந்திணையே ஆதலின்,

க.15-

இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை (தொல். 1037)

என்று பூராட்டினார் தொல்காப்பியர். கைக்கிளை இளைஞன் அன்புடையனாயினும், அவன் காதலித்தாளிடத்து அன்பு தோன்ற இடமின்மையின், இவனது அன்பு கிளையாது ஒடுங்கி விடும். பெருந்திணைக் காதலர்கள் ஒத்த அன்பினராயினும் அன்பிலர் போல அன்னவர் செயல்கள் காட்டும். ஐந்திணைக் காதலர்கள் ஒத்த அன்பிற்கு ஏற்ப ஒத்த காதற் செயல்களையே போற்றுதலின், அன்னோர்தம் வாழ்க்கை எஞ்ஞான்றும் ஒருசீராக விளங்கும். யாண்டும் அன்புக்கு இயைந்தனவே செய்தலின், 'அன்பொடு புணர்ந்த' என்று ஐந்திணைக்கு அடை புணர்த்தினார். ஐந்திணை மாந்தர் இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்தலின், இன்பமும் பொருளும் அறனும் ஆண்டு உள என்று நெறி காட்டினார். ஆங்கிலப் பேராசிரியர் ஆர்போர்டு, செகப்பிரியர் நாடகங்களில் வரும் காதற் கூறுகளையும் மணவகைகளையும் பற்றிச் செய்த அரியதோர் ஆராய்ச்சிக் கட்டுரையைக் கற்றேன். அகத்திணையின் காதற் பாங்குகளை ஒப்பிட்டும் உறழ்ந்திட்டும் கண்டறிதற்கு இக்கட்டுரை என்னை ஊக்கலாயிற்று. அவர் வடித்துக்காட்டும் செகப்பிரியக் காதல் அமைப்பாவது:- "காதலாவது நெஞ்சு அறிவு புலன்கள் என்ற அனைத்தையும் ஒருங்கே தூண்டிவிடும் ஒரு பெரும் வேட்கை. காதலுணர்ச்சி அவாவுடையதன்று, ஆர்வமுடையது; மேலெழுந்தவாரியன்று, மெல்லியது; துறவுடையதன்று, தூயது; ஆசாரமுடையதன்று, அறமுடையது; விளையாட்டுத்தனமன்று, மகிழ்ச்சி மிக்கது; வெடுக்குத்தனமன்று, மலர்ச்சி நிறைந்தது; செகப்பிரியர் பாடும் காதல் மாந்தர்கள் திருமண ஆவலுடையவர்கள். உரிமை நாட்டமோ அன்புமாற்றமோ அன்னவர்பால் இல்லை. அன்னவர்க்கு முதற்காதலே முழுக்காதலாகும்" செகப்பிரியர் உணர்ந்த இக்காதலியல் தொல்காப்பியரும் சங்கச்சான்றோரும் போற்றிப் புனைந்த ஐந்திணைமைக்கு ஒருவாறு ஒப்பாகும், நாடக வனப்பு நோக்கி இக்காதல் இயலுக்கு மாறான காதற் கூறுகளும் செகப்பிரியன் நாடகங்களில் இடம் பெற்றுள என்பர் ஆர்போர், நம் ஐந்திணைக்கண்ணோ இயல்பிற்குப் புறம்பு எச் சிறுவளவும் நுழைதற்கில்லை. புறநடை புகாக் காதற்பண்பு கொண்டது தமிழ் ஐந்திணை. விதிக்கு மயிரிழை அன்ன ஊறுபாடு ஏற்படினும் ஒரு செய்யுள் ஐந்திணையாகாதெனத் தள்ளப்படும். கைக்கிளை பெருந்திணை ஐந்திணை என்ற முப்பாற்பட்ட அகத்திணை பொருளானும் வரம்புடையது, அப்பொருளைச் சொல்லும் முறையானும் வரம்புடையது. இவ்வரம்பே வரம்பு. இவ்வரம்பிற்கு மேல் வரம்பில்லை. சுருங்கச் சொல்லின், அகவரம்பு பெண்ணின் கற்புப் போலத் திண்மையும் மாட்சியும் வாய்ந்தது.

1. Shakespears's Treatment of Love and Marriage, p.11

ஐந்திணையின் பொருள் வரம்பு

ஐந்திணைத் துறைகளைக் கூர்த்து மதிப்பின். ஆண்டுவரும் காதலொழுக்கங்கள் அரியனவல்ல, யாவரும் கொள்ளத் தக்க எளியன; வலியனவல்ல, உடலையும் உளத்தையும் ஊறு செய்யா மெல்லியன; கொடியனவல்ல, வாழ்வுக்கு நலம் பெருக்கும் இனியன; சிறுமையல்ல, சமுதாயம் போற்றும் சால்பின. ஆண்டு வரும் துறை ஒவ்வொன்றனையும் கற்பனையால் விரிக்கலாம்; விரிக்கப்புகின் பெருந் துன்பியலாகவோ, பேரின்பியலாகவோ நீளும். அதிர்ச்சிதரும் சிறுகதையாகவோ பெரும் புதினமாகவோ மாறும். அறநெறிக்கு உட்பட்டோ கடந்தோ செல்லும். ஓரிளைஞன் பால்வயப்பட்டு நங்கையைக் காதலித்தான். அவனது பெற்றோர் அக்காதலுக்கு இசையவில்லை என்று அறிந்தபின், கண்ணுற்ற காதலியைக் கைவிட்டான் என்று கூறலாகாதா? அல்லது அழகும் செல்வமும் மிக்க மற்றொரு மங்கையைக் கண்டதும், முதற் காதலியை யானும் நீயும் எவ்வழி அறிதும் என்று கேட்டான் எனக் கூறலாகாதா? ஒரு தலைவன் தோழி துணையாகத் தலைவியை அடைய முயல்கின்றான். பகற்குறியிலும் இரவுக்குறியிலும் தோழியைத் தனித்துக் காண்கின்றான். இந்நிலையில் இளந்தோழியொடு தலைவனுக்கு நட்பு ஏற்பட்டு விட்டது எனவும், பழந்தலைவி பகையானாள் எனவும் கதையை மாற்றலாமன்றோ? தோழியிற் கூட்டம் என்பதற்கே, நினைத்தால் ஒரு புதுப்பொருள் ஊட்டி விடலாம் அன்றோ? இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்னர், தலைவன் பாங்கனைக் காண்கின்றான்; தான்பட்ட துயரைப் புலம்புகின்றான். அவன் சொற்படி பாங்கன் தலைமகளைச் சென்று காணுகையில் இருவரும் மாறிப் புக்கார் என்று கற்பிக்கலாம். பாங்கற்கூட்டம் என்பதற்கு மாறு பொருள் செய்யலாம். தலைவனது தோழனுக்கு தலைவியது தோழிக்குமே உறவு முடிச்சிட்டுத் தலைக்கதையுள் கிளைக்கதை பெருக்கலாம். தலைவன் தலைவி பாங்கன் பாங்கி என்ற நால்வகை மாந்தர் தம்முள் ஐயமும் பூசலும் பொற்றாமையும் சூழ்ச்சியும் காட்டி ஐந்திணைத்துறைகளை அகலக் கதையாக்கி எண்சுவைப்படுத்தலாம். இரவுக் குறிகளில் காதலர்கள் வருவதையும் போவதையும் உற்றறிந்த ஒரு கீழ்மகன் ஒருநாள் வழியிடைத் தலைவனைத் தாக்கினான்; தாக்கியபின் இரவுக் களத்துக் காதலனை எதிர்நோக்கியிருக்கும் தலைவியை அணுகிக் கைப்பற்றினான்; அது செய்யுங்காலை, தாக்குண்ட தலைவன் விரைவில் வந்து கீழ்மகனை வதைத்துத் தலைவியைக் காப்பாற்றிக் கவவினான் என்றெல்லாம், இரவுப் புணர்ச்சியை விரிக்கலாம். இத்தகைய கருத்துத் தொடுப்புகள் பொதுவாக இலக்கியத்துப் பயில்வனவே. எனினும், அவ்விலக்கியம் அகவிலக்கியம் ஆகாது. இன்ன கருத்தோட்டங்கள் அகத்திணைக்கு முற்றும் புறம்பானவை.

ஐந்திணை மாந்தர்கள் நிகழ்ச்சிக்கிடையயே இறந்தவர்கள் என்றும், இறப்பிற் புலம்பி அழுதார்கள் என்றும் கூறுதல் இல்லை. இரவுக்குறிக்குத் தலைமகன் வந்து போகுங்கால்,புலி கிழித்தது, யானை குத்தியது, பன்றி சாடியது, கரடி பிய்த்தது, வெள்ளம் ஈர்த்தது எனத் தலைவனது வீவினைக் கூறலாம். பலருக்கும் பெற்றோர்க்கும் அஞ்சிக் காதலர்கள் உடன் போகுவர், பன்னாள் நெடுவழி ஏகுவர். நடுவழியில் ஒருவர் இறந்தார், ஏனையவர் கதறி நைந்தார் என்று அவலச் சுவையாக முடிக்கலாம்.

நனிமிகு சுரத்திடைக் கணவனை இழந்து
தனிமகள் புலம்பிய முதுபாலை (தொல். 1024)

என்பர் தொல்காப்பியர். புறநானூற்றில் நான்கு பாடல்கள் (2536) உடன்போக்கில் அவல நிகழ்ச்சியைப் புனைகின்றன. எடுக்கவும் எழுந்திராது மண்ணுக்கு மார்பு அளித்தவனே! இடைச்சுரத்து உயிரை முடித்துக்கொண்ட மள்ளனே! நின் செய்தி கேட்பின் தாய் என்னாவாள் என்று ஒரு காதலி கலங்கித் துடிக்கின்றாள். ஐயோ என்று அலறின், குரல்கேட்டுப் புலி வந்துவிடும், வரின் உள்ள உடலையும் தழுவவிடாது தின்றுவிடுமே, என ஒரு காதலி விம்முகின்றாள். இவை தலைவி புலம்பும் முதுபாலைகளாம். சுரவழியில் தலைவியைப் பறிகொடுத்துத் தலைவனும் புலம்பலாம் அன்றோ? இன்ன நிலையாமைகளைத் தமிழர் அறியாதாரல்லர்; களவுக் காதலர்களுக்குக் கற்புப்படும்வரை சாவு வந்துறாது என்று நம்பினவர்களும் அல்லர்; நிலையாமைக்கு என்று புறத்தின்கண் தனியொருதிணை-காஞ்சித்திணை கண்டவர் தமிழர். எனினும் இந்நிலையாமைப் பகுதிகள் குறிப்பாகவேனும் அகத்திணைக்கண் வாரா. அகத்திணை காமத்திணையே யன்றிக் கவலைத் திணையன்று.

கற்புடைக் குமரியின் காதலனைப் பெற்றோர்கள் ஒத்துக் கொள்ளவில்லை; பிறனொருவனைக் கணவனாக்க வலிந்து முயன்று ஏற்பாடு செய்தபோது, அந்நங்கை தற்கொலை செய்து கொண்டாள் என்று நொதுமலர் வரைவுத் துறையைத் துன்பியலாக்கலாம். தம் காதல் எதிர்ப்புக்களைச் சமுதாயத்தில் தாங்கிகில்லாது, மேலுலகத்தில் ஒன்றாய் இணைவோம்,மறுமையில் 'ஒன்றாய்க் கூடுவோம் என்று நஞ்சுண்டு மாய்ந்தாரென முடிக்கலாம். களவுப் புணர்ச்சியில் மெய்யின்பத்திற்குத் தடையில்லை. பருவம்வந்த மக்கள் காதல் வாய்ப்படும்போது கலவியுற முந்துவர். கலவியுறின் கருவுறல் இயல்பினும் இயல்பே. எனினும் களவுக்காலத்துத் தலைவி கருவுற்றாள் எனவும், வயாவும் வருத்தமும் அடைந்தாள் எனவும் குறிப்பிற் கூறலும் இல்லை,இல்லை.

திருமணத்திற்குப்பின் கற்பொழுக்கத்தில் தலைவன் பொருள்வயிற் பிரிவான். அவன் போகும் கடும்பாலைச் சுரத்தில் நீர் இராது. நீர்மையற்ற கொடு மறவர்கள் இருப்பர். உயிர் அலைக்கும்

கொடு விலங்குகள் திரியும். நீரின்றி இறந்தான் என்றோ, மறவர்களும் விலங்குகளும் அலைப்ப உயிர் துடித்தான் என்றோ பாடுதல் இல்லை. கொலைபழகிய பாலையிற் செல்கின்றான் என்று கூறலாமேயன்றி, கொலைக்கும் அவனுக்கும் தொடர்பு செய்தல் இல்லை. தலைவியைப் பிரிந்து பரத்தையரைத் தேடி இன்புற்றுத் தங்குவான் என அகத்திணை மொழிவது உண்டு. எனினும் வேற்று நாட்டிற் சென்று பொருளீட்டுங்காலை, ஆண்டு பரத்தையர்களை நச்சி ஈட்டிய பொருளையெல்லாம் இழந்து வெறுங்கையனாய் வீடு திரும்பினான் என்று புகலுதல் இல்லைகாண். பிரிவாற்றாத் தலைவி காம சுரம் கைம்மிக்கு மெலிந்து நலிந்து உயிர் விட்டாள் என்று பகருதல் இல்லை.

இங்ஙனம் இங்ஙனம் கூறலாம், கருத்தினை வளர்த்துச் செல்லலாம் என்று காட்டுவதன் குறிப்பு என்ன? ஐந்திணைத் துறைகளுக்குள் விரிந்த புதினமும் ஆழ்ந்த சிறுகதையும் துடிக்கும் நாடகமும் எழுதத்தக்க மூலக்கூறுகள் உள. அத்துறைகளை மரபு விலகி விரிப்பின், உணர்ச்சி தாங்காது ஓடும், உள்ளம் வேகப்படும், கருத்துச் சிக்கலுறும். ஆதலின் இத்தகைய விரிப்புக்கள் ஐந்திணை நிலத்துக்கு ஆகாதவை, அழகு பயவாதவை. ஒருவன் அகப்புலவன் எனின், ஒழுங்குற்ற மரபுமுறைக்கும் முழுதும் ஒத்துப் பாடுவான், பாட வேண்டும்[1]. இன்ன வரம்புகளும் மரபுகளும் புலவன் தன் கற்பனைக்கு ஒல்லுமா? அவன் தன் சிந்தனைச் செல்வத்தைப் பெருக்குமா?எண்ண முனைப்பைக் கூர்மையாக்குமா? அகத்திணைப் புலவர்கள் என்ற தலைப்புடைய ஆறாவது இயலில் இதுபற்றிய விடை விளக்கத்தைக் காண்போம்.

XII

ஐந்திணை உரிப்பொருளின் இயல்பு

ஒரு சமுதாயத்தில் இல்லற மக்களின் மனநிலைகளும் பொருள் நிலைகளும் அறிவு நிலைகளும் பலப்பல. அன்னோர்தம் காம நாட்டங்களும் ஓட்டங்களும் பலப்பல. இயல்பான காதல் நுகர்ச்சிகளும் உள. புறம்பான வேட்கைகளும் உள. எல்லா இன்பப்பாங்குகளையும் அவற்றின் விளைவுகளையும் ஐந்திணை பாட எடுத்துக்கொள்ளவில்லை என்பது மேற்காட்டுக்களால் விளங்கி நிற்கும். பண்பட்ட காதலர்களிடை நிகழும் பக்குவப் பட்ட இனிய எளிய செவ்விய சிறந்த இன்பப்பான்மைகளைக் கொண்டதுவே நம் ஐந்திணை. ஐந்திணையிலக்கியம் அவாவற்ற பொருளடக்கம் உடையது. செறிவும் சீர்மையும் தழுவியது.

1. ஒ.நோ.டாக்டர் மு. வரதராசனார்; ஓவச் செய்தி. ப.163,

ஐந்திணை மாந்தர்கள் பலரல்லர், மிகச் சிலரே. அச் சிலராவாரும் குடும்ப உறுப்பினரே. தன்னைமறக்கும் இன்பத்திற்கோ, தன்னை ஆழ்த்தும் துன்பத்திற்கோ ஐந்திணை இடங் கொடுப்பதில்லை.

அகத்திணைக் களவு ஓராற்றால் அச்ச அவல ஆர்வவுணர்ச்சிகள் மிக்க நெறி எனினும், காதலனைத் தேர்வதில் மகளுக்கும் பெற்றோர்க்கும் நிகழும் வழிவழிப் போராட்டத்தைத் தானே ஆண்டு காண்கின்றோம். களவும் புரட்சி நெறியன்று, தொன்றுதொட்டு வரும் பாடல்சான்ற மரபு நெறியே என்று அறிக. மகளின் களவுக்கற்புக்கு முடிவில் விட்டுக்கொடுப்பார்கள் பெற்றோர்கள். ஏன்? மகளின் நல்வாழ்வையும் கற்புமேன்மையையும் முடிவில் அவர்கள் விரும்பாதவர்களா? தெத்திமோன் மூரன் ஒத்தல்லோவைக் காதலித்தாள். அக் காதலுறவினை அவள் தந்தை பிரபான்சியோ எதிர்த்துக் கோமகன் முன் முறையிட்டான். காதலர்களும் எதிருரையாடினார். "தந்தை பிறப்பளித்தான், படிப்பளித்தான், கடமையைச் செய்தான். அவன் மகளுக்குச் செய்ய வேண்டியதைச் செய்தான். இனி என் அன்னைபோல் நான் கணவனுக்குச் செய்யவேண்டியதைச் செய்யவேண்டும்" என்று வழக்குரைத்தாள் கற்பின் செல்வி.

வருக மூரே வருக வருக;
கொள்க மகளைக் கொடுப்பக் கொள்க;
உள்ளம் பற்றிய ஒருபெரும் பொருளை
உள்ளம் விரும்பி உனக்களிக் கின்றேன்

என்று பிரபான்சியோ மகளின் கற்பின் திண்மைக்குத் தலைவணங்கினான். "ஏறிய மடற்றிறம்" என்ற பெருந்திணைத் துறை குடும்பப் போராட்டத்தையும் கற்புக்குமுன் பெற்றோரின் தோல்வியையும் காட்டுவதாகும். பெற்றோர் இறுதிவரை போராடினார், விட்டுக் கொடுத்திலர், வருவது வரட்டும் என்று வம்பு பேசினர் என்று நிகழ்ச்சியை நீட்டித்தாலன்றோ, அளவிறந்த வேகவுணர்ச்சிகளுக்கும், இன்னா விளைவுகளுக்கும் இடனுண்டாம்?

திருமணத்திற்குப் பின்னும் வேக வெம்போக்குக்களுக்கு அகத்திணை இடன் அளிக்கவில்லை. தலைவன் பரத்தையை நாடி அலைகின்றான், வீட்டினை மறக்கின்றான். இவ்விழுக்கம் தலைமகளைப் பெரிதும் புண்ணுறுத்துகின்றது; உணர்த்தவும் உணராப் பிணக்கம் செய்கின்றான். "ஒருவர் பொறை இருவர் நட்பு" என்பது நல்ல தமிழியம்.தமிழ் மகள் இவ்வியக்கத்திற்குப் பெரும் எடுத்துக்காட்டு.தமிழ்ச் சமுதாயம் பெண்குலத்தைப் பொறுமைக் குலமாகப் பயிற்றுகின்றது.ஆதலின் கணவனது பரத்தமைக்காக மனைவி அவனை வெறுத்து ஒதுக்காள்; பிற எண்ணம் தன்னெஞ்சிற் புகவிடாள்; அவன் திருந்துமளவு நன்னயஞ் செய்வாள்.

வாழி ஆதன்! வாழி அவினி!
பால்பல ஊறுக பகடுபல சிறக்க
எனவேட் டோனே யாயே; யாமே
வித்திய உழவர் நெல்லொடு பெயரும்
பூக்கஞல் ஊரன் தண்மனை
வாழ்க்கை பொலிக எனவேட் டேமே (ஐங். 3)

தலைவன் புறத்தொழுக்கத்தில் திரிந்தபோது, தலைவி மிகப் பொறுமையோடு இல்லறச் சிந்தனை உடையவளாக இருந்தாள் எனவும், தலைவன் அறிவுவந்து மனைவாழ்க்கைக்குத் திரும்ப வேண்டும் எனத் தோழியர் தொழுதனர் எனவும், ஐங்குறு நூற்றின் முதலைந்து பாடல்கள் இயம்புகின்றன. தலைவனும் தன் போக்குத் தகாது என்று தெளிந்து திருந்தித் தலைவியோடு என்றும் நீங்காதிருந்தான் எனவும் அப் பாடல்கள் முடிக்கின்றன. இன்பமாயினும் துன்பமாயினும் உணர்ச்சிகளை உச்சியளவும் கொண்டு செல்லாது, நுனிக்கொம்பில் ஏறாது, காதல் நிகழ்ச்சிகளை அளவாக, அறமாக, நலமாக முடிப்பது ஐந்திணையின் இயல்பு. மேலும் ஐந்திணைக் காதற்றுறைகளில் அயலார், வெளியார் பெருவரவுக்கு இடமில்லை. ஏன் தலைவனது தாய் தந்தை முதலான உறவினர்க்குக்கூட இடமில்லை. எல்லோரும் தலைவியின் அணிய உறவினர்களே. ஆதலின் இகல், பகல், சூழ்ச்சி, முரண் எவையும் ஐந்திணைக்கண் தோன்றா. தலைவன் தலைவியிடத்துப் பேரன்பினன். ஆதலின், அவன் அவளது உறவினர்க்கு ஊறுபட யாதும் மேற்கொள்ளான்.

அறஞ்சா வியரோ! அறஞ்சா வியரோ!
வறனுண் டாயினும் அறஞ்சா வியரோ!
வான்வனப் புற்ற அருவிக்
கோள்வல் என்னையை மறைத்த குன்றே (ஐங். 312)

தலைவி மலையை வாழ்த்தும் பாடல் இது. ஏன் வாழ்த்துகின்றாள்? உடன்போகுங் காலத்து அவளது ஐயன்மார்கள் பின்தொடர்ந்து பற்றினர். அவர் வரவைக் கண்ணுற்றான் தலைவன். அவன் யாரையும் வென்றி கொள்ளவல்ல திறலினன் எனினும் தன்மானம் பார்த்திலன்; மைத்துனர்களை எதிர்த்திலன்; எதிரே நின்றால் ஒருகால் கதம் தோன்றும், இகல நேரிடும் என்று, என் செய்தான் அக் காதலன்? காதலியின் நலங்கருதி அருகிருந்த குன்றினுள் மறைந் துகொண்டான். தங்கை தனிமையும் காதலிளைஞன் தன் ஒட்பமும் அண்ணன்மார்களை நாணச் செய்தது. அவ்விடத்துக் குன்றொன்று இல்லாதிருந்தால் நிலை என்னாயிருக்கும் என்று ஒளிந்துகொள்ள உதவிய மலையை வாழ்த்துகின்றாள் தலைவி. ஐந்திணைக்கண் நிகழ்ச்சியும் எல்லைகடந்து செல்லா என இதனால் அறியலாம்.

அகத்திணைக்கண் துன்பியல் போல்வது ஒன்று உண்டெனின் அது பாலைத்திணையே எனவும். நீரற்ற மணலும் அன்பற்ற மறவர்களும் கிடக்கும் நெடுஞ்சுரத்தில் தலைவன் செல்வது பிரிந்திருக்கும் இல்லத் தலைவிக்கு உயிரலைக்கும் துன்பத்தைத் தரும் எனவும். இவ்வளவு தவிரத் துன்பமாக முடிவது அகவிலக்கியத்தில் விலக்கப் பட்டது எனவும் பேராசிரியர் சீனிவாச அய்யங்கார் குறிப்பதை ஒப்பு நோக்குக.[1]

ஐந்திணைக் காலம்

மக்கள் வாழ்க்கையில் ஒரு கால எல்லைக்குள் நிகழும் காதல் ஒழுகலாறுகளையே ஐந்திணை புனைய முற்படுகின்றது. பிறப்பு முதல் இறப்புவரை, குழமைமுதல் முதுமைவரை எல்லாவற்றையும் அது சொல்ல முற்படுவதில்லை. உள்ளத்தாலும் உடலாலும் பாலின்பம் துய்க்கவல்ல இருவர்தம் பருவத் தொடக்கம் ஐந்திணைத் தொடக்கமாகும். குமரமைக்கு முன்னிலை ஐந்திணைக்குப் பொருளன்று. பருவம் வாய்ந்த இருவர்தம் காமவுறவே அகத்திணைக்குப் பொருள் என்க. இளமைக்குப் பின்னிலையும் ஐந்திணைக்குப் பொருளில்லை. காதலர்கள் முதுமைக் காலத்து எப்படி வாழ்க்கை நடத்தவேண்டும் என்று கூறுவது அகவிலக் கியத்தின் கடனில்லை. இளமை வாரா முன்னும் ஐந்திணைக்குப் பேச்சுரிமை யில்லை.இளமை நின்றொழிந்த பின்னும் அதற்கு அவ்வுரிமை யில்லை. இளமைக் காலமே ஐந்திணைக் காலமாகும்; ஏன்? ஐந்திணையாவது காமம் நுதலுவது, புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் என்ற காமவினைகளைக் கொண்டது. ஒவ்வொரு வகை இலக்கியத்திற்கும் பொருள் வரம்பு உண்டு. ஐந்திணை யிலக்கியத்திற்கு காமக் காலமே, அக்காலச் செவ்வியில் தோன்றும் காதல் வினைகளே பொருளாம்.

ஐந்திணையாவது உள்ளப் புணர்ச்சியும் உடற் புணர்ச்சியும் இரண்டறக் கலந்த ஒருயிர்ப் புணர்ச்சியாகும். இவ்வடிப் படையில் ஐந்திணை நூற்பாக்களுக்கும் செய்யுட்களுக்கும் பொருள் காண வேண்டும். காமம் நிலையாது, மெய்யுறுபுணர்ச்சி தீது, துறவு மேற்கொள்ளாமல் நெடிது இன்பம் துய்த்தல் அறமாகாது என்ற கோட்பாடுகளை ஐந்திணைக்கண், அகத்திணைக்கண் காண முயலுதல் ஆண்வயிற்றில் கருக்காண்பதை ஒக்கும்.

காமத்தால் பயனின்மையை அறிவுறுத்தவே அகத்திணையை வகுத்தார் தொல்காப்பியர் என்று உரையாசிரியர் இளம்பூரணர் பொருளாதிகாரத்தின் முன்னுரையில் வலியுறுத்துவர். நூலாசிரியனது கருத்தை உரையாசிரியன் உணரவில்லை

1. History of the Tamils, p.67.

என்பதற்குச் சான்று வேறு வேண்டுங்கொல்? இளம்பூரணர் சமணம்; காமத்தைப் பாவம் எனவும், பெண்ணை அணங்கு எனவும் கருதும் சமயத்தவர். சமயம் தோன்றாக் காலத்து எழுந்த அகத்திணைக்குச் சமயச் சாயல் ஊட்டுகின்றார்.மதங்கள் உச்சநிலை எய்தும்போது, மக்கட்பேற்றிற்கு உரிய மெய்யின்பத்தைச் சிற்றின்பம் என இகழ்வதும், தாய்க்குரிய பாலார்களை வீட்டுத் தடையர்கள் என இகழ்வதும், வரலாறு காட்டும் படிப்பினை.

சமணப் புலவர் சீவக சிந்தாமணிக் காப்பியத்தை யாத்தது எற்றுக்கு? சீவகன் எட்டுப் பெண்களை மணந்தான்; முடிவில் அனைவரையும் துறந்தான் என்று கூறுவது எதன் பொருட்டு? பெண்ணின் சிறுமையையும் துறவின் பெருமையையும் வலியுறுத்தற் கன்றோ? இயல்பான இவ்வுலக வாழ்விற்கு இடைக்காலத்துப் பரவிய மதங்கள் முரணாக நின்றன என்பது வெளிப்படை. "மனிதனுக்குத் தன்னுடம்பும் பிறர் உடம்புகளும் இழிந்தன, 'அருவருக்கத்தக்கன என்று பட்டால், பாலுணர்வுக் கொள்கைகள் சிறக்குமா? சீர்படுமா? 'காதல் உடலை நாடும். உடல் இழிவுடைய தெனின், காதலர்கள் உயர்வு உடையவர்கள் ஆகி விடுவார்களா?' என்பர் ஏவலக் கெல்லீசர்[1]. உடலை மதியாத சமுதாயத்துக் காதல் மதிப்புப் பெறாது என்பதனைச் சங்கப் பின் இலக்கியங்களால் அறிகின்றோம். ஆதலின் இடைக்கால இளம்பூரணர் பண்டை அகத்திணைக்கு இயல்பான பொருள் காணாமை வியப்பில்லை.

தொன்மைத் தமிழினத்தின் உலகியல் நாட்டத்தை முன்னர்த் தெளிந்தோம். காதலே உயர்ந்த வாழ்வு என்பது அவ்வினத்தின் கோட்பாடு. காதற் புணர்ச்சியான காமக் கூட்டத்தில் இன்பத்தையும் பொருளையும் அறத்தையும் அன்பினையும் காண்கின்றார், காட்டுகின்றார் தொல்காப்பியர். காதலுறவை அன்பெனவும் அருளெனவும் போற்றிப் பாராட்டினர் தமிழ் முன்னோர். "ஐதே கம்ம மெய்நோய் நட்பே" என்பது (401) குறுந்தொகை. "பெரிது அமர்ந்து இயைந்த கேண்மை" என்பது (256) நற்றிணை.

அருளும் அன்பும் நீக்கித் துணைதுறந்து
பொருள்வயிற் பிரிவோர் உரவோ ராயின்
உரவோர் உரவோர் ஆக
மடவம் ஆக மடந்தை நாமே (குறுந். 20)

பொருள் இருந்தாற்றான் அருள் செய்யலாம். அன்பு பெருக்கலாம் என்று தலைவன் பிரிகின்றான். தலைவியின் கருத்து என்ன? காதலியைப் பிரிதல் உரமாகாது, அருளாகாது, அன்பாகாது என்கின்றாள். இல்லறநல்வாழ்விற்குப் பெண்ணின் பொறுப்புப்

1. Havelock Ellis: Psychology of Sex. Vol. II
The Valuation of Sexual love, p. 118

பெரிது என்பதும், ஆடவன் வாழ்விற்கும் பண்பிற்கும் அவளது துணை இன்றியமையாதது என்பதும், உடல் உள்ளம் உயிர் என்ற முத்திறமும் ஒத்தியயைந்து வளர்தற்குக் காமக் காதல் சிறந்த உணவாகும், உரமாகும் என்பதும் தமிழினக் கொள்கைகளாம்.

XIII

அகத்திணை சமுதாயத்தின் பொதுவிலக்கியம்

இறையனார் அகப்பொருள் உரையாசிரியர் ஐந்திணையாவது இல்லது இனியது நல்லது என்று புலவரால் நாட்டப்பட்டதோர் ஒழுக்கம் எனவும், உலக வழக்கோடு இயையாது எனவும் ஒரு பெருங்கருத்தை எழுதியுள்ளார். இக்கருத்து இகலின்றி ஆராய்தற்கு உரியது. 1. புலவர்கள் கற்பித்த ஒழுக்கம். 2. உலக வழக்கில் இல்லாத ஒழுக்கம். 3. இல்லை எனினும் கற்பனையாற் படைத்ததற்குக் காரணம் இனிய ஒழுக்கம். 4. நல்ல ஒழுக்கம் என்ற நான்கு கூறுகள் இவர் கருத்தில் அடங்கியுள. இனியது நல்லது என்ற கூறுகளை நாமும் ஒத்துக் கொள்கின்றோம். ஐந்திணைக் காதல் தமிழ்ச் சமுதாயத்தில் காண்கில்லா அரிய பொருளா? மலடி பெற்ற நொண்டி முயற்கொம்பை ஏணியாகக் கொண்டு படிவைத்து ஏறிச் சென்று வானத்துக் கருந்தாமரையை வாயாற் பறித்துப் பேரனுக்குப் பிறந்த நாட் பரிசாக அளித்தான் என்பது போலும் கட்டுக் கதையா? முழுதும் புலவர்தம் கற்பனைப் படைப்பா? சங்க இலக்கியம் புராணத்திலும் பெரும் புராணமா? இல்லது என்று புலவரால் நாட்டப்பட்டது என்னும் உரையாசிரியர் கொள்கை அதிர்ச்சி தருவதாகும்.

ஐந்திணைக்கண் சமுதாயத்தில் நிகழும் பல்லாறான காதல் நிலைகளும் போக்குக்களும் இடம் பெற்றில என்பது மெய்யே. அதனால் இடம் பெற்றுள்ள காதல் நிலைகளும் போக்குக்களும் பொய் என ஆகுங்கொல்? நூல் நிலையம் என்றால் வெளியிட்ட எல்லா நூல்களும் இருக்கவேண்டும். அஃது இயலுமா? இயலுமாயினும் சிறக்குமா? அறிவுப் பெருக்கத்திற்கு இன்றிய மையாத நூல்கள் இருப்பதுவே நூல்நிலையம். அதுபோல் அன்புப் பெருக்கத்திற்கு இன்றியமையாத காதற்றிறங்கள் இருப்பது ஐந்திணை என அறிக ஐந்திணை பாடும் காதற் கூறு எது அது உலகவழக்கில் இல்லாமல் இல்லை. இடைக்காலத்துத் தோன்றி கோவையிலக்கியங்கள் அகத்துறைகளெல்லாம் ஒரு தலைவன் ஒரு தலைவிபால் முறையாக நிகழ்ந்தனபோல வரிசைப்படுத்திச் செய்யுள் தொடுத்துள்ளன. இவ்வளவும் இருபால் இப்படி நிகழுங்கொல் என்று கருதி, அகப்பொருள் நடைமுறையில் இல்லை, இஃதோர் கட்டுரை என்பர் ஒருசாரார். அகம் கூறும் காதல்களுக்கு காதல்

மருவல்களும் இயற்கைக்குப் புறம்பானவையல்ல, மனித வியல்புக்கு அப்பாற்பட்டவையும் அல்லவே. இயற்கையும் இயல்பும் பொருந்திய காதல் மாண்புகள்தாம் நடைமுறையில் பரந்து காணத்தக்கவை.

மக்கள் நுதலிய அகனைந் திணையும்
கட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெறாஅ (தொல். 999)

என்பது அரிய பெரிய நூற்பாக்களுள் ஒன்று. இங்கு, மக்கள், என்னும் சொல் மானிடச்சாதியை அல்லது சமுதாயத்தைப் பொதுவாகக் குறிக்கும். இந்நூற்பாவால் தொல்காப்பியர் காட்டும் நுண்ணிய கருத்து என்ன? ஐந்திணையில் வரும் காதற் பான்மைகள் தனியொருவர் வாழ்க்கையில் அப்படியே நிகழாதவை; சமுதாய முழுமை நோக்கின் எல்லாம் நிகழ்பவை. எனவே ஐந்திணைக் காதல் உள்ளது என்று பெறப்படும். எல்லாக் காதற்றுறையும் ஒரு தனியார் பால் காணப்படாவிட்டாலும், ஒவ்வொரு காதற்றுறையும் ஒவ்வொருவர்பால் ஆங்காங்குக் காணப்படுதலின், ஐந்திணை முழுதும் சமுதாய மக்களிடத்துப் பரந்து கிடக்கும் காதலாகவே கொள்ளவேண்டும். உயிர்க் காட்சிச்சாலை என்பது உலகத்து உள்ள உயிரினங்களை வகைக்கு ஒன்றாகக் கொண்டு வந்து ஓரிடத்துத் தொகுத்து வைத்திருக்கும் பொது நிலையமாகும். பார்த்தால் அச்சாலையே ஒருலகம்போலத் தோன்றும். இடைக்காலத்து யாத்த கோவையிலக்கியம் பல காதற்கூறுகளையும் ஒருபால் தொகுத்துத் தொடுத்துக் காட்டுதலின், அது உயிர்க் காட்சிச் சாலை போன்றது.[1] அதனைக் காதற் காட்சிச் சாலை என்று அழைக்கலாம். இயல்பாக எல்லா உயிரினங்களும் ஓரிடத்துக் குழுவாகத் தோன்றி வளர்ந்து நிலையாக வாழ்வதிலைகாண். ஒவ்வொர் இனமும் தனக்கேற்ற சூழ்நிலையில் வேறுவேறிடத்து வதிகின்றது. இதுதான் இயற்கை. தமிழர் கண்ட ஐந்திணையும் இன்ன தகைத்தே; தனித் தனி இயல்புடையதுவே[1].

தொல்காப்பியர் அகப்பொருளை ஒருவர் வழக்காகக் கருதவில்லை; உலகியல் வழக்காகவே (தொல். 698) கருதினார். ஐந்திணைத் துறைகளே ஒன்றன்பின் ஒன்றாக நிகழ்வு முறைப்படி ஆசிரியர் கூறவில்லை. தலைவன் தலைவி தோழி செவிலி என்றாங்கு மாந்தர்கள் நிலையில் வைத்தே காதற்றொடர்புகளை நூற்பித்துள்ளார். அதனால் காதலுறுப்பினர் தம் உள்ளோட்டங்கள், உணர்வுகள், உணர்ச்சிகள், வேட்கைகளை நாம் அறிகின்றோம். காதலியக்கத்தை நிரல் படச் சுட்டாமல், ஒவ்வோர் ஆளுக்கும் உரிய காதற் பாகங்களைத் தொகுத்துச் சுட்டியுள்ளனர். கூற்றுவகைபட ஆசிரியர் யாண்டும் சொல்லிச் செல்லுதலின் ஐந்திணை ஒரு தொடர் கதையாக நம் எண்ணத்துப்படுதற்கில்லை. அகப்பொருளின் அமைப்புப் பற்றிப் பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்

1. Cf V. V. S. Aiyar: The Kural: preface

எழுதியுள்ள அரிய விளக்கமாவது: "கதைப் போக்கன்று இங்கு நோக்கம்; பலபல நிலைகளில் விளங்கும் இன்ப அன்பின் சிறப்பு நிலையைக் காண்பதே நோக்கம். அந்த அநுபவ நிலையைத் துய்த்தவர் அன்றி, வேறொருவர் அதனைப் பேசுவதற்கு இல்லை. பேசினால் கதையாகிப் புறப்பொருளாகும். அநுபவித்தவர்களே அந்த அநுபவத்தின் போக்கு வீடாகப் பேசுவது கதையன்று; அவர்கள் வாழ்க்கையின் நிகழ்ச்சியாம். நாடகப் பேச்சுக்கள் இவ்வாறன்றோ அமைகின்றன? ஆதலின் அகப்பாட்டுக்களைத் தனித்தனி மணியாகக் கொண்டு தொல்காப்பியரும் வள்ளுவரும் கண்டு களிக்கின்றனர். எனவே கூற்று வகையால் காமத்துப்பாலைப் பாடுந் தமிழ் மரபு வேறு எந்த மொழியிலும் காணாத புது மரபு எனலாம்."[1]

அகத்திணையின் பொதுவமைப்பையும் ஐந்திணையின் சிறப்பமைப்பையும் தெரிந்து தெளிந்து கொள்வோமேல், சங்க அகப்பாடல்கள் தனிச் செய்யுட்களாகவும், ஒருதுறைச் செய்யுட்களாகவும் தோன்றிய காரணம் புலனாகும். அகத்திணை ஒருதிணையன்று, எழுதிணை; ஓர் உரிப்பொருள் உடையதன்று, ஏழு உரிப்பொருள் கொண்டது. ஐந்திணையும் ஒரு திணையன்று; ஓர் உரிப்பொருள் கொண்டதுமன்று. ஐந்திணை என்று பெயர் வைத்ததும்,புணர்தல்,பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்று உரிப்பொருள்களைத் தனித்தனியாகக் கொள்ளுவதும் காண்க. அகத்திணைத் துறைகள் தம்முள் தொடர்பற்ற பெற்றியைச் சங்கப்புலவோர் நன்கு அறிகுவர். முறையாக வளர்ந்தோங்கிய அற்றைத் தமிழ்க்கவி அகத்திணையின் முறைகளைக் கசடற மாணவர்க்குக் கற்பித்தது ஆதலின் பிறழ உணர்தற்கும், உணராது பாடுதற்கும் இடமில்லைகாண். அகம் பாடிய புலவோர் நானூற்றை அடுத்தவர் எனினும், யாருமே அகத்திணை முழுதையும் ஒரு கதையாகக் கோவையாக நிரலாகப் பாடியதிலர்.

பத்துப் பாட்டுள் நான்கு அகப்பாட்டுகள் உள. முல்லைப் பாட்டு 103; நெடுநல்வாடை 188; குறிஞ்சிப்பாட்டு 261; பட்டினப்பாலை 301 அடிகள் உடையன. பரிபாடலில் வரும் 8 அகப்பாடல்கள் 32-140 அடியெல்லை அளவு நீளுவன. கலித்தொகையின் 149 பாக்கள் 11-80 அடி நீளம் கொண்டன. ஐங்குறுநூறு குறுந்தொகை நற்றிணை அகநானூறு என்ற தொகை நான்கிலும் கூடிய 1701 பாடல்கள் 3-31 என்ற அடியளவில் அமைந்தன. இங்ஙனம் சங்கப் பனுவலில் தொகைப்பட்ட 1862 அகச்செய்யுட்கள் நீளத்தில் கூடுதல் குறைதல் கொண்டனவாயினும், எல்லாம் ஒரு காதல் நிகழ்ச்சியையே-ஒரு துறையையே-பொருளாக உடையன; ஒரு

1. வள்ளுவர் கண்ட நாடும் காமமும், ப.195

பாடற்கு ஓர் உரிப்பொருள் என்ற மரபில் அமைந்தன. அகவிலக்கியத்துள் பட்டினப்பாலைதான் 301 அடி பொருந்திய பெருநெடும் பாட்டாகும். தலைவன் செலவழுங்கல் என்பது இதன் துறை.

முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய
வாரேன் வாழிய நெஞ்சே (218-20)

வேலினும் வெய்ய கான மவன்
கோலினும் தண்ணி தடமென் தோளே (300-1)

என்னும் அடிகள் ஐந்தே துறைக்குப் பொருந்திய அடிகள், பிறவெல்லாம் காவிரிப்பூம்பட்டினத்தின் வளத்தையும் திருமா வளவனின் மறத்தையும் புகழ்வன. இதனால் அகத்திணைப் பாடல் பார்வைக்கு நீண்டிருப்பினும், ஒருதுறைக்கு அடங்கி ஓரளவு விரிவுக்கே இடங்கொடுக்கும் மென் காதலுடையது என்று தெளியலாம்.

பிற தொகைகள் போலாது, ஐங்குறு நூறும் கலித்தொகையும் மிகச் சிலரால் பாடப்பட்டவை. ஒவ்வொரு திணையையும் பாடினோர் வெவ்வேறாவர். கலித்தொகையில் நெய்தற்றிணைக்கு நல்லந்துவனார் ஆசிரியர். இவர் 33 செய்யுட்கள் அல்லது 1032 அடிகள் தொடர்ந்து யாத்துள்ளார். ஐங்குறு நூற்றில் பாலைத்திணைக்கு ஓதலாந்தையார் ஆசிரியர். இவர் நூறு ஆசிரியச் செய்யுட்கள் அல்லது 451 அடிகள் ஒருங்கேவரப் பாடியுள்ளார். இங்ஙனம் பாக்கள் பலவும் வரிசையாகத் தொடுத்த புலவர்கள்கூட அகப்பொருளைத் துறைவரிசையாக எழுத நினைக்கவில்லை.[1] களவும் கற்பும் அவற்றின் துறைகளும் முன்னும் பின்னும் மாறிவரக் காணலாம். பாலை பாடிய பெருங்கடுங்கோவும், குறிஞ்சி பாடிய கபிலனும், மருதம் பாடிய இளநாகனும், முல்லை பாடிய நல்லுருத்திரனும், நெய்தல் பாடிய நல்லந்துவனும் இன்ன சிலரும் ஒரு திணை வல்லுநர்கள். வெறி பாடிய காமக்கண்ணியார், மடல் பாடிய மாதங்கீரனார், மகட்போக்கிய செவிலித்தாய் பாடிய கயமனார் என்போர் ஒருதுறை வல்லுநர்கள். இங்ஙனம் ஒருதிணை ஒருதுறை வல்ல புலவர்கள் சங்க காலத்து இருந்தனரேயன்றி முற்றும் அகத்திணை ஐந்திணை பாடிய புலவர் என்போர் அக்காலத்து இலர். அதற்குக் காரணம் அகத்திணை நிரல்பட நிகழ்ச்சிகளைப் பாடத்தக்க ஒரு பேரிலக்கிய அமைப்புடையது அன்று என்பதுவே. ஏறக்குறைய இருநூறு பாடல்கள் யாத்த பெரும்புலவர் கபிலர் கூடத் தொடர்நிலைச் செய்யுட்களாகத் துறைகளை எழுதிலர் என்பது நினையத்தகும்.

1. ஒ.நோ. வேங்கடராசுலு ரெட்டியார்; கபிலர், 81

மேலை விளக்கத்திலிருந்து இரண்டு உண்மைக் கூறுகள் தெளிவாகின்றன. ஐந்திணைக் காதல் உலகத்தில் உள்ள ஒழுக்கமே; அதன் கூறுகள் அனைத்தும் ஒரு காதற் சோடியரிடத்து நிகழ்வதில்லை; சமுதாய முழுமை நோக்கின், அவை நிகழாமலும் இல்லை என்பது ஓர் உண்மை. சமுதாயத்தில் பல்வேறு காதலர்களிடைச் சிற்சிலவாகப் பகிர்ந்து காணப்படும் காதல் நிலைகளாதலின், சங்கச் சான்றோர்கள் ஐந்திணையை முழுத்திறமாக இயைத்துப் பாடிற்றிலர்; ஒவ்வொரு காதற்றுறையையும் தனித்திறமாகப் பாடி முடித்தனர் என்பது மற்றோர் உண்மை. சங்கப் பனுவல்கள் தொகை நூல்களாகவும், சங்க அறிஞர்கள் தனிப்பாட்டுப் புலவர்களாகவும் விளங்குவதற்கு உரிய வரலாறு இதுவே. இதனால் சங்கத் தமிழ்க் காலத்துச் சிறுகதை, புதினம், நாடகம், காப்பியம் முதலான இலக்கியப் பெருவகைகள் இல்லை, தோன்றவில்லை என்று பொருள் கொள்ளலாமா? தமிழிலக்கியம் அகம் புறம் என்ற இரு பிரிவினுள் அடங்கும் எனவும், வேறுவகை இலக்கியம் தமிழ் மொழியில் பண்டு முகிழ்க்கவில்லை எனவும், பொதுவான பிழையான ஒரு நம்பிக்கை இன்று கற்றாரிடையும் கற்பாரிடையும் நிலவி வருகின்றது. காதலையும் வீரத்தையும் திணை துறைபட நெறிப்படுத்திய இலக்கணச் சிறப்பு தமிழுக்கே உரியது. ஆதலின், பண்டைத் தமிழ்ப் புலவர்கள் அகப்பாட்டுப் புறப்பாட்டுக்களை பாடுதல் என்பது உரிமையும் கடமையும் ஆயிற்று. தமிழ் இலக்கண ஆசிரியர்களும் அகத்திணை புறத்திணை இலக்கணங்களை வழிவழி நூற்பிப்பது முறையாயிற்று. இவ்விரண்டும் தமிழுக்கே உடைய சிறப்பிலக்கியங்கள், சிறப்பிலக் கணங்கள், பொது இலக்கிய வகைகளும் நம் மொழிக்கண் உள என்பதைத் தொல்காப்பியம் தெளிவாக்கும்.

> **அம்மை அழகு தொன்மை தோலே**
> **விருந்தே இயைபே புலனே இழையெனாஅப்**
> **பொருந்தக் கூறிய எட்டு** *(தொல். 1258)*

என்றபடி எட்டு வகையான பிற இலக்கியங்கள் இருந்தன எனவும், இவை "வனப்பு" என்ற பொதுப்பெயரால் வழங்கப்படும் எனவும், வரலாறு, பழம்பொருள், புதுப்பொருள் என்ற கருத்து நிலைக்களத்தில், பல்வேறு யாப்பில் இவை செய்யப்படும் எனவும், செய்யுளியல் ஓரளவு விதந்து கூறுகின்றது. இவ்விலக்கியங்கள் பற்றிய விரிவான இலக்கணம் தொல்காப்பியத்தில் இல்லை. நினைத்த பொருள்மேல் நினைத்த யாப்பின் வழி நினைத்த அமைப்புத் தழுவி இவற்றைச் செய்யும் உரிமையைப் புலவர்க்கு விட்டுவிட்டனர் போலும். இவ்வெட்டினுள் அகமும் புறமும் அடங்கவில்லை என்பதை நினைத்துக் கொள்மின். இவ்விரண்டும் பொருள்வரம்பும், சொல்லும் முறைவரம்பும் உடைமையின், தொல்காப்பியர்

இவற்றிற்கே பொருளதிகாரத்தை எழுதினார் என்று கொள்மின். இவ்விரண்டினையும் சேர்ப்பின் தொல்காப்பியர்காலத் தமிழ் பத்துவகை இலக்கிய வளம் உடையதாகும்.

XIV

ஐந்திணையும் பரத்தையொழுக்கமும்

தமிழ்நாட்டில் பரத்தைக் குலம் எப்படித் தோன்றி வளர்ந்தது என்பது பற்றியோ, ஆண் பலநிலைப் பாலுணர்ச்சியுடையவன் என்பதுபற்றியோ இங்கு ஆராய முற்பட்டிலேன். ஐந்திணைக்கண் தலைவனது பரத்தமை கூறப்படுதல் ஒழுங்கா? என்பதுவே ஈண்டு ஆராய்ச்சி. இவ்வினா பல்காலும் வினவப்படும் ஒன்றே எனினும், எல்லோரும் இசையுமாறு விடைகூறல் ஒல்லுவதன்று காண். மனித வாழ்க்கையில் பல்லாறாக நிகழும் நல்ல, தீய காமக்கூறுகளை யெல்லாம் ஐந்திணை சொல்ல முயலவில்லை எனவும், செவ்விய இனிய சில காமநிலைகளையே வடித்தெடுத்துச் சொல்லும் பண்பிலக்கியம் எனவும் முன்னர்க் கற்றோம். சமுதாயத்தில் நிகழுமாயினும், தகாதனவற்றை எடுத்துக் கொள்ளாது, செம்மை சான்றவற்றைத் தழுவிய ஆக்க இலக்கியம் என ஐந்திணையைக் கூறலாம். பொருள்வரம்பும் நல்லொழுங்கும் தெளிந்த அமைப்பும் பெறுமாறு அறிஞர் படைத்த ஐந்திணைக்கண், ஆகாப் பரத்தையிற் பிரிவைச் சேர்த்திருத்தல் பொருந்தாது என்பது மிக வெளிப்படை.

பல்வேறு கருத்துரைகள்

அகப்பொருள் இயல்பான காதலைக் கூறுவது; விறுவிறுப்பும் எழுச்சியும் இல்லாதது; பரத்தைக் காதலை ஒரு பொருளாகச் சேர்ப்பின், கணவன் மனைவியின் ஊடற் போரை இகலும் பகலும் காட்டிக் கூரிய உணர்ச்சிச் சொற்களால் இல்லக்களத்தை எதிர்குதிராகப் பாடுவர் புலவர்; அதனால் அகவிலக்கியம் நயமும் நாட்டமும் உடையதாகும் என்ற வனப்புக்கருதிப் பரத்தைப் பகுதி ஐந்திணையில் இடம் பெற்றதா? இஃதோர் கருத்துரை. தொடர்கதை அல்லது தொடர் பொருளுக்குத்தான் விறுவிறுப்புக் குன்றாவாறு காத்துக்கொள்ள வேண்டும்; பிறவற்றை இடைமடுத்து உயிர்ப்பு உடையதாக்கல் வேண்டும். தையல் சட்டைக் கன்றித் துண்டுக்கு உண்டா? அகத்திணைதொடர் பொருளன்று ஆதலின், இலக்கிய நயத்திற்கென்று ஒழுக்கநயம் இல்லாத பரத்தை வரவு வேண்டுவதில்லை. கற்பவர்க்கு அதிர்ச்சியும் ஆரவாரமும் கிளர்ச்சியும் தோன்ற அகத்திணையைப் பதப்படுத்த வேண்டும் என்று படைத்தோர் எண்ணியிருப்பின், பாங்கன்காதல் தோழிகாதல் அயலான்காதல் காதல் மாற்றம் காதற்காதல் களவிற் குழந்தை

என்றின்ன பகுதிகளை இணைத்தும் புதினமாக நாடகமாகச் சிறுகதையாகச் சுவையூட்டியிருக்க மாட்டார்களா? பரத்தை நாட்டத்தைக் கூறுவதால், இலக்கியம் பழுத்த கனியாகி விடுமா?

தலைவன் எத்துணைக் கொடுமை செய்யினும் தலைவி தன் கற்பினின்றும் சிறிதும் கலங்காள் என்பதனை வெளிப் படுத்துவதற்கே பரத்தமையைப் புலவர் புனைந்துரைத்தனர் என்பது ஒரு கருத்துரை.[1] தலைவியது கற்புடைமையைக் காட்டுதற்காகத் தலைவனை நிறையிலன் ஆக்க வேண்டுமா? தலைவன் நிறைஞனாயின்,அதுதலைவியின் கற்புக்கு மேலும் பெருமை தருமன்றோ? தன் கற்புக்குச் சான்றாகக் கணவன் பரத்தமையாடலை எக்கற்பியும் விரும்பாள். இருவரும் ஒத்த நிறையாளர் என்பதுவே இனிய பெரிய இல்லறம். மனைவி நன்கு ஊடல் வேண்டும், ஊடல் மிகின் இன்பம் மிகும் என்பத்ற்காகக் கணவன் பரத்தையை நச்சிப் பிரிவான் என்ற கருத்து உண்டு.[2] மருதத்திணையின் உரிப் பொருளாவது ஊடல். இவ்வூடல் தலைவனது புறவொழுக்கம் காரணமாக வருவது என்று பலர் கொள்ளுவர். கூடலுக்கு இன்றியமையாத முன்னொழுக்கம் ஊடல், அது தலைவனது பரத்தையொழுக்கச் செயலால் பிறப்பது எனின், அங்ஙனம் தோன்றும் ஊடலொடு கூடலும் நல்லின்பம் பயவா. ஐந்திணையுள் ஒன்றான மருதத்திணையை நாகரிகமற்ற திணை யாகவே சான்றோர் கருதுவர்மன்.

ஊடற் கருத்து

தான் ஊடவேண்டித் தன் கணவன் ஒழுக்கம் புறம் போய் வருவதை ஒரு மகளும் விரும்பாள். பரத்தைப் பிரிவுப் பாடல்கள் சங்க இலக்கியத்தில் எண்ணில. நீ ஊட யான் பிரிந்தேன் என்று தலைவன் எவனும் கூறினானல்லன், நின்பிரிவு என் ஊடலை மிகுத்தது, நம் கூடலை வளமாக்கிற்று என்று எத்தலைவியும் கூறினாளல்லள். பெண்ணுக்கு ஊடல் பிறப்பியல்பு. பருவம் ஏறஏற ஊடுமியல்பும் உடன் வளர்கின்றது. ஊடல் இதுவெனப் பெண்ணிற்குக் கற்றுக் கொடுக்க வேண்டியதியல்லை. கற்றுக் கொள்ளும் நிலையில் ஒருத்தி இருப்பாளேல், அவள் பெண்மையுடையவள் ஆகாள். பாயற் காலத்துக் கணவனது இயல்பான சொல்லும் இயல்பான நிலையும் மனைவிக்குப் புலவிப் பொருளாகும்.இது பற்றி வள்ளுவம் என்னும் நூலில் வரும் விளக்கத்தைக் காண்க.

"புலவி நுணுக்கமாவது யாது? ஓரமளிக்கண் இனி திருக்கும் கணவன்மனைவி குடும்பச்செய்திகளைப் பேசலாகாது. குடிப்பேச்சுக் காரணமாக எழும் புலவி கருத்து வேற்றுமைக்கு இடனாகிப் பாயற்

1. கலித்தொகைச் சொற்பொழிவுகள். ப. 13
2. இறையனார் அகப்பொருள் உரை. ப.214
திருக்கோவையார் உரை, ப. 354

பயனைக் கெடுக்கும். ஊடற்குப் பற்றும் காரணங்கள் ஊடும். அப்பொழுது தோன்றிப் புணர்ச்சியோடு அழியவேண்டும் என்பது வள்ளுவம். ஊடற்கு முன்னும் புணர்ச்சிக்குப் பின்னும் நின்று நிலைக்கும் நீடிய செய்திகளைப் புலவிக்காலப் பொருளாகக் கொள்வரேல், இன்பத்தோடு மன நலமும் கெடும் என்பது ஒருதலை. 'நீர் கிழிய எய்த வடுப்போல மாறுமே சீரொழுகு சான்றோர் சினம்' என்பது ஒப்ப, அறிவுக் காதலர் தம் புலவிக் காரணம் கூடுங் கூட்டத்துப் பிறந்து ஆண்டே மறைய வேண்டும். 'இப்பிறப்பில் நின்னைப் பிரியேன்' என்றான் தலைவன்; மறுபிறப்பில் பிரிவான் என்று கருத்துக்கொண்டு, தலைவி ஊடினாள். 'யாரினும் நின்பால் காதலுடையனே' என்றான் தலைவன்; யாரினும் என்ற சொல்லுக்குத் தன் கணவன் காதலிக்கும் மகளிர் பலருள்ளும் என்று கருத்துக் கொண்டு தலைவி புலர்ந்தாள். 'வேற்றுநாட்டிடைப் பிரிந்த காலத்து நின்னை நினைத்தேன்' என்றான் தலைவன்; நினைப்பு என்பது ஒருகால் மறந்திருந்தார்க்கன்றோ தோன்றும் என்பதாகக் கருத்து வாங்கிக்கொண்டு இன்பக் காய்வு காய்ந்தாள் தலைவி. இவ்வெல்லாம் சொல் நுணுக்கம் தலைக்கீடாய் எழுந்த ஊடற் செய்திகள். தலைவன் பூச்சூடுதலும், தும்முதலும், அஞ்சித் தும்மல் அடக்குதலும், காதல்மிகுதியால் இமையாது தலைவியின் உறுப்புக் களை நோக்குதலுங்கூட, ஊடற்காரணங்களாய் முடிகின்றன. இன்பக் கிளர்ச்சி செய்யுங் கருத்துக் கூர்மைமட்டும் புலவி நுணுக்கம் அன்றுகாண்; அக் கூரிய சுவைக்கருத்தும் முன்னும் பின்னும் தொடராது, எழுதச் சீவிய கோலின் கூர்மை எழுதுங்கால் ஒடிந்துவிடுதல்போல ஊடலோடு தேய்ந்து அழிவதும் புலவி நுணுக்கம் ஆகும்".

ஊடலுக்கு உண்மையான காரணம் கூடாது. பரத்தையிற் பிரிவுபோலும் உண்மையான காரணம் இருப்பின், மனைவியின் உள்ளத்துள் எவ்வாறும் வருத்தம் ஆழ்ந்து கிடக்கும். கூடும் ஆர்வம் தோன்றாது. கூடினாலும் பெண்ணுள்ளம் மகிழாது. கற்பிதக் காரணம் தூய ஊடலை அளிக்கும். புறத்துச் செயல்கள் மிகுதியுடைய கணவன் நல்லவனாயினும், அவன்மேல் நம்பாத பார்வை ஓடிக்கொண்டிருக்கும் தலைவிக்கு. சமுதாயத்தில் ஆடவனுக்குக் கற்பு வரம்பு இல்லாமையே அவள் தன் ஐயப்பார்வைக்குக் காரணம். பரத்தை நாட்டம் உடையவனாக, வேண்டுமென்றே உட்கொண்டு, "நண்ணேன் பரத்த நின் மார்பு" (குறள். 1311) என்று புலப்பாள். தலைவனும் 'என்னை அங்ஙனம் கூறலாமா? பழிக்கலாமா?' என்று வெகுளமாட்டான். அவள் தன் பொய்ப்பழியை அமளிப் பொருளாக மதித்து இன்பம் மலிவான். ஆதலின் மெய்யான பரத்தையிற் பிரிவு தலைவிக்குப் புலவிப் பொருளாம் எனக் கூறுதல் இன்ப அடிப்படைக்கு எதிராகும்.

ச.16.

தலைவியின் ஊடலுக்குக் காரணம் வேண்டும் என்பதற்காக இப்பரத்தையிற் பிரிவு அமைந்தது என்பது அத்துணைச் சிறந்த காரணமாகத் தோற்றவில்லை என்று உடன்படுவர் டாக்டர் உ.வே.சா.[1]

பண்பில் கருத்துக்கள்

ஐந்திணைக்கண் பரத்தை இடம் பெற்றது பற்றி இன்னும் சில கருத்துரைகள் உள. நாள்தோறும் பால் குடிப்பவன் அதன் இனிமையை அறியான். புளிக்கும் காடியை இடையே ஒருகால் அருந்துவானாயின், பாலின் இன்சுவை அவனுக்கு விளங்கும். நிழலருமை வெயிலில் சென்றாற்றானே தெரியவரும். அதுபோல் கற்புடையாளின் தூய பேரின்பத்தைக் கண்டறிதற்காகத் தலைவன் வரைவில் மகளிரைச் சார்ந்து திரிவான் என்பது ஒரு கருத்து. புறமகளிர் ஆடியும் பாடியும் அழைக்கும்போது அன்னவர் காதலைத் தலைவன் மறுக்கான். ஏன்? அவன் எல்லோர்க்கும் தலைவன், காதலிப்பார்க்கெல்லாம் காதலன் என்பது ஒரு கருத்து. ஒரு தலைமகள் மணப்பதற்கு முன்னேயே, தலைவனுக்குப் பரத்தையர் உண்டு; அப் பரத்தையர் யாரெனின் அவனுக்கென்று அவனது பெற்றோர்களால் வகுத்து வளர்க்கப்பட்டவர். குரவர் பணியைக் கொள்ளுதல் கடன் என்ற நன்னோக்கத்தால்,தலைவன் அப் புறமகளிர்களை நயப்பான், காதலாடுவான் என்பதும் ஒரு கருத்து. தன் மனைவியின் இன்பத்தோடு ஒப்பிட்டுக் காணவும், தான் எல்லார்க்கும் தலைவன் என்பதைக் காட்டவும், பெற்றோர் பணிக்கு அஞ்சியும், ஆடவநம்பி, பரத்தையிற் பிரிவை அறிவோடு மேற்கொள்வானே யன்றி, கேண்மின்! தனக்கின்பம் வேண்டிப் பிரியானாம்; காம ஆசை துரப்பச் செல்லானாம். சுருங்கச் சொல்லின், இவ்விளக்கங்கள் பண்பற்றவை. அறிவுக் குறும்புடையவை. தன் மகனுக்குப் பெற்றோர்களே பரத்தை மார்களைப் போற்றி வளர்த்து உடைமையாக அளிப்பர் என்று, இல்லாத பொல்லாத கருத்தை எப்படி எழுதத் துணிந்தார் இறையனார் அகப்பொருள் உரையாசிரியர்? தமிழில் கருத்துக்களை உயர்ந்த தமிழ்நடையில் எழுதி மருட்டும் உரை நூல் அது. இவ்விளக்கங்களை நம்பின், பரத்தையொழுக்கம் ஆடவனுக்கு நல்லது, இன்றியமையாதது, சிறந்தது என்று பொருளாகாதா?

சமுதாயக் கருத்து

மேற்காட்டிய கருத்துரைகள் ஒருபால் நிற்க, ஐந்திணை இலக்கியத்தில் பரத்தைக்கு ஓர் இடம் வகுத்தளித்தற்கு நேரிய காரணம் ஒன்று இருத்தல் வேண்டும். ஏய்த்து மழுப்புவதுபோல்

1. குறுந்தொகை : நூலாராய்ச்சி. ப. 79

காரணம் கூற முனையாது இயல்பான ஏதுக் காட்டவேண்டும். பண்டைத் தமிழ்ச் சமுதாயத்தில் பரத்தையொழுக்கம் ஒருவகைக் குடும்ப வொழுக்கம் போலப் பரவிக் கிடந்தது; வரைவின் மகளிர் தம் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் உகந்த சூழ்நிலை சமுதாயத்தில் நிலவியிருந்தது; இடையறா இன்பப் புணர்வுக்கென்று கணவன்மார்கள் வைப்பு எடுத்துக்கொள்ளும் பழக்கம் சமுதாய மரபுபோல் ஊறி நின்றது என்ற வாழ்வியல்களை நாம் தயக்கமின்றி ஒத்துக்கொள்வோமாக. தலைவன் பரத்தனாகச் சென்றபோது அவன் செயலை மனையாள் வெறுத்தாள், புலந்தாள், வருந்தினாள். எனினும் அவனைத் தூர ஒதுக்கித் தள்ளினாள் அல்லள். முடிவில் அவனோடு உடனுறைதலையே விரும்பினாள்; அதற்கு மாறாக யாதும் நினையாள். "மாற்றா உள்ள வாழ்க்கையேன்" என்று கண்ணகி அறையும் இல்லறக் கொள்கை எல்லாத் தமிழ் நங்கையர்க்கும் ஒக்கும். பெண் ஓராண் மணமே உடையளாதலின், பிற சிந்தனை அவள் நெஞ்சத்துப் பிறப்பதில்லை. எந்நிலைக் கணவனையும் நன்னிலைக் கணவனாகக் கொண்டொழுகுவதே மனைவியின் அதிகாரக் கொள்கை. ஒத்துப் போகும் பெண் குணத்தாலும், பரத்தமைக்குச் சமுதாயத்தில் பேரெதிர்ப்பு இன்மையாலும், பலர்தம் இல்லற வாழ்க்கை பிளவின்றிப் பிரிவின்றி இயங்கிற்று என அறிவோமாக.

ஐந்திணைப் பரத்தை

தொல்காப்பியமும் மருதச் செய்யுட்களும் கூறும் பரத்தை எத்தகையள்? வீதிவாய்த் திரியும் கீழ்மகள் அல்லள்; பரத்தைக் குலத்தவளேனும் இல்லறத்தின் பகைத்தியல்லள். சிலப்பதிகாரத்தின் மாதவிபோன்று ஆடலும் பாடலும் சான்றவள், கலை பயின்றவள், பெரும்பாலான குடும்பப் பண்பு உடையவள். வள்ளுவர் கடியக் கூறும் பொருட்பெண்டு அல்லள். தலைவனது இளம் புதல்வன் தேரோடு தெருவில் தனித்துத் திரியக் கண்டனள் ஒரு சிறு பரத்தை. அவனை மார்போடு எடுத்தணைத்துக் கொண்டனள். தன் குழந்தையென மெய்தீண்டி இன்புற்றனள். இதனைப் பார்த்துவிட்டாள் தலைவி. விரைந்தோடி வந்து பரத்தை நங்கையைப் பார்த்து, 'ஏன் இக்கலக்கம்? இம்மகனுக்கு நீயும் தாய்தான்' என்று நகை படவும் இகழ்படவும் மொழிந்தாள். அப்போது அப்பரத்தையின் குணம் என்ன?

> *களவுடம் படுநரிற் கவிழ்ந்துநிலங் கிளையா*
> *நாணி நின்றோள் நிலைகண்டு யானும்*
> *பேணினேன் அல்லனோ மகிழ்ந* (அகம். 16)

பெருநாணுடையளாகத் தலைகவிழ்ந்தாள் எனவும், அது கண்டு அவள்பால் தலைவிக்கும் நன்மதிப்பு உண்டாயிற்று எனவும் காண்கின்றோம். தலைவன் பெரும் காமவேட்கையனாய் வண்டு

போல் இடமாறிச் செல்லும்போது, அப்பிரிவு பொறாது பரத்தையும் தலைவிபோல் பேதுறுவாள், பிணங்குவாள், நுதல் பசப்பாள், ஆற்றியிருப்பது தன் கடன் என்று உணர்வாள் (அகம். 374).

தெறலருங் கடவுள் முன்னர்த் தேற்றி
மெல்லிறை முன்கை பற்றிய சொல்லிறந்து
ஆர்வ நெஞ்சம் தலைத்தலை சிறப்பநின்
மார்புதரு கல்லாய் பிறன் ஆயினையே (அகம். 366)

எக்கர் நண்ணிய எம்மூர் வியன்துறை
நேரிறை முன்கை பற்றிச்
சூரர மகளிரொ டுற்ற சூளே (குறுந். 53)

இரண்டாம் பகுதி தலைவி கூற்று. நின்னை ஒரு ஞான்றும் பிரியேன் என்று தலைவியின் முன்கையைப் பிடித்துக் கடற்றெய்வத்தின் முன் உறுதிச் சூள் செய்தான் தலைவன்; இங்ஙனம் ஒரு பரத்தைக்கும் செய்தான். செய்யும் வழக்கம் உண்டு என்று முதற்பகுதியால் அறியலாம். தலைவியை வரைந்து கொள்ளுதல் போலப் பரத்தைக் குலத்தாளையும் வரைந்து கொள்ளும் முறை உண்டு. அதனால் தலைவிபோல் வரைவுப் பரத்தையும் உரிமை பெறுகின்றாள்.

கலிமா கடைஇ வந்தெஞ் சேரித்
தாருங் கண்ணியும் காட்டி ஒருமைய
நெஞ்சம் கொண்டமை விடுமோ (நற். 150)

குதிரைத்தேர் ஏறி எம் சேரிக்கு வந்தான்; என் நெஞ்சம், பலர்பாற் செல்லாது தனக்கே ஒருமையாகக் கொண்டான், என்று கற்புடைமை விளம்புகின்றாள் பரத்தைக் குறுமகள், தன் ஒருமைப்போக்குத் தாய்க்குப் பிடிக்கவில்லை என்றும் அறிகின்றாள். ஐந்திணைக்கண் பாடுபெறும் பரத்தையின் பண்பு நலம் இது.

தலைவனையும் தலைவியையும் அன்னவர்தம் குழந்தையையும் மதித்து ஒழுகும் பெற்றியினள் பரத்தை என்பதனை மருதச் செய்யுட்கள் காட்டுகின்றன. இளநாகனாரின் மருதக் கலிகள் பெரும்பாலும் பரத்தையிற் பிரிவையே பொருளாகக் கொள்வன. தலைவனது தண்டாப் பெரும் பரத்தமைக்கு இவைகள் வகை வகையாகப் புனைவன. "தொடக்கத்துத் தாய்", "வழி முறைத்தாய்" (கலி. 82) என்று பரத்தையர்களை அன்னை முறைப்படுத்துக் கூறுதலுண்டு, "காதல் எங்கையர்" (தொல். 1092) என்று தங்கை முறையாகத் கூறுதலும் காண்க. தாய் எனவும் தங்கை எனவும் கூறுவதற்கு ஊடல் காரணம் என்றாலும், அங்ஙனம் உறவுபட மொழிதல் சமுதாய மரபாக இருந்தது.

பூப்பின் புறப்பா டீராறு நாளும்
நீத்தகன் றுறையார் என்மனார் புலவர்
பரத்தையிற் பிரிந்த காலை யான (தொல். 1132)

மனைவி மாதவிடாய் எய்திய காலத்துத் தலைவன் அவளைப் பிரிதல் கூடாது; அதுமுதல் பன்னிரண்டு நாட்கள் மகப்பேறு கருதி அவளோடு உடனுறைதல் செய்க எனவும். அக்காலத்துப் பரத்தையிற் பிரிவு ஆகாது எனவும் தொல்காப்பியம் நாள் வரையறை செய்யும்; தலைவனுக்கு அறிவுரை பகரும். இங்ஙனம் ஆகுநாள் ஆகாநாள் கூறுதலன்றி பரத்தையொழுக்கமே ஆகாது என்று கூறாமையை எண்ணிப் பார்க்க. புனல் விளையாட்டு என்பது பண்டைக் காலத்துச் சிறந்த பொழுதுபோக்கு. ஆற்றிலும் குளத்திலும் புதுவெள்ளம் தலைப்பெய்தபோது, காதலர்கள் புணை தழுவி நீர்விளையாடுவர். மனைவியோடு தலைவன் நீர் விளையாடினான் என்று வரும் இடங்கள் சிலவே. இவ்விளையாட்டிற்குப் பரத்தையர் துணை பெரிதாக மதிக்கப்பட்டது. பரத்தையொடு நீராடல் ஊரறிந்த காட்சியாக இருந்தது.

அலமரல் ஆயமோடு அமர்துணை தழீஇ
நலமிகு புதுப்புனல் ஆடக் கண்டோர்
ஒருவரும் இருவரும் அல்லர்
பலரே தெய்யஎம் மறையா தீமே **(ஐங். 64)**

கோவலன் பலருங்காண மாதவியொடு கடலாடச் சென்றதை ஈண்டு ஒப்பு நோக்குக.

போர்க்குச் செல்லும் வீரர்கள் தத்தம் மனைவிமாரை அழைத்துச் செல்வதில்லை; அங்கு அழைத்துப் போய்ப் பாசறையில் வைத்து இன்பம் கொள்வதில்லை. இங்ஙனம் மனைவியின்பம் விலக்கப்பட்டதன்றிப் பரத்தை மருவல் விலக்கப்படவில்லை

புறத்தோர் ஆங்கட் புரைவது என்ப **(தொல். 1121)**

என்பதனால் போர்க்களத்தில் பரத்தையர்கள் உளராவர் என்பதும், அது ஒருவாறு பொருந்தும் என்பதும் அறியப்படும்.

மனைவியின் மாதப்பூப்புக் காலத்து உடன் வாழ்ந்து பிற்றை நாளில் பரத்தையொடு கூடியிருப்பான் எனவும், யாற்றின் தலை வெள்ளத்தில் கணிகையைத் தழுவி நீர் விளையாடுவான் எனவும் பாசறைக் கண் புறம்களை மருவுதலுண்டு எனவும் வரும் குறிப்புக்களால், பரத்தை நிலையைச் சமுதாயம் இயல்பான நிலையாகவும் இன்றியமையா நிலையாகவும் கருதிற்று என்பது தெளிவு. ஆடவர்தம் அகவாழ்விலும் புறவாழ்விலும் கணிகைமார் கொண்ட தொடர்பும் தெளிவு.

XV

சமுதாயக் காரணம்

பிறநாடுகளிலும் இந்தியாவின் பிறபகுதிகளிலும் பரத்தைத் தோற்ற வளர்ச்சிகளுக்குச் சமயங்கள் அடிப்படைகளாகவும்,

கோயில்கள் ஆடுகளங்களாகவும் அமைந்தன. கி.பி. ஆறாம் நூற்றாண்டிற்குப் பின் தமிழகத்திலும் பரத்தமைக்குச் சமயங்களும் கோயில்களும் அளிசெய்தன. பல்லவர் சோழர் ஆட்சிகளில் ஊரனைய பெருங்கோயில்கள் உயிரளித்தன. பதியிலார் சமயச் செல்வாக்குப் பெற்றனர். சங்க காலம் சமயகாலம் அன்று. சங்கத்தமிழர் கடவுளை அரண்மனை போற்கோயிலும் பிற ஆரவாரங்களும் புறமாக அமைக்கவில்லை. அன்று சமயவுணர்வு இருந்ததன்றிச் சமயப்பூசலும் எழுச்சியும் இயக்கமும் இல்லை. சமயம் பரப்புவதென்று தனி நிலையங்களும் நிதியும் இல்லை. அதனால் சங்க காலப் பரத்தமைக்கு மதங்களும் கோயில்களும் காரணம் ஆகா, ஆகவியலா என்பது வெளிப்படை

சமுதாயத் தேவையே பண்டைப் பரத்தமைக்குக் காரணம். அடக்கமில்லாத ஆடவர்தம் காமப்பசிக்குப் பரத்தையர் இரையாவர்; ஆணின் பொருளும் பெண்ணின் மெய்யும் பண்டமாற்றாதலைப் பண்டைச் சமுதாயம் பார்த்துக் கொண்டிருந்தது. நாற்றுக்கு இடையே தோன்றும் களையெனக் கருதாது, வரப்பில் வளரும் பூஞ்செடிபோலப் பரத்தையர்களைக் கருதிற்று. தலைவனது பரத்தமைக்கும் ஓரெல்லையுண்டு. மனைவியைக் கைவிட்டுக் குழந்தையை மதியாது வீட்டை நினையாது சேரியே தஞ்சமெனக் கிடப்பானாயின், அத்தலைவன் இகழப்படுவான். அவனது பரத்தைப் போக்கைச் சமுதாயம் கடிய முற்படும். இல்லறம் விடாது தலைவியோடு உரிய காலத்து இன்பம் துய்த்துப் புறப்போக்கும் ஆங்காங்கு உடையவனாக இருப்பின், அவனது வாழ்க்கை சமுதாயக் கண்முன் இயல்பாகவே தோன்றும். பெரிதும் வேறுபாடாகத் தோன்றாது. விருந்தும் குழந்தையும் ஆற்றாமையும் வாயிலாக, எப்படியும் புறத்தொழுக்கத் தலை மகன் தலைவியின் சினத்தைத் தணிக்க முயல்வான்.

குன்ற இறுவரைக் கோண்மா இவர்ந்தாங்குத்
தந்தை வியன்மார்பிற் பாய்ந்தான் அறனில்லா
அன்பிலி பெற்ற மகன் *(கலி. 86)*

தகப்பன் வருவதைப் பார்த்தது குழந்தை. அதற்கு என் தெரியும்? ஆர்வத்தோடு பாய்ந்தது தந்தை தோள்மேல். புலந்த தலைவியின் நெஞ்சத்தை இக்காட்சி உறுத்திற்று. அறனிலன் அன்பிலன் என்று கணவனையும், அவ்விரண்டுமிலி பெற்றவன் என்று மகனையும் தாக்கிக் கழறினாலும், அவள் சொல்லும் பெருமித வுவமையைப் பார்மின், அரிக்குட்டி மலைமேற் பாய்ந்தது போல என்று சொல்லுகையினுள், அவளின் ஈடுபாடும் அகமன அன்பும் புலவி நீக்கமும் வெளிப்படக் காணுதும். இன்பக் கழிவுக்கெனத் தலைவன் கணிகையை நாடினும், அவ்வின்பம் விளையாட்டுத் தன்மைத்து எனவும், அக் கணிகை காமக்கருவி எனவும் அவன் அறிவான்.

மனைவியே தலைவி எனவும், மருங்கறாது மகப்பேறு தரும் செல்வி எனவும், தன்னைத் தட்டிக்கேட்கும் உரிமையுடையவள் எனவும் நன்கு தெரிவான்.

எமக்கே வருகதில் விருந்தே சிவப்பான்று
சிறிய முள்ளெயிறு தோன்ற
முறுவல் கொண்ட முகங்காண் கம்மே (நற். 120)

என்றபடி, தலைவியின் சினக் கண்ணுக்கு அஞ்சிக் கிடக்கும் தலைவன் விருந்தை அழைத்துச் சென்று அவள்தன் அமைதி முகத்தைக் காண எண்ணுகின்றான். "அஞ்ச வந்த உரிமை" என்று தலைவியின் இல்லறத் தலைமை பாடுவர் தொல்காப்பியர் (1091). பொறுப்பும் பொறுமையும் உடையவர்க்குத்தான் இல்லறத்தில் உரிமையும் தலைமையும் உண்டு. மிகநெருக்கிக் கேட்டால், ஆம் பிழை செய்தேன் என்று அடியில் வீழ்வான் என, ஒரு தலைவி எண்ணிப் பார்த்து ஊடல் தீர்கின்றாள். இதனால் தலைவனின் உணர்வும் தலைவியின் உயர்வும் விளங்குகின்றன.

அளவறிந்த பரத்தமை

மேற் கண்டாங்குக் கணவனும் மனைவியும் ஒத்து இணங்கி வணங்கிப் போம்போது, கணவனது பரத்தமையைச் சமுதாயம் ஒருபொருட் படுத்துவதில்லை; இல்லறத்திற்குப் பகைமை என்று கருதுவதில்லை. மாறிய நிலையில், மனைவியைத் துறந்து பரத்தையே பொருளாக ஆடவன் மதிமயங்கிய நிலையில், சமுதாயம் அன்னவனை இகழ்கின்றது, திருத்த முற்படுகின்றது. அத்தகைய நிகழ்ச்சியை-வரலாற்றைப் புறநானூற்றில் கற்கின்றோம். வள்ளல் பேகன் நல்லூர்ப் பரத்தையை நாடினான்; வடு நீங்கு சிறப்புடைய தன் மனைவி கண்ணகியைத் துறந்தான், இல்லம் வந்து அவளை ஊடல் தீர்ப்பதுங் கூடச் செய்தானல்லன். "முல்லை வேலி நல்லூரானே" (புறம். 144) என்றபடி நல்லூரே தன் உள்ளூராகத் தங்கிவிட்டான். இதனைத் தமிழ்ச் சமுதாயம் பொறுக்கவில்லை. விருந்துக்கு வந்தவன் வீட்டை மறக்கலாமா? கபிலர் பரணர் அரிசில்கிழார் பெருங்குன்றூர் கிழார் என்ற புலவர்கள் நல்லூருக்குச் சென்று பேகனைக் கண்டனர்; மனைவியைத் துறந்திருத்தல் தகாது என்றும், உடனே தேர் ஏறிச்சென்று அவள் கண்ணீரைத் துடைப்பாய், கூந்தலை ஒப்பனை செய்வாய் என்றும் வேண்டினர். "அருளாயாகலோ கொடிதே" (புறம். 144) என்று பரணர் இடித்துரைத்தனர். "குழல் இனைவதுபோல் அழுதனள் பெரிதே" (புறம் 143) என்று கபிலர் கலங்கிக் கூறினர். இவ்வண்ணம் புலவரெல்லாம் மனைவியைக் கைவிட்டது தகாது எனப் பேகனை இடித்தும் இரந்தும் மொழிந்தனரன்றி, அவனது பரத்தை யொழுக்கத்தை நேரடியாகக் கடிந்து மொழிந்திலர் காண்.

பரத்தமைப்பட்ட பிற தலைவன்மார் என் செய்வரோ எனின், வீட்டிற்கு வருவதும் போவதும் செய்குவர். புலவி நீக்கி மனைவியரோடு இன்புறுவர். இந்நிலை பிரிவு என்று சொல்லப்படும். பேகனோ ஏனையோர் போல மனைவியைப் பிரியவில்லை; அவளைத் துறந்தான் காண். அதனால் புலவர்தம் புறப்பாடல்களுக்குப் பொருளானான். அவனால் துறக்கப்பட்ட கண்ணகி காரணமாகப் புலவர்கள் பாடினர் என்ற துறைக்குறிப்பில், "துறக்கப்பட்ட" என்ற வினைநிலையைக் காண்க. துறவாது, பிறர்போல வந்துபோகும் பிரிநிலையளவில் பேகன் நடந்திருப்பானாயின் புலவர்கள் பாடியிரார் அன்றோ? அவன் பரத்தமை இல்லற எல்லை கடந்து சென்றமையால், இடித்துவரை நிறுத்த வேண்டிய கடப்பாடு நட்புடைய புலவர் பாலதாயிற்று. இதனால் அளவுப்பட்ட பரத்தமை புறப்பொருளாகாது அகப் பொருளாம் எனவும், சமுதாயம் அதனைச் சிந்தனை செய்யாது, கூடியாது எனவும் அறிகின்றோம்.

பிறனில் விழைதலும் பரத்தை வேட்டலும்

பண்டைத் தமிழ்ச் சமுதாயம் பிறன்மனை நயத்தலை மாசாகப் பாவமாகக் கேடாகக் கருதியது. பகைதரும், வழி வரும் அச்சம்தரும், இன்பம் தாராது என்று நெறி காட்டியது. அதனால் பறனில்விழையாமை என்ற அதிகாரத்தை அறத்துப் பாலில் வைத்தார் திருவள்ளுவர். விழைவதை ஒழுக்க இழிவு எனவும், விழையாமையை ஆன்ற ஒழுக்கம் எனவும் சுட்டிக் காட்டினார். வரைவின் மகளிர் என்னும் பரத்தமையைப் பொருட்பாலில் அவர் அமைத்தது ஏன்? பரத்தை வேட்கை அறக்கேடில்லையா? ஒழுக்கக் குறைவு இல்லையா? இல்லை என்பது தான் நம் பண்டைச் சமுதாயம் காட்டும் விடை. அதற்கு என் செய்வது?

இருமனப் பெண்டிரும் கள்ளும் சுவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு *(குறள். 920)*

கள்ளுண்டல், சூதாடல் இவற்றுடன் பரத்தமை யாடல் எண்ணப்படுதலின், இம்மூன்றும் கெட்ட பழக்கங்கள் என்பதுவே கருத்தாகும். திரு நீங்கும் எனக் குறித்தலின், இத்தீய பழக்கங்களால் பொருள் வீணாகும் என்று அறிகின்றோம். பரத்தைத் தோய்வினால், நல்லின்பன் கிடைக்காது, பெருமை தாராது எனவும், பொருட்குக் கேடு அறிவுக்குக் கேடு எனவும் திருவள்ளுவர் இடித்துரைப்பர். இவற்றோடு பின்வருங் குறளை ஒப்பு நோக்குமின்.

பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண் *(குறள். 146)*

பிறன்மனை விரும்புதலால் வருவன பகை பாவம் அச்சம் பழி என்று அறப்பெருமகன் ஒருதலையாக எச்சரிப்பர். இன்ன அற வரம்பு பரத்தமைக்கு இல்லை. பிறன்மனை நாடுவானைக் கண்டஞ்சுதல் போலப் பரத்தமையாடுவானைக் கண்டு யாரும் அஞ்சுவதில்லை காண். பிறனில் விழைவானைச் சமுதாயமே இகழும். அவனுக்கு விருந்துசெய்ய இல்லறத்தார் அஞ்சுவர். அன்னநிலை பரத்தை நாடிக்கு இல்லை. அவனுக்குப் புகழில்லையேனும் பழியில்லை. அவன் போக்குக்கு இசைவில்லையேனும் சமுதாயத்தில் பேரெதிர்ப்பு இல்லை. இலக்கியமும் அறநூலும் சமுதாய ஆற்றுக்கு நீரும் கரையும் போல்வன. ஆதலின் தமிழ்ப் பெருமகன் அறத்துப்பாலில் பிறனில் விழையாமை அதிகாரத்தையும், பொருட்பாலில் வரைவில் மகளிர் அதிகாரத்தையும் அமைத்தார்.

இலக்கியம் என்பது அறநூலுக்கு இலக்கியமன்று; சமுதாயத்துக்கு இலக்கியமாம். அது சமுதாயத்தின் பளிங்கு, மக்கள் வாழ்வின் மொழியோவியம். இலக்கியமாயினும், அறநூலாயினும், எவற்றிற்கும் சமுதாய நெஞ்சமே உரைகல், பிறன் செல்வத்தைக் களவாடிச் செலவழிப்பதற்கும், தன் செல்வத்தை மிகுதியாகச் செலவழிப்பதற்கும் வேற்றுமையில்லையா? பிறன்மனை புகுதலையும் கணிகை வேட்டலையும் அங்ஙனமாகக் கருதியது தமிழ் மன்பதை.இல்லறம் துறவாத ஆடவனது பரத்தமையை ஒருவகை ஒழுங்குபோல் உடம்பட்டமைந்தது தமிழ்ச்சமுதாயம். பரத்தமை சமுதாயத்தின் தேவை என அறநூலோர்கள் நெடுநாளாகக் காரணம் காட்டுவர் என்பர் ஆவலக் கெல்லிசு1. இக்காரணம் தமிழ் அறநூலார் யாரும் கூறியதில்லை. பரத்தமையை முற்றக் கடிவதே தமிழறம். தமிழிலக்கியப் புலவரும் பரத்தமையை உடன்பட்டதில்லை; வேண்டும் என்பதுபோல ஒருசொற் சொல்லியதுமில்லை. தமிழ் மக்களைக் கேட்டாலும், பரத்தமை வேண்டுமெனக் கூறார். எனினும் சமுதாய நடைமுறையில் பரத்தை வழக்காறு வேரோடிக் கிடக்கக் காண்கின்றோம். அதற்குப் பேரெதிர்ப்பு இன்மையையும் இன்றுவரை காண்கிறோம்.

அன்பு சான்ற ஐந்திணைக்கண் பரத்தமை கூறப்படலாமா? இதன் உண்மைக் காரணத்தை அறிய மேலே விளக்கிய தமிழ்ச் சமுதாய மனப்பான்மை துணைபுரியும். 1.தமிழகத்தில் பரத்தமை பரவிக்கிடந்தமை 2. அதனைச் சமுதாயம் பொறுத்துக் கொண்டிருந்தமை 3. இசை நடிகம் முதலாய கலைத்துறையில் கணிகையரின் செல்வாக்கு 4. தம்மை நாடிய ஆடவர்களைப் போற்றி மதித் தொழுகும் பரத்தையர் சிலரின் குடிநலம். 5 கணவன் தன் மனைவியை என்றும் உள்ளத்துள் உயர்வாகப் போற்றிய சார்பு. 6. அனைத்திற்கும்

1. Paychology of Sex. Vol. II: Prositution, p.282.

மேலாகத் தற்காத்துத் தற்கொண்டானைப் பேணிக் குடிக்கடன் ஆற்றும் தமிழ்ப்பெண்ணின் மரபுப் பொறுமை என்ற அறுவகைச் சமுதாய நிலைகளை மீண்டும் நினைவுகூர்க. உள்ளப் புணர்ச்சி என்னும் அகத்திணையில் தலையாய பண்பிற்கும் இவ்வரம்புடைய பரத்தமை ஊறு செய்யாமையும் காண்க.

பரத்தைமை வரம்பு

ஐந்திணைக்கண் முன்விளக்கியாங்கு எத்துறைப் பாலும் பொருள் வரம்பு உண்டு. தமிழகத்தில் இழிபினுள் இழிந்த பரத்தைக் கயத்திகள் இல்லாமல் இல்லை. அதனைச் சில இலக்கியங்கள் சுட்டிக் காட்டாமலும் இல்லை. தாதுண்டு பூவைத் துறக்கும் வண்டுபோலப் பொருளை உறிஞ்சி ஆளைத் தோலாக விடும் அணங்குகள் உளர். அவ்வணங்குகளைக் காதலிகள், சுற்பிகள் என மயங்கி இல்லறம் துறந்த நம்பிகளும் உளர். இவரெல்லாம் சமுதாயத்தில் உளராயினும், ஐந்திணைக்குப் பொருளாகார். இல்லறத்தைத் தலையறமாக மதித்த கணவன்மார்களையும் அன்னவர்களின் இல்லறத்திற்கு இடையூறாகாது ஒழுகிக்கொள்ளும் பரத்தைமார்களையுமே ஐந்திணை பொருட்படுத்துகின்றது எனத் தெளிக.

விழுமிதிற் கொண்ட கேண்மை நொவ்விதின்
தவறுநற் கறியாய் ஆயின் எம்போல்
ஞெகிழ்தோட் கலுழ்ந்த கண்ணர்
மலர்தீய்ந் தனையர் நின்னயந் தோரே (நற். 315)

மனைவியை நினையாத தலைவனைப் பரத்தை இடித் துரைக்கும் பாட்டு இது. 'ஊரறிய மணந்த நல்லாளைக் கைவிடும் நீ எம்போல்வாரைக் கைவிடாதிருப்பாய்கொல்? தவற்றை நன்குணர். மலரைக் கருகவிடாதே' என்று தலைவனை ஒரு பரத்தை இல்லற நெறிப்படுத்துகின்றாள். ஆதலின் ஐந்திணைப் பரத்தையை "மனையோள் ஒத்தலின்" (1096) என நிகர்பட மொழிகின்றது தொல்காப்பியம். இப்பெண்டிர்களைப் பொருட் பெண்டிர் களாக, விலை மாதர்களாகத் தொல்காப்பியமும் சங்கப்பனுவல்களும் புனையவில்லை. இப்பரத்தையர்க்கு அமைந்த நற்பெயர் "காமக்கிழத்தி" (தொல், 1096) என்பது கிழத்தி என்ற சொல் லாட்சியால், இந் நங்கையர்தம் ஒருபால் உயர்வு பெறப்படும். பரத்தையர்கள் பொருளையெல்லாம் வவ்வினார்கள் என்றோ, அது காரணமாக ஆடவர்கள் வறுமை யெய்தினார்கள், குடி கெடுத்தார்கள் என்றோ, அதுபற்றித் தலைவியர் பிணங்கினர் என்றோ, மருதப் பாடல்கள் சிறிதும் மொழிந்தில. தலைவனது சிறுவனைத் தெருவிடைக் கண்ட போது பரத்தையர்கள் அவனுக்குத்

தொடியும் மோதிரமும் அணிந்து விடுத்தார்கள் என அகப்பாடல்கள் (கலி. 82, 84) நுவலுகின்றன. இதனால் இம்மங்கையர் பொருட் பெண்டிரல்லர் என்பது தெளிவு.

பரத்தமை வழக்காறு

பண்டைச் சமுதாயத்தில் கணிகை மடந்தையர் இயல்பாகப் பெற்றிருந்த நிலையான செல்வாக்கை நாம் மறைப்பதற்கில்லை. "பாணன் கூத்தன் விறலி பரத்தை யாணம் சான்ற அறிவர் கண்டோர்" என்ற தொல்காப்பியத்தில் (1447), கற்பினில் கூற்றுக்கு உரியவளாகப் பரத்தை எண்ணப்படுவாள்.

எண்ணருஞ் சிறப்பிற் கிழவோன் மேன	**(தொல். 1091)**
கிழவோள் செப்பல் கிழவ தென்ப	**(தொல். 1092)**
தோழிக் குரிய என்மனார் புலவர்	**(தொல். 1096)**
கண்ணிய காமக் கிழத்தியர் மேன	**(தொல். 1096)**

தலைவன் கூற்று, தலைவி கூற்று, தோழி கூற்று என்ற நிகர் வரிசையில், பரத்தை கூற்றும் ஒரு தனி நூற்பாவாக இடம் பெற்றிருத்தலை நினைக. கற்புத்திணையில் எட்டிடங்கள் பரத்தை சொல்நிகழ்தற்கு உரியவை என்று இந்நூற்பாவால் அறிகின்றோம். கற்பியல் பாக்கள் 966. இவற்றுள் பரத்தைமை பற்றியன 279. பாடியோர் தொகை 50. ஓரம் போகியார், மருதன்இளநாகனார், பரணர், ஆலங்குடி வங்கனார், ஔவையார், நக்கீரர், மருதன் இளங்கடுங்கோ. மாங்குடி மருதனார், மருதனார் என்போர் பரத்தைத்துறை பாடிய வல்லவர்கள். கற்புத்திணையில் ஏறக்குறைய மூன்றில் ஒரு கூறு பரத்தைப்பாலதாக இருத்தலின், சங்ககாலத்து இத்துறைப் பாட்டுக்கு இருந்த நன்மதிப்புப் பெறப்படும். அதற்குக் காரணம் சமுதாய மனப்பான்மையே யாகும். பிறன்மனை நயத்தல் போலப் பரத்தமை சமுதாயத்தில் கண்ணறக் கடியப்பட்டிருப்பின், சங்கச் சான்றோர்கள் அப்பொருள்பற்றிப் பாட முன்வாராரன்றோ? பிறன்மனை நயந்தானைப் போலப் பரத்தை நாடியைக் கண்டு சமுதாயம் வெருவியிருப்பின், வாயில் மறுத்தல், வாயில் நேர்தல் என்ற துறைகளுக்கு இடம் உண்டா? இத்துறைகளின் கருத்து என்கொல்? தலைவனது பரத்தமை தவறு என்பது முதற்கருத்து. இதனை வாயில் மறுத்தலால் அறிகிறோம். எனினும் அவனை என் செய்வது? தவற்றைச் சுட்டித் தழுவிக்கொள்ள வேண்டும் என்பது இரண்டாவது கருத்து. இதனை வாயில் நேர்தல் என்ற துறையால் அறியலாம். மனைவியர்க்குத் தமிழ்ச் சமுதாயம் இயல்பாகக் கற்பிக்கும் மரபுக்கல்வி இது. அதனாலன்றோ குடும்பம் பிளவுபடுவதில்லை. கற்பு மகளிர்தம் உள்ளம் திரிவதில்லை. மக்கட் பேறு குறைவதில்லை. அதனாலன்றோ தமிழ் மன்பதையில் பொறுமைப்பெண் பெருமை பெறுகின்றாள். "பெண்ணிற் பெருந்தக்க யாவுள" என்பது வள்ளுவர் பாராட்டு.

தமிழகத்திற் பரத்தமை உண்டு; அவ்வழிப்பட்ட கணவனைப் பொறுத்து ஏற்கும் மனைவிமையும் உண்டு. இது சமுதாயத்தின் இயல்பு வழக்கு. இவ்வழக்கினால் உள்ளப் புணர்ச்சி ஒடியாது காக்கப்படுகின்றது. அகத்திணைக்கண் பரத்தையிற் பிரிவு இடங் கொண்டதற்கு இவ்வழக்கே காரணமாம். பெண்ணின் கற்பினைக் காட்டும் சான்றாக வேண்டுமென்று நாட்டிற் பரத்தமை நிகழ்வதில்லை. பரத்தமை நிகழ்வை ஆற்றவும் பொறுத்துத்தான் பெண் தன் கற்புடைமையைப் புலப்படுத்த வேண்டும் என்பதில்லை. அதுபோல் இவள் ஊடலுக்காக அவன் புறம்போவதும்; அவனது புறப்போக்கை வைத்துத்தான் இல்லவள் ஊடுவதும் இல. எல்லாம் தனித்தனி இயல்புகள்; சமுதாய நடக்கைகள். கப்பல் ஓட்டவோ கடல்கிடப்பது? பயிர்தழைக்கவோ மழை பெய்வது? பரத்தமை பொறுக்கவோ கற்பாயிருப்பது?

XVI

ஒருமைக் கணவர்கள்

அகத்திணைப் பொன்னைச் சமுதாய உரைகல்லில் உராய்வோமாயின், பரத்தையிற் பிரிவும் ஒளிகுன்றாது இயல்பென விளங்கும் என்று பல்லாற்றானும் கண்டோம். எனினும் அகத்திணையைப் படைத்த பெருமக்களோடு ஒரு கருத்து முரண் எனக்கு உண்டு. அகத்திணைக்கண் பரத்தமையைக் கூறியது ஒக்கும். அதனை ஐந்திணைக்கண் கூறியது ஒக்குமா? மனைவியை யன்றி யாரையும் நினையாத நிறையுடைக் கணவன் மார் இல்லாமலில்லை. ஒருமை நங்கையர் போல ஒருமை நம்பியர் பலர் உளர்.

> **தீதில் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்**
> **பல்லிருங் கூந்தல் மகளிர்**
> **ஒல்லா முயக்கிடைக் குழைகளன் தாரே** (புறம். 73)

என்று ஒழுக்க வஞ்சினம் சாற்றினான் சோழன் நலங்கிள்ளி, "இகழ்ந்த பகைவரை வெல்லேனாயின், என் மாலை பரத்தை மார்பில் தோய்க என்று உயிரினும் சிறந்த ஒழுக்கத்தைப் பணயம் வைத்தான். "சிறந்த பேரமர் உண்கண் இவளினும் பிரிக" (புறம். 17) என்று பூதப்பாண்டியன் தன் ஒருமைக் காதலைச் சூளுரைத்துப் போர்க்குப் புறப்பட்டான். தலைவன் பிரிந்த ஞான்று வேட்கையை அடக்கி ஆற்றியிருக்கின்றாள் ஒரு தலைவி. அது அகத்திணை. அடங்காது ஆற்றியிராது நாணுக் கடந்து ஊரறியப் புலம்புகின்றாள் ஒரு தலைவி. இதுவும் அகத்திணை. எனினும் ஆற்றியிருக்கும் தலைவி ஐந்திணை யாவாள். தேறுதல் ஒழிந்த தலைவி பெருந்திணையாவாள் என்று உட்பிரிவில் திணை வேறுபாடு எய்தக் காண்கின்றோம். இன்ன

வேறுபாடு ஒரு நிலைக் கணவனுக்கும் அகத்திணையில் காட்டப்படுவதில்லை. இருதிறத்தாரையும் ஐந்திணைத் தலைவர் களாகவே நம்முன்னோர் வகுத்துள்ளனர். இது பொருந்தாது காண்.

ஐந்திணைப் பரத்தமையும் பெருந்திணைப் பரத்தமையும்

திருவள்ளுவர் காமத்துப்பாலைப் புதுமையாகப் புரையின்றிப் பாடியுள்ளார். ஐந்திணைக் காதல் வாழ்வில் ஆடவனது பரத்தைச் செயலுக்கு இடமளிக்கவில்லை. வரைவின் மகளிரது முயக்கம் கூடாது என்று பொருட்பாலில் நெறியுரைத்த ஆசிரியர் காமத்துப் பாலில் பரத்தையரை வரவிடுவாரா? பரத்தையரை ஒதுக்கி ஊடல் அதிகாரங்களை நுணுக்கமாக யாத்த புதுப்பெருமை யுடையவர் வள்ளுவர். எனினும் பரத்தமைக் குறிப்பை அவர் ஒதுக்கவில்லை. ஆடவன் நிறையாளன் எனினும் அந்நிறைவு குறைவாகவே பெண்ணுள்ளத்திற்குப் படும் போலும். இந்த இப்பிறவிக்கு இருமாதரைச் சிந்தையாலும் தொடேன் என்ற வரத்தை பெருமகன் இராமனிடங்கூடச் சீதை பெற்றாள் என்பர் கம்பர். எல்லார்தம் நெஞ்சத்தின் எடைகண்ட அறப்பேராசான் பெண்ணினத்தின் உள்ளோட்டத்தைப் புலவிநுணுக்கத்திற்குப் பயன்படுத்துவர். ஆடவன் தவற்றுக்குச் சமுதாயத்தில் வாய்ப்பு உண்டு என்பதையும் அவள் அறிவாள். தன் கணவன் தவறிலன் என்பதையும் அறிவாள். அறிந்து வைத்தும், ஊடற்காலத்துத் தவறுடையான் போலச் சுட்டிப் புலவி மிகுப்பாள்.

பெண்ணியலார் எல்லாரும் கண்ணிற் பொதுவுண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு (குறள். 1311)

யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று (குறள். 1314)

இவை ஆடவன் உண்மைப் பரத்தன் என்ற செயல்மேல் கூறியவை யல்ல. அவனைப் பரத்தனாகத் தலைவி பள்ளியிடத்து எண்ணிக் கொண்ட சுற்பனைமேல் எழுந்த உரையாடல்கள்.

வள்ளுவர் புனைந்த பரத்தைக் சுற்பிதம் ஐந்திணையாகும். மடலேறுவன் என்று நினைத்தலும் கூறலும் ஐந்திணையாகக் கண்டோம் அல்லவா? சங்கச் சான்றோர் பலர் தலைவனது மெய்யான பரத்தைச் செயலைப் பாடியுள்ளனர். இச்செயலை ஐந்திணைத் துறையாக இதுகாறும் எண்ணி வருகிறோம் அங்ஙனம் எண்ணுவதே அகவிலக்கணமாகவும் இருந்து வருகின்றது. நிறைகுறைந்த நாண்சுடந்த இச்செயல் எவ்வாறு ஐந்திணையாகும்? ஏறிய மடற்றிறம் பெருந்திணையாகக் கண்டோம். அதுபோல ஒருநிலைக்காமம் துய்க்காது கழிக்காமம் மிக்க ஆடவனது பரத்தைச்

செயல் பெருந்திணையாதலே பொருந்தும் என்பது என் துணிவு. ஒருநிலைக்காமம் நுகரும் ஆண்தகையே ஐந்திணைத் தலைவன் ஆதற்கு உரியான் என்று கொள்க.

பகன்றை வான்மலர் மிடைந்த கோட்டைக்
கருந்தாள் எருமைக் கன்று வெரூஉம்
பொய்கை யூரன் மகளிவள்
பொய்கைப் பூவினும் நறுந்தண் ணியளே (ஐங். 97)

இப்பாடல்தான் ஐந்திணை மருதம் என யான் வேண்டுவது. தலைவன் முற்றும் நல்லவன் ஆயினும், பரத்தன் என்று தலைவி ஊடினாள். தன் ஒழுக்கத்திற்கு மாசு கற்பிக்கலாமா? பொய்ப்பழி சுமத்தலாமா? என்று தலைவன் சினந்தானல்லன், பாயற்பூசல் செய்தானல்லன். இது பள்ளியிடைப் பெண்ணின் இயல்பு என்று மகிழ்ந்து புலவிநீக்கி மெய்யின்பம் நுகர்ந்தான். மேயப்போய் வந்த எருமையின் கோட்டில் பகன்றைக் கொடியின் வெள்ளிய மலர்கள் செறிந்து கிடந்தான; அதனைக் கண்ட கன்று இது தன் தாயில்லை என்று ஒருகால் மயங்கியதாம் என்று நகையாடினான்.

அகத்திணையின் தலையான குறிக்கோள்

அகத்திணையின் உட்பிரிவுகளான கைக்கிளை குறுவடிவாம், ஐந்திணை நல்வடிவாம். பெருந்திணை மிகைவடிவாம் என்று விளங்கிக் கொண்டோம். பரத்தைச் செய்தி அகத்திணையின் பொதுப்பண்பிற்கு உள்ளடங்கி ஒத்துப்போதலையும் உறழ்ந்தாடித் தெளிந்தோம். உட்பிரிவுகளின் வடிவங்களும் தனிக்குறிக்கோள்களும் ஒருபுறம் இருப்ப, எழுதிணைகளையும் இணைக்கும் அடிப்படை யாது? யாண்டுப்போய் இவ்வெல்லாம் முடிகின்றன? முடியும் இடமாவது பால் நுகரும் உள்ளப் புணர்ச்சி, மெய்தழீஇய மனக்கலப்பு, உள்ளங்கள் ஒன்றுபடுதல் மட்டும் அகமன்று; உடல்கள் கூடுதல் மட்டும் அகமன்று; உள்ளமும் உடலும் இரண்டுறவும் இரண்டறவும் கலந்த இன்பச் செவ்வியே அகம் எனப்படும். இத் தலையாய குறிக்கோளை எழுதிணைகளும் தமக்கியைந்தாங்கு உடன்பாடு எதிர்மறை முகங்களால் புலப்படுத் தலைக் கற்றோம். ஐந்திணை உடன்பாட்டு முகம் உடையது; இயல்பும் விரிவும் பெற்றது. ஆதலின் அகத்திணையின் குறிக்கோள் ஐந்திணைவழிப் பன்மாணும் விளங்கிக் கொள்கின்றோம்.

உலகு நோக்கு

அகவிலக்கியத்திற்கு உரிய மக்கள் யார்? தலைவன் தலைவி தோழி செவிலி பாங்கன் காமக்கிழத்தி என்று கூற்றுக்கள் வருதலின், செல்வச் சமுதாயத்திற்கே அகக் காதல் வகுக்கப்பட்டது என்று

கொள்ளலாமா? புறத்திணையின் பொருள் வீரம் மறம் பயின்ற வீரர்க்கே போர்ச் செயல் உரியது. காதற் செயலோ எல்லார்க்கும் உரியது காண். வீரர்கள் முன்னர்த் தனியிடத்துப் பயிற்சி வாய்த்துப் பின்னர்ப் போர்க்களம் புகுவர். அக் களம் புக்குப் பயிற்சி பெறுவதில்லை. பயிலாதார் பறந்தலை புகார். காதலுக்குப் பயிற்சிக்களம் எனவும், உண்மைக்களம் எனவும் இரண்டில்லை. உண்மைக்களமே உடன்பயில் களமாகும். காதலும் பயில்வும் உடன் நிகழ்வதன்றிக் காதலுக்கென முன்னுறு பயிற்சி பெறுவதில்லை. பெறின் அது காதலாகாது. ஆதலின் காதல் பயிலவேண்டா இயல்பெனவும், பிறப்புணர்ச்சி எனவும், ஆண் பெண்ணென்ற பாலார்க்கெல்லாம் அமைந்த அகப்பூசல் எனவும் அறிவோமாக.

அகத்திணை உலகக்கண் உடையது, மனித சமுதாயம் நோக்கியது. ஞாலத்து மக்களிடை நிகழும் காமக்கூறுகளை யெல்லாம் அகத்திணையிற் காண முயலற்க, காணவியலாது. எல்லாம் கூறுதலால் ஒருநூல் ஞால நோக்கு உடையது என்று ஆகுமா? ஞால நோக்கெனக் கூறுதற்கு எல்லா மாந்தர்க்கும் எஞ்ஞான்றும் பொருந்தும் உண்மையடிப் படை வேண்டும். அகத்திணை வடிக்கும் காதற்பாங்கு தனித்துரயது, இன்பஞ் சான்றது, இறைமையுடையது, சாதி சமயம் அரசு மொழி நாடு தொழில் செல்வம் என்றினைய புறச்சார்பற்றது; இரண்டு உயிர்மெய்களின் ஒருமையைக் காண்பது. ஆதலின் மக்களாய் யாண்டுப் பிறந்த யார்க்கும் உரியது; அகத்திணைக் காதலுக்குப் புறப்பொருள் வரம்பில்லை, அகத்திணை உள்ளம் ஒன்றினார் யார்க்கும் புறனடையில்லை.

அகத்திணையாளர்கள்

முல்லைப் பாட்டுக்கும் நெடுநல் வாடைக்கும் அரச குடும்பத்தினர் தலைமக்களாவர். போர்க்களத்துச் சென்ற வேந்தர்களை நினைந்து தேவிமார் பிரிவுத்துயர் படுப. நீடுயர் கூடல் நகரில் நெடுங்கொடி எழ, மீளிவேல் தானையர் புகுந்தார் என்று மன்னனது வரவைப் பாலைக்கலி பாடும். முல்லை ஐங்குறுநூற்றில் படைத்தலைவர்களையும் போர்மறவர்களையும் காதலர்களாகப் பேயனார் பல பாடல்களில் அமைத்துக் காட்டுவர். பெருஞ்சின வேந்தன் போர்த்தொழில் தணிந்தாலன்றோ என் மனைவி விருந்து பெறுவாள் என்று பாசறை மறவன் வருந்துவான் (ஐங்.442). அரசகருமத் தொழிலாளி ஒரு குறுந்தொகைப் பாட்டின் தலைமகன் (242). குறவன் குறத்தியர் இடையர் இடைச்சியர் உழவர் உழத்தியர் அளவர் அளத்தியர் என்ற நானில மக்கள் எண்ணிறந்த அகப் பாடல்களுக்குத் தலைமக்களாகப் பாடுபெறுப.

அளைமாரிப் பெயர்தருவாய் அறிதியோ அஞ்ஞான்று
தளவமலர் தைந்ததோர் கானச்சிற் றாற்றயல்
இளமாங்காய் போழ்ந்தன்ன கண்ணினால் என்னெஞ்சம்
களமாக்கொண் டாண்டாயோர்
கள்வியை யல்லையோ (கலி. 108)

'மோர் விற்கும் பெண்ணே! செம்முல்லை மலர்ந்த சிற்றோடைக்குப் பக்கத்தே மாவடு அன்ன நின் கண்ணினால் என்னை மயக்கி என் நெஞ்சை ஆட்கொண்டாய்' என்று ஆயநம்பி மோர் விலையாட்டியைக் கண்டு காதல் பகர்கின்றான். இரண்டு அகநானூற்றுப் பாடல்களுக்கு (140, 390) உப்புவிலையாட்டி களவுக் காதலியாவாள், பல கலிப்பாடல்களுக்கு (62, 92, 110, 112) குற்றேவல் புரியும் சிறதொழில் மைந்தரும் மகளிரும் காதல் மாந்தர்களாக இலங்குகின்றனர். இவர்தம் காதல் அவர்க்கேற்ற மொழி நடைப்படி புனையக் காண்கின்றோம்.

அகத்திணை யின்பத்திற்குப் பொருள்வளம் அடிப்படையன்று; ஒன்றிய மனவளமே அடிப்படையாகும். மனவளம் இருப்பின் பாலின்பம் சிறக்கும். ஆதலின் செல்வர் ஏழை என்ற வேறுபாடு அகத்திணைக்குப் பொருளில்லைகாண்.

ஓரான் வல்சிச் சீரில் வாழ்க்கை (குறுந். 295)
ஓரா யாத்த ஒருதூண் முன்றில் (அகம். 369)

என வரூஉம் அகப்பாடல்களுக்கு ஒரு பசுவை வைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்துவோர் தலைமக்களாவர். இப்பாடல் களில் செல்வத் தலைவியர் ஏழையாடவர்களைக் காதலித்த பெற்றியைக் கற்கின்றோம்.

அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந் தனள்கொல்
கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ்சோ றுள்ளாள்
ஒழுகுநீர் நுணங்கறல் போலப்
பொழுது மறுத்துண்ணும் சிறுமது கையளே (நற். 110)

செவிலியர் வளர்த்த பெருஞ்செல்வச் சிறுமகள் மிக்க ஏழையனைக் காதலித்தாள்; அக்காதலுக்குப் பெற்றோர் உடன் படார் என அறிந்தபோது, ஏழைக் காதலனோடு உடன் போயினாள். தந்தை வீட்டில் பொழுதுவிடாது முன் உண்ட சிறுமி, இப்போது கணவனுடைய வறட்சிக்குத்தக ஒரு பொழுது உண்டு மறுபொழுது பட்டினி கிடக்கிறாள் என்றால், அகத்திணை இன்பத்திற்கும் பொருளாதாரம் அடிப்படை இல்லை என்பது தெளியப்படும். ஒரு தலைவனது வறுமைப் போராட்டத்தைக் காரிக்கண்ணனார் புனைந்து காட்டுவர் (அகம். 133).

ஒன்றன் கூறாடை யுடுப்பவரே யாயினும்
ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை **(கலி. 18)**

என்பது ஓர் ஏழைத் தலைவியின் துணிபு. இருவரும் ஓராடையைக் கூறு செய்து உடுத்துவோம். பொருளில்லாவிடில் என்கெட்டது? 'பிரியா வாழ்க்கையே வாழ்க்கை' என்பது அவ்விள நங்கையின் அறிவுரை. அகத்திணை அமைப்பு தொழில் பொருள் பதவி முதலியவற்றைச் சார்ந்து நிற்கவில்லை என்று மேலை விளக்கத்தால் தெளிக. உள்ளங் கலந்த பாலாரெல்லாம் அகத்திணைக்குச் சால உரிமையுடையவர். உள்ளப்புணர்ச்சியே காதலுக்கு வேண்டும் இனிய அகவரம்பு. இவ்வரம்பு, நினைப்பின், எல்லா மாந்தரும் கொள்ளுதற்கு எளியது, காதல் இன்பச் சாதலாகாதிருக்க வேண்டுமெனின், ஞாலம் தமிழர் கண்ட அகத்திணை வழி நடப்பதாகுக. கபிலர் குறிஞ்சிப் பாட்டுப் பாடி ஆரிய அரசனுக்குக் கற்பித்தது ஏன்? அகத்திணையைக் கண்டது தமிழினமாயினும், அது கூறும் காதல் மனிதவினத்திற்கே பொது என்பது அவர் நோக்கம். ஒரு நாட்டவரின் கண்டு பிடிப்புக்கள் உலகப் பொதுவாகவில்லையா?

5. அகத்திணைப் பாட்டு

அகத்திணையின் பாகுபாடு தோற்றம் குறிக்கோள் பற்றிய கருத்துரைகளையும் தெளிவுரைகளையும் சங்கப் பாடல்கள் சான்றாக முன்னியல்களிற் கற்றோம்.அகம் என்னும் சொல் இருகூறு தழுவியது. ஒன்று பொருள் பற்றியது. அகப்பொருள் தேர்வுடையது வரம்புடையது தனிமையுடையது ஞால நோக்குடையது என்று முன்னர் அறிந்தோம். ஏனைக்கூறு இலக்கியமுறை. இம்முறையினை இவ்வியலிற் காண்போம். பல்வேறு காதல்களிலிருந்து அகப் பொருளென ஒன்றை வடித்துக்கொண்ட மூதறிவினோர், பல்வேறு இலக்கிய முறைகளிலிருந்து அகமுறையெனவும் ஒன்றை நுண்ணிதாகக் கண்டுகொண்டனர். அகப்பொருளும் அகமுறையும் உள்ளங்கை புறங்கைபோல் நீங்காநிலைத் தொடர்பினவை. ஒரு காதற்பாட்டு பொருளிற் சிறிது குன்றினாலோ, முறையிற் சிறிது குன்றினாலோ அகத்திணையாகாது என்று தள்ளப்படும்.

தமிழ்ச் சங்கம்

அக முறையை ஓர்தற்கு முன், தமிழகத் தமிழினத் தமிழ் மொழி வரலாற்றில் நிகழ்ந்த ஓர் அருஞ்செயலை நாம் ஈண்டுக் குறிப்பிடவேண்டும். அதுதான் பல்லாயிரம் ஆண்டு கட்கு முன்னரே மொழிக்கென ஒரு சங்கம் கண்டமை. அது ஒரு மொழிப்பேரவை யாயினும், மொழிவளத்தால், இனமும் நாடும் வளரும் அன்றோ? வளரக் காணுதும் அன்றோ? ஆயிரமாயிரம் ஆண்டுகட்கு முன்னே

மொழிச் சங்கம் கண்டனராயின், அம் மொழியின் தோற்றத்தையும் தொன்மையையும் அளந்தறிவார் யார்? அளந்தறிய இயலுங்கொல்? மூன்று தமிழ்ச் சங்கங்கள், அவற்றின் நிலைபேற்றுக் காலங்கள், நிறுவிய மூதூர்கள், புலவர்தம் தொகை, புரவலர்தம் தொகை, எழுந்த பன்னூல்கள் என்றிவை பற்றிய குறிப்புக்களை இறையனார் அகப்பொருளுரை காத்து நல்குகின்றது. அவ்வுரைக் காப்பினால் தமிழ் வரலாறு ஒளியுடையதாக இலங்குகின்றது. தலைசான்ற சங்க வரலாற்றினைத் தாங்கி நிற்கும் அவ்வுரை, அகப்பொருட் குறையுடையதாயினும் வாழ்க, பெருமித வழி கர்ட்டியர்குக. முச்சங்கங்கள் நிலவிநின்ற கூட்டாண்டுகள் 9990, புலவர்களின் கூட்டுத்தொகை 8598, என்றினைய பேரெண்ணிக்கைகளைப் பார்த்து, சங்கம் இருந்திருக்குமோ என ஐயப்படும் ஆய்வாளர்கள் உளர். இவ்வெண்ணிக்கையில் மிகை குறையிருக்கலாம் என்று ஒத்துக்கொண்டு, சங்கம் இருந்தமைக்குச் சான்று பல காட்டுவார் பலர்.மேலும் ஒரு பொய்யாச் சான்றினை அகத்திணை அளிக்கின்றது.

அகத்திணைப் படைப்பு இயற்கையிலிருந்து வனப்பொடு வடித்த செயற்கை. இப்படையைக் காண்பதற்கு அறிஞர் குழு வேண்டும். அக்குழுவில் நானிலப் புலவர்களும் சமுதாயத்தின் பல்வேறு பெருமக்களும் இருந்திருத்தல் வேண்டும், நிலப் பாடல் களையும், நாடோடிப் பொதுப்பாடல்களையும், தமிழகம் எங்கணும் பரவி பழக்க வழக்கங்களையும், திணைக்குரிய தனி ஒழுகலாறு களையும் எல்லாம் அக்குழு ஒருசேரக் கொண்டு நாடித் தெளிந்திருக்க வேண்டும். உயர்ந்த கவிதை காலங்கடந்தது என்பர் செல்லியார்.[1] 'அன்ன கவிதைக்குப் பொருளும் காலங்கடந்ததாதல் வேண்டும். அன்பான காதலைப் போலப் பண்பான பரந்த தூய ஆற்றலான பொருள் பிறிதுண்டோ? "யாதும் ஊரே யாவரும் கேளிர் (புறம். 192) என்பது தமிழியம். ஞாலத்தின் மக்கள் மன்பத்தைக்கே வாழ்விலக்கியம் அருள நினைத்த தமிழ்ச் சங்கத்தார் காமக்காதலை அகப்பொருட் படுத்தியது இயல்பினும் இயல்பே.

அகத்திணை ஒரு தனியறிஞன் படைப்பன்று. ஒருவன் படைப்பாயின், வழிவழி மக்களால் அஃது உடைபட்டிருக்கும். காலந்தோறும் தோன்றிச் சிறந்த அறிஞர்கள் ஒருவனது இலக்கியப் படைப்பைப் பின்பற்றியிரார். அகநூற்கண் இன்ன காதற்பகுதி வரலாம், வரலாகாது என்று பொருள் வரம்பு செய்தலும், அப்பொருளை இன்னவாறு பாடுக என்று முன்வரம்பு செய்தலும், சான்றோர் பேரவையாலன்றி இயலா. பேரவை அகத்திணை கண்டமையாற்றான் பின்வந்தோர் எல்லாம் அகவிதிகளைப் பிறழாது பின் பற்றினர்; புதிய விதிகளை அகமெனப் புகுத்த நினைத்திலர். அகம் புறம் என்ற இரு பொருட்பகுப்பு, கைக்கிளை பெருந்திணை ஐந்திணை வெட்சி வஞ்சி நொச்சி முதலான

1. A Defence of Poetry. p. 41

பதினான்கு திணைப்பகுப்பு, முதல் கரு உரி என்ற பாடலமைப்பு, அகத்தும் புறத்தும் வரூஉம் பன்னூறு துறைவகை எல்லாம் ஒரு தனிமகனது எண்ணம் என்றும், குறியீட்டுச் சொற்கள் எல்லாம் அவ்வொருவனது ஆக்கம் என்றும் கூறுதல், மிகையினும் மிகை. எழுதிணை யென்ப, என்மனார் புலவர், குறியறிந்தோரே, களவென மொழிப, கரணம் என்ப என வரும் தொல்காப்பியத் தொடர்கள் பலப்பல. இப்பன்மை நடையால் இவ்விதிகளை இயற்றிய சான்றோர் பலர் என்று தெரியலாம்.

II

அகப்பொருளின் மென்மை

அகத்திணைக்கண் பேரழுகை பேரச்சம் பெருமருட்கை என்றினைய சுவைப்பாங்குக்கு இடமின்று. யமன் வரவுக்கு இடங்கொடாத இன்சுவை இலக்கியம் அகத்திணை. அத்திணை மாந்தர் யாரும் நீடுவாழ்தலன்றிச் சாவுறுதல் இலர். இழவு புகா ஓரிலக்கியத்தை தமிழினம் படைத்ததெனின், அதனைச் சாதற்கு அஞ்சிய இனம் என்று மொழியலாமா? இல்லை, இல்லை; உயிரீயும் இனம் என்று பறைசாற்றுங்காண். பக்கத்துப் புறத்திணை, பல்லாற்றானும் பாங்கரும் சிறப்புடைய உயிரென்ன, உடலென்ன, பொருளென்ன உடைமையனைத்தையும் ஒருங்கீவது. அறவே துறப்பது தமிழினம்! துறக்கவேண்டுவது தமிழ் நெஞ்சம் என்னும் தமிழியத்தைப் புறத்திணை அறிவுறுத்துகின்றது.

> வளியா அறியா உயிர்காவல் கொண்டு
> நளிவாய் மருப்பஞ்சும் நெஞ்சினார் தோய்தற்கு
> எளியவோ ஆயமகள் தோள்
> விலைவேண்டார் எம்மினத்து ஆயர் மகளிர்
> கொலையேற்றுக் கோட்டிடைத் தாம்வீழ்வார் மார்பின்
> முலையிடைப் போலப் புகின் (கலி. 103)

உயிராவது சிறு காற்று; அதனை அப்படிக் கருதுவதை விட்டுப் பெரிதென மதித்து ஏற்றை மடக்க அஞ்சுவானாயின், அவனுக்கு இடைமகள் தோள் கிடைக்குங்கொல்? கிடைப்பது யார்க்கு? காதலியின் மார்புக்கு இடையே விரும்பி வீழ்வதுபோல, ஆனேற்றின் கூரிய இரு கொம்புக் கிடையே வீழ்பவன்தான் விலையின்றி ஆயமகளைப் பெறுவான் என்பது ஆய்க்குல மடந்தையின் அறிவிப்பு. ஒரு நாட்டுப் பெண்கள் காதலுக்கு வாயிலாக ஆடவர் பால் எத்திறத்தினைக் காண விழைகின்றனர், அத்திறனைத் தான் ஆணினம் வளர்த்துக்கொள்ள முந்தும்.

> வில்லோன் காலன கழலே (குறுந். 7)
> சேயிலை வெள்வேல் விடலையொடு
> தொகுவளை முன்கை மடந்தை நட்பே (குறுந். 15)

கணையோர் அஞ்சாக் கடுங்கட் காளையொடு
எல்லி முன்னுறச் செல்லுங் கொல்லோ (அகம். 321)

என வரூஉம் உடன்போக்குச் செய்யுட்களில் களவுத் தலைவன்மார் வீரன்மார்களாக விளங்குகின்றனர். வீரப்பண்பினைக் காதற் பெண்டிர்கள் சிறந்து மதித்தமையே அதற்குக் காரணம். வீரத்தாற் காதலும் காதலால் வீரமும் இணைந்து வளர்ந்தன. நோயுற்ற வீட்டில் இறவாது விழுப்புண்பட்டுப் போர்க்களத்து மடிதலைப் பண்டைத் தமிழினம் மிகமிக விழைந்தது என்பது நாடறிந்த வழக்கு. அதனாற்றான் அகத்திணை கண்ட தமிழ் புறத்திணையும் காண முடிந்தது, காண வேண்டியாதயிற்று.

வெட்சி தானே குறிஞ்சியது புறனே (தொல். 1001)
வஞ்சி தானே முல்லையது புறனே (தொல். 1006)
உழிஞை தானே மருதத்துப் புறனே (தொல். 1008)

என்றவாறு இன்ன அகத்திற்கு இன்ன புறம் என விதிக்கும் மரபு ஒரு குழுவின் செயலாகுமன்றித் தனியறிஞன் செயலாதல் இல்லை. மென் காதல் ஒழுக்கத்தை அகத்தின் பொருளாகவும் வன்மறச் செயலை ப் புறத்தின் பொருளாகவும் கண்டனர் இக்குழுவினர்.

புறத்திணைப் பொருளும் அதன் இலக்கணமும் நுண்ணிய வரம்புக்கு உட்பட்டவையல்ல; உட்படுபவையுமல்ல. கடலுக்கு வரம்பு உண்டோ? புறத்திணையும் அன்ன பரப்புடையது. ஆதலின் புறம்பற்றிச் சங்கத்தார்க்கு மிக்க சிந்தனையில்லை. காதலும் வீரமும் மக்கட் பொதுப்பொருளாயினும், காதலை ஞாலத்திணையாகவும், வீரத்தைத் தமிழ் நிலத்திணையாகவும் சங்கத்தார் வடித்த வடியை நாம் உணர வேண்டும். புறத்திணை ஓராற்றால் வர்லாற்றிலக்கியமாம். தொல்காப்பியப் புறத்திணையாலும் சங்கப் புறப்பாட்டுக்களாலும் பண்டிருந்த போர்முறைகளையும் போர்க்கருவிகளையும் அறியலாம். அவ்வெல்லாம் பின்னர் வழக்கு வீழ்ந்தன என்பது வெளிப்படை. வழக்கு வீழ்வது வரலாறாகும்; காதலையும் வழக்கு வீழும் இலக்கியமாகக் காணலாம்; காணவியலாது என்பதில்லை. ஆனால் தமிழ் மூதறிஞர்கள் அங்ஙனம் காட்ட விரும்பவில்லை.

தமிழினம் ஓரினமாயினும் அரசுவகையால் சேர சோழ பாண்டியன் என மூவினம் போலத் தொன்று தொட்டுப் பிரிந்து கிடப்பது. அதனால் அரசுப்பூசல்கள் நாளியல்பாயின; அரசுப் போர்கள் வீட்டுக்கலாம்போல் அடிக்கடி முழங்கின. "களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே" (புறம். 132) "தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே (புறம். 86) என்ற படி போர்வினை நாள்வினை யாயிற்று.

இருபெரு வேந்தர் தாமும் சுற்றமும்
ஒருவரும் ஒழியாத் தொகைநிலை (தொல். 1017)

என்ற புறத்துறை இலக்கணமாகத் தோன்ற வேண்டுமாயின், அழிந்த மக்களின் தொகைக்கும், அழியாதிருக்கும் மக்களின் அவலத்துக்கும் சொல்லளவுண்டு கொல்? உலகம் நிலையாது என்பதனைப் போர்க்களம் தமிழர்க்கு உணர்த்தியது. அதனால் காஞ்சித்திணை என ஒரு தனித் திணையைப் புறத்திணைக்கண் வகுத்து காட்டினர். தமிழினம் உயிர்வாங்கி உயிர் வழங்கும் போரினமாகத் திகழ்ந்தது என்பதனைப் புறவிலக்கியம் தெளிவாக்குகின்றது. ஆதலின் சங்கச் சான்றோர் முற்றும் இனிய திணையாக அகத்திணையை அமைத்தனர்; ஊடற் போருக்கு இடந்தந்து உயிர்ப் போருக்கு இடமின்றியாக்கினர்; பொருள்வயிற் பிரிவு வினைவயிற் பிரிவுகளைக் கூறி, உயிர்ப் பிரிவைக் கூறாதொழிந்தனர்; போர்க்களச் சிந்தனை மனையகத்துத் தோன்றாவாறு, மெல்லிய செவ்விய இனிய காதல் நிகழ்ச்சிகளை மட்டும் தேர்ந்தெடுத்து, இன்னாத கொடிய வலிய காமச் செயல்களைச் சேராதொதுக்கினர்; பொருகளத் தமிழன் வீட்டகத்து இனியனாக வாழ, நினைக்க, மகிழ வழி செய்தனர். ஆதலின் மென்மையான அகத்திணைத் தோற்றத்திற்குத் தமிழினத்தின் வன்மையான போரெண்ணம் ஒரு தூண்டு கோலாயிற்று என்பது என் கருத்து. எவ்வெவ் வகையால் மெத்தென அமைக்கலாம் என்று சங்கச் சான்றோர் கூடி நினைந்து, யான் முன் விளக்கியாங்குப் பொருள் வரம்பு பலவாறு செய்தனர் காண். அதனால் அகத்திணை "புலனெறி வழக்கம்" (தொல். 998) என்ற பெயர்ப் படைப்புப் பெற்றது. புறத்திணையையோ புலனெறி வழக்கம் எனவும் நாடக வழக்குக் கலந்துள்ளது எனவும் யாரும் கூறுதலில்லை. புறப்பொருள் முற்றும் உலகியல் என்பர் இளம் பூரணர். தமிழ்ச் சங்கம் இருந்தது எனவும், அச்சங்கத்தாரின் அறிவுக்கூட்டினால் தோன்றிய ஆக்கங்களே அகத்திணை புறத்திணை எனவும், புறத்திணை அகத்திணை நுண்ணியதாக அமைத்தனர் எனவும் கண்டோம், அறிவரெல்லாம் ஒருங்கிருந்து காதலுணர்ச்சிக்கு மிகையும் குறையும் புகாது வேலியமைத்துச் சீரான அகத்திணை கண்டனரேல், அதற்கு ஒரு பெருநோக்கம் இருத்தல் வேண்டும். வரம்பு எனப்படுவது குறிக்கோளுக்கே.

III

பெயர் குறியாப் பண்பு

மக்கள் நுதலிய அகனைந் திணையும்
சுட்டி இருவர்ப் பெயர்கொளப் பெறாஅர் (தொல். 999)

அகத்திணையின் அரிய நூற்பாக்களுள் இஃது ஒன்று, முதலடியில் அகத்திணைக்கு உரிய நிலைக்களத்தையும், பின்னடியில் அகத்திணை பாடும் இலக்கிய முறையையும் அறியலாம். ஐந்திணைக் காதலொழுக்கங்கள் எல்லா மக்களையும் கருதியது ஆதலின்,

இவற்றைத் தனியொருவர் பெயர் காட்டிப் புலவர்கள் பாடார் என்பது இந்நூற்பாவின் பொருள். தலைவன் பாங்கன் பாகன் பாணன் தகப்பன் அண்ணன்மார் என்றும், தலைவி தோழி செவிலி தாய் பரத்தை ஊரார் எனவும் ஐந்திணைக்கண் ஆண் பெண் மாந்தர்கள் வருவர். இவ்வாட்களைத் தலைவன் தலைவி தோழி என உறவுப் பெயராற் கூறலாம்; நாடன், துறைவன் ஊரன் என நிலப் பெயராற் கூறலாம்; உழவன் உழத்தி ஆயன் ஆய்ச்சி எனத் தொழிற்பெயராற் கூறலாம்; ஆடவன் நம்பி சிறுமி நங்கை எனப் பாற்பெயராற் கூறலாம்; அவன் அவள் அவரெனச் சுட்டுப் பெயராற் கூறலாம். இவ்வாறு யார்க்கும் ஏற்கும் பொதுமையாகக் கூறுதலன்றி, இட்டு வழங்கும் பெயர்களாற் கூறுதல் ஆகாது, காவிரிப்பூம் பட்டினத்து மாசாத்துவான் மகன் கோவலன் என்பான் மாநாய்கன் மகன் கண்ணகியைக் காதலித்தான், மணந்தான்,பின்னர் கணிகைகுல மாதவியை நாடினான் என்றவாறு இயற்பெயரோடு மொழியலாகாது என்பது அகமுறை. இம்முறையை விடுத்துக் கூப்பிடு பெயர் சுட்டிக் காதல் புனையப்படுமாயின், அக் காதல் எத்துணைச் சிறந்ததாயினும், அகத்திணைப்பாற் படாது என்பது இலக்கணத் துணிபு. சங்க நூலில் உள்ள 1862 அகப்பாடல்களிலும் காதலாட்களுக்கு, கிளவிமாந்தர்களுக்கு இயற் பெயர் இல்லை என்பதை அறிக.

மேலை நூற்பாவில் ஐந்திணையில் ஒருவர் பெயர் சுட்டிவரல் கூடாது என்று இருத்தலின், பிற பிரிவுகளான கைக்கிளை பெருந்திணைகளில் பெயர் வரலாம் என்று ஊகிக்கக் தோன்றும்; எனினும் அவ்வுகம் பிழையானது, ஐந்திணை துறைகள் பல கொண்டது. கோவைபோலும் காதல் நிகழ்ச்சிகள் அமைந்தது. ஆதலின் பெயர் சுட்டிப் பாடும் ஓராசை யார்க்கும் ஏற்படும். எனவே பெயர் வரலாகாது என்று தனியொரு நூற்பாவில் ஐந்திணைக்கு விதிசெய்தார். கைக்கிளைக்கோ துறையொன்று, பெருந்திணைக்கோ துறை நான்கு. பெருந்திணைதானும் ஐந்திணை நிகழ்ச்சிகளின் மிகை. இச்சிறுபான்மையால், இவ்விருதிணைக் கண்ணும் பெயர் சுட்டற்க என்று தனி நூற்பா யாத்திலர். "ஐந்திணையும்" என்ற எச்சவும்மையால், ஏனையிரண்டையும் கொள்ள வைத்தார் என்று அறிக. பெரிய ஐந்திணையாகுக, சிறியகைக்கிளை பெருந் திணையாகுக, அகத்திணைக்கண் காதல் மாந்தர்களுக்குப் பெயர் இயல்பாகவோ கற்பனையாகவோ இல்லை என்பதுவே அகப் பொதுவிலக்கணம். இதற்குப் பின்வரும் நூற்பா சாலும் சான்று.

புறத்திணை மருங்கிற் பொருந்தி னல்லது
அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே (தொல். 1000)

பெயர் புறத்திணையில் வந்தாலும் வரலாம்; அகத்திணையில் வருதலாகாது என்று தொல்காப்பியர் கூறும் முடிவு. நூற்பாவில் எழுதிணையும் அடங்க "அகத்திணை மருங்கின்" என்று பொதுச்

சொல்லாற் கூறுதலைக் குறிக்கொள்க. "அகப்பொருள் ஒருவரைச் சாராது பொதுப்பட வரும்" என்பது இளம்பூரண விளக்கம். இனதால் அகத்திணை பெயர் அறிவாராப் பண்புத்திணை என்பது தெளிவு.

இயற்பெயர் கூறா நோக்கம்

தனி ஒருவன் அல்லது தனி ஒருத்தியின் நல்ல தீய காதற் களங்களை யெல்லாம் வரன்முறையாகத் தொகுத்து மொழிவது அகத்திணையில்லை. சமுதாயத்து எல்லா மாந்தரிடமும் நிகழும் பல்வேறு காதல் நிகழ்ச்சிகளில், நல்லன என்று தேர்ந்து மேற்கொண்ட தனிக் காதல் ஒழுக்கங்களைப் புனையும் வரம்பு உடையது அகத்திணை என்று அறிவோம்.[1] காதல் வாழ்விலிருந்து தோன்றாமல், சமுதாயத்தின் பலர் ஆண் பெண் பெயரிட்டுக் கூறுதல் பொருந்தாதன்றோ? கூறின், தோன்றிய சமுதாய நிலைக் களம் புலனாகாதன்றோ? தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று நிறுவுகின்றோம். ஒருவர் நன்கொடை முற்றும் அளிப்பின், அக்கொடைஞன் பெயர் கூறலாம், பளிங்கிற் பொறிக்கலாம், உருவம் திறக்கலாம், தமிழ் மக்கள் எல்லோரும் தத்தமக்கு ஒல்லும் சிறு தொகையை அளித்திருப்பாராயின், நன்கொடையாளரென யார் பெயரை மொழிவது? எனவே, தமிழ்ப் பல்கலைக்கழகம் மக்கள் எடுத்தது என்று அழைப்போம். அதுபோல்வது அகத்திணை. ஆதலின், "மக்கள் நுதலிய அகன்" என்றார் தொல்காப்பியர்; சமுதாயத் தோற்றமும் சமுதாய நோக்கமும் காட்டினார். அகப் பொருளின் கிடக்கை பொதுவாதலின், அகச்செய்யுளும் சமுதாயம் சுட்டும் பொதுப் பெயரால் அமையலாகாது என்று இலக்கிய முறை, பாடல் வரம்பு, வகுத்தரைத்தனர் என்க.

ஈண்டுச் சில வினாக்கள். அகத்திணைக் காதல் நிகழ்வுகள் பல்லோர்தம் வாழ்க்கையில் காணுபவை யாதலின், கோவையாகத் தொடுத்தலும், ஒருவர் பெயர் வைத்து மொழிதலும் கூடா என்பது சரி. தனி நிகழ்ச்சிகள் என்பதை ஒப்புகின்றோம்; அகப்பாட்டு தனிப்பாட்டு என்பதை உடன்படுகின்றோம்; எனினும் தனியியற்கைக் கேற்பப் பாடல்தோறும் வெவ்வேறு தனிப்பெயர்கள் வந்தால் என்ன? வேறுவேறு ஆண் பெண் இயற்பெயர்களை ஆண்டால் என்? முற்றும் பெயர் ஒழித்து அகம் பாடுவதைக் காட்டிலும், பல பெயர்கள் வரப் பாடின், மக்கள் நுதலியது, சமுதாயச்சுட்டு, வாழ்வில் உள்ளது என்பன தெளிவாக அறியப்படுமன்றோ? ஆதலின்,

மக்கள் நுதலிய அகனைந் திணையும்
சுட்டி ஒருவர் பெயர்கொள்ளப் பெறுவர்

1. Cf. Prof. T.P.M.: The Theory of Poetry in Tolkappiyam: in Tamil Culture, Vol. I; No. 2

என்று புதுவிலக்கணம் வகுத்தால் என்னை? இவ்வினாக்கட்கு எதிராக நாமும் சில வினவுவோம். காதற் செய்கைகளைக் கற்பனையாகவேனும் ஒருவர் பெயர்மேல் ஏற்றியும் நிரல் படத் தொகுத்தும் உரைத்தால் என் கெட்டது? தொடர்பற்ற தனி நிகழ்வுகளாகக் கொள்ள வேண்டும் குறிக்கோள் யாது? வினாக்களுக்கு விடையாக அடிப்படை யுண்மைகளைத் தெளிவாக்குவோம்.

முதலாவது உண்மை

அகத்திணையை நுணுக்கமாக ஆராயின், இருபேருண்மைகள் சிறந்து புலப்படும். முதலுண்மையாவது, காதலுறவுகளும் நலங்களும் சால மிக்கிருந்தாலும், யாரொருவர் முழு வாழ்க்கையும் எல்லா இனியனவும் நிரம்பி இராது; இலக்கியத்திற்குக் குறைவற்ற எடுத்துக் காட்டாகாது. வாழ்க்கை என்பது இன்பதுன்பக் கலவியல். இனிமையும் பதமும் பண்புமே கொண்ட ஓர் இலக்கியம் படைக்க வேண்டின், பொறுக்குதல் வேண்டும்; வேறுபட்ட நிலைகளில் வாழும் காதல் மாந்தர்களிடமிருந்து ஆளுக்கொன்றாகக் காதற் கூறுகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். நல்வாழ்வு வாழ முனைவான் பலர் வாழ்கையைப் பார்ப்பானன்றோ? நிகழ்ச்சிகளைக் கதையாகத் தொடுப்பது அகப்பாட்டின் நெறியன்று. ஒரு தலைவனின் ஒரு தலைவியின் காதற் பகுதிகளைத் தொடர் கதையாகக் கூறுவதென வைத்துக் கொள்வோம். ஒரு காதல்நிலையில் ஒருவகை உள்ளத்தைத் தான் புலவன் காட்ட இயலும். கோவலன் கண்ணகியை நலம் பாராட்டுகின்றான் என்ற காதல் நிலையை இளங்கோ புனைவர். அவர்தம் புனைவு ஒருவன் உள்ளத்தளவில் அமைந்து நின்றது. வேறு வேறு தலைவர்கள் வெவ்வேறாக நலம் பாராட்டு வாரன்றோ: அத்திறங்களைப் புனையும் வாய்ப்பினைத் தொடர் புலவன் இழக்கின்றான். சமுதாயத்தில் ஒருவனது காதல் நெஞ்சத்தைக் காட்டுகின்றானேயன்றி, பலர் நெஞ்சத்தைப் புனைந்து சமுதாயப் போக்கைக் காட்டுகின்றான் அல்லன் தொடர்புலவன்.

ஒரு காதல் நிலையில் ஆண் பெண் பலர் உள்ளோட்டங்களை வெளிப்படுத்தும் அமைப்புடையது அகத்திணை. தலைவன் பிரிந்த காலத்துறையில் வைத்துத் தலைவியர் தோழியர்தம் 25 வகையான எண்ணங்களை மாமூலனார் 25 பாடல்களில் புலப்படுத்துவர். மகட்போக்கிய செவிலித்தாய் என்னும் ஒரு துறைமேல் 17 வகையான செவிலி உணர்ச்சிகளைக் கயமனார் 17 பாட்டுகளில் வனைந்து காட்டுவர். மாமூலனாரின் 25 செய்யுட்கள் 450 அடிகளும், கயமனாரின் 17 செய்யுட்கள் 238 அடிகளும் கூடியவை எனினும் இவை தனிச் செய்யுட்கள்; தனித்தனி மனவியல்பை ஒரு காதற்களத்து வைத்துக் காட்டுபவை. இதுவே அகத்திணை பாடும் முறையாகும்.

ஒரு காதல் நெஞ்சத்தைப் பார்த்தளவில் அமையாது, ஒவ்வொரு காதல் நெஞ்சத்தையும் அலசிக் காணும்படி தூண்டுவது அகத்திணை ஆதலின், அகவிலக்கியத்தைப் பொருட்டொடர் என்னாது நெஞ்சத் தொடரிலக்கியம் என்று அழைக்கலாம். அக மாந்தர்களுக்குப் பெயர் கொடுப்போமாயின், கற்பவர்களுக்கு வரலாற்றுணர்ச்சியே தோன்றும். ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் காணும் அறிவோட்டமே எழும். செழியன் காதலோடு செங்குட்டுவன் காதலையும், பேகன் பரத்தமையோடு கோவலன் பரத்தமையையும், பேகனது கண்ணகியின் அழுகையோடு கோவலனது கண்ணகியின் அடக்கத்தையும் இணைத்து ஆராயும் நூலணர்வே பிறக்கும். பெயரடுத்து வருமாயின் பிற இலக்கியங்களுள் ஒன்றாகவே அகவிலக்கியம் எண்ணப்படுங் காண். பெயரின்மையின், காதல் மனங்களைத்தான். அகத்திணை நமக்குக் காட்டுகின்றது, பல்வேறு வாழ்வு நிலையுடைய மக்கள் குறிப்பிட்ட ஒரு காதல் நிலையில் எவ்வாறெல்லாம் நினைப்பர், சொல்லுவர், செய்வர் என்ற உணர்வுத் திறங்களைத்தான் அகத்திணை வாயிலாக அறிகின்றோம்.

இரண்டாவது உண்மை

இரண்டாவது உண்மை அகத்திணையின் குறிக்கோள். அகப்பாட்டில் முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றும் வரும். வருங்காலை முதல் கரு என்ற இரண்டில், மக்களின் இயற்பெயர் களும் வரலாறுகளும் வரலாம். உவமைப் பகுதிகளில் அவை வரலாம். யாண்டு வரலாகா தெனின், உரிப்பொருள் கூறுமிடத்து, அகத்திணை மாந்தர்களுக்குப் பெயர்களும் வரலாற்றுச் சுவடும் வரலாகாது. ஏன்? அகம் என்பது உரிப்பொருளே. ஒரு சிலர் வாழ்க்கையில் மெய்யாக நிகழ்ந்த காதற்பான்மைகளைப் புலவன் கண்டிருப்பான்; கேட்டிருப்பான். அக்காட்சியும் கேள்வியும் சில பாடல்களை இயற்றத் தூண்டியிருக்கும். என்றாலும் அகப்புலவன் அக்காதலைத் தூய முதல்நிலையில் வைத்துப் பாடுவான்; பெயர் அடுத்த அந்நிகழ்ச்சியை, அணியை உருக்கிப் பொன்னாக்குதல்போல், பொது நிலைக்கு உயர்த்துவான்.

பாத்திரங்களோடு ஒன்றி விடுகை நாடகப் புலவன் வழக்கு. தன் சுவடு தோன்றாது தன்னை ஒளித்து அழித்துக் கொள்கின்றான் அவன். "நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல்சான்ற புலனெறி வழக்கம்" (தொல். 668) என்றபடி, அகத்திணை நாடகப் பண்புடையதாதலின், புலவன் தன்னிலை தோன்றப் பாடான். கூற்றோடு வேற்றுமையின்றிக் கலந்து விடுவான். தானொரு கூற்றாகத் தனிநின்று பாடும் பெற்றி அகப்புலவனுக்கு என்னானும் இல்லை. ஒன்றிவிடும் பான்மையில் அகப்புலவன் நாடகப் புலவனோடு

ஒப்பான் ஆயினும், அகவிலக்கியத்திற்கும் நாடக விலக்கியத்திற்கும் அடிப்படையமைப்பில் பெருவேற்றுமை யுண்டு. நாடகத்தில் வரும் ஆட்கள் மெய்யானர்வர்களாகவோ கற்பனையானவர்களாகவோ இருக்கலாம்; எனினும் அன்னவர்களுக்கு மக்கட்பெயர்கள் உண்டு. மனோன்மணி, வாணி, புருடோத்தமன், நடராசன், நாராயணன், சீவகன், குடிலன் முதலான பெயர்கள் மனோன்மணிய நாடக மாந்தர்க்கு வருவன. சாருதத்தன், சருவிலகன், வசந்தசேனை, மதனிகை என்றின்ன பெயர்கள் மண்ணியல் சிறுதேர் நாடகத்தில் வருவன. ஆர்லந்து ரோசலிந்து ரோமியை சூலியத்து ஒத்தெல்லன் தெத்திமோன் என்பன செகப்பிரியர் நாடகங்களில் வரும் பெயர்கள். இன்னணம் நாடக மாந்தர்கள் இயற்பெயர் தாங்கி வருவர். எந்நிகழ்ச்சியும் உரையாடலும் யார் பெயரோடும் ஒட்டியயே வரும். இது நாடகநூலின் இயல்பு. பிறவிலக்கியங்களின் இயல்பும் இதுவே.

அகத்திணை முற்றும் கூற்று வகையான் அமைந்த நாடகப் பாங்கினதாயினும், அக் கூற்றுக்கள் மக்கள் பெயர் பெறா. தலைவன் தலைவி தோழி செவிலி நற்றாய் எனக் கூற்றுப் பெயர்கள் பெறும். கூற்றுப் பெயரனைய பொதுப் பெயர்களையும் பெறும். அஃதன்றி எவ்வகையான மெய்ப்பெயருக்கும் புனைபெயருக்கும் இடமில்லை. யாரொருவர் சிறப்புப் பெயரும் வரலாகாது.கிழவோன்மேன, கிழவோள் செப்பல், தோழிக்கும் உரிய, செவிலிமேன, காமக் கிழத்தியர் மேன எனவாங்குத் தொல்காப்பியம் உறவுக் குறியீடு செய்தல் காண்க. மேலும் அகத்திணை குடும்ப விலக்கியம். அத்திணையின் சிறந்த மாந்தரெல்லாம் தாய் தந்தை கணவன் மனைவியென நெருங்கிய உறவினர்கள்; உறவனையவர்கள், கிளைஞர்கள் தம்முடன் பேசிக்கொள்ளும்போது கிளை சுட்டிப் பேசுவதல்லது, பெயர் சுட்டிப் பேசார். அதுவும் காதற்றுறையில் பெயர்சுட்டிப் பேசுவரோ? இம் மரபையும் ஈண்டு நினைவு கொள்க.

IV

பாற்கல்வி

இயற் பெயர் வாராது, வரக்கூடாதென்று ஓர் இலக்கியம் கண்டதன் குறிக்கோள் என்ன? அகப் பொருளில் வரலாற்றுள்ளம் தோன்றலாகாது என்று வடித்ததன் உட்கிடை யாது? காமப் பருவம் வந்த இளைஞர் இளைஞியர்க்கெல்லாம் பாற்கல்வியைக் கசடற அளிப்பதுவே அகத்திணையின் தலைக்கோள். இக் கல்வியைக் கற்பித்தற்கு இலக்கிய முறைதான் நல்வாயில் என்பர் பாலியல் அறிஞர் ஆவலக் கெல்லிசு. 'பால் பற்றிய அறிவுப் பனுவல்களைக் காட்டிலும் இலக்கியங்கள் ஆற்றல் வாய்ந்தன; ஒருபுடைக் காதல் இருபாற் காதல் எண்ணங்களும் எழுச்சிகளும் இலக்கியத்தில்

பேரிடங்கொள்கின்றன; கற்பனை சான்ற இலக்கியம் பாலடிப் படையிலிருந்து அழகும் ஆராவின்பமும் தழைத்துச் செழிப்பதைக் காட்டுகின்றது; உண்மைக் காதலாடுவதற்கு முன்னே அதன் உயரிய வடிவத்தை இளையவர்கள் இலக்கியச் சோலையில் கண்டு பயில்வ. ஆதலின் 'பருவஞ்சால் உள்ளங்கட்கு இலக்கியம் பாற்கல்வி நூலாகும்' என்பது அப்பேரறிஞன் கருத்து[1]. இவர் கூறுவது இலக்கியத்திற்கு உரிய பொதுக் கருத்து. பொதுவாகவே தமிழ் மொழியுட்பட எம் மொழியின் பேரிலக்கியங்களிலும், இயல்பின் விஞ்சிய காதல்களும் கொடுங் காதல்களும் தெய்வக் காதல்களும் பேரிடங் கொண்டிருப்பதைக் கற்கின்றோம். கவிதைச் சுவையை மிகுப்பது என்பது ஓரிலக்கிய நோக்கம். அந் நோக்கத்திற்குக் கவிஞன் எப்பொருளையும் நன்று தீது பாராது மேலிட்டுக் கொள்கின்றான். கற்பவர்க்குக் கவிச் சுவை யளிப்பது இலக்கிய பயன். இது பரவி நிற்கும் பெருங் கருத்து.

அகத்திணை எல்லா இலக்கியத்தினின்றும் வேறுபட்ட நோக்குடையது. கற்றபின் நிற்க என்பது அதன் நோக்கம். ஆதலின் பாலியல்புகளை கசடறக் கற்பிக்க முயல்வது அதன் அமைப்பு. பாடும் புலவனுக்கு அவன் எண்ணிய காதலையெல்லாம் பாடலாம் என்ற பொருளுரிமையோ, எண்ணியபடி யெல்லாம் பாடலாம் என்ற முறையுரிமையோ இல்லைகாண். ஆன்ற முன்னோர் வகுத்த உரிப்பொருளுக்கும் முறைமைக்கும் அடங்கிப் பாடுபவனே அகப்புலவன். கவிநயத்திற் கென்று ஒன்றினை அகத்திணையிற் கூடச்சேர்த்த வரல்லர் அதன் படைப்பாளர். மாசற்ற பாற்கல்விக்கு இயையாதவற்றை, வழக்கிலிருந்தாலும் வரவொட்டாது ஒதுக்கினர்; இயைதல் நன்றெனத் தோன்றியவற்றைப் படைத்தேனும் சேர்த்தனர். பிறவிலக்கியங்கள் சென்ற தடத்திற் செல்லாது, இயல்பினும் இயல்பான காதலுணர்வுகளைப் புனைவது அகவிலக்கியம்.

புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே *(தொல். 959)*

என்பது இலக்கண மாதலின், அகத்திணைக்குப் பாடு பொருளான புணர்தல் பிரிதல் முதலிய ஐந்தும், எளிய இனிய மேதக்க இயல்புக் காதல்கள் அல்லவா? இக் காதலுணர்ச்சிகளை நூறு பல்வகையில் ஆண்பெண் மனநிலைகளுக்கேற்பப் புனைந்து காட்டுவது அகத்திணை. அப் பல்புனைவில் ஒவ்வொருவனும் ஒவ்வொருத்தியும் தன்னுள்ளக் காதல் வடிவத்தைக் காண்பர். ஒருவர் மற்றவர்தம் காமவேட்கையை மதித்து ஒழுகவேண்டும் என்று செயலுறுத்துவது அகத்திணை. உடற்காம வேட்கையில் உள்ளமும் மாசறக் கலத்தல்

1. Studies in the Psychology of Sex. Vol, II. Sexual Education, pp.86, 90.

வேண்டும் எனப் பண்புறுத்துவது அகத்திணை, வாழ்க்கையில் மனம் குளிரும் காமத் தணிவு இன்றியமையாதது, இகழ நெகிழத் தக்கதன்று என்று அறிவுறுத்துவது அகத்திணை. தொல்காப்பியத்து மெய்ப்பாட்டியலைக் காண்மின். அகப்பொருள் மெய்ப்பாடுகளே அவண் பெரிதும் நுண்மையாக இடம் பெறுகின்றன. புணர்வின் துவக்க வேட்கையினையும் இடைநிலைப் பெருக்கத்தினையும் இறுதித் திளைப்பினையும் வகை வகையாகத் தொல்காப்பியம் எடுத்துக் கற்பிக்கின்றது. புணர்ச்சியின்றித் தனித்துறுங் காலத்துக் காமத் தாக்குதலால் நெஞ்சொடு உடலும் நிலை திரிகின்ற அலைவுகளைத் தொல் காப்பியத்திலும் அகப் பாடல்களிலும் கற்கின்றோம்.

பாற்கல்வி முறை

இல்லறம் புகுவார்க்கும் இல்லறம் புகுந்தார்க்கும் காதற் கலையை நேர்படக் கற்பிப்பதுது அகத்திணையின் குறிக்கோள். அகவிலக்கிய மாந்தர்க்குப் பெயர்கூறின், வரலாறு குறிப்பின், கற்பிக்கும் முறை இழுக்குப்படும்; குறிக்கோள் தோன்றாது. ஒரு பயன் காணவேண்டின் அதற்கேற்ற முறையைக் கடைப்பிடிக்க வேண்டும். கல்வி கொடை வீரம் நாட்டுப்பற்று மொழிப்பற்று என்ற பண்புகளுக்கு வாழ்ந்த முன்னோர்களைக் காட்டலாம். வள்ளல் அழகப்பர் இருந்த உடைமையை வழங்கினார். ஈட்டிய பொருளை வழங்கினார், நூலாலைகளை வழங்கினார், கட்டிய வீட்டை வழங்கினார், புழங்கிய தட்டு முட்டுக்களை வழங்கினார், அரிதில் தொகுத்த நூல்களை வழங்கினார், அணுவணுவாக உடலும் உயிரும் எல்லாம் வழங்கினார் காண் என்று அணியணியாகச் சொல்லிக் காட்டலாம். 'கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரிலை" என்று பெயர் சுட்டிக் கொடை சுட்டலாம். கேட்க இனிக்கும், நாணங்குன்றாது கேட்கலாம். பூதப்பாண்டியன் சிறந்த இல்லறத்தான்; "பேரமர் உண்கண் இவளினும் பிரிக" என்று வஞ்சினங் கூறினான்; மனைவியொடு என்றும் பிரியா வாழ்க்கை வேண்டினான்; அவனது தேவியும் அவனைப் போலப் பாடவல்ல புலமை பெற்றவள்; கணவன் இறந்த போது துயர் பொறாது உயிர் விட்டனள். இப்பாண்டியக் குடும்பத்தைப் பார்மின் என்று இல்லறத்திற்கு எடுத்துக் காட்டலாம், நாண் நீங்காது கேட்கலாம். திருமணத்தார் எல்லாரும் காதலர்கள்தாம், பாலின்பம் பருகியவர்கள் தாம்; எனினும் அவர்களை நல்ல இல்லறத்திற்கு எடுத்துக் காட்டுவதன்றிக் காமப் புணர்ச்சிக்கு எடுத்துக் காட்டுவதுண்டோ? இன்னணம் ஊடினர் கூடினர் உரையாடினர் என்று காமக்கலவியைப் பெயர்சுட்டிக் கற்பிக்கும் வழக்கு உண்டோ?

தன் கொடையைத் தன் கல்வியைத் தன் மறத்தைத் தன் இல்வாழ்க்கையை ஒருவன் பிறரறியக் கூறும் வழக்கு உண்டு. தன் மனைவியொடு துய்த்த இன்பநுட்பங்களை எடுத்து விளக்கும் வழக்கு உண்டோ? விளக்குவான் உளனெனின், நாணிலன் அறிவிலன் ஆவான். கேட்பானுளனெனின் அவனும் அன்னன் ஆவான். ஒருவனும் ஒருத்தியும் உறவு கொள்கின்ற செய்கையில் தோன்றும் இன்பப்பகுதிகள் இன்புற்ற இருவர்தம் அளவில் அறியப்படுபவை; பிறர் யார்க்கும் அறிவிக்கலாகாதவை. காதல் நுண்ணிய உணர்வுகளுள் மிக நுண்ணியது; நாணச் செய்கைகளுள் மிக நாணுக்குரியது; உலகிற்கு உரியது என்றாலும், இருவர் இருவர் என்ற நிலையில் அடங்கிவிடுவது. நாகரிகம் என்று தெளிந்ததெடுத்த நல்ல காதலோட்டங்களைக்கூட விடாது கூறுதல் விரும்பத்தக்கதன்று. கூறப்புகின், நாண் அலையக் காணலாம். ஒரு சில இடைக்கால நூல்களைப் போலக் காதலை இலக்கியக் கும்மாளம் ஆக்குவது ஆண் பெண் உறவை இகழ்வதொக்கும். பொதுப்பட மொழிவதே இந்நிலைக்கு வருமாயின், மெய்யுணர் முறைகளைப் பெயர் சுட்டிக் கூறல் மிகப் பொல்லாததன்றோ? மேலும் ஒன்று நினைக:

காதற்றுறையில் பெயர்க்குறிப்பு எதிரான காதற் போக்கை உண்டாக்கும்; கல்வியை ஊட்டாது வேறுபல சிந்தனைகளை உண்டாக்கும். பாற்கல்வி எல்லா மக்கட்கும் உரியதாய் இனியதாய்ப் பதிவதாய்ப் பயனுடையதாகல் வேண்டுமெனின், காட்டுக்கள் தலைவன் தலைவி எனப் பொதுப்படுதலன்றி, ஆட்டனத்தி ஆதிமந்தி எனத் தனிப்படுதல் இல்லை. பருமை பரந்துபடும் நுண்மையாதல் வேண்டும். நிகழ்ந்த காதல்கள் வரலாற்றுச் சுவடற்றுக் காதல் மணமாக வீசுதல் வேண்டும். இன்ன கல்வியியலையும் உளவியலையும் தெளிந்த நம் முன்னோர் பிற பரு இலக்கியங்களைப் போலாது, அகத்திணை என்னும் நுண்ணிலக்கியத்தை ஒரு பெயர் கொள்ளா உலகப் பொதுவிலக்கியத்தை வேண்டுமென்றே படைத்தனர்.

மக்கள் நுதலிய அகனைந் திணையும்
சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெறாஅர் (தொல். 999)

என்ற முறையிலக்கணத்தை மீண்டும் நினைவோம். "மக்கள் நுதலிய அகன்" என்பது இரு பொருள்பட அமைந்தது. (1) சமுதாயத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டது அகத்திணை என்பது ஒரு பொருள். இதனால் ஒருவர் நிலைக்களம் அல்லர் சமுதாயம் நிலைக்களம் என்று அறிகின்றோம். (2 எல்லா மக்களையும் நோக்கிச் செய்யப்பட்டது என்பது மற்றொரு பொருள். இதனால் பரந்த குறிக்கோளை அறிகின்றோம்.

V

நுண்ணிலக்கியம்

இலக்கிய மாந்தர்கட்குப் பெயர் சூட்டுவது பற்றிச் சிந்தனை செய்த பிற நாட்டு அறிஞர்களும் உளர். அரித்தாட்டில் வரலாற்றாளனுக்கும் கவிஞனுக்கும் உரிய பொருள் வேறுபாட்டை ஆராய்கின்றார். "வரலாற்றைக் காட்டிலும் கவிதை மிக்க மெய்த்தன்மையும் ஆழ்ந்த கருத்தும் உடையது. கவிதை சொல்லுவனஞால மயமானவை. வரலாறு கூறுபவை தனிநிலை சார்ந்தவை., ஞாலமயம் என்பதன் கருத்து என்ன? இலக்கியத்தில் வரும் ஆட்களுக்கு இயற்பெயர்கள் இருந்தாலும் (அப்பெயர்களுக்கு மதிப்பில்லை). இன்ன பண்புடைய மனிதன் இப்படி நடப்பான், பேசுவான் என்று தன்மை நிலை காட்டுவதே கவிதை நோக்கம்" என்பது அரித்தாட்டில் விளக்கம்[1]. கவிதைக் கலையையும் கவிஞனையும் குற்றச்சாட்டு நீக்கிக் காக்கமுனைந்த சர் பிலிப்புச் சித்தினி கவிதையின் ஓம்படை என்னும் நூல் எழுதினார். புலவன் தான் புனையும் மாந்தர்களுக்குப் பெயர் வைத்து உண்மைபோலக் காட்டி ஏய்க்கின்றான் ஆதலின் கவிதை பொய்ம்மையுடையது என்பது ஒரு குற்றச்சாட்டு. அதனை மறுக்கப் புகும் சித்தினியார் "பெயர் வைப்பது வரலாற்று நோக்கமன்று; காட்சிகளை உணர்ச்சிப் படுத்துவதற்கே. மனிதர்களைப் புனையுங் கால், பெயரின்றி விட முடியாது" என்று காரணங் காட்டுவர்[2]. உலகம் நோக்கிய இலக்கியங்களில் மக்கட்பெயர்கள் வரினும் அவை வழக்கு மாத்திரையேயன்றி வேறு பயனில்லை. மதிப்பில்லை என்பது இவ்வெழுத்தாளர்களின் முடிபு.

பெயரின்றி இலக்கியம் தோன்ற முடியாதா? மாந்தர்களைப் புனையமுடியாதா? என்று இவர்கள் சிந்திக்கவில்லை. ஏன்? இன்னவர்கள் கற்றறிந்த இலக்கியமெல்லாம் பெயர் கொண்ட மாந்தர்களைப் பேசுபவை. சீத்தன் கொற்றனுடைய பழக்கடைக்குச் சென்றான்; 10 மாம்பழங்கள் 5 ரூபாய்க்கு வாங்கினான்; நான்கினை மூன்று ரூபாய்க்குப் பூதனுக்கு விற்றான் என்று பெயர்கள் சுட்டிக்

1. "By a universal statement, I meen one as to what such or such a kind of man will probably or necessarily say or do-which is the aim of poetry, through it affixes proper nampes to the Characters."

-Aristotle on the Art of Poetry, p. 43

2. "Their naming of men is but to make their picture the more lively, and not to build any history: painting men, they cannot leave men nameless——— The Poet nameth Cyrus or Aeneas no other way than to show what men of their fames, fortunes and estates should do."

-by sir Philip Sidney; An Apologie for Poetry, p.36

கணக்குப் போடுதல் உண்டு. சாத்தன், கொற்றன், பூதன் என்ற பெயர்களுக்கு மக்கள் மதிப்பில்லை. எவையாயினும் சில பெயர்கள் ஆண்டுச் சொல்முறைக்கு வரவேண்டும். அவ்வளவே. பெயர் சுட்டும் இலக்கியங்கள் இக்கணக்கு முறை போல்பவை. இவ்வகை யிலக்கியங்கள் தாம் எல்லா மொழியிலும் உலகத்து உள்ளன. தமிழ்மொழிக் கண்ணும் இவையுள. அ என்பவன் இ என்பவன் கடைக்குச் சென்று பழங்கள் வாங்கி உ என்பவனுக்கு விற்றான் என்ற குறிக் கணக்கியலும் ஒன்று உண்டுகாண். அகத்திணை இதுபோலும் நுண்ணிலக்கியம். இவ்விலக்கியம் தமிழர் கண்டது, தமிழிற்றான் உள்ளது. தலைவன் தலைவியைக் காதலித்தான்; அதற்குத் தோழி தூதுசெய்தாள்; தலைவி தலைவனொடு உடன் போயினாள்; செவிலி சுரத்திடைத் தேடிச் சென்று முக்கோற் பகவர்களைக் கண்டாள்; தலைவன் தலைவியை மணந்தான்; பரத்தையிற் பிரிந்தான் என்றவாறு கூற்றுப் பெயரால் கூறுவது அகத்திணை வழக்கு. அகப்பாடல்களுக்கு எழுதியிருக்கின்ற துறைகளையெல்லாம் காண்க. யாண்டும் ஆண் பெண் இயற்பெயர்கள் வாரா;தலைவன் தலைவி என்றின்ன பங்குப் பெயர்களே வரும். உலகொட்டும் நுண்ணிலக்கியம் கன்னித் தமிழில் இருப்பதை ஞாலம் அறியாது. அறிவியாக் குறை நம்பாலது. அரித்தாட்டிலும் சித்தினியும் அறிந் திருப்பரேல் பெயரில் தூய இலக்கியம் பாட முடியும். தமிழிற்காண் என்று காரணம் காட்டியிருப்பர் மன். மொழித்துறையில் நுண்ணிலக்கியம் காண்பது எளிதன்று. இன்றுவரை எம் மொழியாளரும் கண்டதில்லை.தமிழினம் கண்டிருத்தலின், நுண் கணக்கியலும் தமிழில் இருந்திருத்தல் வேண்டும் எனவும், அதன் பெருவளர்ச்சியே நுண்ணிலக்கியத் தோற்றத்திற்கு உதவியிருக்கும் எனவும் ஊகிக்கலாம்.

முதல் கருப்பொருள்கள்

அகத்திணைப் பாட்டாவது பெயரற்றது. இது பிழையா பிழைப்படக்கூடா அகமுறை. எனினும் ஈண்டு ஒரு விளக்கம். கண்ணுக்கு வந்த சில அகச்செய்யுட்களைப் படித்தாலும், அரசர் பெயர்களும் பிறர் பெயர்களும் அன்னவர் ஆற்றிய செயல்களும் வரலாற்றுக் குறிப்புக்களும் மண்டிக் கிடப்பக் காணலாம். புறநானூறு போலவே அகத்தொகைகளும் தமிழர் வரலாறு வரையப் பெருந்துணை யாவதை அறிவோம்.

குல்லைக் கண்ணி வடுகர் முனையது
பல்வேற் கட்டி நன்னாட் டும்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினும்
வழிபடல் சூழ்ந்திசின் அவருடை நாட்டே *(குறுந். 11)*

இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவிற்
பொலம்பூண் நன்னன் பொருதுகளத் தொழிய
வலம்படு கொற்றம் தந்த வாய்வாள்
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்
இழந்த நாடுதந் தன்ன
வளம்பெரிது பெறினும் வாரலென் யானே (அகம். 199)

1. தலைவன் பிரிந்து சென்றிருக்கும் நாடு வேற்றுமொழி வழங்குவது; கட்டி என்பவனது நாட்டிற்கு அப்பாலது. 2. களங்காய்க் கண்ணி நார்முடி என்னும் சேரன் பெருந்துறைப் போர்க்களத்து நன்னனை வென்றான்; இழந்த நாட்டை மீட்டான்? அச்சேர நாடுபோல வளம்மிகக் கிடைத்தாலும், அதற்காகத் தலைவியைப் பிரியேன் என்று நெஞ்சிற்குக் கூறுகின்றான் ஒரு தலைவன். வடுகர், கட்டி, நன்னன், நார் முடிச் சேரர் என்றினைய பெயர்கள் அகப்பாடல்களில் வருவது பார்த்து, அகத்திணைக்கண் பெயர் வரலாம் என்று மயங்கற்க. இவைகள் உரிப்பொருளுக்கு உரிய அகமாந்தர்களின் பெயர்கள் அல்ல. புணர்தல் பிரிதல் முதலான திணையொழுக் கங்கட்கும் இப்பெயரினர்க்கும் எத்தொடர்பும் இல்லை. "அகத்திணைக்கண் சார்த்து வகையான் வந்தனவன்றித் தலைமை வகையாக வந்தில" என்பர் நாச்சினார்க்கினியர்.

முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை (தொல். 948)

என்ற அகச்செய்யுள் அமைப்பில் முதல் கரு என்னும் இரு பகுதிகளில் பெயர்ச் சுட்டுக்கள் வரலாம், வரும். இவையன்று அகம். உரிப் பொருளே அகமாம். முதலும் கருவும் அகமாகி உரிப்பொருளின் சூழ்நிலைகள், இச்சூழ்நிலைப் பகுதிகளில் எவ்வளவு வரலாறும் வரும் என்பதற்குப் பரணர் மாமூலனார் அகப்பாட்டுக்கள் சான்றாகும். மெய்யான அகப்பகுதிக்கண் ஊடிப் புணர்ந்து பிரிந்து இருந்து இரங்கும் தலைமக்களுக்குப் பெயர் யாண்டும் வராது என்பதுவே முடிபு.

பிற தமிழ் இலக்கியங்களும் காதலும்

சங்க அகவிலக்கியம் பிள்ளைத் தமிழிலக்கியங்களையெல்லாம் ஒரு திறம்பட உருவாக்கியுள்ளது. இளங்கோ சாத்தனார் திருத்தக்கதேவர் சேக்கிழார் கம்பர் முதலான காப்பியப் புலவோர்க்கெல்லாம் காதல்பாடும் முறைக்கு வழி காட்டியவர்கள் அகப்புலவர்கள். தமிழ் மொழிக்கண்ணார் பாடிய, எக்காலத்தைய, எவ்வகைப் பாட்டாயினும், தெய்வப் பாசுரமாயினும்,நாடக பாணியாயினும், நாடோடிப் பாடலாயினும், திரைப்பாட்டாயினும், காதல் பாடுங்காலை அகத்திணைச் சுவடு பதிந்திருக்கும்.தமிழ்ச் சமுதாயம் அகத்திணைக் கல்வி ஊறப்பெற்றது. அவ்வூற்றம்

55.18.

நிலத்தின்கீழ் நீரோட்டம் போல அறாது ஓடி வருகின்றது. நாளைப் பாடும் பாட்டிலும், உரைநடையிலுங் கூட காதற்றுரையில் அக நெஞ்சங்களைக் காணலாம். இது தமிழிலக்கியப் பொதுமரபு.

கோவலன் கண்ணகியோடு கூடிய தலைநாட்புணர்ச்சியில் ஆராக் காமம் துய்க்குங்கால், அவள் நுதலைப் புருவத்தை இடையைக் கண்ணைத் தெய்வ மேன்மையாகப் பாராட்டுகின்றான்; அவளது சாயலை நடையை மொழியை இயற்கையினும் ஏற்றம் உடையன என்று புகழ்கின்றான். அணியும் மாலையும் மணமும் கோலமும் இல்லாமலும்,அழகொழுகும் இயற்கை மகள் என்று காண்கின்றான். கோவலன் பாராட்டுரையில் கையறு நிலை. பாராட்டெடுத்தல் என்ற அகத்துறைச் சாயல்களைக் காணலாம். குணமாலையை அவளது மைத்துனர்க்குப் பெற்றோர் மணம் பேசினர். அவளோ சீவகனைக் காதலித்தவள். தன் கருத்தைச் செவிலிக்கு வெளிப்படுத்தினாள். யான் விரும்பிய காளைக்கு எந்தையும் யாயும் இசையாவிட்டால், இறப்பேன் அல்லது தவஞ்செய்வேன் என்று துணிவுரைத்தாள். நொதுமலர் வரைவு அறத்தொடு நிற்றல் என்ற அகச்சாயல்களை இச் சீவகசிந்தாமணிப் பகுதியிற் காண்க.

நற்பெரும் பான்மை கூட்ட
நகைபொதிந் திலங்கு செவ்வாய்
விற்புரை நுதலின் வேற்கண்
விளங்கிழை யவரைக் கண்டார்

என்ற சுந்தரர் பரவையார் திருமணத்தில், "உயர்ந்தபாலது ஆணையின் ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப" (தொல்.1038) என்ற இயற்கைப் புணர்ச்சி யமைப்பைக் காண்கின்றோம். "நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு" என்று சீதை துணியுங்காலைக் கற்பியல் உடன்போக்கை நினைவுறுத்துவர் கம்பர்.

ஒருமகள் தன்னை யுடையேன்
உலகம்நிறைந்த புகழால்
திருமகள் போல வளர்த்தேன்
செங்கண்மால் தான்கொண்டு போனான்

என்ற பெரியாழ்வார் திருமொழியில்,மகட்போக்கிய செவிலித்தாய் இரங்கும் துறைநிலை உண்டு. "சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே" என்ற அப்பர் பாசுரத்தில், காமம் மிக்க கழிபடர் கிளவியைக் காண்க. "அன்னை வெறுங் கூடு காவல் கொண்டாள்" என்ற முத்தொள்ளாயிரத்துப் பாண்டியன் நோக்கிய தலைவி அன்னையால் இற் செறிக்கப்படுகின்றாள்.

நெரித்த திரைக்கடலில் நின்முகம் கண்டேன்
நீல விசும்பினிடை நின் முகம் கண்டேன்

என்ற பாரதியாரின் கண்ணம்மாவில், "நோக்குவ எல்லாம் அவையே போறல்" (தொல். 1045) என்னும் காதலுணர்வு தோன்றுகின்றது. "வீட்டினில் கூட்டுக்குள்ளே கிளியெனப் போட்டடைத்தார் கெடுநினைப்பு உடைய பெற்றோர்" என்று பாரதிதாசனார் பாடும்போது, பூங்கோதை இற்செறிக்கப்பட்டாள் என்று அகத் துறையைக் கற்கின்றோம். "பாலிருக்கும் பழமிருக்கும் பசியிருக்காது பஞ்சனையிற் காற்று வரும் தூக்கம் வராது" என வரும் கண்ணதாசன் திரைப்பாடலில், "பசியட நிற்றல், கண்துயில் மறுத்தல்" (தொல். 1215) என்னும் மெய்ப்பாடுள் அமைந்துள்.

மேற்காட்டியாங்கு காப்பியங்கள் அருட்பாடல்கள் சிற்றிலக்கியங்கள் திரைப்பாடல்கள் என்ற இலக்கிய வகைகளில் எல்லாம் அகத்துறைச் சுவடுகள் மலிந்து புகுந்து கிடக்கும். தமிழ்ப்புலவன் எக்காலத்தன் எந்நிலையன் காதல் பாடினும், ஆண்டு அகத்திணை தோன்றாதிராது என்பதற்கு மேற்காட்டின சில சான்றுகள். என்றாலும் இந் நூல்வகைகளில் வரும் காதல்கள் அகத்திணையாகா. கோவலன் கண்ணகி, சீவகன் தத்தை, இராமன் சீதை, சுந்தரர் பரவை, நளன் தமயந்தி, புருடோத்தமன் மனோன்மணி என்றோர் காதலைப் புனையுமிடங்களில், உரையாளர்களும் விளக்குநர்களும் காட்சி ஐயம் துணிவு இயற்கைப் புணர்ச்சி ஆற்றுதல் ஆற்றாமை என்றின்ன அகத்துறைகள் கூறலாம்; தொல் காப்பிய நூற்பாக்களை மேற்கோளாகக் காட்டலாம்; எனினும் இலக்கிய மாந்தர்களை ஒட்டிவரும் காதல்கள் அகமாகா என்று தெளிக. காப்பியம் முதலிய இலக்கியத்தில் தோன்றும் நல்ல காதலர்கள் நெஞ்சு ஒத்த உள்ளப்புணர்ச்சியுடையவர்களே. இவ்வளவிற்கு அகத்திணை என்று கூறலாமாயினும், அவ்விலக் கியங்கள் அகமுறை தழுவவில்லை. பெயருடையோர் காதற் பெருக்கங்களைப் புனைகின்றனர்; மேலும் அன்னவர் காதல் வாழ்வுகளைத் தொடுத்துத் தொடர்ந்து புனைகின்றன. நிரல்படப் புனையாமை அகப்பொருள்முறை; பெயர்படப்புனையாமை அகப்பாட்டு முறை, ஆதலின் இம் முறையொடு வாரா இலக்கியங்கள் அகம் போலக் காதலைப் பாடினும் அகமாகா என்பது முடிவு. திருமண நாளன்று பல்வேறு சுவையுணவுகளை ஆக்கி ஒருங்கு வைத்து உண்பிப்பர்; இவை வீட்டுணவாகுமா? அன்று ஆயிரம் பேர் வந்து கலந்து உண்பர்; அவர் விருந்தினராவரோ? வீட்டுணவும் விருந்தும் போல்வது அகத் தமிழ்.

VI

அகப்புலவர்கள்

பாடும் புலவர்க்குத் தம்மை வெளிப்படுத்திக் கொள்ளும் உரிமையும் இடமும் அகத்திணை இலக்கியத்தில் இல்லை. அவ்வளவுதான். புலவன் அல்லது புலமகள் தன்னை வெளிப்படுத்திக்

கொள்ளல் கூடாது என்று முழுத்தடையோ தமிழில் இல்லை. வெளிப்படுத்திக் கொள்ளுங்கால், அது வேறிலக்கியமாகி விடும். ஆங்கிலப் புலமகனார் செல்லியின் நூல்கள் அவர்தம் காதல் எண்ணங்களை எதிரொலிப்பன; காதலுக்குத் தடை அவர் கவிதைக்குப் பிறப்பாயிற்று என்பர் பெத்தரண் ரசலார்[1]. "மாழை யொண்கண் பரவையைத் தந்து ஆண்டானை", "சங்கிலியோடு எனைப் புணர்த்த தத்துவனை" என்றாங்கு சுந்தரர் பாடல்களில் அவர்தம் காதல் வாழ்க்கையைக் கற்கின்றோம். சங்கப் பெண் புலவர் நக்கண்ணையார் கோப்பெரு நற்கிள்ளி என்னும் சோழ மல்லனைக் காமுற்றார்; அவன் காமுறப் பெற்றிலர்.

அடிபுனை தொடுகழல் மையணற் காளைக்கென்
தொடிகழித் திடுதல்யான் யாயஞ் சுவலே
அடுதோள் முயங்கல் அவைநா ணுவலே (புறம். 83)

என்று தம் உள்ளத்துயரையும் நாணத்தையும் மூன்று பாடல்களாக (புறம். 83, 86, 85) எழுதினர். இப்பாக்கள் புறமாவன. புறநானூற்றில் சேர்க்கப்பட்டுள. தன்னைப் புலப்படுத்திவிடும் பாடல் அகமாகாது என்பது இதன் குறிப்பு.

புலவர்கள் கவியுணர்வு மிக்க பெருமக்கள். அன்னவர் காதல் வாழ்வும் உணர்வும் துடிப்பும் மிக்கதாக இருக்கும். எனினும் என்செய்வார்? தாம் எழுதும் அகப்பாடல்களில் தம்மைக் காட்டார்; தம் பாடல் மக்கட் பொதுமை ஆக வேண்டும் என்று தம்மை ஒளித்துக்கொள்வர். ஆதிமந்தியாரும் வெள்ளிவீதியாரும் அங்ஙனம் தம்மைப் புலப்படுத்தாது, புலப்படுத்தக் கூடாதென்று அகம்பாடிய பெண் புலவர்கள். ஆதிமந்தி தன் கணவன் ஆட்டனத்தியைக் காவிரி வெள்ளத்திற் பறிகொடுத்தாள்; இடந்தோறும் ஓடி அலைந்து தேடினாள்; பெறும் பேதுற்றாள். புலவாட்டி வெள்ளி வீதியும் கணவன் பிரிந்தது பொறாது அவனிருக்கும் இடந்தேடிப் பாலை வழியிற் புறப்பட்டாள்.

ஆதிமந்தியின் அகப்பாட்டு

மள்ளர் குழீஇய விழவி னானும்
மகளிர் தழிஇய துணங்கை யானும்
யாண்டும் காணேன் மாண்டக் கோனை;
யானுமோர் ஆடுகள மகளே; என்கைக்
கோடுர் இலங்குவளை நெகிழ்த்த
பீடுகெழு குரிசிலுமோர் ஆடுகள மகனே! (குறுந். 31)

1. Marriage and Morals, p.61

வெள்ளிவீதியின் அகப்பாட்டு

கன்றும் உண்ணாது கலத்தினும் படாது
நல்லான் தீம்பால் நிலத்துக் காஅங்கு
எனக்கும் ஆகாது என்னைக்கும் உதவாது
பசலை உணீஇயர் வேண்டும்
திதலை அல்குலென் மாமைக் கவினே! (குறுந். 27)

மள்ளர்விழா நிகழும் களத்தும் மகளிர் துணங்கையாடும் அரங்கத்தும் யாண்டும் தக்க என் கணவனைக் காணேன் என்று, பெயர் சாராது பொதுப்படப் பாடியதால், ஆதிமந்தியார் பாட்டு அகத்தமிழாயிற்று. தலைவனது நெடும் பிரிவால் என் அழகுநலன் அவனுக்கும் எனக்கும் நுகர்வின்றிக் கொன்னே கழியும் என்று நிகழ்ச்சியைப் பொதுவுறயாத்தலால், வெள்ளிவீதியார் அகப்புலவரானார். எல்லோரும் எனது எனது என்று சொல்லிக் கொள்ளும் பொதுநிலையில் தன்னை நிறுத்திக்கொண்டு, புலவன் உணர்ச்சிகளை அமைத்தலால், காதற் பாட்டுக்கள் இவ்விலக்கிய வுலகில் நல்லிடம் பெறுகின்றன என்பர் அட்சனார்.[1] சங்கப்பா தனக்குவமையில்லாச் சமுதாயப்பா; சமுதாய நெஞ்சத்தையும் சமுதாய ஆண்தகையையும் காட்டும் தனித்தகையுடையது அது என்பர் பேராசிரியர் தெ.பொ.மீ.[2]

காதற் பயில்வைப் பொதுவுரிமையாக்க வேண்டும் என்ற சங்கத் தமிழ்ப் பண்பிற்கேற்ப, ஆதிமந்தியும் வெள்ளிவீதியும் அகப்பாட்டுப் பாடினர். அதனாலென்ன? அன்னவர் நோக்கத்தை மற்றையோர் கெடுத்துவிட்டனர்.

குற்றப்படா அமைப்பு

பரணர் வரலாறுகளை அமைத்துப் பாடும் தனிப்புலவர். அவர்தம் அகப்பாட்டில் வரலாற்றுக் குறிப்புக்கள் பலவுள. அவ்வகைக் கருத்துக்கள் பயிற்சி மிகுதியால் அவர் பாடும் போது முன்வந்து நிற்கும்போலும். கணவனைக் காவிரி அடித்துச் சென்றதும், ஆதிந்மதி அறிவு பிறிதாகிப் பேதுற்றதும், ஆட்டனத்தியைக் கண்டீரோ என்று நாடு நாடாக ஊர் ஊராக அழுத கண்ணளாய்த் திரிந்தலைந்ததும், மருதி என்னும் மங்கை ஆதிமந்தியின் காதலனைப் பிழைப்பித்துத் தானுயிர் நீத்துத் தன்னிகரில்லாப் புகழ் கொண்டதும் ஆய அவல நிகழ்வுகளை நான்கு பாடல்களில் (அகம். 76, 135, 222, 236) பரணர் சுட்டிக் காட்டுவர்; உவமை வாயிலாக வெளிப்படுத்துவர். இதனால் ஆதிமந்தியாரின்

1. An Introduction to the Study of Litereture, p, 97
2. "The Theory of Cankam poetry" in Tamil Culcure Vol. I, No. 1

அகப் பாட்டிற்கு அவர்தம் இல்லறத்து நிகழ்ந்த ஒரு பெரும் துன்பச் செயல் காரணம் என்று அறிகிறோம். இவ்வுறிவுக்குப் பின் "யாண்டும் காணேன் மாண்தக்கோனை" என்ற அடியைப் படிக்கும்போது, பெயருணர்ச்சி தோன்றி விடுகின்றது நமக்கு. ஆட்டன் அத்தியைத்தான் மாண்தக்கோன் என்று மறைத்துக் கூறுவர் என்ற எண்ணப்படுகின்றது. புலவாட்டி ஆதிமந்திக்கும் இக் குறுந்தொகைப் பாட்டுக்கும் வாழ்க்கைத் தொடர்பு உண்டு என்று இனிச் சொல்லாதிருக்க முடியுமா? ஆதிமந்தியின் அகப்பாட்டை ஓராற்றான் புறப்பாட்டாகும்படி செய்த குற்றமுடையவர் பரணர் என்று சொல்லாதிருக்க முடியுமா? இவ்வகைக் குற்றப்பாடு ஔவையாருக்கும் உண்டு.

நெறிபடு கவலை நிரம்பா நீளிடை
வெள்ளி வீதியைப் போல நன்றும்
செலவயர்ந் திசினால் யானே *(அகம். 147)*

என்ற அகப்பாட்டில், காமுற்ற வெள்ளிவீதியாரின் கழிபெருஞ் செலவைக் காட்டிக் கொடுத்தனர் ஔவையார். அதனால் "எனக்கும் ஆகாது என்னைக்கும் உதவாது" என்னும் வெள்ளி வீதியின் அகப்பாடலுக்கும், அவர்தம் இல்லற வாழ்வுக்கும் தொடர்பு உண்டு என்று கற்கின்றோம். 'எனக்கும்' என்ற சொல்லுக்கும் வெள்ளி வீதி என்ற பெயர்க் குறிப்புக் கொள்ளத் தோன்றுகின்றது. பரணர் ஔவையாருங்கூட குற்றம் குறைந்தவர்கள் வெள்ளி வீதியாரை நோக்கும்போது. வீதியார் கணவனைத் தேடிக் காதற் செலவு மேற்கொண்டவர்; எனினும் தன் செயல் தோன்றாவாறு, தோன்றக் கூடாதென்று பாட்டுக்களை அகத்திணையாகப் பாடினார். அங்ஙனம் பாடியவர்,

காதலற் கெடுத்த சிறுமையொடு நோய்கூர்ந்து
ஆதி மந்தி போலப் பேதுற்று
அலந்தனென் உழல்வென் கொல்லோ *(அகம். 45)*

என்று ஆதிமந்தியின் நாண் கடந்த செயலை உவமைப்படுத்துவது தகுமா? வெள்ளிவீதியின் காதற் புறப்பாட்டைப் பற்றி ஔவையாரும், ஆதிமந்தியின் அலைவைப் பற்றிப் பரணரும் வெள்ளிவீதியாரும் குறிப்பிடாதிருந்தால், நாம் என்ன அறிவோம்? மற்றைச் சங்கச் சான்றோர் அகப் பாடல்களைப் போல ஆதிமந்தி வெள்ளி வீதியார் தம் பாடல்களையும் தூய அக நோக்கோடு கற்போம். இக்குறிப்பறிந்த பின் அந்நோக்கோடு கற்பது எளிதன்று; கற்பிப்பதும் எளிதன்று. அதனால் அகப்பாடும் புலவர்கள் ஒன்று அறிய வேண்டும். உரிப்பொருளுக்கு உரிய முதல் கருச் சூழ்நிலைகளில் யாதும், எவ்வரலாறும் கூறலாம் என்று எண்ணிப் பாடற்க. போர் கொடை கல்வி முதலான வரலாற்றுப் பகுதிகளை

அமைக்கலாம். தடையின்று. பெயர் சுட்டிக் காதற் செய்கைகளை உவமையாகவோ பிறவாகவோ அகப்பாட்டில் வருவிப்பின், பரணர் ஔவையார் வெள்ளி வீதியார் அறிந்தோர் அறியாதோ செய்த குற்றங்கட்கு இடனுண்டு; ஒருவர் சுட்டிய வரலாற்றுக் குறிப்பினால், சிலர் பாடிய அகம் அகத்தன்மை யிழத்தலும் உண்டு. புலமையில்லாதாரின் காதல் நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டிருந்தாற்கூடப் புலமை மாந்தராகவும் ஆதிமந்தி வெள்ளிவீதியைப் போல அகம்பாடும் புலவோராகவும் இருந்துவிட்டால், இலக்கியம் இழுக்கப்படும். ஆதலின் அகப்பாட்டில் பிறர்தம் காதற்குறிப்பு வாராமை நல்லிலக்கணமாம் என்பது என் துணிபு.

கற்கு முறை

அகவிலக்கியம் கற்கும் அறிவுடை மாணவர் அகநோக்கோடு அகத் தமிழ்ச் செய்யுட்களைக் கற்பாராக. மாதங்கீரனார் மடல் பாடியதுகண்டு,இவர் வாழ்க்கைக்கும் மடல் மாவுக்கும் தொடர்பு உண்டோ? கயமனார் மகட் போக்கிய செவிலித் துறையைத் திரும்பப் பாடியிருத்தலின், இவர்தம் மகள் உடன் போக்கு ஒருப்பட்டவளோ? காமக்கணியார் வெறித்துறை பாடியமையின், இவர் களவுக் காதலில் வெறியாடல் நிகழ்ந்ததோ? பெருங்கடுங்கோ பாலை பாடியதால், இவர் வாழ்க்கை பிரிவு மயமோ? ஔவையார் அகம் பாடியமையின் மணமானவரோ? என்றெல்லாம் பாடிய பொருளுக்கும் பாடிய புலவர்க்கும் தொடர்பு மூட்டுதல், இயைபுகாண முயலல், பெருங் கல்விப்பிழை. புலவர்களும் காதலை நுகரும் இன்ப மக்களே. அன்னவர் இல்வாழ்வில் காதல்வீறுகள் பல துய்த்திருத்தல் இயல்பினும் இயல்பே துய்த்த இன்ப நயங்களை அகப்பாட்டாகச் சிலர் யாத்திருத்தலும் உண்டு. மற்றோர் தம் வாழ்வில் நிகழ்ந்த காதற் கூறுகளைக் கண்டும் கேட்டும் அவற்றை அகமாகச் சிலர் பாடியிருத்தலும் உண்டு. எனினும் பிறவகைக் காதற் பாட்டாகப் பாடாது அகத்திணைச் செய்யுளாக ஏன் பாடினார்? இதனை அகத்திணை கற்குநர் உணர்தல் வேண்டும், வேண்டும்.

காதல் என்பது இன்பத்துட் பேரின்பம், உணர்ச்சியுள் பேருணர்ச்சி, ஆற்றலுள் பேராற்றல், அடிப்படையுட் பேரடிப்படை, உரிமையுள் எல்லார்க்கும் உரியது, நட்பினுள் இருபாலாரையும் இணைப்பது, கல்வியுட் கசடறக் கற்க வேண்டுவது, நாணினுள் நனி நாணுடையது, ஒழுக்கத்துள் விழுமியது. இத்தகைய காதலை ஒவ்வொரு வரும் விளங்கிக் கொள்ள வேண்டும்; அதன் வீறுகளையும் மாறுகளையும் தெரிந்துகொள்ள வேண்டும்; இணக்கம் பிணக்கங்களையெல்லாம் புரிந்து கொள்ள வேண்டும். யார்பால் எப்படித் தெரிந்து கொள்வது? யார் யாருக்கு

அறிவுறுத்துவது? பலர் தம் பயில்வுகளை எவ்வாறு அறிவது? ஒவ்வொருவரும் தம் பயில்வுகளை எங்ஙனம் பிறர்க்கு உய்ப்பது? இதற்குத் தமிழினம் கண்ட நெறிதான் அகப்பாட்டு; பெயர் அடுத்தல் ஆகாது என்னும் அகவிலக்கணம். அகத்திணை மாந்தர்கள் பெயரிலிகள். அதக்காதல் பெயர்ப்படா. பெயர்ப்படுத்தல் கூடாத தூயநிலையுடையது என்று ஒப்பரிய இலக்கணவேலி கட்டினர் அகத்திணை யறிஞர்கள். பிரியாது அவ்வேலியை எல்லோரும் காத்தனர். உரிப்பொருளை யாரொருவர் பெயரோடும் இணைக்கலாகாது என்பது புறநடையற்ற விதியாதலின், பாடிய புலவனோடும் இணைக்கலாகாது என்பது வெளிப்படை. இவ்வேலிக் காப்பினால், எந்நிலையினர் தம் காதல் நுகர்வுகளும் கல்விகளும் அறிவுகளும் கற்பனைகளும் காட்சிகளும் சொற்களும் சமுதாயப் பொதுமையாகும் வழி ஏற்பட்டது. பெண்களும் ஆண்களும் நாணொடு அகத்துறை பாட முன் வந்தனர். புறத்திணையினும் அகத்திணை பாடப் பலர் விழைந்தனர். 2381 சங்கப் பாடல்களில் அகத்துறைப் பாட்டுக்கள் 1862; 473 சங்கப் புலவர்கள் 378 புலவர் அகம்பாடினவர் என்றால், இத் தொகைப் பெருக்கத்திற்குப் பெயர் சுட்டா இலக்கண வேலியே காரணமாகும் என்று அறிக. நான் சொன்னேன் என்று சொல்லாதீர்கள், என் பெயரை வெளிப்படுத்தாதீர்கள் என்று கேட்டுக் கொண்டு, உண்மையைப் புலப்படுத்தப் பலர் முன்வர வில்லையா? இவ்வுலகியல் வழக்கோடு அக விலக்கிய வழக்கை ஒத்துக் காண்க.

அகம் என்னும் சொல்லின் பொருள்

அகத்திணை என்ற தொடரில் 'அகம்' என்னும் சொல்லுக்கு இயல்பான பொருள் வீடு என்பது. "அகம் புகல் மரபின் வாயில்கள்" என்பது தொல்காப்பியம் (1097). வீடு அல்லது குடும்பம் ஆகும் காதலே அகத்திணை நுதலுவது. அகத்திணை மாந்தரெல்லாம் ஒரு வீட்டுறுப்பினர்களே. ஆதலின் அகம் என்னும் சொல் வீடு என்பதனையே முதலாவதாகக் குறிக்கும். எனினும் இல், மனைவி, வீடு என்ற பல சொற்கள் இருக்கவும், இச்சொல்லைக் குறியீடாகத் தேர்ந்தெடுத்தது ஏன்? அகத்திணை சங்கப் படைப்பு என்று முன்னர் அறிந்தோம். சங்கத்தார் தாம் வடித்த புதிய காதல் இலக்கியத்தின் கூறுகள் எல்லாம் தோன்றத் தக்கதொரு சொல்லை ஆராய்ந்தனர். காதலர் தம் உள்ளப் புணர்ச்சி அவ்விலக்கியத்தின் உயிர்க்கூறு. உள்ளம் என்னும் பொருளும் அகச் சொல்லுக்கு இயல்பாக இருத்தலின், அகத்திணை என்று இலக்கியக் குறியீடு வைத்தனர்.

6. அகத்திணைப் புலவர்கள்

சங்கப் புலவர்கள், சங்கப்பாட்டுக்கள் பற்றிச் சில வகைபாடுகளை முதலிற் குறிப்போம். 2381 சங்கப்பாக்களை 473 சான்றோர் பாடினர். இப்பாக்கள் அகத்திணையும் புறத்திணையும் பற்றியவை. இவற்றுள் அகத்திற்கே உரிய செய்யுட்கள் 1862. இவை தம்மை இயற்றியோர் 378 அகப்புலவோர். இவருள் பெண் புலவோர் இருபத்து மூவர். அவர் பாடிய அகங்கள் 97.

சங்கத்தொகையின் 473 புலமையோருள், அகம் பாடாது புறமே பாடியவர் தொகை 95 (ஆண் 86; பெண்9); புறம்பாடாது அகமே பாடியவர் எண் 301: அகமும் புறமும் பாடிய இருதிணைப்புலவோர் எண்ணிக்கை 71. அகத்திணையிற் கற்பியல் பாடாது களவியல் மட்டும் பாடியோர் கொகை 145; களவியல் பாடாது கற்பியல் ஒன்றே பாடியவர் எண் 140; களவும் கற்பும் பாடிய இரு கைகோட் புலவர் எண்ணிக்கை 93.

அகப்பாடலின் பாகுபாடு

திணை	பாக்கள்	புலவர்கள்	
ஐந்திணை			
களவு 882 கற்பு 966	1848	238	41 களவுப் பாடல்களுக்கும்
		233	28 கற்புப் பாடல்களுக்கும் ஆசிரியர் பெயர்கள் இல.

கைக்கிளை	4	2
பெருந்திணை	10	1

அகப்புலவரின் பாகுபாடு

(எண்ணிக்கை அடிப்படையில்)

பாட்டுத்தொகை	பாடினோர் எண்ணிக்கை
1	249
2	51
3	22
4	10
5	5
6	6
7	3
8	6
9	5
10	2
11-20	7
21-30	2
31-40	4
61-75	3
100-200	5

இப்பட்டியலிலிருந்து, பத்துக்கு உள்ளாக அகச் செய்யுட்களை யாத்தோர் தொகை 359 என்று அறியலாம். நூற்றுக்கு மேலாக அகம் பாடியோர் ஐவரே. அவர் யாரெனின், ஐங்குறு நூற்றுப் புலவர்களான 1. ஓரம்போகியார், 2. அம்மூவனார், 3. கபிலர், 4. ஓதலாந்தையார், 5. பேயனார். எல்லாருள்ளும் அகச்செய்யுள் மிகுதியாகப் பாடினவர் கபிலர்; இவர் பாடற்றொகை 197. அடுத்தவர் அம்மூவனார்; இவர் பாடல் எண்ணிக்கை. 127.

சங்க புலவர்களின் இலக்கியத்தரம்

சங்க காலத்துப் புலவர்களின் இலக்கியவன்மை மென்மை களைப் பாட்டின் எண்ணிக்கையை வைத்து அளக்கலாகாது, அளக்கமுடியாது. நூறு பாடியோர் பாவின் வனப்பும், ஒன்று

பாடியோர் பாவின் வனப்பும் சங்கத் தன்மையுடையனவாகவே உள. நூல் நூறு எழுதியோர் திறஞ்சான்றோர் எனவும், தொல்காப்பியர் திருவள்ளுவர் இளங்கோபோல நூல் ஒன்றே எழுதினார் திறஞ்சாலார் எனவும் கூறுவதுண்டோ? எல்லாம் சிந்தனைத் திறத்தைப் பொறுத்தது. சங்க காலம் யார்க்கும் சிந்தனையை வளர்த்த காலம். சங்கக்கல்வி கற்பவர்க்கெல்லாம் சிந்தனையை ஊட்டிய கல்வி. 378 அகப்புலவோருள் ஒரே பாடல் பாடியமைந்த புலவோர் தொகை 249 எனின், படித்தோர் பெருக்கமும், பாடவல்லுநர் பெருக்கமும், சிந்தனைப் பரப்பும், செறிந்த தெளிந்த கல்வியும் சங்க காலத்து இருந்தமை பெறப்படும்.

பாரிமகளிர்–புறநானூறு

அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்
எந்தையும் உடையேம்; எங்குன்றும் பிறர்கொளார்.
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தரெங்
குன்றுங் கொண்டார்யாம் எந்தையும் இலமே. (112)

கபிலர்–புறநானூறு

பாரி பாரி யென்றுபல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்.
பாரி யொருவனும் அல்லன்;
மாரியும் உண்டீண்டு உலகுபுரப் பதுவே. (107)

ஆரியவரசன் யாழ்ப்பிரம தத்தன்

குறுந்தொகை

அறிகரி பொய்த்தல் ஆன்றோர்க் கில்லை
குறுகல் ஓம்புமின் சிறுகுடிச் செலவே;
இதற்கிது மாண்ட தென்னா ததற்பட்டு
ஆண்டொழிந் தன்றே மாண்தகை நெஞ்சம்;
மயிர்க்கண் அன்ன மாண்முடிப் பாவை
நுண்வலைப் பரதவர் மடமகள்
கண்வலைப் படூஉங் கான லானே. (184)

கபிலர்–குறுந்தொகை

மால்வரை இழிதரும் தூவெள் ளருவி
கன்முகைத் ததும்பும் பன்மலர்ச் சாரல்

சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறுமகள்
நீரோ ரன்ன சாயல்
தீயோ ரன்னவென் உரனவித் தன்றே. (95)

பாரிமகளிர் ஒரே புறப்பாட்டுப் பாடியோர். ஆரியவரசன் ஒரே அகப்பாட்டுப் பாடியவன். கபிலரோ புறமும் அகமும் பல கண்ட வர். பாரிமகளிர்க்கும் ஆரியவரசனுக்கும் கற்பித்த ஆசான் கபிலர் என்று ஊகிக்க இடமுண்டு.[1] மாணவர் பாடலும் ஆசிரியர் பாடலும் ஒத்த ஒரு பெருந்தரமாக இருக்கக் காண்கின்றோம். இஃதோர் எடுத்துக் காட்டு. இங்ஙனமே பிற ஆசிரியன்மாரிடம் கற்ற பின் மாணவரின் கல்வி வன்மையும் நற்றரமாக இருந்தது என்பதற்கு எல்லாச் சங்கப் பாடல்களும் சான்றாகின்றன.

"பண்டைத் தமிழ்ச் சங்கம் இலக்கியத்திற்கு ஆற்றிய தொண்டு நன்முறையானது. சங்கத்தார் செய்யுட்களைத் தணிக்கை செய்து பதர் களைந்து இலக்கிய மேன்மையைக் காத்தனர். ஒப்புதற்கு வந்த செய்யுட்களில் இழி சொல்லும் கொச்சை மொழியும் இருக்குமேல் ஏற்றுக்கொண்டிலர். இலக்கண இலக்கிய விதிகளைக் கண்டிப்பாக வலியுறுத்தின காரணத்தால், எண்ணியாங்குப் பாடும் உரிமையும் கருத்துப் புதுமையும் ஓரளவு நசுக்குண்ட போதினும், குற்றமற்ற நல்ல பாடல்கள் தோன்ற முடிந்தன" என்று பேராசிரியர் பூரணலிங்கம் பிள்ளை தமிழ்ச் சங்கப்பணியைப் பற்றி விளக்குவர்; சங்கப் பாடல்கள் சொல்லாலும் பொருளாலும் புலப்பாட்டாலும் ஒரு தன்மையவாகத் தோன்றுவதற்கு ஏதுக் காட்டுவர்.[2] இவர் விளக்கம் ஒருபால் உண்மையே. ஏறக்குறைய ஐந்நூறு பெருமக்களின் பாடல்களைச் சங்கப்பனுவல்கள் தாங்கி நிற்கின்றன. இத்துணைப் பேரும் ஒத்த நல்ல புலமையாற்றலோடு பாடியுள்ளனர். அங்ஙனம் பாடவேண்டுமேல், அன்று நாடு முழுதும் ஒரு தன்மையாகப் பரவியிருந்த கல்வி முறையே தலையாய காரணமாதல் வேண்டும். சங்கத்தார் தகா என்று தள்ளிய பாடல்கள் பல இருக்கலாம். தள்ளாது தழுவிய பாடல்களே இரண்டாயிரத்துக்கும் வியனாக மிகுந்திருப்பதை நோக்குங்கால், இப் பெருக்கத்திற்கு வரன் முறையான கல்வியாற்றலே காரணமாம் என்பது தெளிவு. சமுதாய நலம் நோக்குக; தூய பொருள்பற்றிப் பாடுக; மொழிப் புண் செய்யற்க; தூய சொல்லை ஆளுக என்ற எழுத்து நெறிகளை மாணவர் மனத்துப் பதித்தது அற்றைக் கல்வி; அதன் பயனேயாம் சொல்லாலும் பொருளாலும் தூய சங்க விலக்கியம்.

சங்கத்தின் அகப்புலவர் ஏறக்குறைய நானூற்றவர். இவர்தம் பெருமை பாட்டின் எண்ணிக்கையையோ அடிகளையோ பொறுத்ததன்று. யார் பாடிய எப்பாடலும் ஆராய்ச்சிக்கு உரிய

1. உ.வே.சா. : பத்துப்பாட்டு; பாடப்பட்டோர் வரலாறு.
Studies in Tamil literature and Histroy, p. 55.

2. Tamil literature, p. 18.

சிறப்புடையதே. எனினும் நூல் விரித்தோடும் என்று அஞ்சி, ஒரு சிலரைத்தாம் ஆராய எடுத்துக் கொண்டேன். அச்சிலர்தம் பாடல்களும் இவ்வியலின் கண் அகத்திணை நோக்கொடு ஆராயப்படுகின்றன. காதலர் தம் கிளர்ச்சிகள் புணர்ச்சிகள் பிற உணர்ச்சிகள் என்ற மனநிலை உடல் நிலைகளும், புலவர்தம் காதல் பாடும் திறங்களுமே ஈண்டு விளக்கப்படுகின்றன. அகப்பார்வையே இந்நூலின் நோக்கம். ஆதலின் சங்கப் புலவரின் இயற்கையறிவு வரலாற்றறிவு மொழியறிவுகளை இவ்வாராய்ச்சிக் கண் மிகுதியும் எதிர்பார்த்தற்கில்லை.

சங்கப்புலவர்களின் புதுக்கூர்மை

அகத்திணை சிறிதும் மீறலாகப் பொருள் வரம்பு உடையது. அணுவளவும் பிசகலாகா முறை வரம்பு உடைய தெனின், அன்ன வல்லிய விதியரன் கொண்ட ஓரிலக்கியம் புலவர்களின் உள்ளக் கால்களைக் கட்டுமன்றோ; எண்ண நாடிகளை ஒடுக்குமன்றோ; கற்பனை யோட்டத்தைத் தட்குமன்றோ; சொல் வரவுகளைத் தடை செய்யுமன்றோ; முடிவில் உணர்ச்சிக் கூர்மையை மழுக்குமன்றோ என்று யார்க்கும் வினவத் தோன்றும், ஐயந்தோன்றும். ஒவ்வொரு விளையாட்டும் ஆடுவது பற்றிப் பல விதிகள் உள; பல நூல்கள் உள்ளன. இவ்விதிகளை மீறாது அவ்வளவையும் நினைந்து எப்படி விளையாட முடியும் என்ற மலைப்பு நூல்களை மட்டும் காண்பவர்க்கு எழும். விளையாடதிருக்கலாம் போலும் என்ற சலிப்பும் தோன்றும். விதிபார்த்து யாரும் விளையாடுவதில்லை. விளையாடிகளுக்குப் பயிலப் பயில விதிகள் அமைந்துவிடும், விளங்கி வரும். மனித முயற்சிக்கும் பயிற்சிக்கும் வாரா அருமைகள் யாண்டுள? விளையாட்டு ஆர்வமும் உணர்ச்சியும் விளைப்பது; அதற்குக் காரணம் இடவெல்லைகளும் செயல் வரம்புகளும் உடைமை, ஆடுநர் விதிகளை வழுவுகின்றனரோ என்று கண்கொட்டாது காணும் களநடுவர் ஒருவர் உடனிருப்பதை அறிவோம். அன்ன வல்விதி சான்றது விளையாட்டு. இவ்விதிகளின் கடு மையாலும் நிலையாலும் அன்றோ ஞாலப் பெரிய ஓலிம்பிய ஆட்டங்கள் நிகழ முடிக்கின்றன. வரம்பின்றேல் வளர்ச்சியில்லை, இடம் பரந்து செல்வதில்லை, காலங்கடந்து நிலைப்பதில்லை. எல்லா நாட்டவர்களும் ஒலிம்பியப் போட்டிகளில் கலந்து ஆடுப; ஆடுதற்காகப் பயில்ப. இவ்வளர்ச்சிக்குக் காரணம் விளையாட்ட விதிகள் இன்று மரபாகி விட்டமை. அடிக்கடி இவ்விதிகள் மாற்றப்படின், நாடு தோறும் மாறியிருப்பின், நீண்டு பரந்த பயிற்சிக்குத் தூண்டுகோல் இருக்குமா? ஆதலின் வளர்வும் பரப்பும் நிலையும் எல்லாம் வரம்பாய் மரபின்மேல் கிளைப்யன என்பது துணிவு. வரம்பிருத்தலின் எல்லோரும் அறிவைச் செலுத்தப, ஆற்றலை முறையாகப் பெருக்குப, முயற்சிப் பயன் உண்டென்று நம்பிக்கை கொள்ப.

இலக்கண நூல்களில் அகவிதிகளை மாத்திரம் கற்கும் போது, இப் பலவிதிகள் புலமைக் கொல்லிகள்போல அச்சம் தரும். நானூறு புலவர்கள் இரண்டாயிரம் அகப்பாடல்களைப் பாடியுள்ளனரே; புறத்திணைக்கு இவ்வெண்ணிக்கை இல்லையே என்று அகவிலக்கியப் பனுவல்களைக் கற்கும்போது, மலை சிலையாகக் காட்சியளிக்கும். சங்ககால மாணவர்கள் பாடிப்பாடிப் பயின்று பயின்று அகத்துறைகளைக் கற்றனர். விதிகள் வழிகாட்டி யாயின; எண்ண வோட்டத்திற்குப் பாத்தியாயின? அறிவைச் சால்பாக்கின. அதனால் அகம் பாடுவது எளியது இனியது நல்லதெனப் பண்டையோர் கருதினர். எல்லோரும் அகத்துறை பற்றி யெழுதிப் புலமையை வளர்த்தனர். ஆங்கிலப் பேராசிரியர் சான்லிவிங்டன் லாவே கவிதையின் மரபும் புரட்சியும் என்னும் நூலில் புலவர்தம் பெற்றியை மூன்று நிலைகளாகக் காட்டுவர்[1]. 1. மரபுகளை அப்படியே போற்றிக் கொள்ளுதல். 2. மரபுகளைப் போற்றுங்கால் புதிய அறிவும் வனப்பும் பொலியச் செய்து கொள்ளுதல். 3. மரபுகளை முற்றும் ஒதுக்கி விடுதல். சங்கச் சான்றோர் நடுப்பிரிவைச் சேர்ந்தவர். காலங் கடந்த காதல்மரபுகளைத் தத்தம் காலத்திற் கியையப் பொருத்திப் பாடியவர். லாவே கூறுவதுபோல, இயல்பான பொருள்களில் புதையுண்டு கிடக்கும் அரிய உண்மைகளைக் காணவல்ல புத்தறிவினர்[2].

தமிழ் இலக்கணங்களான எழுத்து சொல் அகம் புறம் முதலியவை கூறும் எல்லா விதிகளும் காலங் கடந்தவையல்ல. காலத்திற் பல்லவை கழிந்தொழியும்; புதியன வந்து அவ்விடத்தை நிரப்பும்[3]. எனினும் உயிருக்கு மூச்சு, உடம்புக்கு என்பு, வாழ்வுக்கு ஒழுக்கம், வணிகத்துக்கு நாணயம், தமிழுக்குத் தூய்மை போல என்றும் மாறாத கூறுகள் ஒவ்வோர் இலக்கணத்துக்கும் உண்டு. வீட்டின் சில பாகங்களை மாற்றலாம், மாற்றுகின்றோம். வேறு சில பாகங்களை மாற்ற முயலின் வீடு மாறிப் போதல் உண்டன்றோ? அடித்தளமும் பரப்பும் கட்டும் சுவரும் கட்டிய வீட்டிற்கு நிலையாக அமைந்தவை. ஆதலின் இலக்கண அமைப்பில் மாறுவதும் மாறாததும் பகுத்தறிந்து, மாறாதது மாறிப் போய்விடாதபடி, மாறுவதை மாற்ற வேண்டும். இக் கொள்கையடிப்படையிற்றான் தொல்காப்பியம் முதலிய நூல்கள் வரையப்பட்டன; பழைமைச் செலவுக்கும் புதுமை வரவுக்கும் வாயில்கள் அமைத்தனர்; அதனால் நிலையான உண்மைகளைக் காத்துத் தந்தன. தமிழ் இலக்கண நூல்களைக் கற்போர் எத்துணையோ புறநடை நூற்பாக்களைக் காண்பார்கள்; கற்ற பகுதிகளை வைத்துக் கொண்டு, எஞ்சிய

1. John Livingston Lowes:
   Convention and Revolt in Poetry p. 60
2. Ibid p.M 76
3. ஒ.நோ. முன்பனிக்காலம்: மரபும் இலக்கிய வளர்ச்சியும்

பகுதிகளையும் ஒப்பிட்டு ஓர்ந்து கொள்க என்று இலக்கணிகள் விடாது கூறும் வேண்டுகோள்களைக் கர்ண்பார்கள். இதனால் தமிழிலக்கணம் கண்ணோட்டம் உடையது என்பது ஒருதலை.

மரபுநிலை திரியா மாட்சிய வாகி
விரவும் பொருளும் விரவும் என்ப (தொல். 990)
சொல்லிய அல்ல பிறவவண் வரினும்
சொல்லிய வகையாற் சுருங்க நாடி
மனத்தின் எண்ணி மாசறத் தெரிந்துகொண்
டினத்திற் சேர்த்தி உணர்த்தல் வேண்டும்
நுனித்தகு புலவர் கூறிய நூலே (தொல். 1610)

மரபும் மாட்சியும் திரியாதபடி காதற் பொருளை விரித்துக் கொள்க எனவும், சொல்லாத கருத்துக்களை மாசறத் தெரிந்து சேர்த்துக் கொள்க எனவும் தொல்காப்பியர் கற்பவர்தம் படைப்புக்கும் அறிவுக்கும் வழிவிடுவர். "சொல்லிய அல்ல பிற அவண் வரினும்"என்ற பகுதி தொல்காப்பியத்தின் இறுதி நூற்பா. தமிழ்ப் பேரரசன் இத்தகைய அறிவுரையோடு நூலை முடித்திருத்தலின், அழுத்தமும் நெகிழ்ச்சியும் வன்மையும் மென்மையும் உடைமை தமிழிலக்கணத்தின் தன்மை என்று தெளிக.

அகத்திணை புலவனின் புதுக் கூர்மையை ஒடிக்கும் இலக்கியமன்று. ஏன்? அவ்விலக்கியத்தின் பொருளே காதல். காதலைப் பாடாத காலத்தவர் இலர், நாட்டவர் இலர், மொழியவர் இலர், இனத்தவர் இலர். சிறுகதைக்கும் புதினத்திற்கும் நாடகத்திற்கும் தனிக்கவிதைக்கும் காவியத்திற்கும் காதலே பொருள். இசைக்கும் ஓவியத்திற்கும் வளர்ந்துவரும் திரைக்கும் எல்லாக் கலைக்கும் காதலே பொருள். நாளிதழ், கிழமையிதழ்,திங்கள் இதழ், ஆண்டு மலர்க்கெல்லாம் காதலே பொருள். காதலைப் பற்றி உலகம் தோன்றிய நாள் தொட்டு எண்ணியன எவ்வளவு, சொல்லியன எவ்வளவு, எழுதியன எவ்வளவு, செய்தன எவ்வளவு, அவ்வளவும் அரிச்சுவடியளவு. உயிரிருக்கும்வரை பசியிருக்கும், பசியிருக்கும்வரை காமச்சுவை இருக்கும்; காமச்சுவை இருக்கும் வரை உலகம் இருக்கும். உலகம் இருக்க வேண்டிக் காதல் புதுமையாகவே இருக்கும். ஆதலின் அகத்திணையின் உரிப்பொருள்களாகிய புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல்கள் கருத்து வற்றாதவை; பரந்து பாடத்தக்கவை; எப்படிப் பாடினும் இன்சுவையளிப்பவை; எல்லார்தம் வாழ்க் கையிலும் நிகழ்பவை; யார்க்கும் புரிபவை. ஏனவே, புலவனின் புதுக்கூர்மைக்கு அகத்திணைப் பொருள் ஊற்றிடமாக விளங்கக் காண்பீர்.

நீண்ட காப்பியம் செய்யுள் புலவன் ஒருவகையிற் கட்டுண்டவன்.காப்பியத்தின் ஓட்டங் கருதிப் பல நிகழ்ச்சிகளை இடைமடுத்துக் கூறுவன். முழுமையும் ஒருமையும் கருதிக் கற்பனை குன்றிய கருத்துக்களைப் பொருத்துவான். மருட்கை முதலிய

சுவைகருதி உலகிறந்த மிகைபாடுகளைப் புகுத்துவான்.சுற்பவரின் எண்ணத்தைக் கடைசிவரை கவரவேண்டி, வேண்டுமென்றே சில சுவைப்படுத்துவான்.மேலும், சிறந்த புலவனது காப்பியத்தும் அவனது அயர்ச்சி தோன்றக் காணலாம். தொடக்கச் சுறுசுறுப்பு நெடுநாள் வினையில், நீண்ட சிந்தனையில் இடையிடையே மறைவது இயல்பு. இவ்வகைகள் கட்டுக்கள் அகப்புலவனுக்கு இல்லை.காதலை நினைத்த துறையில்,நினைத்த கூற்றில், அடியளவிற் பாடலாம். ஆண் புலவர்கள் தலைவன் தோழி செவிலி கூற்றாகவும், பெண்புலவர்கள் தலைவன் பாங்கன் பாணன் கூற்றாகவும் பாடலாம். துறைத்தேர்ச்சி முதலியன வெல்லாம் அவரவர் விருப்பம். அகப்புலவன் தனிப்பாடல் செய்பவன். நல்லதொரு சிந்தனை தோன்றுமேல், ஒரு பாடல் எழுதி உலகிற்கு அறிவிக்கும் பெருவாயில் அவனுக்கு உண்டு. அகத்திணையின் அமைப்பால் பலர்தம் சிந்தனை களைச் சமுதாயம் அறிய முடிகின்றது. யார் கண்ட காதற் கருத்தும் ஒன்று சிறிது என்பதற்காக உள்ளடக்க வேண்டுவதில்லை; ஒரு சிறு பாட்டாகவேனும் உருப்படுத்தும் ஆற்றலே அகத்திணை வகுக்கின்றது. பாடுவார்க்கு அகத்திணை போல் பாடுரிமை வழங்கும் இலக்கியம் பிறிதில்லை என்பது என் கருத்து. ஓரிலக்கிய நெறி பற்றிப் பாடிய நானூறு புலவர்களை எம்மொழியிலாவது காண முடியுமா? தமிழ் மொழி காட்டுதலின், அதன் இலக்கியச்சிறப்பு மிகப்பெரிது என்று உணர்க. அகத் தமிழ் இலக்கியம் தலையாயது என்று அறிக.

அகத்திணைப்புலவன் உணர்ச்சித் திறமும் உலகவறியும் உடையவன்; நிலவியற்கையும் காலவியற்கையும் மரஞ்செடி கொடி விலங்குகளின் கல்வியும் பெற்றவன். காதல் உரிப்பொருளைப் பாடுகின்றவன் புணர்ந்தார் பிரிந்தார் என்று வெறுமனே பாடிவிடுதல் இயலாது; பாடினும் சிறவாது. உரிப்பொருளுக்கேற்ற இயற்கைச் சூழ்நிலைகளைப் புனைய வேண்டும். நிலமும் காலமும் கருப்பொருளுங் காட்டி உரிப்பொருளைத் திறப்படுத்த வேண்டும்.

முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை (தொல். 948)

என்பதனால் அகப்புலவனுக்கு முதற்பொருள் கருப்பொருள் அறிவு இன்றியமையாதது. அவ்வறிவு பொதுவாக இருந்தாற் போதாது. உரிப்பொருளுக்கேற்ப இயற்கையை வடித்துக் காட்டும் தனித்திறம் வேண்டும். இத் திறம் இல்லாப் புலவன் அகம் பாடுதற்கு உரியவனல்லன் என்று கூடக் கூறலாம். ஆதலின் சங்கத் தமிழ்ப் புலவர்கள் அகத்திணைக் கல்வியையும் இயற்கைக் கல்வியையும் ஒருங்கு பெற்றனர். அகப் பாடல்களில் இயற்கைப் பகுதிகளையும் வரலாற்றுப் பகுதிகளையும் நீக்கிவிட்டால், உரிப்பொருளின் கதி என்னாகும்? பாடுபெறுமா? நீடுபெறுமா? அகப்பாட்டின் யாப்பில்

முதல் கருப்பொருட்கட்கு நீண்டுவிரிந்த இடம் இருத்தலால், புலவன் மிக்க இலக்கிய உரிமை பெறுகின்றான். உரிப்பொருளைத் தலையாக வைத்து உலகத்தையே சொல்லும் வாய்ப்புப் பெறுகின்றான். திணை மயங்கலாம், கருப்பொருள் மயங்கலாம் என இலக்கணம் விட்டுக் கொடுத்தலின், வேண்டியவாறு சூழ்நிலை அமைக்கும் புனைவுரிமை பெறுகின்றான். நடுநிலைபட ஆராய்ந்து காணுங்கால் அகத்திணையின் காதற்பொருள், கோவையற்ற தனித்தனிக் காதலுணர்ச்சிகள், தனிச் செய்யுளமைப்பு, முதல் கருப்புனைவு, உள்ளுறையுவமம், மெய்ப்பாடுகள் எல்லாம் இளம் புலவனின் புதுக் கூர்மையை வெளிப்படுத்துகின்றன, வளர்க்கின்றன, வனைவுறுத் துகின்றன. நல்லபிள்ளைபோல் அகவிதிகட்கு அடங்கி இலக்கியம் கண்டமையாற்றான், சங்கப் புலவரின் அறிவு கதிர்போல் ஒளிறுகின்றது; சங்கப் பனுவல்கள் ஞாயிறு திங்கள்போல் நின்று பரந்து வாழ்வொளி வீசுகின்றன.

அகப்புலவர்களின் திறம்

முதற் பதின்மர்

1. அண்டர் மகன் குறுவழுதியார்

குறுவழுதி மூன்று அகப்பாடல்களின் ஆசிரியர். எல்லாம் களவுத்துறையே. கூறுபவள் தோழி, கேட்பவன் தலைவன். பகற்குறி இரவுக்குறி இடங்களைப் புனையும் வன்மை இவர்க்கு உண்டு. பெண்ணின் இளவனப்பை நுண்ணியதாகப் புனைந்துள்ளனர். கூந்தல் நெளிவும் பின்னத் தக்க நீளமும் உடையது; மார்பு பொன்போலும் மஞ்சள் நிறச் சுணங்கு பரந்தது;முலை காம்பு வீங்கிக் கச்சினை நெரிப்பது;

> **பின்னுவிட நெறித்த கூந்தலும் பொன்னென**
> **ஆகத் தரும்பிய சுணங்கும் வம்புவிடக்**
> **கண்ணுருத் தெழுதரு முலையும்** *(அகம். 150)*

என்பது இவர் வனையும் குமரித் தோற்றம்.

தோழி அறிவுமிக்கவள். நம் கண்போல் குவளை பூத்துக் கிடக்கும் நெடுஞ்சுனையில் தலைவன் பகல் முழுவதும் நம்மோடு ஆடி விளையா டினால் என்ன? அதன்பின் தொடர்ந்து இரவும் நம் ஊருக்கு வந்தால் என்ன? என்று கேட்கின்றாள்: இத்தோழியின் தலைவி களவுப்புணர்ச்சியை மிக விரும்புபவள் என்று இதனால் அறியலாம். இரவுக் குறியை இருளும் புலியும் காட்டி அச்சமாகப் புனைவது பெரும்பாலான அகவழக்கு. நிறவொளியில் வேங்கைப் பூ புலிபோலத் தோன்றும்; அப் பொய்த்தோற்றத்தை மெய்யென

மயங்கி யானை ஓடும்; உண்மையில் வழியச்சம் இல்லை; இரவுக்குறி வருக என்று தெளிவாகச் சொல்லுவள் குறுவழுதிப் புலவரின் தோழி (அகம். 228) ஐய, எம் சிற்றூர்க்கு இரவு வருகதில். மலையெனக் குவிந்து கிடக்கும் மணல் மேட்டிற்குப் பக்கத்தே நின் வண்டியை நிறுத்தலாம். களவு வெளிப்படாது என்று தலைவனுக்குச் செயல்முறை கற்பிப்பள் (குறுந். 345). தோழியின் துணிவும் தலைவியின் விழைவும் இவர்தம் பாடற் பண்புகள்.

2. அம்மூவனார்

127 அகச் செய்யுட்களின் ஆசிரியராகிய அம்மூவனார் அகத்திணைப் பாட்டெண்ணிக்கையில் இரண்டாமவராக இலங்குபவர். 'புறந் தொழா மாந்தர்' என்பதுபோல, இவர் புறப் பாட்டு யாதும் பாடியதில்லை. வரலாற்றுக் குறிப்பு இவர் பாடல்களில் சாலச் சிறிது. களவில் கற்பில் பலதுறை பற்றியும் பல மாந்தர்கள் பற்றியும் பாடலாக்கிய விரிவுச் சிறப்பு உடையர் அம்மூவனார். அகநானூறு நற்றிணை குறுந்தொகை ஐங்குறுநூறு என்ற சங்க அகத்தொகை நான்கே. இந்நான்கினும் இவர் பாடல்கள் தொகுக்கப் பெற்றுள என்பதும் ஒரு சிறப்பு.

களவுப் பாடல்	82
கற்புப் பாடல்	45
தலைவி கூற்று	56
தோழி கூற்று	43
தலைவன் கூற்று	17
பரத்தை கூற்று	10
நற்றாய் கூற்று	1

இலக்கிய வழிகாட்டி

பிற்கால இலக்கியங்கட்குப் பல புதுவழி திறந்தவர் அம்மூவனார். அகத்திணை நிகழ்ச்சிகள் கோவையாக நிரல் படத் தொடுக்கப்படும் பெற்றியதன்று என முன்னர் விரிவாகக் கண்டோம். இவ்வடிப்படை இலக்கணத்திற்கு இவர்தம் ஐங்குறு நூற்றின் தொண்டிப்பத்து (171-80) பெருமுரணாகும். இயற்கைப் புணர்ச்சி, பாங்கற் கூட்டம், தோழியிற் கூட்டம், இரந்துகுறையுறல், வரைவு கடாதல் என்று களவின் ஒழுகலாறுகளை ஒரு பத்துப்பாட்டில் தொடர்ச்சியாகக் கூறுவர். ஒவ்வொரு தலைப்பில் பப்பத்துப் பாடல் யாப்பது என்று நூல் அமைத்துக் கொண்டமையால், இவர்க்குக் களவுக் கோவை பாடும் எண்ணம் முளைத்தது போலும்.

அவ்வெண்ணம் நன்கு மலரவில்லை என்பது களவிற்குச் சிறந்த உடன்போக்கு, அறத்தொடு நிலைத்துறைகளைப் பாடாமையாற் போதரும். தமிழில் கோவை ஒரு தனியிலக்கியமாகத் தோன்றி வளர்தற்கு ஐங்குறு நூற்றுத் தொண்டிக் கோவையே மூலம் என்று அறிக.

அகப்பொருட் கோவைக்கே யன்றி அந்தாதி யிலக்கியத்திற்கும் வழிகாட்டியவர் அம்மூவனார். கோவைபட அமைந்த இத்தொண்டிப் பாடல்களே அந்தாதிபடவும் அமைந்துள. இரு புதுமைக்கும் இடனாக ஒரே பத்துப்பாடல்களை யாத்தார் ஆசிரியர். சங்கவில்க்கியத்தின் மொழிநடைக்கு மாறான இவ்விரு புதிய கூறுகளையும் ஐங்குறு நூற்றின் பழையவுரைகாரர் அன்றே கண்டு எழுதியுள்ளனர் என அறிக.

அம்மூவனார் நெய்தலறிஞர். நெய்தற்றிணைக்கு உரியது இரங்கற்பொருள் எனினும்,புணர்தல் இருத்தல் ஊடல் என்ற பிறவுரிப் பொருள்களை நெய்தற் சூழ்நிலையில் வைத்துப் பாடியுளர்.

பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
இருங்கழி நெய்தல் சிதைக்கும் துறைவன்
நல்லன் என்றி யாயின்
பல்லிதழ் உண்கண் பசத்தல் மற்றெவனோ. (ஐங். 170)

என்பது கணவனது பரத்தொழுக்கம் பற்றித் தலைவி புலந்து கூறும் பாட்டு. இது நெய்தல் நிலத்து மருதவொழுக்கம் கூறுவது. புணர் தலுக்கு மலைப்பாங்கும், ஊடலுக்கு வயலிடமும், இருத்தலுக்குக் காட்டுச் சார்பும் சூழ்நிலையாக அமைதல் வேண்டும் என்பது புலனெறி வழக்கம். இவ்வழக்கம் இலக்கியக் கற்பனைக்குச் சிறக்கும் என்பது கருதி நம் முன்னோர் வகுத்தனர். ஊடல் ஓரிடம் கூடல் ஓரிடம் நடை முறையில் இல்லை, இயலாது என்பது வெளிப்படை. அம்மூவனார் இயல்புநெறிப் புலவர் போலும். அவர் பாட்டுக்கு நெய்தல்வாழ் மக்களே பெரும்பாலும் தலைமக்கள். ஆதலின், எல்லா உரிப்பொருளுக்கும் களமாக ஒரு திணையையே கொண்டனர். பரத்தையைக்கூட "நெய்தலங் கண்ணி" (ஐங். 135) என்று குறிப்பர்.

திணைக்கலப்பு மணம்

உப்பு விற்கும் உமணக்குடியின் குமரியர் இவர்தம் இரு பாடல்களில் தலைவியராக வருப. உமணப் பெண் தந்தையொடு மலை நாட்டிற்கு உப்பு விற்கச் செல்லுகின்றாள். நெல்லுக்கும் உப்புக்கும் நேர்விலை என்று பண்டமாற்றுப் பகர்கின்றாள். சங்குவளை ஒலிப்ப வீசி நடக்கும் அவள் ஒசிந்த நடையிலும், நாய் குரைக்கக் கேட்டு வெருவும் அவள் மருண்ட பார்வையிலும், உள்ளத்தை அடிமையாக்குகின்றான் ஓர் மலை நாட்டு இளைஞன்.

உப்புச் சகடத்தை ஏற்றிழிவுடைய குன்றுகளில் மடுத்து இழுத்துச் செல்லும் காளைபோல் வெய்து உயிர்க்கின்றான். இஃதோர் திணைக் கலப்பு மணம். நெய்தற் றலைவிக்கும் குறிஞ்சித் தலைவனுக்கும் காதற்றொடுப்பு நிகழ்கின்றது (அகம் 140)

நெல்லும் உப்பும் நேரே ஊரீர்
கொள்ளீ ரோவெனச் சேரிதொறு நுவலும்
அவ்வாங் குந்தி யமைத்தோ ளாய்நின்
மெய்வாழ் உப்பின் விலை எய்யாம் (அகம். 360)

ஏன்பதும் ஓர் கலப்புமணப் பாடல்; நெய்தல் மகளுக்கும் முல்லை மகனுக்கும் நிகழும் காதலைப் புனைவது, நெல்லளவிற்கு உப்பளவு கிடைக்கும் என்று கூறிச்செல்லும் உமணக் குமரியைப் பார்த்து, கடலுப்பின் விலையைக் கூறினாய், அறிந்தேன்.நின் மெய்யுப்பின் விலைதான் தெரியவில்லை என்று குறும்பாகவும் காதற் குறிப்பாகவும் கேட்டான். ஈண்டும் அம்மூவனாரின் மொழிப் புதுமையைக் காண்கின்றோம். சொல் விளையாட்டு சங்கமொழித் தன்மையன்று. பிற்காலத் தமிழில் பெருகிய ஒரு மொழிநயம். உப்பு என்னும் சொல்லுக்கு, சுவை இனிமை சத்து என்ற பொருள்களும் உண்டாதலின், மெய்வாழ் உப்பு என்று புணர்ச்சியின்பத்தைச் சுட்டினான் காதற் குறும்பன்.

அம்மூவனார் பாடலின் தலைவியர் உறுதியும் உணர்ந்த அடக்கமும் உடைய பண்பினர். தீமைக்குப் பணியார். தம் பண்பு மாறார். ஒருத்தியின் பெற்றோர் வேறொருவனுக்கு மணம்பேச இருந்தனர். அதுசேட்டுக் கலங்கிய இளநங்கையாதும் பேசிற்றிலள், உணவு கொள்ள மறுத்தாள். பட்டினி கிடந்து தன் மறுப்பைக் காட்டத் துணிந்தாள்; மாளவும் துணிந்தாள்போலும். (ஐங். 168).

இம்மை மாறி மறுமை யாயினும்
நீயா கியரெந் கணவனை
யானா கியர்நின் நெஞ்சுநேர் பவளே (குறுந். 49)

இது ஒரு தலைவியின் உறுதிப்பாடு.தலைவன் பெரும்பரத்தன் இன்பத்துறையில மிக எளியவன் என்பதற்காகத் தமிழ்ப் பெண் நெஞ்சுமாறாள், இல்லறம் துறவாள். இல்வாழ்க்கையை ஆடாது அசையாது நிலைகாக்கும் தூண்போல்பவள் பெண் என்பது தமிழியம். 'எப்பிறப்பிலும் என்கணவன் நீயாவாய்; நின் ஒழுக்கம் எவ்வாறாயினும், நின்மனத்துக்கு பிடித்த மனைவியாக நான் இருப்பேன்" என்பதன்றோ உறுதியெனப்படும். என் ஒழுக்கம் நின் ஒழுக்கத்தைப் பொறுத்தது; நீ திரியின் எனக்கும் திரிபேற் படாதா? என்று சொல்லுதல் ஊதிய முறையாகுமேயன்றி ஒழுக்கப் பெற்றியாகாது. திரிந்தவனைத் தான் திரியாது திருத்துதல் சால்பாகும்; திரிந்தவனால் தானும் திரிவுபடுதல் கயமையாம்.

பண்டைத் தமிழ்ப் பெண்டிர் தாம் என்றும் நிலைதிரியாத் திண்ணியர், அத் திண்ணிய அன்பினால் கணவனைத் திருத்த முயலும் நெறியினர். இஃது தமிழர் கண்ட இல்லற நாகரிகம். "இம்மை மாறி மறுமை யாயினும்" என்ற உறுதித் தொடரைக் கேட்கும் ஆடவனது மனம் சிறிது கிந்திக்கும் "நீ யாகியர் எங்கணவனை" என்ற அன்புத் தொடரைக் கேட்கும்போது திருந்தும் எண்ணம் பிறக்கும். "யானாகியர் நின்நெஞ்சு நேர்பவளே" என்ற பண்புத் தொடரைக் கேட்கும்போது, இப்பிறவியிலேயே அவளின் நெஞ்சு நேர்பவனாக ஆகவேண்டும் என்ற கருத்துத்தோன்றி, ஆகினேன் என்று சொல்ல மாட்டானா மனம் மிக்க ஆண்தகை?

அறிவும் மயங்கிப் பிறிதா கின்றே
நோயும் பேரும் மாலையும் வந்தன்று
யாங்கா குவென்கொல் யானே; ஈங்கோ
சாதல் அஞ்சேன்? அஞ்சுவல் சாவிற்
பிறப்புப்பிறி தாகுவ தாயின்
மறக்குவேன் கொல்லென் காதலன் எனவே. (நற். 397)

இஃதோர் தலைவியின் உறுதிநிலை. பிரிந்த தலைவன் நெடு நாளாகியும் வரவில்லை. வருவான் வருவான் என்று வழி நோக்கிக் கண்ணும் பூத்தது. பணைத்தோளும் சுருங்கிற்று. அறிவும் பிறிதாயிற்று. ஆளை முடித்துத்தான் நோய்தீரும் போலும். இந்நிலைப் பாழ்பட்ட தலைவி துயருக்கு அஞ்சவில்லை. துயர்தரும் இறப்புக்கு அஞ்சவில்லை, இறந்தபின் பிறப்புக்கும் அஞ்சவில்லை. இறக்கவும் விரும்புகின்றாள், பிறக்கவும் விரும்புகின்றாள். பின் எதற்கு அஞ்சுகின்றாள்? எதனை விரும்பவில்லை? இக்காதலனுக்கு மீண்டும் மனைவியாகாத பிறப்பு வந்துவிடுமோ என்று அஞ்சுவள். நெட்டிடைப் பிரிவால் இறப்பித்த காதலனாயினும் அவனை மறப்பிக்கும் மறுபிறப்பு வரக்கூடாதே என்று கவல்வள், மாறிப் பிறப்பினும் அவன் கணவன், யான் துணைவி என்ற உறவுமுறை மாறலாகாது என்று விரும்புவள். பெண்ணுள்ளத்தைத் தமிழ்ச் சமுதாயம் வளர்த்த மாண்பு இது.

3. அள்ளூர் நன்முல்லையார்

சங்கத்தின் சிறந்த புலமையாட்டிகளுள் ஒருவர் நன்முல்லையார். "பிண்ட நெல்லின் அள்ளூர் அன்ன" (அகம். 46) என்று தன் ஊரை உவமப்படுத்திய அன்பினர். இவர் தம் அகப்பா பத்தினுள் இரண்டு கலியின் மேலும் எட்டு கற்பின் மேலும் இயல்வன. மருதம் அல்லது பரத்தையிற்பிரிவு என்பது இவர் துணிபோய பொருள். இவரைக் கவர்ந்த அகவிலக்கியத்தின் ஆள் தலைவி. ஏழு பாடல்கள் தலைமகள் கூற்றின.

நன்முல்லையார் இயல்பில் மருதநிலை வாழ்க்கையர். "பிண்ட நெல்லின்" என்ற ஊரடையைக் காண்க. ஒரு தலைமகனது தண்டாப் பரத்தமையை உள்ளுறையாக வடிப்பர். எருமை நிலையான தொழுவத்தை வெறுத்து நள்ளிரவில் கட்டுத்தளையை அறுத்து முள்வேலியைக் கொம்பினால் நீக்கிவிட்டு வயலுக்கு ஓடுகின்றது. அதன்வேகத்தால் மீன்கள் கலங்கியோடின. வள்ளைக்கொடிகள் மிதிபட்டன. இங்ஙனம் தாறுமாறாக நடந்து வண்டுகள் மொய்க்கும் தாமரை மலர்களை ஆசையோடு அருந்துகின்றது. அன்ன எருமை வாழும் ஊரவன் தலைவன்.

சேற்றுநிலை முனைஇய செங்கட் காரான்
ஊர்மடி கங்குலின் நோன்தளை பரிந்து
கூர்முள் வேலி கோட்டின் நீக்கி
நீர்முதிர் பழனத்து மீனுடன் இரிய
அந்தூம்பு வள்ளை மயக்கித் தாமரை
வண்டூது பனிமலர் ஆரும் ஊர
யாரையோ நிற் புலக்கேம் (அகம். 46)

என்று எருமைமேல் வைத்துத் தலைவனது இன்பவிழிவுகளைத் தோழி இடித்துரைக்கின்றாள்; இவ்விழிவுகளை நேர் சொல்லால் கூறுவது நாகரிகமாகாது. நாணுடைய நாசொல்லாது. உள்ளுறை மருதத்திணையிற் பயின்று வருவது போல் பிற திணைகளில் வருவதில்லை; வரவேண்டுவதுமில்லை. நாணில் செயல்களை நாணுடைய மொழிகளால் புலப்படுப்பது உள்ளுறை. சுருங்கச் சொல்கைக்கு ஆற்றல் உண்டு. கேட்டார் மனந்தாக்கும் கூர்மையுண்டு. ஆதலின் உள்ளுறை பண்பட்ட தமிழ் இலக்கியக் கருவி, தலைவனை இடித்துரைக்குங்காலை இக்கூர்ங் கருவியை இலக்கியர்கள் ஆளுவர். புலவன்தான் புலப்படுத்த எண்ணும் கருத்தோட்டத்திற்குத்தக இயற்கையைச் சரிபடுத்திக் கொள்வான், ஒழுங்குற ஆக்கிக் கொள்வான் என்று மூன்றாவது இயலிற் கற்றிருக்கின்றோம். அதற்கு இப் பாட்டு ஓர் மேற்கோள். அகத்திணையில் எத்துறை பற்றியும் எப்பாற் புலவரும் பாடலாம். அத்துறையிற் காதற் பொருள் பாடியவர்தம் வாழ்க்கையில் நிகழ்ந்ததாகக் கருதப்படமாட்டாது. ஆதலின் நன் முல்லையார் பரத்தையிற் பிரிவுபற்றிப் பாட முன் வந்தார் என்று அறிக.

அகத்திணை மாந்தர்களில் ஆணாட்களும் உண்டு. பெண்ணாட்களும் உண்டு. புலவர் எம் மாந்தரையும் பாடலாம். தலைவன் தோழன் முதலான ஆண்மாந்தர்களை ஆண்பாற்புலவர் பாடும்போது ஆணுள்ளம் நன்கு வெளிப்படும் எனவும், தலைவி தோழி செவிலி முதலான பெண் கூற்றுக்களைப் பெண்புலவர்கள் பாடுங்கால் பெண்மனம் இயல்பாக விழும் எனவும் பொதுவாகக் கொள்வதில் தவறில்லை.

குக்கூ என்றது கோழி; அதனெதிர்
துட்கென் றன்றென் தூஉ நெஞ்சம்;
தோய்தோய் காதலர்ப் பிரிக்கும்
வாள்போல் வைகறை வந்தன்றால் எனவே (குறுந். 157)

மாதப்பூப்பு எய்திய தலைமகள் உரைத்த பாட்டு இது. சங்க இலக்கியத்துள் இதுபோன்ற வேறொரு பாட்டுப் பெற்றிலம். என்றும் தலைவனை ஆரத்தழுவி உடனுறைய விரும்பும் ஒரு நல்லாள் பள்ளிமேல் உடனுறைந்திருக்கும் அமையத்தில், பூப்பு வந்துற்றது அறிந்த நெஞ்சு கலங்குவள்; இவ்வுடற்கூற்றால் காதலனைச் சின்னாள் அகலவேண்டுமே என்று, துண்டிக்கும் வாள் என வைகறையைப் பழிப்பள்; தோள் தோய் காதலரைப் பிரிக்கும் என்ற அடையினால், பூப்பு வந்த போது இருவரும் இருந்த கூட்டுநிலையைக் குறிப்பிடுவள். ஆராவேட்கையும் நனிநாணமும் இப்பாட்டிற் பொலிகின்றன. ஆண்பாற் புலவர்க்கு இன்னதொரு பெண்ணுள்ளம் பாடத் தோன்றாது காண்.

4. ஆலங்குடி வங்கனார்

இவர் பாடல் ஆறும் மருதத் திணைக்கு உரியனவே. பரத்தை கூற்றாவன மூன்று; தோழி கூற்றாவன மூன்று. மருதம் பாடிய புலவராதலின், ஐந்து பாடல்களுக்கு உள்ளுறை வைத்துள்ளார்.

வங்கனாரின் பாடலில் அன்பும் பெருமிதமும் தலைமையும் உடைய பரத்தை மாதுகளைக் கற்கின்றோம். 'நீயின்றி எனக்கு வாழ்வுண்டோ? சோழரின் அவையத்து அறமாறியதில்லை; அது போல் கெடுவறியாய் என் நெஞ்சத்தானே' (நற். 400) என்று கற்புடைமை விளம்புவாள் ஒரு பரத்தை. 'என்னை வெறுப்பதற்கு இவள் யார்? அவள் வெறுத்தாலும் நாம் அது செய்யாம்' என்று இளமையில் துடிக்கின்றாள் ஒரு பரத்தை (அகம். 106)

ஐந்திணைக்கண் வரும் தோழி ஓராற்றலை தலைவியின் கருத்து வாயில், தோழி பாடல்கள் தலைமகளின் எண்ணத்தையும் விருப்பத்தையும் பளிங்குப்படுத்துவன. வங்கனார் பாடும் தலைவி கணவனின் ஒழுக்கப் புறம்போக்கை நன்கு தெரிந்தவள். அவன் எவ்வளவும் தவறுக, தவறினும், தன் கடமையில் தவறாதவள்; தன் இல்லறக் கடன் குடும்பப் பொறுப்பும் குழந்தைப்பேறும் என அறிந்தவள்.

யாணர் ஊரநின் மாணிழை மகளிரை
எம்மனைத் தந்துநீ தழீஇயினும் அவர்தம்
புன்மனத் துண்மையோ அரிதே அவரும்
பைந்தொடி மகளிரொடு சிறுவர்ப் பயந்து
நன்றி சான்ற கற்போடு
எம்பா டாதல் அதனினும் அரிதே **(நற். 330)**

பரத்தையை நீ வீட்டிற்குக் கொண்டு வந்து வைத்து இன்புற்றாலும் என்பதனால், தலைவனது பரத்தமையையும் தன் பொறுமையையும் புலப்படுத்துவாள் தலைவி. கற்பு என்னும் சொல்லுக்குக் கல்வி என்ற பொருளுண்டு. ஈண்டு குடும்பக்கல்வியைக் குறிக்கும்."வெளிறில் கற்பின் கண்டமர்" (அகம்.106) என்று இவ்வாசிரியரே இச்சொல்லை மற்றொரு செய்யுளில் ஆள்வர். படைக் கல்வி என்பது அதன் பொருள்.

தலைவியை மகப்பெறுங் கொள்கை யுடையவளாகக் காட்டிய வங்கனார், அதற்கேற்பவே 'மேவன செய்யும் தன் புதல்வன் தாய்க்கே' (குறுந். 8), 'மறுவரும் சிறுவன் தாயே' (குறுந். 45) என்று தாய்மை சுட்டிப் பாடுவர். பெண்ணினத்தை நன்றாக நிகராக மதிப்பவர் ஆசிரியர் என்பது பெண்குழந்தைகளோடு ஆண் குழந்தைகளையும் பெறுதல் என்று கூறும் கருத்தால் அறிக. "கிரேக்கப் பெண் தாயாகிவிட்டால் தன் வாழ்வின் நோக்கம், நிறைவேறியதாக மகிழ்வாள். குடும்ப ஆட்சியும், குழந்தைகளைப் பெற்று வளர்த்து மணப்பருவம் வரை காத்தலும்அவளின் இரு கடன்களாம். கிரேக்க சமுதாயத்துக்கு மண்ம் என்பது மெய்யான வழியினரைப் பெருக்கும் வாயில்.[1] ஒழுங்கும் நம்பிக்கையும் பொருந்திய குடும்பக் காவல் மனைவியாவாள் இல்லத்தரசி" என்று ஆசிரியர் ஆன்விச்சு கிரேக்க நாட்டில் இல்லக்கிழத்தியின் கடமைகளை விளக்குவர்.[2] கிரேக்க சமுதாயத்தும் தமிழ்ச் சமுதாயத்தும் இற்பெண்டிரின் கடமைகள் ஒன்றாதல் காண்க.

5. ஆலம்பேரி சாத்தனார்

சாத்தனார் பாடிய அகப்பாடல் எட்டனுள் நான்கு களவின; நான்கு கற்பின. தலைவன் தலைவியின் வருத்தவுணர்ச்சிகளை ஏற்ற முதல் கருச் சூழ்நிலையில் வைத்துப் புலப்படுத்தியுள்ளார் சாத்தனார். இளவேனில் வாடை மாலை முதலிய காலங்கள் காமத்தைக் கிளறும் என்று கற்புத் திணையிற் பாடுவது பெருவழக்கு. மாலையும் இரவும் வாடையும் தலைமக்களுக்கு ஆற்றாமையைத் தந்தன என்று களவிற் பாடுவர் இவ்வாசிரியர். பறவைகளின் ஒலிகள் இவர் பாடலில் பேரிடம் பெறுவன. புணர்ந்தவற்றின் ஓசைகளையும் பிரிந்தவற்றின் ஓசைகளையும் கேட்கின்றோம். மனையிடத்துப் பெண் துணையை அழைக்கும் ஆண்புறாவின் காதற் பயிரையும், மனைமடலில் ஏறிப் பெடையைப் புணரக் கூவும் ஆண் குருகின் வேட்கை யொலியையும், ஓர்த்துக் கேட்டுக் காமம் பெருகுகின்றாள் தலைவி. கூடியின்புறும் அன்றிற் பறவைகளின் மகிழ்குரல்கள் பிரிந்திருக்கும் தலைவியையும்,

1. ஒ.நோ. "கடும்புடைச் சுடுஞ்சுல் நங்குடிக்கு உதவி" நற். 17
2. Sexual life in Ancient Greece, p. 18.

தலைவனையும்கூட வருத்துகின்றன. இங்ஙனம் வருந்துபவர் களவொழுக்கம் உடைய தலைமக்கள் என்று அறிகின்றோம். அகமாந்தர்களைக் காதற் செவிமிக்கவராக வடிக்கும் சாத்தனார் திறம் புதுமையுடையது.

6. இடைக்காடனார்

இப்புலவர் யாத்த அகப்பாடல் ஒன்பதும் முல்லைத் திணையன. கார்ப்பருவங் கண்டு தலைவி மெலிதல், தலைமகன் தேர்ப்பாகற்குக் கூறுதல் என்ற தொடர்புடைய இரு துறைகளையும் இயைத்துப் பாடியவர் இடைக்காடனார். முல்லைத் திணையின் காலநில இயல்புகளை நன்கு அறிந்தவர். இவர்தம் அகநானூற்றில் ஆறுபாடல்கள், கூட்டின், 104 அடிகள் கொண்டன; 85 அடிகள் முல்லையியற்கை பற்றியன. முல்லை நிலத்தவர் என்பதனை இடைக்காடனார் என்ற பெயரால் கொள்ளலாம். இவர் பாக்களில் உரிப்பொருள் நயம் குறைவேயாம். அக்குறைவிற்குப் பாட மேற்கொண் முல்லையுரிப்பொருள் காரணமாகலாம். தலைவியும் தலைவனும் காமவுணர்வை அடக்கியாண்டு ஆற்றியிருக்கும் பெற்றியை நீளப் புனைந்து பாடுதற்கில்லை. ஆறுதல் அடை வாரிடத்து ஆர்வச் சொற்களுக்கு இடமில்லை. முதலும் கருவும் உரியும் மயங்காது பாடவல்ல அகப் பண்பினர் இடைக்காடர்.

முல்லை சான்ற கற்பின்
மெல்லியற் குறுமகள் உறைவின் ஊரே (அகம். 274; நற். 142)

என்பதுபோல வந்த அடிகளும் கருத்துக்களும் நடைகளும் திரும்ப வருதலின், சுவை பெருகவில்லை. எனினும், கற்பனை கலந்த உவமைகளின் பெருக்கத்தால் இவர் பாடல்கள் இலக்கியச்சுவை தளரவில்லை.

7. இளங்கீரனார்

இவர் புறம்பாடா அகப்புலவர். 16 பாடல்கள் இவர் பெயரால் உள. ஒன்று களவிற்கும் ஏனையவெல்லாம் கற்பிற்கும் உரியன. 15 கற்பியற்பாக்களும் பாலைத்திணை மேலனவே. தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறியது என்ற ஒரு துறைபற்றியே இவர்தம் பெரும்பாலான செய்யுட்கள் அமைந்துள. ஆதலின் நெஞ்சிற்குப் பாடிய இளங்கீரனார் என்று இவரைப் பாராட்டுவோம். எல்லாம் ஒரு துறையாகப் பாடினும் புதுப்புது வனப்போடு யாத்திருத்தலின், இலக்கியச் சலிப்புப் தோன்றவில்லை.

யான் இன்புற்றுத் தலைவைத்துக் கிடக்கும் காதலியின் நறுமணக் கூந்தல் நல்ல நெறிகொண்டது, மிகக் குளிர்ந்தது என்று இயற்கைப் புணர்ச்சிசெய்து நீங்கும் தலைமகன் தன் நெஞ்சிற்கு

மொழிகின்றான் (குறுந். 116).. அன்பும் சாயலும் என்பை இளக்கும் இன்சொல்லும் வாய்ந்த இளங்காதலியோடு முயங்கியிருக்கின்றேன் இன்று; நாளை நீரற்ற பாலை வழியில் எவ்வளவு கவலைப்பட வேண்டும்? காதலியின் இன்பத்தை விட்டுக் காட்டின் துன்பத்தை அடையேன் என்று பொருள் விரும்பிய தன் நெஞ்சிற்கு விளம்புகின்றான் (அகம். 225). தலைவியைப் பிரிந்துபோகும் தலைவன் சிறிது தொலை சென்றபின் திரும்பத் தன்னூரைப் பார்க்கின்றான்; மன்றம் தோன்றவில்லை, மரங்களின் தோற்றமும் வரவரக் குறைந்துவிட்டது என்று நெஞ்சோடு சேர்ந்து இரங்குகின்றான் (அகம். 239).

அணிவளை முன்கை ஆயிதழ் மடந்தை
வார்முலை முற்றத்து நூலிடை விலங்கினும்
கவவுப்புலந் துறையும் கழிபெருங் காமத்து
இன்புறு நுகர்ச்சியிற் சிறந்ததொன் றில்லென
அன்பால் மொழிந்த என் மொழி கொள்ளாய்
பொருள்புரி வண்ட மருளி நெஞ்சே (அகம். 961)

பொருளைக் காதலித்த நெஞ்சிற்கு,அகலாது அகத்திட்டுத் தழுவும் காதலியின் காதலே பொருள் என எவ்வளவோ எடுத்து உரைத்தான் தலைவன். நெஞ்சு பிடிவாதம் செய்தது, புறப்பட்டான். பொருள் ஈட்டப்போகும் நடுவழியில் நெஞ்சு பின் வாங்கிற்று. காதலியை மீண்டும் தழுவ விழைந்தது. இப்போது தலைவன் பிடிவாதம் செய்கின்றான். பலமலைகள் கடந்து வந்தபின், வீடுதிரும்ப விரும்புவதிற் பயனென்ன, மருளிநெஞ்சே என்று கடிந்துரைக் கின்றான். ஒருமுறை காடுகடந்துபோய்ப் பொருள் தேடிவந்த தலைமகன் மறுமுறை போக விரும்பவில்லை. பொருள் தொகுக்கப் போ போ என்று அவன் நெஞ்சு தூண்டுகின்றது. தன் நெஞ்சின் உறுதியை நம்பவில்லை தலைவன். மனைவியோடு உறையும் போது பொருளுக்குப் புறப்படச் சொல்லும் எனவும், புறப்பட்டுப் போகும் நடுவழியில் காதலியின் கண்களை நினைப்பித்து வீட்டுக்குத் திரும்பச் சொல்லும் எனவும், நெஞ்சின் மாறாட்டத்தை அறிந்தவன் தலைவன் ஆதலின், நின்போலி மொழி எனக்கு உறுதுணையாகாது என்று நேர்படக் காட்டிச் செலவழுங்குகின்றான் (அகம். 3) மனத்தை நோக்கிக் கூறுந்தொறும் கருத்துப் புதுவதாக அமைப்பர் இளங்கீரனார். அதனால் ஒருதுறையில் பல்வேறு உள்ளோட் டங்களை அறிகின்றோம்.

தலைவன் பிரிந்து சென்று வேற்றுநாட்டில் வினையில் ஈடுபட்டிருக்கும்போது, மனைவி நினைவுவந்து துயர்ப்படலாகாது என்பதும், துயர்ப்பட்டான் எனப் புலவன் பாடலாகாது என்பதும் அகத்திணை வழக்கு. அவ்வழக்கிற்கு முரணாதபடி, தலைவனும்

பிரிவுத் துன்பம் உற்றான் என்று பாடுந்திறல் படைத்தவர் இளங்கீரனார். முன்பிரிந்த காலங்களில் எய்திய துன்பங்களை மறுபடி பிரிவதற்கு முன்னரே வீட்டிலிருந்து கொண்டு நயமாக எடுத்துரைக்கிறான் தலைவன். பொருளுக்குப் புறப்படு என்று ஊக்கும் நெஞ்சுக்கு, பிரிந்தால் என்ன வழித்துயர் உறுவோம் எனச் சுட்டிக் காட்டுகின்றான். காதலியைப் பிரிந்து சிறிதிடம் கடந்தபின் மறையும் ஊரைப் பார்த்து "சிறுநல் ஒருத்தி எம்பெருநல்லூர்" என்று நினைத்துக் கவல்கின்றான். இடைச்சுரத்தின் கண்ணும் தலைவியின் வருத்தக் கண்களைக் கண்டு புலம்புகின்றான். வீட்டிலிருந்தோ, சிறிது புறப்பட்டோ, போகும் இடைவழியிலோ காதலியை நினைந்து தலைவன் கவல்வன் என்று, அவன் கவல்விடங்களைப் புனைவர் புலவர். வினைக்குரிய இடத்திற்குச் சென்றபின் கவன்றான் என்று சொல்லாமல் அதற்கு முன்னிலையில் வைத்துப் பாடல்களை அமைப்பர் என்று அறிக.

இளங்கீரனாரின் அகத்தலைவி தலைவன் பிரிவுக்கு இரங்குபவள் ஆயினும், பிரியக்கூடாது என்று தடுப்பவள் அல்லள். கணவன் பிரிந்துசென்று போய்த் தன்னைப்பற்றிக் கவலைப் படக் கூடாதே என்று, அவனை இனிய சொற்கள் பலகூறி வழி விட்டனள். "நெருநலும் தீம்பல மொழிந்த சிறுநல் ஒருத்தி" என்று மனைவியின் தனிப்பண்பினை உள்ளுகின்றான் தலைவன். தலைவனை வழிவிடும்போது தலைவி மொழிந்த இரண்டு கருத்துக்கள் புதியன, போற்றத்தக்கன, இளங்கீரரின் எண்ணத்தைக் காட்டுவன.

ஈட்டருங் குரைய பொருள்வயிற் செலினே
நீட்டுவிர் அல்லிரோ நெடுந்தகையீர் (அகம். 939)

நாநடுக் குற்ற நவிலாக் கிளவியொடு
அறல்மருள் கூந்தலின் மறையினள் திறல்மாண்டு
திருந்துக மாதோ நுஞ்செலவு (அகம். 29)

தலைவன் பிரிகதில்; பிரிந்தபின் குறித்த காலத்திற்குமேல் நீடித்தலாகாது. ஆதலின் காலம் தாண்ட மாட்டீரே (நீட்டு விரல்லிரோ) என்று ஆசைபட அறிவுறுத்துவாள் தலைவி. பிரிவுக்கு இசைந்ததனால் அவளுக்கு மனத்துயர் இல்லையா? நிரம்ப உண்டு. காலைத் திங்கள்போல ஒளி மழுங்குகின்றாள்; கண்ணிதழ்கள் நீரை விடுகின்றன; கால்கள் பின்னுகின்றன. நா யாதும் மொழிய நடுங்குகின்றது. எனினும் பொருள் வேண்டும். அதற்குத் தலைவன் பிரியவும் வேண்டும். ஆதலின் வாழ்த்துகின்றாள். எல்லாத் திறமைகளும் பொலிகதில், நும் செலவு செம்மையாகுக தில்'' என்று அவன் நெஞ்சம் குளிரப் பண்பு மொழிகளை வழங்குகின்றாள். மனைவி வாழ்த்து கணவன் மனத்துக்குப் பெருங்கள்ளாகும்; அவன் வினைக்குப் பெருந்துணையாகும்.

8. இளந்தேவனார்

இப்புலவர் பாடிய அகப்பாடல்கள் நான்கு. அவற்றுள் மூன்று அகநானூற்றில் உள. களவினைச் சார்ந்தன. எல்லாக் களவுப் பாடல்களிலும் இரவுக்குறியை அமைத்துப் பாடியிருத்தலின், இரவுக்குறி இளந்தேவனார் என்று இப்புலவரை அழைக்கலாம். களவொழுக்கத்தில் தலைவனுக்குமுன் தோழி பேசுவதே பெரு வழக்கு. தலைவி கூற எண்ணுங் கருத்துக்களைத்தாம் அவள் சார்பகாத்தான் தோழி கூறுவாள். எனினும் நனிநாணுடைய தலைவியின் கூற்றாக்குவதில்லை. அன்பும் அறிவும் உடைய தோழியைக் கூற்றாக்குவதே பொதுவியல்பு. இளந்தேவனாரின் களவுப்பா மூன்றிற்கும் தலைமகளே கூற்றாவாள் என்று புதுமையைக் காண்கின்றோம்.

இளந்தேவனாரின் அகத்தலைவி துணிவினள், துடிப்பினள், நேரியள், காமத்தள், வீட்டில் எல்லாரும் உறங்கிய அமையம் பார்த்து, மெல்ல எழுந்து புறஞ்சென்று, தோட்டத்து மரத்தில் ஒண்டிக் கொண்டு நெடுநேரம் நிற்கின்றாள். நள்ளிரவு, வாடைக் காற்று, மழைத்துளி எவற்றையும் பொருட்படுத்தாது தனியாக நிற்கின்றாள்.

வனைந்துவரல் இளமுலை ஞெமுங்கப் பல்லூழ்
விளங்குதொடி முன்கை வளைந்து புறஞ் சுற்ற
நின் மார்பு அடைதலின் இனிதா கின்றே *(அகம். 58)*

தலைவனது அகலத்தைக் கட்டித்தழுவ விழையும் தலைவியின் நிறையா வேட்கையைக் காண்மின். முயங்குதொறும் முயங்கு தொறும் அவனது மார்பை முகந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகின்றாள் தலைவி.

களவை நீட்டித்தல் தலைவிக்கு விருப்பமில்லை. களிற்றினங்கள் திரியும் பெருங்காட்டு வழியில் வேலேந்தி நடுயாமத்துத் தலைவன் வருவது அவளுக்கு உவப்பில்லை. "அரை நாள் இரவு இவண் நீ வந்ததனினும் இனிதாகின்றே" *(அகம். 268)* என்று தலைவனுக்கு எதிரே கூறுகின்றாள். கற்பு வாழ்க்கை எய்தி கருவுற்று மகப்பேறு அடையும் விருப்பம் இவளுக்கு உண்டு.

அடக்குவம் மன்னோ தோழி மடப்பிடி
மழைதவழ் சிலம்பிற் கடுஞ்சூல் ஈன்று
கழைதின் யாக்கை விழைகளிறு தைவர
வாழையஞ் சிலம்பிற் றுஞ்சும்
சாரல் நாடன் சாயல் மார்பே *(அகம். 328)*

ஆண்யானை மெய்யைத் தடவிக்கொடுக்கப் பெண்யானை முதற் கன்றை ஈன்று தூங்கும் இடம் என்று தலைவனுடைய மலையைக் குறிப்பதால், அவளுடைய கருவேட்கை பெறப்படும்.

9. உலோச்சனார்

இப்புலவர் பாடிய அகங்கள் 32. அவற்றுள் களவுப் பாலன 27. இவர்க்குச் சிறந்த அகக்கூற்று தோழியாவாள். அம்மூவனாரைப் போல உலோச்சனாரும் நெய்தல் நிலவியற்கையை நன்னர் அறிந்தவர்; நெய்தற்றிணையில் குறிஞ்சிப் பொருள் பாடியவர்.

குறிஞ்சித்திணைக்கண் தலைவன் ஊசியனைய குன்றின் மேல் ஏறி இறங்குவான்; கையகல வழுக்குப்பாதையில் வருவான்; புலியும் யானையும் கரடியும் பாம்பும் வழியிடை அச்சுறுத்தும்; முதலையுடைய காட்டாற்றினை நீந்திக் கடப்பான். இங்ஙனம் களவுக் கள்வனுக்கு மலைமுழுவதும் செவ்வையான தொடர்பு உண்டு. ஆதலின் குறிஞ்சியாவது மலையும் மலைசார்ந்த இடமும் என்று சொல்வது முழுப் பொருத்தமாகும். இப்பொருத்தம் முல்லை மருதம் பாலைகளுக்கும் உண்டு. நெய்தற்றிணையாவது கடலும் கடல்சார்ந்த இடமும் என்று வகுத்திருந்தாலும், பரந்த நீர்ப்பகுதி பாடல் பெற்றிலது. நெய்தற் செய்யுட்களைப் பார்ப்பின், கடல் சார்ந்த நிலப்பாங்கே சங்கத்தாராற் பாடுபெற்றமை அறியலாம். கடல் நிலத்தின்கண் மலைவழியிற் போலப் பல இடையூறுகள் இரா. தலைவன் தேரேறி வருங்கால் அவனது குதிரையின் கால்களைச் சுறாமீன்கள் தாக்கிப் புண்படுத்துகின்றன என்று சுறாவினைப் பகையாகக் கூறுவர் உலோச்சனார்.

அலர்ப் புலவர்

ஊரலர் இவர் பாடல் பலவற்றில் இடம் பெறுகின்றது. அன்னை மகளின் களவை யறிதற்கும், அவளைக் கடிதற்கும், சிறு கோலால் அலைத்து இற்செறித்தற்கும், தலைவனது தேர் இரவில் வந்து கொன்னே திரும்புதற்கும், உடன் போகுவதற்கும், தலைவனை வரைவு வற்புறுத்துவதற்கும், களவு முடிந்து கற்பாதற்கும் அலர் பயன்படும் திறங்களை இவர் களவுப் பாடல்களில் கற்கின்றோம். நெய்தல் நிலத்து வழியிடையூறுகள் பல இன்மையின், அதற்கு ஈடாக அலர் இடையூற்றை மிகுதியும் வைத்துக் காட்டுவர் புலவர் என அறிதல் வேண்டும். தலைவன் பிரிந்த காலத்து மனைவி யாதும் வருந்தாது ஆற்றியிருந்தாள்; இரங்காது குறித்த காலம் வரை திட்பத்தோடு பொறுத்திருந்தாள். இதனைக் கண்டும் ஊர்மாதுகள் அம்பல் செய்தனர். (குறுந். 175) என்று ஒரு புதுவகை அம்பலை புலப்படுத்துவர் உலோச்சனார். "கொடிது அறி பெண்டிர்" என்று ஊராரைப் பழிக்கின்றாள் தோழி. எனினும் அலரின் நலத்தை அறியாதவள் அல்லள். நம் களவு அகலத் துணைசெய்தது எனவும், இன்று புதிய நற்போக்கில் ஒழுகுகின்றது எனவும், ஊரைப் போற்றவும் செய்கிறாள் (அகம். 400) அலரின் செல்வாக்கைப் புனையும் இப்புலவர் அதன் மெய்ப்பாடுகளை நுணுக்கமாக நமக்குக் காட்டுவர்.

சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி
மூக்கின் உச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி
மறுகிற் பெண்டிர் அம்பல் தூற்ற (நற். 149)

அம்பல் என்பது மெய்ப்பாட்டால் தூற்றல்; அலராவது சொல்லால் தூற்றல். தலைவியின் களவொழுக்கத்தை ஊர்ப் பெண்டுகள் தெருவில் கண்சாடையால் பரப்புவர்; இப்படி ஒரு குமரி செய்யலாமா என்று மூக்கில் விரல் வைத்து வியப்பர்; ஆனால் வாய் விட்டுப் பேசார். உண்மையில் அலரைவிட அம்பலே ஆற்றலுடையது, மூடி மறைக்கும் போதுதான் கருத்து விரைவாகவும் குறைவாகவும் பரவும். மறையைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஒற்றிக் கேட்கும் ஆசையும் தோன்றும். ஆதலின் "அம்பல் தூற்ற" என்று பரவும் பெருக்கை உலோச்சனார் கூறுவர். ஊர்ப் பெண்கள் முணுமுணுத்துப் பேசுவதற்கு, நாரைக் கூட்டம் ஒலித்தாற்போல என உவமையாளுவர்.

உலோச்சனாரின் அகத்தோழி தலைவிக்கேற்ற நடப்பு உடையவள்; தலைவியின் காமமிகுதியை அறிந்து அதற்கொப்ப வழிவகுப்பவள். கடற்பாங்கரில் ஊறுகள் பல இல. ஆதலின் இரவுக்குறி வருக என்று தலைவனை அழைக்கின்றாள் தோழி.

இனிதே தெய்யவெம் முனிவில் நல்லூர்
இனிவரின் தவறும் இல்லை; எனையதூஉம்
பிறர்பிறர் அறிதல் யாவது
தமர்தமர் அறியாச் செறிவும் உடைத்தே (நற். 331)

உறவினரும் அறியாத மறைவிடம் உண்டு; இனிது வருவாய் என்று ஆர்வமாகக் கூப்பிடுகின்றாள். தோழியை ஒட்பமுடையவளாகவும் களவுக்கு உதவுபவளாகவும் வடிப்பர் புலவர். பகற்குறி வந்த தலைவனை, "நீ இம்மாலையில் திரும்ப வேண்டா. நெடுந் தொலைவிலிருந்து வருபவன் போலக் காட்டி எம் வீட்டிற்கு நின் இளையரோடும் குதிரையோடும் வருக. உன் தொலைவையும் அயர்வையும் கண்டு எம் பெற்றோர் விருந்தாக ஏற்றுக்கொள்வர். கடற்றுறை பிளவுடையது, சுறாக்கள் சினமுடையன, பொழுது இரவாயிற்று, தோன்றலே செல்லற்க என்று எம்மவர் வேண்டுவர். அவர் தம் சொல்லுக்கு இருப்பவன் போல எம் வீட்டில் இரவில் தங்குக" என்று நயமாக வழிகாட்டுகின்றாள் தோழி (அகம். 900) எனினும் களவு வரைதல் வேண்டும் என்பதனையும், அதனைச் செய்விப்பது தன் கடன் என்பதனையும் தெளிவாக அறிந்தவள்; தலைவியும் தலைவனும் காமம் மிக்கவர் என்பதற்காக நீடித்த களவு கூடாது என்று கண்டவள்.

சுறவினம் கலித்த நிறையிரும் பரப்பின்
துறையினும் துஞ்சாக் கண்ணர்
பெண்டிரும் உடைத்திவ் வம்பல் ஊரே *(நற். 223)*

கடலலைகள் தூங்கினாலும், இவ்வூராரின் கண்கள் தூங்கா என்று அலர்மேல் பழியிட்டு வரைவு முடுக்கும் தோழியின் ஒட்பத்தைக் காண்மின்.

உலோச்சனாரின் திணைத்தலைமகள் களவிலும் கற்பிலும் காமம் மீதூர்ந்தவள்; தலைவனை அகலாது உறையும் ஆசையினள்;பகற்குறியும், அன்றே இரவுக்குறியும் விரும்பும் பெருவேட்கையள். "இவள்தம் காமம் பெருமையின் காலை என்னாள்" *(நற். 323)* என்ற தோழி,தலைவியின் உவராக்காமத்தை வெளிப்படுத்துகின்றாள். அலரினால் தலைவனது தேர் வருவதில்லை எனவும், ஒருக்கால் வந்தாலும் என்னை அணைவதற்கு முன்னே அலரினால் திரும்பி விடுகின்றது எனவும் தலைவியின் அவலப்புலம்பலை உலோச்சனார் பாடல்களில் கேட்கின்றோம். நெய்தற்றிணையில் குறிஞ்சிப் புணர்பொருள் பாடவல்ல இவர், உரிய இரங்கற் பொருளும் பாடவல்லவரே.

என்ன ராயினும் இனிநினை வொழிக
அன்ன வாக இனையல் தோழியாம்
இன்ன மாகநத் துறந்தோர் நட்பெவன் *(நற். 64)*

மிகப்பெரிய உள்ள வேக்காட்டிலிருந்து பொங்கிய தலைவியின் குரல் இப்பாட்டு. என்னராயினும், அன்னவாக, இன்னமாக எனவரும் வினாச்சுட்டுச் சொற்கள் அவளது ஆழ்ந்த வருத்தத்தைப் புலப்படுத்த வில்லையா? கடற்சோலைக்கு எல்லா இனிமையும் இருந்து என்ன பயன்? அச்சோலைக்கண் அவரது தேரின் இன்னொலி கேட்க வில்லையே என்று ஒரு தலைவி வாய்விட்டுக் கேட்கும்போது, அவளது ஏக்கத்தை உணர்கின்றோம்.

காதல் விளையாட்டு

இன்று தமிழ்ச் சிறுமிகள் படைத்தின்புறும் விளையாட்டு சமயச் சார்புடையது. கோயில்கள் கட்டியும், குளங்கள் அமைத்தும், ஆண் பெண் தெய்வங்கள் நிறுவியும், கிடைத்த இலை தழைகளால் பூசை செய்தும், குழந்தை முறையில் கும்பிட்டு விளையாடக் காண்கின்றோம். கி.பி. ஐந்தாவது நூற்றாண்டிற்குப்பின் தமிழ்ச் சமுதாயத்தின் நெஞ்சும், சொல்லும், செயலும் சமயவுயிர்கொண்டு இயங்கின. தமிழ்ப்பெண்கள் சமயவுணர்வு மிக்கவர்களாகத் திகழ்ந்தனர். ஒரு கொள்கை நின்று நிலவவேண்டுமெனின், அது பெண்களிடைப் பரவுதல் வேண்டும். சமுதாயம் தாயாம் தன்மையுடையது பெண்ணினத்தையே தற்காப்புக்கு நம்பிக்

கிடக்கின்றது. இதனையறிந்த மாணிக்கவாசகர் திருவாசகத்தின் பல பதிகங்கள் இளம்பெண்களை நோக்கியும் மகளிர் விளையாட்டுக் களில் வைத்தும் பாடினர். சங்க காலமோ இயற்கை தழுவிய காதற்காலம். அற்றைச் சமுதாயம் குழந்தைச் சிறுமிகளைக் காதல் விளையாட்டிற் பழக்கியது. சிற்றூர்ப் பெண்கள் வண்டல் மண்ணால் ஒரு பெண் பாவையை அமைத்தனர். அப் பாவைக்கு அழகு பரந்த முலைகளை ஆக்கினர். ஞாழற்பூக்கள் அம்முலையின் மேல் விழுந்து பொலிவுட்டின. பொன்தாது பரந்த அம்மார்பு பருவம் வாய்ந்த காதற் பெண்களின் சுணங்கு நிறத்தைக் காட்டியது:

> சிறுவீ ஞாழல் தேன்தோய் ஒள்ளிணர்
> நேரிழை மகளிர் வார்மணல் இழைத்த
> வண்டற் பாவை வன்முலை முற்றத்து
> ஒண்பொறிச் சுணங்கின் ஐதுபடத் தாஅம்
> கண்டல் வேலிக் காமர் சிறுகுடி (நற். 191)

என்று சங்கச் சிறுமியின் காதலுணர்வை அவள் விளையாட்டு முறையிற் காண்கின்றோம். பண்டைத் தமிழ்ச் சமுதாயத்திற்குக் காதலே சமயமாம். அச் சமயக் கல்வியைப் பெண்ணினத்துக்கு விளையாடும் பருவத்தேயே ஊட்டியது என்பதற்கு உலோச்சனார் பாட்டு ஒரு சான்று.

10. ஒக்கூர் மாசாத்தியார்

இப் பெண்புலவர் பாடிய அகங்கள் ஏழும் சுற்புத்துறையன. அவற்றுள் ஆறு முல்லைத்திணை மேலன. முல்லைமாலை, முல்லையம்புறவு, முல்லைத்தொகுமுகை, முல்லை மென்கொடி, பூத்தமுல்லை, முல்லையூர்ந்த கல் எனவாங்கு இந்த ஆறு பாடல்களிலும் முல்லை என்னும் சொல் பயின்று வரக் காணலாம். ஓர் அகப்பாட்டு மட்டும் மருதத்திணை பற்றியது. ஈண்டும் மனையுறைகோழி, வெருகினம், மலை என்ற முல்லைக் கருப்பொருளும் பொழுதும் வந்துள. இப்புலமையள் பாடிய புறப்பாட்டு ஒன்றே, அதுவும் மூதின்முல்லைத் துறையேயாம், இவ்வாற்றால் மாசாத்தியார் முல்லைப் புலவர் என்று போற்றத்தக்க வராவர்.

அகத்திணை யிலக்கியத்திற்கு உரியவர் பன்னிருவர். தலைவன் பாங்கன் தலைவி பாங்கி செவிலி பாணன் பரத்தை என்றிவர் அவ்விலக்கியத்தில் பேரிடம் பெறுப. கூத்தன் விறலி அறிவர் கண்டோர் முதலான ஆட்கள் மிகப் பயில்வதில்லை. உழையர் என்பவர் கூற்றாகச் சங்கவிலக்கியத்துள் வரும் பாடல்கள் மூன்றே (அகம். 324, 384, 354). இவற்றுள், வரும் முதலிரண்டினை மாசாத்தியாரும் இறுதியதைக் கடுவன் மள்ளனாரும் பாடியுளர்.

வினைமுற்றியபின் கார் காலத்துத் தலைவன் வீடு திரும்புகின்றான். அவன் வரவறிந்த பாக்கத்தவர் 'இனி இப்பெண் விருந்துபெற்றாள், விருந்தோம்புவாள்' என்று மகிழ்ந்து கூறுகின்றனர்.

தமிழர் கண்ட இல்லறக் கடமையாவது விருந்தோம்பல். நடுயாமத்து விருந்து வந்தாலும் உவந்து உணவு படைப்பாள் ("அல்லிலாயினும் விருந்து வரின் உவக்கும்" நற். 142) என்று மனைவியின் கடமைப்பற்றை இடைக்காடனாரின் தலைவி தனித்திருக்கும்போது, அவ்வில்லத்திற்கு நண்பர்களும் புதியவர்களும் வந்து தங்குவது வழக்கம் இல்லை. தலைவனது பிரிவு விருந்தினர்தம் வருகையை அரிதாக்கும். கோவலனது மாதவிப் பிரிவால் "விருந்து எதிர்கோடலும். இழந்த என்னை" என்று இல்லாள் கண்ணகி எடுத்துரைத்தல் காண்க. விருந்து வருதல் என்ற தமிழ்த் தொடரால் கணவன் உடனுறைகின்றான், இல்லறக் கடன் ஆற்றுகின்றார்கள் என்ற உட்கருத்தும் பெறப்படும். ஆதலின், "விருந்தும் பெறுகுநர்", "விருந்தோர் பெற்றனள்" எனத் தலைவன் வரவு கண்ட அக்கம் பக்கத்தோர் மொழிவராயினர். தலைவி பெறும் விருந்தினன் யார்வன்? தலைவனது வண்டியை ஓட்டிக்கொண்டு வந்த பாகன்.

வரைமருள் மார்பின் அளிப்பனன் முயங்கி
மனைக்கொண்டு புக்கனன் நெடுந்தகை
விருந்தோர் பெற்றனள் திருந்திழை யோளே (அகம் 384)

பாகன் வீட்டின் முன் வண்டியை நிறுத்தினான்; தலைவன் தன் தோளால் அவனை அணைத்துக்கொண்டு வீட்டிற்குள் புகுந்தான்; தலைவி நல்லதொரு விருந்து பெற்றாள் என்பர் மாசாத்தியார். தமிழ்ச் சமுதாயத்தில் வண்டி முதல்வனுக்கும் வண்டியோட்டிக்கும் நிலவிய நிகர் மதிப்பை இதனால் அறியலாம்.

மாசாத்தியார் யாத்த பாடல்கள் சிலவே யாயினும், அவர்தம் கற்பனையாற்றலைக் காட்டப்போதியவை. தலைவன் வரவில்லை, அவன் குறித்த கார்காலம் வந்தெய்தியது. முல்லை முகைகள் பொலிந்திலங்கின. குளிர்ந்த பருவமும் பூவின் மணமும் தலைவிக்கு உவகையை அளிக்கவில்லை. "நின் தலைவன் நின் இளமையை மதித்திலன்; பொருளை மதித்துச் சென்றான்; இன்னும் வந்திலன்; அவன் வருவது என்றோ? ஏன் எதிர்பார்த்து ஏங்குகின்றாய்?" இவ்வாறு கார் என்னும் பருவப்பெண் முல்லைப் பற்களைக் காட்டிக் கேலிசெய்வது போலத் தலைவிக்கு நெஞ்சு உறுத்துகின்றது. (குறுந். 124)

மெல்லியல் அரிவை இல்வயின் நிறீஇ
இழிமின் என்றநின் மொழிமருண் டிசினே
வான்வழங்கு இயற்கை வளிபூட் டினையோ
மானுரு வாகநின் மனம்பூட் டினையோ (அகம். 384)

ந. 20.

மாசாத்தியாரின் புலமைக் கற்பனைக்கு இஃது ஓர் காட்டு. போர் முடித்த தலைவன் தேர் ஏறினான். உடனே பாகன் வீடு வந்து சேர்ந்தோம்; இறங்குங்கள் என்று கூறினான். தலைவன் மருண்டான். இடைப்பட்ட நெடுந்தொலைவை, பாகா எப்படிக் கடந்தாய்? நீ தேருக்குக் குதிரையாகப் பூட்டியது காற்றா? நின் நெஞ்சமா? என்று வினவி, மனைவியை விரையக் காணும் வாய்ப்பளித்து பாகனைக் தோளோடு தோள் தழுவினான். 'ஏறியது அறிந்தேன். இப்போது இறங்குவது அறிவேன்' என்று பாகாற்றலைப் பாராட்டினான். "எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார்" என்ற கம்பரின் கற்பனைக்கு சங்க மூலம் உண்டு; அம்மூலவர் மாசாத்தியார் ஆவர்.

இரண்டாம் பதின்மர்

11. ஓதலாந்தையார்

நூற்றுக்கும் மேல்ன அகத்தொகை பாடியவருள் ஒருவர் ஓதலாந்தையார் இவர் யாத்தவை 103 அகங்கள். அம் மூவனாரைப் போல இவரும் புறம் பாடாப் புலவர். தலைவன் 35, தோழி 25, தலைவி 19, நற்றாய் 13, கண்டோர் 7, செவிலி 2, அந்தணர் 1, அயலோர் 1 என்ற கூற்று வகையில் பாடற்றொகை அமைந்துள்ளது. களவிற்கு உரியன 38; கற்பிற்கு உரியன 65. களவில் பாங்கனுக்கு இவர் இடம் கொடுக்க வில்லை. கற்பில் தலைவன் தோழி தலைவி மூவருமே இடம் பெறுப. பாலைத்துறைகளைப் பலபடவும் பண்படவும் இலக்கியம் தொடுக்கும் இவர் உடன்போக்குத் துறைகளை ஆளுவதில் நிகரற்று விளங்குகின்றார். தாயின் புலம்பல்களை யாரினும் சிறந்து உணர்த்துகின்றார்.

உடன்போக்கும் பாலையும்

களவில் உடன்போக்கு பாலையாவது எங்ஙன்? தலைவனும் தலைவியும் உடன்செல்லும் நிலையைக் குறிஞ்சி என்றன்றோ கூறவேண்டும்? அன்னோர் செல்லும் வழி நிழலுடையது நீருடையது பூவுடையது இளவேனில் நலமுடையது என்று புனையப்படுதலின், நிலத்தாற் பாலை, காலத்தாற் பாலை என்று கூறுவதற்கும் இவ்லை. பெற்றோரைப் பிரிந்து செல்லுதலின் பாலையாயிற்று எனலாமோ எனின், புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் என்ற உரிப்பொருள்கள் தலைவனுக்கும் தலைவிக்கும் இடை நிகழ் வனவன்றிப் பிறரோடு தொடர்புடையன வல்லவே. பாலையாவது பிரிதலும் பிரிதல் நிமித்தமும். உடன்போக்கு பிரிதல் நிமித்தத்தின் பாற்படும். உடன்போக்கில் இருவரும் கூடியிருப்பினும், இன்னும் மணமாகாமையின், பிரிவோமோ பெற்றோரால் பிரிக்கப் படுவோமோ என்ற பிரிவுணர்ச்சி இருவர்தம் உள்ளத்தும் ஓடிக் கொண்டிருக்கும்.

இடைச்சுர மருங்கின் அவன்தமர் எய்திக்
கடைக் கொண்டு பெயர்த்தலிற் கலங்குஞர் எய்திக்
கற்பொடு புணர்ந்த கௌவை (தொல். 986)

என்றலின், உடன்போக்கில் உள்ளத்துயர் உண்டு என்பது தெளிவு. இக் களவுப் பாலையையும் கற்புப்பாலையையும் அறமும் திறமும் பொருந்தப் பாடிய ஓதலாந்தையார் சிறந்த பாலைப்புலவர் ஆவர். இவர்தம் ஐங்குறுநூற்றைக் கற்ற மாந்தர்க்கு அகத்திணையின் இலக்கிய வளத்தில் ஐயந்தோன்றாது. மரபுநிலை திரியாமல் அகத்துறைகளைப் படைக்கலாம். பாடலாம் என்ற புத்தாற்றல் தோன்றும். அகத்துறைப் புதுமைக்குச் சில எடுத்துக்காட்டுக்கள்

துறைப் புதுமைகள்

1. உடன் போன தலைமகள் மீண்டு வந்தவுடன், 'நின் ஐயன்மார் பின்பற்றி வந்தபோது இடைச்சுரத்து நிகழ்ந்தது என்ன?' என்று தோழி கேட்டாள். நிகழ்ந்தது கூறித் தலைமகன் மறைந்து கொள்ளுதற்கு உதவி செய்த மலையை தலைவி வாழ்த்துவது (ஐங். 321).

2. புணர்ந்துடன் போகும் தலைமகன் இடைச் சுரத்தின் கண் தலைமகள் விளையாட்டாகப் பூத்தொடுப்பதைக் கண்டு புகழ்கின்றான். அதற்கு அவள் நாணிக் கண்புதைத்த போது மகிழ்ந்து கூறுவது (ஐங். 319).

3. உடன்போகிய தலைமகள் தலைமகன் வளைத்த கொம்பிற் பூக்கொண்டு தனக்கும் பாவைக்கும் வகுப்பதைப் பார்த்தவர்கள் கூறுதல் (ஐங். 383)

4. இடைச்சுரத்தின்கண் தலைமகன் தலைவியினுடைய குணங்களை நினைக்கின்றான். அவனை நினைப்பதனால் சுரத்தின் வெப்பம் நீங்கியது கண்டு சொல்லுதல் (ஐங். 322)

5. உடன்போகிய தலைமகள் ஆண்டு எதிர்வரும் அந்தணர்க்குச் சொல்லியது (ஐங். 384).

உடன்போகியாளின் தாய்படும் அவலப் பாங்கினையும் காட்டும் அன்பினையும் தெளிந்த அறிவினையும் ஒரு முப்பது பாடல்களில் (ஐங். 371-400) ஏற்றம்பட வடிக்கின்றார் ஓதலாந்தையார். இம் முப்பது செய்யுட்களையும் ஒரே முறையில் இருந்து படிப்பின், உள் ளோட்டங்கள் ஊடுறு கதிர்ப்படம்போல் தோன்றக் காண்பீர். மகளின் உடன் போக்கைத் தாய் ஒப்புகின்றாள். அறநெறி இதுவெனத் தெளிந்த என் மகள் என்று போற்றுகின்றாள். மகளின் செலவுக்கு அவள் வருந்தவில்லை; உண்மையைச் சொல்லும் துணிவு

மகளுக்கு இல்லையே; சொல்லியிருப்பின் உடன்போக வேண்டாவே என்று இரங்குகின்றாள். உடன்போதற்கு உரிய வயதோ அவளுக்கு? முடிமுடிக்க அறியாதவள் ஆயிற்றே என்று இளமையை நினைந்து புலம்புகின்றாள். என் பார்வைக்கு இனிய பாவை இது, என் பைங்கிளிக்கு இனிய பைங்கிளி இது என்று தொடர்புடைப் பொருளைப் பார்த்துப் பார்த்துக் கவல்கின்றாள். என் மகள் உடன்போவதற்குக் காரணம் யார்? அவளும் இல்லை, அவனும் இல்லை, நானும் இல்லை என்று ஊழை வெறுக்கின்றாள். தன் மகள் நடந்து செல்லும் பாலை வழி மழை பெய்து இனியதாகுக என்று வேண்டுகின்றாள். காக்கை கரைந்தால் விருந்து வரும் என்ற பொது நம்பிக்கை இற்றையார்க்குப் போலப் பண்டைத் தமிழர்க்கும் இருந்தது. ஆதலின், உடன்போகிய காளையும் கூந்தல் எழிலியும் வரும்படி சுத்துவாய். காகமே! உனக்கும் உன் சுற்றத்திற்கும் ஊனுடை உணவைப் பொற்கலத்தில் படைப்பேன் என்று தாய் வேண்டுகின்றாள். சிலம்பு கழி நோன்பு அவன் வீட்டில் நிகழ்ந் தாலும், திருமணம் தன் வீட்டில் நிகழவேண்டும் என ஒரு தாய் விழைகின்றாள். பெண்ணின் தாய்க்கும் ஆடவனது தாய்க்கும் எதிருணர்ச்சி இயல்பாகச் சமுதாயத்தில் இருப்பதை இன்றும் காணலாம். அகவிலக்கியத்தில் தலைவியினுடைய தாய் தந்தை இடம் பெறுவர். தலைவனின் பெற்றோரைப் பற்றியும், அவளது காதலொழுக்கத்தைக் குறித்து அன்னவர் யாது கருத்துடையர் என்பது பற்றியும் புலவர் வாய்வாளார்

நினைத்தொறும் கலிழும் இடும்பை எய்துக..
வெஞ்சுரம் என்மகள் உய்த்த
வம்பமை வல்லில் விடலை தாயே *(ஐங். 373)*

மையற விளங்கிய கழலடிப்
பொய்வல் காளையை ஈன்ற தாய்க்கே *(ஐங். 399)*

ஓதலாந்தையார் தலைவனது தாய்மேல் தலைவியின் தாய்க்குச் சினம் உண்டு என்று வெளிப்படுத்துவர். அவள் அத்தகையவனை அன்று பெற்றதனால் அன்றோ என் மகள் இன்று சுடுஞ் சுரவழியில் செல்ல நேர்ந்தது என வளைத்துத் தொடுத்து வாயாடுவதைக் காண்க. மகள் உடன்போக்குத் துறையில் வைத்துத் தாயர்தம் எண்ணவோட்டங் களைப் பல திறமாக வடித்துக் காட்டுவர் புலவர். அதனால் அகவிலக்கியம் பாடுவார் பாடும் வன்மைக்கு இயைந்து விரியும் என்று அறியலாம். இருபால் தாயாரின் இகலுணர்ச்சி பாடு பெறுவதால், அகவிலக்கியம் தமிழ்ச் சமுதாய மனப்பான்மையோடு இயங்குவது என்றும் அறியலாம். தலைவனது தாய், கூற்றாகவன்றி, வைப்புத்தலம் போலப் பாட்டின் அகத்து வருதலின், அகமரபு புதிய மரபிற்கும் வழிவிடுவது என்றும் அறியலாம்.

12. ஓரம்போகியார்

ஐங்குறுநூற்றுப் புலவர் ஐவரில் ஒருவராகிய ஓரம்போகியார் 109 அகப்பாக்களின் ஆசிரியர்; கபிலர், அம்மூவனாருக்கு அடுத்தபடியாகப் பாடலெண் மிகப் பாடியவர். களவொழுக்கச் செய்யுட்கள் 15, கற்பொழுக்கச் செய்யுட்கள் 94, தோழிக்கு 45, தலைவிக்கு 42, பரத்தைக்கு 12, தலைவனுக்கு 8, வாயில்கட்கு 1, பரத்தையின் தோழிக்கு 1 என்பன கூற்றுத் தொகைகள்.இவர்தம் களவுப்பாடல்களில் தலைவி கூற்று இடம் பெறவில்லை.

பரத்தையின் தோழி

ஓரம்போகியார் மருதகப் புலவர். பரத்தைமைத் துறைகளை வகைவகையாகப் பாடியவர். சங்க விலக்கியத்தில் பரத்தையின் தோழிக்குப் பெரிதும் இடமில்லை. அத்தோழியைக் கேட்பவளாக வைத்துப் பரணர் பாடிய பாட்டு ஒன்று உண்டு (நற். 100). பரத்தை தன் தோழிக்குச் சொல்லியது என்ற துறையில் வைத்து ஓரம்போகியாரும் சில பாடல்கள் பாடியுள்ளனர். இவ்வளவில் பரணரும் ஓரம்போகியாரும் ஒப்பர்.

புதுப்புன லாடி யமர்த்த கண்ணள்
யார்மகள் இவளெனப் பற்றிய மகிழ்ந
யார்மக ளாயினும் அறியாய்
நீயார் மகனையெம் பற்றி யோயே (ஐங். 79)

இது பரத்தையின் தோழி கூற்று. இத்தோழி கூற்றாகப் பாடிய சங் கச்சான்றோர் ஓரம்போகியார் ஒருவரே. இவ்வகையால் கற்புக் கூற்றுக்கு உரியோர் எண்ணிக்கையில் ஒன்றைக் கூட்டிய பெருமை உடையவர் இப்புலவர். மரபுநிலை திரியாமல் அகத்திணையை வளர்க்கலாம் என்பதற்கு ஈண்டு ஒரு சான்று காண்க. தலைவியும் தோழியும் இணைபிரியா நண்பிகளாதலின், தலைவி நிலையில் தன்னை வைத்துத் தோழி பேசுவாள் என்பது இலக்கணம். தலைவித் தோழியின் இலக்கணத்தைப் பரத்தைத் தோழியின் நடையிலும் காணலாம். "நீயார் மகனை எம்பற்றி யோயே" என்று சொல்லும் போது, 'எம்' என்பது உண்மையில் பரத்தையைக் குறிக்கும் எனினும், அன்பின் ஒற்றுமைபற்றி அவளது தோழி தன்மைப்பன்மை நடையிற் கூறுவள்.

உள்ளுறை என்னும் இலக்கியக்கருவி மருதப்புலவர்க்கு இன்றியமையாதது. 50 பாடல்களுக்கு மேலாக உள்ளுறை அமைத்துள்ளார் ஓரம்போகியார். உள்ளுறை யுடைய பாட்டு மலரணிந்த கூந்தல் போன்றது; இலக்கிய அழகைமிகுப்பது. இயற்கை வனப்பும் உவமைத் தன்மையும் உள்ளப்பதிவும் நாகரிப்பண்பும் புலமைக் கூர்மையும் உள்ளுறையால் விளங்கும். ஐங்குறுநூறு மூன்று முதல் ஆறடியுட்பட்ட சிறு செய்யுட்கள் கொண்ட தொகைநூல்.

கருப்பொருள் கொண்டு உள்ளுறை அமைப்பது இலக்கிய அருமையாகும். அவ்வருமை ஓரம்போகியார்க்கு எளிமையாகக் காண்கின்றோம். இரண்டடிகளில் உள்ளுறை கர்ட்டித் தொடுப்பது இவர்தம் யாப்பு முறையாகும்.

பூத்த கரும்பிற் காய்த்த நெல்லிற்
கழனி யூரன் மார்பு (ஐங். 4)
கரும்புநடு பாத்தியிற் கலித்த ஆம்பல்
சுரும்புபசி களையும் பெரும்புனல் ஊர (ஐங். 65)

இல்லக்கிழத்தியின் கடமைகளை இவ்விரண்டு உள்ளுறைகளில் அமைப்பர் புலவர். மகப்பெற்றுக் குடும்பவழியை அடையாது காக்கின்றாள் தலைவி என்பதும், "காய்த்த நெல்" என்னும் கருப்பொருளாற் பெறப்படும். விருந்தினர்களை ஏற்று இல்லறம் செய்வாள் என்பது, ஆம்பல் வண்டின் பசியைப் போக்கும் என்ற புனைவாற் பெறலாம். கடமைகள் என்பன பரத்தையர்க்கு இல என்பதனைச் சுட்டித் தலைவனை இடித்துரைப்பது இவ்வுள்ளு றைகளின் நோக்கம்.

உள்ளம்போகி

ஓரம்போகியார் காட்டும் தலைவன் பரத்தையொழுக்கத்திற் பெரிதும் உள்ளம் போகியாக விளங்குகின்றான். நண்டு முதலே நீர்நாய் நாரை ஆமை எருமை இவை தலைவனது இழிபெருங் காமத்திற்கு உவமமாக விளங்குகின்றன.திருமணஞ் செய்து கொண்ட சில நாளைக்குள் பரத்தனாகின்றான் ஒரு தலைவன். நெடுந்தொலை பிரித்துபோய் மீண்டுவந்த சின்னாளில் பரத்தமை எய்துகின்றான் ஒருவன். பரத்தையருள்ளும் ஒருத்தியை விட்டு ஒருத்தியைப் பற்றி ஒழுகிச் செல்கின்றான் ஒருவன். பரத்தையர் மனைக்கண் பன்னாள் தங்கி விடுகின்றான் ஒருவன். புறவொழுக்க அடையாளங்களோடு வீடு வருகின்றான் ஒருவன்.

மகிழ்நன் மாண்குணம் வண்டுகொண் டனகொல்
வண்டின் மாண்குணம் மகிழ்நன்கொண்ட டான்கொல்
அன்ன தாகலும் அறியாள்
எம்மொடு புலக்குமவன் புதல்வன் தாயே (ஐங். 90)

இவ்வாறு தலைமகனது தண்டாப் பரத்தமையை ஒரு பரத்தையே வியக்கின்றாள். அவனது ஒழுக்கமிகை அவளுக்கும் பொறுக்க வில்லை. நல்லவன் ஒரு நொடியிற் கெடலாம்; கெட்டவன் ஒரு நொடியில் ந ன்கு திருந்தலாம். எல்லாம் மனிதன் நினைப்பு வயத்தது. கையில் ஒரு காசு இருக்கும் வரை, கடன் வாங்கியும் செலவழிக்கலாம் என்ற வழி இருக்குவரை, வாழ்க்கைத் திருப்பம் பலர்க்குத் தோன்றாது, இடைநடுவில் அறிவோடு பலர் திருந்தார். பந்து போல்

எல்லை முட்டியபின், இனித் திருந்துவதே வாழ்வு என்று எண்ணும் நன் மக்களைக் காண்கின்றோம். நாளாயினும் வாழ்வுச் செம்மையைப் போற்றி வரவேற்கின்றோம். இவ்வுள நிலையை அறிந்தவர் புலவர் ஓரம்போகியார். பரத்தமை எல்லைகண்டு துய்த்த தலைமகன் அதனைக் கைவிட முயல்கின்றான்.

தண்டுறை யூரன் தெளிப்பவும்
உண்கண் பசப்பது எவன்கொல் அன்னாய் *(ஐங். 21)*

என்றபடி, தெய்வத்தின் மேல் ஆணை செய்கின்றான். இதுதகாது என்று முற்றும் பரத்தமை கடிந்த ஒரு தலைவனது நல்வரவை ஓரைந்து செய்யுட்களில் (1-5) கற்கின்றோம். நெடுங்காலம் பரத்தைத் துறைபோய அவன் அதனை முற்றக் கடந்து வீடு வந்து மனைவியோடு இன்புறுகின்றான். யான் அவ்வாறு ஒழுகித் திரிந்த காலத்து, நீங்கள் என்ன நினைத்தீர்கள் என்று வினவுகின்றான் தோழியை. பரத்தமை பாடும் ஓரம்போகியார் திருந்திய தலைவனை முதல் ஐந்து பாக்களிற் சொல்லி நூலைத் தொடங்குதலின், எந்நிலையரும் நன்னிலைக்கு வரலாம்,வரவேண்டும் என்பது அவர் கருத்தாதல் பெறப்படும்.

வாழி ஆதன் வாழி அவினி
நெற்பல பொலிக பொன்பெரிது சிறக்க
எனவேட் டோளே யாயே

தலைவன் நிலை திரிதற்காகத் தலைவி கடமைநிலை, எண்ணநிலை திரிதல் கூடாது என்பதும் ஓரம்போகியார் உறுதிப்பாடு. கணவன் கன்றிய பரத்தனாக ஒழுகியபோது, அவ்வருத்தத்தில் ஆழ்ந்து விடாது, "அரசு வாழ்க; நெல் மிக விளைக; செல்வம் பெரிது கொழிக்க" என்று உயர்ந்த உள்ளம் தோன்ற இல்லறம் காக்கின்றாள் தலைவி.

எதிர்ப்புத் தலைவி

தலைவனது பரத்தமை எத்தகைய பெண்டின் உள்ளத்தையும் வருத்தவே செய்யும். தலைவன் மற்றொரு பரத்தையை நாடும்போது முதற்பரத்தைகூட உள்ளம் வெதும்புகின்றாள் (ஐங். 42). கணவனது இழிவொழுக்கத்தைக் கண்டுகொண்டு எம்மனைவியும் மகிழ்ந்திராள். கற்புத் தெய்வமான கண்ணகி கோவலனது பரத்தமை யால் உள்ளம் உடைந்தாள்; மேனி மெலிந்தாள். அவளது வாடிய மேனியின் வருத்தம் கண்டு கோவலன்மனம் திருந்தினான். "போற்றா ஒழுக்கம் புரிந்தீர்" என்று கோவலனுக்கு முன் கண்ணகி கூறுவதிலிருந்து, தலைவனது செயல் தவறு என்பதை அவள் உணராத பேதையல்லள், உணர்ந்து அடங்கிய அறிஞன் என்பது தெளிவு. ஆதலின் கணவனது பரக்காமம் காதலியின் நெஞ்சைத்

துளைத்தல் இயல்பினும் இயல்பே. ஓரம்போகியாரின் அகத்திணைத் தலைவியர் தலைவனது பரத்தமைக்கு உள்ளம் பொங்குமவர், சிறிதும் இசைந்து வாழ மன மில்லாதவர், எதிர்ப்புக் காட்டுபவர்.

மாநீர்ப் பொய்கை யாணர் ஊர
தூயர் நறியர்நின் பெண்டிர்
பேஎய் அனையம்யாம் சேய்பயந் தனமே (ஐங். 70)

என்பது ஒரு மனைவியின் வல்லுரை. "நின் பெண்டுகளாகிய பரத்தையர் எப்போதும் குளித்த உடற்றூய்மை உடையவர். புதுப்பூ அணிந்து நறுமணம் மிக்கவர். நாங்களோ மகப்பெற்றோம், உடல் மெலிந்தோம், என்பானோம், மக்களைத் தூயராகவும், நறியராகவும் போற்றுகின்றோம். எங்களைப் போற்றிக் கொள்ளப் பொழுது ஏது?" எனக் கசந்து கடிந்து கூறுகின்றாள் ஒரு தலைவி. சின்னஞ்சிறு குழந்தைபோல இப்படி நடந்து கொள்ளலாமா? ஊர் சிரியாதா? என்று அறிவுறுத்துகிறாள் ஒருத்தி (ஐங். 85.) உன் தந்தை தாயைக் காட்டிலும் ஒழுக்கத்தில் உன்னை இடித்துரைக்கும் உரிமை இவளுக்கு உண்டு என எடுத்துக் காட்டுகின்றாள் ஒரு தோழி (98). மற்றொருத்தியைத் தோய்ந்த மார்பைத் தோயேன்; எக்கேடுவரினும் வருக எனக் கொதித்து மொழிகின்றாள் ஒருத்தி (63).

பரத்தமை தாங்கலோ இலனென வறிதுநீ
புலத்தல் ஒல்லுமோ மனைகெழு மடந்தை
அதுபுலந் துறைதல் வல்லி யோரே
செய்யோள் நீங்கச் சில்பதம் கொழித்துத்
தாமட்டு உண்டு தமிய ராகித்
தேமொழிப் புதல்வர் திரள்குமுலை சுவைப்ப
வைகுநர் ஆகுதல் அறிந்தும்
அறியார் அம்மவஃதுடலு மோரே (அகம். 361)

சங்க அகச்செய்யுட்களுள் அரியதொரு பாடல் இது. தலைமகனது புறப்போக்குத் தாங்க இயலவில்லையே என்று ஒரு தலைவி மிக வருந்துகின்றாள். எவ்வாற்றானும் அவள் மனம் இசையவில்லை. இதன் விளைவு என்னாம்? குடும்பம் வறுமைப் படும், குழந்தைகள் மெலிவெய்தும், இல்லறம் வற்றிப்போம். ஆதலின் அறிவுரைத் தோழி பிடிவாதத் தலைவியை இடித்துரைக்கின்றனள். பொறுக்க அறியாமையினால் கெட்ட குடிகளைக் காணாயோ என்று எடுத்துக் காட்டுகின்றனள். பொறுப்பதே மனைவியின் பொறுப்பு என்பது தோழியின் நல்லுரை. இல்லறப் பிணிப்பிற்குப் பொருட்பிணிப்பு ஒரு காரணம் என்பதை ஓரம்போகியார் இப்பாடலில் வைத்து அறிவுறுத்துவர். அகமரபு குன்றாமல் எல்லையளவும் சென்று கருத்துக்களைப் புனையலாம் என்பதற்கு இச்செய்யுள் சான்றாதல் காண்.

13. ஔவையார்

நாடறிந்த தமிழ்ப் புலமையாட்டி ஔவையார். இவர் புறம்பாடுவதில் வல்லவர் என்பதனைப் பலர் அறிகுவர். இவர் தம் புறப்பாடல்கள் 33; அகப்பாட்டுக்கள் இருபத்தாறே. களவிற்கு உரியவை 8; கற்பிற்கு உரியவை 18. அகம்பாடுவதிலும் வல்லுநர் ஔவையார் என்பதனைக் கூற விரும்புகின்றேன்.

அகத்தின் பல்துறைகளிலும் ஔவையார் பாடியிருப்பினும், களவிலும் கற்பிலும் தலைவியரின் பிரிவுத்துயரை எடுத்துக்காட்டும் தனித்திறம் வாய்ந்தவராக விளங்குவர். இவர்தம் அகத் தலைவி அடக்கவாராக் காமவேட்கைப் பட்டவர். எம் காமம் வானளவு உயர்ந்தது; என் காதலன் அதனை முற்றத் தணிக்கவில்லை (குறுந். 102) என்று கிழத்தி வெளிப்படையாக மொழிவள். தலைவன் வெளியூர் செல்லல் ஆகாது என்று வம்பு செய்தாள் என்றும், அதனால் சொல்லிக் கொள்ளாமலே அவன் பிரியநேர்ந்தது என்றும் ஒரு பாடல் தொடுக்கின்றார் ஔவையார் (குறுந். 43). மனைவியது காமச் சுரப்பைக் கணவன் அவ்வளவு உணர்ந்தவனாகத் தெரியவில்லை. "தாம் வினைமுடித்து வரும்வரை நாம் வாழ்ந்து கொண்டிருப்போம் என்று அவர் தவறாகக் கருதுகின்றார். ஒருநாள் அவர் இல்லாது கழியின் உயிர் கழியும் என்பதனை உணர்ந்திலரே" (நற். 129) என்பது தோழியின் அறிவிப்பு.

அகத்திணை உருவகம்

தலைவி மெய்ம்மலி காமத்தள்; தலைவனுடன் சென்று கையணை முயக்கம் விழைபவள்; தலைவன் இருக்கும் இடத்திற்குச் சென்றேனும் இன்புறும் துடிப்பினள். வழிகள் மயங்கிய நெடுந்தொலை நடந்தேனும் வெள்ளிவீதியைப்போலக் காதலனைக் காணப் புறப்படுவேன் என்று (அகம். 147) துணிகின்றாள் ஒரு நங்கை. "அழிநீர் மீன் பெயர்ந்தாங்கு வழிநடைச் சேறல் வலித்திசின் யானே" (அகம். 303) என்பது கற்புடை நங்கையின் காமச்சொல். மீனு வமம் மிகப் பொருத்தம் உடையது. நீர் நீங்கின் மீன் நீங்கும், நீருள்ளவிடத்தை நாடிச் செல்லும். அதுபோல் காமக்காதலி காதற் கணவனைத் தேடிப் புறப்படத் துணிகின்றாள். தலைவனுடன் போகவேண்டும் அல்லது அவன் போய இடத்திற்குத் தனித்துப் போகவேண்டும் என்ற உள்ளக்கிடக்கை யுடையவளாகத் தலைவி யைப் புனைந்து காட்டும் திறலினை ஔவைப் புலமையில் காண்கின்றோம்.

தலைவரம் பறியாத் தகைவரல் வாடையொடு
முலையிடைத் தோன்றிய நோய்வளர் இளமுளை
அசைவுடை நெஞ்சத்து உயவுத்திறன் நீடி
ஊரோர் எடுத்த அம்பல் அஞ்சினை

ஆராக் காதல் அவிர்தளிர் பரப்பிப்
புலவர் புகழ்ந்த நாணில் பெருமரம்
நிலவரை யெல்லாம் நிழற்றி
அலரரும்பு ஊழ்ப்பவும் வாரா தோரே (அகம். 273)

அகத்திணைக் கருத்துக்களைக் கொண்டு செய்த மரவுருவகத்தை இப்பாட்டில் அறியலாம். கலங்கும் நெஞ்சம் நிலமாம். முலையை அணையப் பெறாத வேட்கை முளையாம். வேட்கையில் பருத்த வருத்தம் அடியாம்.அவ்வருத்தத்தை அறிந்து பெண்கள் கும்பல் கும்பலாகப் பேசும் அம்பல்கள் விரிந்த கிளைகளாம். அவ்வம்பல் கேட்டுக் கேட்டுத் தழைக்கும் காதலுணர்வுகள் தளிர்களாம். மெல்ல முளைத்துப் பருத்து விரிந்து தழைத்த காமத்தின் காழ்ப்பால், அரிய நாணம் நீங்கித் தடித்த வாழ்வு பெரு மரமாம். அதன் நிழலில் ஊரார் எல்லாரும் கூடிக்கூடி வாய்மலர்ந்து பேசுவது விரிந்த அலர்களாம். இவ்வாறு அகத்திணைக் காதல் மரம் ஒன்றை ஓவியமாகக் காட்டிய இலக்கிய ஓவியர் ஔவையார். அத்தகைய மலர்களைப் பறிக்க வரவில்லையே என்று காமங்காழ் காதலி ஏங்குகின்றாள்.

ஔவையாரின் பல அகப்பாடல்கள் பெருந்திணைப்படுவன என்பது என் கருத்து. இத்திணையின் நான்கு துறைகளுள் ஒன்று "தேறுதல் ஒழித்த காமத்து மிகுதிறம்" என்பது. தலைவியின் காமம் ஒருகாலைக் கொருகால் பெருகிச் செல்வதன்றித் தணிவதில்லை. தோழி ஆற்றியும் அடங்குவதில்லை. ஊரெல்லாம் அறிந்து பேசும்படிக்கு அவள் காமம் வெளிப்படையாகும். புலவர் பெண்மையெனப் பாராட்டிய நாணம் அகலும். களவிலும் ஊரார் அலர் உண்டு. அவ்வலர் காதலர் தம் மறைவினாற் பிறப்பது; சுற்புக்கு உறுதுணையாக எழுவது; தலைவியின் நாணை ஊறுபடுத்தாதது. மேம்பாட்டிற் புனைந்த இல்லற அலரோ மனைவியின் காமவெளிப்படையால் தோன்றுவது, சுற்பை ஊறுபடுத்தாமல், நாணை நீக்குவது எனத் தெளிக. "பிரிவின்கண் தலைமகள் அறிவு மயங்கிச் சொல்லியது என இவ் வகப்பாட்டுக்கு எழுதிய துறையால்,பெருந்திணை என்ற நிலை பெறப்படு மன்றோ?

14. கடுவன் மள்ளனார்

இவர் புனைந்த அகப்பாக்கள் நான்கே எனினும், முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என நானிலத்துக்கும் ஒவ்வொரு பாடலாக அமைந்திருப்பக் காணலாம். தலையாலங் கானத்துப் போரில் நெடுஞ்செழியனது வீரர்கள் முழக்கிய ஆரவாரத்தினும் பெரியது, தலைவனது பரத்தைமையாற் பிறந்த அலர் என்று நக்கீரர் அரசியலுவமை கூறுவர் (அகம். 36). இவ்வகை அலருக்கு இவ்வகை உவமம் கூறுவது பலர்தம் மருதப்பாடல்களிற் காணத்தகு பொதுவழக்கு.

பரத்தை யாயம் கரப்பவும் ஒல்லாது
கவ்வை யாகின்றாற் பெரிதே காண்தகத்
தொல்புகழ் நிறைந்த பல்பூங் கழனிக்
கரும்பமல் படப்பைப் பெரும்பெயர்க் கள்ளூர்த்
திருநுதற் குறுமகள் அணிநலம் வவ்விய
அறனி லாளன் அறியேன் என்ற
திறனில் வெஞ்சூள் அறிகரி கடாஅய்
முறியார் பெருங்கிளை செறியப் பற்றி
நீறுதலைப் பெய்த ஞான்றை
வீறுசால் அவையத் தார்ப்பினும் பெரிதே (அகம். 256)

"ஓர் இளைஞன் கள்ளூர் நங்கையைக் களவிற் காதலித்துப் புணர்ந்தான். பின்னர் அவளை அறியேன் என்று அறம் பிறழ்ந்து வாதிட்டான். ஊர்ப் பெருமக்கள் உண்மையை ஆராய்ந்து அவனுக்குக் கடுந்தண்டனை விதித்தனர். மரக்கிளையில் அவனை கட்டிவைத்துச் சுண்ணாம்பு நீற்றினை ஊற்றினர். அப்போது பேராரவாரம் எழுந்தது" எனக் கயவனது காதலை உவமை வாயிலாக வெளிப்படுத்துவர் மள்ளனார். அக்கயவனுக்கு எழுந்த ஆர்ப்பரிப்பினும் தலைவன்மேல் எழுந்த அலர் மிக்கது, எல்லார்க்கும் கேட்பது என்று பாடுவர்.

ஔவையாரும் பரணரும் காமச்செயல்களை உவமிக்கும் போது, ஆட்பெயர்களைச் சுட்டிப் பாடியதை அறிவோம். கள்ளூர்க் குறுமகள் எனவும் அறனிலாளன் எனவும் பொதுப் பட மள்ளனார் பாடுதலைக் காண்க. காதல் வழிப்பட்ட ஏற்றங்களைத் தேர்ந்து தெளிந்து முறைசெய்தற்கு ஆற்றலுடைய நிலையம் இருந்தது என்பதனை வீறுசால் அவையம் என்ற தொடராலும், இத்தகைய தண்டனைகளை ஊரறிய நிகழ்த்தினர் என்பதனை ஆர்ப்பினும் பெரிது என்ற தொடரால்லும் அறியலாம். நினைத்த அன்புக் காதலியை எய்த முடியாதபோது இளைஞன் மடல்மா ஏறி மன்றத்திற்குச் சென்று சான்றோர்முன் தன் வழக்கை எடுத்துரைப்பான் என நெய்தற்கலிகள் (139-141) நுவலுகின்றன. இதனால் தமிழ்ச் சமுதாயத்தில் காதல் காக்கும் நிலையங்கள் ஊர்தோறும் நிலவின என்பது வெளிப்படை.

15. கந்தரத்தனார்

இப்புலவர் யாத்த அகங்கள் எட்டு. களவிற்கு உரியவை மூன்று; கற்பின் மேலான ஐந்து. தலைவியின் நற்றாய் களவியலில் மிகுதியாக இடம்பெறுவது உண்டு. வெறியாட்டு அறத்தொடு நிற்றல் உடன்போக்கு என்ற துறைகளில் அன்னை பாடல் பெறுவாள்.

களவுத்திணையில் தாயின் நிலைபற்றித் தொல்காப்பியத்துப் பல நூற்பாக்கள் உள. மகள் இல்லாளாகிய கற்பியலில் நற்றாய் பேச்சு வரவுக்குப் பெரிதும் வாய்ப்பு இல்லை. எனினும் கந்தரத்தனார் கல்லாடனார் நக்கீரர் ஆகிய மூப்புலவர்களும் அன்னையை அகப்படுத்திப் பாடியுள்ளனர். இம்மூவர் பாடல்களும் பாலைத்திணையன; தலைமகனது பிரிவின்கண் தலைவி ஆற்றாது வருந்தும் துறையன; இவ்வொற்றுமை ஓர் வியப்புக் காண். கணவனது பிரிவால் மகள் தோள் நாளும் மெலிவதைக் கண்டு, "அன்னையும் அருந்துயர் உற்றனள்" (அகம். 209) என்று குறிப்பர் கல்லாடனார். நாளும் பசலை நோய் பரந்து உடம்பு தேய்வதைக் கண்டு, தாய்க்கு முகமலர்ச்சியில்லை ("அன்னையும் அமரா முகத்தினள்" அகம். 153) என்று சுட்டுவர் நக்கீரர். இவ்விருவர் பாட்டிலும் தலைவியின் அன்னை ஓரடியிற் சுருக்கமாக உரைபடுகின்றாள். கந்தரனத்தனார் பாடலில் அன்னையின் துயரைப் பலவடிகளில் கேட்கின்றோம்.

சுரம்பல கடந்தோர்க் கிரங்குப என்னார்
கௌவை மேவல ராகி அவ்வூர்
நிரையப் பெண்டிர் இன்னா கூறுவ
புரைய வல்லவென் மகட்கெனப் பரைஇ
நம்முணர்ந் தாறிய கொள்கை
அன்னை முன்னர்யாம் என்னிதற் படலே (அகம். 95)

தலைவன் வேற்றுநாடு செல்வதற்குத் தலைவி உடன்பாடு அளித்துவிட்டனள். அவன் சென்றபின்னர், அவளுக்குப் பிரிவு வருத்தம் மேலிட்டது. நுதல் வெளிறிற்று. மெல்லிய மேனி நொய் தாயிற்று. இதனை அறிந்த ஊர்ப்பெண்டுகள் கணவன் போவதற்கு ஒருப்பட்டு, போனபின் வருந்துகின்றாளே என்று தூற்றலாயினர். "காதலன் பிரிவிற்கு மனைவி கவல்வது இயல்பினும் இயல்பே. அதுவும் அவன் செல்லும் வழி பாலைச் சுரம் ஆயினோ, யார்க்குத்தான் பெருங்கவலை தோன்றாது. இவ்வுறவு நிலையையும் உள்ள நிலையையும் சிறிதும் கருதிப் பாராது இவ்வூர் மடந்தையர் என் மகள்மேல் அலர் மொழிப; அது பொருந்தாது. இம் மடந்தைமார் கொடியவர், நரகத்திற்குச் செல்லத்தக்கவர்" என்று அன்னை தெய்வம் பரவுகின்றாள். தானே துயர்ப்படும் அன்னைமுன் நம் துன்பநிலையை வெளிப்படுத்தக் கூடாது என்று தோழிக்குத் தலைமகள் கூறுவது இப்பாட்டின் கருத்து. மாமன் மாமிக்குமுன் தன் துன்பத்தைக் காட்டாது அடக்கி ஒளித்துக் கொள்ளும் கண்ணகியின் மனப்பான்மையை இத் தலைவிபால் காண்கின்றோம், தலைவி தலைவனொடு உடன் ஏகுவாள்;பின்னிருந்து இரங்குதலும், அன்னை அறிய அவலப்படுதலும்,மகளின் அவலத்தை அறிந்து

அன்னை அடங்கியிருத்தலும் எல்லாம் நிகழா என்று தெளிக. ஆதலின் களவுத்துறையாக அகநானூற்று உரையாசிரியர்கள் பொருள் முடித்திருப்பது பிழையாகும்.

களவியலில் வரும் அன்னைக்கும் கற்பியலில் வரும் அன்னைக்கும் பாடுபெறு முறையில் ஒரு வேறுபாடு உண்டு. நற்றாய் கூறியது என நேர்கூற்றாகக் களவிற் பாடலாம்."ஈன்று புறந்தந்த எம்மும் உள்ளாள்" (அகம். 35) என ஒரு நற்றாய் கூற்றாக அம்மூவனார் பாடுவர். இன்ன பாடல்கள் பலவுள. கற்புத் திணையிலோ அன்னை பிறர்கூற்றில் வைத்துச் சுட்டப் படுவாள் என்று அறியக் கிடக்கின்றது. கந்தரத்தனார் பாடல் தலைமகள் கூற்றாகும்; கல்லாட நக்கீரனார் பாடல்கள் தோழி கூற்றுக்கள்.

விளங்கிய தலைமக்கள்

கந்தரத்தனாரின் தலைமக்கள் ஒருவரை யொருவர் புரிந்து கொண்டவர்கள். தலைவன் பிரிந்து போவதற்குத் தலைவி உடன் படுகின்றாள். பொருளின் பொருட்டுப் பிரிந்து போவதா எனத் தலைவனும் ஓர்கின்றான். அறல் மணல் போல விரிந்து நெளிந்து ஓடிய கருங்கூந்தலைக் கொண்ட மனைவி ஆற்றியிருப்பாள் ("ஒலியிருங் கூந்தல் தேறும்" அகம் 191)என அவனது நெஞ்சம் அவனுக்குத் தேறுதல் மொழியக் காண்கின்றோம். தலைவன் செல்லும் நெறி பாலைமை யாயிற்றே என்று ஒருகால் அவன் கலங்கினாலும், அவன் குறித்த காலம் வரை ஆற்றியிருக்கும் பெற்றியளாக விளங்குகின்றாள்.

அனையகொல் வாழி தோழி மனைய
தாழ்வில் நொச்சி சூழ்வன மலரும்
மவ்வல் மாச்சினை காட்டி
அவ்வள வென்றார் ஆண்டுசெய் பொருளே (அகம். 23)

வேற்றூர் செல்லும் தலைவன் தான் திரும்பிவரும் காலத்தைச் சொல்லாற் சொல்லவில்லை. நொச்சி மரத்தின் கிளையில் சுற்றிக் கொண்டு கிடக்கும் முல்லைக்கொடியைத் தலைவிக்குக் காட்டி, அங்குப் பொருள் ஈட்டுங்காலம் அவ்வளவு நாள் தான் என்றான். முல்லை மலரும் காலமாகிய கார்ப்பருவத்தில் வந்துவிடுவேன் என்பது குறிப்பு. இக்குறிப்பு நாடகமுறைக்கு உரிய மெய்ப்பாடாகும். அக்கால வரம்பிற்குள் ஈட்ட முடிந்த பொருள் எவ்வளவு அவ்வளவினைக் கொண்டு திரும்பிவிடுவான் தலைவன் இத்துணை ஈட்டவேண்டும் எனப் பொருள் வரம்பு வைத்துக் கொள்ளவில்லை. அவ்வரம்பு கொள்ளின், காலம் நீட்டிக்குமன்றோ; ஆதலின் காலவளவே பொருளளவு என்று மனைவியின் காதலை மதித்துக் கூறுகின்றான் தலைவன். அதுபோலவே கார்காலம் வரக்கண்டதும்

மனைவி கணவன் வரக்காணேன் என்று ஏங்கி விம்மி வெய்துயிர்த்து விழவில்லை; அவர் குறித்த பருவம் இதுதானோ! அனைய கொல்? என்று அடக்கமாக வினவுகின்றாள் தலைவி. எனவே சுந்தரத்தனார் புனைந்த அகப்பெருமக்கள் உரிய அறிவும் ஒத்த உணர்வும் அரிய அடக்கமும் வாய்ந்தவர்கள் என்று காண்கின்றோம்.

16. கபிலர்

சங்கப் புலவர்களுள் தலைசான்றவர் கபிலர். புதுக்கூர்மையும் பாடும் வளமும் நிறைந்தவர். யாரினும் பாட்டெண்ணிக்கை மிகப் பாடியவர். யாரினும் சிறந்த வள்ளல் பாரியின் வாழ்க்கைச் தோழர். இவர்தம் ஓங்குயர் சிறப்புக்குப் பாடும் வன்மை ஒரு காரணம், பாரியின் உயிர்த்தோழமையும் ஒரு காரணம். சங்கச் சான்றோர் பலரின் வரலாற்றை அறியோம். ஒரு சிலரைப்பற்றி ஒரு சில குறிப்புக்கள் காணக்கிடக்கின்றன. கபிலர் ஒருவருக்குத் தான் நிரம்ப வாழ்க்கைக் குறிப்புக்கள் கிடைக்கின்றன. பலரைப் பாடிய பெருமையோடு,பலரால் பாடப்பெற்ற பெருமையும் உடையவர் கபிலர்; புலவர் மதித்த புலமைப் பெருமகன். "பலர்புகழ் நல்லிசை வாய்மொழிக் கபிலன்" என்பது (அகம் 78) நக்கீரர் பாராட்டு. "செறுத்த் செய்யுள் செய் செந்நா உடைய கபிலன்" என்பது (புறம். 53) இளங்கீரனார் புகழுரை."புலன் அழுக்கற்ற அந்தணாளன்" (புறம். 126) என்பது நப்பசலையார் மதிப்புரை. கபிலரின் செய்யுட்களை ஆராயுமுன், அவர்தம் நல்லிசை நம்மை ஆட்கொண்டு விடுகின்றது. அவர் பாடிய அகங்கள் 197. பத்துப்பாட்டிலும் பரிபாடல் ஒழிந்த ஏழு தொகையிலும் இவர் பாடல்கள் உள 182 களவிற்கும், 12 கற்பிற்கும், 3 கைக்கிளைக்கும் உரியவை.

வெளவிக் கொளல்

கலித்தொகை 32 ஆம் பாடலைப் பெருந்திணைத் துறையாகக் கொள்வர் நச்சினார்க்கினியரும் பிறரும். இப்பாட்டிற் தலைமக்கள் கூலியாட்கள் ஆதலின், பெருந்திணை என்பது அன்னவர் முடிபு. விரும்பாதவளை வலிந்து புணர்ந்ததாகக் கொண்டு, "மிக்க காமத்து மிடல்" என்னும் துறையாம் என்பர்.

மையில் மதியின் விளங்கு முகத்தாரை
வெளவிக் கொளலும் அறனெனக் கண்டன்று

என்ற அடிகளை இன்னவர் சான்றாகக் காட்டுவர். இவையெல்லாம் பிழைகள் என்பதனை நாலாவது இயலின்கண் பெருந்திணை யாராய்ச்சியிற் கற்றீர்கள். நடைமுறைச் சொற்கள் காதலர் வாய்ப்படும்போது நிலைமாறுகின்றன. மென்சொற்கள் ஆற்றல் பெறுகின்றன. வன்சொற்கள் புணர்ச்சியில் மெலிகின்றன.

காதற்களத்தில் அறிவுடையோர் தோற்பர். உணர்ச்சியுடையோர் இன்பம் சிறப்பர். களவு என்னும் சொல்லுக்குத் திருட்டுக் குற்றம் என்பது வழக்குப் பொருள். அகத்திணையியலோ அச்சொல் உயர்ந்த ஒழுக்கமாகிறது. "அன்பின் ஐந்திணை களவெனப்படுவது" எனப் புகழ்பெறுகின்றது. ஆதலின், நின்னை வெளவிக்கொள்வேன் என்று காதலன் கூறும்போது, தனது ஆராக்காமத்தை,விரைந்து அணையத் துடிக்கும் எழுச்சியை அறிவுறுத்துகின்றான். "வெளவின்ன் முயங்கும்" "வளைமுன்கை பற்றி நலிய" "கூந்தல் எஞ்சாது நனிபற்றி" (கலி. 47, 15, 54)எனப் பிற கலிகளிலும் கபிலர் சொற்களை ஆளும் முறையைக் காணலாம். ஆதலின் பெருந்திணைபற்றி இவர் யாதும் பாடவில்லை என்று தெளிக.

அகத்திணைக்கண் பயின்றுவரும் பல புனைவுகளுக்கு உள்ளத்தின் ஆழத்தை, உணர்ச்சியின் வாயிலைக் கண்டு கொள்ள வேண்டும். தலைவன் பிரிந்தால் தலைவி இறந்துபடுவாள் என்று தோழி கூறுவாள். பிரிவு வருத்தம் இறப்பிற்கு ஒப்பப் பெரிதாகும் என்பது இதன் பொருள். புறவொழுக்கம் ஒழுகிய தலைவன் தலைவியின் கால்மேல் வீழ்வான் என்பது மருதப்புனைவு. தன் குற்றத்தை உடன்பட்டு நாணிப்பணிந்து வேண்டுவான் என்பது இதன் பொருள். குமரி மகளை ஐயப்பட்டு, வெளியிற் செல்லாதே என அன்னை கோலால் அடிப்பாள் என்று பாடுவது உண்டு. மிகக் கடிந்து உரைப்பாள் என்பது பொருள்.

குறிஞ்சிப் பாட்டு

மலையும் மலைப்பாங்கரும் ஆகிய சூழ்நிலையில் வைத்துக் களவொழுக்கத்தைப் புனையவல்ல பேராளர் கபிலர். களவின் பல துறைகளும் இவரிடத்துப் பாடுபெறுகின்றன. களவுத் துறை களுள்ளும் வரைவுத்துறைகளை விரும்பிப் பாடும் இயல்பினர் என்று அறிகின்றோம். அதனாலன்றோ ஆரியவரசன் பிரகத்தனுக்குக் குறிஞ்சிப்பாட்டை அறத்தொடுநிலை என்னும் துறையில் வைத்துக் கற்பித்தார். குறிஞ்சிப்பாட்டு 61 அடிகளால் அமைந்தது. இப்பாட்டினுள் பல துறைகளுக்கு இடனுண்டு. எனினும் எல்லா அடிகளும் அறத்தொடு நிலை என்னும் ஒரு துறை நோக்கியே இயலுகின்றன. தலைவியின் களவினை அன்னைக்கு முறையாகவும் அறமாகவும் வெளிப்படுத்துவதே இப்பாட்டின் முடிந்த நோக்கம். அகத்திணையாவது தனிநிலையுடையது, தொடர்கதையன்று, நிகழ்ச்சிகளைக் கோவைப்படுத்துவது இல்லை என்று முன்னர்க் கற்றோம். அவ்வமைப்பிறகு மாறான ஒரு போக்கினைக் குறிஞ்சிப்பாட்டிற் காண்கின்றோம்.

நிகழ்ந்த வண்ணம் நீநனி யுணரச்
செப்பல் ஆன்றிசின் சினவா தீமோ

என்று தோழி அடிப்போடுவதிலிருந்தே குறிஞ்சிப் பாட்டு ஒரு கோவைப்பாட்டு என்பது வெளிப்படை. தலைவியும் தோழியும் தினைப்புனம் காக்கச் சென்றதும், சுனையாடிப் பூக்கொய்து கிளியோட்டியதும், நாய் கண்டு அஞ்சியதும், மணமிக்க இளையவீரன் ஒருவன் அணுக வந்து அச்சம் தவிர்த்ததும், தான் எய்த விலங்கினங்களைக் கண்டீரோ என அவன் வினவியதும், அதற்குத் தலைவியும் தோழியும் வாளாவிருந்ததும், களிறுதரு புணர்ச்சியும், யாறுதரு புணர்ச்சியும், பகற்குறியும், இரவுக்குறியும், இரவுக்குறியிடையீடுகளும் எல்லாம் தொடர்பாக இப்பாட்டின்கண் ஓடுகின்றன. அகப்புலமை சான்ற கபிலர் அகத்திணையியல்புக்கு முரணாகப் பாடினார் என்று பழிக்கலாமா? அல்லாது அகத்திணை தொடர்கதை இயல்பும் உடையது என்று மொழிந்து விடலாமா?

குறிஞ்சிப்பாட்டுக்கு யாதொரு துணையும் எழுதப்பட வில்லை என்பது எடுத்துக் காட்ட விரும்புகிறேன். "ஆரியவரசன் பிரகத்தனுக்கு தமிழறிவித்தற்குப் பாடியது" என்று மட்டுமே எழுதப்பட்டுள்ளது. தமிழ் மொழிக்குச் சிறந்தது அகத்திணை. அகத்திணையுள் களவியற் பகுதி வனப்புடையது ஆதலின் வேற்று மொழியாளனாகிய ஆரியவரசனுக்குக் களவியலைக் கற்பித்தாற் போதும் என்று கபிலர் கருதினார் போலும். களவிலக்கணத்தில் அறத்தொடு நிலை கடைசித் துறையாகும். அத்துறைமேல் எழுந்த பல பாடல்களில் முன்னிகழ்ச்சிகள் ஓரளவேனும் சொல்லப் பெறுதலைப் பார்க்கின்றோம். (கலி. 7, 36; அகம். 48) தோழி செவிலிக்கு ம்றைவைப் புலப்படுத்தும் போது தலைவிக்கு ஒருவனோடு உறவுற்ற காரணங்களைத் தொடர்பு படச் சொல்லும் கடப்பாடு உடையவள் அன்றோ? ஆதலின் குறிஞ்சிப் பாட்டில் களவுத்துறைகள் கோவையாகத் தோன்றுகின்றன. கற்பிக்கும் நோக்கொடு யாக்கப் பட்டமையின் களவு நிகழ்ச்சிகள் நிரல்படவும் கதைபடவும் அமைந்தன? வேறுவகையாகவும் ஆரிய மன்னனுக்குத் தமிழைக் கற்பித்திருக்கலாம். அதற்கு மிகுதியான பாடல்கள் வேண்டும். களவுத் துறைகளைப் பற்றிப் பற்பலர் எழுதியுள்ள செய்யுட்களைப் பொறுக்கிக் கொள்ளவேண்டும்.[1] ஒரு துறைக்கு ஒரு பாட்டாகப் பல பாட்டுக்களை வேற்றுமொழியனுக்குக் கற்பிக்கப்புகுவது ஏலாது என்ற ஆசிரியப் பயிற்சியினால், களவுத்துறை பலவும் அடங்கத்தாமே ஒரு பெரும் பாடல்

1. அகத்திணைப் பாகுபாடு என்னும் இரண்டாவது இயலின்கண் களவு கற்பு நிகழ்ச்சிகள் கோவையாகச் சொல்லப்பட்டுள, அங்ஙனம் சொல்லுங்கால், பலர் பாடிய தனிச் செய்யுட்களை மேற்கோளாகக் காட்டியுள்ளேன் என்பதை நினைவுகொள்மின். ஏன்? அகத்துறைகளையெல்லாம் அமைத்து ஒரு தனிப்பாட்டோ, தொடர்நிலைப் பாட்டுக்களோ ஒரு புலவர் பாடியதில்லை; அகத்திணை தொடுத்துப் பாடுவதற்கு உரிய இயற்கையுடையது இல்லை.

இயற்றிக்கொண்டார் கபிலர் என்று அறிய வேண்டும். இதனை உணர்த்துதற்கென்றே (தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது எனத்) துறை எழுதிற்றிலர் என்பது என் கருத்து. களவொழுக்கப்பகுதி பல வருதலின், குறிஞ்சிப்பாட்டு எனப் பொதுவாகப் பெயரிட்டனர். எவ்வாறாயினும் இந்நெடும் பாட்டு ஒரு துறையின் விளக்கம் என்பதும், தனி நிலையமைப்புக்கு முற்றும் முரணன்று என்பதும், கபிலர் பாட்டின் தொடக்கத்தைக் கொண்டு செல்லும் போக்கிலிருந்து தெளியலாம்.

அன்னாய் வாழிவேண் டன்னை ஒண்ணுதல்
ஒலிமென் கூந்தலென் தோழி மேனி
விறலிழை நெகிழ்த்த வீவருங் கடுநோய்
அகலுள் ஆங்கண் அறியுநர் வினாயும்
பரவியும் தொழுதும் விரவுமலர் தூயும்
வேறுபல் லுருவிற் கடவுட் பேணி
நறையும் விரையும் ஓச்சியும் அலவுற்று
எய்யா மையலை நீயும் வருந்துதி

மகளின் மேனி மெலிவைக் கண்டு தாய் வருந்துகின்றாள், பலரை உசாவுகின்றாள், வெறியாட்டு எடுக்கின்றாள், தெய்வம் பரவுகின்றாள். அன்னையின் அவல நிலையைப் பார்த்தும், தலைவியின் சுற்பு மேம்பாட்டை நினைத்தும், தோழி உள்ளது சொல்ல முன் வருகின்றாள் என்று அறத்தொடுநிலை என்னும் ஒரு துறையை முன்வைத்துப் பாடல் தொடுப்பர் கபிலர். இத் தொடுப்புமுறை தனிநிலை யியல்பைக் காட்டுங்காண்.

குறிஞ்சித்திறம்

கபிலர் மலை வாழ்க்கையர். அவர்தம் அரசத் தோழர்களான பாரி பேகன் செல்வக்கடுங்கோ மலைநாடுகளை ஆண்டவர்கள். குறிஞ்சித்திணையின் முதற்பொருள் கருப்பொருள் நுணுக்க மெல்லாம் நாள்தோறும் நடந்தும் கண்டும் துய்த்தும் பழகிய புலவராதலின், அகத்துறைக்கும் ஏற்ற சூழ்நிலைகளைப் புதிதுபுதிதாக அமைக்கும்திறம் அவருக்கு எளிதாயிற்று, குறமகளிர் உரையாடுங் கால் அவர்க்கேற்பக் குரவைப்பாட்டு வள்ளைப்பாட்டு என்ற நாட்டுப் பாடல்களைத் தொடுக்கும் யாப்பியலை அவர்பால் காண்கின்றோம் (கலி.39-48). நன்றிக் காட்டும் முகத்தால் புரவலர்களையும் வேந்தர்களையும் அகச்செய்யுட்களில் குறிப்பிடுவர் புலவர் சிலர். வேறு சிலர் அகம் பாடுவது என்ற பெயரால், ஏராளமான வரலாற்றுக் கருத்துக்களைக் கொட்டியிருக் கின்றனர். கபிலர் வரலாற்றறிஞர், மன்னர் பலரின் நட்பினர், அரசியலில் ஈடுபட்டவர் ஆக இருந்தும், அகத்திணையை அவ்வளவாகப் புறத்திணைக் குறிப்புக்குப் பயன் படுத்தவில்லை.

5.21.

எண்ணியாங்கு உவமைகள், புனைவுகள் உள்ளுறைகள், வனப்புக்கள் எல்லாம் செய்தற்கு ஒருதிணையறிவு அவர்க்கு மிக்கிருந்ததாதலின், புறம் நாடவில்லை. பத்துப்பாட்டில் முல்லைப்பாட்டு நெடுநல் வாடை பட்டினப்பாலை மூன்றும் அகப்பாட்டுக்கள். அவற்றில் புறப்பகுதிகள் கலந்துள. புறம் களவாது குறிஞ்சிப் பாட்டில் எல்லா அடிகளையும் அகமாக ஆக்கியுள்ளார் கபிலர். அவர் பெற்றிருந்த ஒருதிணை முழுப்பயிற்சியே இந்த நல்லாக்கத்திற்குக் காரணமாம்.

களவும் கற்பும்

கபிலரின் அகப்பாடல்கள் 197.

களவில்		கற்பில்		கைக்கிளையில்	
தோழிக்கு	124	தோழிக்கு	4	தலைவனுக்கு	3
தலைவிக்கு	41	தலைவிக்கு	6		
தலைவனுக்கு	16	தலைவனுக்கு	1		
நற்றாய்க்கு	1	பரத்தைக்கு	1		
	182		12		3

இப்பாகுபாட்டினால் கபிலர்தம் இலக்கியத்தில் தோழி தலைமை பெறுகின்றாள் என்று அறியலாம். அவர் யாத்த கற்பின் அகங்கள் பன்னிரண்டே என்றாலும், களவுப் பாடல்களிற் பல கற்புத்திணைப் போக்குடையனவாக உள. கற்பியலில் தலைவனது பிரிவுகளும் தலைவியது இரங்கல்களும் பெரிதும் இடம்பெறும். அவற்றைக் கபிலர் பாடாவிடினும் அவற்றுக்கு ஈடாக, ஒருவழித் தணத்தல், வரைவிடை வைத்துப் பொருள்வயிற்பிரிதல் என்ற இரு பிரிவுகளைக் களவியலிற் பாடுவர்.

வருவது கொல்லோ தானே வாராது
அவணுறை மேவலின் அமைவது கொல்லோ...
குன்றுகெழு நாடனொடு சென்றவென் நெஞ்சே (ஐங்.295)

வரைவுநாள் வைத்துப் பொருள்வயிற் பிரிந்த தலைவன் வரத் தாழ்த்தான். அதற்குக் கவன்ற களவுத்தலைவி தன் நெஞ்சை இழந்து கூறும் பாட்டு இது. அவனொடு சென்ற நெஞ்சம் வருமோ வாராதோ என்று காமம் மிக்க கழிபடர் நிலையில் புலம்புகின்றாள், தலைமகளின் வருத்தத்தைக் கண்டு ஒரு தோழி தான் மிக வருந்தினாள் கூட்டுவிப்பது மட்டும் அன்று, வரைவு முடித்து வைப்பது தன் கடன் என்று துயர்ப்பட்டாள். தோழியை ஆற்ற வேண்டிய ஒருநிலை மலைமகள் பாலதாயிற்று "தேறுவன்மன் யான்

அவருடைய நட்பே" (நற். 309). காலம் நீடினும் வரைவான்; அவன் நட்பில் எனக்கு உறுதியுண்டு எனத் தலைவி துணிவு கூறினாள் தோழிக்கு.

அம்ம வாழி தோழி நம்மலை
நறுந்தண் சிலம்பின் நாறுகுலைக் காந்தள்
கொங்குண் வண்டிற் பெயர்ந்து புறமாறினின்
வன்புடை விறற்கவின் கொண்ட
அன்பி லாளன் வந்தனன் இனியே (ஐங். 226)

பாடலைப் பார்த்தால் மருதத்திணைபோல் தோன்றவில்லையே? காந்தட்பூவில் தேனையுண்ட வண்டுபோல அன்புமாறிய தலைவன் என்று உவமை வருதலின், கற்பியலில் தலைவனது பரத்தமையைச் சுட்டுவதுபோல் படவில்லையா? எனினும் இஃது ஒரு களவுப்பாட்டு எனவும், வரைவிடை வைத்துப் பிரிந்த தலைவன் நாட்கடந்து வந்த போது தோழி தலைமகட்குக் கூறுவது எனவும் எழுதிய துறையால் அறியலாம். மேலை எடுத்துக்காட்டுக்களால் நாம் காணக்கிடக்கு ம் கபிலரின்திறம் யாது? (ஐங். 215, 223, 234, 235; கலி. 44, 53; குறுந். 38) ஆகிய அகப்பாடல்களையும் உடன் வைத்து ஓர்வோமாயின், பாலை நெய்தல் முதலான உரிப்பொருள் களைக் களவுத்துறையில் பாட வல்லவர் என்பதும், களவியலில் கற்பியல் உணர்ச்சிகளைக் காட்டவல்லவர் என்பது விளங்கும்.

பெண்களின் ஒண்மை

கபிலரின் அகப்பெண்கள் ஒட்பினர், துணிவினர். இளையோரின் காமக் கதிர்ப்பையும் அறிவொளியையும் கண்டு பிடித்துப் பாடும் ஆர்வந்தான் சங்கப்புலவருக்கு என்னே! என்னே!பழுத்த மொழிமையும் புலமையும் வயதும் உடைய ஒருவர் அவற்றையெல்லாம் களவுக் காமம் பாடுவதற்கு, சிறுமிகளின் காதற் குறும்பைப் புலப்படுத்துதற்குப் பயன்படுத்துவதை இடைக் காலத்தவரும் இன்றுள்ளவரும் ஒப்புவரோ? வீண் என்று கருதார்கொல்! சங்க காலம் இயற்கைக் காலம், இவ்வுலக வாழ்வை மதித்துப் போற்றிய இன்பக்காலம். ஆதலின் காதல் பாடுவதை வாழ்வு பாடுவதாகவும், காதற் பெண்களைப் பாடுவதை நல்ல இல்லறத்தாயார்களைப் பாடுவதாகவும் சங்கச் சான்றோர் கருதினர். கபிலர் யாத்த பாட்டுக்கள் 235. இவற்றுள் 38 புறத்திணையன; எஞ்சிய 197 பாடல்கள் அகத்திணையன. ஆறில் ஐந்து கூறு அகம் எனின், சங்கத்தின் இலக்கியப் போக்கு அகக் காதல் பாடுவதே என்று தெளியலாம்.

கார்காலத்தின் நள்ளிரவு. மழை பெய்து ஓய்ந்தது. அன்னை தூங்குகின்றாள். தந்தையும் அன்றிரவு வீட்டில் இருக்கின்றான். வீட்டின் விளக்கு நின்று விட்டது. மராமரத்திலிருந்து கோட்டான்

கத்துகின்றது. இவ்வமயம் தலைவன் தோட்டத்தில் வந்து நிற்கின்றான். தலைவிக்குப் புதுத்துணிபு பிறக்கின்றது. இருளுக்கு அஞ்சிலள், கோட்டான் குழுறலுக்கு வெருவிலள். முருகன் போலச் சீற்றம் கொள்ளும் தந்தை இருப்பதையும் பொருட்படுத்திலள், காதணி ஒளி காட்டிற்று. பின்னிய கூந்தலில் பூச்சூடிக் கொண்டாள். என்ன துணிச்சல்! ஏணி வழியாக ஏறிச் சென்று தோட்டத்தில் இறங்கித் தலைவனைக் கண்டு இன்புற்றுத் திரும்பி வந்து முன்போல் படுத்துக் கொண்டனள். தோழியைப் பார்த்து மறுநாள் அன்னை "மகள் ஏணிமேல் ஏறி இயங்கக் கண்டேனே" என்று கேட்கின்றாள், கொதிக்கின்றாள். தோழியின் விடைத் துணிவைக் கேளுங்கள்.

அலையல் வாழிவேண்டு அன்னைநம் படப்பைச்
சூருடைச் சிலம்பிற் சுடர்ப்பூ வேய்ந்து
தாம்வேண் டுருவின் அணங்குமார் வருமே
நனவின் வாயே போலத் துஞ்சுநர்க்
கனவாண்டு மருட்டலும் உண்டே....
முருகன் அன்ன சீற்றத்துக் கடுந்திறல்
எந்தையும் இல்லன் ஆக
அஞ்சுவள் அல்லளோ இவளிது செயலே. (அகம். 158)

பேய் நம்பிக்கையும் கனவு நம்பிக்கையும் தமிழ்ச் சமுதாயத்தில் காணப் படுபவை. ஆதலின் தெய்வம் வேண்டிய உருவத்தை மேற்கொண்டு யாண்டும் திரியும் என்பதை நீ அறியாயோ? நனவுபோலவே கனவு தோன்றும் என்பதை நீ காணாய்கொல்? என்று அன்னையை ஏமாற்றுகின்றாள் தோழி. 'அன்னையே, நினைத்துப்பார். தந்தை வீட்டில் இருக்குங்காலத்து இது செய்வாளா?' என்று மேலும் சான்று சொல்லுகின்றாள். தோழியின் விரைந்த சாதுரியத்தை இப்பாடலில் கற்கின்றோம்.

அன்னாய் இவனொருவன் செய்ததுகாண் என்றேனா
அன்னை அலறிப் படர்தரத் தன்னையான்
உண்ணுநீர் விக்கினான் என்றேனா (கலி. 51)

தலைவியின் வீட்டிற்கு வந்து தலைவன் தண்ணீர் கேட்டான். கொண்டுவந்து கொடுத்த கையைப் பிடித்துகொண்டதும் ஆ! அன்னை என்று தலைவி கத்திவிட்டாள். அன்னையும் பதறி வரவே, வேறொன்றும் இல்லை? குடிக்கும்போது இவனுக்கு நீர் விக்கிற்று என்று தலைவி சாதுரியமாக மொழிந்தாள். இங்ஙனம், தலைவியைக் காட்டிக் கொடுக்காது தோழியும், தலைவனைக் காட்டிக் கொடுக்காது தலைவியும், அன்னை முன் மறுமொழிகின்ற ஒள்ளியர்களாகக் கபிலர் புனைவர்.

இருவர்தம் நட்பு

களவியலை நெடிது இயக்குபவள் தோழி. களவு வரைவாக முடிதற்கு அவள் துணை வேண்டும். ஆதலின் கபிலர் பாட்டுக்களில் தோழி கொள்ளும் பங்கு பெரிது. 124 செய்யுட்கள் அவள் கூற்றாக உள்ளன. குறிஞ்சி நெடும் பாட்டும் தோழி கூற்றே.தலைவியின் வாழ்க்கையோடு முற்றும் ஒன்றியவளாகத் தோழி இயங்குகின்றாள். தலைவியின் ஓருயிரின் இரு தலையாகத் தலைவியையும் தன்னையும் கொள்கின்றாள். (அகம். 12).

விலங்கோரார் மெய்யோர்பின் இவள்வாழாள் இவளன்றிப்
புலம்புகழ் ஒருவ யானும் வாழேன் (கலி. 52)

களவினைப் பெற்றோர் தாமே அறிவாராயின், நாணத்தாலும் அச்சத் தாலும் தலைவி இறந்துபடுவாள்; அவள் இறப்பின், நான் வாழேன் என்று எடுத்துரைத்து, விரைவில் மணஞ்செய்து கொள்ளுமாறு தலைவனை முடுக்குகின்றாள்.

தோழியின்பால் தலைவிக்கும் அசையா அன்பு உண்டு. காமம் என்பது நல்ல தீய நுண்ணுணர்ச்சிகளுக்கு இடனாயது. ஐயம் போலத் தோன்றினாலும், எண்ணம் அறியாது வேறானாலும், சொல் பிசகினாலும், மெய் நிலைதிரிந்தாலும், இன்பம் குறைவுற்றாலும், காமம் காவியாமாக வளர்ந்து விடுவதை அறிவோம். அன்ன தீய போக்கிற்கு அகத்திணை வாய்ப்பளிக்காது. தோழி சொல்லும் எச் சொல்லையும் தலைவி நம்புவாள். குற்றமாகச் சொல்லினும் குணமாக எடுத்துக் கொள்வாள்.

ஊசலூர்ந் தாட ஒருஞான்று வந்தானை
ஐய சிறிதென்னை ஊக்கி எனக் கூறத்
தையால் நன்றென்று அவனூர்க்கக் கைநெகிழ்பு
பொய்யாக வீழ்ந்தேன் அவன்மார்பின் வாயாச்செத்து
ஒய்யென ஆங்கே எடுத்தனன் கொண்டான்மேல்
மெய்யறியா தேன்போற் கிடந்தேன்மன் (கலி. 37)

"ஒருநாள் தினைப்புனத்துத் தனியே நான் ஊசலாடும்போது அவன் வந்தான். ஊஞ்சலைத் சிறிது ஆட்டுக என்று கேட்டதற்கு இணங்கி ஆட்டினான். வேண்டுமென்றே அவன் மார்பில் வீழ்ந்தேன். உண்மையெனக் கருதி என்னை எடுத்தான். மயங்கியவள் போல அவன் மார்பிற் கிடந்தேன்" என்று தோழி தலைவிக்குக் கூறுங் கருத்து, எவ்வளவு கொடியது? கேடு பயப்பது? என்னாவது? எனினும் இது இட்டுக்கட்டிக் கூறுவது என்றே தலைவி எடுத்துக் கொள்வாள். தன் உள்ளோட்டத்தை அறிதற்குத் தோழி மேற்கொள்ளும் பொய்வாயில் என்றே எண்ணுவாள்.[1]

நற்றிணை : 25 பின்னத்தூரார் உரை விளக்கம்.

படைத்து மொழிவதாயினும்,தோழி கூறும் பொய்க் காதல் அகத்திணைக்கண் வரலாமா? அன்புடையோர் அன்புடையோரிடத்துக் கூறும் பொய் வரலாம் என்பது அகத்திணைச் சான்றோர் துணிபு. பொய் என்பதைத் தோழியும் அறிவாள்; கேட்கும் தலைவியும் உணர்வாள். ஒரு நற்பயன் நோக்கிக் கையாளும் மறைமுறை என்றே இருவரும் பொருள் கொள்வர்.

அறக்கழி வுடையன பொருட்பயம் படவரின்
வழக்கென வழங்கலும் பழித்தன் றென்ப (தொல். 1163)

அன்பினை அடிப்படையாகக் கொண்ட அகப்பொருளுக்குத் துணை செய்யுமாயின், உலகியல் அறங்களுக்கு மாறுபட்டனவும் இலக்கிய வழக்காக வரலாம், பிழையில்லை என்று இலக்கண செய்வர் தொல்காப்பியர். இவ்விலக்கணம் கவிதைக் கலையின் கிரேக்கப் பேராசிரியர் அரித்தாட்டலுக்கும் உடன்பாடே.[1] அகத்திணை இலக்கியத்தை மரபுநிலை திரியாமல் கற்பனைப் படுத்தலாம். வளர்க்கலாம். சுவைப்படுத்தலாம் என்பதற்குத் தொல் காப்பிய விதியும் கபிலரின் கலிப்பாட்டும் சான்றாகின்றன.

17. கயமனார்

இவர் பாடிய 22 அகங்களுள் 21 களவின் பாலன. அவற்றுள் 20 உடன்போக்குப் பற்றியன. அவற்றுள்ளும் 17 செவிலி அல்லது நற்றாய் கூற்றாவன. அகத்திணை தனிநிலையமைப்பு உடையது ஆதலின், மகளது உடன்போக்கு என்னும் ஒரு துறையில் பதினேழு தாயர்களின் மனப்பான்மைகளைக் கயமனார் காட்ட முயல்கின்றார். "உள் உறுப்புக்கள் வனப்புற்றன, குமரிப்பருவத்து நீ புறத்துப் போகலாமர்? என்று தான் இயல்பாகக் கூறினேன். தாய் தன் களவை அறிந்துவிட்டாளோ என அஞ்சிப் போகிவிட்டாள்." (அகம்.7) என்பது ஒரு தாயின் புலம்பல். பிரிந்த நாள்முதல் உறவுடைய எங்களையும் இல்லத்தையும் துறந்து புதியவனை நம்பிச் சுரத்தின்வழி செல்லத் துணிந்தாளே; இவள் அடிகள் பாலை நிலத்தில் பாவுமா? (அகம். 17) என்பது ஒரு தாயின் ஏக்கம். மெல்லிய மகளின் கூந்தற் கற்றையை ஒரு கையாற் பற்றிக் கொண்டு முதுகு அவளுக்கு இல்லை என்னும்படி மற்றொரு கையால் கோல்கொண்டு நொறுக்கினேன். என் கைகள் அன்னி என்பான் வெட்டிய புன்னைமரம் போலத் தொலைந்தொழிக. (அகம். 145) என்பது ஒரு தாயின் தற்சாபம். இங்ஙனமாகப் பல்வேறு தாய் உள்ளங்களைப் புலப்படுத்துவர் கயமனார்.

---

1. Aristotle : On the Art of Poetry. p 87.
"As to the criticisms relating to the poet's art itself. Any impossibilities there may be in his descriptions of things are faults. But from another point of view they are justifiable if they serve the end of poetry itself, if they make the effect of some portion of the work more astounding."

உடன்போக்கு பாலைநிலத்திலும் பிற நிலங்களிலும் நிகழலாம், கோடைக் காலத்திலும் இளவேனில் முதலான பிறகாலங்களிலும் நிகழலாம் எனவும், பிரிக்கப்படுவோமோ என்றஅச்சமே உடன் போக்கு பாலைத்திணையாதற்குக் காரணம் எனவும் முன்னர் விளங்கிக் கொண்டோம். பிற நிலங்களிலும் பிற பருவங்களிலும் வைத்துப் பாடலாமாயினும், கோடைக் காலத்துப் பாலைவழி உடன்போக்காகவே கயமனார் பெரிதும் பாடல் யாப்பார். அப்போது தானே தாயின் அவலத்தை உருக்கமாகப் பாட முடியும். தாழ்வின் வருத்தம் முன் துய்த்த வாழ்வின் வளத்தைப் பொறுத்தது. துன்பத்தின் ஆழம் முன் நுகர்ந்த இன்பத்தின் அகற்சியைச் சார்ந்தது.

நிழலான் றவிந்த நீரில் ஆரிடைக்
கழலோன் காப்பக் கடுகுபு போகி
அறுசுனை மருங்கின் மறுகுபு வெந்த
வெவ்வம் கலுழி தவ்வெனக் குடிக்கிய
யாங்குவல் லுநள்கொல் தானே ஏந்திய
செம்பொற் புனைகலத் தம்பொரிக் கலந்த
பாலும் பலவென உண்ணாள்
கோலமை குறுந்தொடித் தளிரன் னோளே (குறுந். 356)

பொற்கலத்தில் மாக்கலந்த பாலைக் குடிக்க மறுத்த செல்வமகள் நிழலும் நீரும் இல்லாத சுரவழியில் உலர்ந்த வற்றிய சேற்றுக் கலங்கலை எப்படிக் குடிப்பாள் எனச் செவிலித்தாய் முன்னை நிலையோடு ஒப்பிட்டுப் பெருந்துயர் அடைவதைக் கருதுக. இரு வேறு நிலைகளை எல்லையளவு புனையும்போதுதான் உணர்ச்சிகள் ஓங்கி எழும். ஆதலின் தாயின் ஆற்றாமையைக் காட்டவேண்டி, மகளின் செல்வவாழ்வையும், செல்லும் வழியின் கொடுமையையும் இணைத்துக் கயமனார் பல பாடல்களில் புனைவர்.

கமஞ்சூற் பெருநிறை தயங்க முகந்துகொண்டு
ஆய்மடக் கண்ணள் தாய்முகம் நோக்கிப்
பெய்சிலம் பொலிப்ப பெயர்வனள் வைகலும்
ஆரநீர் ஊட்டிப் புறப்போர்
யார்மற்றுப் பெறுகுவை அளியை நீயே (அகம். 383)

என்பது அவலம் சிறந்த பாட்டு. மக்கள் வளர்த்த வயலைக் கொடியைக் காணுங்கால், இப்போது நீர் ஊற்றப் பெறாது அது வாடுங்கால், தாய் சொல்லும் உருக்கச் சொற்கள் இவை. புரப்பவள் போய் விட்டாள்; இனி உனக்கு நீர் ஊட்டுவார் யார்? நாங்கள் எல்லோரும் எங்களை புரக்க மாட்டாது கவல்கின்றோம். இனி உனக்கு வாடுதல் தவிர வளர்ச்சியில்லை என்று, கேளாத கொடியைக் கேட்கும் எனக்கொண்டு அன்னை புலம்பும் மயக்கச் சொற்கள் யாருள்ளத்தையும் அவலப்படுத்தும்.

உடன்போக்குப் பாட்டல்கள் தலைவியின் கற்புத்திண்மையையும், தாயின் அன்பு மென்மையையும்,அம்மென்மையிற் பிறந்த வெகுளியையும் காட்டுகின்றன. தாயின் வெகுளி தலைவன் மேலும் தலைவனின் தாய்மேலும் பாய்கின்றது. பிறந்த நாள் முதல் பெருகிய மகளின் அன்பை ஒருநாட்காதலால் மாற்றி விட்டானே என்று தாய் துடிக்கின்றாள். நொது மலாளன், அறனிலாளன், ஏதிலாளன் என்று தலைவனை இகழ்வாக மொழிகின்றாள். என் மகளுக்கு எங்களைப் பிரிந்து உடன்போகும் துணிவு வாராது; அத் துணிவை ஊட்டியவன் அவன் என்று வெதும்புகின்றாள்.

பெருவிதுப் புறுக மாதோ எம்மிற்
பொம்மல் ஓதியைத் தன்மொழிக் கொளீஇக்
கொண்டுடன் போக வலித்த
வன்கட் காளையை ஈன்ற தாயே (நற். 293)

அத்தகைய கொடிய மகள் ஒருத்தி பெற்றாளே, அவள் அவனைப் பெற்றிரா விட்டால், அவன் பிறந்து வளர்ந்து காளையாகி என் மகளைக் கொண்டு போயிருக்க முடியாதே; எனக்கும் அவலம் இராதே என்று தலைவனின் தாயைப் பழிக்கின்றாள். மகளை இழ்ந்த ஒரு தாயுள்ளம் எங்ஙனம் எண்ணும், எங்ஙனம் வளைத்துப் பேசும் என்பதற்குக் கயமனார் பாட்டுக்கள் நல்ல காட்டுக்கள்.

கயமனார் பாடிய புறப்பாட்டு (254) ஒன்று உண்டு. அதுவும் உடன்போக்கொடு தொடர்பு உடையது. இவ்வுடன் போக்கு களவில் நிகழ்ந்ததன்று. திருமணமாகிய கற்பியல் வாழ்விலும் உடன் போகுதல் உண்டன்றோ; அதனைக்குறிப்பது என்று இப்பாட்டுக் கொள்ளக் கிடக்கின்றது. கணவனும் மனைவியும் பாலைவழியிற் சென்று கொண்டிருக்கையில் கணவன் இயல்பாக மாண்டுவிட்டான். மாண்டான் என்று அறியாது பேதை மனைவி எழுப்பிப் பார்த்தாள். பின்னரே, இறந்தான் என்பதை உணர்ந்தாள். "நின்னை இங்கே மாள விட்டு யான் தனித்து எப்படி ஊர் செல்வேன்? நின் இறப்பை நின் தாய் முன் எப்படி உணர்த்துவேன். உணர்த்தினால் அவளும் இறப்பாள் அன்றோ?" எனப் பன்னிப் பன்னிப் புலம்புகின்றாள் மனைவி.

இளையரும் முதியரும் வேறுபுலம் படர
எடுப்ப எழாஅய் மார்பமண் புல்ல
இடைச்சுரத் திறுத்த மள்ள -
ஆனாது புகழும் அன்னை
யாங்கா குவள்கொல் அளியள் தானே

இடைச் சுரத்தில் இறுத்தான் என்று வருதலின், உடன் போக்கில் நிகழ்ந்த இறப்பு என்பதும், தலைமகனின் அன்னையைக் குறித்தலின், கற்பில் நிகழ்ந்த உடன்போக்கு என்பதும், வாழ்வைக் குறியாது

சாவைக் குறித்தலின் அகமாகாது பாலையாகாது புறமாய் முதுபாலையாயிற்று என்பதும் அறியப்படும். மெய்யாகவே நடந்த ஓர் அவல நிகழ்ச்சியைப் பாடினார் என்று கருதும்படி இப்புறப் பாட்டு நடைப்படுகின்றது. அகத்தும் புறத்தும் உடன் போதலைப் பற்றிப் பாடல்கள் யாத்த இப்புலவரை உடன் போக்குப் பாடிய கயமனார் என்று அழைப்போமாக.

18. கல்லாடனார்

இவர் 9 அகப்பாட்டுக்களின் ஆசிரியர். அவற்றுள் 8 கற்பிற் பாலைத்திணையன. வரலாற்றுக் குறிப்புக்களை நிறைய இடை மடுத்து அகம் பாடும் போக்குடையவர் கல்லாடனார். அக நானூற்றுப் பாட்டொன்றில் (209) பாண்டியன் செழியன், வேங்கடத்தின் புல்லி, முள்ளூர்க்காரி, ஓரி, சேரலர் ஆகியோர் வந்துள்ளனர். பிற பாடல்களில் அஃதை,கோசர், நன்னன், களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் இடம் பெற்றுள்ளனர். நெடுஞ்செழியனது ஆலங்கானத்துப் போரைப் புறநானூற்றில் விரிவாகப் பாடிய கல்லாடனார், அகநானூற்றிலும் அப்போர் ஆரவாரத்தை அலருக்கு உவமையாகக் கூறுவர் என்பது நினையத்தகும்.

பிரிவுபாடும் கல்லாடனார் பிரிந்திருக்கும் கணவனும் மனைவியும் ஒருவர் பண்பை ஒருவர் நினைத்து அமைவர் என்று புனையக் காண்கின்றோம். இடைச்சுரத்துச் செல்லும் தலைமகன் நெய்தல் மலரன்ன கண்வனப்புப் பெற்ற காதலியின் குணங்கள், அன்போடு வந்து இங்கும் தோன்றுகின்றனவே என ஆர்வம் கொள்ளுவன் (அகம். 83) அவர் பண்பை நாளும் நினைந்து உருகுவேன் என்கின்றாள் மனைவி (அகம். 171)

ஓங்கிய நல்லில் ஒருசிறை நிலைஇப்
பாங்கர் பல்லி படுதொறும் பரவிக்
கன்றுபுகு மாலை நின்றோள் எய்திக்
கைகவியாச் சென்று கண்புதையாக் குறுகிப்
பிடிக்கை யன்ன பின்னகம் தீண்டித்
தொடிக்கை தைவரத் தோய்ந்தன்று கொல்லோ
நாணொடு மிடைந்த கற்பின் வாணுதல்
அந்தீங் கிளவிக் குறுமகள்
மென்றோள் பெறநசைஇச் சென்றவென் நெஞ்சே (அகம். 9)

இல்லறத் தலைமக்களுக்கு எடுத்துக்காட்டாகும் பாட்டு இது. கணவன் பிரிந்தகாலத்து மனைவி பொறுமையோடு கடன் ஆற்றுகின்றாள். நாண் கடவாத அழகிய கற்பினள் என்று கணவனும் மனைவியை உணர்கின்றான். அவள் குணங்கள் அவனைக்

காட்டிலும் அவன் நெஞ்சை ஈர்க்கின்றன. நெஞ்சம் அவனினும் முந்தி அவளை அணையப் புறப்பட்டுவிட்டது என்று காதலனது ஆர்வத்தைப் புனைவர் கல்லாடனார்.

19. கழார்க்கீரன் எயிற்றியார்

சங்கத்தின் இருபத்து மூன்று அகப்பெண் புலவர்களுள் ஒருவர் எயிற்றியார். கழார்க்கீரன் என்ற ஆண்பால் அடைப்பெயர் எவ்வுறவினரைக் குறிக்குமோ அறியோம். இவர் இயற்றிய அகப்பாட்டுக்கள் எட்டு. ஏழு கற்பிற்கு உரியவை. பாலைத்திணை பாடுவதில் புதுக்கூர்மையுடையவர் எயிற்றியார். பொதுவாகப் பாலைப்பொருள் பாடும் புலவர்கள் கோடைக்காலமும் பாலைச்சுரமும் பற்றிப் புனைவர்; நீரும் நிழலும் இல்லாத வழியில் தலைவன் செல்லுவதை நினைந்து தலைவி பெருந்தயர் உறுவதாகக் காட்டுவர். அத்தனைய பொதுப்போக்கு இப்புலவர் பால் இல்லை. பாலைப்புனைவுக்கு இவர் மேற்கொண்டவை மருதநிலமும் வாடைக்காலமும் ஆம். இவர் பாட்டுக்கள் உரிப்பொருளாற் பாலையேயன்றி முதல் கருப் பொருள்களால் அல்ல. தலைவன் செல்லும் வழியைப் பாடாது தலைவியது தனிமையுணர்ச்சியையே பாடுவர். பச்சென்ற இயற்கைச் செழிப்பும் வாடைக் குளிரும் முன்பனியும் அவளை வருத்துகின்றன.

நாணில மன்றவெங் கண்ணே நாள்நேர்பு
கினைப்பசும் பாம்பின் சூழ்முதிர்ப் பன்ன
கனைத்த கரும்பின் கூம்புபொதி யவிழ
நுண்ணுறை அழிதுளி தலைஇய
தண்வரல் வாடையும் பிரிந்திசினோர்க் கழலே (குறுந். 35)

பசுங்கரும்பின் காட்சியும், வாடைச்சாரலும், தலைவியின் கண்களை அழச்செய்கின்றன. காலத்திற்கு நெஞ்சிழக்கும் பதத்தவளாகத் தலைமகளைப் பாடுவர் எயிற்றியார். தாம் யாத்த எட்டுப் பாடல்களிலும் (கற்பு 7; களவு 1) தலைவிமேல் காலத்தின் தாக்குதலைச் சுட்டிக்காட்டுவர். கால வயப்பட்டாள் மனைவி என்பதனைக் கண்வனும் உணர்ந்திருக்கிறான்.

கோடைத் திங்களும் பனிப்போள்
வாடைப் பெரும்பனிக் கென்னள்கொல் (நற். 312)

உடனிருக்கும்போது கோடைக் காலத்திலும் குளிரென நடுங்கும் என் காதலி, குளிர்மிக்க வாடைக்காலத்தே நான் பிரிந்துபோய் விட்டால் என்னாவாள்? என்று நினைக்கின்றான்; பொருள் விரும்பும் நெஞ்சினைக் கழறுகின்றான்.

எயிற்றியார்தம் ஏழு செய்யுட்களுக்கு (கற்பு6; களவு 1) கூற்றாவாள் தலைவி. "ஆனால் எறிதரும் (வாடையொடு நோனேன் தோழி என் தனிமை யானே" (அகம். 294) என்று காலத்தை எதிர்க்கமாட்டாத தன் நிலையை உணர்ந்து தோழிக்கும் உணர்த்துகின்றாள். குன்றையும் குலுக்கும் அவ்வாடை எனக்கேதான் வந்ததோ? அவர் இருக்கும் இடத்திற்கும் இக்கொடுமையோடு செல்லாதோ? என்று வினவும்போது (அகம். 163) அவளது ஆற்றாமையை நாமும் உணர்கிறோம்.

காதலர்ப் பிரிந்த கையறு மகளிர்
நீர்வார் கண்ணிற் கருவிளை மலர (அகம். 294)

கூதிர்க்காலத்துக் கருவிளைப்பூ மலருகின்றது. மழைத்துளியை ஏற்று அம்மலர் இடையறாது நீரை வடிக்கின்றது. காதலரைப் பிரிந்திருக்கும் மகளிர் அழுது நீர்வடிக்கும் கண்போல என்று வாடைக்கு வருந்தும் தலைமகள் கூறினாள் என்றால், தன்னை இலக்கியமாக வைத்துத்தான் அவ்வுவமை கூறுகின்றாள் என்பதை நாம் கண்டுகொள்கின்றோம். எயிற்றியாரை வாடை பாடிய புலவர் என்று போற்றுகின்றோம்.

20. காவல்முல்லைப் பூதனார்

இவர் முற்றும் பாலைப்புலவர். இயற்றிய அகப்பாக்கள் எட்டும் கற்பியலிற் பாலைத்திணையாவன. நீர்வறட்சி, பேய்த்தேர், விலங்குகளின் உயக்கம், நிலத்தின் வெருவரு தோற்றம் ஆய பாலையியல்புகளை வழக்கம்போல் பாடியுள்ளார் பூதனார். பாலை நிலத்துப் பல இன்மைகளில் நீரின்மையை மட்டும் தனித்துச் சுட்டி இலக்கிய வளம்படப் புனைந்துள்ளனர்.

பூதனாரின் அகத்திணைத் தலைவி தானே ஆறுதலடைபவள், ஆற்றப்படத்தக்கவளாக விளங்குகின்றாள். தலைவன் சென்ற வழி புலி வழங்கும் இடமாயிற்றே எனத் தலைவி கவலும்போது, இல்லை என்று ஆற்றுவளே தோழி. "நீயும் உடன் வருவதாயின் வருக. செல்லும் சுரநெறியில் வானம் மின்னும்,மேகம் துளிர்த்துப் பெருமழை பெய்யும், மகளிர் அணியும் பொன்னணிகள் போலக் குமிழம் பூக்கள் மெத்தென வீழ்ந்து கிடக்கும்." என்று தலைவன் இனிதாக மொழிந்த பழஞ்சொற்களை (நற். 274) நினைவுபடுத்தவே தலைவி ஆறுதல்படுகின்றாள். தலைவன் தன்னைப் பிரிதற்குக் காரணம் கடமையுணர்வு; தாங்க வேண்டுவோரைத் தாங்கி உற்றார்க்கு உதவும் அருளுள்ளம் எனத் தானே நினைந்து (அகம். 151.)ஆறுகின்றாள். தலைவன் அகன்ற பின்னர் ஒருவாறு தலைவி ஆற்றியிருந்தாலும், அவன் புறப்படுமுன்னர் பாலை வழியாயிற்றே என மிகவும் பேதுறுகின்றனள்; பலவாறு புலம்புகின்றாள். அன்பற்ற இடையர்கள் தாயினின்றும் பிரித்து வைத்த கன்றுபோலத் தலைவனோடு என்றும் உடனுறைய அவாவுகின்றாள்:-

பண்பில் கோவலர் தாய்பிரித்து யாத்த
நெஞ்சமர் குழவி போல நொந்துநொந்து
இன்னா மொழிதும் என்ப (அகம். 293)

மூன்றாம் பதின்மர்

21. குடவாயில் கீரத்தனார்

இப்புலவர் களவில் ஐந்தும் கற்பில் பன்னிரண்டும் ஆக 17 அகச் செய்யுட்களின் ஆசிரியர். பாலையே இவர் மிகுதியும் பாடிய உரிப்பொருள். எட்டுப் பாடல்களில் உவமையாகவோ புனைவாகவோ வரலாறுகள் இடம் பெறக் காணுதும். தன் ஊராகிய குடவாயிலைத் தலைவிக்கும், தன் ஊர் அகழியிற் பூத்த நீலமலர்களை அவளது கண்ணுக்கும் உவமங்கள் செய்வர்.

கீரத்தனாரின் அகத்தாய் மகளை இற்செறிக்கும் மனப் பான்மையினள். குமரிமையுள்ள நாள் முதல் கூர்ந்து நோக்கி வருபவள். நேற்றுக்கூட அவள் செயலை ஐயப்பட்டேன்; அறியாமை யினால் வீட்டில் அடையாது விட்டுவிட்டேன் (அகம். 315) என்பது ஒரு தாயின் கவலை. நாள்தோறும் நெய்தற் பூவைப் பறித்து வரும்படி அன்னை ஏவுதலுண்டு. சிறிது ஐயம் தோன்றியபின், பூக்கொய்ய ஏவவில்லையாம் (நற். 27)

திண்டேர்ப் பொறையன் தொண்டி யன்னவெம்
ஒண்டொடி ஞெமுக்கா தீமோ (அகம். 90)

புணர்ச்சியில் என் கைவளையலை அழுந்த அமுக்காதே. அமுக்கின் கையில் தழும்பு படும். காரணமின்றியும் சினக்கும் என் அன்னை' கைத்தழும்பு கண்டால் அரியகாவல் புரிவாள்' என்ற தோழியின் கூற்றால், கீரத்தனார் புனையும் தாய்ப் பண்பினை அறியலாம்.

உடன் போக்குகள்

தலைவியர் களவிலும் கற்பிலும் உடன்போக்கை நாடுபவர்களாகப் புலவரின் பல பாடல்கள் காட்டுகின்றன. தலைவர்களும் அத்தகைய துணைப்போக்கினை ஒருவாறு உடன்படக் காண்கின்றோம். உடன் கொண்டு செல்வதாக ஆசைகாட்டி ஏய்த்த சில தலைவர்களும்உளர். சின்னாள் கழியட்டும்; செல்லும் வழி மழை பெய்து குளிரட்டும் என்று விழைவுகாட்டிப் பொய்த்தாலும் அவர் போகும்நெறி காடு தழைத்து இனிதாகுக என்பது (அகம். 345) ஏமாறிய ஒரு தலைவியின் வாழ்த்து. உடனழைத்துச் செல்வதற்கு ஒருப்பட்டான். ("செல்வாம் தோழி நல்கினர் நமரே" (குறுந். 369) என்பது ஒரு தோழியின் உண்மைச்

செய்தி. இங்ஙனம் கற்பியலில் உடன் போக்கிற்குத் தலைவர்கள் இசைந்தார்கள் என்று பாடுவதைக் கற்கின்றோமேயன்றி, இருவர்தம் உடன் போக்கையும் நேர்படக் கூறிப் புனைந்த பாடல் சங்க விலக்கியத்தில் இல்லை காண்.

உயர்கரைக் கான்யாற் றவிரறல் அகன்துறை
வேனிற் பாதிரி விரிமலர் குவைஇத்
தொடலை தைஇய மடவரல் மகளே .
கண்ணினும் கதவநின் முலையே
முலையினும் கதவநின் தடமென் தோளே *(ஐங். 361)*

என்பது ஓதலாந்தையார் பாட்டு. களவில் உடன்போகும் தலைமகன் தலைவி பூத்தொடுப்பதைப் பார்த்துப் புகழ்கின்றான். புகழ்ச்சிக்கு நாணி அவள் கண்ணைப் பொத்திக் கொண்டனள். நின் கண்ணினும் எனக்குக் காதல் வெம்மையை விளைப்பன நின் கொங்கைகளே என்று மேலும் பாராட்டினான். அவற்றையும் அவள் மறைத்துக் கொள்ளவே மறைக்க இயலாத் தோளழகை வியந்தான். இங்ஙனம் களவின் உடன்போக்கைக் குறித்த நேர்முகச் செய்யுட்கள் உள; கண்டார் கூற்றுக்களும் உள. "புணைர்ந்துடன்போகிய கிழவோள்" (1093) என்று இக்களவுச் செலவைத் தொல் காப்பியரும் சுட்டுவர்.

மணமனை கமழும் கானம்
துணையீர் ஓதியென் தோழியும் வருமே *(அகம். 107)*

குவளை யுண்கண் இவளும் நம்மொடு
வருஉம் என்றனரே காதலர்
வாராய் தோழி முயங்குகம் பலவே *(அகம். 285)*

அருஞ்சுரம் அரியவல்ல...
குவளை யுண்கண் இவளொடு செலற்கென
நெஞ்சுவாய் அவிழ்ந்தனர் காதலர் *(அகம். 129)*

முதலிரண்டும் காரிக் கண்ணனார் செய்யுட் பகுதிகள். மூன்றாவது கீரத்தனாரின் அடிகள். கற்பொழுக்கத்தில் மனைவி உடன்போக விரும்பினாள், தோழி தலைவனுக்கு அறிவித்தாள், நல்லது இனியது என்று அவனும் அழைத்தேகுவதாகச் சொல்லினான் என்று பல பாடல்கள் உள. சொல்லிய வண்ணம் செய்யாது சென்றுவிட்டான் என்றும், உடன் கொண்டு சென்றிருப்பின் என்ன உவப்பு அவனுக்கு இருக்கும் என்றும் தலைவி இல்லிலிருந்து இரங்கும் ஏக்கப் பாடல்களும் உள (குறுந். 79; அகம். 11) இடைச்சுரத்துச் செல்லும் தலைவன் அவளைக் கூட்டிக்கொண்டு வந்திருக்கலாமே என்றோ, வராதிருந்தது நல்லதாயிற்று என்றோ எண்ணிய பாடல்களும் உள (அகம். 79; குறுந். 56) இவ்வகையன்றிக் கற்பில் உடன்போக்கு நிகழ்ந்ததாகச் செயல்மேல் வைத்து யாரும் பாடியிருப்பக் காணோம்.

ஏன் பாடவில்லை? காதலர்களுக்குக் களவில் கடமை யாதும் இல்லை. வரைவு நிகழ்ந்து இல்லறத்தார் ஆவதே அன்னவர்தம் சமுதாயக் கடன் ஆதலின் களவுக் காதலர்தம் உடன்போக்கு பாலையாகும்; கற்பு நோக்கு இன்றிமையாததாகும். இல்லறக் காதலர்க்குக் கடமைகள் பலவுள. அவற்றைத் தலைவி இல்லில் இருந்து ஆற்ற வேண்டும். அதற்குத் தலைவன் புறம்போய் வினைசெய்து பொருளீட்ட வேண்டும். இல்லறத்தார் உடன்போக்கு புறம் போக்காய்க் கடன் போக்காய் விடும். அங்ஙனம் உடன் போகின் அது குறிஞ்சியாவதல்லது பாலை யாகாது. பிரிவுணர்ச்சியின்மையின், உடன்போய் ஊரில் தங்கிக் குடியிருந்து இல்லறம் நடத்திக் கொண்டிருப்பின், அதுவே இல்லமாய் விடுதலின், உடன்போக்கு என்றபேச்சிற்கு இடமில்லை. ஆதலின் சுற்புத் தலைவி உடன்போயதாக அகப்புலவர் எவரும் பாட்டுத் தொடுக்கவில்லை. அகத்திணையின் இயல்பு நோக்கின், அங்ஙனம் தொடுக்க வேண்டியதும் இல்லை.

22. குன்றியனார்

இப்புலவர் பாடிய பத்தும் அகமே. முல்லைத்திணை நீங்கிய எல்லாத் திணைகளிலும் இவர் பாடல்கள் உள. களவுப் பாடல்கள் ஆறும் வரைவை நோக்கியன. பொருளுக்கும் ஏற்ற காலப் புனைவு செய்வதில் வல்லவர் குன்றியனார்.

தலைவன் களவை நீட்டிக்க விழைபவன், விரைந்து மணக்கும் முயற்சியை எண்ணாதவன். தலைவியும் தோழியுமோ மாறான கருத்தினர். இரவுக்குறி வருகை எதிரிகளுக்கு உவகையாகும் (குறுந். 336) என்று குறிப்பிற் புலப்படுத்துகின்றாள் தோழி. தலைவன் உயிர்க்கு ஏதும் ஊறு ஏற்பட்டால், அலர் தூற்றும் ஊரார்க்குக் கொண்டாட்டமாகும் என்பது அவள் குறிப்பு.

யானும் காதலென் யாயும்நனி வெய்யள்
எந்தையும் கொடீஇயர் வேண்டும்
அம்பல் ஊரும் அவனொடு மொழிமே (குறுந். 51)

தலைவியை அவனுக்கே வரிந்து கொடுக்க இயைபுடையார் எல்லாரும் உடன்படும்போது, அவன் வரைவு நீட்டிக்க வேண்டியதில்லை என் தோழி மொழிவது காண்க.

வரைவு நீளுதலால் தலைவியின் மேனி மெலிகின்றது, கைவளைகள் சேர்கின்றன, இதனைத் தாய் அறிந்தாள் என்னாகும் எனத் தலைவி அஞ்சுவள். முருகனால் வந்த நோய் என்று கூறுவதைப் பண்பு அன்று எனவும், பழி எனவும் கருதுவாள், தோழி ஒட்பம் உடையவளாதலின்.

துறைவன் வாரா தமையினும் அமைக
சிறியவும் உளஈண்டு விலைஞர்கை வளையே (குறுந். 117)

தலைவன் மணக்க வாராவிட்டால் என்ன? அன்னைக்குக் கைம்மெலிவை மறைக்க ஒரு வழி உண்டு. பெரிய வளையல் அணிந்து கொண்டாற்றானே நெகிழ்ச்சி புலனாகும். நாள் தோறும் மெலியும் கைக்குப் பொருத்தமாக உள்ளூர் வளையற்காரர் வளையல் வைத்துள்ளார், மாற்றிக் கொள்ளலாம் என்று தலைவிக்குக் கூறுவதுபோலத் தலைவனை இடித்துரைக்கின்றாள்.

23. நக்கீரர்

சங்கச் சான்றோர்களுள் நாடறிந்த புலவர் நக்கீரர். அஞ்சாத் தனியுணர்வு உடையவர் என்பதும்,திருமுருகாற்றுப்படையின் ஆசிரியர் என்பதும் இவர் புகழ்ப்பரவலுக்குக் காணரங்களாம். கபில பரண நக்கீரர் என ஒன்றாக எண்ணப்பட்டாலும், அகவிலக்கியப் புலமையில் கபிலருக்கு ஏனை இருவரும் நிகராகார் என்பது வெளிப்படை. ஏன்? பரணரும் நக்கீரரும் வரலாற்று நெஞ்சினர். இலக்கியத்தோடு வரலாற்றை மடுப்பவர். நக்கீரரின் 17 அகநானூற்றுச் செய்யுட்கள் 15 மூவேந்தர்களையும் குறுநில மன்னர்களையும் நுதலுகின்றன. 78ஆவது; அகநானூற்றுச் செய்யுட்கண், வேந்தர்கள் பாரியொடு பொருது பொருளாதார முற்றுகையிட்ட ஞான்று, கபிலர் நெற்கதிர் கொண்டுவந்து வெற்றிதந்த அரிய நிகழ்வைக் குறிப்பிடுவர் நக்கீரர். அதன்பின், அத்தகைய வாகைப் பாரியின் பைஞ்சுனையிற் பூத்த புதுமலரைக் காட்டிலும் தலைவியின் நுதல் மணமும் ஒளியும் மிக்கது என்று உவமையாக முடிப்பர். 93 ஆவது அகப்பாட்டில், சோழரது நல்லவை திகழும் உறந்தையையும், பாண்டியரது கூடலின் நாளங்காடியையும், சேரரது ஆன்பொருநை யாற்றையும் ஆக மூவேந்தரையும் நினைந்து அகப்பொருட் கருத்துக்களுக்கு உவமைப்படுத்துவர்.

நெடுநல்வாடை அகப்பாட்டே

புலவரின் நெடுநலவாடை அரண்மனைக்கண் அரசியும் பாசறைக்கண் அரசனும் நள்ளிரவில் வாடைக் காற்றினால் உறும் மனநிலைகளை எடுத்துக்காட்டும். நப்பூதனாரின் முல்லைப்பாட்டு, உருத்திரங் கண்ணனாரின் பட்டினப்பாலை போல, நக்கீரரின் நெடுநல்வாடையும் புறத்திணைக் கூறும்மிக்குடையதாக அமைந்துள்ளது. அக்கூறு மிக்கிருந்தாலும், நெடுநல்வாடை யாதும் குறைவற்ற அகப்பாட்டேயாம் என்பது என் துணிபு. "வேம்பு தலையாத்தநோன்காழ் எஃகம்" (வேப்பமாலை நுனியிலே கட்டப்பட்ட வேல்) என்பது இப்பாட்டில் வரும் (176) ஓரடி. அகத்திணையின் தலையாய இலக்கணமாவது பெயர்

சுட்டப்படாமை. வேம்பு பாண்டியனுக்கு உரிய அடையாளப்பூ ஆதலின், ஓராற்றால் பாண்டியனைச் சுட்டியதாகக் கொண்டு நக்கீரரின் பாட்டினை அகம் அன்று என்பர் உரையாசிரியர் நச்சினார்க்கினியர். உரையாசிரியர் கருத்து ஒப்பது என்று வழிவழிப்போற்றியும் கற்பித்தும் விளக்கியும் வருகின்றோம். சிறிது சிந்தனைப்புரட்சி செய்து நூலாசிரியன் கருத்து இது தானா என்று காணலாம்.

வரலாற்றால் வந்த பிழை

நெடுநல்வாடை என்பது பாட்டின் பெயர். பெயரே தூய அகப்பொருள் மணம் கமழவில்லையா? முல்லைப்பாட்டு, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப்பாலை என்ற பெயரீடுகளோடு ஒத்திருத்தலை உன்னுக. பாண்டியன் நெடுஞ்செழியனையும் அவன்கோப்பெருந் தேவியையும் மதுரை அரண்மனையையும் அதனொடு போரிட்ட எதிரிகள் எழுவரையும் ஆலங்கானத்துப் பாசறையையும் நினைவில் வைத்துக்கொண்டுதான் நக்கீரர் இப்பாட்டு வரைந்தார் என்பது உண்மை.

> கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழியன்
> ஆலங் கானத் தகன்தலை சிவப்ப..
> எழுவர் நல்வலம் அடங்க ஒருபகல்
> கொன்று களம் வேட்ட ஞான்றை (அகம். 36)

என்று நக்கீரனாரே பாடியிருக்கும் வரலாற்றுக் குறிப்பையும், பிறர் செழியனைச் சொல்லிய குறிப்புக்களையும் கற்ற நமக்கு அக்கருத்து பாண்டியன் செழியனை உட்கொண்டே நெடுநல் வாடை இயற்றினார் என்ற தொடர்பு தோன்றுவது உண்மை எனினும் அகவிலக்கியமாக ஆசிரியர் பாட விரும்பினார். அவ்விருப்பத்தால் பாட்டுப் பிறந்தது என்ற படைப்புள்ளத்தை நாம் நினையவேண்டும்.

> நளிமலைச் சிலம்பிற் சிலம்பும் கோயில் (100)
> பீடுகெழு சிறப்பிற் பெருந்தகை யல்லது
> ஆடவர் குறுகா அருங்கடி வரைப்பின் (105-6)
> சிலரொடு திரிதரும் வேந்தன்
> பலரொடு முரணிய பாசறைத் தொழிலே (187-8)

என்ற அரும் பகுதிகளை ஓர்வோமாக. கோயில் என்றாரேயன்றிப் பாண்டியன் அரண்மனை என்றோ, பெருந்தகை என்றாரேயன்றிச் செழியன் என்றோ, வேந்தன் என்றாரேயன்றிப் பாண்டியன் என்றோ, பலர் என்றாரேயன்றிப் பகைத்த எழுவர்களான சேரன் சோழன் திதியன் எழினி எருமையூரன் இருங்கோவேண்மான் பொருநன் என்றோ, பாசறை என்றாரேயன்றி ஆலங்கானப் போர்க்களம்

என்றோ ஆசிரியர் விதந்து மொழியாது, எல்லாம் பொதுப்பட மொழிப்படுத்துவர். பெயர் சுட்டாமை அகவிலக்கணம் என்பதை அறிந்தவராதலின், மறவர் நினைவோடு நூலகத்து யாண்டும் பெயர் தோன்றாவாறு, தோன்றிவிடாதவாறு அகமாந்தர்களைப் பொதுமைப்படுத்துவர். நக்கீரர் வரலாற்றுள்ளம் மிக்கவராயினும், அவ்வுள்ளத்தார்க்கு அகம் பாடுதல் அரிதாயினும், அரியதொரு அகப்படைப்பை அவர் செய்து காட்டிவிட்டார். நெடுநல் வாடையின் பொது வோட்டத்தை நச்சினார்க்கினியர் உணரவில்லை. பொதுச்சொற்களுக்குப் பொதுப்பொருளாக உரைசெய்ய வில்லை. பெருந்தகை என்ற பொதுக் கிளவிக்குப் "பாண்டியன்" எனவும், பலரொடு என்னும் பொதுமை எண்ணிக் கைக்குச் "சேரன் செம்பியன் முதலிய எழுவரோடே" எனவும் சிறப்புப் பொருள் கண்டார். இது பொருந்துமா? பாட்டுச் சொற்கள் இப்பொருளுக்குக் குறிப்பானும் இடந்தருகின்றனவா? பிற விடத்துக் கற்ற வரலாற்றுக் கருத்துக்களைக் கொண்டு புகுத்தலாமா? அறிஞர் சிந்திப்பாராக. நெடுநல்வாடை நெடுஞ்செழியனை உட்கொண்டு யாத்தது, அவன்முன் பாடியது என்றாலும், பாட்டினுள் சான்று உண்டு கொல்? இல்லாதபோது பாட்டு ஏன் அகத்திணையாகாது?

வேம்பும் பேய்க்காப்பும்

சான்று ஒன்று உண்டு என்பர் நச்சினார்க்கினியார். "இப்பாட்டு சுட்டி ஒருவர் பெயர் கொள்ளாமையின் அகப் பொருளாமேனும், வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகம் என அடையாளப்பூக் கூறினமையின் அகமாகாதாயிற்று" என்பது அவர்தம் காரண விளக்கம். இதனாற்றான் பாண்டியனைச் சுட்டுவதாகக் கொண்டு மேற்கண்ட உரைகளை எழுதினார் போலும். ஈண்டு இனி நாம் ஆராய வேண்டுவது இவ்வடியில் வரும் வேம்பு அடையாளப் பூவைக் குறிக்கின்றதா? என்பது. சங்க அரசர்களின் வரலாற்றை அறிந்தபின், நெடுநல் வாடையைக் கற்போர்க்கு நெடுஞ் செழியன் போர்வாழ்க்கை நினைவுக்கு வரவே செய்யும். வேம்பு என்ற சொல்லைக் கண்டதும் பாண்டியனது அடையாளப்பூப் என்று சொல்லிடவே தோன்றும். "புலிப்பொறிக் கொண்ட பூங்கேழ்த் தட்டம்" என்பது நெடுநல்வாடையில் வரும் (126) ஓரடி. புலிப்பொறி என்ற தொடரைக் கண்டதும், சோழனது அடையாளம் சுட்டப்பட்டது என்று கூறுவது பொருந்துமா? மெய்யாக ஆராயின் வேலின் தலையில் கட்டியிருப்பதாகச் சொல்லப்படும் இவ்வேம்பு அடையாளப்பூ அன்று; பேய் தீண்டாதபடி கட்டிய காவற்பூ.

> களிறுகளம் படுத்த பெருஞ்செய் ஆடவர்
> ஒளிறுவாள் விழுப்புண் காணிய புறம்போந்து
> வடந்தைத் தண்வளி எறிதொறும் நுடங்கித்

க. 22.

தெற்கேர்பு இறைஞ்சிய தலைய நற்பல்
பாண்டில் விளக்கிற் பரூஉச்சுடர் அழல
வேம்புதலை யாத்த நோன்காழ் எஃகமொடு
முன்னோன் முறைமுறை காட்ட (171-6)

"பகைவர்களின் யானைப் படையை வெட்டி வீழ்த்திய வீரர்கள் விழுப்புண்பட்டுக் கிடக்கின்றனர். அவர்களைப் பாராட்டிப் புண்நோய் தீர்த்தற்காக நள்ளிரவில் தன் பாசறையைவிட்டுப் புறத்தே வருகின்றான் அரசன். வழிநெடுக உள்ள விளக்கின் பெருந்திரிகள் வாடைக் காற்றுக்கு அணையாது சாய்ந்து வெளிச்சம் தருகின்றன. வழிகாட்டுவேன் வேப்பங்குழை கட்டிய வேலினால் (எஃகமொடு) மறவர்கள் எய்திய புண்களை முறைமுறையாகக் காட்டுகின்றான்" என்பது மேலைப்பகுதியின் பொருள். வேம்பு சொல்லப்படும் இடங்களை நோக்குக. வேம்புக்குப் பேய் அஞ்சும் என்பது இன்றும் உள்ள தமிழ்ச் சமுதாய வழக்கு. வேப்பங் குழையடித்தலும் வீட்டின் இறவாரத்தில் வேம்பு செருகுதலும் உண்டு.

தீங்கனி இரவமொடு வேம்புமனைச் சொரீஇ
வாங்குமருப்பு யாழொடு பல்லியம் கறங்க....
காக்கம் வம்மோ காதலந் தோழி
வேந்துறு விழுமம் காதலந் தோழி
வேந்துறு விழுமம் தாங்கிய
பூம்பொறிக் கழற்கால் நெடுந்தகை புண்ணே (புறம். 281)

வேம்புசினை ஒடிப்பவும் காஞ்சி பாடவும்
நெய்யுடைக் கையர் ஐயவி புகைப்பவும்
எல்லா மனையும் கல்லென் றவ்வே (புறம். 296)

விழுப்புண் பட்டு வீட்டிற்கு வந்த மறவர்களுக்குச் செய்யும் பலவகைப் பேய்தீண்டாக் காப்புக்கள் இவ்விரு புறப்பாடல்களிலும் சொல்லப்பட்டுள. வேம்பு முதலிடம் பெறுவதை நினைக. இப் பாட்டுக்களோடு நெடுநல்வாடைப் பகுதியை ஒத்திடின், விழுப்புண் காணப் போந்த வேந்தனுக்கு வேம்பின் வேலால் (எஃகமொடு - எஃகத்தால்) புண்ணுடையாளர்களைச் சுட்டிக்காட்டினான் என்ற நிகழ்விடத்தைக் கருதின், நெடுநல் வாடையின் வேம்பும் பேய்த்தடுப்பு என்பதும், சமுதாய வழக்கு என்பதும், அதனையே நக்கீரர் இவ்விடத்துச் சுட்டினார் என்பதும் எல்லாம் தெளிவாகும்.

"வேம்பு தலையாத்த" என்பதற்கு வேப்பந்தழை கட்டிய என்பதே பொருள். வேப்பந்தார் என்று நச்சினார்க்கினியர் கொள்ளல் பொருந்தாது; வலிந்த உரையாகும். மேலும் ஒரு கருத்தைத் தெளிமின். அரசின் அடையாளப்பூ காலாட்படைக்கு உண்டேயன்றி, வாள் வேல் யானை குதிரை முதலான கருவிப்

படைகட்கு இல்லை,இல்லை. சங்கவிலக்கியத்திற் போர்ச் செய்யுட்கள் பலவுள. கருவிகளுக்கு அடையாளம் காட்டியதாக யாண்டும் குறிப்பு அறியேன். தானையர் பூவணிவதாகவே தொல்காப்பியம் கூறும்:

வேந்திடை தெரிதல் வேண்டி ஏந்துபுகழ்ப்
போந்தை வேம்பே ஆரென வரூஉம்
மாபெருந் தானையார் மலைந்த பூ *(தொல். 1005)*

என் காரணங்கள் தகுமெனப்படுமேல், நச்சினார்க்கினியர் தோற் றிய வழிவழிப் பிழையை ஒழித்து, நெடுநல் வாடையை அகப்பாட்டு என்று கற்றும் கற்பித்தும் வருகதில். ஆசிரியர் நக்கீரனாரின் புலமைக்கு உரைவழிவந்த குற்றத்தைக்களைகதில். பெயர் சுட்டுவது போலக் குறிப்பில் தோன்றினும் தலையாய விதியிற் சிறிது பிறழினும் அகப்பாட்டு ஆகாது, அகம் என்று கொள்ளுதல் கூடாது எனவும், அகத்திணை பாடுவது அரியதொரு புலமை எனவும் நச்சினார்க் கினியரின் கூர்த்த மதியால் தெரிந்துகொள்கின்றோம்.

ஒத்த உள்ளங்கள்

நக்கீரர் 33 அகச் செய்யுட்களில் ஆசிரியர் 17 களவின; 16 கற்பின. தலைவன் பொருளீட்ட விழைபவன்.தலைவி அவனது முயற்சிக்கு இசைபவள் என்பது புலவரின் படைத்திறன். சுற்றத்தைக் காக்கவும் கேட்டினை விலக்கவும் பகையை நட்பாக்கவும் ஈத்து உவக்கவும் புகழ்தேடவும் பொருளை நாடுகின்றான் தலைவன் (அகம். 99, 389) அவனது பொருட் குறிக்கோள்களைத் தலைவியும் உணர்கின்றாள்.

இரப்போர் ஏந்துகை நிறையப் புரப்போர்
புலம்பில் உள்ளமொடு புதுவதந் துவக்கம்
அரும்பொருள் வேட்டம் எண்ணிக் கறுத்தோர்
சிறுபுன் கிளவிச் செல்லல் பாழ்பட
நல்லிசை தம்வயின் நிறுமார் *(அகம். 389)*

உணர்ந்து பேசுவது இப்பாட்டு. ஆற்றும் மதுகையுடையளாயினும், எத்தலைவியையும் பிரிவுத்தனிமை ஓரளவு கொல்லவே செய்யும். நக்கீரரின் பாட்டுத் தலைவியர்கள் பிரிவு வருத்தம் உற்றாலும், அதனைத் தாங்க வல்லவர்களாகவும், தலைவனையும் அவன் வினையையும் வாழ்த்தும் அறிவுடையவர்களாகவும் இலங்குப. நம்மை அழச்செய்து துறந்தாலும் நல்விருந்து அயரும்பொருட்டு "விழுநிதி எளிதினின் எய்துக" என்பது ஒரு தலைவியின் வாழ்த்து (அகம். 205). "நோயிலராக நங் காதலர்") என்பது ஒருத்தியின் உள்ளக்கிடக்கை (அகம். 227).

இன்னா அரும்படர் தீர விறல்தந்து
இன்னே முடிகுதில்

என்பது நெடுநல் வாடையின் வேண்டுகை.

புலவர் புனைந்த தலைவனும் தலைவியும் காமநுகர்ச்சியில் ஒத்த வேட்கையினர். காதலியின் முடிக்கூந்தலும் பெருந்தோளும் சிறுமெல் மார்பும் குறுமேனியும் இளையான் உள்ளத்தைக் கவற்றவே, அவளைக் கூடிப்பெறும் ஒரு நாளின்பம் கிடைக்காதா? அவ்வொருநாள் வாழ்க்கை இப்பிறவிக்குப் போதுமே என்று தவிக்கின்றான் தலைவன் (குறுந். 280). இரவு மழை என்று பாராது தலைவியின் வீட்டில் வந்து நிற்கின்றான். (குறுந். 161).

குவளை யுண்கண் கலுழ நின்மாட்டு
இவளும் பெரும்பே துற்றனள் (அகம். 310)

என்ற தோழி கூற்றால் களவுத் தலைவியும் காமக்காழினள் என்று அறியலாம். இருவர்தம் தொடக்க வேட்கையையும் கண்ட தோழி களவை முடிக்க விரும்பாது, புணர்ச்சிக்கு உதவி செய்வாள். தலைவி நாண்மிக்க மடமகளாதலின், அவளது காமவிழைவைத் தலை வனுக்குப் பதமாகக் கூறுவள். மாலை கழிந்தது, ஓதம் பெருகுகின்றது, சுறாமீன் தாக்கிக் கோவேறுகள் நடைமெலிந்தன, பாம்புகள் ஊர்கின்றன,இவளும் ஏங்குகின்றனள்; உடன்வந்த நண்பர்களோடு எம் இல்லில் இரவு தங்கிச் சென்றால் என்னையோ? என்று தலை மகனுக்குத்தோழி உரை செய்கின்றாள்.

திலக நெற்றி

நக்கீரரின் அகப்புனைவில் ஒரு தனிச்சிறப்பு உண்டு. பெண்ணின் உடலழகை உறுப்பழகை நிறவழகை ஓவியமாகக் கூறும் ஆர்வம் அவர்க்கு உண்டு. கிளியெனப் பேசும் சிறிய செவ்வாயினள், பெரிய கயல்மீன் என்னப் பிறழும் மைக்கண்ணள், கரும் புயல்போலத் தாழ்ந்து இருண்ட கொத்துக் கூந்தலள், மின் னனத் தோன்றி மறைத்து இலங்கும் நுண் இடையினள் என்று காதல் ஊறுகின்றான் ஒருதலைவன் (அகம். 128). மூங்கில் என்னப் பெருத்த பசுந்தோளும், தென்னங்குரும்பை அனைய மென் முலையும், மார்பிற்படர்ந்த சுணங்குத் தேமலும், நீண்டு தழைத்த கருங் கூந்தலும், திங்கள் அன்ன திருமுகமும்,அம்முகத்தில் காதளவும் ஓடிக் கிடக்கும் கிளர்ச்சிக் கண்களும் பிரிந்துசென்ற தலைவரை மறக்கவிடுமோ? நின்மேனி வனப்பிலும் கண்நோக்கிலும் உயிர் வளர்க்கும் அவர் விரைந்து ஓடி வரமாட்டாரா? என்று தோழி தலைவியை ஆற்றும் புதுமுறையைக் காண்க. சங்கப் புலவருள் நக்கீரர் சிறப்பாக நெற்றியில் திலகம் இடும் வழக்கினைப் பாடியுள்ளார். "திலகமொடு பதித்த திங்கள் அன்ன நின்திருமுகம்" (அகம். 253) "தேங்கமழ் திருநுதல் திலகம் தைஇயும்" (அகம். 389) என ஈரிடத்துத் திலக நெற்றிகள் வருகின்றன. திலகம்

அணிந்த முகத்திற்கு வெறுந்திங்கள் உவமையாகாது என்று திங்களுக்குத் திலகம் இட்டுப் பின் உவமைப்படுத்தும் நக்கீரர் இலக்கியப் புதுமையை அறிக. இவர்தம் திருமுருகாற்றுப் படையிலும் "திலகம் தைஇய தேங்கமழ் திருநுதல்" என்ற கருத்து வரக் காண்கின்றோம்.

புணர்ச்சிப் புனைவுகள்

புணர்ச்சிக் கூட்டுக்கு உரிய பொருள்களையும் ஆயத்தங்களையும் சூழ்நிலைகளையும் காதல் வினைகளையும் முறைகளையும் வெளிப்படையாகப் பாடும் ஒரு புதுப்போக்கு உடையவராக நக்கீரர் முன்னிற்கின்றார். அரசமாதேவியின் பள்ளியறை, நீலமணி போன்ற கருந்தூண்கள், தூய வெண்சுவர், பல பூங்கொடி ஓவியங்கள், புகழ்வாய்ந்த பெரிய வட்டக்கட்டில், யானை மருப்பினால் ஆகிய தந்தக் கால்கள், சுற்றிலும் வேட்டைபொறித்த தகடுகள் என்றவாறு, தலைவி உறையும் அக இல்லத்தையும் கட்டிலையும் காட்சிப்படுத்துவர் புலவர்.

முல்லைப் பல்போது உறழப் பூநிரைத்து
மெல்லிதின் விரிந்த சேக்கை மேம்படத்
துணைபுணர் அன்னத் தூநிறத் தூவி
இணையனை மேம்படப் பாயணை யிட்டுக்
காடி கொண்ட கழுவுறு கலிங்கத்துத்
தோடமை தூமடி விரித்த சேக்கை (நெடுநல். 130-5)

பள்ளிப் பாயலின் நறுமணம், மெத்தென்மை, தூய்மைகளை இவ்வடிகள் புலப்படுத்துவன. முதற்கண் முல்லை வெண்பூக்களும் பிறபூக்களும் இடப்பட்டுள்ள, அதன் மேல் ஒரு மெல்லிய விரிப்பு. அவ்விரிப்பின்மேல், புணர்ச்சி வெப்பத்தில் அன்னங்களினின்று உலர்ந்த சூட்டு மயிர்களால் ஆகிய மென்பாயல் தலையணைகள், அதன்மேல் தூய வெள்ளைக் கலிங்க விரிப்பு. இத்தகைய செவ்வியுடையது இன்பப் படுக்கை. "நுரை முகத்தன்ன மென்பூஞ் சேக்கை", "பல்பூஞ் சேக்கை" (அகம் 93, 381) எனப் பிற பாடல் களிலும் இன்பப் படுக்கையின் அமைப்பைப் புலவர் குறிப்பிடுவர்.

புணர்ச்சிப் பெருக்கத்திற்கு ஊடற் கிளர்ச்சி வேண்டும் தொடுதல், மோத்தல், கேட்டல், பார்த்தல் சுவைத்தல் என்ற ஐம்புலச் செய்கைகள் மென்மெல இன்ப அலைகளை மனக்கடலில் உண்டாக்கும், உயர்ந்தெழச் செய்யும். புணருஞ்செய்கைக்கு முன்னே அதனை உணரும் இன்ப எண்ணங்கள் தழைக்க வேண்டும், காமச் சொற்கள் கனிய வேண்டும் என்ற முன்னிலைக் கூறுகளை அகத்திணை கண்ட தமிழினம் நன்றாக அறிந்திருந்தது. புணர்தல் நிமித்தம் என்பது என்ன? ஊடல் நிமித்தம் என்பது என்ன?

இவையெல்லாம் புணர்ச்சிக்கு முந்திய கோலங்களும் விளையாட்டுக்களும் அல்லவா? புணர்ச்சிக்குக்கு முன்னே காதலர்கள் செய்து கொள்ள வேண்டிய பாங்குகளைப் புணர்தல் நிமித்தம், ஊடல், ஊடலுக்கோர் நிமித்தம் என்று பலவகைப்படுத்தி யிருப்பதிலிருந்தே இன்பத்தினும் இன்பத்தின் தூண்டுதல்களை, இன்பத்தை மடங்காக்கும் எண்ணப் பெருக்கங்களைச் சிந்தித்துக் காட்டினர் தமிழர் என்பது தெளிவாகும். காதலியின் தோளில் துயிலுதல், மார்பில் துயிலுதல், கூந்தலணையில் துயிலுதல், தொய்யில் உழுதல், அல்குலில் பூவணிதல் (அகம். 345), எயிற்றுநீர் அருந்தல் எனவாங்குச் சங்கப் பனுவலில் வந்துகிடக்கும் காமப் பள்ளிக்குறிப்புக்கள் பலப்பல. இந்நுணுக்கங்கள் ஒரு தனி நூலுக்கு உரியவை. நக்கீரர்தம் செய்யுட்களில் ஊடல் நுண் கூறுகள் மிகுந்து காணப்படுகின்றன. இது அவர்க்குரிய தனிப்புலமை.

சாந்தார் கூந்தல் உளரிப் போதணிந்து
தேங்கமழ் திருநுதல் திலகம் தைஇயும்
பல்லிதழ் எதிர்மலர் கிள்ளி வேறுபட
நல்லிள வனமுலை அல்லியொடு அப்பியும்
பெருந்தோள் தொய்யில் வரித்தும் சிறுபரட்டு
அஞ்செஞ் சீறடி பஞ்சி யூட்டியும்
எற்புறந் தந்து நிற்பா ராட்டிப்
பல்புஞ் சேக்கையிற் பகலும் நீங்கார்
மனைவயின் இருப்பவர் (ஆகம். 389)

கற்பியல் வாழ்வில் கணவன் மனைவியின் பகற்புணர்ச்சியைக் கூறுவது இச்செய்யுள் என அறிக. கூந்தலை வாரிப் புதுமலர் அணிந்தான். நுதலில் பொட்டு வைத்தான், சாந்தணிந்த வண்ண மார்பில் பல இதழ்களையும் மலர்களையும் அப்பினான், பரந்த தோளில் காதற் காட்சிகளை வரைந்தான்,சிறிய அடிகளைத் தொட்டுத் தூக்கிச் செம்பஞ்சுக் குழம்பு தடவினான், பலவாறு தழுவி அணைத்து மெத்தென்ற பூப்படுக்கையில் பகற் காலத்தும் கூட்டுறவு நீங்காதவனாய்க் கிடந்தான் என்ற முறையில், முடிமுதல் அடிவரை தலைமகன் புணர்ச்சிக்குமுன் இழைத்த ஊடற்பணிகளை இவ்வரும் பாடல் கற்பிக்கின்றது.

நாளங் காடி நாறு நறுநுதல்
நீளிருங் கூந்தல் மாஅ யோளொடு
வரைகுயின் றன்ன வான்தோய் நெடுநகர்
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
நிவந்த பள்ளி நெடுஞ்சுடர் விளக்கத்து
நலங்கேழ் ஆகம் பூண்வடுப் பொறிப்ப
முயங்குகம் சென்மோ நெஞ்சே (அகம். 93)

இரவுப் புணர்ச்சிக்குச் சூழ்நிலையைக் காட்டுவது இப் பாடல். தலைவி பல்வேறு பூக்களைக் கூடை கூடையாகக் கூந்தலில் வைத்துக்கொள்ளும் ஆசையுடையவள் என்பது நாளங்காடி என்ற உவமையால் விளங்கும். மெல்லிய இனிய உயரமான பூக்கட்டிலின் கண் அமர்ந்திருந்து தலைவியின் மார்பணிகள் தழும்பு செய்யுமளவிற்கு விளக்கொளியில் அவளை முயங்குவோம் என்று திரும்பிவரும் தலைவன் இடைச்சுரத்தின்கண் எண்ணி மகிழ்கின்றான்; வீடு திரும்பும் காலம் மாலைக் காலம் ஆதலின், இரவுக் கூட்டுறவை நினைக்கின்றான். புணர்ச்சியைப் பற்றி மொழியும் பாடல்கள் எத்துணையோ சங்கவிலக்கியத்து உள. நக்கீரர் பாடிய இவ்வொரு பாட்டிற்றான், காதலர்கள் விளக்கொளிமுன் கூடுவர் என்ற குறிப்பைக் கற்கின்றோம்."மென் பூஞ்சேக்கை நிவந்த பள்ளி நெடுஞ்சுடர் விளக்கம்" என வரும் அகப்பகுதியோடு,

குத்து விளக்கெரியக் கோட்டுக்காற் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறி

என வரும் ஆண்டாள் பாசுரத்தை ஒப்பிடுக. ஒப்பிடுங்கால் சங்க விலக்கியத்தைச் சமயப் பாசுரத்தார் கற்று ஊறிக் கையாண்ட திறத்தை அறிந்து கொள்ளலாம்.

24. நல்லந்துவனார்

கலித்தொகை ஆசிரியர் ஐவருள் நல்லந்துவனார் ஒருவர். 33 செய்யுட்கள் கொண்ட நெய்தற்கலி இவர்தம் அறிவுப் பெரும் படைப்பாகும். அகநானூற்றில் ஒன்றும் நற்றிணையில் ஒன்றும் பரிபாடலில் இரண்டுமாக இவர்யாத்த அகங்கள் உள. காதலியின் இரங்கலைப் பாடுவதிலும், காம ஆராமையால் தோன்றும் கடந்த செயல்களைப் பாடுவதிலும் நிகரின்றி விளங்குவர் அந்துவனார். அம்மூவனாரும் உலோச்சனாரும் நெய்தல் பாடிய புலவர்கள் எனினும், நெய்தற் சூழ்நிலையில் அதற்குரிய பொருளாம் இரங்கலையே பாடியவரல்லர்; அச்சூழ்நிலையில் வைத்துப் புணர்தல் முதலாம் பிற உரிகளையும் பாடியவர். அன்னவர்தம் செய்யுட்கள் முதல் கருப்பொருள்களால் நெய்தற்றிணையாகின்றன. நல்லந்துவனாரின் கலிகள் முதல் கருவுரி என்ற மூன்றானும் நெய்தல்கள். மேலும் சங்கப்புலவர் யார்க்கும் இல்லாத ஒரு தனிப் பெருமை அந்துவனார்க்கு உண்டு. இவர் ஒருவரே அகத்திணையுள் ஒரு பிரிவான பெருந்திணைக்கு இலக்கியம் செய்தவர். இவர்தம் கலிப்பா பத்தும் இல்லாவிடிலோ, பெருந் திணையின் தன்மைகளை எவ்வாறு அறிவோம்? தொல்காப்பியத்து வரும் பெருந்திணையின் இலக்கணவறிவோடு அமைய வேண்டியவர் களாவோம். அகத்திணைக் குறிக்கோள் என்னும் நான்காவது இயலில் பெருந் திணையியல்புகளை நுணுகி விரித்து விளக்குங்கால், உதவியாக இருந்தவை அந்துவனாரின் கலிப் பாடல்களே.

களவிலும் கற்பிலும் தலைவியின் வருத்த வுணர்வுகளை ஐந்திணையின் எல்லை எவ்வளவு அவ்வளவிற்குச் சென்று நல்லந்துவனார் புனைவர்; எனினும் பெருந்திணைக்கோட்டினைத் தொடாவாறு நிறுத்திக் கொள்வர். இஃது இவர்தம் புலமைப்பாடு. நாணுடை ஐந்திணைத் தலைவியரே காமக் காழ்ப்பால் நாண் துறந்தபோது, பெருந்திணைப் பெண்டிராகி விடுவர் என்ற திணைத் தன்மையை முன்னர்த் தெளிந்திருக்கின்றோம்.

காம நாணம்

நாண் இருவகைப்படும். ஒருவகை நாண் பெண்பாலாராகிய மெல்லியலார்க்கு உரியது; பெண்மையோடு பிறந்தது; ஆடவர்தம் காம எழுச்சிக்குத் தூபமாவது. இதனை நாணம் என்ற வழக்கில் கூறுகின்றோம். இந்நாணமில் நங்கை இன்பத்துக்குப் பகையாவாள்; ஊடலுக்கு ஊற்றாகாள். நாண்மிகுதி பெண்மையை மிகுத்து முடிவில் இன்பத்தை கனிவிக்கும். "நாணொடு மிடைந்த கற்பின் வாள்நுதல்" (அகம். 9) என்பர் கல்லாடனார்.

> நாணும் உட்கும் நண்ணுவழி அடைதர
> ஒய்யெனப் பிரியவும் விடாஅன் கவைஇ
> ஆகம் அடைய முயங்கலின் (குறிஞ்சிப். 184)

நம்பியின் ஆராத் தழுவலுக்கு நங்கையின் நாணச்சம் ஏது வாயிற்று என மொழிவர் கபிலர். பருவமுதிர்ச்சியாலும் ஈர்ப்பு நாணம் குன்றிப் போகும். காமத்தின் வலியும் சுவையும் தளர்ந்து போம். இப்பெண் நாணம்-காமநாண்-அகத்திணையிலக்கியத்தில் நயமாகப் பாடுபெறுகின்றது. பாடு பெறுவது இயல்பும் ஆகும்.

ஒழுக்க நாணம்

மற்றொருவகை நாண் மனிதவினத்துக்குப் பொதுவாவது, சமுதாய நலத்துக்கு உறுதுணையாவது. ஆணாயினும் பெண்ணாயினும் அன்னவர் பண்பினை மிகுப்பது. நாணுடைமை என்ற திருக்குறள் அதிகாரத்துச் சுட்டப்படுவது இந்நாணே. "கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல் நல்லவர் நாணுப் பிற" (1011) என்று திருவள்ளுவர் இருவகை நாணங்களையும் எடுத்துக் காட்டுவர். தலைவன் திருமண வரைவை நீட்டிக்கும் போதும் ("நாணுத் தக்கன்று" நற். 72) பரத்தைமையில் உழலும் போதும் (பெரிய நாணைச் சுட்டிக்காட்டி ஆடவனை இடித்துரைக்கக் காண்கின்றோம். இவ் வரம்புநாண் களவிற்கும் கற்பிற்கும் எல்லா அகமாந்தர்க்கும் பொது. இந்நாண் ஐந்திணைத் தலைவிபால் அடங்கி நிற்கும் என்றும், பெருந்திணைத் தலைவிபால் கடந்தோடும் என்றும் அந்துவனார் பாடல்கள் அறிவுறுத்துவ.

ஐந்திணை நெய்தல்

புலவரின் ஐந்திணைத் தலைவன் பன்னாள் களவு விருப்பினன். திருமணத்தை விரைந்து முடித்துக் கொள்ளும் நாட்டமிலி, இவன் போக்கு பெற்றோருக்கும் அலருக்கும் அஞ்சும் பெண்ணுள்ளத்துக்கு ஒவ்வாது. அவள் பெரிதும் கவல்வாள். களவுக் குமரிக்கும் பெருந்துயர் தருவது ஒன்று உண்டெனின், அது தலைவனது வரைவு நீட்டிப்பே. ஆதலின் 16 களவுப் பாடல்களையும் வரைவுத் துறையாகவே நெய்தல் அந்துவனார் பாடி முடித்தார். களவில் எத்துணையளவு இரங்கலுணர்வைக் காட்ட இயலுமோ அவ்வளவும் காட்டினர்.

கண்டவர் இல்லென உலகுத்துள் உணராதார்
தங்காது தகைவின்றித் தாஞ்செய்யும் வினைகளுள்
நெஞ்சறிந்த கொடியவை மறைப்பினும் அறிபவர்
நெஞ்சத்துக் குறுகிய கரியில்லை (கலி. 125)

'மறைவை யாரும் அறியார் என்று நாட்கடத்த வேண்டாம். தன் நெஞ்சு தன்செயலை அறியுங்காண்' என்று தோழி தலைவனை இடித்துரைப்பாளெனின், அவன் எவ்வளவு நாள் களவை நீட்டித் திருக்க வேண்டும்? மலர்ப்புன்னைக்கண் ஒருத்தியின் புதுநலத்தைத் துய்த்த நீ மணவரவை நாடவில்லை; நின் குடிமைக்கும் வாய்மைக்கும் புகழ்மைக்கும் பெரிய பழியில்லையா? என்று தோழி தலைவனை அடுக்கிக் கேட்பாளெனின் அவனது களவியலின் மிகுதிபாட்டை உணர்ந்து கொள்கின்றோம். பெண்ணலத்தை உண்டு அவளை மணவாது கை விடுதல் பாலுண்டு குடித்த குவளையைக் குப்புறக் கவிழ்த்தல் போலாம் எனவும், நோய்க்கு மருந்து அறிந்தும், பணங்கருதி நீட்டிக்கும் மருத்துவன் போலாம் எனவும், தோழி தலைவனது கொடுமையைக் கசந்து கூறுங்கால், அவளது வருத்தவுணர்ச்சி புலனாகின்றது.

நாணினகொல் தோழி நாணினகொல் தோழி
இரவெலாம் நற்றோழி நாணின என்பவை
வாணிலா ஏய்க்கும் வயங்கொளி எக்கர்மேல்
ஆனாப் பரிய அலவன் அளைபுகூஉம்
கானற் கமழ்ஞாழல் வீயேப்பத் தோழியென்
மேனி சிதைத்தான் துறை (கலி. 131)

நல்ல நெய்தல் இலக்கியத்திற்கு இப்பாட்டு ஓர் எடுத்துக்காட்டு. களவை நீடித்தற்கு நாண வேண்டியவன் தலைவன் காதலியின் மேனி மெலிவதைக் கண்டு கவலவேண்டியவன் தலைவன். அவன் அவை செய்திலன். உயர்திணைத் தலைமகன் செய்யாது விட்டவற்றை, அவனது கடற்றுறையில் வாழும் அஃறிணை நண்டுகள்

செய்கின்றவாம். தலைமகளின் மேனிச் சிதைவைக் காணமாட்டாது அவைகள் பொந்துக்குள் போய் விடுகின்றனவாம். போகாதிருந்தால், உங்கள் துறைமகன் செய்ததைக் காண் என்று தலைவி கேட்பின், நாண வேண்டுமன்றோ? தலைவன் நாணாமைக்கு நண்டுகள் நாணின என்று அஃறிணையை உயர்திணைப் படுத்துவர் அந்துவனார்.

களவுத் தலைவனுடைய உள்ளத்தை இங்கு நாம் புரிந்து கொள்ள வேண்டும். அவன் வரைவை நீட்டிப்பானே யன்றி மறுக்கான்; மறுக்கும் உள்ளத்தானும் அல்லன். கடைசி வரை களவாகவே ஒழுகி இன்புற்றுத் தலைவியைக் கைவிட்டு விடுவான் என்பது பொருளன்று. அப்படி எண்ணிக்கொண்டு தோழி வரைவை நெருக்குகின்றாள் என்பது கருத்தன்று. அவன் திருமணங் கொள்வான் என்பதில் அவள் ஐயப்படாள். ஐயப்படுதலாக மொழிதல் அகத்திணையாகாது. ஊரலர் நோக்கியும், வழியச்சம் நோக்கியும், நொதுமலர் வரவுநோக்கியும், தலைவியின் பிரிவுத் துயர் நோக்கியும் வரைவை விரைந்து முடிக்க விரும்புவாள் என்பதுவே இலக்கணம். தலைவன் ஏன் நாட்கடத்த வேண்டும்? வரைதல் உறுதியாதலின் பின்னர்க் கிடைக்க இயலாத களவின்பம் என்னும் துணிவின்பத்தை நீட்டித்து நடத்திக்கொள்ள ஆர்வப்படுகின்றான். அலரையும் வழியையும் நொதுமலர் வரவையும் திருமணத்திற்குப் பேரிடையூறாக அவன் மதிக்கவில்லை. கொடுப்பது உறுதி என்ற கருத்தால், வள்ளல்கள் இரவலர்களையும் புலவர்களையும் தாழ்த்தி வைத்தல் உண்டன்றோ? காதலன் வரைவு நீட்டித்தல் வள்ளல் கொடை நீட்டிப்பதோடு ஒப்பது:-

அதியமான் பரிசில் பெறூஉம் காலம்
நீட்டினும் நீட்டா தாயினும் யானைதன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் ததுவது பொய்யா காதே (புறம். 101)

நெய்தற்கலியில் தரவுப் பகுதிகளைக் காட்டிலும் தாழிசைப் பகுதிகள் இரங்கல் வளம் உடையவை. கற்புக்கு உரிய ஆறுகளில் நெடும் பிரிவுற்ற மனைவி மாலையைப் பழிக்கின்றாள். வெள்ளத்தில் அடித்துச் செல்லும் மான்மேல் அம்புவிடும் கொடியார் உண்டோ? போரில், தோற்று வருந்துவாரை மேலும் நகுவார் உண்டோ? வெந்த புண்ணின் வாயில் வேல் நுழைப்பார் உண்டோ? மானைக் காக்கவேண்டும்; வருந்துவாரை ஆற்றவேண்டும்; புண்ணுக்கு மருந்தளிக்க வேண்டும். அவை செய்யா விட்டாலும் மேற் கெடுதல் செய்யலாமா? தலைவனது நீள்பிரிவுக்கு ஆழ்துயர் உறும் தலைவியை மேலும் அல்லற் படுத்துகின்றது மாலைக்காலம் என்று இரங்குவர் அந்துவனார். கூடினார்க்கு மேலும் வருந்தும் துன்பத்தைக் கொடுத்தலும் ஆகிய ஓரவஞ்சகம் கொண்டது மாலை என்பது நெய்தற் றலைவியின் கருத்து

வாலிழை மகளிர் உயிர்பொதி யவிழ்க்கும்
காலை யாவது அறியார்
மாலை என்மனார் மயங்கி யோரே *(கலி. 119)*

"இது மாலைக்காலமே இல்லை; புணர்ச்சியில் மயங்கிக் கிடப்பவரே மாலை என்று கூறுவார்காண். மலர்களை விரிக்கும் காலம் ஒன்று உண்டுபோல, மகளிரது உயிர்களை உடம்பினின்றும் பிரிக்கும் இறுதிக்காலம் ஒன்று உண்டு. அதுதான் இக்காலம்" என்று மாலைப் பொழுதுக்கு ஆற்றாத அரிவை ஒரு புதிய காலம் படைக்கின்றாள். தான் தெளிந்தவள் போல, மற்றையோரை மயங்கியோர் என்று தூற்றுகின்றாள். இத்தகைய நெய்தற்கலிகளில் பிரிவுத் தலைவியரின் அழுக்காறுகளை, கூடியிருப்பார் மேற்கொண்ட பொறாமைகளைக் காண்கின்றோம்.

பெருந்திணைப் புலவன்

நல்லந்துவனார் ஒருவரே சங்கபனுவலில் பெருந்திணைப் பாடல்கள் யாத்தவர். ஐந்திணைத் தலைவயரின் பிரிவுணர்ச்சிகளை எல்லைக்கோடளவும் சென்று பன்மாணும் பாடவல்ல புலவர்க்கே பெருந்திணை பாடும் எண்ணமும், பாடவல்ல எளிமையும் ஏற்படும். களவியலில் மடல் ஏறிவரும் தலைவனது நாணில் செயலையும், கற்பியலில் ஊரறிய வெளிவந்து உற்ற பெருங் காமத்தை உரைத்துத் திரியும் மனைவியின் நாணில் செயலையும் பொருளாகக் கொண்டு பெருந்திணை பாடினர் அந்துவர். தன்மேல் விருப்பம் இல்லாக் குமரியை நச்சி ஒருவன் மடலூர்வது இல்லை. விருப்பம் ஒத்த நல்லாளை மணப்பதற்கே ஊரறிய மடல் ஏறுகின்றான் ஆதலின், அன்பின் அகத்திணையாம் என அறிக. கணவன் அல்லாத ஒருவன் மேற்கொண்ட காமக்கனிவால் ஓர் இல்லாள் புறம்போந்து புலம்புவது இல்லை. மணந்த ஆடவனது பிரிவு பொறாது வளர்ந்த மெய்ச்சுரத்தால், ஊரறியக் காமர்பறை சாற்றுகின்றாள் ஆதலின், அன்பின் அகமேயாம். முன்னது களவிற் பெருந்திணை; பின்னது கற்பிற் பெருந்திணை. நாணில் காமத்தால் பெருந்திணையாயிற்று எனவும், அன்பு ஒத்த காதலால் அகத்திணையாயிற்று எனவும் தெளிக. எனவே அன்பும் நாணமும் ஐந்திணையும் என்றும், அன்பும் நாணமின்மையும் பெருந்திணையாம் எனவும் வேறுபடுத்தி உணர்க. ஐந்திணைக் காதலர் போலப் பெருந்திணைக் காதலர்களும் அன்புடையார், கற்புடையார், ஐந்திணைக்கு இல்லாத பெருந்திணைக்கே உரிய இலக்கணம் நாணமின்மை. எனினும் நீங்கிய நாணத்தை மீளப் பெற்றுப் பெருந்திணையர் ஐந்திணையராக நல்வாழ்வு வாழலாம். சமுதாயப் பழி யாதும் இல்லை. இவ்வுண்மைகளை யெல்லாம் அந்துவனாரின் பத்துப் பாடல்கள் விளங்கக் காட்டுகின்றன.

பெருந்திணை நெய்தல்

பெருந்திணைத் தலைவி கழிகாமம் மிக்க கழிபடர் சொல்ல, ஞாயிறு திங்கள் கடல் காற்று எல்லாம் அவளுக்கு முன்னிலைப் பொருள் ஆகின்றன. காமம் தலைக்கொண்டவாளதலின், அவள் பேச்சுக்கள் முன்பின் மலைவாகின்றன. அறிவுக்குப் புறமாய் அவளின் காம வேக்காட்டிற்கு ஒத்தனவாகின்றன. கணவன் உள்ள விடத்தைக் காட்டாவிட்டால் மணல் தெரியும்படி கடல் நீரையெல்லாம் புறங்காலால் இறைத்து விடுவாளாம். காற்று அவனைக் காட்டாவிடின் காமத்தாற் பிறந்த வெப்பக் கண்ணீரால், அதன் மேனியைச் சுடுவாளாம். திங்களுள் இருக்கும் முயல் காட்டா விட்டாலோ அதனைக் கவ்வும்படி வேட்டை நாயை ஏவுவாளாம். வேட்டுவரிடம் போய்ச் சொல்லுவாளாம்.

தலைவியின் பெருங்காமத்தை அதற்கு ஏற்ற சொற்களால் புலப்ப டுத்துவர் அந்துவனார். என்னுடைய தோளைப்புணர்ந்து நெகிழ்த்தவன் நினைவுதவிர நன்று தீது என்ற பாகுபாடு அறியேன் என்று தலைவி தெளிவாகச் சொல்லுகின்றாள். "இரவு கனவில் தோன்றினான். கைப்பிடியாகப் பற்றிக் கொண்டு விழித்தேன். பற்றிய கைக்குள்ளே மறைந்துவிட்டான்"என்று உளறுகின்றாள். மேகத்தைப் பார்த்து, "என் காமம் அணுத்தோறும் கலந்தது. உடல் அணுவெல்லாம் கொதிக்கின்றன.சிறிது பொழுது பெருமழை பெய்தாலும் போதாது. கடல்நீரை முகந்து எப்போதும் கொட்டிக் கொண்டிரு" என வேண்டுகின்றாள். ஐந்திணைத் தலைவிக்குப் போலப் பெருந்திணைத் தலைவிக்கும் பிரிவு மெய்ப்பாடுகள் உள. "நன்னுதல் நீத்த திலகத்தின்" "மேனி மறைத்த பசலையள்"என்ற இருமெய்ப்பாடுகளைப் புலவர் புலனாக்குவர். நெற்றிப் பொட்டினையே அழித்துக் கொள்வாள் என்பது கரைகடந்த காமப் பேதைமையைக் காட்டும். நுதல் கண் முதலான சில உறுப்புக்களில் பசலை படரும் என்று கூறாது, மேனி முழுதும் பசலைப் போர்வை கொண்டனள் என்பது அவள்தன் காமப்பித்தையும் காட்டும்

பெருந்திணை ஐந்திணையாதல்

அந்துவனார்தம் பெருந்திணைப் பாக்களின் இறுதியடிகளை நாம் மிகவும் சிந்திக்க வேண்டும். பிரிந்த காதலன் திரும்ப வந்தான்; அவ ன் மார்பை அணைந்து காமம் தணிந்து நலம் பெற்றாள் எனவும், மலைபல கடந்து சென்று காதலன் மீண்டு வந்ததும்,காமமருளி இழந்த நலத்தை எய்தினாள் எனவும், காமப்பிணியும் பசப்பும் நீங்கின எனவும், உறக்கத்தைக் கெடுத்தவன் வரக்கண்டதும் திருமகள்போல அவன் மார்பை ஆரத்தழுவினாள்; ஞாயிற்று முன்னர் இருள்போல அவளது காமத்துயர் சுவடற்று ஓடி ஒளிந்தது எனவும், மழைபெற்ற

பறவை போலப் பண்பு தவிர்த்தாள் எனவும், காதலனைக் கண்டதும் வந்த துயரம் போயிற்று, போயநாணம் வந்ததும், பித்துச் சிரிப்பு ஒழிந்தது எனவும் இறுதிச் சுரிதகங்கள் புணர்ச்சியோடு முடிகின்றன. பெருந்திணைப் பாடல்களின் இறுதிகள் ஐந்திணை யாகின்றன. இவ்வண்ணந்தான் பெருந்திணைச் செய்யுள் அமைய வேண்டும் என்பதை அந்துவனார் பாடல்கள் (கலி. 124-7) கற்பிக்கின்றன. ஆறுபாடல்களும் (ஐந்திணையாகவே முடிதலின், இங்ஙனம் குறிஞ்சியாக முடிப்பதுதான் மாறா அமைப்பு எனவும், தலைவன் வரவு கூறாது 'தலைவியின் பெரும் புலம்பல்களையே கூறிச் செல்வது பெருந்திணைப் பாட்டின் இலக்கணம் ஆகாது எனவும் தெளியலாம். பின் வரும் நெய்தற் பகுதி பெருந்திணையாளரின் கூற்று. இரவும் பகலும் போலக் காதலர் வாழ்க்கையில் பிரிவும் புணர்வும் துன்பமும் இன்பமும் மாறி மாறி வரும் எனவும், புணர்ந்து இன்புற்றி ருப்பவர்கள் பிரிந்து துன்புறுபவர்களை இகழவேண்டாம் எனவும், அங்ஙனம் இகழின் அவர்க்கும் ஒருநாள் பிரிவும் இகழ்வும் வருதல் உலகவியல்பு எனவும், அரிய அறத்தை அந்துவனார் பெருந்திணைப் பாடலில் எல்லார்க்கும் உணர்த்துவர் :

மகளிர்,
தோள்சேர்ந்த மாந்தர் துயர்கூர நீத்தலும்
நீள்சுரம் போகியார் வல்லைவந் தளித்தலும்
ஊழ்செய் திரவும் பகலும்போல் வேறாகி
வீழ்வார்கண் தோன்றும் தடுமாற்றம் ஞாலத்துள்
வாழ்வார்கட் கெல்லாம் வரும் *(கலி. 145)*

25. நல்லுருத்திரனார்

இப்புலவர் முல்லைக் கலித்தொகையின் ஆசிரியர். பிற தொகைகளில் இவர்தம் பாடல் இல்லையாதலின், இவர் பாடிய யாப்பு கலிப்பா ஒன்றே என அறியலாம். பிற அகப்புலமையோர் எல்லாரினும் வேறான ஒரு தனிக் கூர்மையுடையவர் உருத்திரனார். நாடக வழக்கை விடுத்து உலகியல் வழக்காகவே முல்லைக்கலியை ஆக்கியுள்ளார். முல்லைவாழ் இடையர்களின் சமுதாய இயல்பு களையும், அவ்வியல்புக்கு இயைந்த காதலையுமே புனைந்துள்ளார். அகத்திணை யிலக்கணம் ஊறுபடாதவாறு முல்லை வழக்க ஒழுக்கங்களை நயமாகப் பொருத்தியுள்ளார். காளையை மடக்கியவனுக்கே பெண் கொடுப்பது முல்லைவழக்கம். எவன் மடக்கினும் அவனுக்குப் பெண் மணப்படுவாள். மணப்பட வேண்டுமன்றோ! காளையை அடக்கியவனை விரும்பாத போதும் மணக்க வேண்டுமா? அன்ன அன்பில் மணம் அகத்திணைக்கு முரண் காண்.

கோளாளர் எள்னொப்பர் இல்லென நம்மானுள்
தாளாண்மை கூறும் பொதுவன் நமக்கொருநாள்
கோளாளன் ஆகாமை இல்லை அவற்கண்டு
வேளாண்மை செய்தன கண் (கலி. 101)

என்றபடி, ஏற்றினை விடுப்பதற்கும் பிடிப்பதற்கும் முன்பே இருவர் தம் ஒத்த உள்ளத்தைச் சுட்டிக் காட்டுகின்றார் புலவர். ஏறு தழுவா முன்னரே ஆயமகனுக்கும் ஆயமகளுக்கும் உள்ள புணர்ச்சி உண்டு என ஆசிரியர் புலப்படுத்தலின், ஏறுகோள் வழக்கம் அகத்திணைக்கு இயைந்து ஒழுகுகின்றது.

முல்லையின் உரிப்பொருளாவது இருத்தல். தலைவனது பிரிவுக் காலத்து ஆற்றியிருப்பது. தலைவன் குறித்த பருவ வரவு கண்டு தலைவி வருந்துதல், வருந்துபவளைத் தோழி ஆற்றுவித்தல், வினை முடிவில் தலைவன் தேர்ப்பாகனுக்குக் கூறுதல் என்ற சுற்புத்துறை மேல் எழுந்த முல்லைச் செய்யுட்கள் சங்கவிலக்கியத்து நிரம்ப உள. இவ்வகைத் துறைகள் கலித்தொகை முல்லைப் பகுதிக்கண் இடம் பெற்றில. முல்லைநில மக்களின் சமுதாய ஒழுகலாற்றுக்கு ஏற்பத் துறைகள் அமைந்துள. நல்லுருத்திரனாரின் முல்லைக் கலி 17 பாடல்கள் உடையது; அவற்றுள் ஒன்று (கலி. 109) கைக்கிளைத் திணையாம். ஏனைய வெல்லாம் களவியல் பற்றியவை. பிறர்போல் முல்லைத்திணையில் சுற்புத்துறைகளை உருத்திரனார் அமைக்க வில்லை என்று அறிக. களவியலிலும் அவர் கையாளும் துறைகள் பல்வகைப்பட்டனவல்ல, ஒரு சிலவே. அகத்திணையை வரலாற்றுக் கருத்துக்கு வாயிலாகச் சிலர் பயன்கொள்வதுபோல, முல்லைச் சமுதாயத்தின் காதலாறுகளைக் காட்டுவதற்காகவே உருத்திரனார் முல்லைக் கலி பாடினார் போலும். முதல் ஏழு பாக்கள் ஏறுகோள் விழாவைப் பெரிதும் புனைகின்றன.

காதற் களங்கள்

காதலர்கள் கண்டுகொள்ளும் இடவாய்ப்புக்கள் திணை தோறும் வேறுபடுதல் உண்டு. நிலமக்களின் தொழில்களுக்கு ஏற்பக் காதலர்தம் காட்சிகளைப் புலவர்கள் கொண்டு கூறுவர். காண்பிடங்கள் முற்றும் உலகியல் வழக்கத்திற்குப் பொருத்தமாவன. தலைவி கிளிகளைக் கடிந்து தினைப்புனங் காத்து வேங்கைப் பரண்மேல் இருக்கும் போது, குறிஞ்சிக் காதலன் சந்திப்பான். நெய்தல் மகள் காய்தற்குப் பரப்பிய மீன்வற்றலைக் காக்கை கவராதபடி காத்துப் புன்னைமர நிழலில் இருக்குங்காலை இளைஞன் கண்டு காதலாடுவான். நெய்தல் விளைவுகளான உப்பையும் மீன்களையும் பரதமகள் விற்கச்செல்லும் அமயம் காதற்றொடுப்பு நிகழ்தலும் உண்டு. மருதக் காதலிடம் பெரும்பாலும் நெய்தலை ஒத்தது. "இடை நெடுந் தெருவிற்கதுமெனக் கண்டு என் பாற்றொடி முன்கை பற்றினன்" என்று (அகம். 356) நடுத்தெருவைக்

காதலிடமாக மருதத்திற் புனைவர் பரணர். முல்லைநிலக் குறுமகள் ஆடுமாடு மேய்க்கச் செல்வது வழக்கம்; ஆதலின் இவ்விடங்களில் காதல்கள் நிகழ்ந்த னவாகச் சுட்டுவர் நல்லுருத்திரனார். இதுகாறும் நானிலக் காதற் களங்களைக் கண்டோம். காதற் காட்சி பாலை நிலத்து நிகழ்வ தில்லை யாதலின், அதற்குக் களம் இல்லை என்று அறிக (ப.193).

காதலர் உரையாட்டு

காதலர்களின் உரையாடல்களைத் தொடுத்து நயமாகப் புனைவதில் நல்லுருத்தினார் திறம், அம்ம மிகப் பெரிது. முல்லை நிலத்தார் காலினம் மேய்க்கும் குறும்பர்கள். பரந்த மேய்ச்சுத் தொழிலுக்கு ஏவலாட்களை அமர்த்திக் கொள்வார்கள். இந்தக் குறுந்தொழிலாளிகளைத் தலைமக்களாகக் கொண்டு பாடிய திணைச்சிறப்பும் இப்புலவர்க்கு உளது. ஆறு கலிகளில் இவர்தம் காதலையும்,பேச்சுக்களையும் ஐந்திணைத் தன்மை குன்றாவாறும்,. முல்லைச் சமுதாயத்திற்கு ஏற்பவும் பாடியுள்ளார் புலவர். "மோர் விற்றுச் செல்லும் சிறு நங்காய்,அன்றொரு நாள் முல்லைக் காட்டின்கண் மாவடுவைப் பிளந்தாற்போன்ற நின் கண்விழியால் என் நெஞ்சத்தை அடிமையாகக் கொண்டுவிட்டாய்; என்னை மயக்கி என் உள்ளத்தைக்கொண்ட நீ ஒரு திருடி; என்றான் ஆயத் தொழிலன்.

நின்னெஞ்சம்
களமாக்கொண்டு யாம் ஆள எமக்கெவன் எளிதாகும்
புனத்துளான் என்னைக்கும் புகாவுய்த்துக் கொடுப்பதோ
இனத்துளான் எந்தைக்குக் கலத்தொடு செல்வதோ
தினைக்காவுள் யாய்விட்ட கன்றுமேய்க் கிற்பதோ

உன் மனம் எனக்கு அடிமை யாவதால் என்ன பயன்! என் அண்ணனுக்குச் சோறுகொண்டு போய்க் கொடுக்குமோ? தந்தைக்குப் பால் கறக்கும் கலத்தினை எடுத்துக்கொண்டு போகுமா? தாய் மேயவிட்ட கன்றை மேய்த்துக் காத்து நிற்குமா? என்று நகையாடுகின்றாள் இளைய ஆய்ச்சி. "சிறிது நின்னோடு நெருங்கிப் பேச்சுக் கொடுத்தற்காக என்னை எளியள் என்று கருதிவிட்டாய். சும்மா மோர் தந்தவள் வெண்ணையும் தருவாள் என்பதுபோல எண்ணிவிட்டாய்" என்று ஊடலூட்டிப் பேசுகின்றாள் ஓர் ஆயமகள்.

காதலன் : அணிமிக்க அழகி. நீ விளையாடுதற்குச் சிற்றில் இழைத்துத் தருவேன்.

காதலி : பெற்றோர் கட்டிய வீட்டில் இருக்கும் உனக்கு வீடு கட்டத் தெரியுமா? தெரியாததைத் தெரியும் என்று சொல்லுதலால் நீ தெரிந்தது ஒன்றும் இல்லை.

காதலன் : வீடு கட்ட அறியேன் என்றாலும், நின் கூந்தலில் பூக்கட்ட அறிவேன். அதனைச் செய்யட்டுமா?

காதலி: வரைந்து என் கூந்தலில் பூ அணியும் துணிவும் முயற்சியும் உன்பால் இல்லை.தோழியர்கள் கொண்டு வந்த பூவைக் கொள்கின்றேன் என்றுமடிந்திருக்கின்றாய். நீ மிகப் பேதை.

காதலன் : உன் கூந்தலைத் தொட மறுக்கின்றாய். நல்லது சுணங்கு படர்ந்த நின் முலை மேலாவது ஓவியம் எழுதலாமா?

காதலி : அங்ஙனம் பிறர் எழுவதற்கு நாங்கள் உட்கார்ந்து இருப்போமோ? கூந்தலுக்கே மறுத்த நாங்கள் மார்பிற்கு இடங்கொடுப்போமோ? நீ ஒரு பித்தன் போலும்.

இத்தகைய இளங் காதலுரைகளை, ஒத்த அன்பும் புணர்ச்சி யார்வமும் தோன்ற வழக்கு நடையிற் பாடுவர் நல்லுருத்திரர்.

'நின் முன்னின்று சொல்லாடுதல் கூடாது என்பது எம் சுற்றத்தார் கட்டளை' என்று ஒரு நங்கை தெரிவித்ததும், மறுத்துக் கேட்கின்றான் ஓர் காதற் குறும்பன்; "ஆம் சுற்றத்தார் கூறியது ஒக்கும், ஒக்கும். என்னொடு பேசலாகாது என்றார்களே யன்றிக் கூடலாகாது என்றார்களோ?" இது அன்பும் குறும்பும் கலந்த விடை என்பது வெளிப்படை.

ஏறுகோள் கூறினும், முல்லை நிலத்தின் பிறபழக்கங்களைக் கூறினும், குற்றேவல் மாந்தர்களைத் தலைமக்களாகக் கூறினும், நளினச் சொல்லாட்டங்களைக் கூறினும், திணையிலக்கணம் பிறழாவாறு பாட வல்ல அகம்பெரும் புலவர் நல்லுருத்தினார் என்று அறிதல் வேண்டும். உள்ளப் புணர்ச்சி என்னும் ஒரு திருமணமே அகத்திணையின் குறிக்கோள். அயலவர்தம் மணப்பேச்சு அக்குறிக்கோளை அசைத்துப் பார்க்கும் பெருங்கருவி. தலைவனது வரைவு நீட்டிப்பு அன்ன பேச்சுக்கும் இடன் அளிக்கின்றது. ஆதலின் கற்பிற் சிறந்த களவுக் காதலி தமிழ்ச் சமுதாய மகளிரின் தூய வாழ்க்கைக் குறிக்கோளைத் தோழிக்கு நினைவூட்டுகின்றாள். நொதுமலர் வரவு தடுக்கப்பட வேண்டும் எனவும், தலைவன் விரைந்து வரைவு செய்துகொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்து கின்றாள். இன்றேல் அறக்கேடும் உயிர்க்கேடும் நிகழும் என்பது அவளது குறிப்புரை. தலைவியின் குறிக்கோள் தமிழினத்தின் காதல் நெறி, புலவரின் அறிவுரை எல்லாம் பொதுளிய ஒரு முல்லைக் கலியாவது:

விரிநீர் உடுக்கை உலகம் பெறினும்
அருநெறி ஆயர் மகளிர்க்கு
இருமணம் கூடுதல் இல்லியல் பன்றே.

26. பரணர்

பரந்த புகழ்கொண்ட சங்கச் சான்றோருள் ஒருவர் பரணர். இவரும் கபிலர்போல் புலவராற் பாடப் பெற்றவர். பரணர் கண்ட அகங்கள் 62. களவிற்கு உரியவை 33. கற்பிற்கு உரியவை 29. அகநானூற்றில் மட்டும் 34 செய்யுட்கள் உள.

வரலாற்றுள்ளம்

பரணர் வரலாற்று உள்ளம் மிக்கவர் என்பதனை முன்னரே குறித்துள்ளேன். அவர் யாத்த 62 அகப் பாடல்களுள் வரலாற்றுக் குறிப்பு உடையவை 51 என அறிக. அகநானூறு நெடும்பாட்டுக்கு அமைந்த தொகை நூல். பரணர்தம் 34 அகநானூற்றுச் செய்யுட்களில் 32 வரலாற்று ஓட்டம் உடையவை. ஆதலின் இவர் அகப்பாக்களை மேலோடாகப் படிப்பவர் கூட இலக்கியநெஞ்சத்தினும் வரலாற்று நெஞ்சம் வாய்ந்தவர் பரணர் என்று கண்டுகொள்வர். சங்க அகப்புலவோருள் இந்நெஞ்சு உடையோர் வேறு சிலர் இருந்தாலும் பரணரே முதலிடம் பெறுகின்றார். ஒரு கருத்துக்கு இயற்கைச் சூழ்நிலையைப் புலவன் அமைத்துக் காட்டுகின்றான். கருத்துக்கு நேர் தொடர்பின்றியும் புறம்பாகவும் இருப்பின், இயற்கை வண்ணம் என்பதற்காக அச்சூழ்நிலையை நாம் உடன்படுவதில்லை. பாட்டின் தலையாய பொருள்நோக்கி எல்லா அடிகளும் இயங்குதல் வேண்டும் அன்றோ? பரணரின் அகப்பா அமைப்புக்கள் உரிப்பொருளுக்குச் செவ்விய உறவில்லாதவை; பெண்ணின் உறுப்பு நலங்களுக்கு உவமைகளாகப் பழையனது போர், குட்டுவனது மாந்தை, வஞ்சி, அழிசியின் ஆர்க்காடு, விரானது இருப்பை என்ற ஊர்களை ஏழு பாடல்களிற் கூறுவர். ஊரை உவமிக்குங்கால், உடையானையும் அவனது சிறப்புக்களையும் மேலும் தொடுத்துச் சொல்லும்போது, கிளவித் தலைவனைக் காட்டிலும் ஊர்த் தலைவன் கற்பவர் மனத்தைக் கவர்ந்து விடுகின்றான்.

வாரலெஞ் சேரி தாரல்நின் தாரே
அலரா கின்றாள் பெரும காவிரிப்
பலராடு பெருந்துறை மருதொடு பிணித்த
ஏந்துகோட்டு யானைச் சேந்தன் தந்தை
அரியலம் புகவின் அங்கோட்டு வேட்டை
நிரைய ஒள்வாள் இளையர் பெருமகன்
அழிசி ஆர்க்காடு அன்னவிவள்
பழிதீர் மாணலம் தொலைவன கண்டே (குறுந். 258)

பரத்தைத் தலைவனுக்குத் தோழி வாயில் மறுக்கின்றாள். தலைவியின் பேரழகு அழிசி என்பவனது ஆர்க்காடு நகரம் போல்வது. அழிசி என்பவன் காவிரித்துறையில் வளர்ந்த மருத மரங்களில்

5.23.

யானைகளைக் கட்டுபவன், சேந்தனுக்குத் தந்தை. வீரக்கள் உண்பவன், பெருவேட்டையாடி, பகைவர்க்கு நரகவாழ்வு தரும் வாளுடையன், வீரர்தலைவன் எனவாறு மேலும் பல செய்திகளை அழிசிக்கு அடுக்கிச் சொல்வர் பரணர். இக் குறுந்தொகையை அகத்திற்குப் பாடினாரா? அழிசிக்குப் பாடினாரா? என்று ஐயப்பட்டு அழிசிக்கு எனத் துணிகின்றோம்.

தலைவன் வரைவு நீட்டித்தலால் களவில் அலர் உண்டாகும். அவனது பரத்தைமையால் கற்பில் அலர் பரவும். ஊர்ப்பெண்டுகள் கூடிப்பேசும் அலரின் ஆரவாரத்துக்கு உவமை கூற வேண்டும்.1. கூடற் போர்க்களத்துச் சேர சோழப் படைகள் புறங்காட்டி ஓடியபோது பாண்டியனது மறவர்கள் ஆர்த்தார்களாம்; 2.தித்தனொடு போராட எண்ணிய கட்டியும் பாணனும், அவனது உறந்தைக் கிணைப் பறையைக் கேட்டளவில் அஞ்சி ஓடிய காலத்து ஆரவாரம் எழுந்ததாம்; 3. வெண்ணிப் பறந்தலையில் கரிகால் வளவன் பிறவேந்தரையும் வேளிரையும் பொருது தொலைத்த ஞான்று அழுந்தூரார் பேராரவாரம் செய்தனராம்; 4. ஒன்னாரை முறியடித்தபின் எவ்வியின் படையாளர்கள் உறத்தூரில் கள்ளுண்டு கவ்வை எழுப்பினராம்; 5. விச்சியர்கோன் வேந்தரொடு செய்த போரில், குறும்பூர் மக்கள் பெரிதும் முழங்கினாரம்; 6 வாகைப் போர்க் களத்தில் அதிகன் மாய்ந்த நிலையில் கொங்கர் வெற்றிக்குரல் செய்தனராம்; இவ்வாறு போர்க்கள ஆரவாரங்களை விரிவாக மொழிந்து, காதல் அலர்களுக்கு அவற்றை உவமை செய்குவர் பரணர். நன்னன், அன்னிமிஞிலி, ஆட்டனத்தி, ஆதிமந்தி, தழும்பன், ஆய், அகுதை, கோசர் முதலியோர் நிகழ்ச்சிகள், இவர்தம் அகச் செய்யுட்களில் வருவன.

செய்வினை மருங்கிற் சென்றோர் வல்வரின்
விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்
வெருவரு தானையொடு வேண்டுபுலத் திறுத்த
பெருவளக் கரிகால் முன்னிலைச் செல்லார்
சூடா வாகைப் பறந்தலை ஆடுபெற
ஒன்பது குடையும் நன்பகல் ஒழித்த
பீடில் மன்னர் போல
ஓடுவை மன்னால் வாடை நீ எமக்கே *(அகம். 125)*

வாடைக்கு அழிந்த தலைவியின் துணிவுப்பாட்டு இது. கரிகாற் சோழனொடு போர் செய்வதற்கென்று ஒன்பது மன்னர்கள் வாகைக் களத்திற்குச் சென்று செருக்குற்றனர். படைவளம் உடைய சோழன் வருகின்றான் எனக் கேள்விப்பட்டதும், அவன் முன்னிற்க மாட்டாராய் ஒன்பது அரசர்களும் குடைகளைப் போட்டுவிட்டு

ஓடிப்போயினர் காண். "வாடையே தருக்குற்று என்னைக் கொடுமைப்படுத்தும் நீ, தலைவன் விரைந்துவரின் ஓடவேண்டி வரும். தோற்று ஓடாது பெருமிதமாக இப்போதே ஓடி யொழிக" என்று வாடைத் தோல்விக்கு, மன்னர் தோல்வியை உவமை ஆக்குகின்றாள் தலைவி.

மேற்காட்டியாங்கு வரலாற்றுச் செய்திகள் மிக வருதலின், பரணர்தம் அகப்பாட்டுக்கள் இயற்கை வளம் குறைந்து நிற்கின்றன. முதல் கருப்பொருள்கள் உரிப் பொருளுக்கு உணர்ச்சியூட்டும் வகையில் புனைவு பெறவில்லை. புறவரலாறு அகவிலக்கியத்திதைச் சிறப்பிக்காது எனவும், வரலாறு மடுத்த புலவன் அகப்புலவனாக ஒளிரான் எனவும், வரலாறோட்டம் இயல்பான எளிய கற்பனையோட்டத்தைக் குறுக்கும் எனவும் பரணரின் பாட்டாராய்ச்சியிலிருந்து தெரிந்து கொள்கின்றோம். இதனால் பரணர் பெருமகனின் பெரும்புலமைக்கு இழுக்காம் என்று நினையற்க. யாரினும் வரலாறு பாடவல்ல மொழிப் புலமையர் என்று பாராட்டுவோம். வரலாற்றுப் பாட்டும் இலக்கியப் பாட்டேயாம். பெயர் சுட்டா அகவிலக்கியத்திற்கு இயற்கை யுவமைகளும் இயற்கைச் சூழ்நிலைகளுமே சிறப்பளிக்கும் என்பது பலர் பாடல்களிற் கண்ட உண்மையாதலின், அதனை எதிர்மறை முகத்தானும் உணர்வதற்கு வரலாறு விஞ்சிய சிலர்தம் அகப்பாடல்கள் துணை செய்கின்றன என்று தெரிந்து கொள்வோமாக.

அரிய துறைகள்

அரிய புதிய துறைகளை மேற்கொண்டு பாடும் விழைவுடையர் பரணர். தலைமகன் தன் நெஞ்சிற்குக் கூறியது என்ற ஒரு துறையில், களவும் கற்பும்பட 17 செய்யுட்களை யாத்துளர். இரவுக்குறி வந்து நீங்கும்போது, அல்ல குறிப்பட்டு அயர்ந்து செல்லும்போதும், இற்செறிப்புக் கேட்டபோதும், வரைவு மறுக்கப்பட்ட போதும், இடைச்சுரத்தில் திரும்ப நினைக்கும் போதும், தலைவி மிக்க ஊடல் கொண்டபோதும், பரணரின் தலைவர்கள் நெஞ்சினை முன்னிலைப் படுத்திச் சொல்லாடுப. தலைவியின் பாங்காயினர் கேட்குமாறு பரத்தை கூற்றுக்கள் ஐந்து பாடலுக்குத் துறையாவன. ஊடல் மறுத்த தலைமகள் சொல்லியது என்பது ஓர் அரிய துறை (நற். 260)புறத்திணைக்கண் மகட்பாற் காஞ்சித்துறையை எடுத்துக் கொண்டு ஆறு பாடல்கள் பாடியிருப்பதேல், அரிய பண்களை விளம்பும் இசைப்புலவர்போல் அரிய தமிழ்த்துறை பாடுவோர் பரணர் என்று பாராட்டலாம்.

ஒத்த காதலர்கள்

புலவர் தம் அகத்துப் பெரிதும் இடம்பெறும் ஆள் தலைமகனே. களவிலும் கற்பிலும் அவன் காமக்களியனாக விளங்குகின்றான். நாள் தோறும் தலைவியைத் தழுவ வேண்டும் என்பது அவன் ஆர்வம். தன் ஆராவேட்கையை வெளிப்படக் கூறலாமா? ஆகாதா? என்றெல்லாம் உலைந்து, தலைவிக்குமுன் தன் காமப் பெருமையைத் தானே எடுத்துரைக்கின்றான். வெள்ளத்தை உப்புக்கரை தடுக்கவல்லுமா? காமத்தை மெல்லிய நாணம் மறைக்க முடியுமா? (உப்புச் சிறை நில்லா வெள்ளம்போல நாணுவரை நில்லாக் காமம்'' அகம். 208) என்பது களவுத் தலைவனது வினா. மெல்லியல் நங்கையின் மார்பணையை விரும்பி, பாம்பு திரியும் நெறி என்று பாராதே. "நெடுந்தொலை இரவில் வந்ததும் அவளை எய்தப் பெறாத நிலையில், மாய்கதில் வாழிய நெஞ்சே" என்று இனி வாழ்வதினும் சாவு நன்று எனத் துணிகின்றான் ஒரு தலைவன்.

தலைவன் இரவுப்புணர்ச்சி நாட்டம் உடையவன். பரணரின் களவுப் பாடல்கள் பல இரவுக் காட்சிகளைப் புனைவன. அல்லகுறித் துறைகளும் இரவுக்காலத்திற்கு உரியனவே.குறித்த இடத்துத் தலைமகளைக் காணப்பெறாமையால் தலைமகன் வருந்தி அல்லல் உறுவதும், காணப்பெற்றபோது பன்மடங்கு இன்பம் உறுவதும் ஆகிய முரண் உணர்ச்சிகளை ஆழமாகப் புலப்படுத்தியுள்ளார் பரணர். அரிய தலைவி தன் சொற்படி தன் காமசுரத்தைக் குளிர்விக்க இரவு வருதல் என்பது தலைவனுக்குப் பேருவகையையும், அவள்பால் பெருமதிப்பையும் உண்டாக்குகின்றது நாண மிக்கவள், குடும்பக் காப்பு உடையவள், சிறு அரவத்திற்கும் பேரச்சம் கொள்பவள், தனித்த செலவு பகலிலும் அறியாதவள், காதலால் புத்தூக்கம் பெற்று வருகின்றாள் என்ற நினைவு, தலைவன் நெஞ்சத்தைப் பிணித்துவிட்டது.

"இயல்கற் றன்ன ஒதுக்கினள் வந்து"
நெஞ்சுநடுங் கரும்படர் தீர வந்து''
"அஞ்சிலம் பொடுக்கி அஞ்சினள் வந்து"
"நல்கினள் வாழியர் வந்தே"
"அந்தீங் கிளவி வந்த மாறே"

(அகம். 142, 152, 198, 208, 262)

இரவுக்குறிகளில் புணர்ந்து இன்புற்று ஏகும் தலைமகன் அன்புற்று மொழியும் பகுதிகள் மேற்கண்டவை. தலைவி வந்தாள், வரப் பெற்றேனே என்று அவளது தனிவருகையை விதந்து நெஞ்சிற்கு எடுத்து விளம்புகின்றான். வாராக்கால் அவன்படும் துன்பவளவை வந்தக்காற் பெற்ற இன்பவளவும் நோக்கிக் கணித்துக் கொள்க.

தலைவியும் காமவுணர்வு மிக்கவள். தலைவனது கைகடந்த காமத்தை ஏற்கும் நற்றுணையாகத் தோன்றுகின்றாள். காதலன் இரவில் வந்துபோவதைத் தலைவியும் தோழியும் விரும்புவதில்லை என்றே அகப்புலவர் பலர் பாடுவது வழக்கம். இரவு வருவானைப் பகல்வரினும் வருக என்று மாற்றம் காட்டுவர் தலைவியும் தோழியும். பரணரின் அகத் தலைவியோ இரவுக் குறிக்கு அஞ்சியவள் அல்லள். தலைவன் இரவு வரும் நெறிக்கும் அச்சம் உற்றவள் அல்லள் எனவே களவுத் காதலர் இருவரும் ஒத்த காமத்தினராக விளங்குகின்றனர்.

அரைநாள் யாமத்து விழுமழை கரந்து
வண்டுவழிப் படரத் தண்மலர் வேய்ந்து
வில்வகுப்புற்ற நல்வாங்கு குடச்சூல்
அஞ்சிலம் பொடுக்கி அஞ்சினள் வந்து
துஞ்சூர் யாமத்து முயங்கினள் பெயர்வோள்
ஆன்ற கற்பிற் சான்ற பெரியள்
அம்மா அரிவையோ அல்லள் *(அகம். 198)*

"நடு யாமத்துப் பெய்யும் மழையைப் பொருட்படுத்தவில்லை.மேலும் மழை மறைந்து வருவதற்குத் துணையாயிற்று. வரும் போது இடையே மலர் பறித்துச் சூடிவருகின்றாள். சிலம்பு ஓசை செய்யாதபடி அதனைக் கட்டிவிட்டாள். ஊரும் வீடும் அயர்ந்து தூங்கும்வரை விழித்திருந்து, வந்த காதலனைக் கண்டு கூடி மகிழ்ந்து,விழித்துக்கொள்ளும் முன்னாகத் திரும்பி வந்து படுத்துக்கொள்கின்றாள்" எனின் பரணரின் களவுக் குமரிக்கு இருக்கும் காதலார்வமும் துணிச்சலும் ஒட்பமும் எல்லாம் மருளத் தக்கவை. ஆதலின்,மிகப் பெரியவள் என்று காதலன் தன் நெஞ்சுக்குக் கற்பிக்கின்றான்.

பரத்தையின் வஞ்சினம்

மேற்கண்டாங்குக் களவுத் தலைமக்களைக் கர்மம் ஒத்த காதலர் களாகப் புனைந்து காட்டும் பரணர் கற்புத் தலைமக்களை ஓரளவு முரணிய வாழ்க்கையர்களாகக் காட்டுவர். தலைவன் தண்டாப் பரத்தனாகத் திரிகின்றான். அவனது பரத்த வேட்டம் ஒரு பரத்தைக்குக் கூடப் பிடிக்கவில்லை. "மார்பு தருகல்லாய் பிறன் ஆயினை" (அகம். 366) என்று அவள் தூற்றுகின்றாள். தலைவனது புதுப்புதுப் பரத்தை உறவிற்குத் துணையாக ஒரு விறலி இருந்தாள் என்ற அரிய கருத்தை, "நாளை மகட்கொடை எதிர்ந்த மறங்கெழு பெண்டே" (நற். 310) என்ற அடியால் அறியலாம். அவனது பெரும் பரத்தமையால், தலைவியை எதிர்த்து வஞ்சினம் மொழியும் துணிபு ஒரு பரத்தைக்கு வந்து விட்டதுகாண்-

வருகதில் அம்ம எஞ்சேரி சேர
அரிவேய் உண்கண் அவன்பெண்டிர் காணத்
தாரும் தானையும் பற்றி ஆரியர்
பிடிபயின்று தரூஉம் பெருங்களிறு போலத்
தோள்கந் தாகக் கூந்தலிற் பிணித்தவன்
மார்புகடி கொள்ளே னாயின் ஆர்வுற்று
இரந்தோர்க் கீயாது ஈட்டியோன் பொருள்போல்
பரந்து வெளிப்படா தாகி
வருந்துக தில்லயாய் ஓம்பிய நலனே (அகம். 276)

இது பரத்தையின் வஞ்சினப்பாட்டு; சங்கப் பனுவலில் அரிய ஒரு பாட்டு. அகத்திணைக் கண்ணும் வஞ்சினம் கூறலாம், மரபுக்கு ஊறில்லை என்பதனையும், அகவிலக்கியம் சில மேல்நிலைகளில் நெகிழ்ச்சி யுடையது என்பதனையும் அறிக. "சென்ற தலைவன் எம் சேரிக்கு வரட்டும். அவன் கற்புடைப் பெண்டிர் காண ஒன்று செய்வல். அவனது மாலையையும் மேலாடையையும் பற்றி இழுப்பேன்; ஆசிரியர் அதற்கென்று பழக்கிய பெண் யானை ஆண் யானையை மடக்குதல் போல, தாய் பழக்கிய நான் என் கூந்தற் கயிற்றால் அவன் தோளைப் பிணித்து, அவனது மார்பைப் பிறர் யாரும் நெருங்காதவாறு சிறை செய்வேன். செய்யேனாயின், என் அன்னை பலர்க்கெனப் போற்றி வளர்த்த இவ்வழகு யார்க்கும் பயன்படாது ஒழிக. இரந்தவர்க்குக் கொடுக்காது ஈட்டியவன் பொருள் அவனிடத்தே தங்கி அழிதல்போல என் மெய்ந்நலமும் துய்ப்பார்க்குப் பயனின்றிக் கொன்னே கழிக. தாய் வேண்டியபடி. பரத்தையாகாது, கற்புடையவளாய் இழிவேனாகுக" என்பது பரத்தையின் வஞ்சினம்; பரத்தமைக்கு ஏற்ற வஞ்சினம். "அவன் பெண்டிர் காண்" என்று பன்மையிற் கூறியதனால், அவனுக்கு மனைவியர் பலர் என்பது நடைக் கருத்தன்று. மனைவி ஒருத்திதான்; அவளை உயர்த்துவதுபோல் இழித்துக் கூறுகின்றாள் வஞ்சினப் பரத்தை என்று அறியவேண்டும்.

தலைவியின் வன்மை

தலைவனது விடாப் பரத்தமைக்குத் தலைவி காரணம் என்பது போலப் பரணரின் சில பாடல்கள் அமைந்துள. வரைவில் மகளிர் தீண்டிய கணவனது மார்பைச் சிறிதும் தொட மறுக்கின்றாள் ("தொடுகலம் குறுக வாரல்" அகம் 197) ஒரு மனைவி. இள மகளிரொடு நீராடையணிந்து புதுப்புனல் ஆடினாய்; நாணிழந்தாய் என்று (அகம். 266) நேர்பட இடித்துரைக்கின்றாள் ஒரு பெண்.

யாம்தற் பகையேம் சேர்ந்தோர்
திருநுதல் பசப்ப நீங்கும்
கொழுநனும் சாலும்தன் உடனுறை பகையே (அகம். 186)

என்பது ஒரு பரத்தையின் இடித்துக் காட்டு. மனைவிக்குப் பகை பரத்தையில்லை; உண்மையில் அவள் கணவனே என்று மிகப்

பேருண்மையைப் பரத்தை வாயிலாக வெளிப்படத்துவர் பரணர். பரத்தை அங்ஙனம் கூறலாம். தன் கணவன் பன்மைப் பரத்தனாயினும் இல்லாள் பொறுக்க வேண்டுமன்றோ? இல்லறம் நடத்துவதும் அவனை வரவேற்பதும் திருத்துவதும் அவளது கடன்கள் அல்லவா?

ஒலிபல் கூந்தல் நலம்பெறப் புனைந்த
முகையவிழ் கோழை வாட்டிய
பகைவன் மன்யான் மறந்தமை கலனே (நற். 290)

"நட்பாகி என் கூந்தலுக்கு மலர்சூட்டிய அவனே இப்போது அம்மாலை வாடும்படி செய்கின்றான்; இளமை இன்பத்திற்குப் பகைவன் ஆயினான்; அவன் கைவிட்ட செயலை எப்படி மறப்பேன்" என்று மிகக் கடுமையாக அறிவிக்கின்றாள் ஒரு நல்லாள். இத்தகைய கூற்றுக்களால் அன்பிலள் தலைவி என்று முடிவுகட்டுதல் கூடாது. அவளது உள்ளம் தூயது, பற்றுடையது. தன் தலைவனது பரத்தமைக்கு அவள் பேசுவது ஒக்கும் என்று கருத்துக் கொள்ளுக. எனினும் அன்பற்றவள் போன்ற எல்லைக்குச் சென்று அகத்தலைவி பேசும் வல்லுரைகள் இவை என்பதை மறைத்தற்கில்லை. இவ்வல்லுரைகளை நல்லுரைகளாகக் கொண்டு வணங்கி ஒடுங்கி நாணி ஊடிக்கூடி மகிழ்வான் கணவன் என்பது அகவிலக்கணம். "பல்லிருங் கூந்தல் யாரளோ நமக்கே" (குறுந். 19) என்று தலைவன் யாது செய்வது என்று ஆற்றாது தன் நெஞ்சை நோக்கி இரங்கும்போது, அவன் கழிவிரக்கம் காணும் தலைவி பிணக்கு ஒழிவாள்.

பாற்கல்வி

தலைவனது முதற்பரத்தமையைக் கேட்டு ஓர் இல்லிள நங்கை நிலத்திலே புரண்டு கூந்தல் புழுதிபடத் துடித்து அழுதாள். வீடுநோக்கி வந்த அத்தலைவனுக்குத் தோழி இனி என் செய்வது என்று வாயில் உடன்பட்டாள். தலைவன் மேலும் தோழிக்குச் சினம்; தலைவி மேலும் அவளுக்குப் பெருஞ்சினம். இவளுக்கு அழகு இருந்தும் என் பயன்? பெருந்தோட் செல்வம் இருந்தும் என்ன பயன்? அழகு உண்டேயன்றி அவனைப் பிணிக்கும் அறிவில்லையே?

அணித்தகை யல்லது பிணித்தல் தேற்றாப்
பெருந்தோட் செல்வத் திவள் (நற். 270)

என்று தலைவியைச் சுட்டி இடித்துரைக்கின்றாள். எனவே, ஆடவனது பரத்தமைக்குக் காரணம் ஓரளவு மனைவி என்பதும், அவனது காமவளவினை அறிந்து அதற்கேற்ப ஒழுகாத இன்பக்குறைவு என்பதும் பரணர் கருத்தாக அறிகின்றோம். "ஊரான் காமம் பெருமை அறியேன்; நன்றும் உய்ந்தனென்வாழி தோழி" (அகம். 236) தலைவன் பெருங் காமவுணர்வு உடையவன் என்பதைப் புரிந்துகொண்டேன்; அதற்கு ஏற்ப இன்பத்துறையில் ஒழுகலானேன்; அவனைப் பரத்தமைக் குற்றம் சொல்வதிலிருந்து நல்ல

காலமாகப் பிழைத்தேன் என்று ஒரு தலைவி மெய்யறிவு பெற்றாள் என்பதையும் பரணர் குறிப்பிடுவர்.

பரணரின் கற்புப்பாடல்கள் பெரும்பாலும் மருதத்திணையன; பரத்தைத் துறையன. இவ்வகை அகச்செய்யுட்களைக் கற்கும்போது, அவர் பாடிய புறச்செய்யுட்களில் இரண்டு நினைவிற்கு வருகின்றன. பேகன் தன் மனைவி கண்ணகியைக் கைவிட்டு நல்லூரில் பரத்தை வயப்பட்டிருந்தான். அவனை மீட்பதற்காகப் பாடிய புலவர் நால்வருள் பரணரும் ஒருவர். ஏனை மூவர் ஆளுக்கொரு பாடலே பாடினர்; பரணரோ இரு பாடல்கள் பாடி ஒழுங்கான இல்லறம் நடத்தும்படி பேகனை வேண்டினர் என்பதனையும் அறிக.

27. பாலை பாடிய பெருங்கடுங்கோ

பெருங்கடுங்கோ பாடிய அகங்கள் 67. அவற்றுள் 7 களவொழுக்கின, 60 கற்பொழுக்கின. களவு கற்புகளில் பிரிதலும், பிரிதல் நிமித்தமும் ஆகிய பாலையுணர்ச்சிகளை இரக்கமும் துணிவும் தோன்றப் பாடவல்ல தனித்திறம் உடையாராதலின் "பாலை பாடிய" என்ற சிறப்புத் தொடரை அடைந்தார் பெருங்கடுங்கோ. பாலைப்புலவர் ஓதலாந்தையார் களவியலை விரித்தும் பலதுறையாகவும் பலர் கூற்றாகவும் ஐங்குறுநூற்றில் பாடியிருப்ப, பெருங்கடுங்கோ பாலைக்கலியில் களவுத் துறைக்கு இடனளிக்கவில்லை. உடன்போக்கு சிறந்த களவுப் பாலையாகும். நற்றாயின் புலம்பல்களை அகத்துறையிற் கேட்கலாம். அவ்வுடன் போக்கினைத் தாய் கூற்றாகக் கொண்டு யாதும் பாடிற்றிலர். முக்கோற்பகவர் அறங்கூறும் களவுத்துறையில் (கலி. 8) தாய் உள்ளிடம் பெறுகின்றாள். 35 பாலைக்கலியில் களவுத்திணைப் பாட்டு இஃது ஒன்றேயாம்.பாலைக்கலியில் உடன்போக்குத்துறை இடம்பெறாவிட்டாலும், பிற தொகைகளிலும் இத்துறை பற்றிய பெருங்கடுங்கோவின் பாடல்கள் சில உள என்று அறிக.

உடன்போக்குத் துறை

பாலைப் புலவன் களவில் உடன்போக்குத் துறையை மிகவும் விரும்பிப் பாடுவான். பகற்குறி இரவுக்குறிகளில் எல்லாம் முன்பு தலைவன் தலைவியின் இடத்திற்குச் சென்றான். தலைவி பெற்றுப் பேணி வளர்த்த குடும்பத்தாரை இதுகாறும் பிரிந்தவள் அல்லள். உடன்போக்கிற்காகப் பிரிந்து வருகின்றாளாதலின்,தலைவன் இயல்பினும்பேரளி செய்வான், உள்ளத்திற் சோர்பு எழாதபடி மகிழ்ச்சி யூட்டுவான், வாயூறிப் பேசுவான். எனவே உடன்போக்குச் செய்யுட்களில் தலைவனது உள்ளப் புனைவுக்கு இலக்கிய வாய்ப்பு உண்டு. புலமை விளையாட்டிற்கு இடம் உண்டு.

தலைவியின் கூந்தலுக்குள் பாதிரி மலரைச் செருகிக் கூந்தல்மேல் மராமலரைச் சூட்டினான் தலைவன். "நின் வளையல் ஒலிக்கக் கைவீசிச் சிறிது முன்னே நட; உன் பின்னழகைக்

காண்கின்றேன்" என்று இனிது வேண்டினான். தலைவன் முன்னே செல்வதும், தலைவி பின்னே செல்லுவதும்தான் இன்றுங் காணப்படும் தமிழ்ச் சமுதாய வழக்கு என அறிவீர்கள். ஆதலின் அத்தலைவி வழக்கத்திற்கு மாறாக முன்னே செல்ல நாணினாள்; தலைகுனிந்தாள். அதுகண்டு தலைவனும் முன்னே செல்லாது நின்று கொண்டான். யார் முன் செல்வது என்ற பூசலில் இருவரும் நடவாது உட்கார்ந்து விட்டார்கள்.இவ்வகை அன்புக் காட்சியைக் காட்டுவார் பெருங்கடுங்கோ.

கண்டிசின் வாழியோ குறுமகள் நுந்தை
அறுமீன் பயந்த அறஞ்செய் திங்கள்
செல்சுடர் நெடுங்கொடி போலப்
பல்பூங் கோங்கம் அணிந்த காடே *(நற். 202)*

உடன்போக்கின் தொடக்கத்துத் தலைவன் காதலிக்குச் சுட்டும் காட்சி அது. "நாம் இப்போது சென்று கொண்டிருக்கும் காடு உன் தந்தையது. கார்த்திகை விளக்கு வரிசை போல மலர்ந்திருக்கும் கோங்கம் பூக்களைப் பார், பார்" என்று நயவுரை மொழிகின்றான் காதலன். தந்தையின் காடு என்று குறிப்பிடுவதன் நோக்கம், அவளுக்குக் குடும்பத்தின் பிரிவுச் சோர்வு தோன்றாமைப் பொருட்டு.

சங்கப்பனுவலில் உடன் போக்குத் துறைக்கண் அரிய புதிய ஒரு செய்தியைப் பாடியவர்கள் மருதன் இளநாகனாரும், ஓதலாந்தையாரும், பெருங்கடுங்கோவும் ஆவர். இம்மூவரும் பாடிய பாடற்பகுதிகள் பின்வருவன:

மருதன் இளநாகனார் – நற். 262

வினையமை பாவையின் இயலி நுந்தை
மனைவரை யிறந்து வந்தனை ஆயின்...
நீவிளை யாடுக சிறிதே யானே
மழகளிறு உரிஞ்சிய பராரை வேங்கை
மணலிடு மருங்கின் இரும்புறம் பொருந்தி
அமர்வரின் அஞ்சேன் பெயர்க்குவென்
நுமர்வரின் மறைகுவென் மாஅ யோளே.

ஓதலாந்தையார் – ஐங். 313

அறஞ்சா லியரோ அறஞ்சா லியரோ
வறனுண் டாயினும் அறஞ்சா லியரோ
வாள்வனப்பு உற்ற அருவிக்
கோள்வல் என்னையை மறைத்த குன்றே.

பெருங்கடுங்கோ – நற். 48

புறவணி கொண்ட பூநாறு கடத்திடைக்
கிடினென இடிக்கும் கோற்றொடி மறவர்

வடி நவில் அம்பின் வினையார் அஞ்சாது
அமரிடை உறுதர நீக்கிநீர்
எமரிடை உறுதர ஒளித்த காடே.

உடன்போகும் வழியில் தலைவியை நோக்கி, "அச்சம் சிறிதும் இன்றி நீ விளையாடுக. பாலை மறவர்கள் வந்து போர் தொடுத்தால், அஞ்சாது அவர்களைப் புறங்காண்பேன். நும் சுற்றத்தார்கள் வந்தால், முன்னிற்காது மறைந்து கொள்வேன்" என்று இரு கருத்துக்களைத் தலைவன் கூறுவதாக இளநாகனார் பாடியுள்ளார். சுற்றத்தார் பின் தொடர்ந்து வந்தனர் எனவும், அப்போது தலவன் அங்கிருந்து மலைக்குள் மறைந்து கொண்டனன் எனவும் நடந்த நிகழ்ச்சி ஒன்றை ஓதலாந்தையார் பாடுவர். உடன் போக்கிடை முதற்கண் தலைவனுக்கும் மறவருக்கும் போர் உண்டாயிற்று. அமரை வென்றான் எனவும், அதன்பின்னர், தலைவியின் சுற்றத்தார் தொடர்ந்து வருவதைக் கண்டான் காட்டிற்குள் ஒளிந்துத கொண்டான் எனவும் ஆக இளநாகனார் கூறிய இரு கருத்துக்களும் நிகழ்ந்தன என்று பெருங்கடுங்கோவின் பாட்டிற் காண்கின்றோம். தலைவன் வீரன் என்றும், வீரமும் காதலும் உறழ்ந்தபோது காதலுக்காக வீரத்தை மறைத்துக் கொள்பவன் என்றும் அறிகின்றோம். இடைச்சுர மருங்கில் அவள் தமர் எய்துவார்கள் (986) என்று தொல்காப்பியர் மொழிந்த குறிப்பின் விரிவாக மேலைப் பாடல்கள் அமைந்துள.

இளமையும் வளமையும்

வீரத்தினும் காதல் சிறந்தது போலப் பொருளினும் காதல் பெரியது என்று காட்டுவர் பெருங்கடுங்கோ. இப்புலவரின் பெரும்படைப்பான பாலைக்கலியில் பொருளுக்கும் இளமைக்கும் உரிய போராட்டத்தைக் கணவன் மனைவிக்கிடையே வைத்துப் பலவாறு தொடுப்பர்.தலைவன் பொருள் குவிக்கும் விழைஞன். பொருள் நோக்கம் அவன் வாழ்க்கை நோக்கமன்று. கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கே பொருட்கருவியை நாடுகின்றான். முன்னோர் வைத்த தாயப்பொருளைக் கொண்டு இல்லறம் செய்வதைச் சிறுமையாகக் கருதுகின்றாள். "உள்ளது சிதைப்போர் உளரெனப் படா அர்" (குறுந். 283) "உள்ளாங்கு உவத்தல் செல்லார்" (அகம். 111) "வினையே ஆடவர்க்கு உயிரே" (குறுந். 135) என்பன அவனது பெருமித எண்ணங்கள். ஆதலின் தலைவன் பொருள்வேட்கை குறை கூறும் தகைத்தன்று. பொருள் இல்லாக் கணவனை இல்லாளும் வேண்டாள்; இன்பமும் குறையுமன்றோ?

அறன்கடைப் படாஅ வாழ்க்கையும் என்றும்
பிறன்கடைச் செலாஅச் செல்வமும் இரண்டும்
பொருளின் ஆகும் புனையிழை என்றுநம்
இருளேர் ஐம்பால் நீவி யோரே

நோய்நாம் உழக்குவ மாயினும் தாம்தம்
செய்வினை முடிக்க தோழி (அகம். 155)

தலைவனது அறவுணர்வு, மானவுணர்வு பொருளுணர்ச்சி எல்லாம் காதலுணர்ச்சியினும் மிக்கோடுவதைக் காண்கின்றோம். காதலுடைய தலைவியை எப்படியோ ஆற்றிப் பொருளின் பொருட்டுப் பிரிந்துபோனான் எனவும். அவன் செலவு தலைவிக்கு மகிழ்ச்சியை அளிக்கவில்லை எனவும் அறிந்து கொள்கின்றோம்.

சங்கப் பெருங் கடுங்கோவைப் போலவே இவற்றை நோபல் அறிஞர் பெத்தரண் ரசலாரும் பொருட்காதற் பூசலை எடுத்துக் காட்டுவர். "இன்றைய உலகில், காதலுக்கு மதத்தினும் ஒரு பெரும்பகை தோன்றியிருக்கிறது; அதுதான் தொழிற்கொள்கையும் பொருள்நாட்டமும், காதலுக்காகத் தன் காரியத்தைக் கெடுத்துக் கொள்ளக்கூடாது என்பது அமெரிக்காவில் நிலவிவரும் கருத்து. கெடுத்துக் கொள்பவன் இழிந்தவன். பொருட்டுறை உட்பட எல்லாத் துறையிலும் சமநிலைவேண்டும். காதலுக்காகத் தொழிலைப் பலிகொடுத்தலும், தொழிலுக்காகக் காதலைப் பழிசெய்தலும் மடமையாம்" என்று விளக்குவர். இச் சமநிலையைப் பாலைக்கலி சிலவற்றில் கற்கின்றோம். தலைவனது பொருள் வேட்கையும் தலைவியின் காமவேட்கையும் முரண்போலத் தோன்றினாலும், முடிவில் நல்வாழ்வுக்கு அரண்செய்கின்றன. பொருட்பற்றுடைய கணவன் தலைவியின் காதலை உணர்ந்து தான் புறப்படுமுன் அவள் கூந்தலைத் தடவிக் கொடுக்கின்றான்.

காழ்விரி கவையாரம் மீவரும் இளமுலை
போழ்திடைப் படாமல் முயங்கியும் அமையாரென்
தாழ்கதுப் பணிகுவர் காதலர் மற்றவர்
சூழ்வதை எவன்கொல் அறியேன் என்னும் (கலி. 4)

இனிப் பன்னாள் புணர்வின்பம் கிடைக்காதே என்ற ஏக்கத்தால் முன்னாட் புணர்ச்சிக்கண் மீதூர்ந்த இன்பச் செய்கைகள் புரிகின்றான். கணவனுடைய கழிபெருங்களிப்பு பிரிவுக்குறிப்பு உடையது என்பதனைத் தலைவியும் உணர்ந்து கொள்கின்றாள்; போருணர்ச்சிமிக்க தலைவனை "வலனாக வினை" என்று வாழ்த்தி வணங்கி விடுத்த தலைவியும் உண்டு.

பெருங்கடுங்கோவின் அகத்தலைவன் பெரும் பொருள் வேட்கையன் எனவும், அகத்தலைவி பெருங்காம வேட்கையள் எனவும் பொதுவாகப் பல பாடல்களிற் காண்கின்றோம். ஆதலின் தோழி பெரிதும் இடம் பெறுகின்றாள். புலவரின் 67 செய்யுட்களில் 40 செய்யுட்குத் தோழி கூற்றாவாள் என்று அறிக. தலைவியின் காமத்தைத் தலைவனுக்கு எடுத்துக்காட்டி அன்பாலும் அச்சத் தாலும் அவன் புறப்பாட்டைத் தாழ்வித்தாள். அஃதாவது செலவ முங்குவித்தாள் எனப் பல பாடல்கள் முடிகின்றன.

மறப்பருங் காதல் இவள்ஈண் டொழிய
இறப்பத் துணிந்தனிர் கேண்மின்மற் றைஇய
தொலைவாகி இரந்தோர்க்கொன் றீயாமை இளிவென
மலையிறந்து செயல்சூழ்ந்த பொருள்பொரு ளாகுமோ?
நிலைஇய கற்பினாள் நீநீப்பின் வாழாதாள்
முலையாகம் பிரியாமை பொருளாயின் அல்லதை (கலி. 2)

அறஞ்செய்வதற்கு ஈட்டுவதாயினும், அச்செல்வங்கூட ஆடவன் வாழ்க்கைக்குத் தலைமைப் பொருளில்லை, மனைவியின் இளம் புணர்ச்சிச் செல்வத்தை நோக்கின் என்று எடுத்து அறிவுறுத்தியதும், கோலின் குத்துக்கு வயப்படாக் களிறு யாழின் இசைக்கு அடங்கி நின்றாற்போலத் தலைமகன் புறப்படுவதை ஒத்திவைத்தான். தன் பொருட்செலவுக்குக் காதலி இசையாள் என்பதைத் தெரிந்த ஒரு கொழுநன் சொல்லாதே செல்லத் துணிந்தான். ஐய,நீ தேடும் பொருளுக்கு என்ன நிலையுண்டு; நல்லிசை நரம்பறுந்தால் நின்றுவிடும்; பெருந்திரு ஊழ்மாறின் ஒரு நொடியில் அழிந்து விடும்; அரசியல் மதிப்பு தலைவன் மனம் மாறின் ஓடிப்போம்; ஆதலின் அழியும் செல்வத்தை ஆர்வத்தோடு காமப்பருவத்துத் தேட முனையாதே.

தன்னகர் விழையக் கூடின்
இன்னுறல் வியன்மார்ப அதுமனும் பொருளே (கலி. 8)

கூடிய வாழ்வே நீடியபொருள் என்று அறிவுரை செய்ய இல்லத்துச் சிலநாள் அமர்ந்தான் அத் தலைவன்.

காதற்றிணை

அகத்திணை காதற்றிணையாதலின்,இளமை காதற் பருவம் ஆதலின், கடமைக்கேனும் பிரிவதை அகவிலக்கியம் உடன்பட்டுப் பாடாதுகாண். பிரிவது கூறினும்,பிரிவுணர்ச்சியுள் புணர்வெண்ணம் ஓடுவதைப் பாடிக் காட்டுங்காண். தனியியற்கையைச் சான்றோர் பாடாதது போலவே, அகத்திணைக்கண் மனைவியின் இல்லறக் கடன்களைக் காமத் தொடர்புபடுத்தாது பாடியதில்லை. கணவனின் வினைக்கடன்களையும் தலைவியின் உள்ளோட்டம் படாது புனைந்ததில்லை. பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் என்ற உரிப்பொருள் பற்றிய செய்யுட்கள் எல்லாம், பசிவழிப்பட்ட தொழில்கள் போலக் காமப்புணர்ச்சியின் அடிப்படையில் எழுந்தன.புணர்ச்சிக்குறிப்பும் வேட்கையும், காதலி அல்லது காதலன் நினைவும் இல்லாத பாலைப் பாடல்கள் உண்டுகொல்?

பெருஞ்சின வேந்தன் அருந்தொழில் தணியின்
விருந்துநனி பெறுதலும் உரியள் மாதோ
இருண்டு தோன்று விசும்பின் உயர்நிலை உலகத்து
அருந்ததி அனைய கற்பிற்
குரும்பை மணிப்பூண் புதல்வன் தாயே (ஐங். 442)

என்பது பேயனாரின் முல்லைப்பாட்டு. சென்ற வினை முடியாது தாழ்த்தபோது பாசறைக்கண் இருக்கும் மறத்தலைவன் வீட்டை நினைக்கின்றான். இடைச் சுரத்துச் செல்லும் தலைவர்கள் காதலியர் தம் பண்புகளை நினைப்பதாகப் புனையும் பாலைச் செய்யுட்கள் பல. வினைமுடிவில் விதுவிதுப்போடு கிழத்தியின் அழகு நலன்களைத் தலைவன் எண்ணி யூறும் முல்லைப்பாட்டல்கள் பலப்பல. போர்க்குச் சென்ற தலைவனது நெடுந்தேரிற் பூட்டிய குதிரைகள் அவன் வரவை எதிர் பார்த்து எழுநிலை மாடத்து வதியும் தேவியின் செவிகளில் ஒலித்தன என்று முல்லைப்பாட்டை நப்பூதனார் காதல் வாய்பாடாக முடித்துக் காட்டுவர்.

பெருங்கடுங்கோவின் பாலைப் பாடல்களில் எல்லாம் புணர்ச்சி மயக்கம் இருப்பதைக் காணலாம். அருகிருக்கும் போதே இத்துணைஅல்லல் உறுபவள் பிரிந்தால் உயிர் வைத்திராள் என்று தலைவன் செலவழுங்கும் பாலையிலும், பூ வேய்ந்த நின் கூந்தலில் தூங்கிய துயிலை மறந்து அவர்க்குத் தூக்கம் வருமோ என்று தோழி ஆற்றும் பாலையிலும், சுரங் கடந்தோரைப் பழித்தல் கூடாது, அவரைப் பிணித்துக் கட்டும் ஆற்றல் இல்லாத தோளே பழியுடையன என்று தலைவி நோவும் பாலையிலும் இன்ப உள்ளங்கள் தெரிகின்றன. ஆதலின் எல்லா அகப்பாடல்களும் முன்னும் பின்னும் புணர்ச்சியை நோக்கியே இயல்வன என்று தெளி யலாம். காமத்துப்பால் இறுதிக் குறளில் 'கூடி முயங்கப் பெறின்' என்று திருவள்ளுவர் முடித்திருத்தல் ஒரு பெருஞ் சான்றாகும்.

28. பேயனார்

105 அகச்செய்யுட்களின் ஆசிரியர் பேயனார். ஐங்குறு நூற்று முல்லை நூறு இவர் யாத்தவை. புறமாக யாதும் பாடிற்றிலர். திணைகளுள் முல்லையும் அதன் உரிப்பொருளான இருத்தலும் இலக்கியப் புனைவுக்குப் பெரு வாய்ப்பு நல்குவன அல்ல. புலவரின் திறத்தால் அவை வளம்பெறல் வேண்டும். முல்லைக்கலி நல்லுருத்திரனார் அகத்திணைக்கு உரிய முதல் கருப்பொருள்களைக் கொண்டாரேனும், இருத்தல் பாடாது, குறிஞ்சிக்கு உரிய புணர்தலைப் பாடி இலக்கிய வென்றி அடைந்தார். உரிப்பொருள் மாற்றத்தாலும், ஆயர்தம் ஒழுகலாறுகளைக் கொண்டு கூறியதாலும், முல்லைக் கலி புத்தொளி பெறுவதாயிற்று. பேயனார் முதல் கரு உரி என்ற மூன்றானும் மரபுப்படி முல்லை நூறு பாடியவர். இந்நூறும் கற்புத்திணையன. முற்றும் மரபு வழிப்பாடினாலும் உள்ள சிறப்புக் குன்றாது என்பதற்குப் பேயனார் அகங்கள் எடுத்துக்காட்டு.

புலவர் நல்ல துறைகளாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ளார். கற்பவர்க்கு இல்லற வழிகாட்டியாக இத்துறைப் பாக்கள் இலங்குகின்றன. பெருவருத்தமும் பேரின்பமும் ஆகிய மிகை யுணர்ச்சிகள் இன்றி இவை இயங்குகின்றன. பிற ஐங்குறுநூற்றுப் புலவர்கள் பெரும்பாலும் பாடல் தோறும் துறைவேறுபடச்

செய்துள்ளனர். அஃதாவது பிறர் நூறுகள் மிகப் பல்துறை பற்றியன. பேயனாரோ ஒரு துறையில் பப்பத்து உள்ளங்களைக் காட்டுவர்; துறையைப் பலவாக்கி உள்ளங்களைப் பலவாக்காமல் (அஃது எளிது), துறை யொன்றின்மேல் உள்ளப் புனைவு பலவாறு செய்குவர். தலைவியின் இல்லஞ் சென்றுவந்த செவிலி தன் உவகையைச் சொல்லும் துறையிற் பத்தும், தலைவன் சென்ற சுரம் இனியது என்று தோழி ஆற்றுவிக்கும் துறையிற் பத்தும், வினைமுற்றி மீளும் தலைமகன் தேர்ப் பாகனுக்குக் கூறும் துறையிற் பத்தும், வினைமுடித்துப் புகுந்த தலைவன் தலைவிக்குச் சொல்லும் துறையில் ஐந்தும், குறித்த காலத்திற்கு முன்னே தலைவன் வந்தது உரைக்கும் துறையில் ஐந்தும் ஆக உள்ளோட்டங்களைப் புலப்படுத்துவர் பேயனார்.

புலவரின் அகத்தலைவன் போர் மறவன், வேந்தன் துணைவன், இல்லற நினைவன். போர்குறித்த காலத்துள் முடியவில்லை; பகைவர் திறை கொடாமையால் இகல் நீளுகின்றது, பாசறைக்கண் இருக்கும் தலைவன் தான் சொல்லிய பருவ வரவு கண்டு தலைவி கவல்வாளே என்று எண்ணிப் பார்க்கின்றான். வேந்தன் போர்த்தொழிலை விடுவானேல், எவ்வளவு தொலைவாயினும் ஒல்லெனச் சென்று இளம்பிறை போலும் அவள் நுதற்கவினைக் காண்போம் என்று (ஐங். 344) ஏங்குகின்றான்.

> **அறுவனப் பெய்த அலர்தா யினவே;**
> **வேந்துவிட் டனனே; மாவிரைந் தனவே**
> **முன்னுறக் கடவுமதி பாக**
> **நன்னுதல் அரிவை தன்னலம் பெறவே** (ஐங்கு. 483)

வினை முடித்ததும் மறத்தலைவனுக்குக் காதல் பொங்குகின்ற்து. உவகை பீறிடுகின்றது. குதிரையைத் தூண்டமாறு பாகனைத் தூண்டுகின்றான். இப்பாவின் சிறு தொடர்கள் அவனது பல் உவகைகளைக் கா ட்டுகின்றன.

போர் முடிந்த தலைவனது காதற் பாங்குகளை வேறு வேறு வகையால் புனைகுவர் பேயனார். பாகனுக்குச் சொல்லும் சொற்களிலும், வருவழிக் காட்சிகளிலும் அவன் உள்ள மயக்கத்தைக் காணலாம். தேர்ப்பாகனது விரைவு தலைவனது உள்ள விரைவுக்குக் குறைவாகவே தோன்றுகின்றது. நேரிழையாளை மறந்த காலம் பெரிது ஆதலின் தாற்றுக் கோலால் குதிரையைக் குத்தி விரைவு செய்க ("முள்ளிட்டு ஊர்மதி வலவ") எனத் தேர்வலவனை ஏவுகின்றான் காதற்றுடியன். வினை நீட்டித்தவிடத்தும், கார்ப்பருவம் வந்த போதும், பாணன் தூதுவரக் கண்ட காலையும் தலைவியை எண்ணுதலால்,தலைவனது காமவுணர்வு பெறப்படும். அன்ன உணர்வினன் ஆதலின் சிலபோது சொல்லிய பருவத்திற்கு முன்னேயே வந்து தலைவியொடு மகிழ்கின்றான். பொருநனாயினும் காதலியின் வேட்கையை மதிக்கின்றான். மதித்தொழுகவேண்டும் என்பது பேயனார் காட்டும் அகத்திறம். புதுப்புனலில்

பரத்தையரொடு தலைவன் நீராடுகின்றான் என்றும், அது மனைவியின் ஊடலுக்குக் காரணமாயிற்று என்றும் புலவர்கள் பாடுவது பொதுவழக்கு. பேயனாரின் தலைவன் நல்ல குடும்பத் தலைவன்; செவ்விய வாழ்வினன். சிதறு படாத நெஞ்சினன்; இனிய இன்பச் செயலன்.

ஆர்குரல் எழிலி அழிதுளி சிதறிக்
கரர்தொடங் கின்றாற் காமர் புறவே;
வீழ்தரு புதுப்புனல் ஆடுகம்
தாழிருங் கூந்தல் வம்மதி விரைந்தே *(ஐங். 411)*

பிரிந்து சென்ற கணவன் கார் காலத்துக்கு முன்னே வந்து மனையாளிடம் சொல்லும் பாட்டு இது. "கூந்தல் அழகி, வா. புதுப்புனல் ஆடுவோம்" என்று அழைக்கின்றனன். உடன் அழைத்துச் சென்று முல்லைக்காட்டின் இயற்கை வனப்புக்களைக் காட்டி இன்புறுகின்றான். "நின் நெற்றி போல மணக்கும் முல்லை வனத்தில், நின் சாயல் போலும் மயில் ஆடுவதைக் காண்; பறவைகளும் இணையொடு கூடித் திரிவதைக் காணாய்" என்று காண்பிக்கின்றான் கணவன்.

உயிர்கலந் தொன்றிய செயிர்தீர் கேண்மை
பிரிந்துறல் அறியா இருந்து கவவி
நம்போல் நயம்வரப் புணர்ந்தன
கண்டிகும் மடவரல் புறவின் மாவே *(ஐங். 419)*

உயிர்க்கலப்பு ஒன்றிய கேண்மை, பிரிவறியாமை, மெய்யணைவு இவை காதற் பண்புகள். இப்பண்புகள் உடைய நம் புணர்ச்சி போலவே, முல்லைநில உயிர்களும் இனிது கூடிக் குலவுவதைச் சுட்டி உணர்த்துகின்றான் தலைவன். பேயனாரின் இம்முல்லைப் பகுதிகள் குடும்ப நல்லுறவைக் கற்பிப்பன. களவிலும் கற்பிலும் காதற்றுறையில் முன்சொல்லி முன்னியங்க வேண்டுபவன் ஆடவன் ஆவான். அவனது காதலியக்கம் தலைவியை இயக்கும்; நாணத்தால் உள்ளோடிக் கொண்டிருக்கும் அவனது ஆர்வத்தைப் புலனாக்கும். அகத்தலைவன் காலம் நீட்டித்துத் தலைவியை இரங்கவிடாதபடி, வந்து கலந்து புணர்ந்து அமர்ந்து மகிழ்ந்து எழிற் காட்சிகளைக் காட்டி விதிக்கின்றான் என்று கற்கும்போது, பேயனாரின் படைப்பு வடிவிலக்கியம் என உணரலாம். புனையவேண்டி இல்லறத்தின் ஊடுபாடுகளைக் கொள்ளாது, ஒழுக்கப் பாடுகளின்மேல் செய்யுள் தொடுக்கும் இயல்பான ஆற்றல் உடையவர் பேயனார் என்று உணரலாம். ''இனிது கழிப்பின் இளமையும் இனிது, இனியவர் புணர்ச்சியும் இனிது'' என்று தலைவன் இளமையையும், அப் பருவக் காமத்தையும், அக்காமத்தைக் கார்ப்பருவத்தில் நுகர்வதையும், புணர்வுப் பொலிவுகளைக் கண்டு காட்டி இன்புறுவதையும் நல்வாழ்வாக மதிக்கும்போது பேயனாரின் தலைவன் பின்பற்றத் தக்கவன் என்றுபடும்.

பேயனார் ஒரு துறைமேல் பல பாடல் எழுதியவர் என்று முன்னர்க் கண்டோம். பருவம் கண்டு கிழத்தி உரைத்த பத்து,தோழி வற்புறுத்த பத்து. பாணன்பத்து, தேர்வியங்கொண்ட பத்து, வரவுச் சிறப்புரைத்த பத்து என்ற வகையில் சிலதலைப்புக்கள் அமைந்துள்ளன. இத்தலைப்புக்கள் அளவில் நோக்கும் போது, கருத்துத் தொடர்ந்து இயங்குவதைக் காணலாம். இன்னும் கூர்ந்து தலைப்பினுள் வரும் பாடலின் துறைகளைக் காண்போமேல், கருத்துத் தொடர்ச்சி இல்லை என்பதும், வேறுபட்ட நெஞ்சுப் புனைவு என்பதும் அறியப்படும். செவிலி கூற்று என்னும் துறையில் வரும் செய்யுட்கள் போதும் பேயரின் புலமைப் பண்பினைக் காட்டு வதற்கு. குழந்தையுடன் குடும்பமாகவும் குடும்பத்தைப் பிணிக்கும் குழந்தையாகவும் பரத்தமை நினையாக் காதலனாகவும்,பிரிவறியாக் காதலியாகவும், யார்க்கும் வழிகாட்டும் இல்லியாகவும் முதற்பத்துப் பாடல்களை வடித்த பெருமையர் பேயனார். புதல்வனை நடுவிற் கிடத்தித் தலைவனும் தலைவியும் படுத்துள்ளனர். இக்காட்சி எவ்வுலகத்தும் காண அரியது என்று உவக்கின்றாள் செவிலி. மகனுக்குப் பால்கொடுத்துக் கொண்டிருக்கும்போது,அவள் முதுகுப்புறத்தை தழுவுகின்றான் தலைவன். அவளும் தன் காதலன் மகனை எடுக்கிக் கொண்டிருங்குங்கால் இருவரையும் சேர்த்து அணைக்கின்றாள். மகன் விளையாடும் பொழுது காதலியை அணைத்து இனிதிருந்து காண்கின்றான்.

மாலை முன்றிற் குறுங்காற் கட்டில்
மனையோள் துணைவி யாகப் புதல்வன்
மார்பின் ஊரும் மகிழ்நகை இன்பப்
பொழுதிற் கொத்தன்று மன்னே
மென்பிணித் தம்ம பாணனது யாழே. *(ஐங். 410)*

மாலைக் காலத்து வீட்டின் முற்றத்தில் ஒரு சிறிய கட்டில், மனைவி அருகிருக்கத் தலைவன் அக்கட்டிலிற் படுத்துள்ளனன். இளஞ் சிறுவன் தந்தை மார்பில் ஏறி விளையாடுகின்றான். அவ்வமயம் பாணன் யாழ் வாசிக்கின்றான். இவ்வாறு அகக் காதலர்தம் பொழுதுபோக்கையும் இசைக்கலை யுணர்வையும் இலக்கியப் படுத்துவர் புலவர். அவர் காட்டும் இல்லறக் காட்சி புனைந்துரை யன்று. இன்றும் பலர்தம் வாழ்விற் காணத்தக்க இயல்புக் காட்சியேயாம்.

29. மருதன் இளநாகனார்

74 அகப்பாக்களின் படைப்பாளர் இளநாகனார். மருதக் கலி இவர்தம் ஒப்பற்ற இலக்கியக்கொடை. அகநானூற்றில் 23, நற்றிணையில் 12, குறுந்தொகையில் 4, கலித்தொகையில் 36 ஆக இவர் பாடல்கள் உள. களவு பற்றியன 16; கற்புப் பற்றியன 58. திணை ஐந்தும் பாடவல்ல பெற்றியராக விளங்குகின்றார் இளநாகர்.

நாணுடைத் தலைவன்

புலவரின் களவுப் பாக்கள் சிலவாயினும், அவை அவர்தம் கற்புப்பாக்களை அறிதற்குத் துணையாவன. களவுத் தலைவன் மிக நாணுடையன். தன் காம வேட்கையை வெளிப்பட்ட சொல்லால் சொல்லக் கூசுகின்றான். நாள் தொறும் வருகின்றான். வாய்வாளாது திரும்புகின்றான். நெய்தல் நிலத்தில் காதற் காட்சிகளைக் காணுந்தொறும் அவன் நெஞ்சம் காமப்புண் உறுகின்றது. உற்றதை உரைக்கவோ நா எழவில்லை. காமம் உறாதபடி காக்கவோ நெஞ்சுக்கு வலுவில்லை. காமம் என்றும் பின்வாங்காது, காதலுணர்வுக்கு அயர்வில்லை. காதல் நெறியில் ஒருகால் உள்ளம் ஓடிவிடின், உரியாரை எய்தும் வரை ஓடிக் கொண்டிருக்குமல்லது,திரும்பாது, உரியார்க்குப் புலனாக்காவரை உள்ளம் ஓடுங்காது. வாய்சொல்ல அஞ்சும் எனினும், அஞ்சும் சொல்லில் காதல் விளங்கும். மெய் நெருங்க அஞ்சும் எனினும் அந்நிலையில் காமத் துடிப்பு வெளிப்படும்.

முன்னாட் போகிய துறைவன் நெருநை
அகலிலை நாவல் உண்துறை உதிர்த்த
கனிகவின் சிதைய வாங்கிக் கொண்டுதன்
தாழை வேரளை வீழ்துணைக் கிடூஉம்
அலவற் காட்டி நாற்பாற் றிதுவென
நினைந்த நெஞ்சமொடு நெடிபெயர்ந் தோனே
உதுக்காண் தோன்றும் தேரே இன்னும் *(அகம். 380)*

தோழி தலைவிக்குத் தலைவனது உள்ளோட்டத்தைப் புலப்படுத்தும் பாட்டு இது. "வந்து வந்து போகும் அன்பன் நேற்று ஒன்று செய்தான். துறையில் நாவற் பழங்கள் உதிர்ந்து கிடந்தன. பழுத்த கனியொன்றை ஆண் நண்டு எடுத்துக் கொண்டுபோய் வளையில் இருக்கும் மனை நண்டுக்குக் கொடுத்தளிப்பதைக் கண்டான். அதனை எனக்குக் காண்பித்து. 'இதுவன்றோ நல்ல செயல்' என்று சிலசொற் சொல்லி,மேலொன்றும் சொல்ல வாராது எதனையோ எண்ணிக் கொண்டு போய்விட்டான். இன்று இதோ வருகின்றான்" என்ற தோழி கூற்றில், தலைவனது அடக்கத்தைக் காண்கின்றோம்.இளநாகனார் புனையும் களவுத்தலைவனது பண்பு இது.

நாணில் தலைவன்

புலவர் பாடுதற்கு மிகுதியும் மேற்கொண்ட உரிப்பொருள் மருதப் பரத்தமையாம். அதனாற்றான் மருதன் இளநாகனார் என்ற சிறப்புப்பெயர் பெற்றார்.அகத்திணையின் முதல் கரு உரி என்ற மூன்றும் பாடவல்லவர் எனவும்,அகத்திணைக்கு இன்றியமையாத உள்ளுறையுவமம் அமைக்க வல்லவர் எனவும் அறிகின்றோம். தலைவனது பரத்தமை வளர்ச்சிக்கு மருதக்கலி அடுக்கிச்

சொல்லுகின்றது. அவனது பரத்தையரின் தொகை ஓர் ஊரளவுக்கு இருக்கும். ("ஓரூர் தொக்கிருந்த நின்பெண்டிர்" கலி. 68) பல ஆறுகள் வந்து கலப்பினும் கடல் நிறையாதது போலப் பரத்தையர் பலரோடு உறவாடியும் அவன் மனத்துக்குக் காம நிறைவில்லை; நாளும் நாளும் புதுவோரை விரும்புபவன் எனத் தலைவனது தண்டாக் காமம் புனையப்படுகின்றது.

நீயே பெருநலத் தையே; அவனே
தண்கமழ் புதுமலர் ஊதும்
வண்டென மொழிப மகனென் னாரே (நற். 390)

பரத்தத் தலைவனுக்குத் தலைவி ஆற்றாதபோது, ஆற்றுவிக்கும் தோழி பாட்டு இது. கணவன் நெஞ்சை ஒருவழி நிறுத்தும் ஆண்மகன் அல்லன்; பொழுதுக்குப் பொழுது புதுமலர் நாடும் வண்டு போல்வன என்பதை எல்லோரும் அறிந்துள்ளனர். எல்லா நலமும் அழகும் வாய்ந்த நீ கவல வேண்டா. அவனது புறச்செலவுக்கு அவன் பண்புக்குறைவே காரணம் என்பது தோழியின் அமைதியுரை. "வண்டென மொழிப மகன் என்னாரே" என்ற ஓடி. போதும், தலைவனது தணியாப் பரத்தமையைக் காட்டுதற்கு.

தலைமகன் வண்டனையன் ஆகும்போது, நாணம் தங்குமா? சொற்கருக்கம் இருக்குமா? சொல்லுருதி நிலைக்குமா? பரத்தைக் குறிகளொடு வீடு வருகின்றான்; அக் குறிகளுக்குப் பொருளுரைக்கின்றான்; தலைவி ஏற்றுக்கொள்ள வேண்டி. விருந்தினரை அழைக்கின்றான்; மகனைச் சுமந்து நுழைகின்றான்; பாணனையும் பாகனையும் தூதுவிடுகின்றான்.

நலத்தகை எழிலுண்கண் நல்லார்தம் கோதையால்
அலைத்தபுண் வடுக்காட்டி அன்பின்றி வரின்
கோடெழில் அகலல்குற் கொடியன்னார் முலைமுழ்கிப்
பாடழி சாந்தினன் பண்பின்றி வரின்
இனிப்புணர்ந்த எழில்நல்லார் இலங்கெயிறு உறாஅலன்
நனிச்சிவந்த வடுக்காட்டி நாணின்றி வரின்

வரைவில் மகளிர் மாலையால் அடித்த பசும்புண்ணோடும், அன்னவர் மார்பில் தோய்ந்த நறுஞ் சந்தனத்தோடும் ஒளிப்பற்கள் பதித்த செவ்வடுவோடும், அன்போ பண்போ நாணமோ இன்றிப் புறக்கோலம் குன்றாது மனைவிமுன் வந்து நிற்கின்றான் வாழ்க்கைக் கணவன். இது இளநாகனார் புனையும் கற்பியற்றலைவனது பண்பு.

அகப்புலமைத் திறன்

மேற்காட்டியவாறு களவுத்தலைவன் நனிநாணுடையன் ஆகவும், கற்புத்தலைவனைப் பெருநாணிலி ஆகவும் பண்பு முரண்பட இளநாகர் அகஞ்செய்வர். இங்ஙனம் வேற்றுத் தன்மை தோன்ற ஆட்பண்புகளை அமைப்பது இலக்கிய வழக்கு. ஒரு புலவர்

பாடல் பல யாத்திருப்பாரேல் அவர் தம் காதல் மாந்தர்களை ஒற்றுமை வேற்றுமை தெரிய ஆராயலாம். களவுத் தலைமக்கள் இயல்பும் கற்புத் தலைமக்கள் இயல்பும் ஒன்றாக உள்ளனவா? களவிலும் பல்வேறு துறையில் வரும் மாந்தர்கள் ஓரியல்பு உடையவர்களாக விளங்குகின்றனரா? கற்புத்துறை பலவற்றில் வரும் ஆட்கள் இயல்பும் ஒத்தனவா? என்றெல்லாம் காணமுற்படலாம். ஒருவர் ஐந்து களவுச் செய்யுட்கள் இயற்றியுள்ளார் என வைத்துக் கொள்வோம். அவ்வைந்திலும் தலைவன் காமவுணர்வு மிக்கவனாக விளங்கலாம். பகற் குறியும் இரவுக்குறியும் வரைவு நீட்டிப்பும் வேண்டுபவனாகத் தோன்றலாம். தலைவியும் அவ்வுணர்வு மிக்கவளாக இருக்கலாம். விருந்தாகத் தலைவன் இல்லத்துக்கு அழைக்கலாம். அப்புலவரே கற்புச் செய்யுட்கள் ஐந்து இயற்றியுள்ளனர் எனவும் வைத்துக் கொள்வோம். அவற்றிலும் கணவன் மனைவி பெருங் காமவுணர்வினராக அமையலாம். இங்ஙனம் ஒரு புலவன் தன் அகமாந்தர்களைத் தொடர்பு படுத்திப் பண்புநலம் காணும்போது, நிகழ்ச்சித் தொடர்பு இருப்பதுபோற் காணப்படும்; ஒரு பாட்டின்கண் இயற்கைப் புணர்ச்சித் துறையில் வரும் தலைவனே ஏனைக் களவுப் பாடல்களுக்கெல்லாம் தலைவன் ஆகவும், அக்களவுத் தலைவனே அப்புலவன் யாத்த கற்புப் பாடல் களின் தலைவன் ஆகவும் கொள்வதுபோற் காணப்படும். இளநாகரின் களவுத் தலைவன் நாணன் எனவும், கற்புத் தலைவன் நாணிலி எனவும் மேலே விளங்கியபோது, நாணுடையவனே பின்னர் நாணிலியாக மாறிவிட்டான் என்று ஒரு தலைவன் மேலாகக் கொள்வதற்கு இடந்தருகின்ற தன்றோ? இங்ஙனம் கொள்வ தெல்லாம் பிழை. அகத்திணைத் தனியமைப்புக்கு முரண்.

ஓரகப் பாட்டிற்கும் மற்றொரு அகப்பாட்டிற்கும் ஆசிரியன் ஒருவனே எனினும் காதற்றொடர்பு இல்லை,கூற்றுத் தொடர்பு இல்லை. வரைவு கடாய்து என்று நான்கு பாடல்கள் இருந்தாலும், தோழி தலைமகளைப் பிரிவின்கண் வற்புறுத்தியது என்று நான்கு பாடல்கள் இருந்தாலும் தலைவனது பரத்தமை பற்றித் தலைவி புலந்தாள் என்று கலிப்பாடல்கள் முப்பத்துக்குமேல் இருந்தாலும், இவ்வனைத்தையும் யாத்த புலவன் ஒருவனாயினுங்கூட, அப்பாக் களின் அகமக்கள் பாடல்தோறும் வெவ்வேறாகவே கருதப்படுவர், கருதப்படல் வேண்டும். இதுவே அகப்பாட்டின் அமைப்பு என்று அறிக.

ஓர் அகப்புலவன் தன் செய்யுட்களை ஒருங்குவைத்து ஆராயும் போது,அவனது இலக்கியப் போக்கைக் காண முயல்கின்றோம். மாந்தர்களின் உள்ளோட்டங்களாக அவன் படைத்த திறங்களை அறிய முயல்கின்றோம். ஒருவன் தன் அகப்பாக்களை ஒருங்குகொண்டு ஆய்வதன் நோக்கம் புலவனது புலமையைப் பற்றியதேயன்றி அகமாந்தர்களைப் பற்றியதன்று; அவன் படைத்த துறைகளை யெல்லாம் பண்பில் ஒற்றுமை இருப்பினும் வேற்றுமையிருப்பினும் ஒருவர் மேலாக மாட்டி விடுவதற்கன்று. இரண்டு முதலான பாடல்கள் யாத்த புலவன் கற்பை முன்

பாடினனா? களவை முன் பாடினனா? வரவை முன் பாடி, இயற்கைப் புணர்ச்சியைப் பின் பாடினனா? வினைமுற்றிய தலைமகனது வரவைப் பாடியபின், பிரிந்த தலைவியின் துயரைப் பாடினனா? துறை முன்பின் நாம் அறியோம். இவ்வுண்மையைப் புலப்படுத்தும் நோக்கோடுதான், அகத்தொகை செய்தோர் ஒரு புலவரின் பாடல்கள் ஒருசேரத் தொகுத்துக் காட்டவில்லை; துறை நிரல்பட வைத்துக் காட்டவில்லை. ஒரு தொகைக் கண்ணுங் கூட அடுத்தடுத்து வைக்கவில்லை. மிளைப்பெருங் கந்தனார் தலைமகன் பாங்கற்கு உரைத்தது, தலைமகனுக்குப் பாங்கன் உரைத்தது என்ற துறைத் தொடர்பில் இரு பாடல்கள் யாத்தார். இவை இரண்டும் குறுந் தொகையில் உள எனினும் அடுத்தடுத்து இல்லை. தலைமகன் உரைத்தது 136 ஆம் செய்யுளாகவும், பாங்கன் உரைத்தது 204 ஆம் செய்யுளாகவும் இடம் பெற்றுள்ளன. யார் உரைத்தது முன் என்று யார் அறிவார்? தமிழ்க்காதல் என்னும் இந்நூலைக் கற்பவர் இவ்விளக்கத்தை யாண்டும் மறவாது போற்றிக் கற்க வேண்டும்.

காதற் கற்பு

இளநாகனாரின் திணைத்தலைவி தலைவனது பெரும் பரத்தமை எவ்வளவு அவ்வளவினையும் பொறுக்கும் இல்லற திலகமாக விளங்குகின்றனள். பரத்தைக் குறியொடு வரினும் அவன்பால் உள்ளம் நெகிழ்ந்து ஏற்கின்றனள், ஆண்டிற்கு ஒரு முறை ("ஓர் யாட்டு ஒரு கால் வரவு" கலி.71) வரினுங் கூட மழை வரவுபோல அவன் வரவை மதிக்கின்றனள். தலைவன் வருவதற்கு முன்னே அவன் வரவை உடன்படலாகாது, நெஞ்சம் இளகலாகாது என்று பாடஞ் செய்து கொண்டிருப்பினும், அவனைக் கண்டதும், தன் கடனை உணர்கின்றாள்; அவன் குற்றத்தை மறக்கின்றாள். கணவனது ஒழுக்க நிலை இப்படி இருப்பதற்காக, நாம் என் செய்வது என்பது அவள் கருத்து.

மாய மகிழ்நன் பரத்தைமை
நோவேன் தோழி கடன்நமக் கெனவே (கலி. 75)

தலைவனது இழிவுப் போக்கை உணராதவளும் அல்லள். அவனது பொய்க்கு ஏமாறுபவளும் அல்லள். அவன் ஒழுக்கத்தன் என்று தன்னை ஏமாற்றிக் கொள்ளுபவனும் அல்லள் அவனை ஏற்று இன்புறல், இன்புறுத்தல் தன்கடன் என்ற ஓரறத்தையே கடைப் பிடிப்பவள். இளநாகரின் மருதக் கலியில் பரத்தையர்க்கு முதன்மை யில்லை. தலைவனது பரத்தமைக்கு முதன்மையில்லை. அனைத் தையும் பொறுத்துத் தாங்கி அவனை அணையும் தலைவிக்கே முதன்மை. மருதக் கலிகள் சுரிதகத்தில் குறிஞ்சியாக முடிவதைக் காண்க. கற்புடைய நங்கையின் காதற் கடமையைக் காட்டுவதற்கே மருதக்கலி வரைந்தார் புலவர் என்று தெளிக.

குழந்தைத் துணை

குழந்தைக் குடும்பம் கூறுபடாது என்ற ஓர் உலகியலைக் காட்டுவது மருதக்கலி. "கடவுட் கற்பொடு குடிக்கு விளக்காகிய புதல்வற் பயந்த புகழ்மிகு சிறப்பின் நன்னராட்டி" (அகம். 184) என்று தாய்மையைப் போற்றிப் புகழ்வர் இளநாகனார். மனைக்கு விளக்காயினள் புதல்வன் தாய் (ஐங். 405) என்று மனைமையைப் பாராட்டுவர் பேயனார். "மனைக்கு விளக்கம் மடவாள், மடவாள் தனக்குத் தகைசால் புதல்வர்" என்று நான்மணிக்கடிகை ஆசிரியர் விளம்பிநாகனார் மனைவிளக்கு, குடி விளக்கு என இரண்டையும் கூறுவர். இதனால் நாம் அறியக் கிடக்கும் தமிழ் நாகரிகம் என்ன? கற்புடைய நங்கையே மனைவிளக்காவாள், அந்நங்கை பெறும் குழந்தையே குடி விளக்காகும் என்பது. இவ்வகை விளக்குகள் பரத்தையர்க்கு இல்லை என்பதை,

> அவரும்
> பைந்தொடி மகளிரொடு சிறுவர்ப் பயந்து
> நன்றி சான்ற கற்போடு
> எம்பா டாதல் அதனினும் அரிதே (நற். 330)

என்னும் ஆலங்குடி வங்கனார் செய்யுளால் அறியலாம். கற்பொடு படாதவழி வரும் குழந்தை குடிக்கு விளக்காகாது என்ற குறிப்பு இம் மேற்கோள்களாற் பெறப்படும்.

மருதக்கலியில் பரத்தைத் தந்தையையும் துனிக்கும் தாயையும் இணைக்கும் மகனாகப் புதல்வன் விளங்குகின்றான். பகலெல்லாம் வேற்றிடத்துத் தங்கிய பரத்தனே என்று தலைவி சினந்தக்கால், தலைவன் யாதும் மறுமொழியாது மகனைக் தழுவிக்கொண்டு தூங்குவதுபோற் கிடப்பான். மகன் கிட்டச் செல்லாதே, எதிர் நில்லாதே என்று தலைவி மறுக்கும்போது, என் தந்தை பெயரிட்டவனை நான் அணைத்துக் கொள்வேன்; உனக்கென்ன? என்று சொல்லி விட்டுக் கன்று இருக்குமிடம் செல்லும் பசும்போல மகன் இருக்குமிடம் பாய்வான்.

> குன்ற இறுவரைக் கோண்மா இவர்ந்தாங்குத்
> தந்தை வியன்மார்பிற் பாய்ந்தான் அறனில்லா
> அன்பிலி பெற்ற மகன் (கலி. 86)

மகனுக்கு அறஞ்சொல்லுவதுபோல் அவன் தந்தையை இடித்து உரைக்கின்றாள் தலைவி. அப்போது காதலன் வந்து விட்டான். தாயின் பிடியை விடுத்துக்கொண்டு அத்தத்தா என்று அவன் மார்பிற்போய் விழுந்தான் மகன். அப்பாய்ச்சலைக் கண்ட தலைவி 'மலைமேல் சிங்கம் பாய்ந்தாற்போல' என்று உவமை கூறுகின்றாள். அவள் ஊடல் தீருகின்றாள் என்பது பெருமித வுவமையிலிருந்து பெறப்படுகின்றது. தலைவன் பரத்தமைக்குப் போயிருக்கும்போது, மகன் ஓர் ஆறுதல் பொருளாகத் தலைவிக்கு உள்ளான். கிண்கிணி ஒலிக்கும் அவன் தளர்நடையைக் கண்டும், அத்தத்தா என்னும்

அவன் தேமொழியைக் கேட்டும், வருக என அவனுக்கு அம்புலியை அழைத்தும் ஆறுதல் அடைய முயல்கின்றாள் இல்லறநங்கை. இவ்வாறாக மருதக்கலியில் பெண்ணின் தாய்மையையும் விளங்கக் கற்கின்றோம். பரத்தைத் தலைவனுக்கும் மகப்பற்று உண்டு எனவும், அப்பற்று இல்லறப் பற்றைப் பெருக்கும் எனவும் அறிகின்றோம்.

ஊடற்கலை

இளநாகனாரின் மருதக்கலி பல்வகை மாட்சியுடையது; தலைவியின் நிறையையும் அவளது ஊடற்றிறத்தையும் காட்டுவது. சில கலிகளில் தலைவன் மெய்யாகவே பரத்தன்; வேறு சில கலிகளில் பரத்தனாகத் தலைவியால் கருதப்படுபவன். மெய்ப்பரத்தமை பொய்ப்பரத்தமை என்ற இரு நிலைகளில் வைத்து மருதத்திணையைப் புனைவர் இளநாகர். ஆடவனுக்கு ஒரு மணவரம்பு இல்லை. ஆதலால்,அவ்வரம்பு உடைய தலைவி கணவனைப் பல மணத்தனாகவும் இயல்பில் கருதுவாள், அவனுக்கு முன்னே வெளிப்படையாகக் கூறுவாள்.

செய்யாத சொல்லிச் சினவுவது ஈங்கெவன்
ஐயத்தால் என்னைக் கதியாதி (கலி. 91)

என்பது ஒரு தலைவன் வேண்டுரை.

இந்த இப்பிறவிக்கு இரு மாதரைச் சிந்தையாலும் தொடேன் என்று சீதைக்கு வரங்கொடுத்தான் என்பது இராமாயணக் குறிப்பு. அதனைக் கிடைத்தற்கு அரிய செவ்வரம் என்று மறவாது போற்றிப் பொதிக்கின்றாள் சீதை. இது இராமனுடைய இல்லறமாட்சியைக் காட்டுகின்றது. எனினும், இராமனிடத்து அவ்வரம் கேட்கவும் அவன் கொடுக்கவும் வேண்டிய நிலை எதனால் வந்தது? பெண்ணிடத்து அத்தகைய ஓர் வரம் கேட்கத் துணியும் சமுதாய வழக்கு உண்டா? ஏன் இல்லை? ஆடவன் மணவரம்பற்றவன் என்பது சமுதாய அமைப்பு. அதனால் கம்பரின் இராமாயணத்தில் இராமனாயினும் சீதை வரம் கேட்டாள். இரு மனைவி என்று சொல்லாது இருமாதர் என்றதனால், பரத்தை வழக்கியலை உட்கொண்டு இராமன் வரங்கொடுத்தான் என்று அறியலாம். 'பகைவர் பெருவருத்தம் அடையுமாறு போரிடேனாயின், வரைவில் மகளிரைத் தோய்ந்த இழுக்கத்திற்கு ஆளாவேன்' என்று கற்புடைய வஞ்சினம் மொழிந்தான் சோழன் நலங்கிள்ளி (புறம். 73) இங்ஙனம் கூறும் வழக்கு இற் பெண்டிர்க்கு உண்டா? கூறலாமா? ஆதலின் ஆடவன் மெய்யாகப் பரத்தன் அல்லனாயினும், சமுதாயக் கண்ணுக்கும் மனைவியின் உள்ளத்துக்கும் பரத்தமைப் பாலன் ஆகத் தோன்றுகின்றான். இத் தோற்றமே சில மருதக் கலிக்கு அடிப்படையாகும்.

புறத்துப்போய் வந்த கணவன் வாழ்க்கைக்கு உதவும் முனிவர்களாகிய கடவுளரிடம் தங்கி வந்தேன் என்று சொல்லினான். நெட்டிருங் கூந்தல் உடைய கடவுளா? என்று நகையாடிப் புலந்தாள்

மனைவி. எங்கே சென்றிருந்தாய் என்று வினவிய தலைவிக்குக் குதிரை ஏறிவருகிறேன் என்றான் காமக் குதிரையை நிலா முற்றத்தில் ஓட்டி விளையாடினையோ? அக் குதிரை விளையாட்டு உன் அழகைக் கெடுக்கும் என்று ஊடினாள் தலைவி.

முத்தேர் முறுவலாய் நம்வலைப் பட்டதோர்
புத்தியானை வந்தது காண்பான்யான் தங்கினேன் (கலி. 97)

வலைக்குள்ளே ஒரு யானை அகப்பட்டுக் கொண்டது. அந்தப் புதிய யானையை வேடிக்கை பார்த்தேன் என்றான் கணவன். "ஆம் நானும் கேள்விப்பட்டேன். அந்த யானைக்கு நெற்றியிலே திலகம் உண்டு. தொய்யில் ஓவியம் வரைந்த மார்பு உண்டு. காதில் மகரக் குழை உண்டு. மணப் பொடி பூசி நறுங்கள்ளுண்டு எல்லாரையும் பிணித்தற்குக் கதவுக்குப் பக்கத்திலே சாய்ந்து நிற்பது உண்டு. மதம் மிகுந்து விடாதபடி அந்த யானையை அடக்கு" என்று புலவி மொழிந்தாள் தலைவி. புனலாடினேன், அதனால் தாழ்த்தது என்று சொல்லிய தலைவனுக்கு,

ஓஒ, புனலாடினாய் எனவும் கேட்டேன் புனலாங்கே
நீணீர் நெறிகதுப்பு வாரும் அறலாக
மாணெழில் உண்கண் பிறழும் கயலாகக்
கார்மலர் வேய்ந்த கமழ்பூம் பரப்பாக
நாணுச் சிதையழித்து நன்பகல் வந்தஅவ்
யாணர்ப் புதுப்புனல் ஆடினாய் (கலி. 98)

நீ ஆடிய துறைக்குக் கருமணல் கூந்தலாகும்; மீன்கள் கண்களாகும்; அத்துறையில் நாணம் என்னும் கரையை உடைத்துக்கொண்டு ஒரு புதிய புனல் பகற் காலத்து ஓடி வரும் என்று அறிந்தேன் என்று நகைத்தாள் இல்லாள். எனவே அவன் சொல்லிய கடவுளையும் குதிரையையும் யானையையும் புனலையும் பலவகைப் பரத்தையர் எனக் கருத்துக் கொண்டு ஊடல் மிகுந்தாள் இக் கவிகளின் போக்கை ஆராயின், தலைவன் பரத்தன் அல்லன் என்பதும், பரத்தனாகக் கொண்டு ஊடற்கிளவி தொடுக்கின்றாள் தலைவி என்பதும் புலனாகும்.

இளநாகனாரின் திணைத் தலைவன் பரத்தனாயினும், நல்லனாயினும்,தலைவியின் ஊடலை மதிப்பவன், தன்னைப் பரத்தன் என்று அவள் பொய்படப் புனையும்போது, இது காதற் பாங்கு என்று உணர்ந்து ஊடல்மிகத் தானும் உளறிப் பேசுபவன். இம்மெய்யறிவு காதல் நம்பிகளுக்கு இன்றியமையாதது. காதலுலகம் ஒருவகைக் கனவுலகம். ஆண்டுப் பொய் மெய்யாகும், தாழ்வு உயர்வாகும், ஊடற்றுன்பம் இன்பமாகும்.

மனைவி உயர்வும் கிழவோன் பணிவும்
நினையுங் காலைப் புலவியுள் உரிய (தொல்; 1172)

என்பது புலவிக் கலையாதலின், காதற் போர்க்களத்து ஆடவன் அடிமையும் பெண்ணின் தலைமையும் இன்ப வெற்றியை அளிக்கின்றன. இன்ப மெய்ப் புணர்ச்சிக்கு ஆண் தன்னை

விட்டுகொடுத்து அடிபணிதல் வேண்டும் எனவும், அங்ஙனம் விட்டுக் கொடாமையே, பால் நோயியலின்படி பல பால்வகைத் துன்பங்கட்கு மூலகாரணம் எனவும் ஏவலக் கெல்லீசர் பகருவர்.[1] எனவே ஆண்மை வீழ்ச்சி காதலுலகில் இன்பவுயர்ச்சியாம். இந்நுட்பங்களை அறிந்த தமிழ்ப் பாலறிஞர் இளநாகனார் என்பது அவர் வடித்த அகத்திணைத் தலைவன் பல்லாற்றானும் தலைவி முன் செய்யும் பணிநிலைகளாலும் சொல்லி பணிவுரைகளாலும் அறியலாம்.

ஏதப்பாடு எண்ணிப் புரிசை வியலுங்ளளோர்
கள்வரைக் காணாது கண்டேமென் பார்போலச்
சேய்நின்று செய்யாத சொல்லிச் சினவல்நின்
ஆணை கடக்கிற்பார் யார். (கலி. 81)

30. வெள்ளி வீதியார்

இப்புலமகளார் பாடிய அகங்கள் 13. களவிற்கு உரியன 5; கற்பிற்கு உரியன 8. இவர் புறம் யாதும் பாடவில்லை. களவிற் சில பாடல்களே பாடியுள்ளாரேனும், அவை பல துறைமேல் அமைந்திருக்கின்றன. கழற்றெதிர்மறை, இரவுக் குறி. உடன் போக்கு, இடைச்சுரத்துச் செவிலித்தாய், வரைவுக் கவற்சி என்பன இவர் யாத்த பாடல்களின் களவுத் துறைகளாம்.

வெள்ளி வீதியாரின் அகமாந்தர்கள் களவினராயினும் கற்பினராயினும் காமவுணர்ச்சி மிக்கவர். மழை காலத்தில் பாம்புகளை அடித்துக் கொண்டு வரும் ஆறு என்று பாராது நீந்தி, யானையாற் புண்பட்ட ஆண்புலி ஒதுங்கியிருக்கும் குகை வழியாக நடந்து நள்ளிரவில் வேலேந்தி வருகின்றான் தலைவன். அன்ன ஆர்வத் தலைவன் இன்பப்பயன் பெறாது திரும்பலாமா? நல்ல முழுநிலவு இடையூறாக உள்ளதே என்று தோழி சொல்லுகின்றாள் (அகம். 342)

ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கிற்
கையில் ஊமன் கண்ணிற் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போலப்
பரந்தன்று இந்நோய் நோன்றுகொளற் கரிதே (குறுந். 58)

இடித்துரைக்கும் பாங்கனுக்கு எடுத்துரைக்கும் களவுத் தலைவன் செய்யுள் இது. தன் காமப்பரப்புக்கு ஏற்றவாறு வெண்ணெய் உருக்கத்தை உவமிக்கின்றான். யாராலும் தடுத்தற் கரியதுதன் காமம் எனபது அவன் கருத்து. 'எவ்வளவு தான் காம வெள்ளத்தை என்

1. The Psychology of sex. p. 128

"Last but not least, we must not forget that a normal sexual union requires the same amount of surrendering and abandonment on the part of the man. And sex pathology shows that the incapacity or rather the unwillingness of men t o surrendor or abandon themselves is the root of all sexual trouble."

ாணக்கரை தாங்கும்?' என்று தோழிக்கு உரைக்கின்றாள் களவுத் நலைவியும் (குறுந். 149). இங்ஙனம் வெள்ளிவீதியின் களவுப் பாக்கள் மிக்க காமப்பாக்களாக ஓடுகின்றன.

புலமையாளின் கற்புப் பாடல்கள் எட்டும்தலைமகன் ஈற்றெனக் கொள்ளக் கிடக்கின்றன. களவுபோல் இவைகளும் மிக்க ாமத்தைப் புலப்படுத்துவன. திங்கள் ஒளியும் கடல் ஒலியும் அலையோசையும் அன்றிற்குரலும் தாழை மணமும் யாழிசையும் டுயாமத்துத் தலைவியின் தன்மையைக் கலக்குகின்றன. ஊர்விழவும் ண்டிடன் புணர்ச்சியும் அவள் காமப்புண்ணைக் கிளறுகின்றன, ண்ணுறக்கத்தைக் கெடுக்கின்றன.

என்னொடு பொருங்கொலிவ் வுலகம்
உலகமொடு பொருங்கொலென்
அவலமுறு நெஞ்சே (நற். 348)

லகமே தனக்குப் பகை என்று வாடுகின்ற ஒரு பெண் நெஞ்சம். மாலை என்பது நல்ல பொருள், மகளிர் விழாக் காலத்துச் டுதற்கென்று தொடுக்கும் மலரணி என்றுதான் கணவன் டனுறைந்த காலத்துக் கருதி இருந்தேன். அச் சொல்லுக்கு வேறும் ரு பொருள் உண்டென அறியேன். கொழுநன் பிரிந்த பிற்பாடு ாலை என்றொரு காலம் உண்டு. அது உலகம் பரந்த துயரைத் ருவது என்று அறிந்து கொண்டேன்" என்பது தனிக்கிழத்தியின் ல்லுரை. இதனால் அவள் கணவனைப் பிரியாது நெடுநாள் ாமந்துய்த்த இன்னிலை பெறப்படும்.

அடிக்கடி புணர்வும் பிரிவும் இருப்பின், உள்ளம் இன்ப துன்பப் யிற்சிபெற்று வாழும். வள்ளல் அழகப்பர்போல் போக்கும் வரவும் ண்ட செல்வன் பொருள் நிலைப்பினும் அழியினும் நெஞ்சத் ருவாளனாக விளங்குவான். துய்த்தும் வழங்கியும் அறியாது, ரவுத்தடமே கண்ட செல்வத் தொகையாளனுக்குப் போக்குத்துளை றிது ஏற்படினும், அது அவன் உயிர்போகும் வழியாக மாறிவிடும். சவ்விய வாழ்விற்கும் மனச்சால்பிற்கும் இன்ப துன்பம் என்னும் லைப்பயிற்சியும், போக்கு வரவு என்னும் பொருட் பயிற்சியும், ணர்வு பிரிவு என்னும் காதற்பயிற்சியும் ஆகிய இருமுனைப் யில்வுகள் வேண்டப்படும். வெள்ளி வீதியாரின் பாடல்களில் லைமகளின் பெருமை புலம்பலுக்குக் காரணம் அவளது நெடுநாட் பரும்புணர்வு, சின்னாட் சிறுபிரிவும் ஆற்றகில்லா உயிர்ப்பிரிவாக ளர்கின்றது.

காடிறந் தனரே காதலர்; மாமை
அரிநுண் பசலை பாஅய்ப் பீரத்து
எழில்மலர் புரைதல் வேண்டும்....
காதலற் கெடுத்த சிறுமையொடு நோய்கூர்ந்து
ஆதிமந்தி போலப் பேதுற்று
அலந்தனென் உழல்வென் கொல்லோ (அகம். 45)

ஆற்றுவிக்கும் தோழிக்கு ஆற்றாது கூறும் மனைவி பாட்டு இது. கணவன் பிரிந்தான் என்றளவிலேயே, முன் பிரிவென்பது அறியாத தலைவியாதலின், மாநிலம் இழந்து பீர்க்கம் பூப்போலப் பசலை நோய் பெற்றாள்காண்; பிரிந்த முதல் நாளிரவே உறக்கம் இழந்தாள் காண்; ஆதிமந்தியின் செயலை உவமை கூறுவது பொருந்துங்கொல்? அவள் கணவன் ஆட்டனத்தி என்பான் காவிரிப் புதுவெள்ளத்தில் நீராடும் போது அடித்துச் செல்லப்பட்டான். படவே, ஆதிமந்தி பேதுற்றுப் புலம்பிக் கரையோரமாக ஓடினாள். கண்டீரோ கணவனை என்று ஓடிக்கொண்டே வினவினாள். இச்செயல் காமத்தால் நிகழ்ந்ததன்று, நாணம் கடந்ததும் அன்று. எப்பெண்ணுக்கும் செய்தற்குரிய இயல்புச்செயல். இச்செயலை உவமைப்படுத்துகின்றாள் ஒரு தலைவி. காட்டின்வழி பொருளீட்டப் பிரிந்து சென்ற தலைவனுக்கு, கணவனின் உயிருக்கு அலறி ஓடும் ஆதிமந்தியின் வாழ்வுணர்ச்சி என்னே, காமம் தாங்கமாட்டாது கணவன் இருக்கும் இடம் ஓடத்துடிக்கும் தலைவியின் மெய்யுணர்ச்சி என்னே, இவ்விரண்டும் ஒரு நிலைகொல்? இருவர்தம் உணர்ச்சிக்கு நிலைக்களம் முற்றும் வேறு. இரண்டனையும் ஒன்றாக இயைத்துப் பரணர் முதலியோர் பாடிவிட்டமையால், ஆதிமந்தியின் கண்ணகியனைய வாழ்வுத்திறத்தை நாம் மறைக்கப்பட்டோம். "ஆதிமந்தி போலப் பேதுற்று" என்று உவமை கூறுவதால், தலைவி தலைவனது பொருட்பிரிவை உயிர்ப்பிரிவாகக் கருதித் துன்புறுகின்றாள் என்பது பொருள். இதனால் வெள்ளிவீதியின் அகத்தலைவி பெருங்காமத்தள் என்று அறியலாம்.

ஔவையார் ஓர் அகப்பாடலில் வெள்ளிவீதியின் வாழ்க்கையை உவமையாக ஆண்டிருப்பதையும், அது பற்றிய நலந்தீங்கினையும் முன்னரே இந்நூலில் கற்றிருக்கின்றோம். "நெறிபடு கவலை நிரம்பா நீளிடை வெள்ளி வீதியைப் போல நன்றும் செலவயர்ந்திசினால் யானே" (அகம். 147) என்பது பிரிந்த தலைமகளின் வேட்கை. ஆதிமந்தி யுவமம் போலல்லாது, வெள்ளிவீதி யுவமம் அகத்திணைக்குப் பொருந்தும், வெள்ளிவீதியும் அகப்பாட்டின் தலைவியும் கடந்த காம நோயினருமாதலின், உவமைப் பொருத்தம் நிற்க. ஔவையாரின் உவமத்தால், வெள்ளி வீதியார் நிறையற்ற காமத்தர் எனவும், கணவன் இடம் நாடி அலைந்தவர் எனவும் அறிந்து கொள்கின்றோம். இவ்வறிவுக்குப்பின், வீதியாரின் அகப்பாடல் இயல்பைக் கற்கும் போது, அகப்பாடகளின் தலைவியாரும் காமப்பித்தர் எனக் காணும்போது, தம் வாழ்க்கை யைத்தான் பெயர்களைந்து அகமாகப் பாடிவிட்டனர் என்று கருத்துரைக்க முந்துகிறோம்.

இக் கருத்துரை பொருந்துமா? புலவன் வாழ்க்கைக்கும் அகப்படைப்புக்கும் இயைபு உண்டு எனப் பிற சான்றுகளால் அறிந்தாலும், அவ்வறிவோடு அவன் தன் அகமாந்தர்களை ஆராயலாமா? பொருந்தாது, ஆராயலாகாது என்பதுவே அகக்கல்வி நெறி. வாழ்வைப் புறத்திணையாகவும் பாடலாம். அங்ஙனம் பாடாது அகமாகப் பாடுகின்றான், ஏன்? தன்னை அழித்துதுக் கொண்டு

பாடுவது ஏன்? பாடும் புலவர் உள்ளத்தை நாம் பார்க்க வேண்டும். அவனே மறைத்து அகமாகப் பொதுவாகப் பாடியபோது, மறைவை ஒருவாறு வெளிப்படுத்தி, அகத்திணையைப் புறத்திணை யாக்குதல் கல்வி நாகரிகம் ஆகாது, அகத்திணையாவது ஓர் அடைக்கலத்தினை. ஒருவன் தன் வாழ்க்கையிற்கண்ட நுணுகிய காமவுணர்ச்சிகளை உலகிற்குப் பொதுவாக்க விரும்புவானேல், அகமாகப் பாடுவானாக; அங்ஙனம் பாடுவானேல், கற்பவர் பாடற் கருத்தைக் கொண் டொழிவ தல்லது, கருத்துக்கும் கருத்துரைத்த புலவன் வாழ்விற்கும் தொடர்பு செய்யார்மன். அகவிலக்கியத்தின் மாட்சி இது. அவ்விலக்கியம் காதலைப் பாடுவார்க்குத் தற்சுட்டாமை என்ற அடைக்கலத்தை அளிக்கின்றது. இவ்வடைக்கலச் சிறப்பைக் கெடுத்தல் அகத்திணைச் சிறப்பைக் கெடுப்பதாகும்.

"மள்ளர் குழீஇய விழவினாலும்" (குறுந். 31) என்ற அகப்பாட்டு ஆதிமந்தியார் இயற்றியது. அவர்தம் வாழ்க்கை வரலாற்றை அறிவோர்க்கு, இப் பாட்டிலும் அதனைக் காணும் எண்ணம் தோன்றும் எனினும், அகப்பாட்டு என்று கருதி அவ்வெண்ணம் தோன்றாவாறு காக்க வேண்டும். "இது காதலற் கெடுத்த ஆதிமந்தி பாட்டு" என்று நச்சினார்க்கினியர் (தொல் பொரு. 54) எழுதியுள்ளார். இது பெரும் பிழை யில்லையா? "காதலற் கெடுத்த" என்று அகத்திணைப் புலவருக்கு அடையும், அகப்பாட்டிற்கு வாழ்க்கைக் குறிப்பும் கொடுக்கலாமா? அங்ஙனம் கொடுப்பது புறத்திணைக்கன்றோ உரியது? குறுந்தொகை தொகுத்தவரும் பதிப்பித்தவரும் பிழை செய்திலர்; "ஆதி மந்தியார் பாட்டு" என்று முறையாகவே குறித்துள்ளனர்.

அகச்செய்யுட்குத் திணைதுறை கூறலாமேயன்றிப் புலவன் பாடுவதற்கு உரிய இடமும் காலமும் காரணமும் கூறலாகாது. புலமையை எவ்வகை அகப்பாட்டாலும் அறியலாம். கணவனைத் தேடி அலைய எண்ணியபோதுதான், அலைந்தபின்னர்தான், வெள்ளிவீதியாரும் ஆதிமந்தியாரும் அகப்பாடல்களை இயற்றி னார்கள் என்பதற்குச் சான்று உண்டோ? அங்ஙனமாயின் வெள்ளி வீதியார் கற்புப் பாடலாகவே பாடாது களவுப் பாடல்களும் ஏன் பாடினார்? ஆதிமந்தியார் ஓர் செய்யுள் யாத்து நிறுத்துவானேன்? காவிரியினின்று கணவனை மீளப் பெற்றபின்னர், மாண்தக்கோனைக் கண்டேன் என்று குறிஞ்சியாக மறுசெய்யுள் பாக்காதது ஏன்? ஆதலின் அகத்திணை கற்பாரும், ஆராய்வாரும் றவாது பிறழாது ஒரு நெறியைப் போற்றல் வேண்டும். பிறநூல் யிலாக எத்துணைச் சான்று இருப்பினும், இல்லா தொழியினும், அகப்பாட்டுக்கும் அதனைப் படைத்த அகப்புலவர்க்கும் ன்னானும் இயைபுபடுத்துதல், படுத்தி விளக்குதல்,ஆராய்தல் ஆகாது, முற்றும் ஆகாது. அகவிலக்கியத்தின் காதல் மாட்சி றுபடல் ஆகாது. அகப்பாவில் புலவன் தன் படைப்பாற்றலை ஆராய்க; மாந்தர்தம் பண்பியலை ஆராய்க; அவற்றுக்குப் பிறப்பியல் ண்டோ என்று ஆராய முயலற்க.

7. அகத்திணைக் கல்வி

அகத்திணை என்பது தமிழர் கண்ட காதல் நெறி, தமிழ் மொழி ஒன்றிலே காணப்படும் காதல் இலக்கியம், ஞால மக்கட் கெல்லாம் உரிய காதல் வாழ்க்கையுமாம். ஆதலின் அகத்திணை யறிவு பெண்ணுக்கும் ஆணுக்கும் இன்றியமையாக் கல்வியாகும். நம் தமிழ் முன்னோர் அகக்கல்வியைச் செம்மையாகப் பெற்றிருந்தனர். அதனால் அன்னவர் இல்லற வாழ்வு பூசலின்றி இயங்கியது. "பேரமர் உண்கண் இவளினும் பிரிக" என்று (புறம். 71) பூதப்பாண்டியனும், "வரைவின் மகளிர் மார்பிடை என் மாலை படுக" என்று (புறம். 71) சோழன் நலங்கிள்ளியும் கூறும் வஞ்சினங்களில் அன்னோர் மனையன்பைக் காண்கிறோம். அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி என்பது பண்டை அரசியல் நெறி. வேந்தர்களே செவ்விய கணவன்மாராக ஒழுகியதால், மக்களின் மனை வாழ்வும் அன்று ஒழுங்குபட இலங்கியது. சங்ககாலத்து அகக்கல்வி பரவியது, பரப்பப்பட்டது, தமிழ் மக்களெல்லாம் அகவுணர்ச்சியாக வாழ்ந்தனர் என்பதற்கு வேறு சான்று வேண்டா. நானூறு புலவர்கள் அகச்செய்யுள் யாத்தனர் என்பது ஒரு சான்று. இரண்டாயிரம் அகச்செய்யுட்கள் யாக்கப்பட்டன என்பது மற்றொரு சான்று. நமக்கு கிடைத்துள்ள சங்கப்பனுவலிலிருந்து அறியப்படும் தொகைகள் இவை.

நூலின் நோக்கம்

காலக் கூற்றுவனது கொடுவாயும், கறையானது ஈரவாயும் உண்டு செரித்த அகப்பாடல்கள் எத்துணை, எத்துணை? தொல்காப்பியத்துக்கு முந்திய அகப்பாக்கள் எங்கே எங்கே? சங்கத் தொகைகளில் இல்லாது உரையாசிரியர்கள் காட்டும் அகச்செய்யுட்கள் தாமும் யாண்டு ஒளிந்தன? இவற்றை யெல்லாம் ஆக்கிய புலவர்கள் எத்துணையரோ! எவ்வளவு எவ்வளவோ தொலைந்த பின்னும், நற்பேற்றால் எஞ்சி வாழும் தொல்காப்பியமும் சங்கப் பனுவல்களும் நமக்குப் பேராறுதல் அளிக்கின்றன. மனையாளை இழந்த இளைஞன் குழந்தையைக் கண்டு ஆறுதல் அடைகின்றான் அன்றோ? பல்லாயிரம் ஆண்டுகளாகப் பல்லோரால் அகத்திணைச் செய்யுட்கள் ஆக்கப்பட்டன என்பதனால், அகக்கல்வி தமிழ்ச் சமுதாயத்தில் நல்லுரம் பெற்றிருந்தது, நல்வளம் தந்தது என்பது வெளிப்படை. இத்தகு கல்வி சங்கப்பிற்காலத்து மறைந்தமையால் தமிழ் நாட்டில் பல்லூறுகள் ஏற்பட்டன. அகக்கல்வி பரவாது படியாது குறைந்தது. அகத்திணையின் தோற்றமும் நோக்கமும் அமைப்பும் எல்லாம் விளங்காது, விளக்குவாரின்றி மறைபட்டன. விளக்கப் புகுந்தாரும் சமயக்கல்வியாகவும் வீடுபேற்றிற்கு உரிய இலக்கியமாகவும் அகத்திணையைத் திரித்து எழுதினர், கற்பித்தனர். அதனால் அகத்திணை தன் உண்மையை இழந்து, மாறான பொய்யேற்றம் கொண்டது. தமிழினமும் உலகினமும் காதற்றுறையில் புத்துயிரும் புத்துவாழ்வும் பெறவேண்டுமேல், அகத்திணைக் கல்வி தமிழகத்தும் உலகத்தும் பரவவேண்டும்; பொய்களைந்து காதல் மெய்ம்மைகளைப் பரப்ப வேண்டும். இந்நோக்கத்தால் தமிழ்க் காதல் என்னும் இந்நூல் எழுந்தது.

காதற் காமம்

தமிழ்மொழிக்கண் காதல், காமம் என்ற இருசொற்கள் உள. இவற்றின் நேர்பொருள் என்ன? கடவுட் காதல், தெய்வக் காதல், மக்கட் காதல், மொழிக் காதல், நாட்டுக் காதல் என்ற தொடர்களை நாம் கேட்கின்றோம். நல்லுறவெல்லாம் காதல் என்ற கிளவியால் மொழியப்படும். காதலந்தோழி, தமர்பாராட்டக் காதலின் வளர்ந்த மாதர், குறவன் காதல் மடமகள், காதற் செவிலியர், நின் காதலம் புதல்வன் எனவரும் சங்கத் தொடர்களில் உறவுமுறைகள் காதல் வாய்பாடு படுகின்றன. "கருங்கோட்டு எருமைச் செங்கட் புனிற்றாக் காதற்குழவி" (ஐங், 62) என்ற அடியில் அஃறிணை உறவும் காதலாகின்றது. "பொருளை காதலர் காதல்" (அகம். 53) என்ற தலைவி கூற்றில் தலைவனது பேராசை காதலாகத் தோன்றுகின்றது. ஆண் பெண் காதலுறவைக் குறிக்குமிடத்து, அன்பு கேண்மை

முதலான சொற்களும் ஆளப்படுகின்றன. தமிழ்மொழிக்கண் காதற் சொல்லாட்சி பல்லாறாக இருப்பினும் அவற்றிடை ஓர் ஒற்றுமைப் பண்பு உண்டு. உள்ளத்தோடு இயைந்த தொடர்பெல்லாம் காதல் எனப்படுகின்றது. எனவே காதல் உள்ளப் புணர்ச்சி,மனவிசைவு என்று பொருள் கொள்ளலாம். இப்பொருள் அகத்திணைத் தலைமக்களுக்கும் பொருந்தும், உள்ளப் புணர்ச்சி அகத்திணையின் தலையாய இலக்கண மாதலின். மேலும் ஒன்றை நினைமின். காதல் என்னும் தொழிற்சொல் பல அன்புறவுகளைக் குறித்தாலும், காதலன் காதலி என்ற சொற்கள் பாலுறவுடையவர்களையே குறிக்கும். பிறவுடையாரையும் அன்பர்களையும் நண்பர்களையும் எத்துணை உள்ளொற்றுமை இருப்பினும் காதலி காதலன் என்று சொல்லும்போதும், அத்தொழிற்சொல் பாலுறவையே சுட்டும். இதனால் காதற்சொல் உள்ளன்பை உணர்த்துவது எனவும், முதலாவதாகப் பாலுறவைக் காட்டிநிற்பது எனவும் அறியலாம்.

கோப்பெருஞ் சோழனும் பிசிராந்தையாரும் நட்பினர். அதியமானும் ஔவையாரும் நட்பினர். ஆணும் பெண்ணும் நட்புறுதல் போல ஆணும் பெண்ணும் மனம் ஒத்த நட்பாக இருக்கலாம்; உணர்ச்சி ஒன்றிய நண்பர்களாக இருக்கலாமே. இவ்வுறவு மானிடவுறவன்றிப் பாலுறவாகாது. பாலுறவு என்று சொல்லும்போது உள்ளப்புணர்ச்சிமேல் உடற் புணர்ச்சியைக் கருதுகின்றோம். பால் என்பது மெய்யுறு காமத்தைக் குறிக்கும் . ஆண்பால் பெண்பால் என்ற பிரிவு முதற்கண் மெய் வேற்றுமையால் எழுவதன்றோ? எனவே பாலுறவு என்பது அம்மெய்களின் முயக்கத்தையே உணர்த்தும்.

காமம் என்னும் சொல்லுக்கு மெய்யுணர்ச்சி என்பது பொருள். "மெய்யில் தீரா மேவரு காமம்" (அகம். 28) என்பர் கபிலர். இச்சொல் பண்டு நற்பொருளில் பயின்றது. பாலுறவைக் "காமக்கூட்டம்" (1037) என்றும், காதலனைக் "காமக் கிழவன்' ' (1058) என்றும் கூறுவர் தொல்காப்பியர். திருக்குறள் மூன்றாவது இயல் காமத்துப்பால் என வழங்கப்பெறும். மலரினும் மெல்லியது காமம், காமம் கூடியார் பெற்ற பயன், காமத்துக் காழில் கனி, கள்ளினும் காமம் இனிது எனப் பல குறள்களில் காமச்சொல் பயின்று வருகின்றது. மன்மதனைக் காமக்கடவுள் என்று மொழிவர் இளங்கோ.

காமம் என்பது பருவவுணர்ச்சி, மெல்லிய உடலுணர்ச்சி. இவ்வுணர்ச்சி பெருகி வளருங் காலம் இளமை எனவும், குறைந்தது சிறுகுங்காலம் முதுமை எனவும் படும். ஆதலின் குறைவு தொடங்குவதற்கு முன்னுள்ள இளமையில், பாலின்பம் துய்ப்பதைக் கருத்திற்கொள்ள வேண்டும். தமிழ்த்திணை எனத்தகும் அகத்திணைக்கு வெறும் உள்ளக் காதலும் பொருளன்று, வெறும் மெய்க் காமமும் பொருளன்று. உள்ளம் இயைந்த உடலுறவும், உடல்

இயைந்த உள்ளவுறவும், சுருங்கக்கூற்றின் உயிர்மெய்ப் புணர்ச்சியே அதன் பாடுபொருளாம். ஆண்டாள் காதல் அகத்திணையாகாது, மெய்யுறல் இன்மையின். மாருத வேகன் சுதமதியைக் கூடியதும் அகத்திணையாகாது, உள்ளிசைவு இன்மையின். மெய்யாக நோக்கின் காதல் என்பதனுள் உடற் கலப்பும் அடங்கும். உடற்கலவியின்றிக் காதற்றன்மை செவ்வுறாது. பாலுறவுதான் காதல் என்னும் தகுதிக்கு உரியது. காதல் என்ற பெயர் மேலிட்டுப் பிறவாறு சொல்லுவன வெல்லாம் அரைகுறையான உருவகமாவன'' என்பர் ஆசுவால் சார்ச்சு.[1]

காதற் காமம் காமத்துச் சிறந்தது
விருப்போ ரொத்து மெய்யுறு புணர்ச்சி (பரி. 9)

என்று இரு சொற்களையும் இயைத்தார் குன்றம் பூதனார். பொதுவான மொழி வழக்கில் காதல் என்பது உள்ளப் பற்றையும், காமம் உடற்பற்றையும் குறிக்கும் என முன்னர்க் கண்டோம். இருசொல்லின் பொருளையும் ஒருங்கு காட்டும் ஒரு தமிழ்ச் சொல் உண்டா? உண்டு. அதுவே அகம் என்னும் சொல். எனினும் முன்னிலைப் படுத்திக் கூறும் நான்மறையாளர்க்கு விளங்கவேண்டி, குன்றம் பூதனார் "காதற்காமம்"[2] என்ற ஒரு புதுத் தொடரை ஆக்கின்றார். ஆக்கி, "விருப்பு ஒரொத்து மெய்யுறு புணர்ச்சி" எனப் பொருளும் நிரல்பட விரித்துக் காட்டினார். இக் காதற்காமந்தான் அகத்திணை. அகத்திணைத் தலைமக்கள் உள்ளங்கூடிய உடற்கூட்டாளிகள். உடல் மட்டும் கலந்ததா, உள்ளம் மட்டும் கலந்ததா? என்ற வினாவிற்கு இவர்பால் இடமில்லை. ஆதலின் அகப்பாட்டின் கண் காதல் என்ற சொல் வருமிடத்துக் காமப் பொருளும் உண்டெனக் கொள்க; காமச்சொல் வந்த இடத்துக் காதற் பொருளும் உண்டெனக் கொள்க.

உள்ளப் புணர்ச்சி

காதலர்தம் உள்ளப்புணர்ச்சியை அகப்பாட்டு விரித்துரைப்பது இல்லை. அதனை விரித்து மொழிய என்ன இடனுண்டு? "பாலது ஆணையின் ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப" என்று உள்ள ஒற்றுமையின் இயல்புக் கிடப்பைக் கூறுவர் தொல்காப்பியர். களவுத் தலைவனைத் தோழி பன்முறை வரைவு கடாவும் போதும், அவன் வரைவு நீட்டிக்கும் போதும், அவனது உள்ளத்தில் மாறுபாடு உண்டோ என்று ஐயுறுதல் கூடாது. வேற்றுமணஞ் செய்து கொள்வான் என்ற கருத்தை உள்வைத்துத் தோழி வரைவுமுடுக்கல் இல்லை. அந்நோக்கம் வைத்து அவன் நாட்கடத்தலும் இலன். திருமணத்திற்குப்பின் தலைவன் வேற்று நாட்டைப் பலதிங்கள் பிரிந்திருந்தபோதும், உள்ளூரின்கண் பரத்தையிற் பிரிந்த போதும்

1. The Psychology of Sex. p. 105.

2. காதலங் காமம், பரி. 6; அன்புறு காமம், நற். 389.

,அவனது நெஞ்சத்தன்பிறகு வஞ்சகம் கற்பிப்பது இல்லை. "அறனில்லா அன்பிலி பெற்ற மகன்" (கலி. 89) என்று கடி வனவெல்லாம் உணர்ச்சிச் சொற்களேயன்றி உண்மைக் கருத்துக்கள் அல்ல. அகத்தின் எத்துறைப் பாட்டும் உள்ளப்புணர்ச்சி, மனவுறவு என்னும் அடிநிலத்திலிருந்து தோன்றுவது. அந்நிலத்திற் பிறவாப் பாட்டு அகப்பாட்டு இல்லை. ஆதலின் இருவர்தம் மனவொப்பு உண்டோ இன்றோ, நிறைவோ குறைவோ என்ற வகையால் அகப்பாட்டில் ஆராய்ச்சி இல்லை. காதலன்மேல் காதலிக்கும், காதலிமேல் காதலனுக்கும் ஐயந்தோன்றிவிடின்?..... தோன்றல் ஆகாது, தோன்றும் எண்ணமே ஆகாது எனின், அதுபற்றி மேலும் சிந்தித்தலும், காரணம் தேடலும், மறைந்து காணலும், பிறர்பாற் சொல்லலும், பிறர் சொல்லக் கேட்டலும் ஆகுமா? காதலுலகில் ஐயப்பாதை சாவுப்பாதை. எண்ணம் என்னும் அடியை ஒருகால் ஐயவழியில் எடுத்து வைத்துவிட்டால், அவ்வழி நீளுமேயல்லது முடியாது. அவ்வழியில் நடப்பவர் ஓடுவார் திரிவார் உழல்புணர்ச்சி இமயமலையன்ன உயர்ந்த புணர்ச்சியாகவும் தமிழன்ன தூய புணர்ச்சியாகவும் இலங்குக.

அகத்திணை இலக்கியத்தைக் கற்கும் காதலர்க்கு நிறையான நல்லுணர்ச்சி தோன்றுமல்லது கயமைப் புல்லுணர்ச்சி தோன்றாது ஏன்? காதற்பொருளில் ஐயச் சிந்தனைகள் ஆண்டு நுழைவு பெறவில்லை. காப்பியம், புதினம், நாடகம் முதலான பிற இலக்கியங்கள் காதலர்க்கு மனவொப்பு வேண்டும் என்று முடித்தாலும், முடிப்பதற்குமுன், ஒருவர் மேல் மற்றொருவருக்கு எழுந்த ஐயப்பாடுகளை எல்லாம் அழகாக விரித்து விளக்கும். நுணுக்கமாக ஐயங்களைக் காட்டிச் செல்லும், பலபட ஐயச்சார்புகளை அடுக்கிக் கொண்டுபோகும். சூழ்நிலையும் கரவும்கொண்டு அமைப்பது தான் இலக்கிய அமைப்பு என்று கூறுவர் திறனாய்வாளர். இலக்கிய மாந்தர்களை ஐயப்பாதையில் இழுத்துச் செல்லும் போது, அவற்றைக் கற்பவரும் அப்பாதையில் நெடும் பொழுது நடக்கின்றனர். அதனால் காதற்பள்ளியில் ஐயக் கல்வியும் பெறுகின்றார் என்பதுவே கருத்து. நெஞ்சம் விழைவோடு நீள நினைப்பது எது, அறிவு வேட்கையோடு மிகுதியும் கற்பது எது, அது வாழ்க்கையிற் பதிந்துவிடும். பிறவிலக்கியம் எல்லாம் வழுவமைதி யிலக்கியம். அகத்திணை ஒன்றுதான் வழாநிலை யிலக்கியம், இவ்விலக்கியத்தின் முடிபும் தூயது; அம்முடிவினைக் கற்பிக்கு மேற்கொண்ட நெறியும் தூயது. ஆதலின் காதல் ஞாலத்து நிறைநெஞ்சம் வேண்டும் மனித குலம் தமிழ் அகத்திணையைக் கற்கவேண்டும். அகத்திணைக் கல்வி சங்ககாலங்களில் நன்றாக முறையாகப் பரவியிருந்தமையின், தமிழ் மொழிக்கண் ஒழுக்க ஐயத்தினை வைத்து இலக்கியங்கள் எழவில்லை என்று அறிக. சிலப்பதிகார மணிமேகலைத் தமிழ்க் காப்பியங்கள் இதற்கு ஓர் சான்று.

காமப்புணர்ச்சி

அகத்திணை இலக்கியத்தில் பன்மாணும் விரித்துப் புனையப் பெறுவது ஏனையதாகிய காமப்புணர்ச்சியே. புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல்களும் இவற்றின் நிமித்தங்களும் எல்லாம் காமப்புணர்ச்சியின் கூறுகளே. முதல் கருவெல்லாம் காமப் புணர்ச்சியின் விரிவுகளே. காமம் பிறப்பின் இயல்பானது, நல்லது, இனியது, இன்றியமையாதது என்பது தமிழியம்.காமத்துறையில் எண்ணங்களை எண்ணுவது எப்படி? சொல்லுவது எப்படி? புறச்சூழ்நிலைகளைப் பயன்கொள்வது எப்படி? புணர்வைத் துய்த்தும் பிரிவைப் பொறுத்தும் வாழ்வது எப்படி? என்ற அறிவுரைகளை அகப்பாட்டுக் கற்பிக்கின்றது. ஆண்பாலின் பெருமிதத்தையும் உரனையும் மனைவி மதிப்பதும், பெண்பாலின் அருமையையும் நிறைவையும் நாணத்தையும் கணவன் மதிப்பதும் ஆகிய கல்வியை அகத்தாற் பெறலாம்.

உலக வளர்ச்சி பசியால் உண்டு; உள்ள வளர்ச்சி காமத்தால் உண்டு. அரும் பெருஞ் சான்றோர் சிலர் ஞால நலங்கருதிப் பசி நோற்கலாம், காமம் நோற்கலாம். இஃது இயற்கையும் அன்று; உயிர்ப் பொதுவிதியும் அன்று. பசியும் காமமும் நிறையா உணர்ச்சிகள். இவற்றுக்குத் திங்கள் போல் நிறைவும் குறைவும் மாறி மாறி வரும். மாறிமாறிவரும் இச்சூழ்ச்சியால் ஞாலம் வாழுகின்றது. உயிர்கள் பிறந்து வாழ்கின்றன. சங்ககாலம் காமவின்பத்தை மாசற்ற இன்பம் எனப்போற்றி வளர்த்தகாலம். அதனால் காம மெய்ப்பாடுகளை மெய்ப்பாட்டியலில் தொல்காப்பியர் வகைபட நூற்பித்தார். சங்கப்பாட்டு எதுவும் அன்புக் காமத்தை இழிவெனச் சுட்டியதில்லை.

நோதக் கன்றே காமம் யாவதும்
நன்றென உணரார் மாட்டும்
சென்றே நிற்கும் பெரும்பே தைமைத்தே (குறுந். 78)

என்பது பாங்கன் தலைமகனைக் கழறிய பாட்டு. "தன்னை விழைந்தார் விழையாதார் என்று பாராது காமம் யார் மேலும் செல்லும்; அங்ஙனம் செல்வது பெரிய மடமை. ஆதலின் அக்காமவுணர்ச்சி வெறுக்கத்தக்கது,கைவிடத்தக்கது" என்பது பாங்கன் இடிப்புரை. ஒருவன் ஒருத்திபால் காமம் செலுத்துகின்றான்; அவளும் அதனை நல்லது என்று ஏற்று உணர்கின்றாள்; எனின் அக்காமம் விரும்பத்தகுவது, அறிவுடையது என்ற குறிப்பு இப்பாட்டிற் கிடைக்கவில்லையா? தலைவன் தன் புதிய உணர்ச்சியை வந்து சொல்லியபோது, "இவ்வுணர்ச்சி அவளுக்கும் தோன்றியிருக்குமா? தோன்றி இருக்கும் என இவன் கருதுவது ஒக்குமா? இருபால் ஒப்பு இன்றெனின் காமம் பழியும்

5.25-

கேடும்தருமே"என்ற நினைவினால் பாங்கன், "நோதக்கன்றே காமம்" என்றான். காமத்தை இழிப்பது அவன் நோக்கம் அன்று; உணர்வொப்பு வேண்டும் எனச் சுட்டிக் காட்டுவதே அவன் நோக்கம்.

காலையும் பகலும் கையறு மாலையும்
ஊர்துஞ்சு யாமமும் விடியலும் என்றிப்
பொழுதிடை தெரியிற் பொய்யே காமம் (குறுந். 32)

என்பது ஒரு களவுத் தலைவன் மொழிவு. களவான மறைவொழுக்கம் ஆதலின் நினைத்தாங்கு இன்பம் அவனாற் பெற இயலவில்லை. தலைவனை விரைவில் வரையச் செய்யவேண்டும் என்ற கருத்தால் இரவுக்குறி பகற்குறிக்கு இடஞ்செய்யாது கழிக்கின்றாள் தோழி.காமம் புதிது துய்த்த தலைவனுக்கு ஓரிரு புணர்ச்சிகளால் வேட்கை மிக்கதே யன்றித் தணியவில்லை. பொழுது பாராது இன்பம் எய்தவேண்டும், பிரிவு என்பது கூடாது என்பது அவனது விழைவு. எண்ணியது கைகூடாமையின் "பொய்யே காமம்" என்று கசந்தான். பொழுது இடையின்றி ஐம்பொழுதும் தலைவியைப் பெற முடியுமெனின், காமம் மெய்யே என்பது அவன் உள்ளெண்ணம்.

பயனின்று மன்றம்ம காமம் (கலி. 142)
கனவின் நிலையின்றாற் காமம் (கலி. 145)
அரைசினும் அன்பின்றாற் காமம் (கலி. 146)

என்பன பெருந்திணைத் தலைவியின் பிதற்றல்கள். கணவன் பிரிவினால் நாணிழந்தாள். நிறையிழந்தாள், ஊரறிய உற்றது உரைத்தாள். ஆராக் காமவேட்கை, இப்பழம் புளிக்கும் என்றது போல வெறுப்பை விளைக்கின்றது. அதுவல்லது அந்நங்கை காமத்துறவு பூண்டாள் என்பது கருத்தன்று. நுனிக் கொம்பளவும் ஏறி வீழ்பவன் மரம் ஏறுவது கூடாது என்றல் போல, முதுமொழி கூறுகின்றாள் காமம் காழ்த்த மங்கை. கணவன் வந்த பின்றை விடாக் காமம் உண்ண வேண்டும் என்பது அவள் வேட்கை.

காம மதிப்பு

காதலன் தன் காதலியின் காமக்கூறுகளையும், அவள் அவன்தன் காமக் கூறுகளையும் புரிந்துகொண்டு ஒழுக வேண்டும். சொல்லித் தெரியவேண்டும் என்று வாளாவிராது, சொல்லிய சொல்லுள்ளும் சொல்லாத சொல்லுள்ளும் நாடி உணர வேண்டும். உணராக்குறை ஒருகோடி கேடுதரும். காமக் குறைவினால் இல்லறம் கெடும்; அக்குறைவுடையார் அணை கடந்த வெள்ளம்போல ஊரையும் நாட்டையும் உலகத்தையும் கெடுப்பர். அத்தகை கேடுகளுக்கு மூலகாரணம் இன்பக்குறை என்பதை யார் அறிவார்? நாளாயின் அவரே அறியார்காண். ஆதலின் ஒருவனுக்கும் ஒருத்திக்கும் இன்பநிறைவு வீட்டிற்கும் நாட்டிற்கும் நல்லது. இந்நிறைவுக் கல்வியை அகத்திணையில் காண்கின்றோம்.

நோயலைக் கலங்கிய மதனழி பொழுதிற்
காமம் செப்பல் ஆண்மகற்கு அமையும்
யானே,
பெண்மை தட்ப நுண்ணிதின் தாங்கி (நற். 94)

ஆடவன் தன் காமத்தை வெளிப்படச் சொல்வான். நங்கை அதனை நாணத்தாற் புலப்படுத்தலும் மாட்டாள் என்ற ஆண் பெண் இயல்புகளை மேலையடிகள் உணர்த்துவன. பாங்கனுக்குத் தலைவன் உற்றது உரைக்கும் துறைகளாலும், தோழிக்கும் அன்னைக்கும் ஊர்க்கும் தலைவி உற்றதைப் பலவாறு மறைக்கும் துறைகளாலும், அவரவர் இயல்புகளை நன்கு அறிந்து கொள்கின்றோம். எனினும் இவ்வியல்புகள் பொதுப்பட்டவை. சிறப்பியல்பு கொண்ட ஆடவரும் பெண்டிரும் இருப்பர். அதனை உரியவர் புரிந்துகொள்ளல் வேண்டும். தலைவன் தன் உள்ளுணர்வை வெளிப்படுத்த மாட்டாது விழுங்கினான்,புழுங்கினான், வெறுமனே திரும்பினான் என்று நாணுடைமை காட்டும் அகப்பாடல்களும் உள.

காலை வந்து மாலைப் பொழுதின்
நல்லகம் நயந்துதான் உயங்கிச்
சொல்லவு மாகாது அஃகி யோனே (குறுந். 346)

என்று ஒரு தலைவனது நாண் நிலையைப் பாடுவர் வாயில் இளங்கண்ணனார். குவளை மாலை தருகின்றான், கிளி ஓட்டி உதவி செய்கின்றான், காலையில் வந்து மாலைவரை இருந்து திரும்பு கின்றான், ஒன்றும் தன் வாய்விட்டுச் சொல்கின்றான் அல்லன் என்று, தலைவனது சொல்லாக் குறிப்பைத் தலைவிக்கு அறிவிக்கின்றாள் தோழி. பொதுவியல்புக்கு வேறாகக் காமத்தை வெளிப்பட மொழியும் நன்மாந்தர்களும் உளர். இன்ன மொழிவு சூழ்நிலையையும் கேட்பாரையும் பொறுத்தது.

கொன்றோர் அன்ன கொடுமையோ டின்றே
யாமம் கொளவரிற் கனைஇக் காமம்
கடலினும் உரைஇக் கரைபொழி யும்மே (அகம். 128)

என்பது கபிலர் பாடிய ஒரு களவு மகளின் காமப் பேருரை. நடுயாமத்துத் தன் காமவுணர்வு கடலினும் பரந்து கரைகடந்து செல்லுகின்றது என்று தோழிக்குப் புலப்படுத்துகின்றாள் தலைவி. பாலுணர்வை வெளிப்படுத்தும் வழிகள் ஆள்தோறும் வேறுபடுதலின், காதலர்கள் ஒருவர் நிலையை மற்றவர் விளங்கி இன்புறுதல் முறையாகும்.

அகத்திணைத் தலைமை

காதலன் காதலி இருவரும் தலைவன் தலைவி என்று பெயர் பெற்றாலும், அகத்தலைமை பெண்ணுக்கே உரியது. புறத்தலைமை

யுடைய ஆடவன் இல்லத் தலைமையையும் உடன்கொள்வது ஒத்துவராது. மகவைப் பொறுக்கும் பெண்ணினத்துக்கே குடும்பத்தைச் சுமக்கும் பொறுப்பு உரியதும் எளியதும் நல்லது ஆம். ஆதலின் தலைவன் தோழி செவிலி அன்னை முதலான அகமாந்தர்கள் எல்லாரும் தலைமை நோக்கி இயங்குபவர்கள். பகற்குறி, இரவுக்குறி, வரைவு கடாவுதல், அறத்தோடு நிற்றல் ஆகிய களவுத் துறைகள் பலவும், வாயில் நேர்தல், வாயில் மறுத்தல், செலவழுங்குவித்தல்,பிரிவுணர்த்தல் ஆகிய கற்புத்துறைகள் பலவும் தோழி கூற்றாக வருதலின், தலைமகள் தோழி வழிப்பட்டவள் என்று எண்ணவேண்டா. தோழி மகளின் நண்பியும் வாயிலும் ஆவாள்; அத்துணையல்லது அவளுக்கு மேல்நிலையில் நின்று யாதும் செய்யாள். அவள் மனப்போக்கெல்லாம் நாளும் பயின்று அறிபவளாதலின், உடன்படுவனவே செய்வாள். தலைவி உயிரோரன்ன கேண்மையளாயினும், அவளது களவுச் செய்கையைத் தோழி நேர்படக் கேளாள்; அவளது நாண் மிகுதிக்கும் அவள் காதலனது பெருமைக்கும் குற்றப்படாது அறிந்து கொள்ளவே முயல்வாள். தலைவன் வந்து குறையுற்றக்கால் அவன் குறையை ஏற்றுக்கொள் என்று தலைவிக்கு வெளிப்படச் சொல்லாது, குறிப்பிற் புலம்படும்படியே உணர்த்துவாள். தலைவியைப் பெரிதும்மதித்து அவள் சிறிதும் சினவாது ஒழுகுபவள் தோழி. தலைவனைத் தோழி இயற்பழிக்கும் போது,தலைவி இயற்பட மொழிந்து மறுப்பதைக் காண்கின்றோம்.

அருவி வேங்கைப் பெருமலை நாடற்கு
யானெவன் செய்கோ என்றி; யானது
நகையென உணரே னாயின்
என்னா குவைகொல் நன்னுதல் நீயே (குறுந். 96)

தலைவி தோழியைச் சினந்த அரும்பாடல் இது. தலைவன் வரைவு நினைப்பின்றி வந்து களவொழுகிக் கொண்டிருந்தான். தோழியின் வரைவுக் கருத்தை அவன் மதிக்கவில்லை. அதனால் வெறுப்புற்ற தோழி 'நான் என் செய்வது' என்று தலைவன் மேல் கசப்புற்றாள். தலைவிக்கு சினம் அரும்பிற்று. 'நீ சொல்வதை விளையாட்டு மொழி என்று கருதிக் கொள்கின்றேன். வேறு விதமாகக் கருதினால் உன் நிலை என்னாம்?' என்று சொல்லி நிறுத்திக் கொண்டாள். இனி அறத்தொடு நிற்க வேண்டியதுதான் என்று தலைவி சுட்டினாலல்லது, நிற்கும் உரிமை தோழிக்கும் இல்லை என்பது தொல்காப்பிய விதி.

இருவேம் ஆய்ந்த மன்றல் இதுவென
நாமறி வுறாலிற் பழியும் உண்டோ?

என்று தலைவி மொழிந்த பின்னரே, தோழி அறத்தொடு நிற்றலைக் குறிஞ்சிப் பாட்டிற் கற்கின்றோம். ஆதலின் தோழி தலைவியின் நட்புத் தூதுவளேயன்றி அகத்திணைக்கண் தலைமையுடையவள் ஆகாள். கருணாகரத் தொண்டைமான் படைத் தலைமை தாங்கிப் போர்க்களம் புக்குக் கலிங்கத்தை வென்றாலும், வென்று பெற்ற

திறைப் பொருளை வைத்து வணங்குமிடம் குலோத்துங்க சோழன் அடியன்றோ?'

பெண்ணிலக்கியம்

அகத்திணை ஓர் பெண்ணிலக்கியம். ஆண்டுவரும் மாந்தர்களுட் பலர் பெண்பாலரே. பாங்கன் ஒரு துறையளவில் வந்து போய் விடுகின்றான். பாணன் சிலபொழுது வருகின்றான். தேர்ப்பாகன் கூற்றுக்குப் பெரிய இடமில்லை. தலைவனது தந்தை உடன் பிறந்தார் பற்றி ஒன்று சொல்லலாகாது. தலைவியது தந்தையும் அண்ணன்மாரும் கூற்றுக்கு உரியவரல்லர். கற்பியலில் வரும் மழலைமகன் இளந்தூதுவனேயன்றி உரையாடான். தோழியும் செவிலியும் அன்னையும் பரத்தையும் அகவிலக்கியத்தில் கொள்ளும் வாய்ப்பு மிகப் பெரிது. தலைவியே அகப்பாட்டிற்குத் தலைமையள் ஆதலின் பெண்ணாட்கள் பலர் இடம் பெறுப. செவிலியும் அன்னையும் தலைவியின் நல்வாழ்விற்காக வாழ்பவர்கள்; அவள் உடன் போகின் உயிர் புறம்போயது போல அவலக் கடலில் ஆழ்பவர்கள். தலைவனது பெருந் தொடர்பால் பரத்தை தருக்கிச் செருக்குற்றாலும், அவனுக்குத் தலைவி தானல்லள்; அவனை இடித்துரைக்க வல்ல மனையாள் ஒருத்தி உண்டு என்பதனை நன்கு அறிந்தவள்.

எம்மிற் பெருமொழி கூறித் தம்மிற்
கையும் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல
மேவன செய்யும்தன் புதல்வன் தாய்க்கே (குறுந். 8)

தலைவனது வழி அறாது மகப்பெற்றுக் காக்கும் குடியுரிமை தலைவிக்கு உண்டாதலின், அவன் அவளுக்கு அடங்கி நடக்கின்றான் என்பது பரத்தையின் குறிப்பு.

தலைவியே தலைமையள் என்பதனால், தலைவன் தலைமை இழந்தவன் என்பது கருத்தன்று. ஒரு குடும்பத்தின் அகத்துறை புறத்துறை என்னும் வாழ்க்கைத்துறை இரண்டனுள் உலகப் புறத்துறையில் அவன் தலைமை பெறுகின்றான். அவனது ஆற்றலும் நாட்டமும் அத் துறையின்கண் இயங்குகின்றன. அவனது பயிற்சி யெல்லாம் புறமாய் விளங்குகின்றன. ஆதலின் அவன் அகத்துறைக்கண் வேண்டும் பயில்வும் நினைவும் இலனாகின்றான். அகத்துறை என்பது காதற்றுறை. தலைவன் பெருவேட்கையனாக இருப்பினும், அவ்வேட்கை அவனுள்ளத்து எப்போதும் நிலையாக ஓடிக் கொண்டிராது. தலைவியோடு உடனுறையும் காலத்துள் காமம் கனிவான்; எண்ணிய வினையை முடித்த பின்றைக் காமம் ஊறுவான்; நினைத்த இன்பம் பெறகில்லாது இடையூறு படுங்கால் ஆண்மை தோன்றக் காமம் கூர்வான். "பாணியும் உடைத்து அது காணுநர்ப் பெறினே" (குறுந். 136), உரியாரைக் காணின் காமம் வெளிப்படும் என்றும் தலைவனே கூறுதல் காண்க. தலைவி என்றும் காமவுள்ளத்தி. அவள் காமம் நீறு பூவா நெருப்பு. ஆர்ந்த புணர்ச்சிக்குப்பின்னும் அவள் வேட்கை அளவிற் குறையாது.

குவியிணர்த் தோன்றி ஒண்பூ அன்ன
தொகுசெந் நெற்றிக் கணங்கொள் சேவல்
நள்ளிருள் யாமத்துது இல்லெலி பார்க்கும்
பிள்ளை வெருகிற்கு அல்கிரை யாகிக்
கடுநவைப் படூஇயரோ நீயே; நெடுநீர்
யாணர் ஊரன் தன்னொடு வதிந்த
ஏம இன்துயில் எடுப்பி யோயே (குறுந். 107)

கூடியிருக்கும் ஒரு தலைவியின் சாபப் பாட்டு இது. நெடுநாட்பிரிவுக் குப்பின் வந்த கணவனொடு உடனுறைந்து இரவெல்லாம் இன்புற்றுக் காலம் தோன்றாது தன்னை மறந்து கிடக்கையில், பொழுது புலர்ந்தது என்பதனைக் கோழி கூவிக் காட்டியது. கோழி கூவாவிட்டால் பொழுது புலராது என்பது காம நங்கையின் கருத்துப் போலும்! அக் கோழி இரவில் இரைதேடும் வெருகுப் பூனைக்கு உணவாகட்டும் என்று பாயற்பள்ளியில் அமர்ந்து கொண்டே சபிக்கலானாள். ஆதலின் பெண்ணின் காமவெப்பம் நல்லுடலின் வெப்பம் போலக் குறையாது என்று அறியலாம். தலைவியைத் தலைவனுந்தானே பிரிகின்றான்? அவனுக்கு ஆற்றாமையுண்டோ? அவனை ஆற்றுவார் உண்டோ? அவனுக்குக் காமம் மிக்க கழிபடர் கிளவி உண்டோ? அவனுக்குப் புலம்பு உண்டோ? இவ்வெல்லாம் தலைவிக்கே உரியவாகக் கற்கின்றோம். புணர்வினும் பிரிவினும் காமம் அறாத நெஞ்சு மகளிர் நெஞ்சு ஆதலின், காமத்திணையாம் அகத்திணைத் தலைமைக்குச் சான்றவள் தலைவியே என்பது தெளிவு.

கற்பிலக்கியம்

அகத்திணை ஓர் கற்பிலக்கியம். சிற்றிளங்குமரியின் திண்ணிய காதல் நெஞ்சத்திற்குமுன் குடும்பமும் ஊரும் உலகமும் எல்லாம் முடிவில் வழிபட்டு இயைந்து ஒழுகுவதை அகவிலக்கியத்திற் காண்கின்றோம். அறியாமையால் வழிபட்டு ஒழுகாதபோது, கற்பு பெற்ற குடும்பத்தையும் பிறந்த ஊரையும் துறந்து உடன் போகின்றது; "ஏனை உலகத்தும் இயைவதால் நமக்கு" (குறிஞ்சிப். 24) என உலகத்துறப்பே துணிகின்றது.

வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்
கடவு ளாயினும் ஆகுக
மடவை மன்ற வாழியே முருகே (நற். 34)

வெறியாட்டின்கண் வேலன் மேல் ஏறி வந்த முருகக்கடவுளை நல்ல மடவன் என்று இகழ்கின்றாள் நங்கை. பெண்கற்பு கடவுட் கற்பாம் (அகம். 184) என்பது அகத்தமிழ்.

கற்பின் சிறப்பு காதற்சிறப்பாக ஒளிரும். அச்சிறப்பு குடிக்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் ஒழுங்கான வாழ்க்கை உண்டாக்கும். அகமாவதுவீடு; புறமாவது அவ்வீட்டில் வெளியாதலின், வீட்டுத் தலைமையுடைய பெண்ணே உலகம் தாங்குகின்றாள். உலகத்தை வளர்க்கும் ஆற்றல் பெண்ணினத்துக்குக் கற்புத்திண்மையால்

பெருகுகின்றது. அத்திண்மைக்குக் கலக்கம் வரும்போது, காக்கவல்ல புத்தாண்மை எங்கிருந்தோ அவட்குத் தோன்றுகின்றது.பிறர் தன் கற்புக்கு இடையூறு செய்வரேல், சினங்கொண்டு மறத்தி ஆவாள். உயிரைப் பொருட்படுத்தாள். கற்புடைப் பெண்டிர்க்குப் புறப்பகை அடிக்கடி வருவதில்லை. அன்புடைய அகத் தலைவன் தன் பரத்தமை யொழுக்கத்தால் பகையாக நடக்கின்றான். இவனை என் செய்வது? ஆண்டுச் சினங்கொண்டு மறத்தியாகாது,நிகரற்ற பொறுமை கொண்டு அறத்தியாய்க் காதலியாய் அவன் இன்பத்துக்கு இசையும் ஒருத்தியாகின்றாள்.

கடைஇய நின்மார்பு தோயலம் என்னும்
இடையும் நிறையும் எளிதோநிற் காணின்
கடவுபு கைத்தாங்கா நெஞ்சென்னும் தம்மோடு
உடன்வாழ் பகையுடை யார்க்கு *(கலி. 77)*

இங்ஙனம் கணவனைக் காணுங்கால் கற்பு இரங்குகின்றது, பணிகின்றது, பண்படுகின்றது. கற்பிலாத கணவனைக்கண்டு வருந்துவது 'கற்புள்ளம்; அவனை எள்ளி இகழ்ந்து பரத்தமையை வளர்க்காது ஆரத்தழுவி இன்புறுவது கற்புள்ளம். இவ்வுள்ளம் உடைய பெண்ணே அகத்தலைமைக்கு ஏற்றவள். இல்லக்கிழத்தியின் பல்வகைப் பண்புகளை ஒருங்குகாட்டும் தொல்காப்பியர் எல்லாப் பெண்ணியலுக்கும் கற்பே தலைமைப்பண்பு என்பதனை முதலில் வைத்து எண்ணுவர்.

கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கம்
மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோன் மாண்புகள் *(தொள். 1097)*

பாலியற் கல்வி

அகத்திணை ஓர் பாலிலக்கியம், பெயரில்லாதார் வாழ்க்கையிலிருந்து காமநுணுக்கங்களைக் கற்றுக் கொள்கின்றோம். காமம் பற்றிய ஆணுடல் பெண்ணுடலின் கூறுகளையும், இயற்கை செயற்கை திரிபு ஆகிய மனக்கூறுகளையும் கரவின்றிப் பட்டாங்குச் சொல்வது பாலிலக்கண நூல். அந்நூல் வாழ்வைத் தொடாது, அறிவைத் தொடாது. அதனைக் கற்பவர்,அறிவு நிலைபெறுவரன்றிக் காதலுக்கு இன்றியமையாத உணர்ச்சி நிலையைப் பெறார்; சமுதாயத்தோடு இசைந்த புணர்ச்சி நிலையை எண்ணார். அகத்திணை வாழ்க்கையிலக்கியம் ஆதலால், உலக நடைமுறைக்கு ஒப்பதாயும் பெயரில்லாதாரின் காதலியல்களைப் புலப்படுத்துவதால், கற்பவர்க்குத் தமது என்ற உணர்ச்சியை ஊட்டுவதாயும் அமைந்துள்ளது. உடல் நலத்திற்கென உடற்பயிற்சி இருவர் செய்கின்றனர் என வைத்துக்கொள்வோம். ஒருவன் பயிற்சிப் படங்களைப் பார்த்துக் பயில்கின்றான். மற்றொருவன் தன்முன் நின்று பயிற்சிசெய்யும் பயில்வானைப் பார்த்துப் பயில்கின்றான்.

இவ்விரு நிலைக்கும் பெரு வேறுபாடு இல்லையா? பின்னது சிறந்தது, முறையானது, கெடுதலற்றது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? பாலிலக்கண நூல் கற்றுக் காதலுலகிற் புகுவான் இன்ப மரபு அறியாதவனாய், சமையல் நூல் கற்றுச் சமைக்கப் புகுந்தாளைப் போல இடர்ப்பட்டுக் காமம் இழப்பான், பசி நீங்கான். அகத்திணை போன்ற பாலிலக்கியம் நூல் கற்பவர் கற்கும்போதே காதற் பயிற்சி கைவரப் பெறுவர்; அன்னை அருகிருந்து மகள் அடுப்புத் தொழில் பழகிக்கொள்வது போல,அன்புக்கேடும் ஆவாரமும் இன்றிக் காதலுலகில் இனிது இயங்குபவர். ஆதலின், பருவம் உற்ற ஆண் பெண் அனைவர்க்கும் அகத்திணைக் கல்வி இன்றியமையாதது. அக் கல்வி காமப் பருவத் தொடக்கத்தே கற்கத் தொடங்கவேண்டியது.

அகக்கல்வி கற்கும் நல்லிளைஞர் இளைஞியர் இன்றியமையாத உள்ளப் பண்பாவது கற்பு என்றும்,இன்றியமையாத உடல் விளையாவது காமம் என்றும் தெளிவாக விளங்கிக் கொள்வர், ஒருவர் காமத்தை ஏனையர் மதித்து ஒழுகுவர், காமநிறைவு மனநிறைவாம் என்று இன்பச் செய்கையில் மீக்கொள்வர், ஞாலத்தைக் காதலுக்குப் பயன்கொண்டு. தம் காதலால் ஞாலத்தை வாழ்விப்பர்.

அகம் கற்ற இளைஞன் தன் இன்பமே பெரிதென எண்ண மாட்டான். தன் கயமலர்க் கண்ணியை இன்புறுத்திப் பெறும் இன்பத்தையே காமம் என்று எண்ணி, அதற்கேற்றபடி காதற் பள்ளியில் நடந்துகொள்வான். மனைவியின் ஊடலையும் ஊடற் காரணங்களையும், ஊடல் நீட்சிகளையும், ஊடல் சொற்களையும் இன்ப இகலாகக் கருதாது, இன்ப வாயிலாகக் கருதுவான், தன் புகழ்ப் பெருமையையும், அறிவுப் பெருமையையும், செல்வப் பெரு மையையும், பதவிப் பெருமையையும், பரிசுப் பெருமையையும் எண்ணிச் செம்மாக்காது, மெல்லியலாளின் காமப்பெருமையையும் ஏற்றுக் கொண்டு இரங்கி மொழிவான்.

அகம் கற்ற இளையாள் காமப்பெருக்கும் கருதி ஊடுவாளேயன்றி, குற்றம் உடைய தலைவனாயினும்,அவனை இடித்துரைப்பதற்கு, அதுதான் காலம் என்று பள்ளிக்கவியில் ஊடற் புரையோடாள். இன்பக்கொடை அவளது நோக்கம் ஆவதன்றிச் சிறுமைசுட்டி அக்கொடை செய்தல் அவள் கற்புக்குச் சிறப்பளிக்காது. பெருந்தோள் ஆடவனது பணிவையும் வேண்டுதலையும் கிடப்பையும் கண்டு காமுகன் என்றோ, சிறியவன் என்றோ கருதித் தருக்காது, கற்பின் வணக்கம் என்று பொருள்புரிந்து இன்ப அருள் செய்வாள்.

அகம் கற்ற குடும்பத்தார் தம் ஆண் பெண்மக்களின் பருவ வோட்டங்களை எளிதிற் புரிந்துகொள்வர். பருவக்கோளாறு என்று கருதி மயங்கி, அறிவற்ற அன்பினால் காதற்கோளாறும் கற்புக்கோளாறும் செய்யார்.

அகக்கல்வி பரவிய இனத்தார் காதல் வாழ்வுக்கு மாறான சமுதாயப் போக்குகளை வேரூன்றவிடார். கற்பிற்கு முரணான

பரத்தமையை ஆடவர்க்காக வளரவிடார். வளர்ந்த பரத்தமையைக் குலவொழுக்கமென வாழவிடார்,பெண்டிரெல்லாம் கற்புப் பெண்டிராகவே வாழ வழிவகுப்பர்.

துறவிக்கும் அகத்திணைக் கல்வி வேண்டற்பாலது. துறவாத இல்லற மக்களுக்குத் கொண்டு செய்யுங்கால், அம்மக்களின் காதற் காமநிலை பற்றிய அறிவு வேண்டாங் கொல்?

அகத்திணைக்கல்வி தொல்காப்பியத்தாலும் சங்க விலக்கியத்தாலும் திருக்குறளாலும் அன்றி வேறு எவ்வகையானும் பெறுதற்கில்லை. தமிழ்ப்பிறவி எடுத்த நாம் இம்முத்திற நூல்களையும் கற்கவேண்டும். கற்பதோடன்றி நம்போல் ஞாலமும் உய்யும்படி கற்பிக்கவேண்டும். இவை செய்யாவிடின் இப்பிறவியை ஏன் சுமந்தோம்? அகப்பொருள் யாத்த தொல்காப்பியர் ஒல்காப் புலமை வாய்ந்தவர், பல்புகழ் கொண்ட பண்பினர் என்று அறிவோம். சங்கச் செய்யுட்கள் பாடியோர் எத்தகையர்? வாய்மை விளங்கும் கபிலரும், உலகறம் மொழிந்த கணியன் பூங்குன்றனாரும், அச்சமில்லாத நக்கீரரும், அருநெல்லி பெற்ற ஔவையாரும், நெடுஞ்செழியன் புகழ்ந்த மருதனாரும், கரிகாலன் மதித்த கண்ணனாரும், கரிகாலன் மகள் ஆதிமந்தியாரும், ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியரும்,பிசிராந்தையாரின் நண்பர் கோப்பெருஞ் சோழரும் முதலான எண்ணிலாச் சான்றோர் என்பது அறிவோம். காமத்துப்பால் அருளியவரோ தமிழ்த்தாய் உலக நலத்திற்கெனப் பெற்ற வள்ளுவப் பெருமகன். இத்தமிழ்ச் சான்றோர் எல்லாம் அகத்திணைப் பாடல்கள் யாத்தார்கள் எனின், அகக்கல்விஞால மானிடர்க்கு இன்றியமையாத தலைசால் தூய கல்வி என்பதுவே முடிவு.

சங்கவிலக்கியம் 1862 அகப்பாடல் உடைய காதலிலக்கியம். ஒவ்வொரு பாடலிலும் ஆண் பெண் உள்ளங்கள் உள்ளன. இப்பாடல்களைக் கற்பவர் 3727 காதல் உள்ளங்களைப் பற்றிய அறிவு பெறுவர்,மேலும் காதற்றலைமையுடைய இவ்விருவரைப் பற்றிப் பாங்கன் நினைத்தனவும், ஊரார் கண்டார் நினைத்தனவும் ஆகிய பல்வேறு உள்ளங்களின் அறிவினையும் பெறுவர். திருக்குறட் காமத்துப்பாலின் 250 குறள்களைக் கற்குநர் 500 காம நெஞ்சங்களைக் குறித்த கல்வி பெறுவர். பொருட்பாலால் புறவாழ்க்கையிலும் காமத்துப்பாலால் அகவாழ்க்கையிலும் செம்மை எய்துவர். அகத்திணைக் கல்வித் தலைவராகிய தொல்காப்பியரது தமிழ் முதல்நூலைக் கற்கும் அன்புடைத் தமிழ் நங்கையரும் நம்பியரும் இருபாலாரின் நுண்ணியல்களை யெல்லாம் பண்போடும் பாங்கோடும் தெளிந்து வாழ்ந்து நன்றியர்களாகப் பொலிவார்காண்.

தொல்காப்பியம்

எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தானமர்ந்து வருஉம் மேவற் றாகும்.

பொருட்குறிப்பு

அகத்திணை: மேன்மை: 16 ஆராய்ச்சி: 16 ஐயங்கள்: 32 தோற்றம்: 91, 247 கரு: 173 குறிக்கோள்: 174, 212, 242, 254 இரு உண்மைகள்: 253 மாந்தர்: 282, 292 உருவகம்: 301 பாருள்: 248 தலைமை: 378
அகத்திணைக் கல்வி : 370, 383
கற்கு முறை : 267
அகத்திணைக் குறியீடு : 37, 92.
அகத்திணைப்பாட்டு : 246
அகத்திணைப் பிரிவுகள் : 33, 175, 212, 242
அகத்திணையமைப்பு : 140, 146, 251
அகத்திணை யிலக்கியம் :
பொதுவிலக்கியம் : 222
நுண்ணிலக்கியம் . 240
பெண்ணிலக்கியம் : 379
கற்பிலக்கியம் : 381
பாலிலக்கியம் : 382
அகத்திணையின் தனிநிலை : 223
அகத்தின் இலக்கணம் : 31, 43, 185.
அகவிலக்கியம் : 65, 70, 215
அகவிலக்கியமும் நாடகமும் : 254 காப்பியம்: 276.
பாலிலக்கண நூலும் : 382.
அகப்புலமைத் திறன் : 359
அகப்புலவர்கள் : 263, 369.
அகமரபு : 84, 275, 300.
அகமுறை : 246, 251.
அகம்: 245 அகமும் புறமும் : 16, 17, 160, 226.
அகனைந்திணை : 38
அடியாராய்ச்சி : 17
அட்சனார் : 99, 265.
அண்டர் மகன் குறுவழுதி : 277.
அந்தாதி : 279
அம்பல் : 62
அம்மூவனார் : 40, 269, 278
அலர் : 61, 64, 103, 289, 342
அலர்ப்புலவர் : 289
அழகப்பர் : 257, 366
அள்ளூர் நன்முல்லையார் : 281
அரித்தாட்டில் : 259, 314
அறத்தொடு நிற்றல் : 68
அன்புக் காதலர்கள் : 196.
அன்புப் பாலை : 151
அன்னையர் : 309, 304
ஆசுவால் சார்ச்சு : 187
ஆண்டாள் : 145
ஆதிமந்தியார் : 264
ஆய்நெறிகள் : 23
ஆரியவரசன் யாழ்ப்பிரமத்தன் : 271
ஆர்ப்போர்டு : 14, 64, 214.
ஆலங்குடி வங்கனார் : 283
ஆலம்போரி சாத்தனார் : 284
ஆவலக் கெல்லீசர் : 221, 237, 257.
ஆன்விச்சு : 30, 40
இடந்தலைப்பாடு : 44
இளைக்காடையார் : 285
இயற்கருக்கம் : 25, 28.
இயற்கைப்புணர்ச்சி : 38
இயற்கையின் பின்னிலை : 15
இயற்கைப் புலவர் : 158
இயற்கையின் காதலாட்சி : 161
இயற்கையைப் படைத்தல் : 171
இயற்பெயர்கூறா நோக்கம் : 252
இரவுக்குறி : 54, 56.
இரவுப் புணர்ச்சி : 331.
இராகவையங்கார் மகா வித்துவான் : 106, 141, 146.
இராமச்சந்திர தீட்சிதர் : 98
இருநெறிக்காதலர் : 113, 119.
இருங்கோன் ஒல்லையாயன் :
செங்கண்ணன் : 80
இளங்கடுங்கோ : 87, 239.
இளங்கீரனார் : 285
இளங்கோ : 149, 169-194, 240, 343.

இளந்தேவனார் : 288
இளநாகனார் : 90, 239, 349.
இளமை தீர்திறம் : 198
இளம்பூரணர் : 40, 106, 123, 220, 250.
இளமையும் வளமையும் : 350
இளவழகனார் : 22, 191.
இறையனார் : 42
இறையனார் அகப்பொருள் : 15, 34, 43, 107, 247.
உடன்போக்கு : 71, 294, 320, 348
உயிரியம் : 95
உரிப்பொருள் : 35, 97, 166, 217.
உலகநோக்கு : 242
உலகியம் : 95
உலோச்சனார் : 289
உளவியல் அடிப்படை : 157
உள்ளப்புணர்ச்சி : 42, 115, 148, 187, 198, 203, 207; 373
உள்ளப்புணர்ச்சியும் மெய்யுறு புணர்ச்சியும் : 42
உள்ளுறை : 169
உ.வே.சா.: 21, 22, 86, 88.
ஊடல் : 228, 363.
எதிர்ப்புத் தலைவி : 299
எண்வகை மணம் : 191
ஏறுகோள் : 101, 337
ஏறியமடற்றிறம் : 195, 218.
ஐந்திணைக்குறியீடு : 33
ஐந்திணை மேன்மை: 36 மாந்தர்: 209 குறிக்கோள்: 212 காதல்: 213 பொருள்: 215 வரம்பு: 215 காலம்: 226 பரத்தமை: 227, 231 நெய்தல் : 333.
ஐந்திணையும் பெருந்திணையும்: 194, 241
ஒக்கூர் மாசாத்தியார் : 292
ஒத்த உள்ளங்கள் : 327
ஒத்த காதலர்கள் : 344
ஒத்தல்லோ : 218
ஒண்மை : 311
ஒருமைக் கணவர்கள் : 240
ஒவ்வாமை : 198.
ஒழுக்கியம் : 95.
ஒதலாந்தையார் : 294, 350
ஓரம் போகியார் : 297
ஔவையார் : 301
கடல்வழிச் செலவு : 152
கடற்பாலை : 153
கடுந்தோட் கரவீரன் : 168
கடுவன் மள்ளனார் : 302
கட்டுவிச்சி : 60
கண்ணதாசன் : 263
கந்தரத்தனார் : 303
கபிலர் : 14, 271, 306.
கம்பர் : 37, 117, 126, 145, 149, 261.
கயமனார் : 225, 314
கரணம் : 121, 125
கல்லாடனார் : 317
கவிமணி : 159
கழார்க்கீரன் எயிற்றியார் : 318
களவு: சமுதாய இசைவு: 101 குடும்ப இசைவு: 103
களவும் கற்பும் : 301, 381
களவும் கற்பே : 105
களவு நெறி : 99
களவு நெறியும் மரபு நெறியும் : 108
கற்பியல் : 75
கற்பின் இருநெறிகள் : 107
கற்பில் உடன்போகாமை : 75
கற்பிலக்கியம் : 381
கற்புக் குறியீடு : 121
கற்பு : 60, 61,381 கற்பும் நாணமும் : 183, 212
கற்பு முறைகள் : 122
காட்டிக் கொடுத்த முல்லை : 133
காதலர் உரையாட்டு : 339
காதலின் ஆற்றல் : 55
காதலியக்கம் : 356
காதல் நினைப்புக்கள் : 162
காதற் களங்கள் : 339
காதற் கற்பு : 361

காதற் காரணம் : 38
காதற் காமம் : 371
காதற் பார்வை : 168
காதற்றிணை : 353
காமக் கண்ணியார் : 87
காமஞ்சாலா இளமை : 177
காம நாணம் : 332
காமப் புணர்ச்சி : 375
காம மதிப்பு : 376
காமம் : 46, 357
காவல் மூல்லைப்பூதனார் : 319
குடவாயிற் கீரத்தனார் : 320
குப்பைக் கோழியார் : 38
குமரி மலரணியாமை : 134
குழந்தை : 362
குழந்தை மணமின்மை : 184
குறிஞ்சித் திறம் : 309
குறிஞ்சிப் பாட்டு : 307
குற்றப்படா அமைப்பு : 265
குன்றம் பூதனார் : 15
குன்றியனார் : 322
கூந்தல் மலரணிதல் : 132
கூழைக் கூந்தல் : 136
கென்னத்து வாக்கர் : 39, 116, 120.
கைக்கிளை: 89 பொருள்: 177 குறிக்கோள்: 171 இலக்கணம்: 178 பருவ மயக்கம்: 181 பாடல்கள்: 182 ஒருமனநிலை: 186 குறுங்கரு: 187.
கைக்கிளை குறியீடு : 182
கைக்கிளையும் இளைஞனும் : 182
கைக்கிளையும் பெதும்பையும் : 178
கைக்கிளைகள் பிற : 188
கைக்கிளையும் பெருந் திணையும் : 87
கோவை : 223, 279.
சங்கப் பின்னூல்கள் : 117
சங்கப் புலவர்கள் : 270
சங்கம் : 253, 249
சங்க விலக்கியம் : 92
சமுதாய வடிப்படை : 99
சாதிமதச் சார்பின்மை : 143.
சாத்தனார் : 261
சான் விவிங்டன் லாவே : 274
சிதம்பரநாதன் டாக்டர் : 175
சிலப்பதிகாரம் : 33, 50, 105, 118, 143.
சிலம்புகழி நோன்பு : 129
சிவஞானர் : 97
சீனிவாச அய்யங்கார் : 22, 92, 97, 220.
சீவகசிந்தாமணி : 221
சுப்பிரமணிய பிள்ளை கா.சு. : 22, 191
செகப்பிரியர் : 47, 115, 214.
செலவழுங்கல் : 81.
செல்லியார் : 83, 247, 264
சேக்கிழார் : 261, 118.
சேதுப்பிள்ளை டாக்டர் : 98, 142.
சேரமான் பெருஞ்சேரல் இரும் பொறை : 96.
சைவ சித்தாந்த சமாசம் : 23
சோழன் நலங்கிள்ளி : 240
தமிழியம் : 93, 115, 212, 218, 246.
தமிழினம் : 54, 157, 167, 169, 269.
தமிழ்க் காதல் : 361
தமிழ்ச் சமுதாயம் : 50, 54, 76, 94, 117, 125, 137, 140, 160, 184, 186, 217, 281, 284, 285, 296, 303.
தலைவன் : 49, 84
தலைவி : 129, 346
தனிநாயகம் டாக்டர் : 16, 142, 155
திணை : 33, 34 திணைக் கலப்பு மணம் : 279
திருக்குறள் : 20, 185, 208 திருக்கோவை : 14, 42
திருத்துக்க தேவர் : 261
திருவள்ளுவர் : 20, 181, 208
திலக நெற்றி : 328
துணங்கை : 102
துறைப்புதுமைகள் : 295
தேறுதல் ஒழிந்த காமத்து மிகு

திறம் : 203
தொல்காப்பியம்: 14, 384.
இன்பம்: 14, 384.
பால்: 40
மடல்: 53
நாணும் கற்பும்: 68, 212
கற்பு: 76, 123.
கரணம்: 76, 78.
கைக்கிளை: 87, 89
பெருந்திணை: 87
மரபு மணம்: 109
பொய்யும் வழுவும்: 123
ஒப்பு : 129
திணை : 143, 149, 153, 155.
முந்நீர் : 153
முதல்கரு : 159, 260, 276.
காமஞ் சாலா இளமை: 177
நாணம் : 68, 212
மரபு : 109
ஐந்திணை : 212
முதுபாலை : 216
பூபாடல் : 232
அகமும் புறமும் : 249
பெயர் சூட்டாமை : 250
அகம் : 268
அறக்கழிவுடையன : 314
கிழவோள் மாண்புகள் : 382
மனைவியுயர்வு : 365
தோழி : 50, 53, 69, 283, 312, 378.
தோழியிற் புணர்ச்சி : 50
தோழியின் நோக்கம் : 56
நக்கண்ணையார் : 131, 189, 245.
நக்கீரர் : 30, 239, 323.
நச்சினார்க்கினியர் : 22, 48, 70, 78, 88, 123, 136, 180, 191, 203, 207, 209, 261, 323, 327, 369.
நத்தத்தனார் : 143, 169
நம்பி அகப்பொருள் : 177
நாற்கவிராச நம்பி : 188
நல்லந்துவனார் : 331
நல்லாவூர் கிழார் : 138
நல்லுருத்திரனார் : 337
நாணம் : 52, 68, 203, 204.
நாணில் தலைவன் : 358
நானிலச் சாயல் : 141
நிலவடிப்படை : 140
நெடுநல் வாடை : 21, 323
நூலின் நோக்கம் : 371
பகலிரவுக் கூட்டம் : 54
பகற்குறி : 55
பகற்புணர்ச்சி : 331
படைத்து மொழிதல் : 291
பணிக்கர், கே.எம். : 91
பரத்தமை ஆராய்ச்சி : 86, 227, 241.
பரத்தையிற் பிரிவு : 86
பரத்தையின் தோழி : 297
பரத்தையின் வஞ்சினம் : 345
பரணர் : 30, 341
பருவ வரவு : 84
பாங்கற் கூட்டம் : 45
பாங்கன் நிலை : 47
பாடலெண்ணிக்கை : 14, 16, 21, 44, 45, 47, 50, 53, 57, 61, 70, 74, 75, 77, 87, 269.
பாண்டியன் பன்னாடு தந்தான் : 85
பாரதியார் : 263
பாரதியார் டாக்டர் : 191
பாரிமகளிர் : 271
பாரதிதாசன் : 263
பாலிலக்கியம் : 382
பாலைத்திணையும் கோடைக் காலமும் : 149
பாலைப் பாடல் : 353
பால் : 40
பாற்கல்வி : 255, 257, 347, 382
பிரகத்தன் : 14
பிரிவாற்றாமை : 82
பிலிப்புச் சித்தினியார் : 259
பிளேட்டோ : 40
புணர்ச்சிப் புனைவுகள் : 329

மெய்யப்பன் பதிப்பக களஞ்சிய வரிசை

முனைவர் சு. அமிர்தலிங்கம்

சங்க இலக்கியக் களஞ்சியம்

முனைவர் கரு. முத்தையா & சபா. அருணாசலம்

நகரத்தார் கலைக்களஞ்சியம்

பேராசிரியர் வே. அண்ணாமலை

சங்க இலக்கியத் தொன்மக் களஞ்சியம்

பதினெண்கீழ்க்கணக்கு தொன்மக் களஞ்சியம்

முனைவர் சோ.ந. கந்தசாமி

இந்தியத் தத்துவக் களஞ்சியம் (3 தொகுதிகள்)

முனைவர் ச.வே. சுப்பிரமணியன்

தமிழ்விடுகதைக் களஞ்சியம்

வீ.ஜே. செல்வராசு

தமிழ்ச் சொற்றொடர் களஞ்சியம்

கலைக் களஞ்சியங்கள்

முனைவர் ஆறு. இராமநாதன்

நாட்டுப்புறப்பாடல் களஞ்சியம் (15 தொகுதிகள்)

நாட்டுப்புறக்கதைக் களஞ்சியம் (15 தொகுதிகள்)

முனைவர் இரா. மோகன்

நகைச்சுவைக் களஞ்சியம்

டாக்டர் கே.இ. சேதுராமன்

மூலிகைக் களஞ்சியம்

மெய்யப்பன் பதிப்பகத்தின் நாட்டுப்புறப்பாடல் வரிசை

முதன்மைப் பதிப்பாசிரியர்:

முனைவர் ஆறு. இராமநாதன்

நாட்டுப்புறப்பாடல் களஞ்சியம்

தொகுதி I **முனைவர் ஆறு. இராமநாதன்** 75-00

நாட்டுப்புறப்பாடல் களஞ்சியம்

தொகுதி II **முனைவர் ஆறு. இராமநாதன்** 75-00

நாட்டுப்புறப்பாடல் களஞ்சியம்

தொகுதி III **முனைவர் ஆறு. இராமநாதன்** 75-00

நாட்டுப்புறப்பாடல் களஞ்சியம்

தொகுதி IV **முனைவர் அ. கருணாநிதி** 90-00

நாட்டுப்புறப்பாடல் களஞ்சியம்

தொகுதி V **முனைவர் ஆ. தனஞ்செயன்** 80-00

நாட்டுப்புறப்பாடல் களஞ்சியம்

தொகுதி VI **முனைவர் சி.மா. இரவிச்சந்திரன்** 75-00

நாட்டுப்புறப்பாடல் களஞ்சியம்

தொகுதி VII **முனைவர் ஒ. முத்தையா** 75-00

நாட்டுப்புறப்பாடல் களஞ்சியம்

தொகுதி VIII **முனைவர் ஆறு. இராமநாதன்** 90-00

நாட்டுப்புறப்பாடல் களஞ்சியம்

தொகுதி IX **முனைவர் ஆறு. இராமநாதன்** 90-00

நாட்டுப்புறப்பாடல் களஞ்சியம்

தொகுதி X **முனைவர் சிவ. சுப்பிரமணியன்** 90-00

மெய்யப்பன் பதிப்பக சிறப்பு வெளியீடுகள்!

டாக்டர் இராசு பவுன்துரை எழுதிய கலை, கட்டடக்கலை அறிவியல் தொழில்நுட்ப நூல் வரிசை

தமிழகக் கோயிற்கட்டடக்கலைத் தொழில்நுட்பம்: அதிட்டானம்

தமிழகக் கோயிற்கட்டடக்கலை மரபு: தூண்கள்

தமிழகக் கட்டடக்கலை மரபும் மயன் அறிவியல் தொழில்நுட்பமும்

செட்டிநாட்டு நகரத்தார் வீடுகளும் கட்டடக்கலை மரபும்

பெங் சுய்: சீனக் கட்டடக்கலை மரபு

தமிழக நாட்டுப்புறக் கட்டடக்கலை மரபு

தமிழகக் கோயிற் கட்டடக்கலை மரபு: மண்டபம்

தமிழகக் கோயிற் கட்டடக்கலை மரபு: விமானம்

தமிழகக் கோயிற் கட்டடக்கலை மரபு: திருக்குளம்

தமிழகக் கோயிற் கட்டடக்கலை மரபு: கோபுரம்

தமிழக ஓவியக்கலை மரபும் பண்பாடும்

இந்திய அருங்காட்சியகங்கள்

அருங்காட்சியகவியல்

தமிழகப் பாறை ஓவியங்கள்

Architectural Heritage of Tamil Nadu: THANJAVUR

Source Book on Architecture: PILLARS